வெளியீடு: 24-2-2023 Issued: 24-2-2023

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, ஏப்ரல் 13, 2022—தொகுதி 32

Wednesday the 13th April 2022—Volume 32

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13–4–2022

உள்ளடக்கம்

		பக்கங்கள்
	ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
	Governor and Council of Ministers	xi-xv
	பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
	பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxx
1.	**வினாக்கள்-விடைகள்—**	1-48
	உடுக்குறியிட்ட வினாக்கள்	1-48
2.	**விதி 110—ன்கீழ் அறிக்கை—**	49-50
	அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாளை சமத்துவ நாளாகக் கொண்டாடுதல், சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்தல், அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவுதல் மற்றும் அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை செம்பதிப்பாக தமிழில் வெளியிடுதல் குறித்த பொதுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை	
	*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	49-50
3.	**பொதுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—**	51-61
	திரு. மு. ஜெகன் மூர்த்தி	51
	திரு. தி. வேல்முருகன்	51-52

பக்கங்கள்

3. பொதுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—*தொடர்ச்சி*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	52
திரு. ப. அப்துல் சமது	52-53
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	53
திரு. K. மாரிமுத்து	54
திரு. வி.பி. நாகைமாலி	54
திரு. ம. சிந்தனை செல்வன்	54-55
திருமதி வானதி சீனிவாசன்	55-56
திரு. ஜி.கே. மணி	56-57
திரு. கு. செல்வபெருந்தகை	57-58
திரு. ஓ. பன்னீர்செல்வம்	58-59
மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்	59-61
4. தகவல் கோரல்—	61-69,89
(அ) நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதம்	61-69
திரு. எடப்பாடி K. பழனிசாமி	61-62
திரு. தி. வேல்முருகன்	63
**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி*	64-69
(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்	89

	பக்கங்கள்
5. கவன ஈர்ப்பு—	69-89
தமிழகத்தில் நூல் விலை ஏற்றம்	69-89
திரு. பி. தங்கமணி	70,74-78
*மாண்புமிகு திரு. ஆர். காந்தி	70-74, 83-87
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	79
திரு. ஜி.கே. மணி	79-80
திரு. தி. வேல்முருகன்	80
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	80-82
திரு. ட்டி. இராமச்சந்திரன்	82
மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	88-89
6. மானியக் கோரிக்கைகள், 2022-2023, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	90-360
(அ) கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை (ஆ) கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) (இ) கோரிக்கை எண் 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) (ஈ) கோரிக்கை எண் 8-பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	90-360
*மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்	90,166, 173, 342-357

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2022-2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்*	110,132, 166-167, 194-195, 232-233, 235-237, 303-342
**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்*	149,167, 276-302,
திரு. இரா. காமராஜ்	101,121, 141,158, 168-172, 174-183
**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி*	183
திரு. எஸ். சுதர்சனம்	183-219
**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்*	219-229
திரு. செ. ராஜேஷ் குமார்	108, 113-114, 147,151, 229-235, 238-243,
திரு. கு. செல்வபெருந்தகை	237
**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்*	238
**திரு. கே.பி. சங்கர்*	243-250
**திரு. தே. மதியழகன்*	250-267
திரு. பொ. அர்ஜுனன்	108,130, 148, 267-276

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 360-361

8. இணைப்புகள் 363-782

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், சிறப்புத் திட்ட செயலாக்கம், மாற்றுத் திறனாளிகள் நலன்

2. நீர்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

3. நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்

4. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

5. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

6. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

7. வேளாண்மை- உழவர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

8. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:**

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

9. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

10. சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:**

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

11. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

12. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்

13. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்

15. சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

16. மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:**

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

18. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

வனம்

19. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:**

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு

20. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

21. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். காந்தி:**

கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்

22. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:**

மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

23. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

24. போக்குவரத்துத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
25. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்*
26. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள்*
27. பால்வளத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
28. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*
29. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
30. சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை*

31. தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:**

தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

32. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:**

தகவல் தொழில்நுட்பத் துறை

33. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

34. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	.. **The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives, Special Programme Implementation, Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	.. **The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	.. **The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Co-operation**	.. **The Hon. Thiru I. Periyasamy:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
5.	**Minister for Higher Education**	.. **The Hon. Dr. K. Ponmudy:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	.. **The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7. **Minister for Agriculture and Farmer's Welfare** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development

8. **Minister for Revenue and Disaster Management** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management

9. **Minister for Industries** .. **The Hon. Thiru Thangam Thennarasu:**

Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology

10. **Minister for Law** .. **The Hon. Thiru S. Reghupathy:**

Law, Courts, Prisons and Prevention of Corruption

11. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru S. Muthusamy:**

Housing, Rural Housing, Town Planning projects and Housing Development, Accommodation Control, Urban Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

12. **Minister for Rural Development** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness

13.	**Minister for Micro, Small and Medium Enterprises**	.. **The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
14.	**Minister for Information & Publicity**	.. **The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
15.	**Minister for Social Welfare & Women Empowerment**	.. **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
16.	**Minister for Fisheries–Fishermen Welfare and Animal Husbandry**	.. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
17.	**Minister for Backward Classes Welfare**	.. **The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare and Denotified Communities Welfare
18.	**Minister for Forests**	.. **The Hon. Thiru K. Ramachandran:** Forests
19.	**Minister for Food and Civil Supplies**	.. **The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control

20.	**Minister for Electricity, Prohibition & Excise**	.. **The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
21.	**Minister for Handlooms and Textiles**	.. **The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
22.	**Minister for Health and Family Welfare**	.. **The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
23.	**Minister for Commercial Taxes and Registration**	.. **The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
24.	**Minister for Transport**	.. **The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
25.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	.. **The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments
26.	**Minister for Finance and Human Resources Management**	.. **The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits

27.	**Minister for Milk & Dairy Development**	.. **The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
28.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	.. **The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
29.	**Minister for School Education**	.. **The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
30.	**Minister for Environment-Climate Change and Youth Welfare and Sports Development**	.. **The Hon. Thiru Siva. V. Meyyanathan:** Environment and Pollution Control, Youth Welfare and Sports Development
31.	**Minister for Labour Welfare and Skill Development**	.. **The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
32.	**Minister for Information Technology**	.. **The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology
33.	**Minister for Tourism**	.. **The Hon. Dr. M. Mathiventhan:** Tourism and Tourism Development Corporation
34.	**Minister for Adi Dravidar Welfare**	.. **The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

பேரவைத் தலைவர், துணைத் தலைவர்,
மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

#6-1-2022 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	.. சிறப்புச் செயலாளர்
திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	.. கூடுதல் செயலாளர்
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.,	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ம.இல.கு. இராஜா, பி.காம்., எம்.ஏ.,	.. சிறப்புப் பணி அலுவலர் மாற்றுப் பணியில்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	.. மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி ஶ்ரீ. ஶ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி டிவி. ஜெயஶ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர்
திரு. ஶ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. குழு அலுவலர்

திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி.	.. குழு அலுவலர்
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. தலைமை நிருபர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	.. சார்புச் செயலாளர்

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	.. சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18.	அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19.	அர்ஜுனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்

22.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி
28.	இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. டி.	.. தளி
30.	இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31.	இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33.	இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34.	இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35.	இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36.	இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
37.	ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
38.	ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
39.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
40.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
41.	உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
42.	ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
43.	எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
44.	எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

45. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. .. காஞ்சிபுரம்
46. எழிலன், டாக்டர் நா. .. ஆயிரம் விளக்கு
47. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. .. இராயபுரம்
48. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
49. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
50. கணபதி, திரு. க. .. மதுரவாயல்
51. கணேசன், திரு. சி.வி. .. திட்டக்குடி (தனி)
52. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்
53. கண்ணன், திரு. க.சொ.க. .. ஜெயங்கொண்டம்
54. கதிரவன், திரு. சீ. .. மண்ணச்சநல்லூர்
55. கந்தசாமி, திரு. V.P. .. சூலூர்
56. கயல்விழி, செல்வராஜ், திருமதி என். .. தாராபுரம் (தனி)
57. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
58. கருணாநிதி, திரு. ஜெ. .. தியாகராய நகர்
59. கருப்பணன், திரு. K.C. .. பவானி
60. கருமாணிக்கம், திரு. இராம. .. திருவாடனை
61. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு. .. இராமநாதபுரம்
62. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை
63. காந்தி, திரு. எம்.ஆர். .. நாகர்கோவில்
64. காந்திராஜன், திரு. எஸ். .. வேடசந்தூர்
65. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
66. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்
67. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்
68. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (தனி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

69.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
70.	கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
71.	கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
72.	கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
73.	கோவிந்தராஜன், திரு. டி.ஜெ.	.. கும்மிடிப்பூண்டி
74.	சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
75.	சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (தனி)
76.	சங்கர், திரு. கே.பி.	.. திருவொற்றியூர்
77.	சண்முகையா, திரு. எம்.சி.	.. ஒட்டப்பிடாரம் (தனி)
78.	சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	.. வாசுதேவநல்லூர் (தனி)
79.	சதாசிவம், திரு. S.	.. மேட்டூர்
80.	சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
81.	சந்திரசேகர், திரு. துரை.	.. பொன்னேரி (தனி)
82.	சந்திரன், திரு. S.	.. திருத்தணி
83.	சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (தனி)
84.	சரவணக்குமார், திரு. கே.எஸ்.	.. பெரியகுளம் (தனி)
85.	சரவணன், திரு. பெ.சு.தி.	.. கலசப்பாக்கம்
86.	சரஸ்வதி, டாக்டர் சி.	.. மொடக்குறிச்சி
87.	சாமிநாதன், திரு. மு.பெ.	.. காங்கேயம்
88.	சித்ரா, திருமதி கு.	.. ஏற்காடு (ஆ.வ.)
89.	சிந்தனை செல்வன், திரு. ம.	.. காட்டுமன்னார்கோவில் (தனி)
90.	சிவகாமசுந்தரி, திருமதி க.	.. கிருஷ்ணராயபுரம் (தனி)
91.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	.. திரு.வி.க. நகர் (தனி)

92.	சிவகுமார், திரு. ச.	.. மயிலம்
93.	சிவசங்கர், திரு. எஸ்.எஸ்.	.. குன்னம்
94.	சின்னதுரை, திரு. மா.	.. கந்தர்வகோட்டை (தனி)
95.	சின்னப்பா, திரு. கு.	.. அரியலூர்
96.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	.. விருதுநகர்
97.	சுதர்சனம், திரு. எஸ்.	.. மாதவரம்
98.	சுந்தரராஜன், திரு. செ.	.. சங்கரி
99.	சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
100.	சுப்பிரமணியன், திரு. மா.	.. சைதாப்பேட்டை
101.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிசெட்டிபாளையம்
102.	செஞ்சி K.S. மஸ்தான், திரு.	.. செஞ்சி
103.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	.. பழனி
104.	செந்தில் குமார், திரு. கோ.	.. வாணியம்பாடி
105.	செந்தில்குமார், திரு. மா.	.. கள்ளக்குறிச்சி (தனி)
106.	செந்தில்நாதன், திரு. பெரி.	.. சிவகங்கை
107.	செந்தில்பாலாஜி, திரு. V.	.. கரூர்
108.	செல்லூர் கே. ராஜூ திரு.	.. மதுரை (மேற்கு)
109.	செல்வபெருந்தகை, திரு. கு.	.. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
110.	செல்வராஜ், திரு. க.	திருப்பூர் தெற்கு
111.	செல்வராஜ், திரு. A.K.	.. மேட்டுப்பாளையம்
112	செழியன், முனைவர் கோவி.	.. திருவிடைமருதூர் (தனி)
113.	சேகர், திரு. R.D.	.. பெரம்பூர்
114.	சேகர், திரு. S.	.. பரமத்தி-வேலூர்
115.	சேகர்பாபு, திரு. பி.கே.	.. துறைமுகம்
116.	சேவூர் S. இராமச்சந்திரன், திரு.	.. ஆரணி

117.	சௌந்தரபாண்டியன், திரு. அ.		லால்குடி
118.	தங்கப்பாண்டியன், திரு. எஸ்.	..	ராஜபாளையம்
119.	தங்கமணி, திரு. பி.	..	குமாரபாளையம்
120.	தங்கம் தென்னரசு, திரு.	..	திருச்சுழி
121.	தமிழரசி, திருமதி ஆ.	..	மானாமதுரை (தனி)
122.	தமிழ்செல்வம், திரு. T.M.	..	ஊத்தங்கரை (தனி)
123.	தளபதி, திரு. கோ.	..	மதுரை (வடக்கு)
124.	தளவாய் சுந்தரம், திரு. ந.	..	கன்னியாகுமரி
125.	தனபால், திரு. ப.	..	அவினாசி (தனி)
126.	தாமோதரன், திரு. செ.	..	கிணத்துக்கடவு
127.	திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	..	திண்டுக்கல்
128.	தியாகராஜன், திரு. ந.	..	முசிறி
129.	திருமகன் ஈவெரா, திரு. இ.	..	ஈரோடு (கிழக்கு)
130.	துரைமுருகன், திரு.	..	காட்பாடி
131.	தேவராஜி, திரு. க.	..	ஜோலார்பேட்டை
132.	தேன்மொழி, திருமதி எஸ்.	..	நிலக்கோட்டை (தனி)
133.	நத்தம் ஆர். விசுவநாதன், திரு.	..	நத்தம்
134.	நந்தகுமார், திரு. A.P.	..	அணைக்கட்டு
135.	நயினார் நாகேந்திரன், திரு.	..	திருநெல்வேலி
136.	நல்லதம்பி, திரு. அ.	..	கெங்கவல்லி (தனி)
137.	நல்லதம்பி, திரு. A.	..	திருப்பத்தூர்
138.	நாகைமாலி, திரு. வி.பி.	..	கீழ்வேளூர் (தனி)
139.	நாசர், திரு. சா.மு.	..	ஆவடி
140.	நிவேதா எம். முருகன், திரு.	..	பூம்புகார்
141.	நீலமேகம், திரு. டி.கே.ஜி.	..	தஞ்சாவூர்

142.	நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
143.	பண்ணாரி, திரு. அ.	.. பவானிசாகர் (தனி)
144.	பரந்தாமன், திரு. இ.	.. எழும்பூர் (தனி)
145.	பழனி நாடார், திரு. S.	.. தென்காசி
146.	பழனியாண்டி, திரு. மொ.	.. ஸ்ரீரங்கம்
147.	பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)
148.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
149.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
150.	பன்னீர்செல்வம், திரு. மு.	.. சீர்காழி (தனி)
151.	பாண்டியன், திரு. K.A.	.. சிதம்பரம்
152.	பாபு, திரு. மு.	.. செய்யூர் (தனி)
153.	பாலசுப்ரமணியன், திரு. ஈ.	.. சேலம் (தெற்கு)
154.	பாலாஜி, திரு. S.S.	.. திருப்போரூர்
155.	பால் மனோஜ் பாண்டியன், திரு.	.. ஆலங்குளம்
156.	பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
157.	பிரகாஷ், திரு. ஒய்.	.. ஓசூர்
158.	பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	.. விருகம்பாக்கம்
159.	பிரபாகரன், திரு. ம.	.. பெரம்பலூர் (தனி)
160.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
161.	புகழேந்தி, திரு. நா.	.. விக்கிரவாண்டி
162.	பூண்டி கே. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
163.	பூமிநாதன், திரு. மு.	.. மதுரை (தெற்கு)
164.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	.. திருப்பத்தூர்
165.	பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

166. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்

167. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி

168. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்

169. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வ.)

170. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி

171. மகேந்திரன், திரு. சி. .. மடத்துக்குளம்

172. மணி, திரு. ரா. .. ஓமலூர்

173. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

174. மணிக்கண்ணன், திரு. A.J. .. உளுந்தூர்பேட்டை

175. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்

176. மதியழகன், திரு. தே. .. பர்கூர்

177. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)

178. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)

179. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்

180. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி

181. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை

182. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)

183. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்

184. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)

185. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்

186. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)

187. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை

188. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)

189. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

190. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
191. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
192. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
193. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
194. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
195. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
196. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
197. ராதாகிருஷ்ணன், திரு. K. .. உடுமலைப்பேட்டை
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

215.	விஜயபாஸ்கர், டாக்டர் சி.	.. விராலிமலை
216.	வெங்கடாசலம், திரு. A.G.	.. அந்தியூர்
217.	வெங்கடேசன், திரு. ஆ.	.. சோழவந்தான் (தனி)
218.	வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி.	.. தருமபுரி
219.	வெற்றிஅழகன், திரு. அ.	.. வில்லிவாக்கம்
220.	வேலு, திரு. எ.வ.	.. திருவண்ணாமலை
221.	வேலு, திரு. த.	.. மயிலாப்பூர்
222.	வேலுமணி, திரு. எஸ்.பி.	.. தொண்டாமுத்தூர்
223.	வேல்முருகன், திரு. தி.	.. பண்ருட்டி
224.	வைத்திலிங்கம், திரு. ஆர்.	.. ஒரத்தநாடு
225.	ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச்.	.. பாபநாசம்
226.	ஜெகன் மூர்த்தி, திரு. மு.	.. கீழ்வைத்தினான் குப்பம் (தனி)
227.	ஜெயக்குமார், திரு. S.	.. பெருந்துறை
228.	ஜெயசங்கரன், திரு. A.P.	.. ஆத்தூர் (தனி)
229.	ஜெயசீலன், திரு. பொன்.	.. கூடலூர் (தனி)
230.	ஜெயராம், திரு. கே.ஆர்.	.. சிங்காநல்லூர்
231.	ஜோசப் சாமுவேல், திரு.	.. அம்பத்தூர்
232.	ஜோதி, திரு. ஒ.	.. செய்யாறு
233.	ஸ்டாலின், திரு. மு.க.	.. கொளத்தூர்
234.	ஸ்டாலின் குமார், திரு. செ.	.. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 30, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 13, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

பல அரசுகளின் நிழல்களைத் தமது குடைநிழலின்கீழ் கொண்டு வரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

பகுதி நேர நியாய விலைக் கடை

***239—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் உள்ள நியாய விலைக் கடை எண் 3–லிருந்து பிரித்து கிருத்துவ தெரு பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், திருக்காட்டுப்பள்ளி கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கிருத்துவ தெரு பகுதியிலுள்ள 120 குடும்ப அட்டைகளுடன், திருக்காட்டுப்பள்ளி–3 முழு நேர நியாய விலைக் கடை 831 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது.

குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய் நியாய விலைக் கடையில் 711 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கிருத்துவ தெரு பகுதிக்கும், திருக்காட்டுப்பள்ளி–3 முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடையே 200 மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. மேலும், புதிய நியாய விலைக் கடைக் கோரும் கிருத்துவ தெரு பகுதியில், 120 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. கிருத்துவ தெரு பகுதியில் அரசு கட்டடம் எதுவும் இல்லை. புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் கோரும் கிராமப் பகுதிகளில், குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடைக் கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், கிருத்துவ தெரு பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா, நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது எழுப்பப்பட்டது. இன்றைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கிராமங்கள்தோறும் கிராம சபைக் கூட்டம் நடத்த வேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில், இது திருக்காட்டுப்பள்ளியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஏராளமான பெண்கள் வைத்த கோரிக்கையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருக்காட்டுப்பள்ளி முழு நேர நியாய விலைக்

2022 ஏப்ரல் 13]

கடையில், 831 குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொன்னார்கள். நியாய விலைக் கடைக்குச் செல்வதற்குக் குறைந்த தூரம் இருந்தாலும், திருக்காட்டுப்பள்ளி கடை வீதிக்கு வந்துதான் மக்கள் பொருட்களை வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. திருக்காட்டுப்பள்ளி போக்குவரத்து நெரிசல் மிகுந்த ஒரு நகரமாக இருக்கின்றது. ஆகவே, கிருத்துவ தெருவிலுள்ள அந்த மக்கள், போக்குவரத்து நெரிசலில் வந்துதான் ரேஷன் பொருட்களைப் பெற்றுச் செல்கின்றார்கள். எனவே, அதைச் சிறப்பினமாகக் கருதி, புதிய பகுதி நேர நியாய விலைக் கடை பிரித்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க, நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற அரசு விதிமுறைகளின்படி, 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரத்யேகமாக சட்டம்-ஒழுங்கு மற்றும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக, பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று கேட்கின்றபோது, மாவட்ட ஆட்சியர் அவர்களுடனும் மற்றும் ஏனைய துறைகளினுடைய அலுவலர்களுடனும் கலந்தாலோசித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலும், இந்தப் பகுதியிலும் இருக்கின்ற மக்களில் சிலபேர் அந்தக் கடையில் பொருட்கள் வாங்குவதில் பிரச்சினைகள் எழுகின்றபட்சத்தில், பரிந்துரைகள் பெறப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள பல இடங்களில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அங்கு பெரும் கூட்டம் இருப்பதால், பொருட்கள் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். எனவே, ஒரு* standing order *மாதிரி, அனைத்துப் பகுதிகளிலும் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்குமேல் இருக்கின்ற*

நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலுள்ள பல இடங்களில், ஒன்றரைக் கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் சென்று ரேஷன் பொருட்கள் வாங்குகின்ற நிலை இருக்கிறது. எனவே, அதையும் துறையின்மூலம் ஆய்வு செய்து, பகுதி நேர நியாய விலைக் கடைகளாகப் பிரிக்க வேண்டும்

பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமையும்போது, 3 கடைகளுக்கு விற்பனையாளர் ஒருவர் பொறுப்பாக இருக்கிறார். எனவே, பகுதி நேரக் கடைகளைப் பிரிக்கின்றபொழுது, அங்கே ஒரு விற்பனையாளரைத் துறையின்மூலம் நியமித்தால், முழுமையாகப் பொருட்களை வழங்க முடியும். அதற்கான வாய்ப்பு துறையின்மூலம் ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து, ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஏனென்றால், மொத்தமாக 1,000 கார்டுகளுக்கு மேலுள்ள கடைகள், 1,000 கார்டுகள் இருக்கிற கடைகள், 5 கிராமங்கள், 8 கிராமங்கள் என கிராமங்களை இணைத்து கடைகள், தூரம் அதிகம் என்று இப்படி பல்வேறு நிலைகளில் இன்னும் கடைகள் பிரிக்கப்படாமல் இருப்பதை நாங்கள் இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

நகர்ப்புறப் பகுதிகளில் மிகவும் நெருக்கடியான இடங்களில், பல இடங்களில் 1,000 கார்டுகளுக்குமேல் இருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகமான கார்டுகள் இருக்கின்றன. அப்படியிருக்கிற பகுதிகளில் கட்டடங்கள் கிடைப்பதற்கோ, அரசின் இடங்கள் கிடைப்பதற்கோ சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. அதனால், இரண்டு வகைகளாகப் பிரிக்க வேண்டியிருக்கிறது. மாநகராட்சிப் பகுதிகள், நகராட்சிப் பகுதிகள், கிராமப்புறப் பகுதிகளில் எங்கெங்கே அத்தியாவசியமாக கடைகளைப் பிரித்தால் உண்மையிலேயே

2022 ஏப்ரல் 13]

பயன்படுமோ, அதனை அரசு நிச்சயமாக பரிசீலிக்கும். நாங்கள் இப்போது உணவுத் துறையோடு கலந்து பேசி, விரைவில் அதுகுறித்து முடிவெடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

இரண்டாவது, முழு நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்றால், பணியாளர்களின் சம்பளம், மற்ற எல்லாவற்றையும் சேர்த்து, கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய்க்குமேல் நமக்கு செலவாகும். இப்பொழுது மொத்தமாகக் கடைகளினுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபொழுது, இன்னும் கட்டடம் கட்டப்படாமல் இருக்கும் 6,162 முழு நேரக் கடைகளுக்குக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இதுபோக, 773 பகுதி நேரக் கடைகளுக்குக் கட்டடம் கட்ட வேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு, 150 கடைகளுக்குக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, நிரந்தரமாகக் கடைகள் அமைக்கின்ற பணிக்குப் பிரத்யேகமாகக் கவனம் செலுத்தி, உணவுத் துறை அமைச்சர் அவர்களோடும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோடும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடும் கலந்து பேசி, மிக வேகமாக அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஏற்கெனவே இரண்டு கடைகள் கட்டுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த தொகையை இப்போது குறைத்திருக்கிறோம். பகுதி நேரக் கடைகள் என்றால், ரூ.7 இலட்சமாகவும், முழு நேரக் கடைகள் என்றால், ரூ.10 இலட்சமாகவும் ஆக்கியிருக்கிறோம். அதற்கென்று புதிய வடிவம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த முறை முழு நேரக் கடை கட்டுவதற்கான நல்ல design*–ஐ ரூ.13 இலட்சத்தில் போட்டிருந்தார்கள். அதில், ரூ.3 இலட்சம் குறைத்து, முழு நேர நியாய விலைக் கடைக்கு ரூ.10 இலட்சமும், பகுதி நேர நியாய விலைக் கடைக்குக் கட்டடங்கள் கட்ட ரூ.7 இலட்சமும் என்று கொண்டு வரலாம் என்ற வகையில்* design *போட்டிருக்கிறோம். எனவே, பகுதி நேரக் கடைகள் அமைப்பதற்கு, கடைகளின் தூரம் மற்றும் கார்டுகளின் எண்ணிக்கை பற்றி என்ன செய்யலாம் என்பது குறித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இதுசம்பந்தமாக விரைவில் முடிவெடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மேலூர் தொகுதி, அ. வல்லாளப்பட்டி பேரூராட்சி–சாம்பிராணிப்பட்டி கிராமம், கச்சிராயம்பட்டி ஊராட்சி–மாங்குளப்பட்டி, கம்பூர் ஊராட்சி–சின்னகற்பூரம்பட்டி, சேக்கிப்பட்டி ஊராட்சி–வீரசிங்கம்பட்டி, கீழவளவு ஊராட்சி–குளிசேவல்பட்டி, நாவனிப்பட்டி ஊராட்சி–பெருமாள்பட்டி ஆகிய கிராமங்களுக்குப் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள், பல கிராமங்களுக்குப் பகுதி நேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று சொல்கிறார். அவற்றில், முழு நேர நியாய விலைக் கடைகளைப் பிரிப்பது என்றால், எத்தனை கார்டுகள் இருக்கின்றன; எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுச் சொன்னால், எந்த கிராமத்திற்குப் பகுதி நேரக் கடையை வழங்க வேண்டும்; முழு நேர நியாய விலைக் கடையில் மொத்த கார்டுகள் எவ்வளவு இருக்கின்றன என்பது குறித்து தாங்கள் விளக்கமாக எங்களுக்குக் கடிதமாகக் கொடுத்தால், நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஊராட்சியில் பொது நிதியில் காலனிப் பகுதியில் கட்டப்பட்ட நியாய விலைக் கடையில் 450 கார்டுகள் உள்ளன. அதிலிருந்து பகுதி நேரக் கடையாகப் பிரித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத்

2022 ஏப்ரல் 13]

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இடமும் தயாராக இருக்கிற காரணத்தால், அங்கே 450* cards *இருந்தால் கண்டிப்பாக பகுதி நேரக் கடை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில், மலைப் பகுதியில் 10 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் ரேஷன் பொருட்கள் வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. எத்தனை கார்டுகள் இருந்தால் மலைப் பகுதியில் கடைகளைப் பிரிக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியில் தொலைதூரம் செல்ல வேண்டுமென்றால், அவர்களுக்கென்று நடமாடும் ரேஷன் கடை கடந்த ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்டு, ஏறத்தாழ 3,501 வாகனங்கள் மூலமாக தொலைதூரம் செல்ல வேண்டிய இடங்களுக்கும், வாகனங்களே போக முடியாத பகுதிகளுக்கும்* jeep *அல்லது அங்கே செல்லக்கூடிய வண்டிகள்மூலம் கடையிலிருந்து கொண்டுபோய் வழங்கப்பட்டு வருகின்ற முறை இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேந்தமங்கலம் தொகுதியில், இப்போது மொத்தம் எவ்வளவு கார்டுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால், மலைப் பகுதி என்பதால் குறைந்தபட்சம்*

அவர்களுடைய கருத்துருவை ஆய்ந்து, அதற்குப் பிரத்யேகமாக, மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பேசி, நிச்சயமாக அங்கே பகுதி நேரக் கடை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

105—

பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***12078—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் பகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி அமைந்திருக்கும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 15 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் பகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி பெரும்பாலும் விவசாயம் செய்கின்ற மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதியாகும். இந்தப் பகுதியில் படிக்கின்ற மாணவர்கள் அதிகக் கட்டணம் செலுத்தி தனியார்

2022 ஏப்ரல் 13]

கல்லூரிகளில் படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இவர்கள் அரசு கலைக் கல்லூரியிலோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியிலோ படிக்க வேண்டுமென்றால், சுமார் 60 கிலோ மீட்டர் தூரமுள்ள செங்கல்பட்டிற்குத்தான் செல்ல வேண்டும். ஆனால், குக்கிராமங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு இது சாத்தியமில்லை. இதனால் உயர் கல்வியைத் தொடர முடியாமல் போகிறது. எனவே, இச்சிரமத்தைப் போக்க, அச்சரப்பாக்கம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் அரசு Polytechnic கல்லூரிகள் 51, உதவி பெறும் Polytechnic கல்லூரிகள் 34, அரசு இணைவுபெற்ற Polytechnic கல்லூரிகள் 4 மற்றும் சுயநிதி Polytechnic கல்லூரிகள் 406+14 (உணவு மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப நிறுவனம்) என ஆக மொத்தம் 509 Polytechnic கல்லூரிகள் இருக்கின்றன. அதுவும் செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனியார் கல்லூரிகளில் மொத்தம் 5,010 இடங்கள் இருக்கின்றன. அதில், 1,879 மாணவர்கள் மட்டுமே சேர்ந்திருக்கிறார்கள். மீதி 3,131 இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன. ஆக, நீங்கள் சொன்னதுமாதிரி கொஞ்சம் கட்டணம் அதிகமாக இருப்பதால் சேராமல் இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரசு Polytechnic-ல் மாணவர்களின் சேர்க்கை குறைவாக இருக்கிறது என்ற எண்ணத்தைக் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் மானியக் கோரிக்கையிலேயே அறிவித்திருப்பது, Polytechnic கல்லூரிகளுக்கு ஐந்து புதிய பாடத் திட்டங்களை உருவாக்க வேண்டும், அதுமட்டுமல்லாமல் Polytechnic-ல் படிக்கிற மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். முக்கியமானது Polytechnic படிப்பை மாணவர்கள் முடித்துவிட்டால், அவர்கள் மற்ற பொறியியல் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டில் போய் சேரலாம். அண்ணா பல்கலைக்கழகத்தில் அவ்வாறு சேருவதற்கு நிறுத்தி வைத்திருந்தார்கள், ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையிலே இந்த ஆண்டு முதல் அண்ணா

[2022 ஏப்ரல் 13

பல்கலைக்கழகத்திலேயும் Polytechnic படித்தவர்கள் இரண்டாம் ஆண்டு சேர முடியும். ஆக, இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், Polytechnic படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை உயர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். வேலைவாய்ப்பைப் பொறுத்துத்தான் எந்தக் கல்லூரியிலும் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக முக்கியமாகக் கவனத்தில் கொண்டு தொழில் துறை, தொழிலாளர் நலத் துறை மற்றும் எங்கள் துறைகளையெல்லாம் சேர்த்து, கூட்டுத் துறையாக Inter Departmental என்ற அடிப்படையில், எல்லோரும் சேர்ந்து இந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், வருங்காலங்களில் polytechnic கல்லூரிகளில் சேர்க்கை உயரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எனவே, அங்கு தேவைகள் ஏற்படுகிறபோது உங்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மதுராந்தகம் தொகுதியில் சுயநிதிக் கல்லூரிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இருந்தாலும், எனது மதுராந்தகம் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கே பெரும்பாலும் விவசாயக் கூலிகள் இருக்கின்றனர். மேலும், தாழ்த்தப்பட்ட. பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்களால் தனியார் கல்லூரிகளில் அதிகக் கட்டணம் செலுத்தி சேர முடியாமல், மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். வருகின்ற நிதியாண்டிலாவது எனது தொகுதியில் மாணவ–மாணவியர்களின் நலன் கருதி, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தரப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலை குறித்து உங்களுக்குத் தெரியும். குறிப்பாக ஒரு* polytechnic *கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், 44.28 கோடி ரூபாய் செலவாகிறது; 4.5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். முதலில் அங்கே இருக்கின்ற கல்லூரிகளிலேயே போதிய எண்ணிக்கையில் மாணவர்கள் கிடையாது. மேலும், தனியார்* polytechnic *கல்லூரிகளிலெல்லாம் இவ்வளவு மாணவர்களைத்தான் சேர்க்க வேண்டும்; இவ்வளவுதான் கட்டணம் வாங்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டையும் தமிழக அரசு நிர்ணயித்திருக்கிறது. அந்த அடிப்படையில் தனியார் கல்லூரிகளில் மாணவர்கள் வந்து சேர வேண்டும். மாணவர்கள் வந்து சேர்ந்தால், அவர்களே* automatic *ஆக கட்டணத்தைக் குறைத்துவிடுவார்கள். ஏனென்றால், அந்த நிலைமைதான் இன்று பல இடங்களில் இருக்கிறது. எனவே, கட்டணத்தைக் குறைப்பதற்கான ஏற்பாட்டினையும் இந்த அரசு செய்யும். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கை வருகிற காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம், பண்ருட்டி* campus *என்பது அப்போதைய முதல்வர், ஐயா கலைஞர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு, துவக்கப்பட்டது. தற்போது, அது நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் வருகிறது. எனது நண்பர், பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தலைவர் அவர்கள் அனுமதித்தார்கள். அந்த வளாகத்தில் பல அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன. சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கின்றது. அதேபோன்று* academic block *மற்றும்* library*–க்குக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. எனவே, மூத்த அமைச்சராக இருக்கிற மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்த*

அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்து தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டமாக அப்போது அது இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கதான், தமிழக முதலமைச்சர் அவர்கள், திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி ஆகிய இடங்களில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கிளைகளை உருவாக்கிக் கொடுத்தார்கள். ஆக, இந்த அறிக்கையிலே நான் சொல்லியிருக்கிறேன். உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று உண்மையிலேயே அங்கு தேவைப்படுமானால் படிப்படியாக உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க இந்த அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

அடுக்குமாடிக் குடியிருப்பு

***10141—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடத்தூர் பேரூராட்சியில் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடத்தூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் இல்லை. எனவே, புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் வாய்ப்பு தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர் அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்களுக்கும், தங்களுக்கும் முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த எங்கள் ஆட்சிக் காலத்தில் எங்கள் மாவட்டத்தில் ஏறக்குறைய 235 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,890 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில், 168 குடியிருப்புகள் மற்ற சமுதாயத்தினருக்கு—பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும், மீதியிருக்கின்ற குடியிருப்புகள் ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கடத்தூர் பகுதியில் இருக்கின்ற அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகளே இல்லாதவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகக் கட்டப்படுகிற குடியிருப்புகள். அவர்கள் அதற்குண்டான தொகையைக் கட்டித்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே, அங்கே* demand *எப்படி இருக்கிறதோ, மக்களிடம் கேட்பு*

எப்படியிருக்கிறதோ, அதைப் பொறுத்து அரசு நிலம் கிடைத்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிறதா அல்லது மற்ற துறைகளின்மூலம் கட்டிக் கொடுக்கப்படுகிறதா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால், எங்கள் பகுதியில் ஏற்கெனவே குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஏனென்றால் மற்ற சமுதாயத்திற்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதுபோல், மற்ற துறைகள் மூலமாகவாவது கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில், அந்த வீடுகள் சிறிய வீடுகளாக இருக்கின்றன. அவை குடியிருப்பதற்கு ஏதுவாக இல்லை. எனவே, குறைந்தது 400, 500 சதுர அடி பரப்பளவிலான வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும். அதேசமயத்தில், தருமபுரி, பாலக்கோடு, அரூர் ஆகிய பகுதிகளிலும் குடியிருப்புகளைக் கட்டித்தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தைச் சார்ந்தவர்கள்தான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கேள்வியை உரிய வகையில் கேட்டால், அதற்குரிய பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

2022 ஏப்ரல் 13]

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியிலே வீட்டு வசதி வாரியத்திற்காக நிலம் எடுக்கப்பட்டுள்ளது. கடம்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கு (*economically weaker sections*) வீடு என்பது ஒரு கனவாக இருக்கிறது. குறிப்பாக, வீட்டு வசதி வாரியம்மூலம் 1989–1991 மற்றும் 1996–2001 ஆம் ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு குடியிருப்புகள் கட்டப்பட்டனவோ, அதுபோன்று வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர இயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் கட்டுவதற்கு உரிய இடம் மற்றும் அங்கேயிருக்கிற மக்களிடத்திலே அதற்கான ஆதரவு மற்றும் கேட்பு இருக்குமேயானால், அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஆனால், குறைந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடிக் கட்டடமாகக் கட்டப்பட்டாலும் அல்லது வீடாகக் கட்டப்பட்டாலும், அதற்குண்டான தொகையை அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே, அந்த வகையில் அப்பகுதி மக்கள் தயாராக இருந்தால், அதற்கான ஏற்பாட்டை வீட்டு வசதி வாரியம் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

சாலை அமைத்தல்

***3183—திரு. பொன். ஜெயசீலன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2022 ஏப்ரல் 13*

கூடலூர் பகுதியிலிருந்து சிறியூர்–சத்தியமங்கலம் வழியாக சமவெளிப் பகுதிக்குச் செல்லும் சாலைப் பணியை நிறைவேற்றி போக்குவரத்திற்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கூடலூர் தொகுதி, சிறியூரிலிருந்து சத்தியமங்கலம் வழியாகச் செல்வதற்கான 35 கிலோ மீட்டர் நீளம் உள்ள பாதையானது வன விலங்குகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பாதையாகும். மேலும், இச்சாலை செங்குத்தாகவும் மற்றும் சமவெளிப் பகுதியாகவும் உள்ள சாலை. சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் உட்பகுதியின் (*core area*) வழியாக இந்தச் சாலை செல்வதால் மேற்படி சாலையினை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.* Queen of Hills, *மலைகளின் அரசி எனப் போற்றப்படும் உதகமண்டலம் உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகும். நம் நாட்டைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பல இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதியாக ஊட்டி விளங்குகின்றது. தற்போது ஊட்டிக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூர் வழியாகச் செல்வதற்கு ஒரு சாலையும், கேரளா மற்றும் கர்நாடகாவிலுள்ள பெங்களூரு மற்றும் மைசூரு வழியாக வருவதற்கு என் தொகுதியான கூடலூரிலிருந்து நடுவட்டம் வழியாக ஒரு சாலையும் உள்ளது. இவை தவிர, மேட்டுப்பாளையத்திலிருந்து கோத்தகிரி வழியாக ஒரு சாலையும், மஞ்சூர் வழியாக ஒரு சாலையும் அமைந்திருக்கின்றது. மேற்கூறிய அனைத்துச் சாலைகளும், மலைப்பாங்கான பகுதிகளில் அமைந்துள்ளதனால், பெரும் மழைப் பொழிவுக் காலங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு உதகை மற்றும் கூடலூர், தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே, முழுவதும் சமவெளிப் பகுதியிலேயே வரக்கூடிய சிறியூர்–சத்தியமங்கலம் மாற்றுச் சாலையினை அமைத்துத் தரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்தச் சாலை அமைக்கப்பட்டால்,*

2022 ஏப்ரல் 13]

சுமார் 2½ மணி நேரக் கால விரயத்தைத் தவிர்க்கலாம். எனவே, இந்தச் சாலையை அமைத்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதியில் சிறியூரிலிருந்து மோயார் பள்ளத்தாக்கு வழியாக தெங்குமரஹடா பகுதிக்கு சாலை அமைப்பதற்கும், அங்கிருந்து பவானிசாகர் வழியாக சத்தியமங்கலம் செல்ல சாலை அமைப்பதற்கும் அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்துள்ளனர். சிறியூரிலிருந்து தெங்குமரஹடா கிராமத்திற்குச் செல்லும் சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் நடைபாதையாக உள்ளது. மலையின் செங்குத்தான பகுதியில் இந்த நடைபாதை அமைந்துள்ளது. அந்தப் பாதையின் வழியாகச் செல்ல உரிமை வழங்கப்படவில்லை. தெங்குமரஹடா கிராமத்திலிருந்து பவானிசாகர் செல்வதற்கு உள்ள 25 கிலோ மீட்டர் மண் பாதையானது சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் உட்பகுதியில் உள்ளது. இந்தப் பகுதியில் புலிகள், யானைகள், சிறுத்தைகள், கரடிகள், கழுதைப் புலி போன்று ஆபத்தை விளைவிக்கக்கூடிய வன விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. மேலும், அப்பகுதியானது மேற்குத் தொடர்ச்சி மலையையும், கிழக்குத் தொடர்ச்சி மலையையும் இணைக்கக்கூடிய பகுதியாகும். அதிக அளவில் வன விலங்குகள் நடமாடக்கூடிய வழித்தடமாக இருப்பதால், இப்பகுதியில் பொதுச் சாலை அமைத்து போக்குவரத்தினை அனுமதித்தால், வன விலங்குகளுக்கும், மனித இனத்திற்கும் பேராபத்து ஏற்படும் என்பதால், சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் சார்ந்த பகுதிகளைக் குறித்த உச்ச நீதிமன்றத்தின் உள்ளக்கிடக்கை–(Intention of the Supreme Court) என்ன*

என்பதை இந்தப் பேரவைக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தலையாயக் கடமை எனக்கு இருக்கின்றது. எனது தலைமையின் அனுமதியைப் பெற்று, இது குறித்து விவாதிக்க ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் முன்மொழிய இருக்கின்றேன். கேரள மாநிலத்தின் பாலக்காடு–திருச்சூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள குதிரான் மலையைக் குடைந்து, சுமார் 1 கி.மீ.–க்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது. கடந்த 2006 முதல் 2011 வரையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், தற்போதைய வனத் துறை அமைச்சர் அவர்கள், கூடலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும், கைத்தறித் துறை அமைச்சராகவும் இருந்தபோது, இந்தச் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற ஒரு செய்தி சட்டமன்றத்தின் வாயிலாக வெளியிடப்பட்டு, அதை எங்கள் பகுதியைச் சார்ந்த மக்கள் ஒரு திருவிழாவாகவே கொண்டாடி மகிழ்ந்தார்கள். சிறியூர்–சத்தியமங்கலம் சாலை என்பது, கூடலூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கனவு மற்றும் எதிர்பார்ப்பு. மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சிக் காலத்தில், இச்சாலை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இடையில் ஒரு பெரிய பாலம் மற்றும் எட்டு சிறிய பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூடலூரிலிருந்து தெப்பக்காடு, மசினகுடி வழியாக சீகூர் வரை நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 21 கி.மீ. சாலை உள்ளது. சீகூரிலிருந்து வாழைத் தோட்டம் ஆனைக்கட்டி வழியாக சிறியூர் வரை சுமார் 15.20 கி.மீ. சாலை வனத் துறையால் அமைக்கப்பட்டு, தற்போது சிறியூர் வரை பொதுப் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. சிறியூர்–துலுக்கப்பட்டி–தெங்குமரஹடா வரையுள்ள 21 கி.மீ. நீளத்தில் துலுக்கப்பட்டி முதல் தெங்குமரஹடா வரை 7 கி.மீ. சாலை வனத் துறையால் அமைக்கப்பட்டுவிட்டது. அதாவது, சிறியூர்–துலுக்கப்பட்டி இடையிலுள்ள 14 கி.மீ. தூரத்தில் சாலை ஏதும் இல்லை. நடைபாதை மட்டுமே இருக்கின்றது. இது காப்புக் காடு (Reserve forest) என்பதால் சாலையை வனத் துறைதான் அமைக்க வேண்டிய நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பொன். ஜெயசீலன்: இடையில் கள்ளம்பாளையத்திலிருந்து காராட்சிகோரை வரையுள்ள 4 கி.மீ. தூரத்தின் இடையில்

2022 ஏப்ரல் 13]

*மாயார் ஓடுகின்றது. இவ்விடத்தில் ஒரு பாலம் அமைக்க கடந்த 7–7–1999 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகக் கட்ட முடிவெடுக்கப்பட்டு, மேற்படி பாலம் கட்டும் பணிக்காக, நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதி காப்புக் காடாக இருப்பதால், இந்தச் சாலையை அமைக்க வனத் துறை அனுமதி அளிக்குமா என்று வனத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். ** என்ற வார்த்தைகளையெல்லாம் விட்டுவிட்டு, மக்கள் நலம் பேண விரும்பும் அரசு இதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நீங்கள் உத்தரவு போட முடியாது. அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதே தொகுதியில் உள்ளவர் ஆவார். கடந்த 10 ஆண்டுக் காலத்தில், அவர்களது ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இது குறித்து ஒன்றும் கேட்கப்படவில்லை, ஒன்றும் செய்யவில்லை. இதுநாள் வரை கேட்காமல் இருந்துவிட்டார். தற்போது அந்த இடம் புலிகள் காப்பகமாக மாறிவிட்டது, அது மாத்திரம் அல்லாமல், அது ஒற்றையடிப் பாதை. நான் அந்த இடத்திற்கு ஏற்கெனவே போயிருக்கிறேன். அப்போது அது வனத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இருந்தாலும் நான் அங்கு சென்று பார்த்திருக்கிறேன். அன்றைக்கே சென்று பார்த்துவிட்டு முடியாதென்ற காரணத்தினால்தான், மக்களிடம் இது குறித்துக் கேட்டு, பொது மக்களையும் அந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் ஆய்வு செய்தேன். அவ்வாறு மேற்கொள்ள முடியாததன் காரணமாகத்தான் அது கைவிடப்பட்டுவிட்டது. அதன் பிறகு சென்ற 10 ஆண்டுகளில் உங்களாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. தற்போது நீங்கள் எங்களை செய்யச் சொல்கிறீர்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் செய்து கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை வைத்து கேட்கிறார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *வன அலுவலர்களை அந்த இடத்திற்கு அனுப்பி மீண்டும் ஆய்வு செய்யச் சொல்லி, முடிந்தால் நானும் அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்த்து, வாய்ப்புகள் இருந்தால், நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, நிதியாதாரத்தின் அடிப்படையில் சாலை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளக்கவி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் இது வரை சாலை வசதி இல்லாத கிராமம் ஆகும். இப்பொழுது நம்முடைய மக்கள் தலைவருடைய ஆட்சியில், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்த முயற்சியின் விளைவாக இன்றைக்கு கொடைக்கானல் வட்டகனல் வழியாக அந்தச் சாலையில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, தற்போது* road formation *பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் சாலையையும், அதே ஊராட்சியில் சோத்துப்பாறை அணை, உப்புக்காட்டிலிருந்து சின்னூர், பெரியூர் ஆகிய அந்தப் பகுதிகளுக்கும் வனத் துறை சட்டத்தில், குறிப்பாக 1915 ஆம் ஆண்டு சட்டப்படி* right of way *இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அப்பகுதியை நன்கு அறிவார்கள். அந்தச் சாலைக்கு* right of way *கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அந்த இரண்டு கிராமங்களுக்கும் இப்போது சாலை அமைத்துக் கொடுத்து ஒரு வரலாற்றுச் சிறப்பை நம்முடைய அரசு செய்ய முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள் கேட்ட அந்தச் சாலையை அமைப்பதற்கு, அந்தப் பகுதியில் 1 ஹெக்டேர் நிலத்திற்கும் அதிகமாக இருந்தால் நாம் இங்கே உத்தரவு போட முடியாது; அதை ஒன்றிய அரசிற்கு அனுப்பி, அந்த இடத்திற்கு அனுமதி பெற்று, அனுமதி பெற்றவுடன்* user agencies *நகராட்சியா அல்லது ஒன்றியத்திற்குட்பட்டதா என்று கேட்டு, ஒன்றியத்திற்குட்பட்டதாக இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில்* online *மூலம்* application *போடச் சொல்லி,* NOC *கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சித் தலைவர் அவர்களையும், தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், விவசாயி மகன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்குகிறேன். எனது ஆருயிர் சகோதரர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதன்முதலாக வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதன்முதலில் துணைக் கேள்வி கேட்கிறீர்கள். அதனால் வாய்ப்புத் தந்திருக்கிறேன். சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பி. அய்யப்பன்: *உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, சேடப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட மல்லப்புரம்-மயிலாடும்பாறை மலைச் சாலை உள்ளது. அந்த மலைச் சாலை 1957 ஆம் ஆண்டு போடப்பட்ட சாலையாகும். அந்த மலைச் சாலை, தேனி, மதுரை, விருதுநகர் ஆகிய மூன்று மாவட்டங்களை இணைக்கக்கூடியது. மயிலாடும்பாறைக்கு மேல் உள்ள வருசநாடு பகுதியில் ஏறக்குறைய குமாரநல்லூர், தும்மகுண்டு உள்ளிட்ட 50 மலைக் கிராமங்கள்*

உள்ளன. இந்த மலைக் கிராமங்களில் விளைகின்ற பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு விவசாயிகள் அனைவரும் வருசநாடு, மயிலாடும்பாறை, கம்பன்மலை, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி வழியாக பேரையூர் சென்று, பேரையூரிலிருந்து விருதுநகர், இராஜபாளையம், திருமங்கலம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மயிலாடும்பாறையிலிருந்து 80 கிலோ மீட்டர் முதல் 100 கிலோ மீட்டர் வரை சென்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விருதுநகர், ஆண்டிப்பட்டிக்கெல்லாம் நல்ல road இருக்கிறது. உங்களுக்கு மலைப் பகுதியில் எந்தப் பகுதியில் road வேண்டும்?

திரு. பி. அய்யப்பன்: மலையில் 10 கிலோ மீட்டரில் மல்லப்புரம் வந்துவிடும். அங்கிருந்து 10 கிலோ மீட்டரில் பேரையூர் வந்துவிடும். ஆக 20 கிலோ மீட்டரில் பேரையூர் வந்துவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சரி. கேள்வியைப் புரிந்துகொண்டுவிட்டார்கள்.

திரு. பி. அய்யப்பன்: ஆகவே, அந்த மலைப் பாதையை பொது மக்கள், விவசாயிகள் பயன்பாட்டிற்கு அனுமதிப்பார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன இடத்திலுள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலகம்மூலம் இணையதளத்தில் அதுகுறித்த அனைத்துத் தகவல்களையும், அதாவது, சாலையின் நீளம், அகலம் போன்றவற்றையெல்லாம் குறிப்பிட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களிடம் விண்ணப்பித்தால் நீங்கள் வேண்டிய நடவடிக்கையை எடுப்பீர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: நீங்கள் application போட்டீர்கள் என்றால், அந்த மனுவை ஆராய்ந்து, அது முடியும்பட்சத்தில், நிதி ஆதாரத்தை வைத்து, நாங்கள் கொடுத்துவிடுகிறோம். இல்லையென்றால், அவர்களுக்கு NOC

2022 ஏப்ரல் 13]

வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடும்பாறை–மல்லப்புரம் சாலை 2001 முதல் 2006 வரையிலான காலத்தில் நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோது போடப்பட்டிருக்கிறது. சாம்பல் நிற அணில்கள் அந்தச் சாலையின் குறுக்கே செல்கின்றன. தார் இளகி, அந்த சாம்பல் நிற அணில்களின் கால்களில் தார் ஒட்டிக்கொண்டு சேதம் ஏற்படுவதனால், அங்கு* concrete *சாலையாகவே அமைத்துத் தரப்பட்டது. அப்படிப் போடப்பட்ட சாலைகள் உரிய பராமரிப்பு இல்லாத காரணத்தினால், தற்போது சீர்கெட்டு, பழுதடைந்திருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தச் சாலை வனத் துறைக்குச் சொந்தமான சாலையா?*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *சுமார் 2½ கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலைதான் அது. எனவே, அந்தச் சாலை சரி செய்யப்பட்டு, பராமரிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்தச் சாலையை அதிகாரிகளை வைத்து ஆய்வுகளை மேற்கொண்டு, சரிசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2022 ஏப்ரல் 13*

108—

துணை மின் நிலையம்

*13134—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, சங்கிலியாண்டபுரம் மற்றும் துரைசாமிபுரம் சாலைகள் சந்திப்பில் மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, சங்கிலியாண்டபுரம் மற்றும் துரைசாமிபுரம் ஆகிய இரண்டு சாலைகளும் சேரும் மையப் பகுதியில் சர்வைட் பள்ளிக்கு எதிரே மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செங்குளம், சங்கிலியாண்டபுரம், காஜாபேட்டை, துரைசாமிபுரம், மல்லிகைபுரம், கீழப்புதூர், எடத் தெரு, செந்தநீர்புரம் உள்ளிட்ட பகுதிகளில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். வரகனேரி 33/11* KVA, *நான்கு கிலோ மீட்டர் தூரத்திலும், அம்பிகாபுரம் 110/11* KVA, *6 கிலோ மீட்டர் தூரத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 110/11* KVA, *6 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளன. மேற்கண்ட துணை மின் நிலையங்களிலிருந்து இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இங்கிருந்து வரக்கூடிய உயரழுத்த மின்*

2022 ஏப்ரல் 13]

இணைப்புகளிலே அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், இடையில் உள்ள மூங்கில் முட்டுக்காடுகள், வாழைத் தோட்டங்களில் வீசும் காற்றின் வேகத்தினால் மின் கம்பிகள் அறுந்து விழுவதனாலும் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. மேலும், மழைக் காலங்களில் மின் தடை ஏற்பட்டாலோ, மின் தடங்களில் பழுது ஏதேனும் ஏற்பட்டாலோ அதனைச் சரி செய்ய காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, சங்கிலியாண்டபுரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது அவசியமாகிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 29-6-2021 மற்றும் 27-10-2021 ஆகிய தேதிகளில் கடிதங்கள் எழுதியுள்ளேன். மேற்கண்ட பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏதுவாக சங்கிலியாண்டபுரம், துரைசாமிபுரம் செல்லும் சாலையிலே சர்வைட் பள்ளிக்கு எதிரே மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடங்கள் இருக்கின்றன. காலியிடம் இருக்கின்றபோது, துணை மின் நிலையம் அமைக்க அவசியம் இல்லை என ஏன் சொல்கிறீர்கள் என்று தெரியும். Minimum *8 கிலோ மீட்டர் தூரமிருந்தால்தான்* sub-station *அமைக்க முடியும் என்ற கருத்தை நானும் அறிவேன். எனவே, சென்னை போன்று, திருச்சியிலும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு, குறுகிய பகுதியில்* indoor sub-station *அமைக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் செய்வதற்காக ரூ.625 கோடி மதிப்பில் 8,905 புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்கான திட்டப் பணிகள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 100 சதவிகிதப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதியில் 10 இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய மாநகராட்சிக்குச் சொந்தமான அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம்* ½ *ஏக்கர் நிலம் அல்லது 50 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. எனவே, நிலம் கிடைக்கப்பெறும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களின் உத்தரவினைப் பெற்று துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ½ ஏக்கர் நிலம் இருக்கிறது. இருந்தாலும் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது, திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பிரசித்திபெற்ற மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவர் சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் பல்வேறு திருவிழாக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சித்திரை மாத பிரம்மோற்சவமும், ஆனி திருமஞ்சனமும், ஆடிப்பூரம், திருக்கார்த்திகை, மார்கழி திருவாதிரை, பங்குனி உத்திரம் என ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்கள் அந்தக் கோயிலில் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று Main Guard Gate பகுதியிலுள்ள லூர்து மாதா கோயிலிலும் பிப்ரவரி மாதம் திருவிழா நடைபெறுகிறது. ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத் தேரோட்டத்தின்போது கோயிலைச் சுற்றியுள்ள ஆண்டாள் தெரு, நந்திகோயில் தெரு, என்.எஸ்.பி. ரோடு ஆகியவற்றின் வழியாக தேரோட்டம் நடைபெறும்போது மின்சார ஒயர்கள் மேலே செல்வதால், ஒயர்கள் தேரில் சிக்கி பெருமளவில் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, மலைக்கோட்டை தேரோடும் பகுதியில், சுவாமி உலா வரும் பகுதியில், Main Guard Gate பகுதியில், சத்திரம் bus stand பகுதியில் மற்றும் மலைக்கோட்டையைச் சுற்றியுள்ள வீதிகளில் புதைவட (Underground Cable) அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதிகளில், ஆய்வுகள்

2022 ஏப்ரல் 13]

மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிதியாதாரங்களின் அடிப்படையில், வரக்கூடிய ஆண்டுகளில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட நாகவேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள், நெசவாளர்கள் நலன் கருதி, நாகவேடு கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, கடந்த எடப்பாடியார் ஆட்சியில் அதற்கான நிலத்தை மின்சாரத் துறை கிரயத்திற்கு வாங்கியுள்ளது. ஆனால், இதுவரை அங்கே துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படவில்லை. அந்தப் பகுதியில் low voltage இருப்பதால் விவசாயிகள், நெசவாளர்கள் எல்லாம் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, நாகவேடு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணியைத் துவங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் மின் இணைப்புக்காகப் பதிவு செய்து காத்திருந்த 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பை வழங்குவதற்கான நிகழ்ச்சி கடந்த ஆண்டு 23–9–2021 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் துவங்கி வைக்கப்பட்டு, ஆறு மாதக் காலத்தில் அதாவது, 29–3–2022 வரை 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பை வழங்கிய முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற சனிக்கிழமை 16–4–2022 அன்று காலை 9–00 மணிக்கு 1 இலட்சம் விவசாயிகள் மத்தியில் காணொலி வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

சிறப்புரையாற்றவிருக்கிறார்கள். விவசாயப் பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கைகளாக இருக்கக்கூடிய, குறிப்பாக சில பகுதிகளில் சீரான மின் விநியோகம் வேண்டுமென்ற அந்தக் கோரிக்கைக்கு துறையின் வாயிலாக ஆய்வுகள் செய்யப்பட்டு, எந்தெந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும், எந்தெந்தப் பகுதிகளில் புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, துறை வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான அந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சாக்கோட்டை க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயி என்ற முறையில், நீண்ட நாட்களாக கிடப்பில் இருந்த 1 இலட்சம் விவசாயிகளுக்கு pumpset connection கொடுத்து விவசாயிகளின் வயிற்றில் பால்வார்த்த மாண்பிற்கினிய மக்கள் முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் விவசாயிகளின் சார்பில் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்பிற்கினிய பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதியில் 14 கல்லூர் கிராமம் புல எண் 207/1 அரசுப் புறம்போக்கு வகைப்பாட்டில் 043.5 ஏர்ஸ் பரப்பளவில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர இடம் வகை மாற்றம் செய்யப்பட்டு, வருவாய் நிலை ஆணை எண் 24-ன்கீழ் நில உரிமை கோரும் படிவத்தில் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவாக நிலம் வகை மாற்றம் செய்ய வேண்டும். 10 ஆண்டுக்காலம் இதே மன்றத்தில் பலதடவை இதே கேள்வியைப் பதிவு செய்திருக்கிறேன், நடக்கவில்லை. மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள் குறைந்த மின்னழுத்தம் இல்லாமல் செய்வதற்கு அருள்கூர்ந்து அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, அதில் கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் 3 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள துணை மின் நிலையம் அமைப்பதற்கான அந்தப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கண்டிப்பாக அங்கு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம் முழுவதும் விவசாயம் நிறைந்த பகுதி. கொளத்தூர் ஒன்றியத்தில், கண்ணமூச்சி பஞ்சாயத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்பெற்ற நிலையில்,* three phase *மின்சாரம் 6 மணி நேரம்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கொளத்தூர் ஒன்றிய விவசாயிகளுக்கு* three phase *மின்சாரம் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த ஒன்றியப் பகுதியில் இன்றே ஆய்வு செய்து, அதுபோன்ற குறைபாடுகள் இருந்தால், துறை சார்பாக உடனடியாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக இந்த*

[2022 ஏப்ரல் 13

ஆண்டு கோடை காலத்தைச் சமாளிப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இருந்தும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியில் ஆய்வுகள் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 10–45

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில், பெரும்பாலான விவசாய நிலங்கள் மடத்துக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் சொந்தமான இடங்களாக இருக்கின்றன. அதாவது, கோயில் இடம், மடத்து இடம். இவற்றுக்கு மின் இணைப்புப் பெற விண்ணப்பித்தால், குத்தகை நிலுவைத் தொகை அதிகமாக இருக்கின்றது என்று பல மனுக்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன. '10 மாதத்தில் 1 இலட்சம் பேருக்கு மின் இணைப்பு' என்று புதுமையான அறிவிப்பு செய்த இந்த அரசு, பாதிக்கப்பட்டிருக்கின்ற ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையை உணர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மற்றும் மடத்து நிருவாகத்திடம் மின்சாரத் துறை சமரசம் பேசி, மின் இணைப்புக் கிடைக்க சிறப்பு அனுமதி ஏதேனும் வழங்குமா என்பதைத் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, விவசாயப் பெருமக்களுடைய சில நிலங்கள், கோயில் நிலங்களாகவும், சில பகுதிகள் மடத்துக்குச் சொந்தமான நிலங்களாகவும் இருக்கின்றன. மேலும், அறநிலையத் துறைக்கும், மடத்துக்கும் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை நிலுவையில் இருக்கின்றது. அதனால், மின் இணைப்பு

2022 ஏப்ரல் 13]

கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. இதுபோன்று இருக்கக்கூடிய பகுதிகள் முழுவதும் இப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி விவசாயம் நிறைந்த தொகுதி. இந்தத் தொகுதியில் போளூர் ஒன்றியத்தில் இருக்கின்ற பேட்டை கூட்டுச் சாலையில் ஒரு துணை மின் நிலையம் அரசின் சார்பில் அமைக்கப்படுமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 216 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டதில், திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 16 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய போளூர் பகுதியிலும் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வின் அடிப்படையில், இந்த ஆண்டு அமைப்பதற்கான சாத்தியக்கூறின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

ஜவுளிப் பூங்கா

***6740—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, R.K. பேட்டை வட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, R.K. பேட்டை வட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. இத்தொகுதியில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களும், விசைத்தறி நெசவாளர் சங்கங்களும் மற்றும் ஆயிரக்கணக்கான பெடல் தறி நெசவாளர் சங்கங்களும் உள்ளன. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய, பெரிய துணிநூல் கம்பெனிகளும் இந்தத் தொகுதியில் உள்ளன. இங்கு சுடிதார், லுங்கி, வேட்டி, சேலை போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழக அரசின் இலவச வேட்டி-சேலை உற்பத்தித் திட்டத்தில் இத்தொகுதி கணிசமான பங்கை வகிக்கின்றது. எனவே, நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவுளிப் பூங்காவை இந்தத் தொகுதியில் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, R.K. பேட்டை வட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று திரு. சந்திரன் அவர்கள் கேட்டிருக்கிறார். அவரைவிட நான்தான் அதிகமாக அக்கறைக் கொண்டவன். நான், அந்த R.K. பேட்டை ஒன்றியத்தில் பிறந்தவன். அதுமட்டுமல்லாமல், அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர், மாண்புமிகு முன்னாள் மத்திய இணை அமைச்சர் டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களும் ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, எப்படியாவது அங்கே ஜவுளிப் பூங்கா வருவதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்வேன் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ராணிப்பேட்டை மாவட்டம் அவருடைய புகுந்த வீடாக இருந்தாலும், திருத்தணி சட்டமன்றத் தொகுதி அவருடைய தாய்வீடு. அவர் ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு, புகுந்த வீட்டிற்கு ஏராளமான சீதனங்களை இவ்வளவு காலம் கொடுத்திருப்பார். ஆனால், தாய்வீட்டுச் சீதனமாக இதுவரை எதுவும் கொடுக்கக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனவே, இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்தி, அவர் தாய்வீட்டுச் சீதனமாக ஜவுளிப் பூங்காவைத் தொகுதி மக்களுக்கு அளிப்பார் என்கின்ற நம்பிக்கையில் தொகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தொகுதி மக்களுடைய எதிர்பார்ப்பான தாய்வீட்டுச் சீதனத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழில் நிறைந்துள்ள பகுதிகளாக இருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் தலைவர் அவர்கள் சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த ஜவுளிப் பூங்காவை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்குத் தேவையான நிலத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம். நிலம் கிடைத்தவுடன் நிச்சயமாக அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

மேல்நிலைப் பள்ளி

***7552—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொகுதியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்பட்டுவரும் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, அம்பத்தூர் தொகுதியில் நேரடியாக

2022 ஏப்ரல் 13]

புதிய அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர், கள்ளிக்குப்பம், மேனாம்பேடு, கல்யாணபுரம், காமராஜர்புரம் ஆகிய பகுதிகள் மிகவும் பின்தங்கிய, தொழிலாளர்கள் நிறைந்த பகுதிகளாகும். அந்தப் பகுதிகளில் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆண்டுதோறும் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சியடைகின்றார்கள். அதற்கேற்ப போதிய மேல்நிலைப் பள்ளிகள் இல்லை. மாணவிகளுக்கென்று ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. ** மேலும், தொலைதூரம் சென்று பயில சிரமம் ஏற்படுவதோடு, தனியார் கல்வி நிறுவனங்களிலும் பணம் செலுத்திப் பயில வசதியில்லாத நிலை உள்ளது. இந்த நிலையைப் போக்க, இந்தப் பகுதியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளைத்தான் நாம் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துகிறோம். நேரடியாக, எடுத்தவுடன், மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். 1996–லேயே* truncated *முறையை* abolish *செய்துவிட்டோம்; அப்போதுதான், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளைத் தனியாகத் தொடங்கும் முறை இருந்தது. இப்போது அந்த முறை இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தரமுயர்த்துவதைப் பற்றி பலமுறை நாங்கள் சொல்லியிருக்கிறோம். அரசாணைகளையும் வெளியிட்டிருக்கிறோம். அரசாணை எண்கள் 235, 379, 49 ஆகியவற்றைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

தாங்கள் தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் அதுபோன்ற சூழ்நிலை தமிழ்நாட்டில் எங்குமே இல்லாத அளவிற்கு, 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, அன்றைக்கு திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோதே இந்த system almost saturate ஆகிவிட்டது. 1 கி.மீ., 3 கி.மீ. 5 கி.மீ., 8 கி.மீ. இடைவெளியில் தொடக்கப் பள்ளிகள் இருப்பது almost முடிந்துவிட்டது. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பள்ளிகளைத் தரமுயர்த்துவதைப்பற்றி அதிகம் கேட்கிறார்கள். உண்மைதான். சில இடங்களில் genuine case ஆக இருக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஏற்கெனவே நாங்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடன் இதுகுறித்து discuss செய்து கொண்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு, ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துகிறோமென்றால், அங்கே தனியாக 9 P.G. teachers-ஐ நியமிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இந்த 9 P.G. teachers-ஐ நியமிக்கும்போது ஒரு வருடத்திற்கான financial implication என்று பார்க்கும்போது, recurring cost ஆக ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை சம்பளம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல், Labs தனியாகக் கட்ட வேண்டியிருக்கிறது. Capital Expense-ஐப் பார்த்தால், 1 கோடி ரூபாய் வரை ஆகிறது. இருந்தாலும், மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, 1 கி.மீ., 3 கி.மீ. 5 கி.மீ., 8 கி.மீ. இடைவெளியில் பள்ளிகள் இருக்க வேண்டும் என்பதையும் கருத்தில்கொண்டு,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 13]

அதுபோன்று இல்லாதபட்சத்தில், genuine request ஆக இருந்தால், இதுகுறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, இதை எப்படி sort out செய்ய வேண்டும் என்பதைப் பார்த்து, கண்டிப்பாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே கொடுக்கின்ற தாயுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவினை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு வினாவைக் கேட்க விரும்புகிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டில் அம்பத்தூர் சிறப்பு நிலை நகராட்சி, பெருநகர மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நிலையில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின்கீழ், தற்சமயம் 32 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவையனைத்தையும் பெருநகர மாநகராட்சியின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறை அலுவலர்களிடம் கலந்தாலோசித்து, கருத்துரு பெறப்பட்டு, அதற்கு என்ன வழிவகை செய்ய முடியுமோ, அது கண்டிப்பாகச் செய்யப்படும். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

111—

உள் விளையாட்டு அரங்கம்

***5338—திரு. அ.செ. வில்வநாதன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் நகராட்சி, 4–வது வார்டு, A. கஸ்பா பகுதியில் இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, ஆம்பூர் நகராட்சி, 4–வது வார்டு, A. கஸ்பா பகுதியில் இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கழகத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசையினை நோக்கி வணங்குகிறேன். நமது தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக மக்கள் முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அவை முன்னவர், கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

2022 ஏப்ரல் 13]

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அண்ணன் எங்கள் இதயநிதி திரு. உதயநிதி அவர்களையும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களையும் வணங்குகிறேன்.*

ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கு அரசுமூலம் இதுநாள் வரை விளையாட்டு அரங்கம் ஏதுமில்லை. நான் குறிப்பிட்ட A. கஸ்பா பகுதியில் 2021–2022 ஆம் ஆண்டைய மானியக் கோரிக்கை அறிவிப்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்மூலம் அறிவித்த எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதற்கு முதற்கண் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு இடமில்லாத காரணத்தால், வார்டு எண் 35–ல் பெத்லகேம் பகுதியில் ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்ட சர்வே எண் 2/8–ல், சுமார் 4 ஏக்கர் தீர்வு ஏற்படாத தரிசு நிலம் உள்ளது. இந்த இடத்தைத் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு, இந்த இடம் விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு அரங்கம் மற்றும் பூங்கா அமைக்க ஏதுவாக உள்ளதெனத் தெரிவித்துள்ளார். எனவே, நமது கழகத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில் இங்கு இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டுமெனத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், 2019 ஆம் ஆண்டு புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டமாகும். திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று, திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலைப் பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய துரித நடவடிக்கையால், ஓர் ஏக்கர் பரப்பளவிலே 4.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கின்ற பணிகள் நடைபெற்று*

[2022 ஏப்ரல் 13

வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற ஆம்பூர் நகராட்சி, 4-வது வார்டு, A. கஸ்பா பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான சரியான இடம் இல்லையென்கின்ற அடிப்படையில், வார்டு எண் 37-ல், பெத்லகேம் பகுதியிலே இடம் இருக்கிறது; அந்த இடத்திலே விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமெனக் கோரியிருக்கிறார். அந்த இடத்தை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட பகுதியில் இந்த ஆண்டே இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள். நன்றி சொல்லிவிடுங்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் விளையாட்டு கிராமம் கொண்டு வரப்பட்டது. சுமார் 300 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *தற்போது அது பராமரிப்பின்றி முட்புதர்கள் நிறைந்து காணப்படுகின்றது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட இளைஞர்களின்*

2022 ஏப்ரல் 13]

நலன் கருதி, கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட விளையாட்டு கிராமத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற பாளையங்கோட்டை ஒன்றியத்திலிருக்கின்ற, மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த விளையாட்டு கிராமத்தை, விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயிருக்கின்ற மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால், அந்தப் பகுதிகளில் இருக்கின்ற நீச்சல் வீரர்கள் பயிற்சி பெறுகின்ற அளவில் ஒரு நீச்சல் குளமும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபாலபுரம் முத்தமிழறிஞர் வாழ்ந்த பகுதி. அதுவொரு அரசியல் Epicentre. பல அரசியல் Boxing களங்கள் பார்த்த பகுதியாகும். அதனால், ஆயிரம் விளக்கு தொகுதியில், கோபாலபுரம் விளையாட்டரங்கத்திலுள்ள உள்ளரங்கத்தில் Boxing Training Academy–ம், Boxing Indoor Stadium–ம் அமைத்துக் கொடுக்குமாறு நான் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றில் கோபாலபுரம் என்பது ஒட்டுமொத்த உலகமே உற்றுநோக்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள் வாழ்ந்த இடமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள்தான் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கை உயர்வதற்காக 80 ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கையில், தமிழகத்தை வளர்ந்த மாநிலமாக மீட்டெடுத்துத் தந்தவர். அதுமட்டுமல்ல, தமிழக விளையாட்டுத் துறையையே உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, செங்கல்பட்டு மாவட்டம், மேலகோட்டையூரில் கிட்டத்தட்ட 105 ஏக்கர் பரப்பளவில் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு* Sports University*-ஐ உருவாக்கிக் கொடுத்ததும் மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஆயிரம் விளக்கு தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற கோபாலபுரம் விளையாட்டரங்கில் இந்த ஆண்டே Boxing Training Academy *தொடங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K. *மாரிமுத்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

சுற்றுலாத் தலம்

***2988—திரு. K. மாரிமுத்து:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அலையாத்திக் காடு பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.*

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையிலுள்ள அலையாத்திக் காடுகள் பகுதிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, உரிய துறையிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்'

என்பது வள்ளுவரின் வாக்கு. மண்ணும், நிலமும், அதைப்போல காடுகளும், நீரும்தான் இன்றைக்கு உலகத்தையே காத்துக்கொண்டிருக்கின்றன. அப்படிக் காத்துக்கொண்டிருக்கின்ற மிகச் சிறப்புவாய்ந்த காடுகள்தான், முத்துப்பேட்டையில் இருக்கிற அலையாத்திக் காடுகள் ஆகும். நாட்டிலே இருக்கிற அலையாத்திக் காடுகளிலேயே 61 சதவிகிதம் முத்துப்பேட்டையில் இருக்கிற அந்த அலையாத்திக் காடுகள்தான் அவ்வளவு சிறப்புப் பெற்றவை. பிச்சாவரத்தில் இருக்கிற அலையாத்திக் காடுகளைவிட 10 மடங்கு கூடுதலானவை. குறிப்பாக, அதிராம்பட்டினத்திலிருந்து கிட்டத்தட்ட முத்துப்பேட்டை வரையிருக்கிற 120 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டிருக்கிற அந்தக் காடுகள்தான், சுனாமி வந்தபோதும், கஜா புயல் வந்தபோதும், அந்தப் பகுதிகளில் எந்த இழப்புகளும் ஏற்படாமல் பாதுகாத்து நின்றன. இன்றைக்கு அந்தக் காடுகள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. அது சுற்றுலாத் துறையின் வசம் இருந்தாலும் அதற்கான எந்த முன்னேற்றப் பணிகளும் இன்னும் மேற்கொள்ளப்படவே இல்லை. மேலும், அந்த இடத்தில் இருக்கிற கழிமுகப் பகுதியில்தான்

அலையாத்திக் காடுகள் உருவாகின்றன. குறிப்பாக, ஆறுகள் கடலுக்கு வந்து சேருகிற இடம்-கோரையாறு, மரைக்கா கோரையாறு, கண்டபறிச்சான் கோரையாறு, காவேரியில் இருக்கிற உபரி நீர் வடிகிற இடங்களில்தான் அந்தக் காடுகள் உருவாகின்றன. அந்தக் காடுகள்தான் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களையெல்லாம் அரண்போல் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. K. மாரிமுத்து: அந்தக் காட்டைப் பராமரிப்பதற்கு, பாதுகாப்பதற்கு, அதை இன்னும் மேம்படுத்துவதற்கு, அதை சுற்றுலாத் தலமாக உருவாக்குவதற்கு அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை உலகத் தரம்வாய்ந்த பாதுகாக்கப்பட்ட சுற்றுலாத் தலமாக அரசு ஏற்படுத்தித் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையிலுள்ள அலையாத்திக் காடுகள் தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய சதுப்புநிலக் காடுகளில் ஒன்றாகும். ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையிலான காலங்களில் அதிக எண்ணிக்கையிலான பறவைகள் அங்கு வருகின்றன. ஏற்கெனவே கடந்த ஆண்டுகளில் சுற்றுலாத் துறையின் சார்பாக 23.75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அணுகு சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தித் தருதல் போன்ற பணிகள் வட்டார வளர்ச்சி அலுவலரால் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு Tourism Destination Development Scheme—ஐ என்பதை சுற்றுலாத் துறை வரலாற்றிலே முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளோம். எனவே, முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகளை சுற்றுலாத் துறை மூலமாக மேம்படுத்த, வனத் துறையின் தடையில்லாச் சான்றிதழுடன் கருத்துரு

2022 ஏப்ரல் 13]

மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் வரப்பெற்றால், Tourism Destination Development Scheme *வெளியிட்டுள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் மற்றும் இந்த அரசின் அரிய, நல்ல, சிறப்பான முயற்சிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்களின் நலனும் அதில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. காடுகளிலுள்ள மரங்களின் வேர்களெல்லாம் மண்ணுக்குள்தான் செல்லும். ஆனால், அலையாத்திக் காடுகளிலுள்ள மரங்களின் வேர்களெல்லாம் மேல்நோக்கி வருகின்றன. அப்படி மேல்நோக்கி வருகிற அந்த வேர்கள்தான் உலகத்தில் இருக்கிற அரிய வகை மீன்களெல்லாம் முட்டையிட்டு, அடைகாத்து, மீன் இனப்பெருக்கத்தைச் செய்கிற மகத்தான இடமாக இருக்கிறது. மீனவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு உரிய இடமாகவும் அந்த இடம் இருக்கிறது. அதேபோல அலையாத்திக் காடுகளில் இருக்கிற மரங்கள் மூலிகை சம்பந்தப்பட்ட மரங்களாக, ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படக்கூடிய மரங்களாக இருக்கின்றன. குறிப்பாக, கழுதைமுள்ளி என்ற மரம், சிறுகண்டல் என்ற மரம், குட்டை சிறு புன்னை மற்றும் நெட்டை சிறு புன்னை போன்ற மிக உயர்ந்த மூலிகைகளைக் கொண்டிருக்கிற அரிய வகை மரங்கள் இருக்கின்றன. ரஷ்யா, சைபீரியா போன்ற நாடுகளிலிருக்கிற பறவைகள் எல்லாம் அங்கே வந்து . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. K. மாரிமுத்து: *தாவர உணவுக்காக பயன்படுத்துகிற மகத்தான இடத்தை இன்னும் கூடுதல் கவனத்தோடு பராமரிக்க வேண்டும். அதோடு சேர்த்து அதற்கு அருகில் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டரில் உதயமார்த்தாண்டபுரம் என்ற ஊர் இருக்கிறது.*

அது பறவைகள் சரணாலயமாக இருக்கிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயத்தையும் சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறை சார்பாக வரலாற்றில் இல்லாத அளவுக்கு, முதல்முறையாக சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம் Tourism Destination Development Scheme என்கிற ஒரு புதிய scheme-ஐ அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்த scheme மூலமாக ஒவ்வோர் ஆண்டும் 10 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்படவுள்ளன. அதனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் அழகாக உள்ள சுற்றுலாத் தலங்களை வருங்காலங்களில் எடுத்து ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கேற்ப கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தேவராஜி அவர்கள்.

திரு. க. தேவராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பத்தூர் மாவட்டத்தில், ஜோலார்பேட்டை தொகுதியில், ஏழைகளின் ஊட்டியாக விளங்கக்கூடிய ஏலகிரி பகுதியில் Boat House, Botanical Garden ஆகியவை உள்ளன. மறைந்தும் மறையாமலிருக்கின்ற கலைஞர் அவர்களுடைய 10 ஆண்டு ஆட்சிக் காலத்தில், 100 ஏக்கருக்குமேல் Botanical Garden-க்காக செய்யப்பட்ட பணிகள், பிறகு வந்த அரசால் தொடரப்படாமல் நிலுவையில் உள்ளன. 100 ஏக்கரிலுள்ள Botanical Garden-ஐ சீர்செய்து, பெரிய அளவிலான ஒரு check dam அமைக்க வேண்டும். மழை பெய்தால்தான் ஏலகிரி கிராமத்திலுள்ள பகுதிகளில் தண்ணீர் கிடைக்கிறது. கிட்டத்தட்ட

2022 ஏப்ரல் 13]

2,800 அடி உயரத்திலுள்ள அந்த மலைப் பகுதியில் முட்புதர்கள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர் செய்து வெளிநாடுகள் மற்றும் கர்நாடகா, ஆந்திரா போன்ற பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் பயணிகளுக்கு வசதியாக தமிழ்நாட்டில் ஒரு சுற்றுலாத் தலம் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அங்கே வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குவதற்கு வசதியாக விடுதிகளையும், Boat House*-ம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட* Tourism Destination Development Scheme*-ன்கீழ், ஏற்கெனவே ஏலகிரி தேர்வு செய்யப்பட்டு, 2 கோடியே 98 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. வரும் வருடங்களில் அதற்கான பணிகள் அங்கே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மரியாதைக்குரிய எதிர்க்கட்சிக் கொறடா ஆகிய மூவரையும் வணங்குகிறேன்.*

எனது தொகுதியான வால்பாறை மலைப் பகுதிக்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். அதற்கு மிக அருகிலுள்ள கேரளா மாநிலத்திலிருந்தும்கூட சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தமிழக சுற்றுலாத் துறையின் சார்பாக, ஆங்காங்கே வைக்கப்படுகின்ற விளம்பரப் பதாகைகள்கூட, எங்கள் மலைப் பகுதியான அய்யர்பாடி, டாப் ஸ்லிப், சோலையாறு அணை, ஆழியாறு அணை போன்ற ரம்யமான பகுதிகளில் வைத்து விளம்பரம் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட வால்பாறை

மலைப் பகுதியிலே கடந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், அன்றைய முதலமைச்சராக இருந்த அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய சீரிய முயற்சியினால் படகு இல்லம், தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தற்போது என்ன வேண்டும்? அதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: வால்பாறை மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடம் சுற்றுலாத் தலம் அல்லது சுற்றுலாத் தலம் இல்லை என்பது குறித்த எந்த அறிவிப்பும், அரசாணையும் இல்லை. ஓர் இடத்தின் இயற்கை எழில் அழகு, அந்த இடத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆகியவற்றைப் பொறுத்து அந்த இடம் தானாக சுற்றுலாத் தலமாக மாறிவிடுகிறது. அதுமட்டுமல்லாமல், ஓர் இடத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, அந்த இடத்திலுள்ள இயற்கை எழிலைப் பொறுத்து, அந்தப் பகுதியை Tourism Destination Development Scheme-ன்கீழ் ஒவ்வோராண்டும் ஆய்வு செய்யவுள்ளோம். அந்தப் பட்டியலில் டாப் ஸ்லிப் பகுதியும் இருக்கிறது. எனவே, அதற்குத் தனியாக ஒரு குழு அமைத்து, ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப வருங்காலத்தில் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாளை சமத்துவ நாளாகக் கொண்டாடுதல், சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்தல், அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவுதல் மற்றும் அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை செம்பதிப்பாக தமிழில் வெளியிடுதல் குறித்த பொதுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் ஓர் அறிக்கையை இந்த அவைக்குச் சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் வடக்கில் உதித்த சமத்துவ சூரியன்; (மேசையைத் தட்டும் ஒலி) பலர் வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்; சமூகம் ஏற்படுத்திய ஏற்றத்தாழ்வை, கல்வி, சட்டம், அரசியல் எழுச்சி மூலமாகச் சமப்படுத்திய போராளி; 'இருட்டறையில் இருக்குதடா உலகம்; சாதி இருக்கிறதென்போனும் இருக்கின்றானே' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வரிகளைப்போல, சாதிக் கொடுமையால் இருண்ட உலகத்தைத் தன்னுடைய பரந்த அறிவால், ஞானத்தால் விடிய வைத்த விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வேண்டாததை நீக்கிய சிற்பி; வேண்டியதைச் சேர்த்த ஓவியர்; அண்ணல் அறிவுச்சுடராய் விளங்கி அரசமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொடுத்தவர். அவருடைய கருத்துகள் ஆழமும், விரிவும் கொண்டவை; எதிர்காலத்திற்கு ஒளிவிளக்கு அவை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், பெரியார் பிறந்த நாளை 'சமூகநீதி நாளாக' அறிவித்ததுபோல, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதியை 'சமத்துவ நாள்' என்று கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 ஏப்ரல் 13

இந்தக் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 14 ஆம் தேதி இனி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) சமத்துவ நாள் உறுதிமொழி தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

நேற்றைய கூட்டத்தில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில், அண்ணலுடைய முழு உருவ வெண்கலச் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல். திருமாவளவன் அவர்கள் முன்வைத்தார்கள். அந்தக் கோரிக்கையையும் ஏற்று, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான திரு. ஆ. ராசா அவர்கள், தந்தை பெரியாருடைய நூல்களை 21 மொழிகளில் மொழிபெயர்த்ததைப் பாராட்டியதோடு, அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களைத் தமிழில் வாசிக்க வாய்ப்பாக மொழிபெயர்த்துப் புதுப்பிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழக அரசால் அண்ணலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம்பதிப்பாக தமிழில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நீதியின் நோக்கம் சமத்துவத்தை அடைவதே என்பதையும், இவ்விரண்டும் நம் இலக்கின் இரண்டு கண்கள் என்பதையும் இந்த மாமன்றம் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டமே அறியும். தமிழர்கள் அனைவரும் உயர்ந்த நிலையை அடைய, எத்தகைய விண்ணப்பம் வந்தாலும், அதை உடனே பரிசீலித்து ஆவன செய்கிற ஆட்சிதான் இப்போது நடக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தளவில் இந்த அறிவிப்பை நிறைவு செய்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பொதுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த . . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அதற்குத்தான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு பிறகு வாய்ப்புத் தருகிறேன். அது முடியட்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடந்த மாநில அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், ஏப்ரல் 14 ஆம் தேதியை சமத்துவ நாளாகவும், அம்பேத்கர் அவர்களுடைய மணிமண்டபத்தில் மார்பளவு சிலையாக இருக்கின்ற அம்பேத்கர் சிலையை முழு உருவச் சிலையாக மாற்றித் தரவேண்டுமென்று முதன்முதலில் நான்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன். அதற்குப் பிறகு பல தலைவர்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, அதை முழு உருவச் சிலையாக மாற்றித் தருவேன் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், நன்றி மட்டும் ஒரு வார்த்தையில் தெரிவித்து அமருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மாமேதை, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுக்கு முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும், சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும், சமத்துவநாள் உறுதிமொழி எடுக்கப்படும் ஆகிய அறிவிப்புகளை தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறேன்.*

கே.கே. நகரில் தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு முழு வெண்கலச் சிலை அமைப்பதற்கு தலைவர் கலைஞர் அவர்களால் இடம் தேர்வு செய்யப்பட்டு, அவர் வாழ்ந்த இடத்தில் அடிபீடமும் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அவருக்கும் அந்த வெண்கலச் சிலை அமைத்து. தமிழ்ச் சமூகத்திற்கு மிகப் பெரிய மொழிஞாயிறாக விளங்கிய அவருக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்கிற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அம்பேத்கர் அவர்களுக்கு முழு வெண்கலச் சிலை அமைப்பதற்கு நன்றி மட்டும் கூறி அமருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: இந்த அறிவிப்புகளுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர்களாக இருந்தாலும், இந்த நாட்டைக் கட்டமைத்த தலைவர்களாக இருந்தாலும், அத்துணை முன்னோர்களுக்குமே சிறப்புச் செய்வதிலே நம்முடைய முதலமைச்சரோடு ஒப்பிடுவதற்கு இந்தியாவிலே வேறு முதலமைச்சர்கள் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு இதுவரை வைக்கப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளையுமே நிறைவேற்றியிருக்கின்றார். அந்த வகையிலே இன்றைக்கு அறிவித்த இந்த அறிவிப்புகளை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

முற்பகல் 11–20

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா தொடங்கி, முத்தமிழறிஞர் கலைஞர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

தளபதி வரை இன்றைக்கு தமிழகத்திலே உருவாக்கியிருக்கக்கூடிய இந்தத் திராவிட மாடல் ஆட்சி, ஓர் அருமையான ஆட்சி என்பதற்கான ஓர் உதாரணம், இன்றைக்கு தேசிய அளவில் ஒடுக்கப்பட்ட மக்கள் மேலெழுந்து வருவதற்குக் காரணமான புரட்சியாளர் அம்பேத்கருடைய பிறந்த நாளை, சமத்துவ நாளாக அறிவித்திருப்பதாகும். இது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, அன்றையதினம் உறுதிமொழியேற்பது மட்டுமல்ல; அவருடைய அறிவார்ந்த நூல்கள், பேச்சு, பேட்டி, எழுத்துகளெல்லாம் சமூக நீதிக் காவலர் திரு. V.P. சிங் அவர்களால் அனைத்து இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்பேத்கர் அவர்களுடைய எழுத்துகள் இந்தியாவினுடைய மொழிகள் மட்டுமல்ல, உலகம் அறிந்துகொள்ளக்கூடிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும் என்று அறிவித்திருப்பதன்மூலம் மிகப் பெரிய அறிவாயுதத்தை இன்றைக்கு இந்திய மக்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக் கொண்டு, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய எழுத்துகளை தமிழ் மொழியிலே செம்பதிப்பாகக் கொண்டு வருவதை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்று அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்கே தந்தை பெரியார் என்றால், வடக்கே சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்கள்தான் அவருக்கு இணையாக இருந்தவர். அப்படிப்பட்ட பெருந்தகைக்கு, அவரின் பிறந்த நாளை சமத்துவ நாள் என்றும், அவருக்கு முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அறிவிப்பு செய்ததையும், அவர் எழுதிய புத்தகங்களை செம்பதிப்பாகத் தமிழில் வெளியிடுவதற்கு அறிவிப்பு செய்தமைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்து, அவர்களுடைய அரிய நூல்களை எளியவர்களெல்லாம் படிப்பதற்காக செம்பதிப்பாகத் தமிழ் மொழியில் வெளியிடப்படும் என்று அரசாணை வெளியிடவிருக்கின்ற தமிழக அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பணிவான வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவுலக மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் 14–ஐ சமத்துவ நாளாக அறிவித்தும், அவருடைய மார்பளவு உருவச் சிலையை முழு உருவச் சிலையாக அவருடைய மணிமண்டபத்திலே அமைக்கக்கூடிய இந்த அறிவிப்பையும், அம்பேத்கருடைய நூல்களை செம்பதிப்பாக வெளியிடுகின்ற இந்த அறிவிப்பையும் விதி 110–ன்கீழ் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தின் முதல்வனாகவும், தமிழினத்தின் தலைவனாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்மை கம்பீரமாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்று அறிவித்திருக்கின்ற அறிவிப்பு, கோடை மழையென தமிழ்ச் சமூகத்தைக் குளிர வைத்திருக்கிறது. சமம் என்பது வேறு, சமத்துவம் என்பது வேறு;* equal *என்பது வேறு,* equality *என்பது வேறு. எண்ணிக்கையளவில் சமமாக இருக்கலாம், ஆனால், சமத்துவம் இருக்கிறதா என்ற கேள்வி இருக்கிறது. ஆகவே, சமபந்தி போஜனம் என்கின்ற சொல்லை சமத்துவ விருந்து என்று அறிவித்திருப்பது, புரட்சியாளர் அம்பேத்கரின்*

பிறந்த நாளை (மேசையைத் தட்டும் ஒலி) சமத்துவ நாள் என்று அறிவித்திருப்பது தமிழக வரலாற்றில், இந்திய வரலாற்றில் ஒரு மகத்தான புரட்சி. இவற்றையெல்லாம் தாண்டி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், புரட்சியாளர் அம்பேத்கரின் கொள்கைகளைத் தமிழ்ச் சமூகத்தின் எல்லாத் தளங்களுக்கும் கொண்டு சென்றதைத் தொடர்ந்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், அதனினும் கூடுதலாக, வேகத்தோடு இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே, எழுச்சித் தமிழர், மரியாதைக்குரிய தலைவர் முனைவர் அண்ணன் திரு. திருமாவளவன் அவர்களுடைய சார்பிலே நெஞ்சார அகம் மகிழ்ந்து, பாராட்டி, வாழ்த்தி வரவேற்கிறோம். காலையில் கேட்டால், மாலையில் கிடைக்கிறது. 12 மணி நேரத்திற்குள் எளிய மக்களின்பால் இரக்கம் வருகின்றது. ஆயிரமாயிரம் நன்றியைச் சொல்லி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட காலம் முதல் அவருக்கு உறுதுணையாக இருந்து, 2014 ஆம் ஆண்டு மத்தியிலே நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பாக, 'பஞ்ச தீர்த்தம்' என்று டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த இடம், நினைவிடம், அவர்கள் வெளிநாட்டில் தங்கிப் படித்த இடம் முதற்கொண்டு, முக்கியமான இடங்களையெல்லாம் பெருமைப்படத்தக்க வகையில் மாற்ற மத்திய அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. தன்னுடைய வாழ்நாளில், எந்தப் பட்டியலின சமுதாய மக்களுடைய முன்னேற்றத்திற்காக அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பாடுபட்டாரோ, தமிழகத்திலே, குறிப்பாக, பட்டியலின சமுதாய மக்களுடைய ** தொடர்பாகவும், மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதேமாதிரியான ஓர் அறிவிப்பை விதி 110-ன் அறிவிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ** சம்பந்தமாகப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. இதுசம்பந்தமாக, தனியாகக் கேளுங்கள், சொல்கிறோம். தற்போது, அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்படும் என்றும், அவர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று அறிவித்திருக்கிறார்கள். அதை, நீங்கள் வரவேற்கின்றீர்களா, இல்லையா என்று பதில் சொல்லுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: நிச்சயமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால், இந்தியா முழுமைக்கும் அண்ணல் அம்பேத்கருடைய புகழை பாரதிய ஜனதா கட்சி எடுத்துச் செல்கிறது. அதனுடன், கூடவே இந்த முயற்சியையும் நாங்கள் வரவேற்கின்றோம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன்கீழ், அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்ததை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கின்றேன். குறிப்பாக, உயர்ந்த தலைவர்களை, ஒற்றுமைக்காகப் பாடுபட்ட தலைவர்களை வருங்காலத்தில் மக்கள் மறந்துவிடக் கூடாது என்பதன் அடிப்படையில், இவ்வாறு முன்னெடுத்துச் செல்வது மகத்தான காரியம் என்பதால் நாங்கள் பாராட்டி, வரவேற்கின்றோம்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்க வேண்டுமென்று முதன்முதலாக இந்தச் சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவன் என்ற அடிப்படையில், அதை ஏற்றுக்கொண்டு, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்த பெருமை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உண்டு.

அதேபோல, தந்தை பெரியார் பிறந்த நாள் சமூகநீதி நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, இந்திய நாட்டின் விடுதலைக்குப் பிறகு அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கி, பட்டியலின, பழங்குடியின மக்கள் மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள், ஒரே நாளில் 7 இடங்களில் அம்பேத்கர் சிலையை அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். மேலும், பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர் அட்டையில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ் ஆகிய மூவரின் படங்கள்தான் பொறிக்கப்பட்டுள்ளன. இது கொள்கை ரீதியாக நாங்கள் ஏற்றுக்கொண்ட ஒன்று. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்புகளை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்; நன்றி தெரிவிக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 மாதங்களாக பல அதிசயங்களும், நல்லாச்சரியங்களும், அற்புதங்களும் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றன. சமூக நீதியின் நிலம் தமிழகம் என்பதை, கலைஞர், பேரறிஞர் அண்ணா, பெரியாரின் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை தலைநிமிர வைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

நான், ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையில் பேசியபோது, திரு. ஜோதிபா புலே, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய புத்தகங்களை மொழிபெயர்க்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தேன். நேற்றைய கூட்டத்தில் மிகவும் தெளிவாக, 6 மாதங்களுக்கு முன்பு, தமிழகத்தில் என்னென்ன வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன என்பதை, நீங்கள் சொன்ன கோரிக்கைகளை உடனே நான் நிறைவேற்றி இருக்கிறேன் என்பதை அச்சிட்டு,

கையில் புத்தகமாகக் கொடுத்திருக்கின்ற முதல்வர், இந்தியாவிலேயே முதன்மையான முதல்வர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நேற்று வைத்த கோரிக்கைகளுக்கெல்லாம்— Express வேகம், Express delivery என்று சொல்வார்கள். இதையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அதி Express வேகமாக, உடனே தீர்வு கண்டிருக்கின்றார்கள். அவருடைய புத்தகங்கள் தமிழாக்கம் செய்யப்படும் என்றும், மணிமண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்படும் என்றும், அவர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்றும் அறிவித்ததை, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நாங்கள் நெஞ்சார வரவேற்கின்றோம்.

முற்பகல் 11–30

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவர்களுக்காக உருவாக்கிய பெரிய பங்களாவை, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அர்ப்பணித்தார். 6 மாதங்களுக்கு ஒருமுறை அந்தக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. சட்டம் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றி நடத்தி வருகின்றார்கள். கடந்த காலங்களில், 3, 4 ஆண்டுகளாகியும் நடத்தாமல் இருந்த நேர்வுகள் உண்டு. விளிம்பு நிலையில் உள்ள மக்களை ஏற்றத்திற்குக் கொண்டு வந்த காலம், உங்களுடைய காலம்; கலைஞர் அவர்களுடைய காலம்; பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலம். விளிம்பு நிலை மக்களை விமானத்தில் ஏற்றியவர்கள் நீங்கள் என்பதை யாரும் மறக்க முடியாது. விளிம்பு நிலை மக்களை விமானத்திலிருந்து இறக்கியவர்களும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சு. ரவி மற்றும் பூவை திரு. ஜெகன் மூர்த்தி உள்ளிட்ட தலைவர்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, சட்ட மேதை அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நன்னாள், சமத்துவ நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அம்பேத்கர் அவர்களுடைய புகழைப் போற்றுகின்ற வகையில் மணிமண்டபம் கட்டித் தந்திருக்கிறார்கள். அந்த வளாகத்தில் அவரின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும்; அம்பேத்கர் அவர்களுடைய அரிய நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் ஆகிய அறிவிப்புகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் நல்ல அறிவிப்புகளாக, வரவேற்கக்கூடிய அறிவிப்புகளாக இருப்பதால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சாலை ஓரத்திலே, வீதி ஓரத்திலே, ஒதுக்குப்புறத்திலே தள்ளப்பட்டிருந்த மக்களையெல்லாம் கை தூக்கிவிட வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட, ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நேற்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை, இன்றைக்கு நடைமுறைப்படுத்தியிருக்கின்ற ஒரே முதல்வர், இந்தியாவிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் என்னவென்றால், உள்ளத்தில் இருந்தால்தான், எண்ணத்தில் இருந்தால்தான், சிந்தனையில் இருந்தால் மட்டும்தான் அதை நிறைவேற்ற முடியும். அவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிள்ளை என்கின்ற காரணத்தினால்தான், அந்தச் சிந்தனை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

[திரு. சி.வி. கணேசன்] [2022 ஏப்ரல் 13

நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுதுதான் சென்னை சட்டக் கல்லூரிக்கு, அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பெருமை, நம்முடைய முதல்வர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியிலே, தந்தை பெரியாராக, அறிஞர் அண்ணாவாக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞராக மூவரின் உருவத்திலே இருக்கின்ற எண்ணத்தைத்தான் செயல்படுத்தியுள்ளார். தந்தை பெரியார் அவர்கள் ஆண்டான், அடிமை; ஏழை, பணக்காரன்; இருப்பவன், இல்லாதவன்; உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கின்ற வர்க்க வேறுபாடுகளைக் களைந்தெறிவதற்காக எத்தனையோ போராட்டங்களை நடத்தினார்கள். தன் வாழ்நாளில் தன்னுடைய மூத்திரப் பையைக் கையிலே எடுத்துக்கொண்டு, மேடை மேடையாக ஜாதிப் பிரச்சினைகளை ஒழிப்பதற்காகப் போராடிய தந்தை பெரியார் அவர்களுடைய எண்ணங்களை, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணங்களை, கொள்கைகளை, சிந்தனைகளை யெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்காக, தனது 14 வயதில் “ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள். நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே” என்று தன்னுடைய போர்க்குரலை எழுப்பி, தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்காக தன்னுடைய 94 வயது வரை தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட ஒரு மாபெரும் தலைவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனால்தான், இந்தியாவிலேயே ஒடுக்கப்பட்டிருக்கின்ற, தாழ்த்தப்பட்டிருக்கின்ற மக்களுக்கு முதன்முதலில் கூரை வீடுகளை, அரசு, கான்கிரீட் வீடுகளாக மாற்றி கட்டித் தந்த முதல் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, அவருடைய வழியிலே வந்தவர்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். நேற்று நடந்த கூட்டத்திலே பல கோரிக்கைகளை, பல கட்சித் தலைவர்கள் எடுத்து வைத்தார்கள். அவற்றையெல்லாம் யாரும் எதிர்பாராத வண்ணம், எவரும் எதிர்பார்க்காத வகையிலே, அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பதும், அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளை, சமத்துவ நாளாக, இன்றைக்கே சட்டமன்றத்திலே அறிவித்திருப்பதும் உள்ளபடியே உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட

வேண்டிய நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, அத்தகைய அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் சார்பாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–35

4. தகவல் கோரல்

(அ) நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அண்மையில் சில நாட்களாகப் பெய்துவரும் கோடைக்கால தொடர்மழையின் காரணமாகத் தமிழகம் முழுவதும் உள்ள பல அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமாகியுள்ளன. மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி, பூம்புகார், கொள்ளிடம், தரங்கம்பாடி, குத்தாலம், செம்பனார்கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள 170 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளில், சுமார் 70 ஆயிரம் டன் நெல் மூட்டைகள், சேமிப்புக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படாமல், திறந்தவெளியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த காரணத்தினாலும், தார்ப்பாய்ப்போட்டு மூடாமல் இருந்ததாலும் மழையில் நனைந்து சேதமாகியுள்ளன என்ற செய்திகள் இன்றைய நாளிதழிலும் வந்துள்ளன.

மேலும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, செல்லம்பட்டி, சோழவந்தான், திருமங்கலம் பகுதிகளில் உள்ள அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளும் சேதமடைந்துள்ளன. இந்திய வானிலை ஆய்வு

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2022 ஏப்ரல் 13*

மையம் ஏற்கெனவே தமிழகத்தில் பல மாவட்டங்களில் கன மழை பெய்யும் என்று எச்சரிக்கை செய்திருந்தும், நெல் கொள்முதல் நிலையங்களில் அதிகாரிகள் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்காதது, வருத்தத்தையும், வேதனையையும் அளிக்கின்றது.

அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் மூட்டைகளை மூடிவைக்கப் போதுமான தார்ப்பாய்கள் இல்லாத காரணத்தினால்தான் நெல் மூட்டைகள் எல்லாம் மழையில் நனைந்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. நெல் கொள்முதல் நிலையங்களில் மழை நீர் தேங்கியுள்ளதால், நெல் மூட்டைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் உடனுக்குடன் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படாத காரணத்தினால், மழையால் நெல் மூட்டைகள் நனைந்துள்ளன. மேலும், விவசாயிகளிடமிருந்து குறித்த காலத்தில் நெல் கொள்முதல் செய்யப்படாததால் விவசாயிகளும் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அரசு கொள்முதல் செய்த நெல்லைப் பாதுகாப்பாக வைத்திருந்தால், இதுபோன்ற நட்டம் அரசுக்கு மழையால் ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்து, தற்போது கோடை மழையினால் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியத்தில் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன. பெரியகுளத்தில் 50 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வெற்றிலைக் கொடிக்கால்களும் இந்த மழையால் சேதமடைந்திருக்கின்றன.

இதுபோல் தமிழ்நாடு முழுவதும் பல மாவட்டங்களில் தொடர் மழையின் காரணமாகச் சேதமடைந்துள்ள பயிர்களை உடனடியாக வேளாண் அதிகாரிகளையும், வருவாய்த் துறை அதிகாரிகளையும் வைத்து கணக்கெடுத்து, பாதிப்படைந்த விவசாயப் பெருமக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கிட வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்துகின்றேன்.

இது தொடர் கதையாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை முறையாகப் பாதுகாக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக, அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.பி. வேலுமணி, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்,*

2022 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

திரு. சு. ரவி அவர்கள், திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் இதே கோரிக்கையை வலியுறுத்தி அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். திரு. தி. வேல்முருகன் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள். எல்லா விவரத்தையும் சொல்லிவிட்டார்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, திறந்த வெளியில் தார்ப்பாய்கள் போட்டு மூடப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியிலும் சரி, தற்போதும் சரி, அது தொடர்ந்து வருகிறது. நெல்லை உற்பத்தி செய்கின்ற வேலையை வேளாண் துறை செய்வதாகவும், நெல்லைப் பாதுகாப்பது போன்ற வேலைகளை உணவுத் துறை செய்வதாகவும், நம்முடைய மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டுவது, இந்த நெல் மூட்டைகளை சேமிப்புக் கிடங்குகளில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு விரிவாக கலந்துபேசி, நிதியைப் பெற்று, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற, கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சை போன்ற நெல் அதிகமாக விளைகின்ற மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான டன் நெல்லை கிடங்குகளில் பத்திரப்படுத்தி வைத்தால்தான், பாதுகாப்பாக வைக்க முடியும். ஒவ்வோர் ஆண்டும் நாம் சில நூறு கோடி ரூபாய்க்கு தார்ப் பாய்கள் வாங்குகிறோம். அது இரண்டொரு மழையிலேயே சேதமடைந்து நெல்மணிகள் வீணாகின்றன. ஆக, நிரந்தரமாக நெல்மணிகளை, உணவு தானியங்களைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்ற ஒரு விரிவான திட்டத்தின் மூலமாக தானியக் கிடங்குகள் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதை இந்த நேரத்தில் கேட்டு, இது அதிக முக்கியத்துவம்வாய்ந்த, உணவு சம்பந்தமான பிரச்சினை என்பதால் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 13

முற்பகல் 11–40

*****மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கான சரியான விதிமுறைகளைப் பின்பற்றவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மே 7, 2021–ல் பொறுப்பேற்ற பிறகு, ஜூலை மாதம் அரசாணை நிலை எண் 60 வெளியிடப்பட்டுள்ளது. எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றார்களோ, மாமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி, எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றார்களோ, அதற்கென்று அரசாணை நிலை எண் 60–ன்படி ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர் (விவசாயம்), வேளாண்மைத் துறை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், எங்களுடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் RM அல்லது SRM, இரண்டு விவசாய சங்கப் பிரதிநிதிகள் என மொத்தம் ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் சொல்கிறார்களோ அல்லது மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொன்னாலும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, முறையாக விவசாயிகளிடத்திலே நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் இன்று அரசின் கவனத்தை ஈர்த்துள்ளனர். கோடைக் காலத்தில் வெப்ப சுழற்சியின் காரணமாக கடந்த 8 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை, அதாவது, 8, 9, 10, 11, 12 ஆகிய 5 நாட்களாகப் பல்வேறு மாவட்டங்களில் கோடை மழை பெய்து வருகிறது. மழை பெய்தாலும் பரவாயில்லை; சூறாவளிக் காற்றும் வீசுகிறது. இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தார்ப்பாய் இல்லை என்று சொன்னார்கள். அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களும் தார்ப்பாய் இல்லை என்று சொன்னார்கள்.

2022 ஏப்ரல் 13] [திரு. அர. சக்கரபாணி]
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 31,250 தார்ப்பாய்கள் வாங்கப்பட்டு, அத்தனை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, மயிலாடுதுறை மாவட்டத்தில் இந்த ஆண்டு, 2,59,000 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 170 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் அனைத்தையும் உடனடியாகச் சேமிப்புக் கிடங்கிற்கு அனுப்பும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது 1,20,000 மெ. டன் திறந்தவெளி சேமிப்புக் கிடங்கிலே உள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இன்னும் 65,000 மெ. டன் உள்ளது. அனைத்தும் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இவை தினந்தோறும் லாரிகள் மற்றும் இரயில்கள் மூலமாகப் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரவை ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. தினந்தோறும் 5,000 மெ. டன் மயிலாடுதுறையிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. 10 தினங்களுக்குள் நெல் முழுவதுமாக அங்கிருந்து அரவை ஆலைகளுக்கு அனுப்பப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒன்றிய அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலே online மூலமாகத்தான் நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றது. ஆனால், அதனை நீங்கள் நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், ஒன்றிய அரசு கடந்த குறுவை சாகுபடியில் இதை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருந்தாலும், அது சம்பந்தமாக விவசாயிகள், ‘எங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவில்லை, எங்களால் online மூலமாக நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கொண்டு வந்து போட முடியாது’ என்று சொன்னதன் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்திவிட்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலே நீங்கள் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.

சம்பா பருவத்தில், நானே திருவாரூர் மாவட்டத்திற்குச் சென்று, அங்கிருக்கின்ற விவசாய சங்கப் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் விவசாய சங்கப்

[திரு. அர. சக்கரபாணி] [2022 ஏப்ரல் 13

பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து, online மூலமாக நெல்லை கொள்முதல் செய்வதற்கு ஒன்றிய அரசு வலியுறுத்துகிறது என்று சொன்னவுடனேயே, பல விவசாய சங்கங்களைச் சார்ந்தவர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அதனை ஆதரித்தார்கள். ஆனால், விவசாயிகளிடத்திலே விழிப்புணர்வை ஏற்படுத்திவிட்டு, நீங்கள் online மூலமாகக் கொள்முதல் செய்தால் நன்றாக இருக்கும் என்று சில பேர் சொன்னார்கள். இன்றைக்கு அனைத்து விவசாயிகளும் online மூலமாகப் பதிவு செய்து, நெல்லைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அது தெரியவில்லையென்றாலும், அங்கிருக்கின்ற கிராம நிருவாக அலுவலரிடத்திலே அடங்கல் வாங்கிக்கொண்டு வந்து, DPC–ல் இருக்கின்ற பருவ கால பட்டியல் எழுத்தர் ஒருவரிடத்தில் கொடுத்தால், உடனே அந்தப் பட்டியல் எழுத்தர், சம்பந்தப்பட்ட VAO இடத்திலே தொடர்பு கொண்டு, அவர் கொண்டு வந்திருக்கிற அடங்கல் சரியானதா என்பதை உறுதி செய்துவிட்டு, அந்த விவசாயிக்கு எந்த நாளில், எந்த நேரத்தில் வர வேண்டும் என்று token வழங்கப்படுகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். மயிலாடுதுறையிலும் சில விவசாயிகள் எந்த நேரம், எந்த தேதி என்று token கொடுக்கப்பட்டாலும், அவர்கள் முன்கூட்டியே கொண்டு வந்து அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலே நெல்லை சேமித்து வைத்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். அதைக்கூட இன்றைக்கு அங்கிருக்கக்கூடிய பணியாளர்கள் தார்ப்பாய் கொண்டு பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு, நெல்லைப் பாதுகாப்பாக வைத்திட இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

முற்பகல் 11–45

குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 129 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவுத் துறையின் மூலமாக 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் என மொத்தம் 160 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 1.20 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதில், 10,000 இலட்சம் மெட்ரிக் டன் நெல் சேமிப்பு நிலையங்களுக்கு நகர்வு செய்யப்பட்டு, பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10,000

2022 ஏப்ரல் 13] [*திரு. அர. சக்கரபாணி*]

மெட்ரிக் டன் நெல், கொள்முதல் நிலையங்களில் தரை இருப்பாக இருந்தது. தற்போது மதுரை மாவட்டத்தில், நாளது தேதி வரையில் 42 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மட்டுமே நெல் கொள்முதல் செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்த 8 ஆம் தேதி வெப்பச்சலனச் சுழற்சியின் காரணமாக மழை பெய்தவுடனேயே மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஆகியோருடன் பேசினேன். உடனடியாகச் சட்டமன்ற உறுப்பினர் அவர்களே அங்கே நேரில் சென்று பார்த்தார். சுமார் 6,000 நெல் மூட்டைகள் தார்ப்பாய் விலகியதால் நனைந்துவிட்டன. உடனடியாக அவை, 12 லாரிகளில் ஏற்றி அரவை ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தளவில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு மழையால் எவ்விதச் சேதமும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சிவகங்கை மாவட்டத்திலும் 1,676 நெல் மூட்டைகள் மூன்று லாரிகள் மூலமாக அரவை ஆலைகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் தற்போது பெய்த மழையினால் நெல் மூட்டைகள் ஏதும் சேதமடையவில்லை என்பதையும், தார்ப்பாய்கள் கொண்டு அனைத்து நெல் மூட்டைகளும் பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் பேசும்போது, godown *கட்டப்படவில்லையென்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, இதுபோன்ற செய்தி தொலைக்காட்சியில் வந்தவுடனே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்டோரையும் அழைத்துக் கூட்டம் நடத்த வேண்டுமென்று என்னிடத்தில் சொன்னார்கள். அதனடிப்படையிலே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யப்படும் நெல்லைப் பாதுகாத்திடும்பொருட்டு, 22 வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் குழுக் கிடங்குகளில் 19,371 மெட்ரிக் டன், 16 தமிழ்நாடு*

[திரு. அர. சக்கரபாணி] [2022 ஏப்ரல் 13

சேமிப்புக் கழகக் கிடங்குகளிலே 35,458 மெட்ரிக் டன், ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலைக் கிடங்கிலே 4,121 மெட்ரிக் டன், 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கிடங்குகளிலே 1,284 மெட்ரிக் டன் மற்றும் 9 இதர துறைகளின் கிடங்குகளிலே 1,05,782 மெட்ரிக் டன் என மொத்தம், 2,73,200 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட 51 கிடங்குகளிலே 1,66,016 மெட்ரிக் டன் நெல் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், 16 மண்டலங்களில் 15,99,800 மெட்ரிக் டன் நெல்லினைச் சேமிக்கக்கூடிய வகையில் போதிய தார்ப்பாய் வசதிகளுடன்கூடிய 106 திறந்தவெளி சேமிப்பு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர்த்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான சேமிப்புக் கிடங்குகளில் 3,61,209 மெட்ரிக் டன் நெல்லினைச் சேமித்து வைக்க வசதியுள்ளது. கொள்முதல் செய்யப்படும் நெல்லினை நேரடி கொள்முதல் நிலையங்களிலிருந்து திறந்தவெளி சேமிப்பு மையங்களுக்கு இயக்கம் செய்து, பின் அரவை ஆலைகளுக்கு இயக்கம் செய்வதன்மூலம் ஏற்படும் போக்குவரத்துக் கட்டணம், இறக்குக் கூலி மற்றும் ஏற்றுக் கூலி ஆகியவற்றைத் தவிர்த்திடும் வகையில், தற்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் அரவை முகவர்களாகச் செயல்பட்டுவரும் 482 தனியார் அரவை ஆலைகள் மற்றும் 21 நவீன அரிசி ஆலைகள், (MRM), கழகத்தில் பகுதி நேர அரவை முகவர்களாகச் செயல்பட்டுவரும் 109 தனியார் அரவை ஆலைகளில் colour sorter பொருத்தப்பட்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து நேரடியாக அரவை ஆலைகளுக்கு, அரவை முகவர்களுக்கு நெல் இயக்கம் செய்திடும் நடவடிக்கையைத் துறை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்கண்ட நடவடிக்கைகளின்மூலம் அரசுக்கு இழப்பு ஏற்படாவண்ணம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டு, அரவை முகவர்களுக்கு இயக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டெல்டா மாவட்டங்களில் ஏற்கெனவே open caps இருக்கின்றன. ஏற்கெனவே நடைபெற்ற உணவுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது 'வருகின்ற 1–10–2023 முதல் டெல்டா மாவட்டங்களில் open caps இருக்காது' என்று சொன்னேன். நேரடி நெல் கொள்முதல் செய்யப்படும் நெல்

2022 ஏப்ரல் 13] [*திரு. அர. சக்கரபாணி*]

உடனடியாக அரவை ஆலைகளுக்கு அனுப்பப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை உடனடியாகப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்; தரமான அரசி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறை நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்து வருகிறது. இன்னும் godown *எல்லாம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வருகின்ற காலங்களிலே இன்னும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

உணவுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது குறிப்பிட்டதைப்போல, PPP Scheme*-ன்கீழ் 1 நாளைக்கு 500 மெட்ரிக் டன் அரைக்கக்கூடிய வகையில். 6 அரவை ஆலைகளை டெல்டா மாவட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இயக்கவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தி, விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லைக் கண்டிப்பாக மழையில் நனையாமல் சேமித்து வைப்பதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–50

5. கவன ஈர்ப்பு

தமிழகத்தில் நூல் விலை ஏற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி* K. *பழனிசாமி அவர்கள், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. பி. தங்கமணி அவர்கள், திரு. ந. தளவாய் சுந்தரம், திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. நந்தம் ஆர். விசுவநாதன், திரு. செ. தாமோதரன், திரு. சேவூர்* S. *இராமச்சந்திரன், திரு.* S. *சேகர், திரு.* A.K. *செல்வராஜ், திரு. கே.பி. முனுசாமி,*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஓ.எஸ். மணியன், திரு. சு. ரவி, திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், திரு. V.P. கந்தசாமி, திரு. K. ராதாகிருஷ்ணன், திரு. க.நா. விஜயகுமார், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் திரு. K. மாரிமுத்து ஆகியோர் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் நூல் விலை ஏற்றம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின் மேல் உள்ள கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அறிக்கை

கைத்தறித் துறையில் செயல்பட்டுவரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அனைத்து சிட்டா நூல் வகைகளும், நியாயமான விலையில் தட்டுப்பாடின்றி கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. துணிநூல் துறையின் நூல் விலை நிர்ணயக் குழுவின் கூட்டம் நடைமுறையில் ஒவ்வொரு திங்களிலும் நடத்தப்பட்டு, கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூல் வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு, கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஆலை வாயில் நுழைவு விலைத் திட்டத்தின்கீழ், 15 விழுக்காடு சிட்டா நூல் மானியம், பருத்தி நூலுக்கு 2.5 விழுக்காடு, பட்டு நூலுக்கு 1.0 விழுக்காடு போக்குவரத்து மானியம் மற்றும் 2 விழுக்காடு கிடங்கு மானியம் (அதிகபட்சமாக ரூ.15,000/–) ஆகிய மானியங்களுடன், நியாயமான விலையில் நெசவாளர்களுக்குச் சிட்டா நூல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

நூல் விலை உயர்வைப் பொறுத்தவரையில், பஞ்சு விலை உயர்வு முக்கியமான காரணியாக உள்ளது. இந்தியாவில் உள்ள 52.48 மில்லியன் நூற்பு கதிர்களில் 24.03 மில்லியன் நூற்பு கதிர்கள் தமிழ்நாட்டில் உள்ளன. நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் 3–ல் 2 பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளின் பஞ்சுத் தேவை 110 இலட்சம் பேல்களாக உள்ள நிலையில் தமிழ்நாட்டில் உள்நாட்டு உற்பத்தி 3 முதல் 5 இலட்சம் பேல்கள் அளவாக மட்டுமே உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகள் பஞ்சுக்கு வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சார்ந்துள்ளன. மேலும், பஞ்சு மீதான இறக்குமதி வரி 3 விழுக்காட்டிலிருந்து 11 விழுக்காடாக உயர்ந்துள்ளது. ஆனால், பஞ்சு ஏற்றுமதிக்கு எவ்விதமான வரியும் ஒன்றிய அரசினால் விதிக்கப்படவில்லை. எனவே, அதிக அளவில் உள்நாட்டில் விளையும் பஞ்சு ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தொழில்முனைவோர் அமைப்புகள் தெரிவிக்கின்றன. பருத்தி ஏற்றுமதியானது, ஒன்றிய அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும். பருத்தியைப் பெருவாரியாக விளைவிக்கும் குஜராத், மகாராஷ்ட்டிரா போன்ற மாநிலங்கள் பருத்தி வணிகத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால், கடந்த 2 ஆண்டுகளாக தேக்க நிலையில் இருந்த ஜவுளித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் தற்சமயம் மீண்டு வருகின்றன. குறிப்பாக, ஜவுளித் தொழில் துறையைச் சீரமைத்து, புத்துயிரூட்டும் வகையில் தற்போது தமிழ்நாடு அரசு எடுத்து வரும் சீரிய நடவடிக்கைகளின் பயனாக ஜவுளித் தொழிலில் நூற்பாலைப் பிரிவு, கைத்தறிப் பிரிவு, விசைத்தறிப் பிரிவு, பின்னலாடைப் பிரிவு உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளும் உத்வேகத்துடன் இயங்கத் துவங்கியுள்ளன. உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதால் மூலப்பொருள் தேவையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

கைத்தறி, விசைத்தறி, பின்னலாடை நெசவுப் பிரிவுகளில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நூல் தேவை அதிகமாக உள்ளது. எனினும், பஞ்சு பருவ காலம் (Cotton Season) துவங்கிய நிலையிலும், புதிய பஞ்சு வரத்து சந்தையில் கிடைக்கப்பெறாத நிலை உள்ளது. இதன் காரணமாக, பஞ்சு விலை அதிகரித்துள்ளது.

நீண்ட இழை பருத்தியானது, (Long staple fibre) அக்டோபர் 2021 திங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் 2022 திங்களில் ரூ.10,800/– கண்டி ஒன்றுக்கு அதிகரித்து ரூ.98,600/–க்கு சந்தையில் விற்கப்படுகிறது.

பஞ்சு மற்றும் நூல் சந்தை நிலவரத்தை உன்னிப்பாகக் கண்காணித்து, தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இதில் முதற்கட்டமாகப் பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு மீதான 1 விழுக்காடு சந்தை நுழைவு வரியை நீக்கி தமிழ்நாடு அரசு 13–9–2021 அன்று ஆணை பிறப்பித்தது. மேலும், இந்திய பருத்திக் கழகம் பஞ்சு விற்பனைக் கிடங்குகளை தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு, மதுரை உள்ளிட்ட இடங்களில் நிறுவி, அதன் மூலமாக நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சு கிடைக்கவும், துணிநூல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

புதிய பஞ்சு வரத்து சந்தையில் விற்பனைக்கு வரப்பெற்றவுடன் பஞ்சு விலை குறைந்து, நூல் விலையும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சு வணிக நடவடிக்கைகள், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான வணிகப் போக்குகள், சந்தை நிலவரங்கள், ஒன்றிய அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும்.

மேலும், பஞ்சு மற்றும் நூல் விலையினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27–11–2021, 18–1–2022 மற்றும் 12–2–2022 ஆகிய தேதிகளில் ஒன்றிய ஜவுளி, வர்த்தகம் மற்றும் தொழில் துறை, நுகர்வோர் முறையே விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சருக்கும் மற்றும் ஒன்றிய நிதித் துறை அமைச்சருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளன.

இது மட்டுமின்றி, பஞ்சு மற்றும் நூல் விலை உயர்வு தொடர்பாக 21–1–2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தொழில்முனைவோர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 22–1–2022 அன்று எடுத்துரைக்கப்பட்டது.

2022 ஏப்ரல் 13] [திரு. ஆர். காந்தி]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், ஜவுளித் தொழில் துறையினரின் கோரிக்கைகளை ஒன்றிய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லுமாறு கோரப்பட்டதைத் தொடர்ந்து 27–1–2022 அன்று மாண்புமிகு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் அவர்களுடன் காணொலி மூலமாக நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் முக்கியக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன:

1. பருத்தி இறக்குமதிக்கு ஒன்றிய அரசால் விதிக்கப்பட்டுள்ள 11% வரியை நீக்கிட வேண்டும். (Removal of 11% Import Duty on cotton)

2. பருத்தி விளையும் காலமான அக்டோபரிலிருந்து மார்ச் வரை நூற்பாலைகள் கொள்முதல் செய்கின்ற பருத்திக்காக வங்கிகளிடமிருந்து பெறப்படும் நடைமுறை மூலதனக் கடனுக்கான வட்டியில் 5% மானியமாக ஒன்றிய அரசு வழங்கிட வேண்டும் (5% Interest subvention on Working Capital).

3. பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும்.

4. நடப்பாண்டில் இந்திய பருத்திக் கழகம் (Cotton Corporation of India) விவசாயிகளிடமிருந்து எந்தவித பஞ்சு பேல்களையும் கொள்முதல் செய்யவில்லை. இதனால் இந்திய பருத்தி கழகத்திடம், பருத்தி இருப்பு எதுவும் இல்லை. எனவே, பஞ்சு விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக பஞ்சுக்கான குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேல் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

5. பருத்தி மற்றும் பருத்தி விதைகள் ஊக வணிகத்திற்கு (Speculative Trading) தடை விதிக்க வேண்டும்.

மேற்காணும் ஜவுளித் துறையின் கோரிக்கைகளை மாண்புமிகு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் அவர்களால் மேற்காண் கோரிக்கைகள் தொடர்பாக, விவசாயிகள் மற்றும் தொழில் துறையினரின் நலன் பாதிக்காத வகையில் ஜவுளித் துறை அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[திரு. ஆர். காந்தி] [2022 ஏப்ரல் 13

இருப்பினும், தமிழக அரசின் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் 2022–2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்காற்றும் பருத்தியின் உற்பத்தியை உயர்த்திட, நீடித்த நிலையான பருத்தி இயக்கம், 15 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் இயற்கை முறை பருத்தி சாகுபடியும் ஊக்குவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நூல் விலை உயர்வினைக் கட்டுப்படுத்தும் வகையில், மேற்காண் நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் துணிநூல் துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல்வேறு உறுப்பினர்கள் இதே பொருள் குறித்து அறிவிப்பு கொடுத்துள்ளதால், ஒரே ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவர். முதலாவதாக மாண்புமிகு உறுப்பினர், திரு. பி. தங்கமணி அவர்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை, விவசாயத்திற்கு அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கின்ற துறை எது என்றால், ஜவுளித் துறை. இந்த நூல் விலையேற்றத்தின் காரணமாக, பின்னலாடைத் துறையில் வருடத்திற்குக் கிட்டத்தட்ட 35,000 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற திருப்பூர் மாவட்டம், இன்று மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றது. அதேபோன்று, இன்றையதினத்தில், விசைத் தறிகளை பழைய இரும்புக் கடையில் போடுகின்ற ஒரு சூழ்நிலையில் உள்ளதாக பத்திரிகையிலும், Whatsapp–லும் செய்திகள் வந்திருக்கின்றன. நான் குற்றமாகச் சொல்லவில்லை; ஏனென்றால், நூல் விலையேற்றத்தின் காரணமாக, அவற்றை உற்பத்தி செய்து நல்ல விலைக்கு விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, நூல் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இரண்டு தினங்களுக்கு முன்பாக அவையில் கேள்விக்குப் பதில் சொல்கின்றபோது, நாங்கள் cess வரியைக் குறைத்திருக்கின்றோம் என்று கூறினார்கள்; நான் வரவேற்கிறேன். ஆனால், அந்த cess வரியைக் குறைத்ததில் என்ன பயன் என்றால், ஆலை முதலாளிகளுக்குத்தான் இலாபம்

2022 ஏப்ரல் 13] *[திரு. பி. தங்கமணி]*

*இருக்கிறது. ஆனால், விசைத் தறித் தொழிலாளர்களுக்கோ, விசைத் தறி அதிபர்களுக்கோ எந்தவித இலாபமும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், 'கடந்த 10 ஆண்டுக்காலமாக நீங்கள் செய்யவில்லை; நாங்கள் செய்தோம்' என்று சொன்னார்கள்; நான் வரவேற்கிறேன், ஆனால், அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் அந்த ஆலைகளின் அதிபர்களை அழைத்து, '*cess *வரியை நாங்கள் குறைக்கின்றோம்; ஆனால், எப்போதெல்லாம் நூல் விலையில் ஏற்றம் இருக்கிறதோ, எந்த அளவிற்கு ஏறியிருக்கிறதோ, அந்த அளவிற்கு நாங்கள்* cess *வரிக் குறைப்பதை நீங்கள் நூல் விலையில் குறைத்திட வேண்டும்; விசைத் தறிக்குக் குறைத்திட வேண்டும்' என்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால், அன்றையதினம் அது நிறுத்தப்பட்டது. ஆனால், இன்றையதினம் அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதையும் சேர்த்து இன்றையதினம், 100 பேர் அமைப்பிற்காக இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பின்னலாடையைப் பொறுத்தவரையில். . . (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம், முக்கியமான தொழில், நான் அந்தத் தொழிலில் இருக்கிறேன். எனக்கு அதைப் பற்றித் தெரியும். எனவே, பின்னலாடையைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பல நாடுகளில் பல்வேறு போட்டிகள் இருக்கின்றன. கொரோனா காலம் என்பதால், 2 ஆண்டுக் காலமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பின்னலாடைத் தொழிலைப் பொறுத்தவரையில் இன்று சீனா, வங்காளதேசம், தாய்லாந்து, வியட்நாம் ஆகியவை போட்டி மிகுந்த நாடுகளாக இருக்கின்றன. திருப்பூரைப் பொறுத்தவரை 1 சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம்தான் நாம் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உறுப்பினர்கள் அவற்றைப் புரிந்து கொண்டார்கள், சுருக்கமாகச் சொல்லிவிடுங்கள் நீங்கள். விலையைக் குறைக்க வேண்டும்.*

திரு. பி. தங்கமணி: *ஆக, நூல் விலை இன்றைக்கு 100 ரூபாய் முதல் 165 ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. அந்த விலைப் பட்டியல் என்னிடம் இருக்கிறது. நீங்கள் காலம் இல்லையென்று சொல்கிறீர்கள், நாங்கள் கேட்பதெல்லாம் ஏற்றுமதி* export *என்று சொன்னால், நூலின் விலை தினந்தோறும் ஏறிக்கொண்டிருக்கிறது*

[திரு. பி. தங்கமணி] [2022 ஏப்ரல் 13

என்று சொன்னால், order கொடுக்கின்றபோது ஒரு விலை; அதனை எடுக்கின்றபோது வேறு விலை என்று சொன்னால், அந்தத் தொழிலே பாதிக்கப்பட்டுவிடுகின்றது. பொதுவாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமானால், ஒரு நூலின் bit தான் கொடுப்பார்கள். அதனை நாங்கள் ஆய்வு செய்து, அதன் பிறகு bit நூலாகப் போட்டு, வெளிநாடுகளுக்குச் சென்று, அதற்கு approval வாங்கி வருவதற்கே 15 நாட்கள் ஆகிவிடுகின்றன. ஆனால், இன்றையதினம் என்ன நிலைமை என்றால், காலை 10 மணிக்கு ஒரு விலை, 12 மணிக்கு ஒரு விலை, மாலை 4 மணிக்கு ஒரு விலை என்று இருக்கின்றது.

முற்பகல் 11–55

கடந்த காலங்களிலே 1 ஆம் தேதி ஒரு விலை அறிவித்துவிட்டார்கள் என்றால் 31 ஆம் தேதி வரை அந்த ஒரே விலைதான் இருக்கும். அதுமாதிரி விலை இருக்கின்றபோது, அதற்கு ஏற்றாற்போல் order எடுப்பார்கள். சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், சங்கரன்கோவில், குடியாத்தம், குறிஞ்சிப்பாடி பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளின் விசைத் தறித் தொழிலாளர்களுமே பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலைவாய்ப்பே இல்லாமல் இருக்கின்றார்கள். ஏனென்றால், 1 இலட்சம் ரூபாய்க்கு விற்கின்ற விசைத் தறி, இரும்புக் கடையில் போடுகின்றபோது 35 ஆயிரம் ரூபாய்க்கு எடுக்கப்படுகிறது. என்ன நிலைமை என்றால், ஒவ்வொரு வீட்டிலும் கைத்தறியாக, இரண்டு தறி, மூன்று தறி போட்டு செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் நான் சொல்லிவிடுகின்றேன். பஞ்சு விலையைப் பொறுத்தவரை, இறக்குமதி வரியை ஏற்றிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். இறக்குமதி வரி உயர்ந்துள்ளதால் மட்டுமே இந்த விலை உயர்வு கிடையாது. கிட்டத்தட்ட 350 இலட்சம் bales உற்பத்தியாகின்றன. தமிழகத்தின் ஓர் ஆண்டிற்கான மொத்தத் தேவையில் 3.5 சதவிகிதம், அதாவது 5 இலட்சம் bales—தான் உற்பத்தியாகின்றன என்று சொல்கிறார்கள். 10 முதல் 15 இலட்சம் bales–தான் இறக்குமதி செய்கின்றார்கள். ஆனால், இன்றைய நிலைமை என்னவென்றால், பஞ்சு உற்பத்தியாகிற இடமான மகாராஷ்டிராவிலிருந்து வாங்கி, cartel form செய்து விலையை ஏற்றிவிடுகின்றார்கள். இதுபோன்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், ஒவ்வொரு முறையும் இதுபோன்ற பாதிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *2003 ஆம் ஆண்டு, இதுபோன்ற ஒரு சூழ்நிலை வந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தார்கள். அப்போதுதான் முதன்முதலாக, விசைத் தறிகளிலே இலவச வேட்டி–சேலைகளை ஓட்டிக்கொள்ளலாம் என்ற திட்டம் கொண்டுவரப்பட்ட காரணத்தினால், இதுகாறும் பிரச்சினை இல்லாமல் இருந்தது. இப்போது நூல் விலை கடுமையாக ஏற்றப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான்கு கருத்துகளை மட்டும் சொல்லிக்கொள்கின்றேன்.*

இலவச வேட்டி–சேலைகளை பொங்கல் பண்டிகைக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றோம். அவற்றிற்கு ஜூலை மாதத்தில் order *கொடுத்தால், ஜனவரி மாதம்வரை ஓட்டிக்கொண்டிருக்கின்றோம். அதை முன்கூட்டியே கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றோம்.*

இரண்டாவது, மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பொங்கல் திருநாளிலே கட்டடத் தொழிலாளர்களுக்கென்று, வேட்டி 6 இலட்சம், சேலை 6 இலட்சம், அங்கவஸ்திரம் 6 இலட்சம் என்று கொடுத்தார்கள். இப்போது அது நிறுத்தப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னொரு கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். நன்றி.*

திரு. பி. தங்கமணி: *ஒரே ஒரு கோரிக்கைதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பில் கவனத்தை ஈர்த்தாகிவிட்டது. எல்லாவற்றிற்கும் சேர்த்தே பதில் சொல்வார்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10, 15 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினை இழந்திருக்கிறார்கள். அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். எல்லோரும் பாதிக்கப்படுகிறோம். தனிப்பட்ட முறையில் யாரும் பாதிக்கப்படவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்லியது அனைத்தையும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்*

துறை அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டார்கள். விவர அறிக்கையிலிருந்துதான் நீங்கள் ஒரு வார்த்தை கேட்க வேண்டும். அவ்வளவுதான். இவ்வளவு நேரம் பேசுவதற்குத் தந்தாகிவிட்டது. போதும், போதும். (குறுக்கீடு) ஒரே வரியில் சொல்லுங்கள்.

திரு. பி. தங்கமணி: சொல்லிவிடுகிறேன். இன்னொன்று, அரசு மருத்துவமனை, ஆதி திராவிடர் விடுதிகளெல்லாம் இருக்கின்றன. Cotton ஒட்டக் கூடாது என்று கைத்தறிச் சட்டம் இருக்கின்றது. இன்று கைத்தறியை முழுமையாக உற்பத்தி செய்ய முடியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அதற்கு order கொடுப்பார்கள் என்றால், விசைத் தறித் தொழில் முழுமையாகப் பாதுகாக்கப்படும்.

அதேபோல பின்னலாடையைப் பொறுத்தவரை, மாதத்தில் ஒரு முறை நீங்கள் Mill அதிபர்களை அழைத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் போதும், போதும். முடித்தாகிவிட்டது. (குறுக்கீடு) ஒரு கவன ஈர்ப்பிற்கு எவ்வளவு நேரம் பாருங்கள். இன்று, 4 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு இருக்கின்றன; 3 மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் அமைச்சராக இருந்தவர்கள், உங்களுக்குத் தெரியும். ஒரு வரியில் சொல்லுங்கள். ஒரு வரியில் உரையை முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வரியில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. பி. தங்கமணி: பின்னலாடையைப் பொறுத்தவரை, Mill அதிபர்களை அழைத்து, மாதத்திற்கு ஒரு விலை rate என்பதை நீங்கள் பேசி முடிவிற்கு வந்தீர்கள் என்றால், இந்தத் தொழில் பாதுகாக்கப்படும். இல்லையென்றால், இந்தத் தொழில் நசிந்துவிடும் என்பதற்காகத்தான் அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிலைச் சார்ந்தவன் நான்; முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறக்குமதி வரி கூட்டுவதனால் ஏதும் பாதிப்பில்லை என்று சொல்லிவிட்டீர்களே! அதுவும் பாதிப்பு என்று சொல்லுங்கள். சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு question கேளுங்கள் என்று சொல்கிறீர்கள்; 3 questions என்று சொல்ல வேண்டும். இந்தப் பிரச்சினையால் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூலப் பொருட்களையெல்லாம் வெளிநாட்டிற்குக் கொண்டு செல்கிறோம். அதைத் தடை செய்ய வேண்டும், வெளிநாட்டிற்குக் கொண்டுபோகக் கூடாது. ஒன்றிய அரசு GST வரி அதிகமாகப் போடுகிறது. அதையும் குறைக்க வேண்டும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

நண்பகல் 12–00

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனின் மானத்தைக் காப்பது ஆடை. ஆள் பாதி, ஆடை பாதி என்று சொல்வார்கள். இப்படி ஆடைக்கு மட்டுமல்லாமல், நாட்டினுடைய முதல் தொழிலாக இருக்கின்ற வேளாண்மைக்கு அடுத்து வேலைவாய்ப்பை உருவாக்குகிற தொழில் நெசவுத் தொழில். இந்தத் தொழிலுக்கு மூலப் பொருளாக இருக்கிற பருத்தி நூல், பட்டு நூல் இரண்டு நூல்களின் விலையும் உயர்ந்திருக்கிறது. இதனால் விசைத்தறி, கைத்தறி, பின்னலாடை போன்ற எல்லாவிதமான தொழில்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிடுவதைப்போல இதில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை அரசு ஆராய வேண்டும். உற்பத்தியை பெருக்குவது மட்டுமல்ல; உற்பத்திப் பெருகுவதற்குத் தடையாக விலைவாசியும் அதிகமாகிறது. மக்கள் துணிகளை வாங்கக்கூட முடியாமல் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். இதில் தென்னகத்தின் களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற பருத்தி

[திரு. ஜி.கே. மணி] [2022 ஏப்ரல் 13

உற்பத்தி குறைந்துவிட்டது; விலையும் குறைந்துவிட்டது. இதற்கு முக்கியக் காரணம் என்னவென்றால், இடைத்தரகர்கள் அவற்றைப் பதுக்கி வைப்பதுதான். இதனை அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். இடைத்தரகர்கள் பஞ்சை, நூலை பதுக்கி வைப்பதைக் கண்டறிந்து விசைத்தறிக்கும், கைத்தறிக்கும், மற்றவர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். எங்கள் கோரிக்கைகளையே தமிழக அரசும், மத்திய அரசிற்கு முன் வைத்திருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக பஞ்சின்மீதான 11 சதவிகிதம் இறக்குமதி வரியை இரத்து செய்ய வேண்டுமென்கிற முடிவும்; தமிழ்நாட்டில் திருப்பூரில் 70 சதவிகிதம் பின்னலாடை உற்பத்திக்குப் பயன்படுகிறது. குறிப்பாக, காஞ்சிபுரம், திருத்தணி, வேலூர் எங்கள் பகுதியான குறிஞ்சிப்பாடி, நாமக்கல் போன்ற பல்வேறு மாவட்டங்களில் நெசவாளர்கள் இதனால் மிகப் பெரிய அளவில் பாதிப்படைகிறார்கள். அந்தப் பாதிப்பிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு நமது அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை நான் பாராட்டி, வரவேற்று இந்த அறிக்கையில் இருக்கிற கருத்துகளை ஏற்றுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்’ என்று சொல்வார்கள். உள் நாட்டிலே ஆடைகளின் விலை இதனால் அதிகமாகிவிட்டது. சாமானிய மக்கள் ஆடைகளை வாங்க இயலவில்லை. ஆயிரம் ரூபாய்க்குமேல் துணிகளை வாங்கினால் GST வரி அதிகம். இப்போது எல்லாமே ஆயிரம் ரூபாய்க்குமேல் உள்ளதால், GST வரியும் அதிகமாகிவிட்டதனால், ஏழையெளிய மக்கள் இரட்டிப்பாகப் பாதிக்கப்படுகிறார்கள். இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், பஞ்சு விலை 38,000 ரூபாயாக இருந்தது, தற்போது ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலாகிவிட்டது.

2022 ஏப்ரல் 13] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

எப்படித் தொழில் செய்ய முடியும்? உள்நாட்டு உற்பத்தியின் விலையும் அதிமாகிவிட்டது. வெளிநாட்டின் ஏற்றுமதியின் விலையும் அதிகமாகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் ஒன்றிய அரசிற்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார். மேலும் ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் ஒன்றிய அரசிற்குக் கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். கழிவு பஞ்சுக்கான Entry tax-ஐ குறைத்திருக்கிறார். இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்தாலும், ஒன்றிய அரசு இதனைக் கண்டுக்கொள்வதாக இல்லை. அந்த அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். புதிய பஞ்சு வரத்து வந்தால், கண்டிப்பாக விலை குறையும் என்று எதிர்பார்க்கிறார். குறையாது, வாய்ப்பே கிடையாது. ஏற்றுமதிக்கான எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. இறக்குமதிக்கு 11 சதவிகிதம் வரி விதிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொல்கின்றபோதுகூட, இறக்குமதி இவ்வளவுதான் ஆகிறது என்று சொல்கிறார். அந்த வரி அதிகமாக இருக்கிற காரணத்தினால்தான் இறக்குமதியைச் செய்ய இயலவில்லை; வரி இல்லாமல் இருந்தால் இறக்குமதி அதிகமாகிவிடும். அப்போது நூலின் விலை control-க்கு வந்துவிடும். அதுதான் பிரச்சினை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, இறக்குமதி விலையை நாம் குறைக்க வேண்டும்.

கடந்த வாரம் ஒன்றிய அரசின் ஜவுளித் துறையின் மாண்புமிகு இணை அமைச்சர் அவர்கள் சென்னையில் நடைபெற்ற கூட்டத்திற்காக வந்திருந்தார். நான் ஏற்றுமதி சங்கத்தின் சார்பாக அக்கூட்டத்திலே கலந்துகொண்டேன். அவர்கள் இந்த விலையைக் குறைப்பதற்கான கேள்வியை எழுப்பியபோது, இதுகுறித்துப் பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டார்கள். இதில் விவசாயிகள் பயனடைவதைவிட இடைத்தரகர்கள் பயனடைகிறார்கள் என்பதை ஒன்றிய அரசு ஏற்க மறுக்கிறது. ஒரே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். இதில் பாதிக்கப்படுவது தமிழகம். பலனடைவது குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரண்டு மாநிலங்கள்தான். இதனால் அந்த இரண்டு மாநிலங்களும் பயனடைகின்றன. முழுவதுமாகப் பாதிக்கப்படுவது தமிழகம்தான். நாம் இன்னும் தீவிரமாக ஒன்றிய அரசிடத்தில் இந்தப் பிரச்சினையைக் குறித்து எடுத்துச் சொல்ல வேண்டும். இப்போதே இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். விசைத் தறியாளர் strike வந்தபோதுகூட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களும். . .

[*2022 ஏப்ரல் 13*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும், முடித்துவிடுங்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *இதோ முடித்துவிடுகிறேன். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். வேலை நிறுத்தத்தை எல்லாம் தீர்த்து வைத்தார்கள். இப்போது உற்பத்தி அதிகரிக்கக்கூடிய நேரமாகும். நூல் விலை மட்டும் ஏறாமல் இருந்தால், தமிழ்நாட்டினுடைய ஏற்றுமதி இருமடங்காகி இருக்கும். அப்படிப்பட்ட வாய்ப்புகள் இன்றைக்கு பறிபோய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, நூல் விலையை, பஞ்சு விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசு, ஒன்றிய அரசோடு பேசி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். தம்பி, சுருக்கமாக உரையை முடித்துக்கொள்ளுங்கள். அனைவரும் இதுகுறித்துச் சொல்லிவிட்டார்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலை உயர்வால் இன்றைக்கு ஜவுளி, கைத்தறி, விசைத்தறி, ஆயத்த ஆடை நிறுவனங்கள் பெரும் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. பல இலட்சம் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இழக்கும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் ஒன்றிய அரசினுடைய புதிய ஜவுளிக் கொள்கை. புதிய ஜவுளிக் கொள்கையின் அடிப்படையில், பணமயமாக்கல் திட்டத்தினால் இன்றைக்கு ஜவுளியினுடைய அசையும், அசையா சொத்துகளை விற்றதன் காரணமாகத்தான் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கின்றது. எனவே, ஒன்றிய அரசு பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும். பஞ்சு இறக்குமதிக்கான 13 சதவிகித வரியைக் குறைக்க வேண்டும். பஞ்சு* online trading *முறையைத் தடை செய்ய வேண்டும். இவ்வாறு ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும். நெசவுத் தொழில் செய்கின்ற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தையும் தமிழக அரசு பாதுகாக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 13]

***மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதவியேற்றவுடன், முதன்முதலில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொழில்முனைவோர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டேன். அவர்கள் வைத்த ஒரே கோரிக்கையினை திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். இருபது வருடங்களாக நாங்கள் கேட்கிறோம், நீண்ட நாள் கோரிக்கையான அந்த* cess *வரியினை ஒரு சதவிகிதம் குறைக்க வேண்டும் என்று. என்ன காரணம் என்றுகூட எங்களுக்குத் தெரியவில்லை; கேட்டபோது சொன்னார்கள், பருத்தியினை நாங்கள் தமிழ்நாட்டிலிருந்து எடுத்து வர முடியாது. ஒன்று ஆந்திராவிற்குச் செல்ல வேண்டும் அல்லது மும்பை போன்ற இடங்களுக்குச் சென்றுதான் எடுத்து வர வேண்டும் என்றும், அதனை அதிகமாக எடுத்து* stock *வைக்க வேண்டும் என்றும், இதில்* Agriculture–*லிருந்து ரூ.10 கோடி முதல் ரூ.15 கோடி வரை இலாபம் வருகின்றது என்றும், இந்த* cess *குறைத்தால் நமக்கு ரூ.300 கோடி* GST–*ல் காட்டிக்கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். இதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உடனடியாகச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வைத்தேன். நான் கோரிக்கை வைத்த நாள் 28–6–2021. கோரிக்கை வைத்தவுடன் ஆய்வு செய்து, அதிகாரிகளுடன் பேசி இரண்டே மாதங்களில் விதி 110–ன்கீழ் இதுகுறித்து அறிக்கையினை வெளியிட்டார்கள். அந்த* cess *வரியினை இரத்து செய்தார்கள். விதி 110–ன்கீழ் அறிவித்தது மட்டுமல்லாமல், அரசாணையினையும் வெளியிட்டார்கள். நாம் நிறைய விதி 110–ன்கீழ் பேசுவோம், ஆனால் விட்டுவிடுவோம். நூல் விலையேறக் காரணம் என்னவென்று பார்த்தால்,* cess *வரி* import duty *11%. அந்த 11% எப்படி ஆனது? இதற்கு முன்பு 1–2–2021–ல் 3% தான் இருந்தது. அப்போது நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். அதுபற்றி நீங்கள் ஏதும் கேட்டீர்களா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இன்றைக்கு அதுவும் ஒரு* main *காரணம். பருத்தி பதுக்கல்,* Speculative Trading *ஆகியவற்றின் காரணமாகத்தான் இன்றைக்கு பருத்தி விலையேற்றம் ஆனது. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தத் துறையாக இருந்தாலும் பாதிப்பு என்று சொன்னால், இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே முதல் குரல் கொடுக்கின்ற ஒரு முதலமைச்சர் யார் என்று சொன்னால் அது இவர் தான். நீங்கள் எவ்வளவோ பாராட்டிவிட்டீர்கள்.*

[திரு. ஆர். காந்தி] [2022 ஏப்ரல் 13

பிற்பகல் 12–10

27–11–2021–ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அமைச்சர் திரு. பியூஸ் கோயல் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் என்ன எழுதினார் என்றால், பருத்திக்கு விதிக்கப்பட்ட 11% இறக்குமதி வரியினை நீக்க வேண்டும். அதுபோல் e–Auction ஏலத்தில் பங்குபெற குறைந்தபட்சம் 500 பருத்தி bales போதுமானது என்று விதியை மாற்ற வேண்டும். உச்சபட்ச பருத்தி கொள்முதல் காலங்களில் டிசம்பர் முதல் மார்ச் வரை நூற்பாலைகளுக்கு 5 சதவிகித வட்டி மானியம் அறிவிக்க வேண்டுமென்று கோரினார். கடிதம் கொடுத்துவிட்டு, 2 மாதங்கள் காத்திருக்கிறார். பதில் வரவில்லை. மறுபடியும் 18 ஆம் தேதி கடிதம் எழுதுகிறார்—நான் அதையெல்லாம் எழுதி வைத்திருக்கிறேன்—மறுபடியும் ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதுகிறார். அதற்குப் பிறகு ஜனவரி 21 ஆம் தேதி ஜவுளித் தொழில் முனைவோர்களுடன், Co–optex கூட்டரங்கில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை சென்னையில், என் தலைமையில் நடத்தினோம். The Southern India Mills' Association (SIMA), Apparel Export Promotion Council, Tiruppur Exporters' Association, Tamil Nadu Spinning Mills Association, Karur Textile Manufacturer Exporters' Association, திருப்பூர் சாய ஆலைகள் உரிமையாளர்கள், South India Spinners' Association, Cotton Corporation of India ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அன்றைக்கு எல்லோரும் பல கோரிக்கைகளை வைத்தார்கள். அனைவரும் கலந்துகொண்டு பேசினோம்.

அவர்கள், பருத்தி ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும்; MCX, NCDEX போன்ற வர்த்தக நிறுவனங்கள் நடத்தும் பருத்தி Speculative Trading–ஐ தடை செய்ய வேண்டும்; NCDEX மூலம் செயல்படும் பருத்தி விதை விற்பனையை சிறிது காலம் நிறுத்தி வைக்க வேண்டும்; பருத்தியைப் பதுக்கி வைப்பதைத் தடுக்க வேண்டும்; Cotton Price Stabilisation Fund உருவாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்தார்கள். (குறுக்கீடு)

இந்தக் கருத்துகளையெல்லாம், நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னோம். அவர் உடனே எங்களுக்கு ஓர் ஆணையிட்டார். நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுடன் டெல்லிக்குச் சென்று, மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களையும், இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கலந்து ஆலோசனை செய்யுங்கள் என்று சொன்னார்.

2022 ஏப்ரல் 13] [திரு. ஆர். காந்தி]

நாங்கள் எங்கள் துறையின் சார்பில் கேட்டோம். அவர்கள் நேரம் கொடுக்கவில்லை. ஆனால், 27-1-2022 ஆம் தேதி மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகப் பேசுவதற்கு எங்களுக்கு பிற்பகல் 4-00 மணிக்கு நேரம் கொடுத்தார்கள். அதுவும், 25 நிமிடங்கள்தான் நேரம் கொடுக்க முடியும் என்றார்கள். சரியென்று, நாங்கள் அந்தக் காணொலிக் காட்சியில் கலந்துகொண்டோம். பாராளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா அவர்கள், தொழில் முனைவோர்களின் 6 சங்கங்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை முதன்மைச் செயலாளர், துணிநூல் ஆணையர் இவர்களெல்லோரும் கலந்துகொண்டார்கள்.

அக்கூட்டத்தில் பேசும்போது, ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டுமென்று அவர்களிடம் சொன்னோம். Cotton Corporation of India விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதேயில்லை. Cotton Corporation of India, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். பருத்தி Speculative Trading-ஐ தடை செய்ய வேண்டுமென்று கேட்டோம். மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் 25 நிமிடங்கள்தான் நேரம் கொடுத்தார்கள். ஆனால், 1 மணி நேரம் தமிழில் நன்றாகப் பேசினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட நாங்கள் எல்லோரும், அந்த அம்மாவுக்கு பாராட்டே சொன்னோம். நீங்கள் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுங்கள் என்று சொன்னோம்.

மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்களென்றால், விவசாயிகளுக்கும் பாதிப்பில்லாமல், தொழிலதிபர்களுக்கும் பாதிப்பில்லாமல், நான், மாண்புமிகு ஜவுளித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, நிச்சயமாகச் செய்கிறேன் என்று சொன்னார்கள். நான் இந்தக் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உடன் எடுத்துக் கூறினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைத் தயவுசெய்து தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு)

நீங்கள் ஏதோ பேசிவிட்டீர்கள்; எதையாவது பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இதற்கு என்ன காரணம்? எதனால் பருத்தி விலை ஏறுகிறது, நூல் விலை ஏறுகிறது என்று வாயில் பேசுவதற்கு நன்றாக இருக்கிறது. **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உடனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாங்கள் சொன்ன கருத்தை. . . (குறுக்கீடு) இல்லை, பொதுவாகச் சொல்கிறேன்; உங்கள் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள், நான் சொல்கின்றேன்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *தவறாக ஒன்றும் சொல்லவில்லை. எதற்கு அதற்குள் எழுந்துகொள்கிறீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள், நானே சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *நான், உடனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .*

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, சபையில் இருக்கிறவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சு வழக்கில் அப்படிச் சொல்வார்கள். (குறுக்கீடு) அதை நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) அதை நீக்கிவிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீக்கிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடு) அதற்குப் பிறகு என்ன? (குறுக்கீடு) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அதாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். அவர்கள் எல்லோரையும் போன்று சரளமாகப் பேசமாட்டார்கள். நிதானமாகப் பேசுவார்கள். அவ்வாறு இருந்த அந்த வார்த்தையை நீக்கிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களுக்கு, நான் சொன்னதை வைத்துக்கொண்டு ஒரு கடிதம் எழுதினார்கள். நீங்கள் சொன்ன கருத்து நல்ல கருத்து. விவசாயிகளுக்கும் பாதிப்பு*

இருக்கக் கூடாது; தொழிலதிபர்களுக்கும் பாதிப்பு இருக்கக் கூடாது என்ற கருத்து நல்ல கருத்து; இந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு, ELS (Extra-long Staple) cotton மீதான வரியை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களுக்குத் தனியாக ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். Sustainable Cotton மீதான import duty-ஐக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பருத்தி விலையை ஸ்திரப்படுத்த-(stabilize) ஒருமுறை மட்டும் 60 இலட்சம் bales பருத்தியை இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், உங்கள் உரையை சுருக்கமாக முடித்துவிட்டால், அடுத்து, தொழில் துறை அமைச்சர் அவர்களைப் பேச அழைக்கலாம்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: இவற்றை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நாங்களும் எப்படி இதற்காக ஒன்றிணைந்து, cotton இறக்குமதி வரி உயர்வால் பாதிக்கப்படுகின்ற நெசவாளர்களுக்கு என்னென்ன செய்கிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். அதன்மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஒன்றிய அரசுதான் முடிவெடுக்க வேண்டும். மாநில அரசின் கையில் ஒன்றுமில்லை. ஒன்றிய அரசுதான் செய்ய வேண்டும். ஒன்றிய அரசுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எத்தனை கடிதம் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா? மாண்புமிகு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மாண்புமிகு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் அவர்கள் நியாயமாகப் பேசினார்கள். யாருக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதை நிறைவேற்றிக் காட்டுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கருத்துகளை இப்பொழுது சொல்லுங்கள்.

[2022 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை குறித்து இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நமது அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஜவுளித் தொழில் மிக முக்கியமான ஒரு தொழில் என்பதால், அந்தத் தொழிலில் இப்போது சந்தித்து வரக்கூடிய பிரச்சினைகளை இங்கே மிகச் சரியான கோணத்தில் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான உரிய விளக்கங்களையும் இப்பொழுது அளித்திருக்கிறார்கள்.

என்ன பிரச்சினை என்றால், பருத்தி உற்பத்தி இங்கே கிடையாது. பருத்தி உற்பத்தி முழுவதும் வட மாநிலங்களில் இருக்கிறது. நாம் நூல் உற்பத்தியில் மிகப் பெரிய இடத்தில் இருக்கிறோம். ஏறத்தாழ, 3-ல் 2 சதவிகிதம் நமது மாநிலத்தில்தான் உற்பத்தி செய்கிறோம். ஆனால், பருத்திக்கு நாம் வட மாநிலங்களை நம்பியுள்ள நிலையில், பஞ்சு விலை அதிகரிக்கின்றபொழுது complete ஆக நூல் விலையும் அதிகரிக்கிறது. அதற்குப் பின்னால் வருகிற supply chain-ல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, அனைத்து இடங்களிலும் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, ஏற்றுமதியில் அது மிகப் பெரிய அளவில் பாதிப்பை உருவாக்கியிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்போதிருக்கக்கூடிய geo-political change-ல், மாறிவரக்கூடிய பொருளாதார சூழ்நிலையில், தமிழ்நாட்டிற்கு இந்த ஏற்றுமதியின்மூலம் நல்ல இடம் வருகின்ற நேரத்தில், வந்திருக்கக்கூடிய இந்த விலை உயர்வு நம்முடைய competitiveness-ஐக் குறைக்கும் விதத்தில் இருக்கிறது. எனவே, நாம் இதில் தலையிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார்கள். நேரடியாக மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஏப்ரல் 1 ஆம் தேதி ஒன்றிய தொழில் துறை அமைச்சர் அவர்களை நேரடியாகச் சந்தித்து, நூல் விலையேற்றத்தினால் வந்திருக்கக்கூடிய பிரச்சினைகள், அதேபோல, பஞ்சு விலையேற்றத்தினால் வந்திருக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து மிக விரிவாக விவாதித்து, இதிலிருக்கக்கூடிய அனைத்து அம்சங்களையும் மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு

2022 ஏப்ரல் 13] [திரு. தங்கம் தென்னரசு]

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்போதுகூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான வகையில், மிகச் சிறந்த முறையில் இந்த விஷயத்தை மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு, எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு prepared ஆக வந்திருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடாக இருக்கிறது என்கிற அளவிற்குப் பாராட்டினார்கள். இந்தப் பிரச்சினையை நாங்களும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறோம், நிச்சயமாக இதைச் செய்து கொடுக்கிறோம் என்று அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மிகுந்த ஆர்வத்தோடு, ஏற்கெனவே இதுகுறித்துப் பேசியிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இந்த விலையேற்றத்தைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை. . . (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்று 4 மானியக் கோரிக்கைகள், 3 மாண்புமிகு அமைச்சர்கள் பேச வேண்டும். Please. (குறுக்கீடு) ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன விஷயம் குறித்து பேசப் போகிறீர்கள்? இதே விஷயமா? (குறுக்கீடு) இல்லை, இதே பருத்தி விவகாரமா? (குறுக்கீடு) நான் திங்கட்கிழமை எடுத்துக்கொள்கிறேன். நான் அடுத்த agenda-வுக்கு வந்துவிட்டேன். நான் பிறகு எடுத்துக்கொள்கிறேன். இன்று முக்கியமான 4 Demands இருக்கின்றன. 3 மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். Please, நான் உங்களுடையதை திங்கட்கிழமை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் அடுத்த agenda-வுக்குப் போய்விட்டேன். Please, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.

6. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை

(இ) கோரிக்கை எண் 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 8-பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

– – –

(அ) கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.75,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1361, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

2022 ஏப்ரல் 13]

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1375, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1424, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1628, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2292, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2839, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2907, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2953, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3298, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3903, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2041, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2441, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2626, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3513, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1203, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1245, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1973, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2243, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2391, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4135, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4584, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4631, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4897, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5728, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5863, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1274, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1366, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1858, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3625, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேத்தியாதோப்பு MRK கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள இயந்திரங்களை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 490, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பழத்தோட்ட மலையில், மா, பலா, சப்போட்டா, முந்திரி, திராட்சை போன்ற பழவகைகளைப் பயிரிடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 607, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 640, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் தடப்பெரும்பாக்கம் ஊராட்சியில், வெள்ளக்குளம் பகுதியில் உரக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 789, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை விவசாய அலுவலகத்திற்குத் துணை இயக்குநர் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 872, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள அமராவதி சர்க்கரை ஆலையில் உள்ள இயந்திரங்களைப் புதுப்பித்து நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 903, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் இளைஞர்களுக்கு விவசாய இயந்திரங்கள் பயன்பாடு குறித்த பயிற்சி மையம் ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1050, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியத்தில் ஒரு தானியக் கிடங்கும், நெமிலி ஒன்றியத்தில் ஒரு தானியக் கிடங்கும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1076, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் டி.ஏ.பி. பொட்டாஷ், காம்ப்ளக்ஸ், யூரியா ஆகிய உரங்கள் தட்டுப்பாடில்லாமல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1516, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் பேரூராட்சியிலுள்ள உழவர் சந்தையைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1557, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

2022 ஏப்ரல் 13]

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சர்க்கரை ஆலைகளில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1799, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், மதுரை பெரும்பட்டூர் ஊராட்சியில் புதியதாக நெற்களம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1823, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வானூர் ஒன்றியத்தில் வேளாண் உழவர் பயிற்சி மையம் மற்றும் விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1874*, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் புதிய வேளாண்மை பொறியியல் அலுவலகம் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய *5* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*12,875,31,22,000*/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*274,47,08,000*/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*75,17,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2017*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய *5* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*12,875,31,22,000*/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*274,47,08,000*/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*75,17,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2338*, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் சேமிப்பு வசதியுடன்கூடிய விற்பனை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3402, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேடப்பட்டி ஒன்றியம், அத்திப்பட்டி, பனையூர், சாப்டூர், சின்ன கட்டளை ஆகிய கிராமங்களில் நெல் உலர்த்தும் சிமென்ட் களம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3455, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் செயல்பட்டு வரும் வேளாண்மைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டும் பணியை விரைந்து செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3559, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி பகுதியில் கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3816, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு விவசாய உற்பத்திப் பொருட்களான நெல், மிளகாய் போன்றவற்றிற்குக் கணக்கீடு 7 ஆண்டுகளில் ஏக்கருக்கு குறிப்பிட்ட அளவு விளைச்சல் என சராசரி மதிப்பீடு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் காப்பீடு கணக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3881, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மைத் துறை அலுவலகம் புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4057, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் மானிய விலையில் அதிகமான வேளாண் இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4127, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4176, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானிசாகர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4743, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5190, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் தொகுதியில் கபிலர்மலை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5307, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, முருக்கேரி ஊராட்சியில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படும் வகையில் உழவர் சந்தை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5493, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திற்கு இந்த ஆண்டு டிராக்டர்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5551, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதி நகர மையப் பகுதியில் உள்ள உழவர் சந்தையைச் சீர் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5646, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 5693, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு தொகுதியில் அறிவிக்கப்பட்ட வேளாண் கல்லூரி மற்றும் தோட்டக்கலைக் கல்லூரி ஆகியவற்றை விரைந்து தொடங்க வேண்டியதன் அவசியம்*

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு

(கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை), மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1360, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1376, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1425, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2293, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2840, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2908, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2954, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3299, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3904, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4753, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2052, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2447, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2636, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3514, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1202, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1244, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2244, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2392, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3561, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4130, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4585, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத்தீ ர்மானம் எண் 4632, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4902, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5727, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1273, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1859, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4084, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள C. ஆலம்பாடி, அகரம் ஆலம்பாடி, கீரப்பாகாயம், மஞ்சக்கொல்லை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 392, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம்.

திரு. T.M. தமிழ்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியம், மிட்டப்பள்ளி கிராமத்தில், 10,000-க்கு மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருவதால் அங்கு கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 591 மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 880, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 909, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் வட்டம், திருக்கொட்டாரம் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1472, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சியில் அமைந்துள்ள கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1522, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி ஒன்றியம், அகசப்பள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1558, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியத்திலுள்ள பீர்ஜேபள்ளி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1629, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி பைபாஸ் ரோடு பகுதியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1756, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி அத்திமலைப்பட்டு ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1810, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடகரையில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1826, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் வானூர் ஒன்றியத்தில் கிளியனூர் ஊராட்சியில் உள்ள கிளை கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1872, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கொருக்கையில் புதிய கால்நடை ஆராய்ச்சிக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1887, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்காக கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1954, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைலாயபுரம், கீழ்மொரப்பூர், வேடசட்டமடுவு ஆகிய இடங்களில் புதியதாகக் கிளை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2225, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலைப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2343, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் (வடக்கு) தொகுதி, காளிபாளையம் கிராமத்தில் உள்ள கால்நடை கிளை மருந்தகத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3024, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில் செயல்படாமல் இருக்கும் நேசமணி கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தைக் கால்நடை மருத்துவமனையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3406, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மாதரை கிராமத்தில் மருத்துவமனைக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3456, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, பெரிய தும்பூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3631, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சியில் கொடகரை கிராமத்தில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3820, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் உள்ள அனைத்துக் கால்நடை மருத்துவமனை, துணை மருத்துவமனைகளில் கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3882, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதியில், புனல்குளம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4058, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில், கால்நடை மருத்துவமனை உருவாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4396, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொடக்குறிச்சி தொகுதியில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4415, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட வதம்பச்சேரி ஊராட்சிக்குட்பட்ட நல்லூர்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5210, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் தொகுதி, மோகனூர் ஒன்றியம், ஓலாப்பரியம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5243, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சயனபுரம் கால்நடைக் கிளை மையத்தை மருந்தகமாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5308, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், நடுக்குப்பம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5365, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5552, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதியில் அள்ளிப்பட்டு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5647, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5692, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதி, காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்பக்கட்ட கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5824, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, சின்னக்கள்ளிப்பட்டி ஊராட்சி, சண்முகாபுரத்தில் புதிதாகக் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை), மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.606,30,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1359, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1377, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1426, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2294, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2841, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2909, மாண்புமிகு உறுப்பினர் திரு.* R. *ராதாகிருஷ்ணன்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2955, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.*

திரு. இராம. கருமாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3300, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3905, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *பழனி நாடார்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2057, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2450, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2644, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3515, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1201, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1243, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2245, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2393, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4586, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4633, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4912, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5274, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5726, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5851, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1272, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4085, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3641, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் மீன் விற்பனைக் கூடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 913, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலங்கைமான் பகுதியில் நன்னீர் மீன் வளர்ப்போர் பயிற்சி மையம் மற்றும் மீன் குஞ்சு பொரிப்பகம் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1091, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பின் மூலமாக, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் தாலுகா எல்லைக்குட்பட்ட குளங்களில் மீன் பாசி குத்தகை உரிமத்தை உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1528, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதி, ஏற்கெனவே உள்ள*

நடைமுறைப்படி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (உள்நாட்டு மீனவர் சங்கம்) மீன்பிடிக்கும் குத்தகை உரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1630, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் பகுதியில் மீனவர்களுக்கு வலைபின்னும் தளம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1827, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தெகுதியில் உள்ள 4 மீனவர்கள் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவு அமைப்பது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1915, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீனவர்களின் நலன் காத்திட வழங்கப்பட்டு வருகின்ற உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2345, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் மீன் வளத் துறைமூலம் மீன் விற்பனை நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2595, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில் உள்ள மீனவக் கிராமங்களில் மீன் உலர்த்தும் தளம் (Fish Landing Site) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3033, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மீன் வளக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3409, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில் நவீன குளிர்பதன வசதியுடன் கடல் மீன் விற்பனை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3457, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள மீன் சந்தைப் பகுதியை விரிவுபடுத்தி, பராமரிக்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3563, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதி, தேவம்பாடிவலசு கிராமத்தில் உள்ள குளத்தில் மீன் குஞ்சுகளை வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3822, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து கண்மாய்களிலும் மீன்கள் வளர்ப்பதற்கு ஏதுவாக தண்ணீர் நிரப்புவதற்காக போர்வெல் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3883, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகக் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீனவக் கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4177, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானிசாகரில் செயல்படும் மீன் குஞ்சு பொரிப்பகப் பண்ணையை விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4393, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய

7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4418, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீன் வளத் துறையின் சார்பாக கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு வழங்கும் அரசுத் திட்டங்கள் உள்நாட்டில் உள்ள ஏரிகளில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4758, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் அனைத்து விசைப் படகுகளுக்கும் மானிய விலையில் டீசல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5242, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்நாட்டு மீனவர்களுக்கு நிதி உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5310, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திண்டிவனம் தொகுதி, மரக்காணம் பேரூராட்சி, அழகன்குப்பம் முதல் கீழ்புத்துப்பட்டு ஊராட்சி, முதலியார்குப்பம் வரையிலான கடற்கரைப் பகுதிகள் கடல் அரிப்புகளினால் பாதிக்கப்படுவதனால் தூண்டில் வளைவு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5954, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துபேட்டையில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.606,30,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

(ஈ) கோரிக்கை எண் 8-பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை), மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.13,46,64,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1358, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1378, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1427, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2295, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2842, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2910, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2956, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.*

திரு. இராம. கருமாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3301, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3906, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4770, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2060, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2454, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2651, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3516, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1200, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1238, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1808, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2246, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2394, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4587, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4634, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4915, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5275, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5725, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1287, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1861, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4086, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3647, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்ட பால்வள தலைமை அலுவலகக் கட்டடத்தைப் புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 590, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் விவசாயிகளிடமிருந்து நேரடியாகப் பால் கொள்முதல் செய்ய அரசு நேரடி பால் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து " விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 636, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தினை உள்ளடக்கிய அனைத்துக் கிராமங்களையும் இணைக்கும் விதமாக ஆவின் கூட்டுறவுச் சங்கம் அமைத்து பால் கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 914, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1529, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய

நிலுவைத் தொகையினை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1562, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட குப்பச்சிப்பாறை பால் குளிரூட்டும் நிலையத்தை செயல்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1631, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி தொகுதி, பெருங்குடி இரயில் நிலையம் அருகில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையகம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1774, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, திருவண்ணாமலை மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியத்தைப் பிரித்து, ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு பால் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1828, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் வானூர் ஒன்றியத்தில் கிளியனூர், வானூர், உப்பு வேலூர், கோட்டரும்பம் மற்றும் கண்டமங்கலம் ஒன்றியத்தில் கண்டமங்கலம், பாக்கம், வீராணம் ஆகிய இடங்களில் ஆவின் பால் பூத் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1871, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் கொள்முதல் மற்றும் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1913, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் கூடுதல் ஆவின் பால் பூத்துகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2346, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் (வடக்கு) தொகுதி, பெருமாநல்லூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3041, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் வளத்தைப் பெருக்க கறவை மாடுகளுக்குத் தேவையான தீவனங்களை 50% மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3411, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நாட்டார்மங்கலத்தை மையமாகக் கொண்டு ஆவின் பால் குளிரூட்டும் மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3458, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3564, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

2022 ஏப்ரல் 13]

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3823, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால்மாடுகள் வாங்குவதற்கு விவசாயக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் கடன்களுக்கான மானியங்களைக் கூடுதலாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3884, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதியில் குன்றாண்டார்கோவில், கிள்ளுக்கோட்டை, ரெகுநாதபுரம், புனல்குளம், நாயக்கர்பட்டி, வளவம்பட்டி, வைத்தூர், குழந்திரான்பட்டு மற்றும் மட்டங்கால் ஆகிய ஊராட்சிகளில் பால் பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4421, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டையில் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் மதிப்புக் கூட்டும் பொருட்களான பால் பவுடர், பால் கோவா, பன்னீர் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5241, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5553, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதி, ஒமகுப்பம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5676, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதியில் பாலக்கோடு, காரிமங்கலம் பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5792, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெள்ளியங்காடு பால் கூட்டுறவுச் சங்கத்தின் அருகில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,46,64,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை-உழவர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை* **@** *நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு*

*@ **363** முதல் **506** வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். வழக்கமாக சொன்னபடி முதல் இரு உறுப்பினர்களுக்கு தலா 15 நிமிடங்களும், மற்ற 5 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தலா பத்து நிமிடங்களும் ஒதுக்கப்படுகின்றது. நேரம் இப்பொழுதே 12 மணி 34 நிமிடங்கள்

@ 507 முதல் 709 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 710 முதல் 782 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.

ஆகிவிட்டன. ஆகவே தயவு செய்து எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலாவதாக விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், என்னை வாழவைத்த தெய்வம், தமிழக மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கக்கூடிய இதய தெய்வம், அம்மா என்றால் அன்பு, அன்பின் விளக்கம், பண்பின் முழக்கம், அம்மா என்று ஒரு சொல்லியல் உண்டு என்று பாடியதோடு மட்டுமல்லாமல், விலையில்லாமல் அரிசி வழங்கி, பசியில்லாத தமிழகத்தை உருவாக்கித் தந்த அம்மா என்ற சொல்லுக்கு அடையாளமாகத் திகழ்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 12–35

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய இதயக் கனி, கழக நிறுவனத் தலைவர், ஏழைகளின் இதய வேந்தன், சத்துணவுக் கண்ட சரித்திர நாயகன், 'கடவுள் என்னும் முதலாளி; கண்டெடுத்த தொழிலாளி விவசாயி' என்ற பாடல் வரிகளுக்கு உயிர் கொடுத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியே தமிழகத்திற்குப் பல்வேறு திட்டங்களைத் தந்ததோடு, விவசாயிகளின் தோழனாக, காவேரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, விவசாயிகளைப் பாதுகாத்த 'காவேரிக் காப்பாளர்' (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தின் வீர விளையாட்டாம் ஜல்லிக்கட்டை மீட்டுத் தந்த தென்னகத்தின் திருமகன், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கழக ஒருங்கிணைப்பாளர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் வணக்கம்.

டெல்டா மாவட்டத்திலுள்ள அனைத்து நிலங்களுமே நல்ல நிலங்கள்தான் என்றாலும், நல்ல நிலத்திற்கும் நல்ல நிலம் என்பதால் 'நன்னிலம்' என்ற காரணப் பெயரோடு விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய என்னுடைய நன்னிலம் தொகுதி மக்களுக்கும், நீண்ட நெடிய நாட்களாக எனக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கிற திருவாரூர் மாவட்ட மக்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் உரித்தாக்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் என்கிற வகையிலேயும், டெல்டா மாவட்டத்தின் நடுநாயகமாக விளங்கிக் கொண்டிருக்கிற திருவாரூர் மாவட்டத்தில் பிறந்ததாலும்,

நெத்தி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக–அது
நெல் மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக் கொத்தாக
பக்குவமாய் அறுத்து அதைக் கட்டுக்கட்டாக–அடிச்சு
பதரு நீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக!
ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை!
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லை!

என்ற மருதகாசியின் பாடலை முணுமுணுத்துக் கொண்டே, ஏரோட்டச் செல்லும் விவசாயிகள் மகிழ்கின்ற வகையிலேயும், இன்றைக்கு நடைபெறுகின்ற வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம்–மீனவர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு நான் பெருமையோடு இங்கு நின்று கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

என்ற இந்தக் குறளை பெரும்பாலும் 'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்' என்கிற அளவிலேயே கையாளுவார்கள். முழு குறளின் பொருளைப் பார்க்கின்றபோது உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும், ஏர்த்தொழிலின் பின்னால்தான் நிற்கிறது. அதனால், எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது

என்று (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் வாழ்வில் துன்பம் இருக்கிறது என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் உணர்த்தியிருக்கிறார். இன்றைக்கும் அதே நிலைதான் நீடிக்கிறது. மழை கூடுதலாகப் பெய்தாலும் விவசாயிகளுக்குத் துன்பம்; மழை குறைவாகப் பெய்தாலும் விவசாயிகளுக்குத் துன்பம்; காற்றடித்தாலும் அதே நிலைதான். இயற்கைச் சீற்றத்தால் தொடர்ந்து துன்பத்தை அனுபவிப்பவர்கள் விவசாயிகளாகவே இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில்தான் விவசாயத்திற்கான தனி பட்ஜெட்டை விவசாயிகள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவசாயத்திற்கான நிதிநிலை அறிக்கையில், விவசாயிகளுடைய எண்ணங்களும், எதிர்பார்ப்புகளும், அவர்களுக்கான எதிர்காலத் திட்டங்களும், தேவைகளும் பிரதிபலிக்கப்படவில்லையே என்ற ஏக்கம் எனக்கு மட்டுமல்ல, தமிழக விவசாயிகள் அனைவரிடமும் இருக்கிறது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இதற்கு முக்கியக் காரணம், கடந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையிலாவது அதிகளவில் நிதி ஒதுக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்த சூழ்நிலையில், வெறும் 3 சதவிகிதம் மட்டுமே கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி விவசாயிகளின் பொற்காலமாகத் திகழ்ந்தது. அதற்குக் காரணம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து அறிவித்துக் கொண்டேயிருந்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. உழவர்களுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க உழவர் பாதுகாப்புத் திட்டத்தைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, சுமார் 1 கோடியே 46 இலட்சம் நபர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களது குடும்ப உறுப்பினர்கள் 1 கோடியே 37 இலட்சம் பேர் என 2 கோடியே 83 இலட்சம் நபர்கள் பயனடையும் வகையில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தைத் தமிழகத்திற்குத் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள். அதேபோல், இந்தியாவிலேயே வறட்சிக்கு நிவாரணம் கொடுத்தது முதன்முதலிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

உழவுக்கு மானியம், டீசலுக்கு மானியம், நடவுக்கு மானியம், குறுவைத் தொகுப்பு, சம்பா தொகுப்பு என விவசாயிகளுக்கு வாரி வழங்கியவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களும்தான் என்பதனை இந்த நேரத்தில் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். வறட்சிக் காலத்தில் பயிர்க் காப்பீட்டுத் தொகையை காப்பீட்டு நிறுவனங்கள் வழங்கும் முன்னரே ஏக்கருக்கு ரூ.15,000/– நிவாரணம் வழங்கியும், காப்பீடு வராத விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கியும் விவசாயிகளைப் பாதுகாத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதனை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சொட்டு நீர்ப் பாசனத்தைப் பெருமளவில் பரவலாக்கியவர் அம்மா அவர்கள். அத்துடன், கோடை சாகுபடியில் அதிக பரப்பில் பருத்தி, உளுந்து, எள், நிலக்கடலை போன்ற பணப் பயிர்களைச் சாகுபடி செய்திட வழிவகை செய்ததும் அம்மாவின் அரசுதான். விவசாயிகளின் நீண்டநாள் கனவாக இருந்த அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தை நிறைவேற்றித் தந்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்காக ஈரோட்டில் வணிக வளாகம் அமைத்துத் தந்தது மாண்புமிகு அம்மாவின் அரசு. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் எல்லாவற்றையும் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். உறுப்பினர் பேசி முடித்துவிடட்டும். அதற்குப் பிறகு எல்லாவற்றுக்கும் சேர்த்துப் பதில் சொல்லுங்கள். அவர்களுடைய பெயருடன், அவர்களுடைய கருத்தையும் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் வியாபாரிகள் பருத்தி கொள்முதல் செய்யாத காலத்தில், தேசிய பருத்திக் கழகத்தின்மூலம், முதன்முறையாக பருத்திக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயித்து, பருத்தி*

முழுவதையும் கொள்முதல் செய்து சாதனை படைத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உளுந்து மற்றும் பாசிப் பயறு விலை வீழ்ச்சி அடைந்தபொழுது, இந்தியாவிலேயே முதன்முதலாக இதற்கென குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்து, இந்தத் தானியங்களை அரசே கொள்முதல் செய்ததும் அம்மாவினுடைய அரசிலேதான். 'உழவன்' செயலியை உருவாக்கி, அந்தச் செயலியின்மூலம் 20 வகையான சேவைகளைப் பெறவும், விதை, உரம் ஆகியவற்றின் இருப்பு விவரங்களை இருந்த இடத்திலிருந்து விவசாயிகள் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் அணை வரலாற்றிலேயே ஜூன் 6 ஆம் தேதி குறுவை சாகுபடிக்காகத் திறக்கப்பட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். அதைப்போல, முதன்முதலில் மேட்டூர் அணையைத் தூர்வார ஆணையிட்டவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதனை இந்த நேரத்திலே நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக்கொள்வதற்கும், அணையைப் பலப்படுத்திய பிறகு 152 அடி வரை நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என சட்ட ரீதியாக உரிமையைப் பெற்றுத் தந்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை இந்த நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன்.

உணவு தானிய உற்பத்திக்கான இந்திய அரசின் 'கிருஷி கர்மான்' விருதினை 5 முறை தொடர்ந்து பெற்று சாதனை படைத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. 1,000 கோடி ரூபாய்க்குமேல் குடிமராமத்துப் பணிகள்மூலம் ஆறுகள் அனைத்தையும் தூர்வாரிக் கொடுக்க ஆணையிட்டவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் கடைசியில் பதில் சொன்னாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: இங்கே மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், விவசாயிகளுக்கெல்லாம் அவர்கள்தான் செய்தார்கள் என்பது மாதிரி ஒரு மாயையை உருவாக்குகிறார். அதற்காகத்தான் நான் குறுக்கிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நானும் ஒரு விவசாயிதான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசட்டும்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: நானும் ஒரு விவசாயியாக இருந்து, நானும் இதே சட்டமன்றத்தில் இருந்து, 'கரும்புக்கு விலையைக் கொடுங்கள்; நெல்லுக்கு விலையைக் கொடுங்கள்' என்று கத்திக் கத்தி பார்த்தும், முடியவில்லை. சென்ற மானியக் கோரிக்கையில்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெல்லுக்கு ஆதார விலையை உயர்த்திக் கொடுத்தார்கள்; கரும்புக்கு ஆதார விலையை உயர்த்திக் கொடுத்தார்கள். இப்போது விவசாயத்திற்கான இந்த தனி பட்ஜெட்டின் மூலமாக இதுவரையில் கிட்டத்தட்ட 64 இலட்சம் விவசாயிகளுக்கு, இந்தக் குறுகிய 6 மாதக் காலத்திலேயே பல திட்டங்களை முன்வைத்துக் கொடுத்திருக்கின்றோம். ஆக, நாங்கள் அதை record ஆக வைத்திருக்கின்றோம். நீங்கள் record ஏதும் இல்லாமல் 'செய்தோம், செய்தோம்' என்று சொல்கிறீர்கள். எங்களுக்கும் 'செய்தோம், செய்தோம்' என்று பேசத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், போதும்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மேட்டூரிலிருந்து குறிப்பிட்ட காலத்தில், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்து வைத்து, அதற்கு முன்பாகவே, திறந்து விட்ட தண்ணீர், கடைமடை வரைக்கும் பத்தே நாட்களில் செல்லக்கூடிய வகையில் தூர்வாரிக் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை சட்டமன்றத்தில் எல்லோரும் பாராட்டினார்கள். அதேபோல், நெல் உற்பத்தி கடந்த காலங்களைவிட அதிகமாக, 46 ஆண்டுக் காலம் இல்லாத விளைச்சலை இந்தத் தடவை நாங்கள் உற்பத்தி செய்திருக்கிறோம். ஆக, விவசாயிகள் எல்லா மட்டத்திலும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஆக நீங்கள், 'செய்தோம், செய்தோம்' என்று சொல்வது easy.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செய்தோம், செய்தோம்' என்று நாங்கள் செய்தவற்றைத்தான் சொல்கிறோம். நாங்கள் செய்ததை நாங்கள் சொல்கிறோம்; நீங்கள் செய்ததை நீங்கள் சொல்லுங்கள். நாங்கள் செய்ததைச் சொல்வதற்கு எங்களுக்கு அத்தனை உரிமைகளும் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் 6 ஆம் தேதி. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தயவாய் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு 3 அமைச்சர்கள் பதில் சொல்லப் போகிறீர்கள். நீங்கள் அதைக் குறித்து வைத்துக்கொண்டு, தயவுசெய்து பிறகு பதில் சொல்லுங்கள். அவர்கள் குற்றச்சாட்டு சொல்லவில்லை. அவர்கள் செய்ததைச் சொல்லட்டும். நீங்களும் அதற்குப் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

பிற்பகல் 12–45

திரு. இரா. காமராஜ்: *தமிழக வரலாற்றிலேயே மேட்டூர் அணையை ஜூன் 6 ஆம் தேதி திறந்தது அம்மா அவர்கள்தான் என்பதற்கு* record *இருக்கிறது என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள்* subject*–க்கு வந்துவிடுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் குடிமராமத்துப் பணிகள்மூலம் ஆறுகள் அனைத்தையும் தூர்வாரி, தடுப்பணைகள் கட்டிக் கொடுத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். இந்தச் சாதனைக்காக அண்ணன் எடப்பாடியார் அவர்களை, குடிமராமத்து நாயகன் என்றே விவசாயிகள் அழைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்குத் தடையில்லாத மும்முனை மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்கியது அம்மா அவர்களின் அரசுதான். 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 30 ஆண்டுகளில் 13 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த கிடங்குகளின் கொள்ளளவை பத்தே ஆண்டுகளில் 24 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவாக*

உயர்த்திக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர் சட்டப் போராட்டங்களின்மூலம் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டு, காவேரியின் உரிமையை மீட்டுத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக தஞ்சாவூரில் விவசாயிகளும், விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்ததோடு, பொன்னியின் செல்வி என்ற பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலத்தான், Hydrocarbon திட்டத்தால் விவசாயிகளின் தலைமுறைக்கே வந்த சோதனையை முறியடித்து, காவேரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளைப் பாதுகாத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அதற்காக திருவாரூரில் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் ஒன்றுகூடி அண்ணன் எடப்பாடியார் அவர்களை காவேரிக் காப்பாளர் என பட்டமளித்து கௌரவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2012 ஆம் ஆண்டில் ஆசியாவின் முதல் மீன்வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்திலும், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் பொன்னேரியில் ஒரு மீன்வளப் பொறியியல் கல்லூரியும் மாண்புமிகு அம்மா அவர்களால் துவங்கப்பட்டன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, சென்னை, திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரியில் மீன்பிடித் துறைமுகங்கள் புதிதாக அமைத்துக் கொடுத்த அரசும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சேலம் மாவட்டம், தலைவாசலில் ஆசியாவிலேயே மிகப் பெரிய சர்வதேச ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் அம்மா அவர்களின் அரசில், அண்ணன் எடப்பாடியார் அவர்களால் தொடங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜல்லிக்கட்டு என்பது வீர விளையாட்டு, நமது பாரம்பரிய உரிமை. அதை இனிமேல் நடத்த முடியாதோ என்கின்ற ஒரு சூழ்நிலை வந்தபோது, தமிழகம் முழுவதும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் கிளர்ந்தெழுந்தது. அந்தவேளையில் அதனை இலகுவாகக் கையாண்டு, ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டுத் தந்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அன்றைய முதல்வர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதையெல்லாம் சேர்க்காதீர்கள். எங்களுக்குக் கொடுத்த time-ஐக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை நிதிநிலை அறிக்கையின்போது பல்வேறு அறிவிப்புகளைத் தந்தார்கள். அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மத்திய, மாநில அரசின் நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்கள். இதில் மத்திய அரசு நிதி எவ்வளவு, மாநில அரசு நிதி எவ்வளவு என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விளைவிக்கப்படும் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க எந்தவிதமான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை. உதாரணத்திற்கு, நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/–ம், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,500/–ம் வழங்கப்படும் என்று உங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற அறிவிப்பு இல்லை. அனைத்து இடுபொருட்களும் விலையேறி உள்ள நிலையில், வேளாண் விளைபொருட்களுக்கு மட்டும் அதற்கேற்ற விலையில்லாதது, அதற்கான திட்டங்கள் ஏதும் இல்லாதது மிகுந்த வருத்தமளிக்கிறது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தென்னை விவசாயிகளைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கொப்பரைத் தேங்காய் விலை, சென்ற ஆண்டு இந்தக் காலக்கட்டத்தில் ஒரு கிலோ ரூ.140/–க்கு விற்பனையானது. ஆனால், தற்போது ஒரு கிலோ கொப்பரைத் தேங்காய் ரூ.87/–க்குதான் விற்பனையாகிறது. இந்த நிலையிலிருந்து தென்னை விவசாயிகளைக் காப்பாற்ற மத்திய அரசை வலியுறுத்தி, கொப்பரைத் தேங்காய்க்குக் கூடுதலாக விலை நிர்ணயம் செய்து, கொள்முதல் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் பருவம் தவறிப் பெய்த மழையால் அறுவடை நேரத்தில் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஆனால், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. தற்போது அதற்கான அறிவிப்புகளும் ஏதுமில்லை என்பது விவசாயிகளை ஏமாற்றத்திலே தள்ளியிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் Tractor, Power Tiller, அறுவடை இயந்திரம் போன்ற கருவிகள் வாங்க பதிவு செய்திருந்தால் வரிசைக்கிரமமாக மானியத்துடன் வழங்கப்பட்டது. ஆனால், ஓராண்டாக இதற்கான அறிவிப்பு இல்லை. பட்ஜெட்டிலும் இதற்கான அறிவிப்பு இல்லை. (மணியடிக்கப்பெற்றது) மீண்டும் Tractor, Power Tiller மானியத்தில் வழங்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 நிமிடங்கள் முடிந்திருக்கின்றன.

பிற்பகல் 12–50

திரு. இரா. காமராஜ்: கோடை குறுவை சாகுபடி குறித்து விவசாயிகளிடம் திட்டமிட்டு தவறான தகவல்கள் பரப்பப்பட்டன. இதனால் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. விவசாயிகள் மன வேதனையில் இருக்கின்றார்கள். கோடை குறுவை சாகுபடியைப் பொறுத்தவரை, அரசின் நிலை என்ன என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

வறட்சியையும், வெள்ளத்தையும் தாங்கி, விவசாயிகளுக்கு நல்ல கொள்முதலைத் தருகின்ற டி.கே.எம். 9 இரக நெல்லை சாகுபடி செய்ய தடை விதித்திருக்கிறீர்கள். விவசாயிகளின் நலன் கருதி டி.கே.எம். 9 என்ற இரக நெல்லை, விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) அவர் முடித்துவிடட்டும். (குறுக்கீடு) நீங்கள், தங்களுடைய பதிலுரையில் சொல்லிவிடுங்கள்.

திரு. இரா. காமராஜ்: எங்களுடைய ஆட்சியில் விவசாயத்திற்கு 18 மணி நேரம் முதல் 24 மணி நேரம்வரை மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது, 9 மணி நேரம் முதல் 12 மணி நேரம் வரைதான் விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மீண்டும், 24 மணி நேரமும் விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென வேண்டுகிறேன்.

குடிமராமத்துத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல் குடிமராமத்துத் திட்டம் செயல்படுத்தப்படாததால், விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மீண்டும், குடிமராமத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென வேண்டுகிறேன்.

தற்போது, உரத் தட்டுப்பாடு கடுமையான அளவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் வரையிலும் DAP உரம் மூட்டை ஒன்றுக்கு ரூ.1,800/– வரையிலும் விலை உயர்த்தி விற்பனை செய்யப்பட்டது. எதிர்காலத்தில் உரத் தட்டுப்பாட்டைப் போக்கவும், விலை உயர்வைத் தடுக்கவும், முறையான நடவடிக்கையும், திட்டமும் தேவையெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நான் சொல்வதற்கு முன்பாகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்று காலையில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நெல் மழையில் நனைகின்றது. அதை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதற்குப் போதுமான விளக்கம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள், அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். (குறுக்கீடு) அதற்குப் போதுமான விளக்கம் கொடுத்தாகிவிட்டது.

திரு. இரா. காமராஜ்: மீன் வளத்தைப் பொறுத்தவரை, ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்கின்ற மீனவர்கள் கைது செய்யப்படுவதையும், தாக்கப்படுவதையும் தவிர்க்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இலங்கையில் நிலவிவரும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, கச்சத் தீவை மீட்க, மத்திய அரசை வலியுறுத்தி, துரித நடவடிக்கை எடுத்து, மீனவர்களையும், நம்முடைய உரிமைகளையும் பாதுகாக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

கால்நடை பராமரிப்பைப் பொறுத்தவரை, விவசாயிகளால் வளர்க்கப்பட்டுவரும் உம்பளாச்சேரி, காங்கேயம், புலிக்குளம், பர்கூர் மற்றும் ஆலம்பாடி ஆகிய பாரம்பரிய நாட்டு இன மாடுகளைப் பாதுகாத்து, புவிசார் குறியீடு பெற முயற்சி எடுக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள கொற்கை கால்நடைப் பண்ணையை மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோயைத் தடுப்பதற்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். பால் பொருட்கள்மீது ஏற்றப்பட்டுள்ள விலையை உடனே இரத்து செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி டெல்டா பகுதியில், அக்டோபர் 20 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 10 ஆம் தேதி முடிய 50 நாட்களில், 300 முதல் 1,200 மில்லி மீட்டர் வரை மழை பெய்துள்ளது. மேலும், மாநிலத்தின் மேற்குப் பகுதியிலுள்ள உள் மாவட்டங்களிலும் மழை பெய்ததன் காரணமாக, அனைத்து ஆறுகளிலும் நீர் வருகின்றது. டெல்டா பகுதிகளில் பெய்யும் மழையால் நீர் வடிய வழியின்றி, மாதக்கணக்கில் தேங்குவதால், பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, தேவையான இடங்களில், வடிகால்களை அகலப்படுத்தி, மழைநீர் தடையின்றி வடிய வசதிகள் செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பருவமழைக் காலங்களில், 60 நாட்கள் மழை பெய்வதால், விவசாயத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். அந்த 60 நாட்களுக்கும், அந்த விவசாயக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென வேண்டுகிறேன்.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள சாலைகள் முழுவதும் களிமண் பரப்பாக உள்ளன. களிமண் பரப்பாக இருப்பதனால், சாலைகள் வீணாகிவிடுகின்றன. அப்படி வீணாகின்ற சாலைகள், முக்கியச் சாலைகளாக இருந்தாலும், கிராமங்களை இணைக்கின்ற சாலைகளாக இருந்தாலும், தொடர்ந்து இதே நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையோடு கலந்துபேசி, ஒரு முடிவெடுத்து, அதற்கான நிதியைக் கூடுதலாக ஒதுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். அமுதசுரபிபோல, வற்றாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர், இதோடு நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. காமராஜ்: படித்த இளைஞர்களிடம் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், கூடுதலாகத் திட்டங்களைத் தீட்டி, அவர்களுக்குப் பயிற்சி அளித்து விவசாயத்தில் ஈடுபடுத்த வேண்டும். இல்லாவிடில், வருங்காலத்தில் விவசாயம் மேற்கொள்ள ஆர்வமில்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இரசாயன உரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதனால், நிலம் மலடாகிவிடுகிறது. எனவே, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். இயற்கை விவசாயத்தினுடைய நிலப்பரப்பை அதிகரிக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) உங்களுக்கு 20 நிமிடங்கள் வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடு) சரி, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும், ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. இரா. காமராஜ்: விவசாயிகளின் விளைநிலங்களுக்கான போராட்டம் தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கிறது. டெல்டா பகுதிகளில் பாம்புகள் கடித்து இறந்துவிடுகிறார்கள். மேலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், விலங்குகளால் விவசாயிகள் தாக்கப்படுகின்றார்கள்; கால்நடைகள் கொல்லப்படுகின்றன; விவசாயம் அழிக்கப்படுகின்றது. இதற்கு ஒற்றைச்சாளர முறையில், விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில், நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய நிவாரண உதவியை உயர்த்தி வழங்கிட வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 75 வயதிற்கு மேற்பட்டவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல கிராமங்களில் 75, 80 வயதுடையவர்கள், தங்களால் முடியாமல் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு சிறப்பூதியம் வழங்குவதற்கான ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற. . .

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றே ஒன்று, நன்றி மட்டும்தான். கடைசி பக்கத்தை எடுங்கள்.

திரு. இரா. காமராஜ்: கடைசி பக்கம்தான். டெல்டா மாவட்டங்களில் வேளாண் துறையின்கீழ் பணியாற்றி வந்த பணியாளர்கள், தோட்டக்கலைத் துறைக்கும், வேளாண்மை விற்பனை நிலையங்களுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இதனால், பணியாளர் பற்றாக்குறை ஏற்பட்டு, விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் ஆலோசனைகளும், உதவிகளும் கிடைக்கப் பெறாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) சரி, சொல்லி முடியுங்கள்.

திரு. இரா. காமராஜ்: அரசின்மூலம் விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம், மின் மோட்டார், பைப்லைன் போன்றவற்றிற்குக் கொடுக்கப்படும் மானியத் தொகையை நேரடியாக விவசாயிகளுக்கே கொடுக்க வேண்டுமென அரசாங்கத்தை அன்போடு இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்து கொள்கிறேன்.

திரு. இரா. காமராஜ்:

தொகுதிக் கோரிக்கைகள்:

திருவாரூர், நன்னிலம் தொகுதிக்குட்பட்ட மூங்கில்குடியில் வேளாண் கல்லூரி ஒன்று அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர், நன்னிலம் தொகுதிக்குட்பட்ட குடவாசலில் வேளாண் கழிவுகளைக் கொண்டு (வைக்கோல், பருத்திக் கழிவு) புதிய தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர், நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், நவக்கிரக ஸ்தலங்களில் ஒன்றான குருபகவான் அருள்புரியும் ஆலங்குடியில், அறநிலையத் துறை சார்பாக பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்தித் தரக் கோருகிறேன்.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமானுக்கு புறவழிச் சாலை மற்றும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, நன்னிலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர், நன்னிலம் தொகுதி, மருதவாஞ்சேரி ஊராட்சி, கோவில்பத்தோடு, அதம்பார் ஊராட்சி, ஜெகநாதபுரம் கிராமத்தை இணைக்கும் வகையில் கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர், நன்னிலம் தொகுதி, வயலூர் ஊராட்சி, பூங்குடியிலிருந்து பூங்குடி, அக்கரை தெரு வழியாக தஞ்சாவூர் மாவட்டம், பொய்யாநத்தத்தை இணைக்கும் வகையில் கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், மதகரம் மற்றும் தெற்கு நாயகன்பேட்டையையும் இணைக்கும் வகையில் சுள்ளான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் குடமுருட்டி ஆற்றில் தடுப்பணை கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக மத்திய கூட்டுறவு வங்கி அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடிக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பாலையூர் ஊராட்சியையும், தென்பரை ஊராட்சி, தெற்கு தென்பரையையும் இணைக்கும் வகையில் பாமணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கொற்கையில் கால்நடை பல்கலைக்கழகம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டையில் புதிதாகத் தொழிற்பயிற்சி நிலையம் (ITI) ஒன்று அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். நீங்கள் உங்களுடைய பதிலுரையில் அதற்கு விளக்கம் சொல்லிவிடலாமே!

***மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று என்னுடைய பதிலுரை இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் டி.கே.எம் 9 இரக நெல்லை வாங்க மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏற்கெனவே, அந்த நெல்லை உற்பத்தி செய்து, கொள்முதல் செய்து அரைத்து, நியாய விலைக் கடைகளில் கொடுக்கின்ற சமயத்திலே, அதை பொதுமக்கள் வாங்க மறுக்கிறார்கள். கடந்த காலத்திலே நீங்கள் கேரளாவிற்கு அந்த அரிசியைக் கொடுத்தீர்கள். ஆனால், கடந்தக் இரண்டு ஆண்டுக் காலமாக கேரளாவில் அந்த அரிசியை வாங்க மறுக்கிறார்கள். பொதுமக்களும் அதை வாங்க விரும்பவில்லை. அதனால்தான், டி.கே.எம் 9 இரகத்திற்குப் பதிலாக, மாற்றுப் பயிராக டெல்டா மாவட்டத்திலே பொது இரகம் அல்லது சன்ன இரகத்தைப் பயிரிடுங்கள் என்று விவசாயிகளுக்கு நாங்கள் அறிவுரை கூறியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நினைவைப் போற்றி, அவர் துயில் கொண்டுள்ள திசை நோக்கி வணங்குகிறேன். உலகம் போற்றும் உன்னதத் தலைவர், எங்கள் குடும்பத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். 100 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இந்தத் திராவிட இயக்கம், இன்னும் 100 ஆண்டுகள் தழைத்தோங்கி நின்று, மதவாத, எதேச்சதிகார சக்திகளை எதிர்த்துப் போராட. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முடிக்கட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன்.

திரு. எஸ். சுதர்சனம்: நமது இயக்கத்தில் வளமான கட்டமைப்பை, இளைஞர்களைக் கொண்டு உருவாக்கிவரும் அன்புச் சகோதரர் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இன்று நடைபெறுகின்ற வேளாண்மை-உழவர் நலத் துறை, மீன்வளம்-மீனவர் நலன், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இறுதியாக பதிலளிக்க இருக்கின்ற அமைச்சர் பெருமக்களையும், மற்ற அமைச்சர்களையும், அரசுத் தலைமைக் கொறடா அவர்களையும் நன்றியுடன் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கை அளித்து, கடந்த ஓராண்டுக் காலமாக விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்திருப்பவர், உலகம் போற்றும் உன்னத முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அழகுத் தமிழில், மிக அருமையாக, அற்புதமான நடையிலே விவசாயிகள் புரிந்துகொள்ளும் மொழியிலே தாக்கல் செய்யப்பட்டுள்ள 2022-2023 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற துறைகளின் அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நமது அரசின் முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கை கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 10 ஆண்டுக் காலமாக இருந்த அவல நிலை போக்கப்பட்டு, எப்போதும்போல பாதிப்புக்குள்ளாகியிருக்கும் விவசாயிகளுக்குத் தன்னம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. வேளாண்மை-உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம்-மீனவர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், வேளாண்மை–உழவர் நலத் துறையில், மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை ஆகிய மூன்றுமே ஒன்றை ஒன்று சார்ந்தவையாகும். இந்த 3 துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்பட்டால்தான், அரசின் திட்டங்களை முழுமையாக மக்களிடம் எடுத்துச் சென்று, விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்த முடியும். இதனால் கிராமங்களில் வாழும் சாமானிய, ஏழையெளிய மக்களெல்லாம் பயன்பெற முடியும் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–00

ஒரு விவசாயி, விவசாய நிலம் வைத்திருப்பார். கூடவே, அவர் வீட்டில் ஒன்றிரண்டு மாடுகள், கோழிகளை வைத்து, விவசாயத்திற்குப் பயன்படுத்தும் குட்டை அல்லது கிணறுகளில் மீன்களை வளர்த்தும், தான் வைத்துள்ள ஆடு, மாடுகளிடமிருந்து பால் கறந்து வியாபாரம் செய்தும் பிழைப்பு நடத்தி வருபவர்தான் விவசாயி. இதுதான் கிராமங்களில் உள்ள விவசாயிகளுடைய உண்மை நிலை.

நாம் வேளாண்மைக்கு என்று ஒரு துறையும், கால்நடை மற்றும் மீன் வளத்திற்கு என்று ஒரு துறையும், பால் வளத்திற்கு என்று ஒரு துறையும் நிருவாக உபயோகத்திற்காக வைத்திருந்தாலும், கிராமத்தில் வசிக்கின்ற ஒரு விவசாயி கல்வி அறிவு இல்லாவிட்டாலும் மூன்று துறைகளையும் தன்னுடைய வாழ்க்கை முறைகளில் ஒருங்கிணைத்து வாழ்வாதாரத்தினைப் பெருக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதுதான் உண்மை. அதுமட்டுமல்ல, வீட்டின் பின்புறக் கொல்லையில் சில தென்னை மரங்கள், மா மரங்கள், முருங்கை மரங்கள், வாழை மரங்கள், பப்பாளி மரங்கள் ஆகியவற்றைப் பராமரித்துத் தோட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் வருமானத்தைப் பெருக்கி வாழ்ந்துக் கொண்டிருப்பவன்தான் கிராமத்து விவசாயி. இந்த ஒருங்கிணைப்பு, அரசாங்கம் சொல்லித் தராமலேயே விவசாயிகள் தங்கள் வாழ்க்கை முறையில் ஒருங்கிணைத்து, அவர்களே நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதுதான் இப்போது இருக்கும் முறை என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விவசாயிகளை ஒருங்கிணைத்து, அவர்களின் விவசாயம், தோட்டக்கலை, மீன் வளம், பால் வளம் ஆகியவற்றைப் பெருக்கி

பெரிய அளவிலே கொண்டு வந்து, எப்படி குடும்பத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவது என்பதற்கு வழிகாட்டியாக இருப்பதுதான் நமது அரசு. கடந்த 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் தாக்கல் செய்த வேளாண் நிதிநிலை அறிக்கைகள் இதை நிறைவேற்றும்விதமாக அமைந்துள்ளன என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பழமையில் ஊறிய அந்த விவசாயிகள், அந்தக் காலத்தில் படிப்படிறிவு இல்லை என்றாலும், பட்டறிவு மூலமாகத் தங்களுடைய வாழ்நாளில் பசியில்லாமல் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சிறிய அளவில் இதைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. அதோடுமட்டுமல்லாமல், இப்போது நம்முடைய திராவிட இயக்கங்களால் சமூக நீதி புகுத்தப்பட்டு, விவசாயக் குடும்பங்களில் உள்ள இளைஞர்கள், பிள்ளைகள் எல்லாம் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள் படித்து, பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நகரத்தை நோக்கி வேலைவாய்ப்பு தேடி வராமல் இருக்க, அவர்களைத் தொழில் அதிபர்களாக, சுயமரியாதையாக வாழ வழி செய்துள்ளதுதான் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தச் சட்டமன்றத்தில் உரையாற்றும் நானும் ஒரு விவசாயி. என்னுடைய பாரம்பரிய தொழில் விவசாயம்தான். விவசாயத்தில் நாங்கள் அப்போதே எங்களுடைய வயல்களில் நெல், கத்தரி, வெண்டைக்காய், கீரை வகைகளையெல்லாம் பயிர் செய்திருக்கின்றோம். என்னுடைய இன்னொரு தொழில் மாம்பழ வியாபாரம். என்னுடைய தகப்பனார், தாத்தா, முப்பாட்டனார் போன்றோர்களெல்லாம் செய்து வந்ததை, நான், பெற்ற படிப்பறிவின் காரணமாக அவற்றின் உற்பத்தியை மேலும் எப்படிப் பெருக்கலாம் என்று அறிந்து, ஏற்றுமதியும் செய்து, அதன் மூலமாக என்னுடைய பொருளாதாரத்தை வளர்த்துக்கொண்ட என்னைப்போல விவசாயக் குடும்பத்தில் படித்த இளைஞர்களுக்கு வழிகாட்டி அறிக்கையாக இருப்பதுதான் நம்முடைய வேளாண் நிதிநிலை அறிக்கை என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. அண்மையிலே நடந்து முடிந்த ஐந்து மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தலில்

மாண்புமிகு பாரதப் பிரதமர் மோடி அவர்கள் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஒரு வாக்குறுதியை வாக்காளர்களுக்குக் கொடுத்தார். அது என்ன வாக்குறுதி என்றால், உத்தரப்பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை அவர் அளித்தார். 32 ஆண்டுகளுக்கு முன்பே நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயம் வளர வேண்டுமென்று, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயக் குடும்பங்கள் செழிக்க வேண்டுமென்று, விவசாயிகளின் பொருளாதாரம் உயர வேண்டுமென்று எண்ணி, தமிழகத்தில் இலவச மின்சாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

10 ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருந்த விவசாய மக்களுக்கு, ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு இலட்சம் விவசாய pumpsets-க்கு இலவச மின்சாரம் வழங்கி, விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய தொலைநோக்குப் பார்வையையும், மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக எப்படித் தமிழகம் திகழவேண்டும் என்பதற்காக வகுக்கப்படும் அவரின் திட்டங்களையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். இதைக் குறிப்பாக எதிர்க்கட்சியில் இருப்பவர்களும், பா.ஜ.க.—வில் இருப்பவர்களும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இன்னொரு அறிவிப்பையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் மோடி அவர்கள் அறிவித்தார்கள். உத்தரப்பிரதேசத்தில் பா.ஜ.க. வென்றால், வயதானவர்களுக்கு இலவச bus பயண வசதி செய்து தரப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவியேற்றவுடன் எல்லாப் பெண்களுக்கும் இலவச bus பயண வசதி செய்து தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வரும், நமது ஆட்சியும், நம்முடைய மாநிலமும், எந்த அளவிற்கு நம்முடைய நாட்டிற்கு முன்னோடியாக இருக்கிறது என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நான் அதிகம் பேச விரும்புவதில்லை; என்னுடைய திறமையையும், நிருவாகத் திறமையையும் செயல்பாட்டிலே காண்பிப்பேன்' என்று பலமுறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். கடந்த அறிக்கையில் அறிவித்த 86 அறிவிப்புகளில் 80 அறிவிப்புகளுக்கு நமது அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் உணவு தானிய பரப்பு 3,26,000 ஏக்கர் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த நிலத்தில் உற்பத்தியும் 10 இலட்சம் டன் நம்முடைய ஆட்சியில் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதுவரை இந்த நாட்டில் இல்லாத அளவிற்கு 'உழவன் செயலி' என்ற வசதி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. உற்பத்திப் பொருட்களை விற்க இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு தொழிற்பேட்டையை, திருவாரூர் மாவட்டத்தில் தொடங்க நம்முடைய அரசு எத்தனித்திருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேளாண் துறை, மற்ற துறைகளையெல்லாம் கண்காணிக்க, மாண்புமிகு முதல்வர் அவர்களின் நேரடிப் பார்வையில் அவை இருக்க வேண்டும் என்பதற்காக Dashboard ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2022–2023 வேளாண் நிதிநிலை அறிக்கையிலுள்ள சிறப்பம்சங்கள் என்னவென்றால், மொத்த நிதியொதுக்கீடு ரூ.33,768 கோடி. 2021–2022–ல் மொத்த திருத்திய மதிப்பீடு ரூ.32,775 கோடி. இரண்டாவதாக, அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை 3,204 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்துவதற்கு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டு, 2021–2022–ல் 1,997 கிராமப் பஞ்சாயத்துகள் இத்திட்டத்தில் கொண்டுவரப்பட்டு பயன்பெற்றுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதல்வரின் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில் 3,000 மானாவாரி நிலத் தொகுப்புகளில், 7.5 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் பயன்பெறுவதற்கு ரூ.132 கோடி அளிக்கப்பட்டிருக்கின்றது.

இயற்கை வேளாண்மை. மாநிலத்திலுள்ள இயற்கை வேளாண்மை பற்றி நமது நாடே போற்றுகின்றது. அதேபோல், இடுபொருட்கள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.71 கோடி மதிப்பில் மாநில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை நம்முடைய இந்த அரசு அறிமுகப்படுத்தியிருக்கின்றது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட 2,546 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இரண்டு சிறு தானிய சிறப்பு மண்டலங்கள். திருவண்ணாமலை, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு முதல் மண்டலம்; தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு இரண்டாவது மண்டலம். அதேபோன்று. கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களை ஒருங்கிணைத்து துவரைப் பருப்புக்கென சிறப்பு மண்டலம் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிறு தானியங்களின் ஊட்டச் சத்து பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த, சிறு தானிய விழாக்கள் மாவட்டந்தோறும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. சூரியகாந்தி மற்றும் சோயா பீன்ஸ் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, எண்ணெய்வித்துகள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ரூ.29 கோடி அளிக்கப்பட்டிருக்கின்றது. Digital *விவசாயம். இதுவரை இந்தியாவில் எங்கும் இல்லாத விவசாயத்தை இங்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றோம்.*

அனைத்துக் கிராம நிலங்களுக்கும் புவியியல் குறியீடு; புதிய பயிர் திட்டத்திற்கான பரிந்துரை; பூச்சி மற்றும் நோய்களுக்கான செயற்கை நுண்ணறிவு; Drone*–களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி; நீர்ப்பாசனத்தைத் தானியங்கிமயமாக்குதலுக்கு நவீன இணையதள தொழில்நுட்பம்; மண் வள அட்டைகளுக்கான தமிழ் மண் வளம் இணையதள முகப்பு; பயிர் சாகுபடிப் பரப்பினைக் கண்காணிக்க தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்; இடுபொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகளை* online*–ல் பதிவு செய்து விநியோகம்; வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை; மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனைமூலம் உயர் மதிப்பு வேளாண் திட்டங்கள்,*

ஆதி திராவிடர், பழங்குடியின குறு சிறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்க ரூ.5 கோடி ஒதுக்கீடு; பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்காக சிறப்பு நிதியாக ரூ.5 கோடி; கரும்பு விவசாயிகளுக்கு மெ. டன்னுக்கு 195 ரூபாய் ஊக்கத் தொகையாக அளித்து, மொத்தமாக ரூ.2,950/– வழங்குதல்; கரும்பு சாகுபடிக்கு ரூ.10 கோடி உதவி; சர்க்கரை ஆலைகளில் உள்ள ஆய்வுக்கூடங்களை நவீனமயமாக்குதல்; தானியங்கி எடைத்தளங்கள் அமைக்க ரூ.1 கோடியே 50 இலட்சம்; மின்னிணைப்பு வழங்க TAHDCO மூலம் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு ரூ.20 கோடி நிதியுதவி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1–10

தோட்டக்கலைப் பயிர்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.30 கோடி; தென்னை, மா, கொய்யா மற்றும் வாழைத் தோட்டங்களில் ஊடு பயிர்களுக்காக ரூ.27 கோடி; பசுமைக்குடில் நிழல் வலைக்கூடம் நிலப்போர்வை, Hydroponics, செங்குந்துத் தோட்டம்–vertical garden போன்ற உயர் தொழில்நுட்பங்களுக்கு ரூ.25 கோடி. தேனீ வளர்ப்புத் தொகுப்புக்கு ரூ.10 கோடி, உழவர் சந்தைகளுக்கு காய்கறிகளின் வரத்தை அதிகரிக்கும் சிறப்புத் திட்டத்திற்கு ரூ.5 கோடி, காய்கறிகளில் பாரம்பரிய இரகங்களை மீட்டெடுக்க ரூ.2 கோடி, பருவமில்லாத நேரத்தில் தக்காளி சாகுபடியை ஊக்குவிக்க ரூ.4 கோடி, பனை மேம்பாட்டிற்காக ரூ.2.65 கோடி, பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க ரூ.150 கோடி, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்ப்செட் திட்டத்திற்காக, 3,000 பம்ப் செட்டுக்கு ரூ.65 கோடி மற்றும் ரூ.3 கோடி செலவில் 145 சூரிய சக்தி உலர்த்திகள் வழங்குதல், 50 உழவர் சந்தைகளைச் சீரமைக்க ரூ.10 கோடி மற்றும் 10 புதிய உழவர் சந்தைகளை அமைக்க ரூ.10 கோடி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் உழவர் சந்தையில் மாலையில் சிறுதானியங்கள், பயறு வகைகள் விற்பனை செய்ய அனுமதி, மதிப்புக் கூட்டல் மற்றும் உணவுப் பதப்படுத்தலுக்கு முன்னுரிமை, திண்டிவனம், தேனி மற்றும் மணப்பாறையில் ரூ.381 கோடியில் மிகப் பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள், Kalaignar All Villages Integrated Agricultural Development Programme (KAVIADP), தமிழகம் முழுவதும் மதிப்புக் கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் மையங்கள் 38 கிராமங்களில் அமைக்க ரூ.95 கோடி, ரூ.3 கோடியில் 5 தொழில் கற்கும் சிறு

மையங்கள், 295 மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைப்பதற்கு ரூ.5 கோடி, சென்னை மற்றும் திருச்சியில் எஞ்சிய நச்சுப் பகுப்பாய்வகங்கள் அமைக்க ரூ.15 கோடி, பொது மற்றும் தனியார் பங்கேற்கும் முறையில் தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில், (மணியடிக்கப்பெற்றது) மொத்த காய்கறி விற்பனைக் கூடம் அமைத்து, அருகிலுள்ள மாநில விவசாயிகள் தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வசதி, இப்படி எண்ணற்ற திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் வெளியிட்டிருக்கின்றார்கள்.

தற்போது பேசிய முன்னாள் அமைச்சர் அவர்கள், 'எங்கள் ஆட்சியிலே விவசாயிகளெல்லாம் ரொம்ப அருமையாக இருந்தார்கள்' என்று சொன்னார்கள். கடந்த ஆட்சியிலே அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டு, செயல்படுத்தாத பணிகளையும், நிதி விடுவிக்கப்படாமலும், பணி துவங்கப்படாமலும் உள்ள பணிகளையும் நான் இங்கே படிக்க விரும்புகிறேன்.

ரூ.3 கோடியிலே தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சிதம்பரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை மாதிரி அங்காடிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு அப்படியே இருக்கிறது.

அதேபோன்று, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 50—வது ஆண்டு நிறைவடைந்ததைப் போற்றிடும் வகையில், பழமையான கட்டடங்களைப் புதுப்பிக்க, நினைவு மண்டபங்கள் கட்ட, கருத்துக் காட்சிகள், கருத்தரங்குகள் நடத்த, ரூ.25 கோடியே 85 இலட்சம் ஒதுக்கப்படும் என்ற அறிவிப்பு அப்படியே இருக்கிறது.

கால்நடை பராமரிப்புக்காக, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத்திற்காக அவர்கள் ஆட்சியில் அறிவித்த அறிவிப்புகள். நாளொன்றுக்கு 3.5 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட மாதவரம் மத்திய பால் பண்ணை, 10 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட புதிய தானியங்கி நவீனமயமாக்கப்பட்ட பால் பண்ணையாகத் தரமுயர்த்தி, ரூ.100 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும் என்ற திட்டமும் அப்படியே நிற்கிறது.

அதேபோன்று, சேலம் பால் பண்ணையில் பால் பதப்படுத்தப்படும் திறன் 5 இலட்சம் லிட்டரிலிருந்து 7 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும், 30 இலட்சம் மெட்ரிக் டன் *dairy whitener* தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.100 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும் என்ற அறிவிப்பும் அப்படியே கைவிடப்பட்டன.

வேலூர், திருவண்ணாமலை மாவட்ட ஒன்றிய பால் பண்ணை 1.5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படும் திறன்கொண்டது. அதனை ரூ.75 கோடியில் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன்கொண்ட புதிய பால் பண்ணை, புதிய இடத்தில் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பும் அப்படியே நிற்கிறது.

தஞ்சாவூர் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 55,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதனை, 1 இலட்சம் லிட்டர் பால் (மணியடிக்கப்பெற்றது) பொருட்கள் தயாரிக்கும் தானியங்கி பால் பண்ணையாக ரூ.75 கோடி செலவில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பு என ஏறக்குறைய 26 அறிவிப்புகள் அப்படியே நிற்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர், 'எங்களுடைய ஆட்சிக் காலத்தில் விவசாயிகளெல்லாம் ரொம்ப அருமையாக இருந்தார்கள்' என்று சொன்னார். அறிவிப்புகளை அறிவித்ததோடு, *உண்மைக்குப் புறம்பான ஆட்சியை நடத்தி, விவசாயிகளை ஏமாற்றிய ஆட்சிதான் கடந்த ஆட்சியாளர்களின் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** என்ற வார்த்தை நீக்கப்படுகிறது. உண்மைக்குப் புறம்பான என அவைக் குறிப்பில் மாற்றிக்கொள்ளவும்.

திரு. எஸ். சுதர்சனம்: உண்மைக்குப் புறம்பான ஆட்சி நடத்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 100 நாட்கள் பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தின்கீழ் வேலையாட்கள் கிடைக்காமல் நம்முடைய விவசாயிகள் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். கேரளாவில் என்ன செய்கிறார்கள் என்றால், 100 நாட்கள் திட்டத்தின்கீழ் வேலை செய்ய, தனியார்கள்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

யாரெல்லாம் வேண்டுமென்று விருப்பப்படுகிறார்களோ, அவர்களை அத்திட்டத்தின்கீழ் register செய்து, அந்தப் பணிகளை அவர்களுக்கும் தருகிறார்கள். அதாவது, அரசாங்கம் தருகிற 50 சதவிகித ஊதியமும், தனியார் நிறுவனங்கள் தருகிற 50 சதவிகித ஊதியமும் அவர்களுக்கு வழங்கப்பட்டு, மேலும், அதிகமான நபர்களுக்குப் பணிகள் வழங்குகிற நிலை அங்கேயிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-15

அதேபோன்று, சத்துணவில் வாழைப்பழம். வாழை விளைச்சல் அதிகமாக இருக்கிறது. ஒரு சில நேரங்களில் சரியான விலை கிடைக்காமல் அவை வீணாகின்றன. சத்துணவில் வாழைப்பழம் சேர்க்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது முறைப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு நாளும், வாரம் ஐந்து நாட்களும் சத்துணவில் வாழைப்பழம் அளிக்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் APEDA அனைவருக்கும் தெரியும், புதுடில்லியில் ஒன்றிய அரசிற்கான மையம், APEDA ஏற்றுமதி மையம், வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான மையம், அதன் மூலமாக விவசாயிகள் பல உதவிகள் பெற்று, பலர் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள். நான்கூட அந்தக் காலத்தில் அவ்வாறு ஏற்றுமதி செய்தவன்தான். தற்போது சென்னையில் கடந்த வருடம் பிப்ரவரி மாதம் கிண்டியில் ஒரு கிளைப் பிரிவாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நம்முடைய அதிகாரிகளை வைத்து, APEDA மூலமாக ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் என்னென்ன இருக்கின்றன என்பதை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாட்டிலிருந்து முருங்கை, மா, மற்றும் பல பொருட்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: முடித்துவிடுகிறேன். அதேபோன்று 'மக்களைத் தேடி மருத்துவம்' , 'இல்லம்தேடி கல்வி' என்று அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தையும், ஏற்றத்தையும் கொண்டுவருவதற்கு ஆரம்பித்திருக்கின்றோம். அதேபோன்றே விவசாயிகளைத் தேடி தொழில்நுட்ப உதவி என்ற வகையில், அரசுத் திட்டத்தை ஏற்படுத்தி அனைத்து விவசாயிகளுக்கும் அனைத்துவிதமான வாய்ப்புகளையும் ஏற்படுத்த வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில், அரசாங்கம் செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவும் மக்களைச் சென்றடைய வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில், அனைத்துத் திட்டங்களும் மக்களைச் சென்றடையும் வகையில், அவற்றை நாம் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில், (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளை என்னிடத்தில் கொடுத்துவிடுங்கள்; படித்ததாகப் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. எஸ். சுதர்சனம்: முடித்துவிடுகிறேன். தொகுதிக் கோரிக்கை குறித்துப் பேசவில்லை, தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். கழகத் தேர்தல் அறிக்கையில் ஆடு வளர்ப்போர், மாடு வளர்ப்போருக்கு நல வாரியம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதை அமைத்துத் தர வேண்டும். அதேபோன்று மாதவரம் தொகுதியில், பொன்னேரி தாலுகாவில், (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: இரண்டே இரண்டு கோரிக்கைகள், சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம் -மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில்,

ஆடு, மாடுகள் வளர்க்கின்றவர்களுக்கான நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு நடைபெற்று வந்தது. கடந்த கால ஆட்சியில், அந்த நல வாரியங்களெல்லாம் எப்படி முடிவிற்கு வந்தனவோ அதேபோல், ஆடு, மாடுகள் வளர்க்கின்றவர்களின் நல வாரியத்தையும் முடிவிற்குக் கொண்டுவந்தார்கள். அந்தக் கோப்பும் எங்களிடம் வந்திருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அவர்களது கருத்தைக் கேட்டு, அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: பொன்னேரி தாலுகா 9 பிர்காக்களைக் கொண்டது. ஏறக்குறைய 3 தொகுதிகளில் பொன்னேரி தாலுகா வருகின்றது. நிருவாகம் செய்ய இயலவில்லை, ஒரேயொரு தாசில்தார்தான் உள்ளார். ஏனென்றால், Revenue தான் முக்கியமான Department. அதனால், அரசாங்கத்தின் மூலம் கிடைக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் தாமதமாகின்றன. எனவே, பொன்னேரி தாலுகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதேபோன்று, மாதவரத்திலிருந்து சோழவரத்திற்கு உயர்மட்டப் பாலம்; DPR எல்லாம் 1,800 கோடி ரூபாயில் ready ஆக இருக்கிறது. நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை கூறியிருக்கிறேன். தயவுசெய்து அதனை அமைக்க வேண்டும். ஏனென்றால், நெல்லூர் வரை traffic jam உள்ளது. அதிக அளவிலான தொழிற்பேட்டைகள் அங்கு உள்ளன; **ஸ்ரீ**சிட்டி, கும்மிடிப்பூண்டி தொழிற்பேட்டை மற்றும் திருமுல்லைவாயல் மகளிர் தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட அதிக அளவிலான தொழிற்பேட்டைகள் உள்ளன. மாநெல்லூர் தொழிற்பேட்டை வர உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் அதிக அளவில் இருக்கிறது. ஏறக்குறைய நூற்றுக்கணக்கான மக்கள் விபத்தில் இறந்திருக்கிறார்கள். எனவே தயவுசெய்து அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

மூன்றாவதாக, மாதவரத்தில் ஆவின் நிறுவனத்திற்குச் சொந்தமான 450 ஏக்கர் நிலம் இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார், 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று. தென் சென்னை மிகப் பிரமாதமாக வளர்ந்திருக்கிறது, வட சென்னையில் இதுபோன்ற தொழில்நுட்பப் பூங்காக்கள் இல்லை. TIDEL Park-ஐ அப்போதைய நம்முடைய தலைவர், **1998** ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். அதன் பிறகு தென்

சென்னை மிகப் பிரமாதமாக வளர்ந்திருக்கிறது. ஆகவே, அந்த 450 ஏக்கரில், ஏதாவது இடத்தை select செய்து, அங்கு ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைத்து, வட சென்னை மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

விகடன் குழுமத்தால் நடத்தப்படும் பத்திரிகை பசுமை விகடன். அதன் சந்தாதாரர் நான். ஏறத்தாழ 10 ஆண்டுக்காலமாக அந்தப் பத்திரிகையை நான் வாங்கிப் படித்துவருகிறேன். சாதாரண விவசாயியைக்கூட ஊக்குவிக்கின்ற அளவிற்கு அந்தப் 'பசுமை விகடன்' பிரமாதமாக இருக்கின்றது. அதனை அனைத்து நூலகங்களிலும், ஊராட்சி நூலகங்களிலும் அளிப்பதற்கும், அனைத்து மக்களும் அதனைப் பார்க்கும் விதத்திலும் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். படித்ததாகப் பதிவு செய்துகொள்கிறேன்.

பிற்பகல் 1–20

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாங்காய் சாகுபடி. அனைத்துப் பயிர்களுக்கும் insurance இருக்கிறது, மாங்காய் சாகுபடிக்கு insurance இல்லை. 8 மாதங்கள் கஷ்டப்பட்டு, கடைசியாக ஒரு புயல் வந்தால், விவசாயிகள் காப்பாற்றிய மாங்காய் எல்லாம் கீழே விழுந்து கிடக்கிறது. விவசாயிக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை, நிராயுதபாணியாக இருக்கிறார்கள்; கடன்காரர்களாகி விடுகிறார்கள். ஆனால், அதற்கு insurance இல்லை. நம்முடைய மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். அதற்கு கட்டாயமாக, ஏறக்குறைய 6.5 சதவிகிதம் இந்தியாவிலே நம்முடைய மாநிலத்தினுடைய பங்களிப்பு இருக்கின்றது. இங்கிருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் மா மகசூல் இருக்கிறது. ஏறக்குறைய 3 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் விவசாயம் செய்கின்றார்கள். ஆகவே, தயவுசெய்து, நம்முடைய வேளாண்மை –உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசனை செய்து, மா மகசூலுக்கு insurance நிச்சயமாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: எனது தொகுதிக் கோரிக்கைகளை நான் படித்ததாக நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மாதவரம் தொகுதி, கொல்கத்தா நெடுஞ்சாலை, மாதவரம் பைபாஸ் முதல் காரனோடை வரை உயர்மட்ட மேம்பாலப் பணியைத் துவங்கிடவும், மாதவரம் தொகுதி, சேவை சாலையில் ரெட்டேரி முதல் எம்.எப்.எல். சந்திப்பு வரை மணலி புதுநகர் வழியாக நாப்பாளையம் வரை ஆக்கிரமிப்புகளை அகற்றி, போக்குவரத்தையும், சாலையையும் சீர் செய்யவும், செங்குன்றம் பேரூராட்சி, கிராம நத்தம் சர்வே எண் 84/1A, 84/1B, 84/2–ல் 9.18 ஹெக்டர் நிலத்தில் வசிக்கும் 500 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்குன்றம் பேரூராட்சியை, நகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும் அல்லது சென்னை மாநகராட்சியோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர், விஜயநல்லூர், அலமாதி ஊராட்சிகளைத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் தொகுதி, சென்னை மாநகராட்சிப் பகுதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரி தாலுகா, சோழவரம் பிர்க்கா, செங்குன்றம் பிர்க்கா, ஞாயிறு பிர்க்கா, ஆவடி தாலுகா, வெள்ளானூர் பிர்க்கா, மோரை பிர்க்கா ஆகியவற்றை உள்ளடக்கி புதிய தாலுகா அமைக்கவும், மாதவரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பொன்னேரி, கும்மிடிப்பூண்டி உள்ளடக்கி புதிய மாவட்டம் உருவாக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியத்தில் 10 ஊராட்சிகளில் வீடு கட்டி குடியிருக்கும் பகுதிகள் நீர்ப் பிடிப்புப் பகுதியாக உள்ளன. இதனால் ஊராட்சிகளுக்கு வரி இழப்பு ஏற்படுகிறது; அடிப்படை வசதிகள்கூட செய்வதற்கு ஊராட்சி

வருவாய் இல்லாமல் சவாலாக உள்ளது. எனவே, நீர்ப் பிடிப்புப் பகுதி என உள்ளதை இரத்து செய்து, அரசுக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் தொகுதி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் தொகுதி, வார்டு–17, கொசப்பூர் கிராமம், விவசாய களம் 2 ஏக்கர், தனி நபர் ஆக்கிரமிப்பில் உள்ளதை மீட்டு, விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் புறநகர் பகுதி, மாதவரம் தாலுகா, மாத்தூர், மஞ்சம்பாக்கம், கொசப்பூர், வடபெரும்பாக்கம், புழல், காவாங்கரை உள்ளிட்ட பகுதிகள் சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் அரசு சொத்துகளை பல நூறு கோடி ரூபாய்க்கு போலி பத்திரங்கள் தயார் செய்து, விற்பனை செய்யப்பட்டுள்ள நிலங்களைக் கணக்கிட்டு, ஆய்வு செய்து, மீட்டு அரசு கணக்கில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி, திருவொற்றியூர் தொகுதி, பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்குக் கட்டட வசதி அல்லது இடவசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறை, மீன்வளத் துறை, பால்வளத் துறை ஆகியவற்றில் தினக் கூலி அடிப்படையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. செங்குன்றம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம், மெட்ரோ வாட்டர் பைப் லைன் இணைப்பு அமைக்கவும், கனரக வாகனங்கள் நிறுத்தும் நிலையம் அமைக்கவும், பழுதடைந்த சாலைகளைச் சீரமைத்திடவும், சோத்துப்பெரும்பாக்கம் சாலையில் உயர்மட்ட மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வாகன உதிரி பாகங்கள் விற்பனைத் தொழில் செய்ய இட வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புழல் ஏரி மதகுக்கு எதிரில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் பூங்காவுடன்கூடிய நடைப்பயிற்சி மேடை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 16–வது வார்டு, எலந்தனூர் சர்வே எண் 12/10–ல் சிறுவர் பூங்கா அமைத்திடவும், மழைநீர் வடிகால்வாய் வசதி ஏற்படுத்திடவும், வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு வழங்கிடவும், பூங்காக்கள் இல்லாத ஊர்களில் பூங்காக்கள் அமைத்திடவும், திருவள்ளுவர் சிலை அருகில் உயர்கோபுர மின் விளக்கு அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 17–வது வார்டு, வடபெரும்பாக்கத்தில் பாதாள சாக்கடை, மழைநீர் கால்வாய், கழிவு நீர்க் கால்வாய், மெட்ரோ வாட்டர் இணைப்பு போன்றவை அமைத்திடவும், யூனியன் சாலையில் துணை மின் நிலையம் அமைத்திடவும், ஆட்டோ ஸ்டாண்ட் பகுதியில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்திடவும், சமுதாயக் கூடத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், அனுமதி இல்லாத தொழிற்சாலைகளை அகற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 19–வது வார்டு, சின்ன மாத்தூர் மயானத்திற்குப் புதிய சாலை வசதி ஏற்படுத்தித்தரவும், CPCL மின்சார மயானத்தின் அருகில் குப்பைகள் எரிக்கப்படுவதை நிறுத்திடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எம்.டி.ஏ. சர்வே எண் 14–ல் அடக்கஸ்தல இடத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவும், 59–வது தெருவில் உள்ள சி.எம்.டி.ஏ. மழலையர் பள்ளிக் கட்டடத்தைச் செயல்படுத்திடவும், 19–வது வார்டில் நியாய விலைக் கடை கட்டடத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரவும் கேட்டுக்கொள்கிறேன்.

மஞ்சம்பாக்கம் மயானத்திற்குச் சாலை வசதி, சுற்றுச் சுவர், ஆழ்துளைக் கிணறு, புதிய எரிமேடை ஆகியவற்றை அமைத்திடவும், தெருக்களில் சுற்றித்திரியும் தெரு நாய்கள் மற்றும் கால்நடைகளை அகற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புர மருத்துவமனை அருகில் உள்ள குப்பைக் கிடங்கை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்திடவும், 200 அடி சாலையில் வாகனங்கள்மூலம் கழிவுநீர் கொண்டு வந்து கொட்டுவதைத் தடுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எம்.டி.ஏ. 1–வது சாலையில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்திடவும், 2–வது சாலையில் பயணிகள் நிழற்குடை அமைத்திடவும், சமுதாய கூடத்தை சீரமைத்திடவும், அருளானந்தம் நகரில் காரிய மேடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாத்தூர் 2 ஆம் பகுதியில் காரியக் கூடம் அமைத்திடவும், மாத்தூர், காமராஜர் சாலையில் உள்ள ஏரியினை ஆழப்படுத்தி, நடைமேடை அமைத்து, படகு சவாரி அமைத்திடவும், தேவையான இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும், திடீர் நகர் பகுதியில் தெரு விளக்கு, சாலை வசதி ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எம்.டி.ஏ. LIG 1-ன் எதிரில் குடிநீர்க் குழாய் அமைத்திடவும், மஞ்சம்பாக்கம் பகுதியில் கனரக வாகனங்கள் நிறுத்துவதற்கு நிலம் வழங்கிய உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிடவும், 19–வது வார்டில் பொது மார்க்கெட் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 23–வது வார்டில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை, கழிவு நீர்க் கால்வாய், மழைநீர்க் கால்வாய், மெட்ரோ வாட்டர் பைப் லைன் இணைப்பு வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பாலாஜி நகரில் விளையாட்டு திடல் அமைத்திடவும், திடக் கழிவுகளைப் பிரிக்கும் மையத்தை மக்கள் இல்லாத பகுதிக்கு மாற்றிடவும், தமிழன் நகரில் கைப்பந்துத் திடல் அமைத்திடவும், அரசு ஆக்கிரமிப்பு இடத்தை மீட்டு அரசுடைமை ஆக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சிவன் கோயில் எதிரில் காரிய மேடை அமைத்திடவும், ESI அருகில் பயணியர் நிழற்குடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

தேவையான இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும், காவாங்கரை மீன் மார்க்கெட்டை வேறு இடத்திற்கு இடமாற்றம்

செய்திடவும், முகில் நகரில் தார்ச் சாலையில் தனி நபர் ஆக்கிரமிப்பை மீட்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

சர்வே எண் 582/214 அகதிகளுக்கு வழங்கப்பட்ட இடம் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளதை மீட்டு, பூங்கா அமைத்திடவும், குரு சாந்தி நகரில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள 25 சென்ட் நிலத்தை மீட்டு, கைப்பந்து விளையாட்டுத் திடல் அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளி நடைமேடை தனிநபர் ஆக்கிரமிப்பில் உள்ளதை அகற்றிடவும், ரெட்டைமலை சீனிவாச பூங்காவில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி, சிறுவர்களுக்கு விளையாடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தித்தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீர் வடிகால்வாய்க்கள்மீது சிமென்ட் மேல்மூடி அமைத்திடவும், திரு.வி.க. தெருவில் உள்ள மழைநீர் ஓடையைச் சீரமைத்து, இரு புறமும் சிமென்ட் கரை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 24-வது வார்டில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை, மழைநீர்க் கால்வாய், கழிவுநீர்க் கால்வாய், மெட்ரோ வாட்டர் பைப்லைன் இணைப்பு, கால்பந்து விளையாட்டு திடல் அருகில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 25-வது வார்டில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை, மழைநீர்க் கால்வாய், கழிவுநீர்க் கால்வாய், மெட்ரோ வாட்டர் பைப்லைன் இணைப்பு வழங்கிடவும், ராஜாஜி நகரில் உள்ள அங்கன்வாடி மையத்தைச் சீரமைத்திடவும், தேவையான இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும், பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் தொட்டிகளைச் சீரமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா தெரு, ராஜாஜி தெருவில் கைப் பம்பு அமைத்திடவும், பாரதியார் தெருவில் உள்ள குளத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரிடவும், நடுநிலைப் பள்ளி கட்டடங்களைச் சீரமைத்திடவும், வி.ஆர்.டி. நகரில் மழைநீர் வடிகால்வாய், சீத்தாபதி தெருவில் கழிவுநீர் இணைப்பு வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

தேவையான இடங்களில் தெரு விளக்குகள், புதிய மின் கம்பங்கள் அமைத்திடவும், நிலத்தடி கேபிள் (புதை மின் வழித்தடம்) அமைத்திடவும், சாலையோர தள ஓடு நடைபாதைத் திட்டம், உடற்பயிற்சி மையம், தியானக் கூடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 26-வது வார்டில் நிலத்தடி நீர் திருட்டைத் தடுத்திட வேண்டுமென்றும், ஆடிட்டோரியம், விளையாட்டு மைதானம், நவீன ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அமைத்திடவும், 4 நியாய விலை கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

அசிசி நகரில் குழந்தைகள் பூங்கா அமைத்திடவும், ஜே.ஜே. நகரில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள நிலத்தை மீட்டு, நடைபாதையுடன்கூடிய பூங்கா அமைத்திடவும், கழிவுநீர்க் கால்வாய்கள்மீது மூடிஅமைத்திடவும், மயானத்தைச் சீரமைத்திடவும், குழந்தைகள் காப்பகம் அமைத்திடவும், நவீன நூலகம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வேணு நகரில் நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம் அமைத்திடவும், மந்தைவெளி மற்றும் தெலுங்கு காலனியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கிடவும், பழுதடைந்துள்ள ஆழ்துளைக் கிணறுகளைச் சீரமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டு மைதானத்தில் கழிவறை கட்டடம் கட்டவும். உடற்பயிற்சிக் கூடம் அமைத்திடவும், தேவையான இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும், பழுதடைந்துள்ள ஆழ்துளைக் கிணற்றை சீரமைத்திடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 27-வது வார்டில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் கலைஞர் பெயரை சூட்ட வேண்டுமென்றும், புதிய தெரு விளக்குகள் 250 இடங்களில் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பேங்க் காலனியில் இயங்காமல் இருக்கும் நூலகத்தை வேறு இடத்திற்கு மாற்றிடவும், சிறுவர் விளையாட்டுத் திடலை சீரமைத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், விடுபட்ட பகுதிகளில் மெட்ரோ வாட்டர் பைப் லைன் இணைப்பு 2500 மீட்டர் அமைத்து குடிநீர் வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

240 தெருக்களில் 38,405 மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்திடவும், 25 இடங்களில் கை பம்பு அமைத்திடவும், உபயோகப்படுத்தமுடியாத நிலையில் இருக்கும் 6.520 மீட்டர் சாலையைத் தரமான சாலையாக மாற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

குமரன் நகர், ராஜேஸ்வரி நகர் சாலைப் பகுதிகளில் குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி ஏற்படுத்திடவும், சாஸ்திரி நகர், திரு.வி.க. நகரில் கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 28 மற்றும் 29-வது வார்டுகளில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை, மழைநீர்க் கால்வாய், கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும், மெட்ரோ வாட்டர் பைப்லைன் இணைப்பு வழங்கிடவும், புதிய சாலை வசதி ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

KPA Dhall Mill தொழிற்சாலைப் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர்க் கால்வாய் இணைப்பு, தெரு விளக்கு வசதி, சாலை வசதி ஏற்படுத்திடவும், குளப்பன் குளம் பணியினை முழுமையாக நிறைவேற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 29-வது வார்டில் மழைநீர், கழிவுநீர் வடிகால்வாய்மீது மூடி அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

தணிகாசலம் நகரில் 80 அடி சாலையில் பேருந்து நிறுத்தம் அமைத்திடவும், பொன்னியம்மன்மேடு பகுதி மயானத்தில் மின்சார தகன எரிமேடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஷெல் பெட்ரோல் பங்க் எதிரில் போக்குவரத்து சிக்னல் அமைத்திடவும், சாஸ்திரி நகர், பிரகாஷ் நகர் சாலைகளை இணைத்து விரிவாக்கம் செய்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 80, 31, 92 மற்றும் 33-வது வார்டுகளில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை, மழைநீர் கால்வாய், கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும், மெட்ரோ வாட்டர் பைப்லைன் இணைப்பு வழங்கிடவும், தேவையான இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும், தெரு விளக்கு அமைத்திடவும், மழைநீர் சாலைகளில் தேங்காமல் சீரமைத்திடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 31-வது வார்டில், பழுதடைந்த நிலையில் உள்ள குழாய்களை சீரமைத்து, தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்கிடவும், பூங்காவில் சேதமடைந்துள்ள விளையாட்டுப் பொருட்களை சீரமைத்திடவும், கேட்டுக்கொள்கிறேன்.

பிரிட்டானியா நகரில் பழைய சாலைகளைச் சீரமைத்திட வேண்டுமென்றும், செந்தில் நகர் பிளாட் எண் 86-ல் உள்ள கிணற்றை மூடிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மயானத்தில் சாலை வசதி, தண்ணீர் வசதி, கழிப்பறை வசதி அமைத்திடவும், தெருக்களில் அடிக்கடி கழிவுநீர் நிரம்பி வழிவதைச் சீரமைத்திடவும், நூலகத்தினைச் சீரமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணடி பகுதியில் குடிநீர்த் தொட்டிக்கு மேல்மூடி அமைத்திடவும், சமுதாயக் கூடம் அமைத்திடவும், குமரன் தெருவில் கோயில் எதிரில் காரியக் கூடம், கழிப்பிடக் கட்டடம் அமைத்திடவும், மாதவரம் தொகுதி சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகள் மற்றும் செங்குன்றம் பேரூராட்சியில் கூடுதலாக இ-சேவை மையங்கள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 39-வது வார்டில் சர்வே எண் 4071/104 நாபா சிலம்போர்டு குடியிருப்புக் கட்டடங்களை தற்போது வசிக்கும் நபர்களின் பெயரில் ஒதுக்கீடு செய்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சியின் நீர்ப் பிடிப்புப் பகுதியில் வீடு கட்டி குடியிருக்கும் மக்களுக்கு CMDA approval வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வி துறை: சென்னை மாநகராட்சி, 16-வது வார்டில் அரசு உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், நூலகக் கட்டடம், சுற்றுச் சுவர், அறிவியல் ஆய்வகம் அமைத்திடவும், நடுநிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் சீரமைத்திடவும், அரசுப் பள்ளிகள் அனைத்திலும் வர்ணம் பூசி சுவர்களில் படங்களை வரைந்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 19-வது வார்டு, மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர், விளையாட்டு மைதானம் அமைத்திடவும், 26-வது வார்டில் ஜெயகோபால் கரோடியா

அரசு உயர்நிலைப் பள்ளியில் பழுதடைந்துள்ள கட்டடங்களை அகற்றி, புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள இடத்தில் விளையாட்டு மைதானம் அமைத்திடவும், 400 மாணவர்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்திடவும், நடுநிலைப் பள்ளியில் காலி இடத்தில் விளையாட்டு மைதானம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 27-வது வார்டு, அரசு ஆரம்பப் பள்ளியைத் தரமுயர்த்திடவும், பால்பண்ணை இடத்தில் புதிதாக அரசு மேல்நிலைப் பள்ளி அமைத்திடவும், 30-வது வார்டு, அரசு தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கழிவறைக் கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, அரசு துவக்கப் பள்ளியில் புதிய கட்டடம் அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், அலமாதி ஊராட்சி, அரசு துவக்கப் பள்ளியில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைத்திடவும், அரசு உயர்நிலை பள்ளியில் நான்கு புதிய வகுப்பறைகள், சத்துணவுக் கூடம், சுற்றுச் சுவர் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சி, வீராபுரம், அரசு உயர்நிலைப் பள்ளியைத் தரமுயர்த்திடவும், பாண்டேஸ்வரம் ஊராட்சி, அரசு ஆரம்பப் பள்ளிக்கு desk, bench வழங்கிடவும், அரசு ஆரம்பப் பள்ளி வகுப்பறை தரை தளத்தை உயர்த்திடவும், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு desk, bench, internet வசதி வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் ஏற்படுத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு ஊராட்சி, அரசு துவக்கப் பள்ளியை இடமாற்றம் செய்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பம்மதுகுளம் ஊராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 800 desk, bench வழங்கிடவும், பள்ளி ஆய்வகத்திற்கு உபகரணங்கள் வழங்கிடவும், ஆசிரியர்களுக்கு மேஜை, நாற்காலி வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியைத் தரமுயர்த்திடவும், அரசு நடுநிலைப் பள்ளியைத் தரமுயர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், தீர்த்தகிரியம்பட்டு ஊராட்சி, நடுநிலைப் பள்ளியில் 13 வகுப்பறைகள் ஏற்படுத்திடவும், புழல் ஒன்றியம், வடகரை ஊராட்சி, ஆதி திராவிடர் நலப் பள்ளியில் கணினி பாடப் பயிற்சி மையம், பொது நூலகம் அமைத்திடவும், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சி, நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், desk, bench வசதிகள் ஏற்படுத்திடவும், கழிப்பிடக் கட்டடம் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத் துறை: சென்னை மாநகராட்சி, 16-வது வார்டு, கன்னியம்மன்பேட்டையில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்திடவும், 23-வது வார்டு, சக்திவேல் நகரில் அங்கன்வாடி மையம் அமைத்திடவும், 24-வது வார்டில் அங்கன்வாடிக்கு புதிய கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பத்மாவதி நகர், 7-வது தெருவில் புதிய அங்கன்வாடி (எண் 33603140213) கட்டடம் அமைத்திடவும், சென்னை மாநகராட்சி, 30-வது வார்டு, தேவகி நகரில் அங்கன்வாடி மையம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 38-வது வார்டு, சர்வே எண் 4071/104-ல் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், ஆங்காடு ஊராட்சி, காலனியில் அங்கன்வாடி மையம் மற்றும் சுற்றுச் சுவர் அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, ஸ்ரீநாகாத்தம்மன் நகரில் அங்கன்வாடி மையம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், கும்மனூர், புதிய எருமைவெட்டிபாளையம் மற்றும் பழைய எருமைவெட்டிபாளையம் ஊராட்சிகளில் புதிய அங்கன்வாடி மையங்கள் அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி மற்றும் பம்மதுகுளம் ஊராட்சிகளில் புதிய அங்கன்வாடி மையங்கள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து துறை: சென்னை மாநகராட்சி, 16-வது வார்டில் இடைநிறுத்தம் செய்யப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கிடவும்,

மணலி புதுநகர், அய்யா கோயில் எதிரில் காலி இடத்தில் பேருந்துப் பணிமனை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 17–வது வார்டு, வடபெரும்பாக்கத்திலிருந்து மாதவரம் பேருந்து நிலையத்திற்குச் சிற்றுந்து இயக்கிடவும், 23–வது வார்டு மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் சென்று வரும் வகையில் சிற்றுந்து இயக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 25–வது வார்டு, மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கிடவும், பேருந்துப் போக்குவரத்து வசதி இல்லாத இடத்தில் சிற்றுந்து இயக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 26–வது வார்டில் பேருந்துகள் இயக்கப்படாத இடங்களில் புதிய வழித்தடத்தில் சிற்றுந்துகள் இயக்கிடவும், அகர்சன் கல்லூரி முதல் பெரம்பூர் வரை கூடுதலாக 3 சிற்றுந்துகள் இயக்கிடவும், 28–வது வார்டு, மூலக்கடையிலிருந்து மாதவரம் பேருந்து நிலையம் வழியாக மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சிற்றுந்து இயக்கிடவும், 29–வது வார்டு, சாஸ்திரி நகர் முதல் கொளத்தூர் வரை சிற்றுந்து இயக்கிடவும், 92–வது வார்டு, தடம் எண் 420 பேருந்தை கூடுதலாக இயக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மேட்டு சூரப்பட்டிலிருந்து செல்லும் தடம் எண் 5711 விரைவு பேருந்தை சாதாரண பேருந்தாக இயக்கிடவும், வேட்டைக்காரன்பாளையம் வழித்தடத்தில் சிற்றுந்து இயக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு ஊராட்சியிலிருந்து ஆவடி வரை சிற்றுந்து இயக்கிடவும், புழல் ஒன்றியம், கிராண்ட்லைன் ஊராட்சி சோழன் நகர் வழியாக சிற்றுந்து இயக்கிடவும், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சி, விளாங்காடுபாக்கம் வழியாக சிற்றுந்து இயக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதித் துறை: சென்னை மாநகராட்சி, 19–வது வார்டு, எம்.எம்.டி.ஏ.–வில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை, சென்னை மாநகராட்சி நிருவாகத்திடம்

ஒப்படைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சி.எம்.டி.ஏ. குடியிருப்புகளைச் சீரமைத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், சி.எம்.டி.ஏ. கட்டுப்பாட்டிலுள்ள பழுதடைந்து, பயனற்ற நிலையில் இருக்கும் கட்டடங்களை அகற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை: சென்னை மாநகராட்சி, 16–வது வார்டு, கன்னியம்மன்பேட்டையில் ஆரம்ப சுகாதார வளாகம் அமைத்திடவும், 19–வது வார்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 25–வது வார்டு, புக்ராஜ் நகர், முருகன் கோயில் அருகில் உள்ள இடத்தில் அரசு கண் மருத்துவமனை அமைத்திடவும், 26–வது வார்டு அரசு மருத்துவமனையில் இரவுக் காவலாளிகளை நியமித்திடவும், அரசு மருத்துவமனையில் புதர்களை அகற்றி, குடிநீர் வசதி, சித்த மருத்துவ மூலிகைத் தோட்டத்திற்குத் தண்ணீர் வசதி அளித்திடவும், 27–வது வார்டு, பால் பண்ணைக்குச் சொந்தமான இடத்தில் செவிலியர் கல்லூரி அமைத்திடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, ஆட்டந்தாங்கல் கிராமத்தில் மாதந்தோறும் பரிசோதனை செய்யும் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தனியறை அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், கும்மனூர் ஊராட்சியில் துணை சுகாதார மையம் அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி ஊராட்சி, கதவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவத்திற்கு 20 படுக்கைகளுடன்கூடிய கட்டட வசதி அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், கரலபாக்கம் ஊராட்சியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடவும், புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை: சென்னை மாநகராட்சி, 16–வது வார்டு, கொசஸ்தலை ஆற்றில் கடல் நீர் புகாமல் புதிய தடுப்பணை அமைத்திடவும், 17–வது வார்டில் புழல் உபரிநீர்க்

கால்வாயின்மீது அமைக்கப்பட்டுள்ள பாலத்தினைத் திறந்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 23-வது வார்டு, புழல் உபரி நீர்க் கால்வாயினை 5 அடி உயரமாக உயர்த்திடவும், 27-வது வார்டு, பால் பண்ணை ஏரியைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, கரை அமைத்து, நடைபாதை ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பால் பண்ணை ஏரிக்கும் மாத்தூர் ஏரிக்கும் இடையில் உயர்மட்டப் பாலம் அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், புதிய எருமைவெட்டிபாளையம் ஊராட்சியில் கால்வாய்மீது பாலம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறை: சென்னை மாநகராட்சி, 17-வது வார்டு, வடபெரும்பாக்கத்தில் பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்றிடவும், 19-வது வார்டில் புதிய நியாய விலைக் கடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எம்.டி.ஏ.-வில் உள்ள 02NE1078 நியாய விலைக் கடையைப் பிரித்து, 59-வது வார்டில் செயல்படாத மழலையர் பள்ளிக் கட்டடத்தில் (R80)-ல் அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 29-வது வார்டில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்திடவும், 25-வது வார்டு, அலெக்ஸ் நகர், A காலனியில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து, B காலனியில் புதிய கடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், சோழவரம் ஊராட்சியில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், கும்மனூர் ஊராட்சியில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பாண்டேஸ்வரம் மற்றும் பம்மதுகுளம் ஊராட்சிகளில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு மற்றும் அரக்கம்பாக்கம் ஊராட்சிகளில் புதிய நியாய விலைக் கடைகள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், சரத்கண்டிகை நியாய விலைக் கடை எண் 021F035NT-ல் 1925 குடும்ப அட்டைகள் உள்ளன. இதை

இரண்டு கடைகளாகப் பிரித்து அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், புள்ளிகலை மற்றும் அழிஞ்சிவாக்கம் ஊராட்சிகளில் உள்ள நியாய விலை கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை: சென்னை மாநகராட்சி, 17–வது வார்டு, சின்னதோப்பு பகுதியில் சர்வே எண்கள் 21, 35, 56–ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதை அரசாங்க கணக்கில் மாற்றம் செய்திடவும், கொசப்பூர் கிராமத்தில் விவசாய களம் 2 ஏக்கர் நிலம் தனி நபர் ஆக்கிரமிப்பில் உள்ளதை மீட்டு, விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 19–வது வார்டு, பொன்னியம்மன் நகர் மற்றும் மாத்தூர் கிராம நத்தத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 23–வது வார்டு, ஆதி திராவிடர் மக்களுக்குப் பட்டா வழங்கிடவும், 26–வது வார்டில் சிறப்பு முகாம்கள் நடத்தி ஆன்லைன் பட்டா வழங்கிடவும், இடைமா நகர் மற்றும் மண்ணடி தெரு பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 28–வது வார்டில், வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கிடவும், சென்னை மாநகராட்சி, 29–வது வார்டு, மூலக்கடை, பெரியார் நகரில் 50 வருடங்களுக்கு மேலாக வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

செல்வம் நகரில், ஆர்.சி. அப்பார்ட்மென்ட் எதிரில் உள்ள காலி இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடவும், சென்னை மாநகராட்சி, 30–வது வார்டில் பட்டா வழங்கப்படாதவர்களுக்குப் பட்டா வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, நீர்வரத்துக் கால்வாயில் ஆக்கிரமிப்பில் உள்ள அரசு நிலத்தினை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், நல்லூர் மற்றும் அலமாதி ஊராட்சிகளில் புஞ்சை நிலம் இராணுவத்திற்குச் சொந்தமான

இடம் என தவறாகக் குறிப்பிட்டு, பத்திரப் பதிவுக்குத் தடை செய்யப்பட்டுள்ளதை நீக்கிடவும், சோழவரம் ஒன்றியம், காரனோடை ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், பூதூர் ஊராட்சியில் அமைந்துள்ள குளம் தனி நபர் ஆக்கிரமிப்பில் உள்ளதை மீட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சி, புதிய கன்னியம்மன் நகர், பழைய கன்னியம்மன் பகுதி, அண்ணா நகர், ஜே.ஜே. நகர், நாகாத்தம்மன் நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்கிடவும், மலைக் குறவர் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சியில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்களை மீட்டு, ஊராட்சியிடம் ஒப்படைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு மற்றும் அரக்கம்பாக்கம் ஊராட்சிகளில் பட்டா வழங்கிடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பம்மதுகுளம் ஊராட்சியில் புஞ்சை நிலம் இராணுவத்திற்குச் சொந்தமான இடம் என தவறாகக் குறிப்பிட்டு பத்திரப் பதிவுக்குத் தடை செய்யப்பட்டுள்ளதை நீக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் ஆதி திராவிடர் மக்களுக்கு 307 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது. இப்பட்டாவை ஆன்லைனில் பதிவேற்றம் செய்திடவும், தரிசு நிலங்களில் வீடு கட்டி 30 வருடங்களுக்கு மேலாகக் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், தீர்த்தகிரியம்பட்டு ஊராட்சி, பட்டா வழங்கிடவும், புழல் ஒன்றியம், கிராண்ட்லைன் ஊராட்சியில் விடுபட்டுள்ள மக்களுக்கு கிராம நத்தம் பட்டா வழங்கிடவும், புழல் ஒன்றியம், புள்ளிலைன் 740 அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை: சென்னை மாநகராட்சி, 17-வது வார்டில் காவல் உதவி மையம் அமைத்திடவும், புதிய காவல் நிலையம்

ஏற்படுத்திடவும், 19–வது வார்டு, மஞ்சம்பாக்கம் 200 அடி சாலையில், போக்குவரத்து காவலர்களை நியமித்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி, 23–வது வார்டு, காவாங்கரை சிக்னலில் போக்குவரத்துக் காவலர்களை நியமித்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு ஊராட்சி, முத்தாபுதுப்பேட்டையில் உள்ள காவல் நிலையத்தை இடமாற்றம் செய்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நலத் துறை: சென்னை மாநகராட்சி. 17–வது வார்டு, 19–வது வார்டில் இஸ்லாமிய மக்களுக்கு அடக்கஸ்தலம் அமைத்திடவும், 23–வது வார்டு, KSK நகரில் இஸ்லாமியர்களுக்கு இடுகாடு வசதி ஏற்படுத்திடவும், 32–வது வார்டில் இஸ்லாமியர் அடக்கஸ்தலத்தில் சுற்றுச் சுவர், சாலை வசதி, தண்ணீர் வசதி ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

எரிசக்தித் துறை: சென்னை மாநகராட்சி. 19–வது வார்டு, சின்னமாத்தூர், பாரதியார் தெருவில் உள்ள மின் மாற்றியை மாற்றியமைத்திடவும், 26–வது வார்டு, மந்தைவெளியில் தாழ்வாகச் செல்லும் மின் கம்பிகளைச் சீரமைத்திடவும், 31–வது வார்டில் புதைவட மின் கேபிள் உள்ள இடங்களில் மின் கம்பங்களை அகற்றிடவும், மின் கம்பங்களில் தாழ்வாகச் செல்லும் மின் கம்பிகளை சீரமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பாண்டேஸ்வரம் ஊராட்சி, கலைஞர் நகரில் புதிய மின் கம்பங்கள் அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பம்மதுகுளம் ஊராட்சியில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களை மாற்றி, புதிய மின் கம்பங்கள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் புதிய மின்மாற்றி அமைத்திடவும், புழல் ஒன்றியம், கிராண்ட்லைன் ஊராட்சி மின் வாரிய அலுவலகத்தைப் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திடவும், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை: சென்னை மாநகராட்சி 23–வது வார்டில் சிவன் கோயில் எதிரில் திருமண மண்டபம் அமைத்திடவும், சொர்ணாம்பிகை கோயில் அருகில் ஈமச்

சடங்கு செய்ய உத்திர கிரியை மண்டபம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

உயர் கல்வித் துறை: சென்னை மாநகராட்சி, 23–வது வார்டில் அரசு தரிசு நிலத்தில் பாலிடெக்னிக் விளையாட்டுத் திடல் அமைத்திடவும், 26–வது வார்டில் பால் பண்ணைக்குச் சொந்தமான நிலத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைத் துறை: சென்னை மாநகராட்சி, 23–வது வார்டு, புழல், மத்திய சிறைச்சாலைக் குடியிருப்பில் கைப்பந்து மற்றும் இறகுப் பந்து மைதானம் அமைத்திடவும், சிறுவர் பூங்காவைச் சீர் செய்து விளையாட்டு உபகரணங்கள் வழங்கிடவும், சிறைக்கு முன்பாக பொது மக்களுக்குக் கழிப்பறை வசதி ஏற்படுத்திடவும், 33–வது வார்டில் மகளிர் குழுக்களுக்கு மானிய முறையில் சிறு தொழில்கள் அமைத்துத் தந்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறை: சென்னை மாநகராட்சி 27–வது வார்டு, பத்மகிரி பகுதியிலிருந்து பால் பண்ணைக்குச் செல்லும் வழியில் அரசு அங்கீகாரம் பெற்ற மனை பிரிவுக்கு அருகில் பால் பண்ணை மெயின் ரோடுக்குச் செல்லும் வழித் தடத்தில் 500 மீட்டர் நீளம், 40 மீட்டர் அகலம் உள்ள இடத்தை பொது மக்களின் போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறை: சென்னை மாநகராட்சி. 27–வது வார்டு. மாதவரம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள கால்நடை பண்ணையில் பத்தாண்டுகளுக்கு மேலாக வேலை செய்யும் தினக்கூலி பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், புதிய எருமைவெட்டிபாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்திடவும், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சி, கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், கிராமங்களில் கால்நடைகள் வளர்ப்பு மற்றும் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், கால்நடைப் பண்ணைசார் தொழில்முனைவோர்களை உருவாக்கவும்,

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றினை நிறுவிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஊரகவளர்ச்சித் துறை: சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடவும், கால்வாய் மீது பாலம் அமைத்திடவும், பழுதடைந்துள்ள சாலைகளைச் சீரமைத்திடவும், பேருந்து நிலையத்தைச் சீரமைத்து, பேருந்துகள் இயக்கிடவும், மயானச் சாலைகளைச் சீரமைத்திடவும், நூலகக் கட்டடம் சீரமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், சர்வே எண் 850–ல் இயங்கும் எரியூட்டி நிறுவனம் கழிவுப் பொருட்களை எரிப்பதால் கிராம மக்கள் பாதிப்படைவதால், இந்த நிறுவனத்தை வேறு இடத்திற்கு மாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்வே எண் 150–ல் இயங்கும் பிளாஸ்டிக் கம்பெனி 8 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மீட்கவும், பாடியநல்லூர் ஊராட்சியைத் தரம் உயர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், ஆங்காடு ஊராட்சி, காலனி பகுதி, தோப்பு பகுதி பன்னீர்வாக்கம் பகுதி மற்றும் சிறுணியம் கிராமம் ஆகிய இடங்களில் மயான எரிமேடை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

பார்த்தசாரதி நகர், பெருமாள் கோயில் தெரு, பஜனைக் கோயில் தெரு, பள்ளி தெரு ஆகிய தெருக்களில் தார்ச்சாலை அமைத்திடவும், திருக்குளத்தைச் சுற்றி சிமென்ட் சாலை அமைத்திடவும், தேவையான இடங்களில் மெட்டல், தார், சிமெண்ட் சாலைகள் அமைத்திடவும், தேவையான இடங்களில் மெட்டல், தார், சிமென்ட் சாலைகள் அமைத்திடவும், செம்புலிவரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும், செங்காளம்மன் கோயில் எதிரில் வேகத் தடை அமைத்திடவும், பழுதடைந்துள்ள சாலைகளைச் சீரமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, சூரப்பட்டு குளத்தைத் தூர் வாரிட, முனீஸ்வரன் கோயில் சாலையைச் சீரமைத்திட, கழிவறையைத் திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென்றும், சோழவரம் ஒன்றியம், கும்மனூர் ஊராட்சி, மயானத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்திடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருமாள் கோயில் தெரு மற்றும் பாரதியார் தெருக்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும், சமுதாயக் கூடம் அமைத்திடவும், மயானப் பாதையில் தரைப் பாலம் அமைத்திடவும், தெருக்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சக்தி தெரு, அண்ணா நகர் மற்றும் அம்பேத்கர் நகர் ஆகியவற்றில் சிமெண்ட் சாலை அமைத்திடவும், ஊராட்சி மன்றத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், பழைய எருமைவெட்டிபாளையம் ஊராட்சியிலிருந்து அலமாதி ஊராட்சிக்குச் செல்லும் சாலையில் உள்ள கால்வாயில் பாலம் அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவரம் ஒன்றியம், காரனோடை ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைத்திடவும், பழுதடைந்துள்ள சாலைகளைச் சீரமைத்திடவும், உயர் கோபுர மின் விளக்கு அமைத்திடவும், GNT சாலை, பேருந்து நிலையம் அருகில் பொது கழிப்பிடக் கட்டடம் அமைத்திடவும், சோழவரம் ஒன்றியம், அலமாதி ஊராட்சியில் சாலையில் செல்லும் கால்வாய்மீது பாலம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சி சிமெண்ட் சாலை அமைத்திடவும், மழைநீர் தேங்குவதை வெளியேற்றும் வகையில், மழைநீர் வடிகால்வாய் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

திருமலை நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும், சமுதாயக் கூடம் அமைத்திடவும், உயர்கோபுர மின் விளக்கு அமைத்திடவும், புதிய கன்னியம்மன் நகரில் மழைநீர் வடிகால்வாய் அமைத்திடவும், கன்னியம்மன் நகரில் சமுதாய கூடம் அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், பாண்டேஸ்வரம் ஊராட்சி, காந்தி நகரில் எரிமேடையுடன்கூடிய மயானம் அமைத்திடவும், சமுதாயக் கூடம் அமைத்திடவும், அங்கன்வாடி மையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்திடவும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுது நீக்கிடவும், 150 தெரு விளக்குகள் அமைத்திடவும், நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சி, சிட்கோ நகரில் சாலைகளைச் சீரமைத்து, போக்குவரத்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திடவும், மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தோணி நகரில் உள்ள கெமிக்கல் கம்பெனியை வேறு இடத்திற்கு மாற்றிடவும், சிட்கோ நிறுவன இடத்தை ஊராட்சி மன்றப் பயன்பாட்டிற்கு வழங்கிடவும், சித்தேரிக் கரையின் அருகில் சாலை வசதி ஏற்படுத்திடவும், புதிய போர்வெல்கள் அமைத்து, குடிநீர்ப் பிரச்சினைகளைத்தீர்த்திடவும், செங்குன்றம் சாலையில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்திடவும், லட்சுமி அம்மன் கோயில் அருகில், ஓடையின் மேற்குப் பகுதியில் தடுப்புச் சுவர் ஏற்படுத்தித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பொத்தூர் ஊராட்சியில், தார்ச் சாலைகள் அமைக்கவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும், மயானம், ஊராட்சி மன்றம் மற்றும் சமுதாயக் கூடத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்திடவும், புதிய நியாய விலைக் கடை கட்டடம் அமைத்திடவும், மண் சாலைகளை மெட்டல் சாலைகளாக மாற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பாலவேடு ஊராட்சி, செல்லியம்மன் குளத்தை மேம்படுத்திடவும், புதிய சமுதாயக் கூடம் அமைத்திடவும், வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி ஊராட்சி, செல்லியம்மன் சாலையில் உள்ள கால்வாயின்மீது இரண்டு பாலங்கள் அமைத்திடவும், அண்ணா சமுதாயக் கூடக் கட்டடம் பழுதடைந்துள்ளதை அகற்றி புதிய கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்பாக்கம் காலனியில், கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும், தார்ச் சாலைகளைச் சீரமைத்திடவும், காரிய மேடை, மயான எரிமேடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், அரக்கம்பாக்கம் ஊராட்சி, வேட்டைக்காரன்பாளையம் மக்களுக்கு இடுகாடு, சுடுகாடு அமைத்திடவும், தார்ச் சாலைகளைச் சீரமைத்திடவும், பயணிகள் நிழற்குடை அமைத்திடவும், சமுதாயக் கூடத்தில் உணவருந்தும் கூடம் அமைத்திடவும், மழைநீர் தேங்கும் இடத்தில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், கரலபாக்கம் ஊராட்சியில் நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்திடவும், நூலகத்தை செயல்படுத்திடவும், ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு கட்டடம் அமைத்திடவும், மயானச் சாலையை மேம்படுத்தி நான்கு புதிய எரிமேடை நான்கு அமைத்திடவும், புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திடவும், உடற்பயிற்சிக் கூடம் அமைத்திடவும், சமுதாயக் கூடம் விரிவாக்கம் செய்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் ஒன்றியம், பம்மதுகுளம் ஊராட்சியில் தண்ணீர்த் தொட்டி பைப் லைன் விரிவாக்கம் செய்திடவும், மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றிடவும், புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்திடவும், சின்டெக்ஸ் டாங்க் அமைத்திடவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

கோணிமேடு பகுதியில் குடிநீர் பைப் லைன் அமைத்திடவும், சமுதாயக் கூடம் அமைத்திடவும், பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்திடவும், கோணிமேடு பகுதியில் பயணியர் நிழற்குடை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் அரசு குளத்தைத் தூர் வாரி நடைபாதை அமைத்திடவும், ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைத்திடவும், மயான எரிமேடையைச் சீரமைத்திடவும், கண்ணம்பாளையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும், பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலைகளைச் சீரமைத்திடவும், புதிய தார்ச் சாலைகளை அமைத்திடவும், பழுதடைந்துள்ள சமுதாயக் கூடத்தை அகற்றி புதிய சமுதாயக் கூடம் அமைத்திடவும், மண் சாலைகளை மெட்டல் சாலைகளாக அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், தீர்த்தகிரியம்பட்டு ஊராட்சி, சூளை குளம், அத்திவாக்கம் குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், விவேக்–அக்பர் பாதையில் பாலம் ஏற்படுத்திடவும், தெருக்கள்தோறும் கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும், கோட்டூர் பொது கழிப்பிடக் கட்டடம் அமைத்திடவும், புதியதாக சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

அத்திவாக்கம் கழிப்பிடக் கட்டடம் அமைத்திடவும், பழுதடைந்துள்ள நியாய விலைக் கடைக் கட்டடத்தை அகற்றி புதிய கட்டடம் அமைத்திடவும், கோயில்கள், மயானம், தெருக்களில்

சூரிய ஒளி மின் விளக்குகள் அமைத்திடவும், 11.2 மகளிர் கட்டடம் அருகில் புதர்களை அகற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், கிராண்ட்லைன் ஊராட்சியில் அனைத்துத் தெருக்களிலும் உள்ள கால்வாய் மற்றும் தெருச் சாலைகளை சீரமைத்திடவும், 35 தெருக்களில் சாலை வசதி ஏற்படுத்திடவும், தண்டல்கழனியில் பாதாள சாக்கடை அமைத்திடவும், காந்தி தெரு – கரிகால்சோழன் இணைப்புச் சாலையில் பாலம் கட்டித் தரவும், நூலகத்தைப் புதுப்பித்திடவும், வீடு இல்லாதவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தில் வீடு வழங்கிடவும், மழைநீர்க் கால்வாய் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும், உயர் கோபுர மின் விளக்கு அமைத்திடவும், பழுதடைந்துள்ள நூலகம் மற்றும் நியாய விலைக் கடை கட்டடங்களைச் சீரமைத்திடவும், விளையாட்டுப் பூங்காக்களைச் சீரமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திடவும், மண் சாலைகளை மெட்டல் சாலைகளாக மாற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், வடகரை ஊராட்சியில் சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள், கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்திடவும், குளத்தைச் சீரமைத்து சுற்றுச் சுவர் அமைத்திடவும், பாபா நகர், அம்பேத்கர் தெருவில் மழைக் காலங்களில் தேங்கும் மழை நீரினை புழல் ஏரி, உபரி நீர் கால்வாயில் வெளியேற்றிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், புள்ளிலைன் ஊராட்சிச் சாலைகள், தெரு விளக்குகள் மேம்படுத்திடவும், நான்கு மயானங்களைச் சீரமைத்திடவும், புதிய மயானம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

செல்லி குளத்தை தூர் வாரி மேம்படுத்திடவும், ஆட்டோ நகரம் அமைத்திடவும், பாதாள சாக்கடை அமைத்திடவும், ரங்கா கார்டனில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்திடவும், புதிய தார்ச் சாலை அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புழல் ஒன்றியம், சென்றம்பாக்கம் ஊராட்சியில் புதிய தார்ச் சாலைகள், சிமென்ட் சாலைகள், தெரு விளக்குகள் அமைத்திடவும், 7760 நகரில் சாலையை மேம்படுத்திடவும், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் பழுதடைந்துள்ள சமுதாயக் கூடத்தை சீரமைத்திடவும், பழுதடைந்துள்ள நூலகக் கட்டடத்தை அகற்றி, புதிய கட்டடம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தார்ச் சாலைகள், சிமெண்ட் சாலைகள், மெட்டல் சாலைகள், தெரு விளக்குகள் அமைத்திடவும், ஊராட்சி மக்களுக்குப் பொழுதுபோக்குப் பூங்காக்கள் அமைத்திடவும், குளங்கள், கால்வாய்கள் தூர்வாரி சுற்றுச் சுவர் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறை: சோழவரம் ஒன்றியம், எருமைவெட்டிபாளையம் ஊராட்சியில் 3 கி.மீ. தூரம் உள்ள வன சாலையை சீரமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை: வில்லிவாக்கம் ஒன்றியம், கரலபாக்கம் ஊராட்சி, கீழ்கொண்டையாரில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்திடவும், விவசாயிகளுக்கு சிமெண்ட் களம் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை: புழல் ஒன்றியம், புள்ளிலைன் ஊராட்சியில் ஹோலிசைல்ட் பள்ளி அருகில் சேவை சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் தொழில் நுட்பத்துறை: சோழவரம் ஒன்றியம், வில்லிவாக்கம் ஒன்றியம், புழல் ஒன்றியம், ஆகியவற்றில் கூடுதலாக இ-சேவை மையங்கள் அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

***திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன். நமது மக்கள் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களையும், இளைஞர்களின் எழுச்சி நாயகன் மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் அண்ணன் மாண்புமிகு திரு. K.K.S.S.R. அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களையும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை – உழவர் நலனுக்காகத் தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக தனி நிதிநிலை அறிக்கை அளித்து, உழவர்களின்

வாழ்க்கையில் ஒளியேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், விருதுநகர் சட்டமன்றத் தொகுதி விவசாயிகள் சார்பாகவும், தமிழக விவசாயிகளின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டு ரூ.33,000 கோடி ஒதுக்கீடு செய்து, உழவர் நலன் சார்ந்த அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, திட்டங்களைச் செயல்படுத்தவும், 10 ஆண்டுக்கால தொலைநோக்கின்படி கூடுதலாக 11.75 இலட்சம் ஹெக்டேர் பயிர் சாகுபடி கொண்டுவரவும், பாசனப் பரப்பினை 20 இலட்சம் ஹெக்டேராக உயர்த்தவும், ஆவன செய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே முன்னுதாரணமாக, விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தைச் செலவுகளைக் குறைத்து, உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்து, அதிக இலாபம் கிடைத்திட தமிழ்நாடு முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால், 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சிறப்புத் திட்டம் உழவர் சந்தைத் திட்டம். இலவசப் பேருந்து வசதி மற்றும் கட்டணமில்லா விற்பனை வசதி ஏற்படுத்தப்பட்டு, 180 உழவர் சந்தைகள் செயல்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக இத்திட்டத்தினைச் சரிவர செயல்படுத்தாதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.12.5 கோடியில் உழவர் சந்தைகளை மேம்படுத்த, நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், 10 புதிய உழவர் சந்தைகள் ரூ.5 கோடியில் அமைக்கப்பட இருக்கின்றன. இதன்மூலம் இந்த அரசு விவசாயிகளின் அரசு என்பதை அறிய முடிகிறது. இதற்காக விவசாயிகளின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறைக்கு அறிவுறுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின்கீழ் கலப்பின கறவை மாடுகள் மட்டுமே வழங்கும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் விரும்பும்பட்சத்தில் நாட்டுக் கறவை மாடுகளையும் வழங்கும் வகையில் திட்டத்தினை மாற்றியமைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதனால், நாட்டின மாடுகளின் இனப்பெருக்கம் அதிகமாவதுடன் அங்கக வேளாண்மைக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதால் இந்த மாற்றம் வேண்டப்படுகிறது. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறு, சிறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், மலர்கள் மற்றும் சிறிய அளவிலான இதர விளைபொருட்களை டி.வி.எஸ்.50 போன்ற இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்தி அருகில் உள்ள சந்தைக்குக் கொண்டு செல்கிறார்கள். மேலும், மூன்று மூட்டைகள்வரை உரங்கள், விதைகள் போன்ற வேளாண் இடுபொருட்களை வயலுக்குக் கொண்டுவரவும் இருசக்கர வாகனங்களையே பயன்படுத்துகின்றனர். தற்போது, எரிபொருள் விலை உச்சம் தொட்டுள்ள நிலையில் விளைபொருளில் கிடைக்கும் இலாபம் முழுவதும் எரிபொருளுக்கே செலவாகிவிடுகிறது. எனவே, தற்போது பேட்டரியால் இயங்கும் இருசக்கர வாகனங்களில் லோடு வண்டிகள் சில நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு (Hero Electric Bike) GST எண் கொண்ட சிறு வணிகர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் மட்டும் விற்கப்பட்டு வருகின்றன, விவசாயிகளுக்கு மறுக்கப்படுகிறது. எனவே, பேட்டரியால் இயங்கும் இருசக்கர லோடு வாகனங்களை விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 4.30 இலட்சம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து வருடத்திற்கு சுமார் 451 கோடி தென்னங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதிலிருந்து கிடைக்கும் தென்னை நார்க் கழிவுகளிலிருந்து

cocopeat போன்ற மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயார் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் அதன் பயன்பாடு குறைவாகவே உள்ளது. Cocopeat-ஐ நீண்டகாலப் பயிர்களுக்குப் பயன்படுத்தினால் நீர் மற்றும் உரச் சத்துக்கள் வீணாவது தடுக்கப்பட்டு, பயிருக்கு நீரும், உரமும் தொடர்ந்து கிடைக்கச் செய்வதுடன், மண்ணில் மண் புழு போன்ற நன்மை செய்யும் உயிரினங்களின் பெருக்கத்திற்கு உதவியாகவும் உள்ளது. இவ்வாறாக cocopeat போன்ற தென்னை நார்க் கழிவுகளின் பயன்பாட்டை அதிகரிக்க உரிய ஊக்கம் அளித்தால், நீர்த் தேவையினைக் குறைப்பதுடன் தென்னை சாகுபடி விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் cocopeat போன்ற நார், கழிவு நார் பயன்பாட்டினை அதிகரிக்க வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் விளைப்பொருட்களுக்குக் கூடுதல் விலை கிடைக்க வகை செய்ய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தொடங்குவதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. விவசாயிகள் இடுபொருட்களை மொத்த விலையில் கொள்முதல் செய்யவும், விளைப்பொருட்களை சில்லரை விலையில் விற்பனை செய்யவும் ஆவன செய்து, உற்பத்திச் செலவைக் குறைத்து, அதிக வருமானம் கிடைக்கச் செய்வதே உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் குறிக்கோளாகும். இதில் நியமனம் செய்யப்படும் முதன்மைச் செயல் அலுவலரின் வணிக நிபுணத்துவமே மேற்கண்ட குறிக்கோளை அடைவதற்கு முதன்மையானதாகும். மேலும், ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, முதன்மைச் செயல் அலுவலர்களாக நியமனம் செய்ய வேண்டி, வேளாண் சார்ந்த படிப்புகளில் பட்டம் பெற்றிருத்தல் ஒரு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, வேளாண் சார்ந்த பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்கள், வேளாண் வணிகத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும், வணிக நோக்கில் ஆர்வம் கொண்டவர்களாகவும் உள்ள வகையில் செறிவூட்டிய பாடத் திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் விவசாயிகளுக்கு அதிக உற்பத்திக்கான தொழில்நுட்பம் மற்றும் விளைப்பொருட்களுக்கு அதிக விலை என இரண்டு நன்மைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்துள்ளது. தமிழகத்தில் இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படவிருக்கின்றன. 2-வது மண்டலத்தில் தென் மாவட்டங்களான இராமநாதபுரம், விருதுநகர் வருகின்றன. தென் மாவட்டங்கள் வானம் பார்த்த பூமியாகவும், வறட்சி மிகுந்த மாவட்டங்களாகவும் உள்ளன. இம்மாவட்டங்களில் சிறுதானியப் பயிர்கள் அதிகமாக விளைவிக்கப்படுகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, ரூ.150 கோடி மானியத்தில் செயல்படுத்தப்படவுள்ள வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ், பாரம்பரிய சிறுதானியப் பயிர்களான குதிரைவாலி, சாமை, தினை, வரகு மற்றும் கேழ்வரகு ஆகியவற்றை அறுவடை செய்து, தானியங்களைப் பிரித்தெடுக்க, எளிய இயந்திரங்களை உருவாக்கி, விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய தலைமுறையினருக்கு விவரம் தெரிந்த வயதிலிருந்தே ஏதோ ஒரு வகையில் விவசாயம் அறிமுகமாகிவிடுவதால், விவசாயத்தின் முக்கியத்துவம் தெரிந்து, அதில் ஈடுபாடு இருந்தது. ஆனால், இன்றைய தலைமுறையினருக்கு அதற்கான சூழ்நிலையும், ஈடுபாடும் இல்லாததால் விவசாயத்தினை ஒரு தொழிலாக பாவிக்க முன்வருவதில்லை. இந்த நிலையை மாற்ற சிறு வயதிலிருந்தே விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும்வகையில் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளிலும் வேளாண்மையை ஒரு பாடத் திட்டமாகச் சேர்க்க ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலை துறையின்மூலம் செயல்படுத்தப்படும் நகர் மற்றும் புறநகர் பகுதிகளுக்கான மாடி காய்கறித் தோட்ட தொகுப்புகள் கூடுதலான எண்ணிக்கையில் வழங்க ஆவன செய்ய வேண்டும். மேலும், இந்தத் தொகுப்பில் மகளிர் மிகவும் விரும்பும் மலர்ச் செடிகளையும் சேர்க்க ஆவன செய்ய வேணடுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு

கட்டுப்பாடற்ற முறையில் அதிகரித்து வருகிறது. புதிது புதிதாக மருந்துகள் தருவிக்கப்படுகின்றன. இதனால், மண், சுற்றுச்சூழல், விளைபொருட்கள் என அனைத்திலும் நச்சுத் தன்மை அதிகரித்துவிட்டது. இது, தற்போதைய தலைமுறைக்கு அதிக சுகாதாரக் கேடுகளை விளைவிப்பதுடன், எதிர்காலச் சந்ததிகள் உருவாக்கம் மற்றும் உடல் நலனுக்கு ஊறுவிளைவிக்கிறது. நம் எதிர்காலச் சந்ததிகளுக்கு நஞ்சில்லா மண், நீர், காற்று மற்றும் உணவை உறுதி செய்வது நமது கடமையாகும். விவசாயத்திற்குத் தேவையான நேரத்தில், தேவையான பூச்சிக் கொல்லி மருந்தை, தேவையான அளவுக்கு மட்டும் தெளிக்க விவசாயிகள் மத்தியில் பெரிய அளவில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். மேலும், பயிரின் ஒரு பிரச்சினைக்குப் பூஞ்சாண மருந்து, தொடு நஞ்சு மருந்து, ஊடுருவிப் பாயும் மருந்து என அனைத்தும் கலந்து விற்பனையாளர்களால் விவசாயிகளுக்கு வழங்குவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புது பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளை அறிமுகம் செய்வதை மாவட்ட வேளாண்மைத் துறையின் அனுமதிக்கு உத்தரவிடுவதுடன், *(மணியடிக்கப்பெற்றது)* வேளாண்மைத் துறையின் பரிந்துரையுடன் புதுபயிர்ப் பாதுகாப்பு மருந்துகளை விற்பனை செய்ய ஆவன செய்ய வேண்டும். வேப்ப எண்ணெய் மற்றும் உயிரியல் காரணிகள் முழு மானியத்துடன் கிடைத்திட ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–30

வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டு வரும் குறு, சிறு விவசாய சான்றிதழினால் விவசாயிகள் நுண்ணீர்ப் பாசன பழச்செடிகள் மற்றும் இதர பண்ணைக் கருவிகள் மானிய விலையில் பெற முடிகிறது. இச்சான்று 6 மாதக் காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் நிலையில் உள்ளது. எனவே, 6 மாதங்கள் கழித்து ஒரு விவசாயி ஏதேனும் விவசாய சலுகைகள் பெற வேண்டுமென்றால், மீண்டும் இச்சான்றுக்கு விண்ணப்பிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இது மிகவும் சிரமத்திற்கு வழிவகுக்கிறது. இதனால், குறு, சிறு விவசாயிகள் சொல்லொணாத்துயரம் அடைகின்றனர். இத்துயரினைப் போக்கும் வகையில், இச்சான்றை 1 வருட காலத்திற்குச் செல்லுபடியாகும்படி வழங்கினால் விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்குமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தில் இதர விவசாயிகளுக்கு 75% மானியம் 5 ஹெக்டேர் வரை வழங்கப்படுகிறது. இதனை 7.5 ஹெக்டேர் வரை உயர்த்தி வழங்கினால் விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்கும். நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் வழங்கப்படும் பாசனக் கருவிகளுக்கு மீண்டும் அதே நிலத்திற்கு 7 ஆண்டுகளுக்குப் பிறகே விண்ணப்பிக்க முடியும். இக்கருவிகள் வெயிலிலும் மழையிலும் கிடப்பதினால் 7 ஆண்டுகள் வரை உழைப்பதில்லை. இவற்றை விவசாயிகள் மறுசீரமைப்புச் செய்வதிலும் பொருளாதார சிரமம் ஏற்படுகிறது. குறித்த காலத்திற்குள் நீர்ப்பாசனக் கருவிகளைச் சீரமைத்தால் மட்டுமே பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்ற சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து 7 ஆண்டுகள் கழித்து விண்ணப்பிக்கும் நிலையை மாற்றி 5 ஆண்டுகளில் விண்ணப்பித்து, நுண்ணீர்ப் பாசனக் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கி, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன. தொகுதிக் கோரிக்கைகள் இருந்தால் கொடுத்துவிடுங்கள். பதிவு செய்து கொள்ளலாம்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதி கோரிக்கைகளைக் கொடுத்துவிடுகிறேன். 2021–2022 ஆம் ஆண்டின்படி வேளாண் பெருமக்கள் பயனடையும் வகையில் 87 கோடியே 81 இலட்சம் மதிப்பீட்டில் 25 புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதன்மூலம் விவசாயிகள் பயனடைய இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில், 2021–2022 ஆம் ஆண்டில் உறைவிட தோட்ட நுட்பவியலாளர் பயிற்சி அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. இந்தப் பயிற்சியானது நமது வேளாண்மைப் பல்கலைக்கழக வளாக பயிற்சிக் கூடங்களில் வழங்கப்படுமேயானால் இத்தொழிலாளர்கள் அங்குள்ள நவீன தொழில்நுட்பங்களைக் கற்கவும், செயல்படுத்தவும் முடியும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு பெற்று, இப்பயிற்சியினை வேளாண்மைப் பல்கலைக்கழக பயிற்சிக் கூடங்களில் வழங்க உத்தரவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பருவநிலை மாறுபாடு காரணமாகவும், பயிர் வளர்ச்சியின்போது போதுமான மழை இல்லாமல் போனாலும் விவசாயிகள் பாதிப்படையக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன் தமிழ்நாட்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், பல ஆண்டுகளாக, இத்திட்டத்தில், பிர்கா வாரியாக சராசரி மகசூல் வேளாண்மைத் துறை அலுவலர்களால் கணக்கீடு செய்யப்பட்டு, அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அதனைப் பின்பற்றியே பயிர்க் காப்பீட்டுத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பொழியும் மழையானது நகரத்திற்கு நகரம், கிராமத்திற்கு கிராமம் மாறுபடுகிறது என்பதை நாம் பார்த்து உணர்ந்து வருகிறோம். எனவே, பயிர்க் காப்பீட்டில் பங்குகொண்ட கிராமங்களில் விளைவிக்கும் பயிர்களின் மகசூல் பிர்கா சராசரி மகசூலைவிட குறைவாக இருந்தாலும், அதன் பயன் கிடைப்பதில்லை. விவசாயிகள் கிராம வாரியான மகசூல் கணிப்பு செய்ய வேண்டுமென பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய கவனத்திற்குக் கொண்டு சென்று, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் கிராம அளவிலான மகசூல் கணிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தொழில் முனைவோர் மற்றும் ஏற்றுமதியாளர்களால் தானியங்கள், பழங்கள், காய்கறிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அதேபோன்று பல மாதங்களுக்கு விவசாய விளைபொருட்கள் கெடாமல் பாதுகாக்க Gamma Radiation Plant மதுரை, சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் அரசால் நிறுவப்பட்டால், அனைத்து சந்தை முனைவோர்களும் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான திட்டத்தைச் செயல்படுத்தி விவசாயத் தொழில் முனைவோர்கள், ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் Gamma Radiation Plant நிறுவிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீவிர சாகுபடி காலங்களில் விவசாயிகள் POS machine-ல் கைரேகை வைத்து உரம் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு ஆதார் கார்டு நகலினைச் சமர்ப்பித்து உடனடியாக தாமதமின்றி உரங்களை விவசாயிகள் பெற ஆவன செய்ய வேண்டும்.

விருதுநகர் மாவட்டத்தில் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன்பெறும்வகையில் சாத்தூர் A. ராமலிங்கபுரம், தேவதானம் அரசு விதைப் பண்ணை, விருதுநகர், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக, சாத்தூர் A. ராமலிங்கபுரம், தேவதானம் அரசு விதைப் பண்ணையில் உள்ள இயந்திரங்கள் மிகவும் பழமைவாய்ந்தவையாக உள்ளன. மேலும், தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் 1980 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதாக உள்ளன. இதனால் விதை சுத்திகரிப்புப் பணியின்போது அதிக அளவு நல்ல தரமான விதைகள், கழிவு விதைகளுடன் கலந்துவிடுகின்றன. இதனால் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பெருமளவில் இழப்பு ஏற்படுகிறது. எனவே, விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் தற்போது உள்ள நவீன இயந்திரங்களை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. அடுத்து மூன்று அமைச்சர்கள் பதிலுரையாற்றவிருக்கிறார்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் வைத்துள்ள குறிப்புகளையும், தொகுதிக் கோரிக்கைகளையும் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதனை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி, பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–35

தொகுதிக் கோரிக்கைகள்:

விருதுநகர் தொகுதியில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விருதுநகரில் பல் மருத்துவக் கல்லூரி விரைவில் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*விருதுநகர், நான்கு வழிச் சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி அருகில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு (*TRAUMA CARE*) மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.*

விருதுநகர் தொகுதி, ஆணைக்குட்டம் நீர்த்தேக்க shutter*–ஐ உடனடியாக மாற்றி குடிநீர்த் தேவையையும், விவசாய மக்களின் தேவையையும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.*

விருதுநகர், பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பித்து, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் பணி முடிந்ததாக நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், பாதாள சாக்கடைத் திட்டத்தில் குழாய் பதித்து, தொட்டி கட்டி, சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டுள்ளது. ஆனால், கழிவுநீர் மட்டும் இன்னும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேரவில்லை. இன்னும் முழுமையாக முடிக்கப்படாததால் இன்றளவில் திறந்த வெளியில்தான் கழிவுநீர் செல்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் வெற்றிகரமாக மக்களுக்குப் பயன்பட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் பழைய சிவகாசி சாலை கவுசிகா ஆற்றில் மேல்மட்டப் பாலம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் ஒன்றியம், கட்டனார்பட்டி முதல் முத்துலிங்காபுரம் வரை செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலையில் கட்டனார்பட்டியில் ஒரு மேல்மட்டப் பாலமும், முத்துலிங்காபுரத்தில் ஒரு மேல்மட்டப் பாலமும் கட்டித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள நான்கு வழிச் சாலையில் உடனடியாக ஒரு கடவுப் பாலம் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சியில், சொக்கலிங்காபுரம் கிராமத்தில் புதிய ஆரம்பப் பள்ளித் தொடங்க கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் ஒன்றியம், கன்னிசேரி புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தக் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் ஒன்றியம் வடமலைகுறிச்சி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும், விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், புதுப்பட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தவும் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்பு, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில் மாநில அரசு, வேளாண்மைத் துறைக்கென்று தனியாக பட்ஜெட் சமர்ப்பித்துள்ளது. இது விவசாயிகளின் மீதான பொறுப்பையும், கடமையுணர்ச்சியையும் காட்டுகிறது. இதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் சில வாழை இரகங்கள் பயிரிடப்படுகின்றன. அவை மட்டி வாழை, நெய்பூவன் அல்லது ரசகதளி, ஏத்தன், பூங்கதளி வாழை போன்றவை; பிற மாவட்டங்களில் இவை பயிரிடப்படுவதும் இல்லை; அங்கே இவை கிடைப்பதும் இல்லை. மட்டி வாழைப் பழம்: நறுமணமிக்க மருத்துவக் குணம் கொண்ட மட்டி வாழைப் பழம் இம்மாவட்டத்தின் தனிச் சிறப்பு. குழந்தைகளுக்கு மருந்தாக வழங்கக்கூடிய அந்த மட்டி வாழைப் பழத்திற்கு புவிசார் குறியீடு, (Geographical Indication) கிடைப்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே சென்ற அரசாங்கத்தில்

புவிசார் குறியீடு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏத்தன் வாழை என்றழைக்கப்படுகிற ஏத்தன் வாழைக்காய் சிப்ஸ், கன்னியாகுமரி மாவட்டத்தின் தனிச் சிறப்பு. மண் வளம் மிக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏத்தன் வாழைப்பழம் மற்றும் ஏத்தன் வாழைக் காய் சிப்ஸ் புகழ்பெற்றவை. மேலும், இவ்வாழையின் நார்களிலிருந்து மட்டுமே கைவினைஞர்கள் அழகிய கூடை செய்து விற்பனை செய்து வருகிறார்கள். எனவே, ஏத்தன் வாழை அதிக அளவில் பயிரிடுவதற்கும், விவசாயிகளுக்கு நல்ல ஆதாய விலை கிடைப்பதற்கும், நார் கூடைத் தொழில் விரிவாக்கம் செய்வதற்கும், மகளிர் திட்ட அலுவலர்மூலம் மகளிருக்கு நார் கூடை உற்பத்தி அலகு ஏற்படுத்தி, மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கிடவும், அரசு தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 25,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் தென்னை மரம் பயிரிடப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இது ஒரு முக்கியமான விஷயம். தென்னை மரத்தின் ஓலைக்கு அடியில் வெள்ளைப்பூச்சி (Rugos) தாக்குகிறது. அந்த வெள்ளைப் பூச்சித் தாக்கத்தால் அதிகப்படியாக 5,000 தேங்காய்கள் வெட்டக்கூடிய இடத்தில் 2,000 தேங்காய்கள்தான் வெட்ட முடிகிறது. அதை அழிப்பதற்கு ஏற்கெனவே ஆளில்லா விமானத்தில் (drone) கொண்டுபோய்தான் பூச்சி மருந்தை அடிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற தென்னை மரங்கள் படிப்படியாக அழிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், முக்கியமாக இதில் தலையிட்டு, அதைத் தடுத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருக்கவும். மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: அதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1 ஹெக்டேர் நிலப் பரப்பில் கிட்டத்தட்ட 2,500 வாழைப்பயிர் பயிரிடப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், அதிகமாக மழைப் பெய்யக்கூடிய பகுதி. அப்படிப்பட்ட மாவட்டத்தில் பயிரிடப்படுகின்ற அந்த வாழை

பயிர், மழை, பெரும் சூறைக் காற்று மூலமாக சாயும்போது, அதற்கு வழங்கக்கூடிய இழப்பீடு என்பது குறைவாக உள்ளது. பக்கத்தில் இருக்கின்ற கேரள மாநிலத்தில் 1 வாழை மரத்திற்கு கிட்டத்தட்ட, 100 ரூபாய் இழப்பீடு வழங்குகின்றார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் ஏற்கெனவே கடந்த அரசாங்கம் ஹெக்டேருக்கு 13,500 ரூபாய்தான் கொடுத்தார்கள். இப்பொழுது நம்முடைய அரசாங்கம் வந்த பிறகு, ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் வந்து பார்வையிட்டுச் சென்றார்கள். தற்போது 1 ஹெக்டேர் நிலப் பரப்புக்கு 20,000 ரூபாய் இழப்பீடாக கூடுதலாக வழங்குகிறார்கள். அப்படியென்றால், 1 வாழை மரத்திற்குக் கிட்டத்தட்ட 7 ரூபாய்தான் வரும். ஆனால், 1 வாழை மரத்தை வைத்து, அதை வளர்க்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 200 ரூபாய் வரைக்கும் உற்பத்திச் செலவாகின்றது. எனவே, அதிகபட்சம் ஒரு வாழை மரத்துக்கு இழப்பீடு என்பது பக்கத்து மாநிலமான கேரளாவில் வழங்குவதுபோல் 100 ரூபாய் அளவில் வழங்க இந்த அரசாங்கம் முயற்சியெடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–40

நேற்றையதினம், என்னுடைய தொகுதியிலுள்ள இனையம் புத்தன்துறை கிராமத்தைச் சார்ந்த திரு. ஏசுதாஸ் அவர்களுடைய மகன் ரஃபேல் என்பவர் தேங்காய்பட்டணம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து படகுமூலம் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார். துறைமுகத்திலிருந்து கிளம்பிச் சென்ற அரை மணி நேரத்திலேயே இடி, மின்னல் தாக்கி அவர் உயிரிழந்திருக்கிறார். அவருடைய குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சம் நிவாரணம் வழங்க வேண்டும். மேலும், அவருடைய குடும்பத்தினரில் யார் படித்திருக்கிறார்களோ அவருக்கு அரசாங்க வேலை வழங்க வேண்டும். அதேபோன்று, இரையுமன்துறை கிராமத்தில் 8 ஆம் தேதியன்று மீன் பிடிக்கச் சென்ற ஒருவரும் இடி, மின்னல் தாக்கி இறந்துவிட்டதால், அவருடைய குடும்பத்தினரும் வாழ்வாதாரத்தை இழந்திருக்கின்றனர். அவருக்கு 3 பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். எனவே, அவரது குடும்பத்தினருக்கும் அதற்கான நிவாரணத் தொகையும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு படிப்புக்கேற்றவாறு அரசாங்க வேலையும் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. ராஜேஷ் குமார் அவர்கள், மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கின்றபோது இடி, மின்னல் தாக்கி உயிரிழந்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். உடனடியாக அதுகுறித்து ஆய்வு செய்து, ஏற்கெனவே அவர்கள் மீனவர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருந்திருந்தால், நல வாரியத்தின்மூலம் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகையும், அவர் insurance கட்டியிருந்தால் அந்த insurance தொகையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். மேற்கண்ட நிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு வழி இருந்தால், அதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருவோம் என்ற உறுதியை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகத்தில் விளிம்பு நிலையிலுள்ள மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மண்டல் கமிஷன் பரிந்துரையில் 13-37/1-ல் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் 29-5-2016 அன்று மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கடிதம்மூலம் வலியுறுத்தியுள்ளார்கள். மேலும், தங்கள் தேர்தல் அறிக்கையிலும் இதைத் தெரிவித்துள்ளீர்கள். ஏற்கெனவே, பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான அனைத்துத் தகுதிகளும் மீனவர் சமூகத்தினருக்கு இருப்பதால், அவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்திய சாட்சி சட்டம் (Indian Evidence Act) Section, 108-ன்படி, காணாமல் போகும் நபர்கள், அவர்கள் கரைப் பகுதியில் இருக்கக்கூடியவர்களாக இருந்தாலும், கடலில் சென்று தொழில் செய்பவர்களாக இருந்தாலும், மீன்பிடிக்கச் செல்லும்போது ஏதாவது பேரிடர் (disaster) ஏற்பட்டு, விபத்து ஏற்பட்டு காணாமல் போனால், அவர்களை இறந்ததாகக்

கருத வேண்டுமென்றால், 7 வருடங்கள் கழித்துதான் இறப்புச் சான்றிதழ் (Death Certificate) கொடுக்கிறார்கள். ஏற்கெனவே, மீன்பிடித் தொழிலில் இருப்பவர்களுக்குப் பெரிய வசதிகள் எதுவும் இருக்காது. 7 வருடங்களில் அந்தக் குடும்பத்தினரின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும். ஆகவே, அந்தக் குடும்பங்களின் நிலையைக் கருதி, 7 வருடங்கள் என்பதைக் குறைக்க, I.A.S. Officers தலைமையில் ஒரு குழு அமைத்து, அவர்களுக்கு அந்த இறப்புச் சான்றிதழை விரைவில் வழங்க நம்முடைய அரசு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார் அவர்கள் குறிப்பிட்டவாறு, மீனவர்கள் கடலில் காணாமல் போய்விட்டால் கடந்த காலங்களில் 7 வருடங்கள் கழித்துதான் அவர்களது குடும்பத்தினருக்கு death certificate வழங்கப்பட்டு, அவர்களது குடும்பங்கள் பயன்களைப் பெறும் வகையில் நடைமுறை இருந்தது. ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில், அதற்கான நாட்களைக் குறைத்து, வெகு விரைவில் இறப்புச் சான்றிதழை வழங்கும்வண்ணம் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று தெரிவித்தவகையில், அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையில், 7 வருடங்கள் என்பதைக் குறைத்து, எவ்வளவு நாட்களில் கொடுக்க முடியும் என்பதை இந்தத் துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கான நடைமுறைகளை மேற்கொள்வோம். அவ்வாறு அவர்கள் காணாமல் போகும்போது, அவர்களுடைய குடும்பத்திற்குத் தினப்படியாக தினந்தோறும் ரூ.250/– வழங்கப்படுகிறது. இருந்தாலும், பாதிக்கப்படுகின்ற குடும்பங்கள் கடுமையான கஷ்டங்களில் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்த நாட்களைக் குறைப்பதற்காகவும், அவர்களுக்கு அதற்கான பயன்களைக் கொடுப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதுகுறித்து ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கைகளை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

பிற்பகல் 1–45

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கின்ற தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்திற்கு ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 3, 4 முறை வந்திருக்கின்றார்கள். துறைமுகத்தை ஆய்வு செய்திருக்கிறார்கள். அந்தத் துறைமுகத்தில் mouth பகுதி; அதன் நுழைவு வாசல் (mouth) பகுதியிலே அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. அதற்கு என்ன காரணமென்றால், அதன் வடிவமைப்பு; ஏற்கெனவே முதலில் போட்ட plan தவறாக இருக்கிறது. மக்களுக்கு எந்த விபத்தும் ஏற்படாமல், மக்கள் தொழில் செய்வதற்கு அதனுடைய வடிவமைப்பை முழுமையாக மாற்றி, மறுகட்டமைப்பு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு மீனவ சமுதாய மக்கள் 20 சதவிகிதம் இருக்கிறார்கள். அதிகப்படியான மீனவ சமுதாயத்தினரின் வீடுகளுமே அந்தக் கடலோரத்தில்தான் அமைந்திருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை, ஒவ்வொரு வருடமும் ஜூன், ஜூலை மாதங்களில் ஏற்படும், கடல் சீற்றத்தினால் அங்கேயிருக்கின்ற அந்த வீடுகள் கடலரிப்பினால் இழுத்துச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு நாம் ஒரு தொலைநோக்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்களாகிவிட்டன.

திரு. செ. ராஜேஷ் குமார்: 10 நிமிடங்கள் ஆகவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: எங்களுடைய மண்ணின் மைந்தர் மரியாதைக்குரிய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். அவர்கள்கூட, அதைப்பற்றிப்

பேசிய நேரத்தில் சொன்னார். மீனவர்களுடைய நீண்டகால கோரிக்கை என்பது அவர்களுக்குச் சரியான முறையில் குடியிருப்புகளை வசதியாக அமைக்க வேண்டும் என்பதுதான். ஒவ்வொரு முறையும் கடலரிப்பு ஏற்படும்போதும், அதிகப்படியான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு தடுப்புச் சுவராக இருந்தாலும், தூண்டில் வளைவாக இருந்தாலும் போடப்பட்டிருக்கின்றன. அதையும் தாண்டி, பிற்காலங்களில் அந்த மீனவ மக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாத அளவிற்கு, அவர்களுடைய குடியிருப்புகளை ஏற்படுத்த வேண்டும். இப்போது சென்னையிலே Annexe-1, Annexe-2 என்று அடுக்குமாடிக் குடியிருப்புகளெல்லாம் அவர்களுக்கு நிரந்தரமாக கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோன்று, அந்த மீனவ சமுதாய மக்களைப் பாதுகாப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், தொடர்ந்து இப்படிப்பட்ட இடர்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை தாங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தின் நுழைவு வாயில் பகுதியில் ஏற்படும் மணல் திட்டால் விபத்துகள் ஏற்படுகின்றன என்றும், அதைத் தடுப்பதற்கு தூர்வாரி, மறுசீரமைப்பு செய்து, அதை பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டுமென்றும், அவர்கள் ஏற்கெனவே ஒரு மனுவினைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த வகையிலே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேங்காய்பட்டணம் மீனவ கிராமத்தில் ரூ.97.40 கோடி மதிப்பீட்டில் மத்திய, மாநில அரசு பங்களிப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசாணை எண் 168, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக நிருவாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன. மீனவர்கள்

பயன்பாட்டில் இருந்து வருகிற தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகம் தாமிரபரணியாறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. தூத்தூர் மற்றும் இனையம் மண்டலத்திற்குட்பட்ட சுமார் 15 மீனவ கிராம மக்கள் 756 விசைப் படகுகள் மற்றும் 4,250 நாட்டுப் படகுகள்மூலம் தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தைத் தங்குதளமாகப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்படகுகளைத் துறைமுகத்தில் நிறுத்த போதிய வசதி இல்லாத காரணத்தால் இடவசதிகள் மற்றும் கட்டுமான வசதிகளை உருவாக்க தமிழக அரசால் 60 கோடி ரூபாய்க்கு, அரசாணை எண் 123, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், நாள் 26–2–2022–ன் வாயிலாக நிருவாக ஒப்புதல் வழங்கி பணிகள் நடைபெற்று வருகின்றன. 2020 ஆம் வருடத்தில் ஆழிப்பேரலையின் காரணமாக தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலைத் தடுப்புச் சுவர் சேதமடைந்தது. இதனைச் சரிசெய்து, தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலைத் தடுப்புச் சுவரினை மீட்டெடுத்திட அரசாணை எண் 173, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 28–12–2021–ன் வாயிலாக 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் துவங்கிய நிலையில், 2021 ஆம் ஆண்டில் 'டவ்–தே' புயல் ஏற்படுத்திய தாக்கத்தால் தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தின் நுழைவு வாயிலில் கோர்லாக் கிரில் கட்டைகள் விழுந்து நுழைவு வாயிலின் அகலம் 90 மீட்டரிலிருந்து 60 மீட்டராகக் குறைந்தது. இதன்காரணமாக, அப்பகுதியில் மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலுக்கு கடலுக்குச் செல்வதில் சிரமத்திற்குள்ளாயினர். இதனைத் தவிர்க்க, முதற்கட்டமாக துறைமுகத்தின் நுழைவு வாயிலை அகலப்படுத்தி, மணல் திட்டுக்களை அகற்றி, தூர்வாரி ஆழப்படுத்த அரசாணை எண் 201, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் வாயிலாக 1.65 கோடி ரூபாயில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, படகுகள் எளிதாகச் செல்லும்வண்ணம் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிற்பகல் 1–50

மேலும், இதற்கு நிரந்தரமாகத் தீர்வு காணவும், தேங்காய்பட்டணம் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாத்திடவும் ஒன்றிய அரசின் மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையம், பூனே, இந்திய தொழில்நுட்ப நிறுவனம்,

சென்னை IIT மற்றும் தேசிய பெருங்கடல் தொழில்நுட்பக் கழகம், சென்னை ஆகியவற்றின் தொழில்நுட்ப வல்லுநர்களால் தேங்காய்பட்டணம் மீனவப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், பூனேயிலிருந்து திருத்திய திட்ட வரைபடம் பெறப்பட்டது. அந்தத் திருத்திய திட்ட வரைபட வடிவமைப்பின்படி தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தின் பிரதான அலைத்தடுப்புச் சுவரினை LS 460 மீட்டர் நீளத்திலிருந்து, 633 மீட்டர் நீளம் வரை நீட்டித்திட 223 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின மேம்பாட்டு நிதியின்கீழ் நிருவாக ஒப்புதலுக்கு ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிருவாக ஒப்புதல் பெறப்பட்டதும் பணிகள் தொடங்கப்படும். தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராக இருக்கின்ற மரியாதைக்குரிய திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள், அந்த மீனவப் பிரதிநிதிகளோடு கலந்தாலோசனை செய்து, அந்த நிலைகள் மீண்டும் வராத வகையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அந்தப் பணிகளை செய்திருக்கின்றார்கள். ஆலோசனையில் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு உரையாற்ற அனுமதிக்கப்படுகின்ற நேரம் பத்து நிமிடங்கள். இப்போது நான் note செய்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 4 நிமிடங்கள் கழிந்துவிட்டன; 6 நிமிடங்கள்தான் உரையாற்ற முடிகின்றது. அதனால், உறுப்பினர் அவர்கள் என்னென்ன பேசுகின்றாரோ, அவற்றையெல்லாம் குறிப்பு எடுத்துக்கொண்டு, அவருடைய நேரம் முடிந்த பிறகு, பதில் சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைகள் கொடுத்ததினால், அவற்றிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள், இப்போது பேசுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படும் கூட்டுறவு வங்கிகளால் விவசாயிகள் பெரும் நன்மை அடைகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேங்காய்பட்டணம் துறைமுகம் பற்றிக் கூறினார்கள். நான் இந்தத் தருணத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட மக்களின் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இதுவரையிலும் இந்திய வரலாற்றில் இல்லாத அளவிற்கு stakeholders participation என்று சொல்லுவோம், பங்களிப்போர் அனைவரையும் இணைத்து வைத்த கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் உருவாக்கிய திட்டத்தினால் அந்தத் துறைமுகத்தில் பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன என்று கூறிய காரணத்தினால், அந்தப் பகுதிகளில், அந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்ற மக்கள், அவர்கள் சார்ந்த நிபுணர்கள் CWPRS, NIOT, IIT போன்ற நிறுவனங்கள், மீன்வளத் துறை உயர் பொறியாளர்கள் உள்ளிட்டோருடன் இரண்டு முறை கூட்டங்கள் நடத்தி, அங்குள்ள மக்களின் கருத்துகளைக் கேட்டு, நானும், சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்களும் இணைந்து ஒரு திட்டத்தை மக்கள் பங்களிப்போடு உருவாக்கியிருக்கிறது இந்த அரசு. இந்த அணுகுமுறை நாட்டிற்கே வழிகாட்டக்கூடிய விதத்தில் அமைந்திருக்கிறது. இதைத்தான் நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் கூறுகின்ற inclusive development-னுடைய ஓர் அங்கமாக நாங்கள் பார்க்கின்றோம். மேலும், திருத்திய வரைபடத்திற்கான கூடுதல் நிதியைக் கேட்ட நேரத்தில், அதைத் தருகின்ற அளவிற்கு நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இருந்திருக்கின்றார்கள். நான் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி கூறி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படும் கூட்டுறவு வங்கிகளால் விவசாயிகள் பெரும் நன்மை அடைகின்றனர். எனவே, தமிழகத்தில் கடலோரக் கிராமங்களில் செயல்படும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலும் மீனவர் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்தினால் மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த முடியும். மேலும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் Kisan Credit Card போல மீனவர்களுக்கும் கடன் அட்டை வழங்க முன்வருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, நம்முடைய அண்டை மாநிலமான கேரளாவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் 60 வயதைக் கடந்து மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் தகுதியை இழக்கும்போது, நேரடியாகவே மாநில அரசின் முதியோர் உதவித் தொகையைப் பெறும் பயனாளிகளாக மாற்றப்படுகின்றனர். இந்த நிலை தமிழகத்தில் இல்லை. எனவே, இதுபோன்று தமிழகத்திலுள்ள மீனவர்களுக்கும் அரசின் உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–55

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்குக் காப்பீட்டுத் திட்டம் premium முறையில் நடைமுறையில் உள்ளது. ஆனால், மீன்பிடிக் கலன்களுக்கு காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் இல்லை. இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படும் கோடி ரூபாய்க்குமேல் மதிப்புள்ள விசைப் படகுகளுக்கும், பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நாட்டுப் படகுகளுக்கும் எவ்வித இழப்பீடும் வழங்கப்படுவதில்லை. இதனால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளுக்கும் premium முறையிலான காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் மூன்று அமைச்சர்கள் பதிலுரை சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கடற்கரைக் கிராமங்களிலும் இருக்கின்ற மக்களைப் பாதுகாப்பதற்குக் கடலரிப்புத் தடுப்புச் சுவர், தூண்டில் வளைவுகள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுகிறேன், அதை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட வள்ளவிளை–எடப்பாடு-இரவிபுத்தன்துறை பகுதிகளில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைத்து, வள்ளவிளை-எடப்பாடு சாலையைச் சீரமைக்க வேண்டுகிறேன்.

பைங்குளம் ஊராட்சிக்குட்பட்ட முள்ளூர்துறை–அரையன்தோப்பு-தேங்காய்பட்டணம் கடற்கரைச் சாலைப் பகுதிகளில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைத்து, சாலையைச் சீரமைத்துத் தர வேண்டுகிறேன்.

நீரோடித்துறை முதல் இரயுமன்துறை தாமிரபரணி ஆறு முடிவு வரை உள்ள AVM கால்வாயில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இயற்கை பேரிடர் காலங்களில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வசதியாக தூத்தூர் ஊராட்சிக்குட்பட்ட இரயுமன்துறை பேருந்து நிறுத்தத்தையும், ஏழுதேசம் பேரூராட்சிக்குட்பட்ட வைக்கலூர் பகுதியையும் இணைக்கும்விதமாக பாலம் அமைக்க வேண்டுகிறேன்.

சிங்காரவேலர் தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் வீடில்லாத ஏழை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டுகிறேன்.

கொல்லங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட நீரோடி மீனவக் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரோக்கியபுரம் முதல் நீரோடிவரை 48 மீனவக் கிராமங்களில் உள்ள மீனவர்கள் பயன்பெறும் வகையில் புயல் எச்சரிக்கை கூண்டு அமைக்க வேண்டுகிறேன்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இயற்கை பேரிடர், விபத்து போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் காணாமல் போகும்போது, அவர்களின் குடும்ப நலன் கருதி அதிகபட்சம் ஓராண்டிற்குள் இறந்தவர்களாக அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிரமம் இருப்பதால், 10,000 மக்கள் தொகை கொண்ட குறும்பனை மீனவ கிராமத்தை தனி கிராம ஊராட்சியாக அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கடை–பரசேரி மாநில நெடுஞ்சாலையின் நடுவில் பதிக்கப்பட்டுள்ள கான்கிரீட் குழாய்களுக்குப் பதிலாக DI பைப்புகளை சாலையின் ஓரமாக அமைக்க வேண்டுகிறேன்.

பரசேரி–திங்கள்நகர்–புதுக்கடை மாநில நெடுஞ்சாலை (SH91) நடுவில் இருந்த ராட்சத குழாய்களில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிடவும், புதுக்கடை–பரசேரி நெடுஞ்சாலையில், திக்கணங்கோடு பகுதியில் குறுகலாக உள்ள பாலத்தை மாற்றித் தரவும், நீரோடி முதல் ஆரோக்கியபுரம் வரையிலான சாலையை ஒரே கடற்கரை சாலையாக அமைக்கவும், முஞ்சிறையிலிருந்து மங்காடு வழியாக கோழிவிளை செல்லும் மங்காடு சாலையை விரிவாக்கம் செய்யவும், கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தவும், கருங்கல் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் உள்ளிட்ட இதர பணியாளர்களை உடனடியாக நிரப்பவும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆறுதேசம் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, நவீன அறுவை சிகிச்சை அரங்கக் கட்டடம் மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள் அமைத்துத் தரவும், தூத்தூர் ஊராட்சியிலுள்ள அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, போதுமான கட்டட வசதி ஏற்படுத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், அடைக்காகுழி ஊராட்சி, சங்குருட்டி ஆதி திராவிடர் காலனி மற்றும் முள்ளங்கினாவிளை ஊராட்சி, கொற்றியார் மூலவிளை ஆதி திராவிடர் காலனியில் கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் அரசு சார்பில் கட்டித் தரவும், மெதுக்கும்மல் ஊராட்சி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் முப்பந்திகோணம்–ஏலூர்காடு

பகுதியில் பக்கச் சுவர் அமைக்கவும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், நடைக்காவு-பாத்திமாநகர் பகுதியில் உடைந்த நெய்யாறு இடதுகரை கால்வாயின் பாலத்தைச் சீரமைக்கவும், குளப்புறம் ஊராட்சி, கல்லறைக்காடு, பனவிளை பகுதியில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் பக்கச் சுவர் அமைக்கவும், மத்திகோடு ஊராட்சி, திக்கணங்கோடு சானலில் கோட்டவிளை பகுதியில் பக்கச் சுவர் அமைக்கவும், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம்துறை கோயில், ஆரம்ப சுகாதார நிலையம் செல்லும் சாலையில், AVM சானலைக் கடக்க சிமென்ட் கான்கிரீட் பாலம் (RCC Bridge) அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, குழித்துறை தாமிரபரணி ஆற்றின் கரையோரப் பகுதிகளான அதங்கோடு, செங்கிலம், மங்காடு, ஆலுவிளை, மாமுகம், பணமுகம், பள்ளிக்கல், முஞ்சிறை, பார்த்திவபுரம், விரிவிளை, வைக்கலூர், மரப்பாலம், பருத்திக்கடவு, கழியான்குழி, ஈழக்குடிவிளாகம், பரக்காணி போன்ற பகுதிகளில் தாமிரபரணி ஆற்றின் இருபக்கங்களிலும் நிரந்தர பக்கச் சுவர் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, தூத்தூர் ஊராட்சிக்குட்பட்ட இரவிபுத்தன்துறை பகுதியிலுள்ள AVM கால்வாயிலிருந்து Prayer Center செல்லும் சாலையையும், AVM கால்வாயிலிருந்து K.R. புரம்-பூந்தோப்பு காலனி செல்லும் சாலையையும் இணைக்கும் விதமாக AVM சானலின் குறுக்கே புதிய கான்கிரீட் பாலம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிற்றாறு பட்டணம் கால்வாயின் கிளை கால்வாய்களான கருங்கல், ஆலஞ்சி, முள்ளங்கினாவிளை, கிள்ளியூர், பாலூர், கீழ்குளம், தேவிகோடு, காட்டுக்கடை, மிடாலம், கப்பியறை, இலவுவிளை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிளை கால்வாய்களைத் தூர் வாரி சீரமைத்து, கடைவரம்பு பகுதிகளுக்கும் தண்ணீர் வந்து சேர நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் நலன் கருதி நெய்யாறு அணையிலிருந்து தண்ணீர் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கிள்ளியூர் பேரூராட்சி, வேங்கோடு பகுதியில் உள்ள வேங்கோடு ஏலாவைச் சுற்றியுள்ள கோணத்து ஏலா, படிபரக்க ஏலா, வாழவிளை கோணத்து ஏலா, முண்டேலா போன்ற ஏலாக்களில் உள்ள நீரானது வேங்கோடு ஏலாவில் வந்து வடியும் தண்ணீர் வடிகால் ஓடை அமைத்து, விவசாயிகளின் பயிர்களைக் காத்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.

*__திரு. கே.பி. சங்கர்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கித் தந்த ஐயா கலைஞர் அவர்களையும், வரலாற்று முதல்வர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். திருவொற்றியூர் தொகுதியில் இறுதியாக எனது வெற்றியை உறுதி செய்த இளைஞர்களின் இதயத் துடிப்பு அண்ணன் மாண்புமிகு உதயநிதி அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்காகப் பாடுபட்ட தொண்டர்களையும், கழகத்தின் தோழர்களையும் வணங்குகிறேன். ஒருபுறம் பணபலம், மறுபுறம் *உண்மைக்கு மாறான பிரச்சாரம் என இருந்தாலும்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** என்பது உண்மைக்கு மாறான என மாற்றப்படுகிறது.

திரு. கே.பி. சங்கர்: சிறப்பாக இந்தப் பேரவைக்கு உறுப்பினராக அனுப்பி வைத்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் என் உரையை இந்த அவையில் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இயற்கைப் பேரிடர்களால் உயிரிழக்க நேரிடின், அவர்களது குடும்பத்தினர்களுக்கு உயிரிழப்பிற்கான நிவாரணம் 7 ஆண்டுகளுக்குப் பிறகு சேருகிறது. அதற்குள் அவர்களது குடும்பங்கள் எவ்வித வருமானமுமின்றி வறுமைக்கோட்டிற்குக்கீழே தள்ளப்படுகின்றன. எனவே, அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, உயிரிழந்த

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மீனவக் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையை 2 ஆண்டிற்குள் வழங்க உரிய உத்தரவைப் பிறப்பித்து, அவர்களைக் காத்திடும்படி தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2019 ஆம் ஆண்டு கொரோனா கொள்ளை நோய் காரணத்தால், மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டதால், மீனவச் சமுதாயத்தினரின் வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கியுள்ளது. ஐயா கலைஞர் அவர்களின் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், தற்போது நாடு போற்றும் சிறப்பான நல்லாட்சி தந்து கொண்டிருக்கும் அன்புத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, மீனவச் சமுதாயத்தினர்மீது மிகுந்த அக்கறை கொண்டு, அன்றைய மீன்வளத் துறை அமைச்சராக இருந்த, மறைந்த மாண்புமிகு அண்ணன் திரு. கே.பி.பி. சாமி அவர்களின் கோரிக்கையினை ஏற்று, மீனவச் சமுதாயத்தினர்மீது பற்றும், பாசமும் வைத்திருந்த அவர், இந்தியாவிலேயே முதன்முறையாக மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு ரூ.500/–ஐ வழங்கினார்கள். அது தற்போது ரூ.5,000/– ஆக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போதுள்ள பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, பரிசீலனை செய்து, நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கிட ஆவன செய்யுமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கையை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன் முதலில் 2006 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் தந்திடாத வகையில் மீனவ மக்களுக்கு தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் diesel மானியத்தை வழங்கினார். அப்பொழுது விசைப் படகுகளுக்கு 800 லிட்டர் diesel வழங்கப்பட்டது; இப்பொழுது 1,800 லிட்டர் வரை diesel வழங்கப்படுகிறது. Fibre படகுகளுக்கு 300 லிட்டர் வரை diesel வழங்கப்படுகிறது. தற்பொழுது diesel விலை உயர்வு காரணமாக மீனவ மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதனால் diesel மானியத்தை உயர்த்தித் தந்திடுமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைக்கின்றேன்.

2022 ஏப்ரல் 13]

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து அம்சங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களுக்கு எனது சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மீனவச் சமுதாயத்தினர் பழங்குடியினப் பட்டியலில் இணைக்கப்படுவார்கள் என தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டது. எங்களது மீனவச் சமுதாயத்தினரைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து, உறுதி செய்து தந்திடும்படி இந்த அவையின் துணைத் தலைவரான தங்களின் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கோரிக்கையை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் 18 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அங்கு சுமார் 50,000 மீனவர்கள் வசிக்கிறார்கள். இங்கு அமைக்கப்பட்ட தூண்டில் வளைவுகள் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தமிழகத்தின் முதல்வராக இருந்த ஐயா கலைஞர் அவர்களால், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, அன்றைய மீன்வளத் துறை அமைச்சராக இருந்த என்னுடைய அண்ணன் திரு. கே.பி.பி. சாமி அவர்களின் முயற்சியால் மறுசீரமைக்கப்பட்டன. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அவை பராமரிக்கப்படவில்லை. அதனால், தூண்டில் வளைவுகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன. எனவே, சேதமடைந்துள்ள தூண்டில் வளைவுகள் அனைத்தையும் சரி செய்து தந்திடும்படி தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் கொசஸ்தலை ஆற்றின் முகத்துவாரப் பகுதி உள்ளது. அதைச் சுற்றியுள்ள 8 மீனவ கிராமங்களில் சுமார் 25,000 மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்த மீனவக் குடும்பங்களின் மீன்பிடித் தொழிலுக்கு வாழ்வாதாரமாக அந்த

முகத்துவாரம் விளங்குகிறது. அந்தப் பகுதி சேறும், சகதியுமாக உள்ளது. வெள்ளம் புகுந்து கடலரிப்பு ஏற்படும்போது, உயிரிழப்பு, படகு சேதம், வலைச் சேதம் போன்ற இடர்பாடுகளால் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. எனவே, முகத்துவாரப் பகுதியைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, தூண்டில் வளைவுகள் அமைத்துத் தந்திடுமாறு தங்களின் வாயிலாகக் கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் பழையாறு மீனவ கிராமத்தில் அமைந்துள்ள முகத்துவாரத்தில் 350 விசைப் படகுகளையும், 700 fibre படகுகளையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த முகத்துவாரம் சரியான பராமரிப்பு இல்லாததால், விசைப் படகுகள் தரைதட்டும் நிலையில் உள்ளன. இதனால், மீனவர்களுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்படுகிறது. எனவே, இதைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, தூண்டில் வளைவுகள் அமைத்துத் தருமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழவேற்காடு பகுதியில் 60 ஆண்டுக் காலமாக 30,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இன்றுவரை பட்டா கிடைக்கவில்லை. எனவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் நகரில் 3 வெவ்வேறு இடங்களில் அரசு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. பத்திரப் பதிவு அலுவலகம்; இங்குள்ள பத்திரப் பதிவு அலுவலகம் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் முதல் மாடியில் மாத வாடகையில் இயங்கி வருகிறது. அது, மார்க்கெட் அருகில், போக்குவரத்து நெரிசல் அதிகமுள்ள குறுகிய சாலையில் உள்ளது. அங்கு அடிப்படை வசதிகளான, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவை இல்லை. தேவையான வாகன நிறுத்துமிடமும் இல்லை. மாடியில் ஏறிச் சென்று பத்திரப் பதிவு செய்ய முதியோர்கள் சிரமப்படுகிறார்கள்.

தாலுகா அலுவலகம்; கடந்த 2006 முதல் 2011 வரை மீன்வளத் துறை அமைச்சராக இருந்த மறைந்த மாண்புமிகு அண்ணன் திரு. கே.பி.பி. சாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஐயா கலைஞர் அவர்களால் திருவொற்றியூரில் தாலுகா அலுவலகம் உருவாக்கப்பட்டது. அந்த அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வருகிறது.

திருவொற்றியூர் நீதிமன்றம்; திருவொற்றியூர் நீதிமன்றம் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் மாத வாடகையாக ரூ.2 இலட்சத்து 75 ஆயிரம் கொடுத்து, அதிகப் போக்குவரத்து நெரிசல் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் இயங்கி வருகிறது. தேவையான வாகன நிறுத்துமிட வசதியும் இல்லை; அடிப்படை வசதிகளும், கழிப்பிட வசதிகளும் இல்லை.

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி பத்திரப் பதிவு அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் நீதிமன்றம் ஆகிய அலுவலகங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தை திருவொற்றியூரில் ஒரே இடத்தில் அமைத்துத் தருமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.பி. சங்கர்: இப்போதுதான் பேசுகிறேன். உரையை முடித்துவிடுகிறேன் ஐயா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். அவ்வளவுதானே!

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இருக்கின்றது. அந்தக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடுநிலைப் பள்ளியின் அருகிலேயே இருக்கிறது. நெஞ்சம் நிறைந்த தலைவர் ஐயா கலைஞர் அவர்கள் 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் முதல்வராக இருந்தபோது, அந்தக் கல்லூரியைக் கொண்டு வந்தார்கள். அண்ணன் சாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இன்றைய முதல்வர்

அவர்களிடத்திலே கேட்டு, இந்தக் கல்லூரியைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அவசர கோலத்தில் அந்தக் கல்லூரியை நடுநிலைப் பள்ளி அருகில் கொண்டு வந்ததால் மாணவச் செல்வங்கள் படிக்க மிக, மிகக் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் உட்காருவதற்கு class room இல்லாமல் *மரத்தடியிலிருந்து படிக்கிறார்கள். ஆகவே, அந்த கல்லூரிக்கான கட்டடத்தை எங்களுக்கு அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூரில் புதிய பேருந்து நிலையம் இல்லை. அங்கே metro railway station வந்துவிட்டது. அங்கு metro railway station வந்துவிட்டதால், அங்கிருந்த திருவொற்றியூர் அஜாக்ஸ் பஸ் நிலையத்தை எடுத்துவிட்டார்கள். இப்போது இரண்டும் ஒரே இடத்தில் இருப்பதால் ஒரு புதிய பேருந்து நிலையத்தை அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதிநவீன வசதிகளுடன்கூடிய ஒரு விளையாட்டு மைதானம் திருவொற்றியூரில் இல்லை. எனவே, திருவொற்றியூருக்கு ஒரு விளையாட்டு மைதானமும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரமில்லாத காரணத்தால் எனது திருவொற்றியூர் தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகள் அனைத்தையும் எழுதிக் கொடுக்கிறேன். இதனை அவைக் குறிப்பில் பதிவு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கழகத்திற்காக உழைத்த எனது தந்தை கே. பரசுராமன் அவர்களுக்கும், எனது தாயார் மாணிக்காச்சி அம்மையார் அவர்களுக்கும், மறைந்த என் அண்ணன் திரு. கே.பி.பி. சாமி அவர்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, எண்ணூரில் அமைந்துள்ள மாநகராட்சி பகுதி நேர மருத்துவமனையினை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரமுயர்த்திடவும்,

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி 5-வது வார்டு, பாரதியார் நகருக்குப் பட்டா வழங்கிடவும், கடற்கரைச் சாலையில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்திடவும் வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி 1-வது வார்டு, வ.உ.சி. நகரில் உள்ள தாமரைக் குளத்தைத் தூர்வாரி சீர் செய்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, அதிகமான தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி; அதிக அளவில் மாசுபடிகின்றன. எனவே, மாசு கட்டுப்பாடு வாரியம்மூலம் முறையாக தொழிற்சாலைகளைக் கண்காணிக்க வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, தினக் கூலிப் பணிப் செய்பவர்கள் அதிகம் வாழும் பகுதியாகும். எனவே, எண்ணூர், மணலி, திருவொற்றியூர் ஆகிய பேருந்து நிலையங்களில் கூடுதல் பேருந்துகளை இயக்கிட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, சிறுபான்மையின மக்களான கிறித்தவர்கள் அதிகம் வாழக்கூடிய பகுதி. இவர்களுக்கென்று தனி கல்லறைத் தோட்டம் அமைத்துத் தந்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, 1-வது வார்டு, கத்திவாக்கம், சத்தியவாணி முத்து நகரில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் SMART வகுப்பறைகள், தேவையான மேசை, நாற்காலிகள் வழங்கிட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, 1-வது வார்டு, தாழங்குப்பம் பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளி நுழைவாயிலின் முன்பு உள்ள பகுதியினை சுத்தம் செய்து, சிறார்கள் விளையாட ஒரு பூங்கா அமைத்துத் தந்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, 13-வது வார்டு, அய்யாபிள்ளை தோட்டம் பகுதியில் குடிநீர் இணைப்பு வசதி, குடிநீர்க் குழாய்கள் அல்லது சின்டெக்ஸ் தொட்டிகள் கட்டி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, 13–வது வார்டு, வினோபா காலனியில் குடிநீர் இணைப்பு வசதி செய்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளில் கண்காணிப்புக் கேமராக்கள் அமைத்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 13–வது வார்டில் உள்ள கன்னியா குருகுலம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியினைத் தரமுயர்த்தித் தந்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, 10–வது வார்டில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியினைத் தரமுயர்த்தித் தந்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, 5–வது வார்டில் உள்ள ரீட் கூட்டுறவு சொசைட்டிக்குச் சொந்தமான காலி இடத்தில் தரமான விளையாட்டு மைதானம் அல்லது கல்லூரி வளாகம், ஒருங்கிணைந்த அரசு அலுவலக வளாகங்கள் என அரசு சார்ந்த கட்டடங்கள் கட்டித் தந்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி, விரிவாக்கப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுனாமி குடியிருப்புப் பகுதிக்கு அருகில் தரமான விளையாட்டு மைதானம் அமைத்துத் தந்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ** என்று சொன்னார்கள். அதை மரத்தடியிலிருந்து படிக்கின்றார்கள் என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தே. மதியழகன் அவர்கள்.

***திரு. தே. மதியழகன்:** நீதி என்னும் தராசை கையில் ஏந்தி, பாரபட்சம் பாராமல் சட்டசபையை நடத்தி, இந்த மாபெரும் அவைக்கு மேலும் பெருமை சேர்க்கும் பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வான்புகழ் வள்ளுவனால் தமிழுக்குப் பெருமை; அழகிய தமிழால் தமிழ்நாட்டுக்குப் பெருமை; தங்கத் தளபதியாரே, நீங்கள் முதல்வரானதால் தமிழ்நாட்டிற்கே பெருமை! (மேசையைத் தட்டும் ஒலி)

காலம்தான் எத்தகைய வலிமையானது. அன்று பாசிச சர்வாதிகாரப் போக்கை வென்றிட சோவியத் ரஷ்யா, ஜோசப் ஸ்டாலினை கொடுத்தது. இன்று, மீண்டும் தலைதூக்கும் பாசிச சர்வாதிகாரப் போக்கை வேரறுக்க, மீண்டும் ஒரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களைக் கொடுத்துள்ளது. அதற்கு அடையாளமாக கடந்த வாரம் வேறு மாநிலத்தில், 'எனது பெயர் ஸ்டாலின்' என்று கூறியவுடன் மக்களிடம் எழுந்த ஆரவாரமும், கரவொலியும் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. அது எத்தனை நபர்களைத் தூங்கவிடாமல் செய்துகொண்டிருக்கிறதோ தெரியவில்லை!

வரலாற்றையே புரட்டிப்போட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் வரிசையில், இன்று ஒட்டுமொத்த இந்திய மக்களும் சிவப்புக் கம்பளம் போட்டு வரவேற்கக்கூடிய மாபெரும் ஆளுமை கொண்ட தன்னிகரில்லா தேசத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களை தலைவணங்கி என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகக் குறுகிய காலக்கட்டத்திலே தமிழக மக்களின் மனங்களை வென்றவரும், எங்களின் எதிர்கால நம்பிக்கை நாயகரும், திராவிட போர் படையின் சேனாதிபதி, இளஞ்சூரியன் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு. உதயநிதி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் பர்கூர் தொகுதி மக்களுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. தே. மதியழகன்] [2022 ஏப்ரல் 13

பிற்பகல் 2–10

பாரூர் கிழக்குப் பிரதானக் கால்வாயிலிருந்து ஒரு புதிய கால்வாய்த் திட்டம் வகுத்து 33 ஏரிகள் மற்றும் 8 தடுப்பணைகளுக்கு நீர் வழங்கும் ஒரு மாபெரும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, 84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும், படேதலா ஏரிக்கு புதிய கால்வாய்த் திட்டம்; தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, எண்ணேகொல்புதூர் வழியாக படேதலா ஏரிக்கு கால்வாய் அமைத்திடவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் ஒரு கால்வாய்மூலம் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளும், மற்றொரு கால்வாய்மூலம் தருமபுரி மாவட்ட விவசாயிகளும் நீர்ப் பாசன வசதியைப் பெறுகிறார்கள். இந்த இரு திட்டங்களும் மக்களின் 50 ஆண்டுக் கால கனவுத் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்துள்ளது. இந்தக் கனவுத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு கழகத் தலைவர் நமது முதல்வர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், பர்கூர் தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நீதியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலகட்டம் என்றால், அது தளபதியாரின் பொற்கால ஆட்சியே என்று நாளைய வரலாறு கூறும் என்பதற்கு சாட்சியாக ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கு உயர்தர மேற்படிப்புகள் என்றாலே எட்டாக்கனியாக இருந்த நிலையை மாற்றி, உங்களுக்கான பாதையை நான் அமைத்துத் தருகிறேன், நாளைய தமிழகத்தை நீங்கள் வழிநடத்தத் தயாராகுங்கள் என சமூக நீதியைக் கையிலெடுத்து, அனைவரும் சமநிலையில் கல்வி பயிலும் வகையில் நமது மாநிலத்திற்கென புதிய கல்விக் கொள்கைகளைப் புகுத்தி, இதுவரை இல்லாத அளவிற்குக் கல்வித் துறைக்கு அதிக அளவிலான நிதி, மருத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம், விவசாயத் துறையில் அதிக கவனம் என முக்கியத் துறைகளில் பார் போற்றும் வளர்ச்சியைத் தரக்கூடிய முத்து முத்தான அம்சங்களைக் கொண்ட நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, இது சாமானியர்களுக்கான ஆட்சி என்பதை மெய்ப்பித்த, கோடானு கோடி தமிழ் மக்களின் மனங்களில் வாழும் சோழ சக்கரவர்த்தியே, தங்களை மீண்டும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

தமிழனுக்கே உரித்தான வேட்டி, சட்டையில் ராஜ கம்பீர நடையில் தகதகக்க coat suit அணிந்து, style-க்கே style ஆக உலகத் தமிழர்கள் மற்றும் கோடிக்கணக்கான இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் இன்றைய இந்தியாவின் super hero நமது முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களே என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதலீட்டாளர்களின் முகவரியாகத் தமிழ்நாட்டை மாற்றக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் காலடி வைப்பது டெல்லியோ அல்லது துபாயோ, அங்கெல்லாம் இப்படி ஒரு தலைவர் நமக்குக் கிடைக்கமாட்டாரா என அந்த மக்களின் மனங்களையும் கவர்ந்திழுத்து, தமிழகத்திற்கான நலன்களைக் கையோடு பெற்று வருவதில் சம காலத்தில் தங்களுக்கு நிகர் தாங்கள் ஒருவரே என்பதை உலகறியச் செய்துவீட்டீர்கள் தளபதியார் அவர்களே.

இன்றைய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கவிருக்கும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சோழ நாடு சோறுடைத்து" என்கிற பழமொழி அன்றைய சோழப் பேரரசர்களின் காலத்தில் தமிழகம் எவ்வளவு வளமான பூமியாக இருந்தது என்பதை எடுத்துச் சொல்வதைப்போல, திருவாரூர் கண்டெடுத்த மனுநீதிச் சோழனின் ஆட்சியில் மும்மாரி மழை பெய்து, இருண்டிருந்த தமிழகத்தில் புதிய விடியல் ஏற்பட்டு, மாபெரும் வளர்ச்சிப் பாதையில் தமிழகம் சென்று கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, வேளாண்மைத் துறைக்கென தனி பட்ஜெட் அளித்து விவசாயிகளுக்கும், உழவர்களுக்கும் உற்ற நண்பனாய் இருக்கும் அரசு என்பதை இந்த பட்ஜெட் நிரூபித்துள்ளது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் மண் வளம் குறித்து அறிந்து கொள்வதற்காக 'தமிழ் மண் வளம்' என்கிற தனி இணைய முகப்பு அமைத்தல்; ரூ.300 கோடி மதிப்பீட்டில் கிராமங்களில் வீடுகளுக்கு இலவச தென்னங்கன்று வழங்கும் திட்டம்; சேலம், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி உள்ளிட்ட 4 மாவட்டங்களில்

துவரை உற்பத்தி மண்டலங்கள் அமைத்தல்; கலைஞரின் அனைத்துக் கிராம வேளாண் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு; 10 புதிய உழவர் சந்தைகள் மற்றும் 50 உழவர் சந்தைகளைச் சீரமைக்க நடவடிக்கை; மாலை நேரத்திலும் உழவர் சந்தைகள் நடத்த அனுமதி; பட்டியலினத்தைச் சேர்ந்த குறு, சிறு விவசாயிகளுக்கு 20 சதவிகிதம் கூடுதல் மானியம் வழங்க ரூ.5 கோடி ஒதுக்கீடு; தோட்டக்கலைப் பயிர்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.30 கோடி ஒதுக்கீடு; இரவு நேரங்களில் pumpsets–ஐ இயக்கச் செல்லும் விவசாயிகள், பாம்புக்கடிக்கு ஆளாவதைத் தடுக்கும்வகையில், pumpsets–ஐ தொலைவிலிருந்தே கைபேசிமூலம் இயக்க உதவிடும் தானியங்கிக் கருவிகளுக்கு 5,000 ரூபாய் வரை மானியம்; வேளாண்மை பட்டப் படிப்பு முடித்த 200 இளைஞர்களுக்குத் தொழில் தொடங்க தலா ஒரு இலட்சம் ரூபாய்; வேளாண்மைப் பொருட்களின் விதை முதல் விற்பனை வரை அறிந்துகொள்ள புதிய செயலி உருவாக்குதல்; இடுபொருள் விளைபொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல 2,750 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 604.73 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைத்தல்; முதலமைச்சரின் சூரிய சக்தி pumpset அமைக்கும் திட்டத்தின்கீழ் 70 சதவிகித மானியத்துடன் 3,000 pumpsets அமைக்க 65.34 கோடி ரூபாய் என நிதியொதுக்கி வேளாண் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு முதல்வர் தளபதியாரின் வழிகாட்டுதலின்பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாரித்துள்ள இந்தச் சிறப்பான பட்ஜெட்டை தமிழக மக்களைப்போல நானும் மனதார வரவேற்கின்றேன்.

அதேபோல, குறு, சிறு விவசாயிகள் வருவாய்த் துறையின் சான்றிதழ்களைப் பெறுவதற்கு நடைமுறையில் அதிக சிரமப்பட வேண்டியுள்ளது. அவற்றை எளிமைப்படுத்தி, எளிய முறையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

தென்னை மரங்களில் ஆண்டுதோறும் ஏற்படும் தென்னை கருந்தலைப்புழு, சுருள் வெள்ளை ஈ, பூச்சி மற்றும் குரும்பை உதிர்வு போன்ற காரணங்களால் தென்னை மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்கும் வகையில், தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு குறித்து தெரிவிக்க வேண்டுகிறேன். தென்னை ஒட்டுண்ணி குறைவான அளவே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, தனியாகக் கூடுதல் உற்பத்தி

மேற்கொள்ள ஒட்டுண்ணி உற்பத்தி மையத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும். தென்னை பயிர் மகத்துவ மையம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைத்திட வேண்டும்.

பிற்பகல் 2–15

தமிழ்நாட்டில், மா மரங்கள் 3 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றன. அதன்மூலம் வருடந்தோறும் சுமார் 5 இலட்சம் மெட்ரிக் டன் மா உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தத் தருணத்தில், மா பழ ஈ எனும் ஏகாடியா பூச்சி இனங்கள் மாமரங்களைத் தாக்கி, மகசூலைப் பெரிய அளவில் சேதமடைய வைக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த இயற்கை முறையில் பொறி வைத்து, ஈக்களை அழிக்க ஏக்கருக்கு 5 எண்கள் வீதம் 5 இலட்சம் பொறிகள் இலவசமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பெரும்பாலும் தங்களுக்கு அருகிலுள்ள அக்ரோ சர்வீஸ் மருந்துக் கடைகள் மூலமே மருந்துகளைப் பெற்று, பயன்படுத்தி வருகின்றார்கள். ஒரு சில மருந்துக் கடைகளில், தரமற்ற மருந்துகளும், ஓவர்டோஸ் (அசிபேட்) மருந்துகளும் விற்கப்படுகின்றபட்சத்தில், அதை விவசாயிகள் பயன்படுத்தும்பொழுது நிலத்தின் தன்மை மிகவும் பாதிப்படைவதுடன், அதில் பயிரிடப்பட்டிருக்கும் பயிர்களும், செடிகளும் நாசமடைவதால், விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி விடுகிறது. இதனைத் தடுக்கும் வகையில், அதிகத் தரத்துடன் குறைந்த விலையில், அரசு சார்பில் கலைஞர் விவசாய உதவி மையங்களைத் தொடங்கி, அதில் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் குறைந்த விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்து, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திட வேண்டுமென்று, விவசாயிகளின் காவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க டிராக்டர், மினி டிராக்டர், களை எடுக்கும் கருவி, ஸ்ப்ரேயர் மற்றும் இதர வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மா மற்றும் தென்னை மரங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருவதால், சொட்டுநீர்ப் பாசனத்திற்குப் பதிலாக, முக்கால் இன்ச் பி.வி.சி. பைப்பின்மூலம் நேரடியாக மரத்திற்கு

தண்ணீர் பாய்ச்சும் வகையில், நுண்ணீர்ப் பாசன முறையை மாற்றியமைத்து, அதற்கு அனைத்து மானியமும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சொட்டுநீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையில், பெரு விவசாயிகளுக்கு 70 சதவிகித மானியம் என்பதால், யாரும் மானியத்தில் அமைக்க முன்வருவதில்லை. இதில், அனைத்து விவசாயிகளுக்கும், 5 ஏக்கர் வரை முழு மானியம் வழங்க திருத்தம் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திற்கும் உலர்களங்களை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். காட்டுப் பன்றிகளால் ஏற்படும் பயிர்ச் சேதாரங்களைக் கட்டுப்படுத்த, ECODAN மருந்தினை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளின் பாதி உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நாடாக இருப்பது இஸ்ரேல். பாலைவனத்தையும், உப்பு நீரையும் கொண்ட இஸ்ரேல் அதிநவீன தொழில்நுட்ப வசதியுடன், நவீன சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் பாதுகாப்பான பண்ணை விவசாயத்தின்மூலம் அதிக உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இதுபோன்ற நாடுகளின் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளை நம் விவசாயிகளுக்கும் அறிமுகம் செய்து, விவசாயத்தில் புதிய புரட்சியை உண்டாக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1,314.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும், இந்த ஆண்டு முதல் வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்கள் என்னும் புதிய திட்டம், 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறைவேற்றப்பட இருப்பதும் மிகவும் பாராட்டுக்குரிய அம்சமாகும். அதேவேளையில், இன்றளவும் கிராமப்புறங்களில் கறவை மாடுகள் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரமாகஇருந்துவருகின்றன.பெரும்பாலானகுடும்பத்தினர் தங்களின் கால்நடைகள்மூலம் பெறும் வருமானத்தில்தான் தங்களின் குடும்பச் செலவுகளையும், பிள்ளைகளின் படிப்புச் செலவுகளையும் ஈடுசெய்து வருகின்றார்கள். இந்நிலையில், கோமாரி போன்ற நோய்த் தாக்குதலுக்குள்ளாகி கால்நடைகள் இறக்க நேரிடும்பொழுது, அம்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இதனைத் தடுக்கும் வகையில், கடந்த ஆண்டுகளைவிட அதிக முன்னெச்சரிக்கையுடன், இதற்குத் தேவைப்படும் மருந்துகள் மற்றும் வேக்சின்கள் அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே எப்பொழுதும் எளிதாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தீவன விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் கால்நடைகளை வளர்க்கப் பெரிதும் சிரமப்படுகின்றார்கள். கால்நடைகளை வளர்க்க ஊக்குவிக்கும் விதமாக, பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேட்டதைக் கொடுக்கும் வள்ளல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை மனுவாகச் சமர்ப்பிக்கின்றேன். அவற்றில், சிலவற்றை மட்டும் நான் இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

வளர்ந்துவரும் நகரங்களில் பர்கூர் பேரூராட்சியும் ஒன்றாகும். இங்கு கழிவுநீர் செல்ல வசதிகளின்றி, பொது இடங்களில் தண்ணீர் தேங்கி நின்று, அசுத்தமான நிலையில் உள்ளது. எனவே, பர்கூர் நகரில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், என்னைப் பாருங்கள். நீங்கள் பேசுங்கள். இருந்தாலும், உங்கள் தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றை, நீங்கள் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. தே. மதியழகன்: பர்கூர் பேரூராட்சியைச் சுற்றி கிராமப்புறங்கள் அதிகளவில் உள்ளதால், 100 நாள் வேலைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி சிப்காட்டில் தொழிற்சாலைகள் அதிகரித்து வருவதால், அங்குள்ள அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அங்கு மருத்துவர்களும் குறைவாக உள்ளனர். மேலும், இரவு நேரங்களில் சிகிச்சை அளிக்க மருத்துவர்கள் இருப்பதில்லை. எனவே, போச்சம்பள்ளி அரசு பொது மருத்துவமனையைத் தரமுயர்த்தி, 24 மணி நேரமும் மருத்துவர்களுடன் மருத்துவமனையை இயக்கிட ஆவன செய்ய உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் முக்கிய நகரப் பகுதியாக போச்சம்பள்ளி திகழ்கிறது. போச்சம்பள்ளி வட்டமாக உருவாக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும், தற்போதுவரை ஊராட்சியாகவே உள்ளதால், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் போச்சம்பள்ளியை மையமாகக் கொண்டு, புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்க வேண்டும். இதன்மூலம் போச்சம்பள்ளியை ஒட்டியுள்ள பிற கிராம ஊராட்சிகள் வளர்ச்சி பெறும். மேலும், போச்சம்பள்ளியில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 2–20

படேதலா ஏரியிலிருந்து கங்கா நகர் ஏரி வரை தண்ணீரைக் கொண்டு சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஊர்க்காவல் படையினருக்குத் தினக் கூலி அடிப்படையில் அல்லாமல், மாத ஊதியம் வழங்கும் முறையை அமல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. தே. மதியழகன்: கடந்த 2012 ஆம் ஆண்டு பாலேகுளி ஏரி முதல் கட்டாகரம் ஏரி வரை 28 ஏரிகளுக்கு கால்வாய் வெட்ட 109 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன், போதும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. தே. மதியழகன்: சுமார் 10 ஆண்டுக் காலமாக இதுநாள்வரை அவர்களுக்கு இதற்கான இழப்பீட்டுத் தொகை ரூ.22.30 கோடி வழங்கப்படாமல் உள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, இத்தொகையினை விடுவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'தமிழுக்கும் அமுதென்று பேர்–அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்'

'இன்றைய அரசியல் ஆளுமைக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று பேர். இனி அவரின்றி அசையாது, இந்திய

அரசியல் என்பது நேர்.' உலகம் போற்றும் ஆட்சியைத் தந்து தனக்கென தனி வரலாற்றை உருவாக்கிய ராஜேந்திர சோழனைப்போல, பகைவர் கூட்டங்களின் சதிகளையெல்லாம் முறியடித்து, ஏழையெளிய, சாமானிய மக்களுக்கான பார்போற்றும் ஏற்றமிகு பொன்னான ஆட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் திருவாரூர் சோழனே!

ஒளிமயமான எதிர்காலம் கண்ணுக்கெதிரே தெரிவதைக் கண்டு மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் தமிழக மக்களில் ஒருவனாக எங்களின் திராவிடத் தலைவன் மன்னாதி மன்னன், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களை வாழ்த்தி, வணங்குகிறேன். உமது ஆட்சியின் ஒவ்வொரு நாளும் தமிழகத்திற்குச் சிறப்பான நாளே என்று கூறி, மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களை வாழ்த்தி வணங்கி வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பர்கூர் ஒன்றியம், மல்லப்பாடி கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைக்கவும். மல்லப்பாடி முதல் மரிமானப்பள்ளி சாலையின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கவும், மல்லப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் அமைக்கவும், மல்லப்பாடி முதல் மரிமானப்பள்ளி வரை, மல்லப்பாடி முதல் கின்னமல்லப்பாடி வரை, குமரங்கனப்பள்ளி முதல் பிள்ளையார் கோயில் வரை தார்ச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மல்லப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் வெங்கடாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய பள்ளிக் கட்டடம் கட்டவும், மல்லப்பாடு கிராமத்தில் பேவர் பிளாக் அமைக்கவும் அண்ணா நகர், 1-வது வார்டில், புதிய ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைக்கவும், கப்பல்வாடி-தொகரப்பள்ளி இணைப்புச் சாலை முதல் மஸ்திகானூர் வரை, கப்பல்வாடி-தொகரப்பள்ளி இணைப்புச் சாலை முதல் பச்சையப்பன் கொட்டாய் வரை மற்றும் கப்பல்வாடி-தொகரப்பள்ளி இணைப்புச் சாலை முதல் தொட்டில் அம்மன் கோயில் வரை சாலை,

மாத்தூர்-மல்லப்பாடி சாலை முதல் மரிமானப்பள்ளி இணைப்புச் சாலை, மாத்தூர்-மல்லப்பாடி சாலை முதல் ஏரி கொல்லமேடு இணைப்புச் சாலை மேம்பாடு செய்யவும் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர்-திருப்பத்தூர் சாலை முதல் தன்னீர்பள்ளம் MGNREGS திட்டத்தில் அமைக்கப்பட்ட தார்ச் சாலையில், நிலுவையில் உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றவும், சின்னகொன்னாம்பட்டி தார்ச் சாலை முதல் இந்திரா நகர், கே.கே. நகர் வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

கப்பல்வாடி கிராமம், மாரியம்மன் கோயில் முதல் மாதப்பன் வீடு வரை, கப்பல்வாடி கிராமம், கலையரசன் வீடு முதல் மாதேஸ் வீடு வரை, மொண்டிகானூர் கிராமம், கிருஷ்ணவேணி வீடு முதல் ராஜேந்திரன் வீடு வரை, மொண்டிகானூர் கிராமம், விநாயகர் கோயில் முதல் இந்திராணி வீடு வரை, ரங்கசமுத்திரம் கிராமம், ராஜா வீடு முதல் ஜிட்டிகானூர் தார்ச் சாலை வரை, பையனூர் கிராமம், வாத்தியார் வீடு முதல் மோகன் வீடு வரை, பையனூர் கிராமம், மத்தூர்-மல்லப்பாடி சாலை முதல் முஸ்லிம் வீதி வரை, சகில்நத்தம் மேல் காலனி தார்ச் சாலை முதல் மோகன் வீடு வரை, கலேத்துப்பட்டி கிராமம், முருகன் கோயில் தார்ச் சாலை முதல் திருப்பத்தூர் தார்ச் சாலை வரை, மொண்டிகானூர் கிராமம், அங்கன்வாடி பள்ளி முதல் சென்னம்மாள் வீடு வரை, பையனூர் கிராமம், OHT முதல் சம்பத் வீடு வரை, கப்பல்வாடி, பெருமாள் கோயில் முதல் கோல்டன் குரூப்ஸ் கட்டடம் வரை, கப்பல்வாடி, கேசவன் வீடு முதல் நடராஜன் வீடு வரை, கப்பல்வாடி, குமுதா வீடு முதல் நடராஜன் வீடு வரை, கப்பல்வாடி, விக்டோரியா வீடு முதல் மஞ்சுநாத் வீடு வரை, சிகரலப்பள்ளி, பழனி வீடு முதல் அரசு மேல்நிலைப் பள்ளி வரை, சிகரலப்பள்ளி, தார்ச் சாலை முதல் ஆதில் பாஷா வீடு வரை, சிகரலப்பள்ளி, சம்பத் வீடு முதல் மணிக்கொடி வீடு வரை, மொண்டிகானூர், தார்ச்சாலை முதல் சின்னராஜ் வீடு வரை ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலைகள் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர்-திருப்பத்தூர் தார்ச் சாலையிலிருந்து முருகர் கோயில் செல்லும் வழி, மொண்டிகானூர், மகேந்திரன் வீட்டிற்குச் செல்லும் சாலை, சமத்துவபுரம் பின்பு சுடுகாட்டிற்குச் செல்லும்

சாலை மற்றும் இந்திரா நகர் சாலை ஆகியவற்றில் சிறு பாலங்கள் அமைத்துத்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

கப்பல்வாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் சிகரலப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மைதானம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

கப்பல்வாடி தார்ச் சாலை முதல் காமராஜ் வீடு வரை, வெங்கடசமுத்திரம் தார்ச் சாலை முதல் நியாய விலைக் கடை வரை, தம்மகவுண்டனூர் தார்ச் சாலை முதல் அருந்ததியர் தெரு வரை, கப்பல்வாடி–தொகரப்பள்ளி சாலை முதல் சரவணன் ஜெகதா வீடு வரை பேவர்பிளாக் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லாத்துப்பட்டி மற்றும் ஜிட்டிகானூர் கிராமங்கள், ஏரி கொல்லமேடு ஆதி திராவிடர் காலனி, கப்பல்வாடி, தளபதி நகர் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

குட்டப்பநாயக்கனூரில் புதிய ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைக்கவும், ஒப்பதவாடியில் காளியப்பன் இருளர் காலனி முதல் சாமுண்டீஸ்வரி கோயில் வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கிநாயனபள்ளி சமயபுரம் முதல் மல்லப்பாடி எல்லை வரை, கிருஷ்ணசாமி கோயில் முதல் சின்னகோட்டூர் வரை, NH நார் தொழிற்சாலை முதல் ஜெயராமன் வட்டம் வரை தார்ச் சாலை அமைக்கவும், குட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர், கட்டடங்கள் கட்டித் தரவும், குண்டியல்நத்தம் கிழக்குப் பகுதியில் புதிதாக நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும், காளியம்மன் கோயில் இருளர் காலனியில் புதிய தொகுப்பு வீடுகள் கட்டித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

குட்டூர் மாரியம்மன் கோயில் மெயின் சாலையிலிருந்து நடுமூர் வரை, குட்டூர் மெயின் சாலையிலிருந்து பழைய ஊர் காலனி வரை, ஆம்பள்ளி மெயின் சாலையிலிருந்து, 200 மீ., வெங்கம்மாள் கோயிலிலிருந்து, ஆம்பள்ளி ஆதி திராவிடர் காலனி, ஓம் சக்தி கோயில் முதல் சமுதாயக் கூடம் வரை, ஆம்பள்ளி சமுதாயக்கூடம் அருகிலிருந்து 150 மீ. சிமெண்ட் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

குட்டூர் கிராம சுடுகாட்டுக்குச் சுற்றுச் சுவர் அமைக்கவும், ஜிஞ்சம்பட்டிரங்கன் வட்டம் முதல் முருகன் கோயில் வரை தார்ச் சாலை அமைக்கவும், ஆம்பள்ளி ஆதி திராவிடர் காலனியில் புதிய ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைக்கவும், பெலவர்த்தி ஊராட்சி, வள்ளுவர்புரம் கிராமத்தில் சிமென்ட் சாலை அமைக்கவும், பெலவர்த்தி ஊராட்சி, குண்டூர் கிராமத்தில் சிமென்ட் சாலை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டூர் மேல் ஓனியிலிருந்து கதரியப்பன் கோயில் வரை, கின்னூர் கூட்ரோடு கிராமத்திலிருந்து காட்டூர் மேல் ஓனி வரை, புஸ்பகிரி கிராமம் முதல் ஏரிகோடி வரை, நாகமரத்துப்பள்ளம் கிராமம் முதல் காண்டியப்பன் வீடு வரை தார்ச் சாலை மற்றும் பெலவர்த்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சீகல்பள்ளி கிராமத்தில் முனியப்பன் வீடு முதல் ஆறுமுகம் வீடு வரை, காட்டூர் கிராமத்தில் கின்னூர் முதல் மேல் ஓனி வரை, கின்னூர் கிராமத்திலிருந்து முருகர் கோயில் வரை பேவர் பிளாக் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அச்சமங்கலம் ஊராட்சியில், பில்லக்கொட்டாய் முதல் முத்துரான்கொட்டாய் வரை, பில்லக்கொட்டாய் முதல் பச்சையப்பன்கொட்டாய் வரை, கப்பல்வாடி சாலை முதல் ஆடாலம் வரை, போச்சம்பள்ளி சாலை முதல் தாயப்பன் கொட்டாய் வழியாக அகுளான் குட்டை வரை தார்ச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பில்லக்கொட்டாய், அண்ணாநகர், நாகப்பன்கொட்டாய் ஆகிய கிராமங்களில் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பில்லக்கொட்டாய், அண்ணா நகர், பூக்குட்டை மற்றும் பசவேஸ்வரன்கொட்டாய் ஆகிய கிராமங்களில் புதிய ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்லப்பள்ளி ஊராட்சியில் கொங்கன்செருவு முதல் சன்னகோனாம்பட்டி ஆலமரம் வரை, மல்லப்பாடி சாலை முதல் தீர்த்தகிரிப்பட்டி ஊர் வரை, கொல்லசேக்கினாம்பட்டி செல்லும் தார்ச் சாலை முதல் பாரதிபுரம் கந்திலிக்கு செல்லும் இணைப்புச்

சாலை வரை, தீர்த்தகிரிப்பட்டி பஸ் ஸ்டாப் முதல் தீர்த்தகிரிப்பட்டி கிராமம் வரை தார்ச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்லப்பள்ளி ஊராட்சி, நீசானூர் கிராமத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைக்கவும், பட்லப்பள்ளி கூட்டு ரோட்டில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கவும், பர்கூர் பேரூராட்சி, ஜெருனிக் கொல்லை கிராமத்தில் புதிய தார்ச் சாலை அமைக்கவும், பர்கூர் பேரூராட்சி, 13 மற்றும் 15-வது வார்டுகளில் RO குடிநீர் மற்றும் 15-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

அஞ்சூர் ஊராட்சி, அஞ்சூர் கிராமத்தில் சிமெண்ட் கல் அமைக்கவும், அஞ்சூர், ஜெகதேவி ஆண்கள் மற்றும் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறைகள், புதிய சுற்றுச் சுவர் அமைக்கவும், அஞ்சூர் நடுத் தெருவிலுள்ள பிள்ளையார் கோயில் அருகே RO plant அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

பண்டசீமனூர் ஊராட்சி, பைனூரான் வட்டம் முதல் ஆடாலம் சாலை வரை, குண்டலானூர் கிராமம், கிருஷ்ணம்மாள் மலைக் கோவில் முதல் ஊர் நாயுடு வட்டம் வரை, பண்டசீமனூர் முதல் ஊர் சன்னநாயுடு கொட்டாய் வரை தார்ச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பெருகோபனப்பள்ளி ஊராட்சி, கரடிகொல்லப்பட்டி ஏரிக்கரை முதல் குட்டூர் வரை, கரடிகொல்லப்பட்டி ஏரிக்கரை முதல் உத்தேரி வட்டம் வரை, பெரியார் நகர் முதல் குருகப்பட்டி வரை, நாயுடு குருகப்பட்டி கிராமம் முதல் கன்னண்டஹள்ளி ஊராட்சி எல்லை வரை, கிட்டனூர் கிராமம் மயானம் முதல் கெவிசென்றாயப் பெருமாள் கோயில் வரை தார்ச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பெருகோப்பனப்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகம் முதல் அரசு வழி இளங்கோவன் வீடு வரை, குருகப்பட்டி கிராமம், வாசுதேவன் வீடு முதல் முனிராஜ் வீடு வரை, பெருகோப்பனப்பள்ளி கிராமத்தில் 200 மீ., கழிவுநீர்க் கால்வாய் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

நாயுடுகருப்பட்டி கிராமம், தங்கவேல் வீடு முதல் விநாயகர் கோயில் வரை, பெருகோபனப்பள்ளி நூலகம் முதல் கிருஷ்ணன் வீடு வரை, கிட்டனூர் கிராமம், மயான தார்ச் சாலை முதல் செந்தில் வீடு வரை, கரடி கொல்லப்பட்டி கிராமம், அரச மரம் முதல் சீனிவாசன் வீடு வரை, சவுளூர் கிராமம், தார்ச் சாலை முதல் நாகராஜ் வீடு வரை, கண்ணுகான் வட்டம் கிராமம், OHT முதல் அப்பு வீடு வரை, சிமெண்ட் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

குள்ளம்பட்டி ஊராட்சி, கே. புதூர் கிராமம், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு ஒரு கழிப்பறை, சுற்றுச் சுவர் அமைக்கவும், குள்ளம்பட்டி கிராமம், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கழிப்பறை வசதியும் செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜெகதேவி ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு RC–வுடன் நுழைவு வாயில் மற்றும் ஜெகதேவி முருகன் கோயில் முன்பு கழிவு நீர்க் கால்வாய் மற்றும் ஜெகதேவி பாரத கோயில் முதல் காலனூர் ரோடு வரை தார்ச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலேப்பள்ளி ஊராட்சி, KTM நகர், மார்டின் வீடு முதல் ஜெசிந்தா வீடு சிமெண்ட் சாலை வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்கவும், எலத்தகிரி அன்னை தெரசா நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும், முருக்கம்பள்ளம் பாரதி கோயில் அருகில் மற்றும் முருக்கம்பள்ளம் கிணற்றுக்கு அருகில் தடுப்புச் சுவர் அமைக்கவும், சங்கராச்சாரி பள்ளி அருகிலிருந்து முருக்கம்பள்ளம் வரை கிமெண்ட் சாலை அமைக்கவும் போச்சம்பள்ளி ஒன்றியம், காட்டாகரம் ஊராட்சியில் பிரதான சாலை முதல் காசிம்கான் ஏரிக்கரை வழியாக காந்தி நகர் மேல்கொட்டாய் வரை தார்ச் சாலை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். போச்சம்பள்ளி ஒன்றியம், காட்டாகரம் ஊராட்சி, வேடர்தட்டகல், பட்டகப்பட்டி மற்றும் அனகோடி கூட்டுரோடு கிராமங்களுக்கு சமுதாயக்கூடம் அமைக்கவும் போச்சம்பள்ளி ஒன்றியம், காட்டாகரம் ஊராட்சி, இராம் நகர் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், வெப்பாலம்பட்டி ஊராட்சியில் வெப்பாலம்பட்டி இணைப்புச் சாலை முதல் தொப்படிக்குப்பம் வரை 1.5 கி.மீ. தார்ச் சாலை அமைக்கவும், கேட்டுக்கொள்கிறேன்.

போச்சம்பள்ளி ஒன்றியம், வெப்பாலம்பட்டி ஊராட்சியில் வெப்பாலம்பட்டி-அரசு உயர் நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், வெப்பாலம்பட்டி ஊராட்சியில், மாங்கனி மலைமுருகன் கோயில் அடிவாரத்தில் தார்ச் சாலை அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், வெப்பாலம்பட்டி கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், விளங்காமுடி ஊராட்சியில் மல்லிக்கல் கிராமத்தில் HD குடிநீர்க் குழாய் அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், பாப்பாரப்பட்டி ஊராட்சியில், பாப்பாரப்பட்டி முதல் கொட்டாவூர் வரை, பெரிய புளியம்பட்டி முதல் தருமபுரி மாவட்ட எல்லை வரை மற்றும் கள்ளியூர் முதல் பிள்ளக்கொட்டாய் வரை, தார்ச் சாலை அமைக்கவும், கொட்டாவூர் செல்லும் தார்ச் சாலையை சீரமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், வலசகவுண்டனூர் ஊராட்சியில் கூச்சானூர்புதூர் பெருமாள் கோயில் முதல் சந்தூர் போச்சம்பள்ளி சாலை வரை தார்ச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

போச்சம்பள்ளி ஒன்றியம், மேல் ஜிம்மாண்டியூர் குக்கிராமம் OHT முதல் மேல் ஜிம்மாண்டியூர் வரை சிமென்ட் சாலை அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், வலசகவுண்டனூரில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும், ஜிமாண்டியூரில் சமுதாயக் கூடம் அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், குள்ளம்பட்டி ஊராட்சி, சின்ன ஆலேரள்ளி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் சமையல்கூட கட்டடம் கட்டவும், கோடியூர்-ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டவும், கே.புதூர் கிராமம், புதிய தார்ச் சாலை அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், பண்டசீமனூர் ஊராட்சி, பைனூரான் வட்டம் முதல் ஆடாலம் சாலை வரை தார்ச் சாலை அமைக்கவும் குண்டலானூர் கிராமத்தில் கிருஷ்ணம்மாள் மலைக்கோயில் முதல் ஊர்நாயுடு வட்டம் வரை, பண்டசீமனூர் முதல் ஊர் சின்ன நாயுடு கொட்டாய் வரை தார்ச் சாலை அமைக்கவும், போச்சம்பள்ளி ஒன்றியம், பண்டசீமனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டவும், பாரூர் ஊராட்சி, பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், சுற்றுச் சுவர், நவீன கழிப்பறைக்

கட்டடங்கள் கட்டவும், செல்லம்பட்டி முதல் அரசம்பட்டி வரை தார்ச் சாலை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

மோட்டுப்பட்டி மாரியம்மன் கோயில் சாலையை சிமெண்ட் சாலையாக அமைக்கவும், செல்லம்பட்டி முதல் சுடுகாட்டிற்குச் செல்லும் கால்வாயில் சிறு பாலம் அமைக்கவும், செல்லகுட்டப்பட்டி ஊராட்சியிலுள்ள புங்கம்பட்டி கிராமத்தில் ஒரு சமுதாயக் கூடம் அமைக்கவும், வடுகநத்தம் அம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் காட்டுக்கொல்லை சுக்கிரி வீடு முதல் குமரேசன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைக்கவும், புங்கம்பட்டி கருப்பன் கொட்டாய் செல்லும் சாலையில் தடுப்புச் சுவர் அமைக்கவும், நாகர் குட்டையில் உள்ள தார்ச் சாலையைப் புதுப்பித்துத் தரவும் வீரமலை ஊராட்சி, வீரமலை முதல் சாமியார் கொட்டாய் மற்றும் முருகர் கோயில் வழியாக நீலகிரி கொட்டாய் வரை தார்ச் சாலை அமைக்கவும், சமுதாயக் கூடத்திற்குப் புதிய சமையல் கூடம் கட்டவும் கேட்டுக்கொள்கிறேன்.

மகாதேவகொல்லஅள்ளி ஊராட்சி மங்கள்பட்டி கிராமத்திலிருந்து பெருமாள் நகர் ஊர் பெரிய மாரியம்மன் கோயில் வரை புதிய தார்ச் சாலை மற்றும் இரண்டு கல்வெட்டுகள் அமைக்கவும் கீழ்குப்பம் ஊராட்சி.கதிரடிக்கும் களம் அமைக்கவும் வணிக வளாகத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும், பெரிய ஏரிப் பாலத்திலிருந்து யுவராஜ் வீடு வரை மற்றும் கோணக்கரை–காவபுதூர் வரை தார்ச் சாலை அமைக்கவும், கேட்டுக்கொள்கிறேன். மருதேரி ஊராட்சி.பேருஅள்ளியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் R.O. Plant, நவீன பேருந்து நிறுத்தம், ஆரம்ப சுகாதார நிலையம், கால்நடை மருத்துவமனை, பேருஅள்ளி காலனியில் நவீன சமுதாயக் கூடம் மற்றும் பேருஅள்ளியில் நவீன சமுதாயக் கூடம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப்பட்டினம் ஒன்றியம், பென்னேஸ்வரமடம் ஊராட்சி. பென்னேஸ்வர மடம் –அண்ணா நகர் செல்லும் வழி, கோடிப்பறை கொட்டாய் மற்றும் தாசன்கொட்டாய், ராசன் நகர்–போயர் தெரு வரை தார்ச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலேகுளி ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 8 வகுப்பறைக் கட்டடங்கள், விளையாட்டு மைதானம், சத்துணவு சமையற்கூடம் மற்றும் நவீன கழிப்பறைக் கட்டடம் கட்டவும்,

பாலேகுளி கிராமத்தில் பிரதான தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய், சிமென்ட் சாலை அமைக்கவும், அகரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தரவும், எருமாம்பட்டி ஊராட்சி கூரம்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கவும், தளிஅள்ளி ஊராட்சி, தளிஅள்ளி கிராமத்திற்குச் செல்லும் பாதையில் சரளைக் கற்கள் போட்டு, புதிய சிறு பாலங்கள் அமைத்து, தார்ச் சாலை உருவாக்கவும் தாதன்கொட்டாய் கிராமத்தில் பெருமாள் வீடு முதல் முன்னாள் தலைவர் சுப்பிரமணி வீடுவரை சிமென்ட் சாலை அமைக்கவும், மாரிச்செட்டிஅள்ளி ஊராட்சி பாறையூர் கிராமத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், கதிரடிக்கும் களம் அமைத்துத் தரவும், கேட்டுக்கொள்கிறேன்.

மாரிச்செட்டிஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

தாமோதரஅள்ளி ஊராட்சி, சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் சந்தனூர் சாலையிலிருந்து தர்மகர்த்தாகொட்டாய் வரை சிமென்ட் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், ஏழைகளின் ஒளிவிளக்கு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் தந்த தமிழன்னையின் தவப் புதல்வர், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு அரசமைப்பு பாதுகாப்புப் பெற்றுத் தந்த சமூக நீதி காத்த வீராங்கனை, ஆளுமையின் அரசியல் தலைவி, என்னைப் போன்ற எளியோரையும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி அழகு பார்த்த புரட்சித் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் துயில் கொண்டுள்ள திசை நோக்கி வணங்குகிறேன்.

டெல்டா விவசாயிகளின் நலன் காக்க வேளாண் பாதுகாப்பு மண்டலம் கொண்டு வந்த விவசாயிகளின் காவலர், குடிமராமத்து நாயகன், மருத்துவப் படிப்பில் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு தந்து அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை நனவாக்கிய ஒப்பற்றத் தலைவர், 11 மருத்துவக் கல்லூரிகள்; தமிழ்நாடு முழுவதும் தரமான சாலைகள், புதிய மாவட்டங்களை உருவாக்கித் தந்த வளர்ச்சியின் நாயகர், முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஐயா EPS அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையின் அடையாளம், விசுவாசத்தின் விஸ்வரூபம், ஜல்லிக்கட்டு நாயகன், முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஐயா OPS அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், வடகோட்டிப்பாக்கம் என்னும் குக்கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை பஞ்சாயத்துத் தலைவர் முதல் சட்டமன்ற உறுப்பினர் வரை அடையாளம் கண்டு ஆளாக்கிய விழுப்புரம் மாவட்டத்தின் ஆற்றல்மிகு மாவட்டச் செயலாளர், என் அரசியல் ஆசான் முன்னாள் சட்டத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தின் அ.இ.அ.தி.மு.க. நிருவாகிகள் அனைவருக்கும், மூத்த சகோதரராக இருந்து, தோளோடு தோள் சேர்த்து வழிகாட்டும் NEWS J தொலைக்காட்சி நிருவாக இயக்குநர் அண்ணன் திரு. சி.வி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், என் வெற்றிக்கு அல்லும், பகலும் அயராது பாடுபட்ட அ.இ.அ.தி.மு.க.-வின் அனைத்து நிலை நிருவாகிகளுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், என்மேல் நம்பிக்கை வைத்து வாக்களித்து என்னை வெற்றி பெற வைத்த என் உயிரினும் மேலான திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

பல உன்னத தலைவர்கள் அமர்ந்திருந்த இந்த உயரிய அவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு

சட்டமன்றப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், இந்த அவையில் வீற்றிருக்கும் ஆன்றோர் அனைவருக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கும் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, விவசாயம் மற்றும் கடல்சார் தொழிலாளர்கள் நிறைந்த பின்தங்கிய தொகுதி. இங்கு பெரிய தொழிற்சாலைகளோ, நிறுவனங்களோ இல்லை. இந்தத் தொகுதி கல்வி, மருத்துவம், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இங்கே நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் எண்ணற்றவை, அவற்றில் சிலவற்றை என்னுடைய கன்னிப் பேச்சில் இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பிற்பகல் 2–25

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மரக்காணம் பகுதியில் 19 மீனவக் கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 1,013 மீனவர்கள் fibre படகுகளையும், 50 மீனவர் குழுக்கள் விசைப் படகுகளையும், 60 மீனவர் குழுக்கள் அதிநவீன விசைப் படகுகளையும், மற்ற மீனவர்கள் கட்டுமரங்களைப் பயன்படுத்தியும் மீன் பிடித்து வருகிறார்கள். இப்பகுதியில் மீன்பிடிப் படகுகளை நிறுத்துவதற்கு மீன்பிடித் துறைமுகம் இல்லை.

செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்ட மீனவர்களின் சார்பில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று அரசுக்கு பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வந்தனர். இந்நிலையில், மரக்காணம் அழகன்குப்பம் பகுதியில் 2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் ரூ.261 கோடி மதிப்பில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று முன்னாள் முதல்வர் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான அம்மாவின் அரசு அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மீன்பிடித் துறைமுகத் திட்டத்திற்கு 22–2–2021 அன்று எடப்பாடியார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது, பணிகளும் விரைவாகத் துவக்கப்பட்ட

நிலையில், தற்போது பணிகள் நடைபெறுவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இரண்டு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையான இதனைத் தற்போதைய அரசு தனிக் கவனம் செலுத்தி, பணிகளை விரைந்து முடித்து மீன்பிடித் துறைமுகத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டிவனம் தொகுதியின் முக்கியப் பகுதி மரக்காணம். தமிழகத்தின் தொன்மையான நகரங்களுள் ஒன்று. இங்குள்ள அருள்மிகு பூமிநாதர் திருக்கோயில், தஞ்சை பெரிய கோயில் கட்டுவதற்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் பேரரசன் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது என்பது 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற அகழ்வாய்வின்மூலம் தெரியவருகிறது. இந்நகரம் அக்காலத்தில் எயிற்பட்டினம் என அழைக்கப்பட்டது. மரக்காணத்தில் உள்ள திருக்கோயிலில் ஏராளமான கல்வெட்டுகளும், வரலாற்றுப் படிமங்களும் நிறைந்துள்ளன. தற்போது, அருள்மிகு பூமிநாதர் திருக்கோயில் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. மரக்காணம் அருள்மிகு பூமிநாதர் திருக்கோயிலைத் தொன்மை மாறாமல் தொல்லியல் துறையும், இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து புனரமைத்து, குடமுழுக்கு நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தூத்துக்குடிக்கு அடுத்ததாக அதிக அளவில் உப்பு விளைவிக்கும் உப்பளங்கள் நிறைந்த பகுதி மரக்காணம் ஆகும். மழைக்காலங்களில் உற்பத்தி தடைபட்டு, தொழிலாளர்கள் பணியின்றி மிகவும் சிரமப்படுகின்றனர். 3,500 ஏக்கரில் உள்ள உப்பளங்களில் 5,000-க்கும் மேற்பட்ட உப்பளத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது தமிழ் முதுமொழி. எனவே, தற்போது ஆளும் அரசாங்கம் தனது தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி அவர்களுக்கு மழைக்காலங்களில் மாதாந்திர நிவாரணத் தொகை ரூபாய் 5,000/- வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதியில் ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலைகள் அமைந்துள்ளன.

இந்த நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்களால் ஏற்படும் விபத்துகளில் ஆண்டுதோறும் எண்ணற்ற உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. அவ்வாறு விபத்து ஏற்படும்போது, காயமடைந்தவரை அவசரச் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி, ஜிப்மர் மருத்துவமனை அல்லது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் நிலையுள்ளது. இதனால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. எனவே, திண்டிவனம் ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சிறப்பு விபத்துச் சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளுடன்கூடிய பல்நோக்கு மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதியில் வசிக்கும் பழங்குடியினர் உள்ளிட்ட தகுதியுள்ள அனைத்து மக்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா விரைவில் வழங்கப்பட வேண்டும். திண்டிவனம் நகராட்சியில் குடிசையில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்றும் வீடற்ற மக்களுக்கும் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மரக்காணம் பேரூராட்சி அழகன்குப்பம் முதல் புத்துப்பட்டு ஊராட்சி முதலியார்குப்பம் வரையிலான கடற்கரைப் பகுதிகள் கடலரிப்பினால் பாதிக்கப்படுகின்றன. எனவே, இங்கு தூண்டில் வளைவு அமைத்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் நிரந்தர அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் அரசின் கொள்கை முடிவுக்கேற்ப ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் அமைத்துத் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அமைக்கப்படும்போது திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டம், முறுக்கேரியில் நிரந்தரமாக அரசு கொள்முதல் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டிவனம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சவுக்கு மரங்களை அதிக அளவில் பயிரிடுகின்றார்கள். தற்போது, சவுக்கு மரத்தின்

பயன்பாடு பொதுமக்களிடையே குறைந்து வருவதால் சவுக்கு மரம் விளைவித்தும் பயனில்லாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். திண்டிவனம் தொகுதியில் சவுக்கு மரத்தைப் பயன்படுத்தி காகிதம் தயாரிப்பதற்கு காகிதத் தொழிற்சாலை அமைத்துத் தந்தால் மிகவும் உதவியாக இருக்கும். அப்பகுதியில் வேலைவாய்ப்பும் பெருகும்; விவசாயிகளும் பயன்பெறுவார்கள். திண்டிவனம் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓங்கூர் ஆற்றின் கடைமடைப் பகுதியான ராயநல்லூர், அசபூர், கந்தாடு ஆகிய பகுதிகளின் விளைநிலங்களில், ஆற்றின் வெள்ளம் புகுந்து பெரும் சேதத்தை விளைவிக்கிறது. எனவே, வெள்ள நீர், விளைநிலங்களில் புகாதவண்ணம் தடுப்புச் சுவர் கட்டுவது மிகவும் இன்றியமையாதது என தெரிவித்துக்கொள்கிறேன். திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி ஒலக்கூர் கிராமத்தை இணைக்கும் பாலம் சென்ற மழையில் சேதமடைந்துள்ளது. இதனைச் சீரமைத்து அங்கு புதிய உயர்மட்டப் பாலம் நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த பெருமழையால் சேதமடைந்த திண்டிவனம் நகராட்சி, இந்திராகாந்தி பேருந்து நிலையம் அருகே உள்ள பூதேரி பாலத்தையும் மற்றும் ஜாய்ஸ் பொன்னையா தெரு பாலத்தையும் சீரமைத்து, புதிய பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன் என்றார் வள்ளலார் அவர்கள். அதுபோல், 'நிவர்' மற்றும் 'புரெவி' புயல்களின் பாதிப்பிற்கு தேசிய பேரிடர் வழிகாட்டு நெறிமுறைகளின்படியான நிவாரணத் தொகையினைக் காட்டிலும் கூடுதலாக நெல் மற்றும் இறவை பயிர்களுக்கு 1 ஹெக்டேருக்கு ரூ.13,500/– என்பதை ரூ.20,000/– ஆகவும், மானாவாரிப் பயிர்களுக்கு 1 ஹெக்டேருக்கு ரூ.7,410/– என்பதை ரூ.10,000/– ஆகவும், பல்லாண்டுப் பயிர்களுக்கு 1 ஹெக்டேருக்கு ரூ.18,000/– என்பதை ரூ.25,000/– ஆகவும் உயர்த்தி வழங்கியதோடல்லாமல் 2 ஹெக்டேர் நஷ்ட ஈடு வழங்க அளவுகோல் இருந்ததை, பாதிக்கப்பட்ட நிலம் அனைத்திற்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று எங்கள் முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அறிவித்தார்கள்.

தமிழகம் முழுவதும் மீன் வளத்தைப் பெருக்க, மீன் இனப் பெருக்கத்திற்கு உதவும்வண்ணம் செயற்கை பவளப் பாறைகள் அமைத்துத் தர வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணம் வைத்திருப்பார்கள். முக்கியமான விஷயம், ஆகையால் வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அம்மாவின் அரசு கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 1,11,444 கறவை மாடுகளும், 52,88,608 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. பெண்களை மையப்படுத்திய திட்டங்களில் தமிழகம் முன்னிலை வகித்துள்ளதாக மத்திய அரசு விருது அளித்துள்ளது. இத்தகைய சிறந்த திட்டத்தை அரசு இரத்து செய்திருப்பதைப் பரிசீலனை செய்து மீண்டும் விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

தமிழக பாரம்பரியத்தை நிலை நாட்டும் ஜல்லிக்கட்டுக் காளைகளை வளர்ப்பவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.1,000/– மாதந்தோறும் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தீர்கள். குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற திட்டம் போன்று கைவிடாமல், வாயில்லா ஜீவனுக்கு அந்த நிவாரணத் தொகை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் அடையாள அட்டை பெற்று பல ஆண்டுகளாகியும், மானிய டீசல் கிடைக்காமல் உள்ள மீனவர்களுக்கு மானிய டீசல் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுகிறேன்.

கடல் காற்றின் வேகத்தினால் திசைமாறிச் செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்போது, இலங்கை நீதிமன்றம் மீனவர்களுக்குப் பிணைத் தொகையாக ரூபாய் இரண்டு

கோடி வரை செலுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. மீனவர்களை மீட்க மத்திய அரசுடன் கலந்தாலோசித்து இலங்கை அரசிற்கு அழுத்தம் தந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

1976 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்க இதுவே சரியான தருணம். மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து கச்சத்தீவை மீட்டு அங்கு தமிழக மீனவர்கள் மீன் வலை உலர்த்துவதற்கும், ஓய்வெடுப்பதற்கும் அனுமதித்து அரை நூற்றாண்டிற்குள் கச்சத்தீவை மீட்டோம் என்ற பெருமையை இந்த அவை பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு தனியாக 'மீனவர் வங்கி' ஏற்படுத்தப்பட வேண்டும். அனைத்து மீனவக் கிராமங்களுக்கும் மீன் ஏலம் விடும் கூடமும், மீன் வலை பின்னும் கூடமும் உருவாக்கப்பட வேண்டும்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான இடங்களைக் கணக்கிட்டு பதிவு செய்து, அரசு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் விவசாயிகள் பயன்பெறும்வகையில் உருவாக்கப்பட்டுள்ள உழவர் சந்தைகள் போன்று, இடைத்தரகர்களின்றி கால்நடைகளை விற்பனை செய்ய ஏதுவாக பொது கால்நடை சந்தைகளை அரசு அமைத்துத் தர வேண்டுகிறேன். அவ்வாறு உருவாக்கும்பட்சத்தில், திண்டிவனம் தொகுதி, பிரம்மதேசத்தில் செயல்படாமல் உள்ள கால்நடை சந்தை மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கால்நடை பராமரிப்புத் துறைக்குச் செய்த சாதனைகளை, மானியக் கோரிக்கை புத்தகத்தில் பக்கம் 11–ல் இருந்து 21 வரை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அதில் குறிப்பிட்டுள்ளபடி கால்நடை பராமரிப்புத் துறையின் வரலாற்றில் பல்வேறு அரசுகளால் துறை வளர்ச்சிக்குத் தீட்டப்பட்ட மைல்கல் திட்டங்கள் 76 எனவும், அவற்றில் 60 திட்டங்கள், அதாவது சுமார் 80 சதவிகித திட்டங்கள் அ.தி.மு.க. அரசுகளால் நிறைவேற்றப்பட்டவை எனவும் உறுதிப்பட மக்கள் மன்றத்தில் கூறியதற்கு மீண்டும் ஒருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். பதிலுரை. (குறுக்கீடு)

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக சாலைகளில், வாகனங்களில் அடிபடும் கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். வீட்டு விலங்குகளுக்கு ஹெல்த் கார்டு வழங்கப்பட வேண்டும். மீனவர்களுக்கு இரண்டு இலட்சம் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும். தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். சிறுதானியங்களுக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை நிர்ணயம் செய்ய வேண்டும். இடுபொருட்கள் வழங்க விவசாய நண்பன் என்னும் நடமாடும் உழவர் ஊர்தித் திட்டம் செயல்படுத்த வேண்டும். நெல்லிற்கு ஆதார விலையாகக் குவிண்டாலுக்கு ரூபாய் 2,500/– மற்றும் கரும்புக்கு ரூ.4,000/– வழங்க வேண்டும். இயற்கை விவசாயத்தை மேம்படுத்தத் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். பட்ஜெட் இதற்குமேல் தாங்காது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். இதற்குமேல் பட்ஜெட் தாங்காது. நன்றி, நன்றியை மட்டும் சொல்லுங்கள். நன்றியை மட்டும் ஒரே வார்த்தையில் சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2–35

திரு. பொ. அர்ஜுனன்: *மேற்கண்ட அனைத்துத் திட்டங்களையும் கட்டாயம் இந்த அரசு நிறைவேற்ற வேண்டிய கடமை உள்ளது. இவையனைத்தும் என்னுடைய கோரிக்கை மட்டுமல்ல, தி.மு.க. அரசின் 2021 தேர்தல் வாக்குறுதிகள் எனக் கூறி வாய்ப்பளித்த அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறி அமர்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

தொகுதிக் கோரிக்கை:

மாவட்டந்தோறும் உள்ள கால்நடை உதவி பராமரிப்பாளர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பவும், கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை நிரப்பவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

விரல் தேய எழுதி, குரல் தேயப் பேசி, கடைசி மூச்சையும் தமிழனுக்கு அளித்து, எங்கள் நிலத்தின் பெயரையும், இனத்தின் உயிரையும் தந்து, ஒற்றை விரல் உயர்த்தி நிற்கும், திராவிடத்தின் வழிகாட்டி, பேரறிஞர் அண்ணா அவர்கள்.

உயிரினும் மேலான, மறைந்தும் மறையாமல் வாழ்கின்ற, கலைஞர். அவர்மீது வீசப்பட்ட அக்னி ஜுவாலைகள் கடலின்மீது பட்டிருக்குமேயானால், அந்தக் கடலே வற்றிப் போயிருக்கும். அவர்மீது வீசப்பட்ட சூறாவளிக் காற்று இமயத்தின்மீது பட்டிருக்குமேயானால், இமயமே இடம்பெயர்ந்து போயிருக்கும். அந்தளவுக்கு 14 வயதிலிருந்து தன்னுடைய 94 வயது வரை கல்லடியும், சொல்லடியும்பட்டு, தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும், கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களுக்கும், ஏன், இந்திய ஒருமைப்பாட்டுக்கும் பாடுபட்ட ஒரே உன்னதத் தலைவர் மரியாதைக்குரிய நம்முடைய உயிரினும் மேலான கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தன்னிழல் தரை தொடாத தஞ்சை கோபுரம்போல், எந்நிலையிலும் தன்னிலை தாழாதவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இருண்ட வானத்தில் ஓர் ஒளிப் பிழம்பு, மருண்ட திராவிடத்தின் மாமருந்து, நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.

காற்றுக்கும் மூச்சுத் திணறிய கொரோனாப் பொழுதில், உயிர்க் காற்று உருளைகளைக் கொடுத்துக் காட்டியது யார்?

'ஒன்றிணைவோம் வா' என பசித்த வயிறுகளுக்கு உணவு கொடுத்து ஊட்டியது யார்?

மருத்துவர்களைவிட மரணம் அதிகமாகக் கொரோனா வார்டுகளில் நுழைந்த கொடிய காலத்தில் நோயாளிகளைத் தேடி நோய்ச் சீருடையை உடுத்திக் காட்டியது யார்?

நோயர்களுக்கு மரண அச்சம் விடுத்துக் காட்டியது யார்? இலட்சோப இலட்சம் RT–PCR சோதனைகள் இலவசமாய் நடத்திக் காட்டியது யார்?

கோடியாய்த் தடுப்பூசி போட்டு கொரோனாவுக்கே சவக் கோடி உடுத்திக் காட்டியது யார்? புதிது புதிதாய் ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகள் கட்டிக் கொடுத்துக் காட்டியது யார்?

அரசின் கழுவி வைத்த கருவூலத் திருவோட்டை அமுதசுரபியாக்கி, கொரோனா நிவாரணம் ரூ.4,000/– கொடுத்துக் காட்டியது யார்?

தனியார் மருத்துவமனை கொள்ளைகளைத் தடுத்துக் காட்டியது யார்?

உயர் மருத்துவப் படிப்பில் இட ஒதுக்கீடு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு, இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு பறிபோகாமல் பாதுகாத்துக் கொடுத்துக் காட்டியது யார்?

எண்ணெய் நாட்டிலிருந்து, அன்னை நாட்டிற்கு முதலீடுகள் அம்பாரமாய்க் குவிந்திட திராவிட மாடல் எடுத்துக் காட்டியது யார்?

வேலைவாய்ப்புகள் கொடுத்துக் காட்டியது யார்?

கருணையும், தயாளமும் கலந்த சங்கமத்தால் விளைந்த விதை நெல்லாய் விளைச்சல் கொடுத்துக் காட்டியது யார்?

தாய்க்கு செய்யும் தாலியிலும் தங்கம் திருடியோருக்கு மாற்றாக போலியான விவசாயிகளைக் கைது செய்து, மெய்யான விவசாயிகளுக்கு நகைக் கடன் தள்ளுபடி செய்தது யார்?

ரூ.2,000 கோடி மதிப்புள்ள கோயில் சொத்துகளை மீட்டு, ஆலயக் கொள்ளையைத் தடுத்துக் காட்டியது யார்?

அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கி அன்னைக் குலத்தோரையும் அர்ச்சகராக்கி, கருவறைக்குள் தமிழ் ஒலிக்க வைத்து, கடவுளர் காதுகளுக்கும் தமிழ்த் தேன் மடுத்துக் காட்டியது யார்?

முன் சாதனைகளை மட்டுமல்ல, தன் சாதனைகளையும் நாள்தோறும் தானே வெல்லும் தளபதியை அடுத்துக் காட்டியது யார்?

உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்ற உன்னதத் தலைவரை, நாட்டிற்கு அடையாளம் காட்டிய அந்த அறிவாலயத்து ஆண்டவனுக்கே அத்தனைப் புகழும்.

உதயநிதி, இளைய சூரியனே, நீ திரும்பும் திசையெல்லாம் கிழக்காக மாற்றுகிறாய். மக்கள் இதழ்களில் புன்னகையை விளக்காக ஏற்றுகிறாய்.

தேவைக்கரம் நீளும்முன் சேவைக்கரம் நீட்டுகிறாய், மேகமழைகூடப் பொய்த்துப் போகும், உன் தேகமழை எந்நாளும் பொய்ப்பதில்லை, தாகத்திற்கு நீ திரு அல்லிக் கேணியாகிறாய். துயர் வெள்ளத்தில் தோணியாகிறாய். இளைஞர்கள் முன்னேற நீ ஏணியாகிறாய். டெல்லி தர்பாருக்கும், அல்லி தர்பாருக்கும் மண்டியிடாத மானத் தளபதியின் இயக்க ஏவுகணை உன் நாவுகணை.

பிற்பகல் 2–40

நாளையை இன்றே வரவழைக்கும் நம் இளைஞரணிக் காளைகள் வாடிவாசலுக்கும் கட்டுப்படுவதில்லை, ஒன்றிய

வாசலுக்கும் ஒத்துப்போவதில்லை, சட்டமன்ற வெற்றிக்கு நீ தூக்கிய செங்கல், அடிப்படைக் கல்; உள்ளாட்சியிலும் நல்லாட்சிக்கு உன் சொல், மேய வந்த சிட்டுக் குருவிகளுக்கு கவண்கல்; வாழ்க நீ, வயதைப் போல் வளர்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆசி பெற்று, என் தந்தைக்குப் பின் தமையனாய் எழுந்தருளியிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, எனது உரையைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என முழக்கமிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் ஆவின் பால் விற்பனை விலை குறைக்கப்படும் என உறுதியளித்தபடி, தான் பதவியேற்ற முதல் நாளே ஆவின் பால் விற்பனை விலையை லிட்டருக்கு ரூ.3/– குறைத்து அதை 16–5–2021 முதல் செயல்படுத்தி, மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார்கள். அந்த அறிவிப்பினால், இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 270 கோடி ரூபாய் வரை சேமிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இந்து சமய அறநிலையத் துறை ஆலயங்களில் ஆவின் நெய் கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டமைக்குத் துறையின் சார்பாக அவருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பல்வேறு பணியாளர் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆகியோரின் நீண்டநாள் கோரிக்கையைப் பரிசீலித்து, பால் வளத் துறை ஆணையர் மற்றும் ஆவின் நிருவாக இயக்குநர் என தனித் தனியே இரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை கடந்த ஜனவரி 2022 முதல் நியமித்து, ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் பால் வளத் துறை மற்றும் ஆவின் நிறுவனம் மேலும் முன்னேற்றத்தை அடைந்து, 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்களுக்கும், இரண்டு கோடிக்கும் மேற்பட்ட நுகர்வோர்களுக்கும் மேலும் சிறந்த சேவை கிடைக்கப்பெறும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, 2 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும் வகையில், வருங்காலங்களில் ஆவின் தயாரிப்புகள் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கிடைக்கும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஆவின் நிறுவனத்தின்மூலம் சிறப்பு இனிப்பு வகைகள் மற்றும் இதர பால் பொருட்கள் 82.11 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இது முந்தைய தீபாவளிப் பண்டிகை ஆவின் இனிப்பு விற்பனையைவிட 44 சதவிகிதம் அதிகமாகும்.

அடுத்ததாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் பயனடையும்வகையில் வழங்கப்பட்ட தமிழக அரசின் 2022 ஆம் வருடத்திற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் ஆவின் நெய் 100 மி.லி. இடம்பெற்றது. அதன்பொருட்டு 121 கோடி ரூபாய் மதிப்புள்ள 2 கோடியே 16 இலட்சம் எண்ணிக்கையில் ஆவின் நெய் ஜார்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. உற்பத்தியாளர்களுக்கு உடனடியாகப் பால் பணம் பட்டுவாடா செய்வது இதன்மூலம் சாத்தியமானது. இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2020–2021 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 11.67 இலட்சம் லிட்டர் என்றிருந்த மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் விற்பனை, 2021–2022 ஆம் நிதியாண்டில் 13.05 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டது. இது 12 சதவிகிதம் உயர்வாகும். 2020–2021 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 12.63 இலட்சம் லிட்டராக இருந்த சென்னைப் பெருநகர பால் விற்பனை, 2021–2022 ஆம் ஆண்டில், 13.36 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், சென்னைப் பெருநகர பால் விற்பனை அளவை 2022–2023 ஆம் ஆண்டில் 15 இலட்சம் லிட்டராக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்படி

இயங்கிவரும் பால் வளத் துறை, தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை நியாயமான விலையில் கொள்முதல் செய்வதோடு, தரமான தூய பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்குவதில் 60 ஆண்டுகளாக முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்வதற்கு ஏறக்குறைய 500 லிட்டர் இரத்தம் சுழற்சி செய்யும் கறவை மாடுகள் இந்தத் துறையின் அடிநாதமாக விளங்குகின்றன. ஒவ்வொரு நாளின் இனிய துவக்கத்திற்கு அதிகாலை உதயசூரியனாக ஆவின் பால், அனைவரின் இல்லங்களுக்கும் சென்றடைகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறவை மாடுகள் அதிகமாக உள்ள நம் நாட்டின் பால் உற்பத்தி, சர்வதேச அளவில் முதன்மையாக விளங்குகிறது. அதுபோல், இந்திய அளவில் தமிழ்நாடு, பால் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மாநிலங்களுக்குள் ஒன்றாக பதினோராவது இடத்தில் உள்ளது. வேளாண் தொழிலின் உப தொழிலாகக் கருதப்படும் பால் பண்ணைத் தொழில் வேளாண் தொழிலைப் போல் அல்லாது ஆண்டு முழுவதற்கும் கிராமப் பொருளாதாரத்தில் ஏழை எளிய விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் ஈட்டித் தருவதோடு வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தரும் முக்கியத் தொழிலாக இருக்கிறது.

பிற்பகல் 2–45

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் மொத்தம் சுமார் 20 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் சுமார் 4.2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் நாள்தோறும் சுமார் 40 இலட்சம் லிட்டருக்கும் மேற்பட்ட பாலை சங்கங்களுக்கு வழங்குகிறார்கள். இதன்மூலம் நாளொன்றுக்கு சுமார் 12 கோடி ரூபாய் அளவில், அதாவது வருடத்திற்கு சராசரியாக 5,000 கோடி ரூபாய் அளவிற்கு கிராம பொருளாதாரத்தில் பணப் புழக்கம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான இணையவழி வர்த்தகத்தில் அகில இந்தியா முழுவதும் ஏறக்குறைய 590 கோடி ரூபாய்க்கு நாம் online வணிகம் செய்திருக்கிறோம். அதற்காக முதல் பரிசு கர்நாடகா நந்தினிக்கும், இரண்டாவது நமது ஆவின் நிறுவனத்திற்கும் கொடுத்து, குஜராத்தில் மிகப் பெரிய பாராட்டுதல்களைப்

பெற்றிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு நாட்களுக்கு முன்பு 10–4–2022 அன்று இந்த நிகழ்வு குஜராத்தில் நடைபெற்றது. ஆனால், நாம் போக முடியாத சூழ்நிலை. சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்த அழைப்பிற்குப் போகவில்லை. அதிகாரிகளை அனுப்பி வைத்து, அந்தப் பரிசைப் பெற்றிருக்கின்றோம். இந்தியாவிலே இரண்டுதான். முதலாவது கர்நாடகாவின் நந்தினி, அடுத்து நமது ஆவின் நிறுவனம் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக அளவில் நுகர்வோரைக் கவரும்பொருட்டு ஆவின் தொடர்ந்து புதிய பால் பொருட்களை அறிமுகம் செய்து, 2020–2021 ஆம் ஆண்டு 26.53 கோடி ரூபாயிலிருந்த பால் பொருட்களின் மாதாந்திர சராசரி விற்பனை மதிப்பு தற்போது 2021–2022 ஆம் ஆண்டில் 29.13 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. பண்டிகைக் காலங்களில் நுகர்வோர் தேவையறிந்து, புதிய பால் பொருட்கள் மற்றும் இனிப்புகளை அறிமுகப்படுத்தும் ஆவின் நிறுவனம், கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போதும், 5 வகையான ஆவின் சிறப்பு இனிப்புகளை விற்பனைக்காக அறிமுகப்படுத்தியது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும் தற்காலிக பாலகங்கள் அமைத்து, பொதுமக்களுக்கு இந்தச் சிறப்பு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டன. இதற்கு முந்தைய ஆண்டில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, ஆவின் இனிப்புகள் ரூ.57 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டன. 40 நாட்கள் செய்த வியாபாரம் ரூ.57 கோடி. ஆனால், நாங்கள் 18 நாட்களில் செய்த வாணிபம் 83 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கூட்டுறவுத் துறை உள்ளிட்ட அனைத்தும் ஆவின் நிறுவனத்தில்தான் வாங்க வேண்டும் என்று சொல்லி ஒரு கட்டளை பிறப்பித்ததற்கிணங்க, ரூ.83 கோடிக்கு விற்பனையானது. கடைசி 3 நாட்கள் எங்களுக்கு விற்பதற்கு சரக்கு இல்லாமல் போய்விட்டது. இருந்திருந்தால் ரூ.100 கோடியை தாண்டியிருக்கும். அடுத்த முறை இந்த achievement செய்து வெற்றி பெறுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்தமுறை 7 டன் இனிப்புகளை கீழே கொட்டினார்கள். (குறுக்கீடு) உண்மையா? அண்ணனே ஒப்புக்கொள்கிறார் 7 டன் இனிப்புகளை வெளியில் கொட்டினார்கள் என்று. ஆவின் இனிப்புகள் விற்பனை அதிகரிப்பிற்கு எடுக்கப்பட்ட சீரிய முயற்சியின் காரணமாக, நடப்பாண்டின் தீபாவளிப் பண்டிகைக்கு ஆவின் விற்பனை 83

கோடி ரூபாய் சாதனையை எட்டியுள்ளது.

மேலும், ஆவின் செயல்பாடுகளை மேம்படுத்த, அனைத்து மாவட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகரத்தில் 4,708 பாலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதிக நுகர்வோர் மற்றும் குழந்தைகளைக் கவரும்பொருட்டு, parking வசதி, குழந்தைகள் விளையாட்டுப் பகுதி மற்றும் இதர வசதிகளுடன்கூடிய 64 அதி நவீன பாலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, கோடைக் காலத்திலும் தற்காலிக விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டு, தயிர், மோர், லஸ்ஸி போன்ற பானங்களும் விற்பனை செய்யப்பட்டன. சென்னையில் 100 இடங்களில் தற்காலிகமாக நடமாடும் பாலகங்கள் திறக்கப்பட்டு, பால் பவுடர், நெய், கோவா, குலோப்ஜாமுன், ரசகுல்லா, மில்க் கேக் வகைகள், Delight பால் உள்பட பால்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்ணெய் மற்றும் பால் பவுடர் விற்பனையை அதிகரிக்க தமிழ்நாடு அரசின் பரிந்துரையின்படி, ஆவின் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. சேலம் ஒன்றியம், அதிவெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட UHT பால் மற்றும் நறுமண பால் tetra பாக்கெட்டுகளுக்கு ஏற்றுமதி உரிமம் பெறப்பட்டுள்ளது. ஈரோடு ஒன்றியம், நெய் ஏற்றுமதி செய்வதற்கு உரிமம் பெறப்பட்டுள்ளது. மேலும், திருவண்ணாமலை பால் மற்றும் பால் பவுடர் ஆலை, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் நெய்யிற்கான ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது.

மேலும், ஆவின் பொருட்கள், சிங்கப்பூர், கத்தார், ஹாங்காங், இலங்கை மற்றும் குவைத் ஆகிய கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்ட இந்த வாணிபமெல்லாம் இன்றைக்கு தலைதூக்கி, ஓகோவென்று வருவதற்கு இந்த முறை வியாபாரத்தை முடுக்கிவிட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, நாடு முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மேலும், மொரீசியஸ், மலேசியா, அமெரிக்க, ஐக்கிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனம் தயாரித்து, சந்தைப்படுத்திய புதிய 5 வகையான

பால்பொருட்களான Dairy Whitener, Yogurt பானம், பால்கேக், Payasam mix, Milk Protein Noodles ஆகியவற்றை 19–1–2022 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பிற்பகல் 2–50

தென் தமிழக மக்களின் Ice cream தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, மதுரையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட Ice cream தொழிற்சாலையினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 14–3–2022 அன்று காணொலிக் காட்சிமூலம் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனம், மழை, வெள்ளம், புயல் என எந்தவொரு இயற்கைச் சீற்றத்தையும் புறந்தள்ளி, கிராமப்புற ஏழை விவசாயிகளிடமிருந்து ஆண்டு முழுவதும் பாலைக் கொள்முதல் செய்வதோடு, ஆண்டு முழுவதும் ஒரே சீரான பால் கொள்முதல் விலையையும் வழங்கி வருகிறது. அவ்வாறே பால் நுகர்வோர் நலனையும் கருத்தில்கொண்டு, பால் நுகர்வோர்களுக்கு இயற்கைச் சீற்றக்காலத்திலும் தங்குதடையின்றி பால் விநியோகத்தைத் தொடர்ந்து சிறப்பான முறையில் அளித்து, மக்கள் மனதில் நீங்காத நற்பெயரைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் நலன் மற்றும் பால் நுகர்வோர்களின் நலன் ஆகியவற்றோடு, கால்நடைகளின்மீதும் அக்கறை கொண்டுள்ள பால்வளத் துறை, பால் உற்பத்தியாளர்கள் வளர்க்கும் கறவை மாடுகளின் நலனுக்காக குறைந்த விலையில் கால்நடைத் தீவனம், மானிய விலையில் தாது உப்புக் கலவை மற்றும் கால்நடை காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதுடன், கால்நடை மருத்துவ உதவிகளையும், செயற்கைக் கருவூட்டல், அவசர கால சிகிச்சை போன்றவற்றை பால் உற்பத்தியாளர்களின் இருப்பிடத்திற்கே சென்று அளித்தும், சிறப்பாகச் செயல்படுகின்றது. மேலும், கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து ஆண்டுக்கு இருமுறை கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் நடத்தி, கறவை மாடுகளுக்கு விலையில்லா தடுப்பூசி போடப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் 16.77 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் மாவட்ட ஒன்றியங்கள்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் 5.6 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. கறவை மாடுகளுக்கான தீவனம் மற்றும் பிற

அத்தியாவசிய முதலீடுகள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், செயற்கைக் கருவூட்டல்மூலம் கருத்தரித்தல் விகிதம் 43 சதவிகிதத்திலிருந்து 48.50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், வாடிக்கையாளர்களுக்குத் தரமான பொருட்களை அளிப்பதற்காகவும் இணையத்தின் அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் பால் பண்ணைகள், அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, திருவண்ணாமலை பால் பவுடர் தொழிற்சாலை மற்றும் ஈரோடு, சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஒன்றியங்கள் ISO 22000 உணவுப் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு (FSMS) சான்றிதழைப் பெற்றுள்ளன. மேலும், மீதமுள்ள ஒன்றியங்களுக்கு ISO 22000 உணவுப் பாதுகாப்பு மேலாண்மை அமைப்புச் சான்றிதழைப் (FSMS) பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம், பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை ஒழுங்குமுறை ஆணையங்களின் விதிகளுக்குள் இருப்பதை உறுதி செய்வதற்கான தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளவும், உயர் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NPDD) மாநில மைய ஆய்வகத்தை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமே அமைத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழ்நாட்டில் கிராம அளவில் 9,376 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன. ஏறக்குறைய நாங்கள் பெரிய குடும்பம். சுமார் 20 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். 20 இலட்சம் பேரில், ஒரு குடும்பத்திற்கு நான்கு நபர்கள் என்று வைத்தால்கூட, ஏறக்குறைய ஒரு கோடி பேர் இருக்கின்றார்கள். பெரிய குடும்பத்தின் சொந்தக்காரரர் நாங்கள். கூட்டுறவு அமைப்பு இல்லாத கிராமங்களைக் கண்டறிந்து, அங்கே தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களைச் செயல்படும் சங்கங்களாக மறுமலர்ச்சி செய்தல் ஆகிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பால் உற்பத்தியாளர்கள் நலன் பாதுகாக்கப்படுகிறது. மேலும், கூட்டுறவு அமைப்பின்கீழ், அதிக எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு வருவதால், கூட்டுறவுமூலம்

கிடைக்கும் பலன்களை அவர்களுக்கு வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் பாலிற்கான கொள்முதல் விலையைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் (வாரம் ஒருமுறை மற்றும் 10 நாட்களுக்கு ஒரு முறை) வழங்குகின்றன. மேலும், பால் உற்பத்தியாளர்களது வங்கிக் கணக்கிற்கே பால் பட்டுவாடா தொகை இணைய வழியாக செலுத்தப்பட்டு வருகிறது. மாற்றியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நல நிதியின்கீழ், இதுவரை 193 பயனாளிகளுக்கு ரூ.3.8 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தற்சமயம் ரூ.7.1 கோடி இருப்பில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் மொத்த பால் கொள்முதலில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதலை 17.6 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்துவதற்காக அமைப்புசாரா துறைகளில் உள்ள பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் பால் வழங்கும்போது, பாலின் தரம், அளவு மற்றும் அதன் மதிப்பு குறித்து உடனடியாக பால் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement) வழங்கப்படும். அங்கே அவர்களுக்கு, பாலின் தரத்தின் தகுதியைக் கொடுத்துவிடுவோம்.

நிருவாகத்தின் செலவுகள் மற்றும் நடைமுறைச் செலவுகளைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போதுள்ள இயந்திரங்களை நவீனமயமாக்கி அவற்றின் செயல் திறனை அதிகரிப்பதன் மூலமாகப் பால் பண்ணைகளில் கையாளும் திறனை முழுமையாக உபயோகப்படுத்துவதன்மூலம் செலவினங்கள் குறைக்கப்படும். உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான தீவனங்களை வறட்சி காலங்களில் பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்க, தீவன வங்கிகள் உருவாக்கப்படும்.

பிற்பகல் 2–55

ஒரு வருடத்திற்கு ஒரு கன்று என்ற இலக்கை அடைதல் மற்றும் கறவை மாட்டுக் கடன்கள் வழங்குவதன்மூலம் கறவை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வகை செய்யப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கறவை மாட்டிலிருந்து பெறப்படும் பாலின் அளவை நாள் ஒன்றுக்கு தற்போது 6.80 லிட்டரிலிருந்து 7.2 லிட்டராக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பதப்படுத்தப்பட்ட பாலின் விற்பனையில் வருடம் 10 சதவிகிதம் வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு செயல்படும். பால் அளவு, நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் அளவாக உயர்த்தப்படும். இணையவழி மூலமாக பால் அட்டை விற்பனை, பால் பொருட்களின் விற்பனை ஊக்குவிக்கப்படும். உள்ளூர் சந்தையில் பால் பொருட்களின் விற்பனையில் பத்து சதவிகிதம் வளர்ச்சியடைவதையே நோக்கமாகக் கொண்டு, தற்போதுள்ள பால் பொருட்கள் விற்பனை மாதந்தோறும் ரூ.45 கோடியிலிருந்து ரூ.50 கோடியாக உயர்த்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் முதன்மை முதல்வராகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி எனது உரையை நிறைவு செய்து, புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். நேரத்தின் அருமை கருதி, தலைப்பை மட்டும் படிக்கின்றேன். மீதமுள்ளவற்றைத் தாங்கள் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

1. பெரம்பலூர் மாவட்டம், பாடாலூரில் நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் பால் கையாளும் வகையில் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

திருச்சி, அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மொத்த பால் உற்பத்தி நாளொன்றுக்கு 72 இலட்சம் லிட்டர் ஆகும். பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில்கொண்டு பெரம்பலூர்

மாவட்டம், பாடாலூரில் முழுச்சத்து பால் பவுடர், கொழுப்பு சத்து நீக்கப்பட்ட பால் பவுடர், டெய்ரி ஒய்ட்னர் மற்றும் வெண்ணெய் தயாரிக்கும் வசதிகளுடன் புதிய ஆலை 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

2. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால் பண்ணை 71.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

பெருகிவரும் சென்னை புறநகர் மக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக புதியதாகத் துவங்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால் பண்ணை 71.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

3. நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து நாமக்கல் மாவட்டத்திற்கென தனியானதொரு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு பால் கொள்முதல் சராசரியாக 1,40,000 லிட்டர் முதல் 1,70,000 லிட்டர் என்ற அளவில் உள்ளது. தற்போது நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென தனி பால் பண்ணை ஏதும் இல்லை. எனவே, நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் புதியதாக ஒரு பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4. கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால்

கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து கடலூர் மாவட்டத்திற்கென தனியானதொரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 42 ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென தனி பால் பண்ணை ஏதும் இல்லை. எனவே, கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. தூய பால் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில் 50 எண்ணிக்கையில் தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் கொள்முதல் செய்கின்ற பாலை நீண்ட தூரம் போக்குவரத்துக்கு உட்படுத்தாமல் கிராம அளவில் பால் குளிர்விக்கின்ற உட்கட்டமைப்புகளை மேம்படுத்தவும், பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 5,000 லிட்டர் மற்றும் 3,000 லிட்டர் கொள்ளளவில் தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் (BMC) 125 எண்ணிக்கையில் 15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

6. கரூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை 10 கோடி ருபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து கரூர் மாவட்டத்திற்கென தனியானதொரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 74 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கரூர் மாவட்ட கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென தனி பால் பண்ணை ஏதும் இல்லை. எனவே, கரூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால் பண்ணை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாடு மற்றும் உறுப்பினர்களின் நலன் கருதி, 461 எண்ணிக்கையில் தானியங்கி பால் சேகரிப்பு அலகுகள் (AMCU) மற்றும் 303 எண்ணிக்கையில் செயலாக்க தரவு பால் சேகரிப்பு அலகுகள் (DPMCU) 8.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தரமான பாலை கொள்முதல் செய்யவும், பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் விதத்தில் வெளிப்படையான முறையில் கொள்முதல் செய்யப்பட்ட பாலில் உள்ள மொத்த சத்துக்களின் அடிப்படையில் உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்கவும், 764 எண்ணிக்கையில் பால் சேகரிப்பு அலகுகள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 8.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

8. திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

புதியதாகத் துவங்கப்பட்ட திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 2,16,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென தனி பால் பண்ணை ஏதும் இல்லை. எனவே, திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

9. சேலம் மாவட்டம், கருமந்துறையில் உயர் மரபியல் திறனுள்ள கிடேரி கன்றுகள் வளர்க்கும் திட்டம் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள கருவூலக ஜெர்சி பொலிகாளை பண்ணைக்குத் தேவையான சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளை கன்றுகளை உற்பத்தி செய்யும்பொருட்டு, சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள கருமந்துறை கிராமத்தில், 6 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உயர் மரபியல் திறனுள்ள 100 கிடேரி கன்றுகள் வளர்க்கப்படும்.

10. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்

தமிழக அரசு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழான நிதியுதவியுடன் சொந்த அடிமனை கொண்டுள்ள 50 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

11. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் விற்பனையை ஊக்குவிக்க 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்

காஞ்சிபுரம்–திருவள்ளூர், நாமக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், சில்லறை விற்பனையாளர்களின் பங்களிப்புடன் விற்பனையை ஊக்குவித்து அதிகரிக்கும் வகையில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சந்தைப்படுத்தும் செயல்பாடுகள் வலுப்படுத்தப்படும்.

12. ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலையில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட சேமிப்புக் கிடங்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் தீவன உற்பத்தித்

திறன் கொண்ட கால்நடை தீவன ஆலை செயல்பட்டு வருகிறது. இக்கூடுதல் உட்கட்டமைப்பு வசதியை கருத்தில்கொண்டு கால்நடை தீவன உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்களை இருப்பு வைப்பதற்கு 1000 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட சேமிப்புக் கிடங்கு ஒன்றும், தயார் செய்யப்பட்ட கால்நடை தீவனம் மற்றும் தாதுஉப்புக் கலவையை வைப்பதற்கு 500 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட சேமிப்புக் கிடங்கு ஒன்றும், ஈரோடு கால்நடை தீவன ஆலை வளாகத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

13. திருவண்ணாமலை இணைய பால் பண்ணையில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணையும், 20 மெட்ரிக் டன் பால் கையாளும் திறன் கொண்ட பால் பவுடர் ஆலையும் செயல்பட்டு வருகிறது. இங்கு வருடத்திற்கு 4500 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யப்படுகிறது. இணைய பால் பண்ணை வளாகத்தில் 1500 மெட்ரிக் டன் பால் பவுடரை இருப்பு வைப்பதற்கு மட்டுமே கிடங்கு உள்ளது. எனவே, கூடுதலாக 1,500 மெட்ரிக் டன் பால் பவுடரை இருப்பு வைப்பதற்கு ஒரு பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவண்ணாமலை இணைய பால் பண்ணை வளாகத்தில் அமைக்கப்படும்.

14. திருவண்ணாமலை இணைய பால் பண்ணையில் புதிய பால் பொருட்கள் தயாரிக்கும் வசதிகள் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

நமது மன்ற உறுப்பினர் அவர்கள், இருக்கின்ற இடத்திலேயே இருந்து கொண்டு தனியாகக் கேட்கிறார். 420 ஏக்கர் நிலத்தில் டைடல் பார்க் கட்ட வேண்டும் என்று கேட்கிறார்.

திருவண்ணாமலை இணைய பால் பண்ணையில் 20 கிராம், 50 கிராம் மற்றும் 100 கிராம் பேக்கில் டெய்ரி ஒய்ட்னர் நிரப்பவும் மற்றும் 10 கிராம், 20 கிராம் நெய் பேக்குகளில் அடைத்து நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்வதற்கும் பால்பதப்படுத்தும் இயந்திரம் மற்றும் பேக்கிங் இயந்திரம் ஆகியவை 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

15. நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 120 மகளிர் பால் உற்பத்தியாளர்களுக்கு சாண எரிவாயு கலன்கள் (Bio–Gas Plant) ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன்னோடித் திட்ட அடிப்படையில் செயல்படுத்தப்படும்

*நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 2 முதல் 5 கறவைகளை வளர்க்கும் 120 மகளிர் பால் உற்பத்தியாளர்களுக்கு, சாண எரிவாயு கலன்கள் (*Bio-Gas Plant*), அவர்கள் வீடுகளின் சமையல் எரிவாயு தேவையினை சாண எரிவாயுமூலம் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன்னோடித் திட்ட அடிப்படையில் வழங்கப்படும்.*

16. செயற்கைமுறை கருவூட்டல் வசதிகளை வலுப்படுத்த 3,000 லிட்டர் கொள்ளளவும் கொண்ட ஐந்து திரவ நைட்ரஜன் கொள்கலன்கள் 78 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்ட ஒன்றியங்களான திருவண்ணாமலை, நாமக்கல், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள இணையத்தின் கருவூலக ஜெர்சி பொலிகாளை பண்ணை மற்றும் ஈரோட்டில் அமைந்துள்ள எருமையின உறைவிந்து பொலிகாளை பண்ணை ஆகியவற்றிற்கு, உறைவிந்து குச்சிகளை பாதுகாக்கும்பொருட்டு ஐந்து திரவ நைட்ரஜன் கொள்கலன்கள், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் 78 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

17. கறவைப் பசுக்களில் இனவிருத்தித் திறனை மேம்படுத்த சினைத் தருண ஒருங்கிணைத்தல் முறை (Oestrus Synchronization) 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

*மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், வருடம் ஒரு கன்று என்ற இலக்கை அடையும் நோக்கில் அவற்றின் இனவிருத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கத்தில் அதிக பால் உற்பத்தித் திறன் உள்ள 5,000 ஜெர்சி கலப்பின பசுக்களுக்கு சினைத் தருண ஒருங்கிணைத்தல் (*Oestrus Synchronization*) செயல்முறை 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.*

பிற்பகல் 3–00

18. பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், ஒன்றிய அலுவலர்கள் மற்றும் இணையத்தில் பணியாற்றும் அலுவலர்களின் திறனை மேம்படுத்துவதற்காக மாதவரத்தில் 500 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

*தமிழ்நாட்டில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் மாதவரத்தில், ஆவின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி (*Aavin Skill Development Training*) 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.*

19. பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனைப் பணிகளைக் கணினிமயமாக்கும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் அனைத்துப் பிரிவுகளையும், கிராமப்புறங்களில் உள்ள சங்கங்களிலிருந்து பால் கொள்முதல் பணிகளுடன் ஒருங்கிணைத்து கண்காணிக்கத் தேவையான கணினிமயமாக்கும் திட்டம், 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

20. அந்தந்தப் பகுதிக்கேற்றவாறு கறவைகளுக்கான பசுந்தீவன உற்பத்தியினை மேம்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்ட நவீன தீவனத் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

கால்நடை தீவனத்தின் பற்றாக்குறையினைத் தடுக்கும் பொருட்டு வேளாண் உபபொருட்கள் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைக் கழிவுகளை அடர்தீவனத்துடன் கலந்து வழங்கும்போது, கறவைகளுக்கு சரிவிகித தீவனம் கிடைப்பது மட்டுமல்லாமல், இக்கழிவுகள் சிறந்த கால்நடை தீவனமாக மாற்றப்படுகின்றன. மேலும், பசுந்தீவனத்தை உலரவைத்து அரைத்து அடர்தீவனத்துடன் கலந்து அந்தந்த பகுதிக்கேற்றவாறு கறவை பசுக்களுக்கு வழங்குவதால், கறவை பசுக்களுக்கான தீவன செலவு குறைவதுடன் நீண்ட காலம் இத்தீவன வகைகளைச்

சேமித்து வைக்க இயலும். இத்திட்டம் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து 50 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

21. கறவைப் பசுக்களின் இனவிருத்தியை அதிகரிக்கும் வகையில் உதகமண்டலம் ஜெர்சி பொலிகாளை பண்ணைக்கு 120 ஜெர்சி கலப்பின காளை கன்றுகள் 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் உற்பத்தியாளர்களின் கறவைகளின்மூலம், களவெளி செயல் திறன் பதிவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உற்பத்தியாகின்ற 120 சிறந்த மரபியல் திறனுள்ள ஜெர்சி கலப்பின பொலிகாளை கன்றுகள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியின்மூலம் 46 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்து, உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி பொலிகாளை பண்ணைக்கு வழங்கப்படும். இத்திட்டத்தினால் எதிர்காலத்தில் சிறந்த மரபியல் திறனுள்ள பசுக்களை பெறுவதோடு இனவிருத்திப் பணிகளும் விரிவுபடுத்தப்பட வாய்ப்பாக அமையும்.

22. பால் பண்ணைகளில் நுகர்வோர் நலன் கருதி ஒருங்கிணைந்த தரச் சான்று பெற 25 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்

இந்திய உணவு பாதுகாப்பு தர ஆணையத்தின் விதிமுறைகள் மற்றும் விதிகளின்படி உணவு வணிகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தாங்கள் உற்பத்தி செய்து விற்பனைக்கு அனுப்புகின்ற உணவுப் பொருட்கள், மக்களின் ஆரோக்கியத்தினைப் பாதிக்காதவை என உறுதி செய்யும் வகையில், 24 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பின் ISO – 22000, ISO – 2018 தரச் சான்றுகள் பெறப்படும். இத்தரச் சான்றுகள் பெற்ற ஒன்றியங்களில் பால் மற்றும் பால்பொருட்களைப் பரிசோதனை செய்கின்ற வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் சுத்தமான, பாதுகாப்பான, பால் மற்றும் பால் பொருட்கள் ஆவின் நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்வது உறுதி செய்யப்படும். இதற்கான திட்ட மதிப்பீடு 25 இலட்சம் ரூபாய் ஆகும்.

23. தமிழ்மொழிக் கல்வியில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பால் உற்பத்தியாளர்களின் வாரிசுகள் பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்கப்படுவர்

தமிழகத்தில் 38 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்படுகின்றன. கிராம அளவில் உள்ள 10,000–க்கும் மேற்பட்ட தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 4.25 இலட்சம் உறுப்பினர்கள் தினசரி சராசரியாக 40 இலட்சம் லிட்டர் பால் வழங்கி வருகிறார்கள்.

தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விசுவாசத்துடன் தொடர்ந்து பால் வழங்கி வரும் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களது வாரிசுதாரர்களில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவியைப் பாராட்டும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா மூன்று சிறந்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, நடப்பாண்டில் சிறந்த 114 மாணவ/மாணவிகளுக்கு ஊக்கத் தொகையாக முதல் பரிசாக தலா ரூபாய் 10,000/–, இரண்டாம் பரிசாக ரூபாய் 5,000/– மற்றும் மூன்றாம் பரிசாக ரூபாய் 3,000/– வழங்கப்படும். அதற்கான செலவினத்தைத் தொடர்புடைய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமே ஏற்றுக்கொள்ளும்.

24. 4 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு நடமாடும் பால் கறவை இயந்திரங்கள் 20 எண்ணிக்கையில் 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முன்னோடித் திட்டமாக வழங்கப்படும்

வேலூர், திருவண்ணாமலை, மதுரை மற்றும் தேனி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் வீடுகளுக்கே சென்று கறவை மாடுகளிடமிருந்து பால் கறக்கும் வகையில் இருசக்கர வாகனத்தில் பொருத்தக்கூடிய நடமாடும் பால் கறவை இயந்திரங்கள் 20 எண்ணிக்கையில் 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முன்னோடித் திட்டமாக வழங்கப்படும்.

25. ஆவின் நிறுவனத்தின் நீண்ட கால நுகர்வோர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படும்

தமிழ்நாட்டில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களை நீண்ட நாட்களாக வாங்கும் நுகர்வோரின் தொடர் விசுவாசத்திற்காக அவர்களைக் கௌரவிக்கும் வகையில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பரிசுகள் வழங்கப்படும்.

26. நுகர்வோர்களின் தேவையைக் கருதி 10 வகையான புதிய பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும்

தமிழ்நாட்டில் ஆவின், பால் மற்றும் பல்வேறு வகையான பால் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

நுகர்வோரின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த ஆண்டு கீழ்க்கண்ட புதிய பால் பொருட்களை அறிமுகப்படுத்தி விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆவின் ஹெல்த்மிக்ஸ், குளிர்ந்த காபி, பாலாடைக்கட்டி (Cheddar Cheese), பலாப்பழ ஐஸ்கிரீம், வெண்ணெய் கட்டி, பாஸந்தி, ஆவின் பால் பிஸ்கட், அடுமனை யோகர்ட் (Baked Yoghurt), ஆவின் வெண்ணெய் முறுக்கு, வெள்ளை சாக்லேட் (White Chocolate).

27. ஒன்றியத்திற்கு மூன்று சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படும்

தமிழகத்தில் 38 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராம அளவில் உள்ள 10,000–க்கும் மேற்பட்ட தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 4.25 இலட்சம் உறுப்பினர்கள் தினசரி சராசரியாக 40 இலட்சம் லிட்டர் பால் வழங்கி வருகிறார்கள்.

தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விசுவாசத்துடன் தொடர்ந்து பால் வழங்கி வரும் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களை பாராட்டும் வகையில் ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்தும், தலா மூன்று சிறந்த பால் உற்பத்தியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, 75 பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக முதல் பரிசு தலா ரூபாய் 10,000/–, இரண்டாம் பரிசு ரூபாய் 5,000/– மற்றும் மூன்றாம் பரிசாக ரூபாய் 3,000/– ஆக மொத்தம்

5 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். இந்த செலவினத்தைத் தொடர்புடைய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமே ஏற்றுக்கொள்ளும்.

28. பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு தடையின்றி கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை வழங்க ஏதுவாக "ஒருங்கிணைந்த தீவன கண்காணிப்பு மையம்" அமைக்கப்படும்

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலை மற்றும் தூத்துக்குடி, விழுப்புரம், திருச்சி, ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரியில் ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறனில் தாது உப்பு கலவை ஆலைகளும் இயங்கி வருகின்றன.

இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு மூலதனம் நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டு தடையின்றி கால்நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்குச் சென்றடைவது வரை இம்மையத்தின்மூலம் கண்காணிக்கப்படும்.

29. பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி அவர்களுக்கான பால் பணப்பட்டுவாடா முறை தாமதமின்றி வழங்கிட ஒன்றுபட்ட பால் பணப்பட்டுவாடா முறை (Unified Milk Cost Payment) நடைமுறைப்படுத்தப்படும்

பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் பால் பணப்பட்டுவாடா செய்ய ஒன்றுபட்ட பால் பணப்பட்டுவாடா முறை நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம், பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணப்பட்டுவாடா காலதாமதமின்றி ஒவ்வொரு வாரமும் அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறையும் வழங்கப்படும்.

ஒன்றுபட்ட பால் பணப்பட்டுவாடா முறையின்மூலம் இணையத்திலிருந்து மாவட்ட ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஒன்றியங்களிலிருந்து சங்கங்களுக்கும், சங்கங்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்கும் தடையின்றி பணப் பரிமாற்றம் செய்யப்படும். இதன்மூலம் பால் உற்பத்தியாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு திட்டமிடப்பட்ட காலத்தில் பால் பணப்பட்டுவாடா வரவு வைக்கப்படும்.

30. சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதிய பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு செயல்படுத்தப்படும்

சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காரைக்குடியில், பாலை பதப்படுத்தி தரமான பால் மற்றும் பால் பொருட்களை தயாரித்து விற்பனை செய்ய, பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் பயனடையும் வகையில் புதியதாக பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு செயல்படுத்தப்படும்.

31. பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி பால் உற்பத்தியாளர்களுக்கு அனைத்து இறப்புகளுக்கும் இறுதிச் சடங்கு செலவுத் தொகை 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்

பால்வளத் துறையில் பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தினை ஊக்குவிக்கும் வண்ணமாகவும், மதிப்பளிக்கும் வண்ணமாகவும் மாற்றியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி உருவாக்கப்பட்டு அதில் மாதந்தோறும் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக ரூ.1-ம், தொடர்புடைய சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்பாக தலா 0.50 பைசாவும் பெறப்படுகிறது. விபத்தினால் இறந்த பால் உற்பத்தியாளரின் வாரிசுதாரர்களுக்கு இந்நிதியிலிருந்து ஈமச் சடங்கிற்கு ரூபாய் 5,000/- வழங்கப்பட்டு வருகிறது.

மேற்காண் ஈமச் சடங்கிற்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.5,000/- இனி, விபத்து மட்டும் அல்லாது, அனைத்து வகை இறப்பிற்கும் விரிவுபடுத்தப்படும்.

32. தமிழ்நாட்டில் பால்வள மேம்பாடு மற்றும் ஆவின் நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை போன்ற செயல்பாடுகளுக்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் வகுக்கப்பட்டு ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டங்கள் NCDFI மற்றும் IRMA மூலமாக செயல்படுத்தப்படும்

பால்வளத் துறையில் அன்றாட தொடர் நிகழ்வுகளான பால் கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனைக்கு விடுத்தல், தரத்தினை மேம்படுத்துதல், புதிய பால் பொருட்களை நுகர்வோரின்

தேவைக்கேற்ப உற்பத்தி செய்து வழங்குதல் போன்ற அனைத்து செயல்பாடுகளிலும் தொடர் முன்னேற்றம் அத்தியாவசியமாகிறது.

மேலும், உற்பத்திச் செலவினங்கள், புதிய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல், உற்பத்திக்கான செலவினங்களைக் குறைத்தல் மற்றும் பாலை உற்பத்தியாளர்களிடமிருந்து பதப்படுத்தும் பண்ணை வரை கொண்டு வந்து சேர்த்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

இதன் அடிப்படையில் இதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்களை வகுத்து ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டங்கள், தேசிய கூட்டுறவு பால் இணையம் (National Co-operative Dairy Federation of India-NCDFI) மற்றும் ஊரக மேலாண்மை கல்வி நிறுவனம், ஆனந்த் (Institute of Rural Management, Anand-IRMA) போன்ற அமைப்புகள்மூலம் செயல்படுத்தப்படும்.

33. வளசரவாக்கத்தில் உள்ள ஆவினுக்குச் சொந்தமான இடத்தில் நபார்டு மற்றும் NABCONS ஆலோசனை நிறுவனம் மூலமாக அனைவரின் பயன்பாட்டிற்கான பயிற்சி மையம், பல்நோக்கு வணிக வளாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய "ஆவின் வர்த்தக மையம்" தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership) அமைக்கப்படும்

வளசரவாக்கத்தில் காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்துக்குச் சொந்தமான நிலத்தினை முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் வகையிலும், ஆவின் நிறுவனத்தின் செயல்பாடுகளை அனைவரும் உணரச் செய்யும் வகையிலும் ஒரு பல்நோக்கு வணிக மையம் உருவாக்கப்படவுள்ளது. இந்த முயற்சியினைச் செயல்படுத்தும் வகையில் நபார்டு மற்றும் NABCONS நிதியுதவியுடன், பொது மக்களின் பயன்பாட்டிற்கும் வணிகர்களுக்கு உதவும் வகையிலும் பயிற்சி மையம் மற்றும் பல்நோக்கு வணிக வளாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய "ஆவின் வர்த்தக மையம்" தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership) அமைக்கப்படும்.

34. கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், விழுப்புரம் மாவட்ட

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து உருவாக்கப்படும்

விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன் தலைமை அலுவலகம் விழுப்புரம் பகுதியில் அமைந்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட விவகார எல்லையில் செயல்பட்டு வரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டும், கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டும், தனியானதொரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் புதிதாக உருவாக்கப்படும்.

35. திருப்பத்தூர் மாவட்டத்திற்கு திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து உருவாக்கப்படும்

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் என மூன்று மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன் தலைமை அலுவலகம் வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் அமைந்துள்ளது.

திருப்பத்தூர் மாவட்ட விவகார எல்லையில் செயல்பட்டு வரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டும், திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டும், தனியானதொரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் புதிதாக உருவாக்கப்படும்.

36. தொடக்க பால் கூட்டுறவுச் சங்க பணியாளர்களது ஊதிய நிர்ணயம், பணி வரன்முறை போன்ற பலதரப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து பரிந்துரை சமர்ப்பிக்க குழு அமைக்கப்படும்

தொடக்க பால் கூட்டுறவுச் சங்க பணியாளர்களது ஊதிய நிர்ணயம் குறித்து ஆணைகள் வழங்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அப்பணியாளர்கள் மற்றும்

பணியாளர் சங்கங்கள் ஆகியோரிடமிருந்து பல கோரிக்கைகள் வரப்பெறுகின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து பரிந்துரையின் சமர்ப்பிக்க குழு அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் முன்பு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீது மாமன்ற உறுப்பினர்கள் 107 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றிற்குப் போதுமான விளக்கங்களை எனது பதிலுரையில் தெரிவித்திருப்பதாகக் கருதுகிறேன். இருப்பினும் விடுபட்டுப்போன வெட்டுத் தீர்மானங்கள் குறித்து துறையினருடன் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய ஆலோசனையின்பேரில் கூடுமான வரையில் அவற்றை நிறைவேற்றுவேன் என்றும் கூறி, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி, உட்காருங்கள்.* Good.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *நன்றி, சொல்லிவிடுகிறேன். இப்படிப்பட்ட பாரம்பரியமிக்க மற்றும் மருத்துவ குணம்வாய்ந்த பால் சார்ந்த 2022–2023 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இம்மானியக் கோரிக்கையினைத் தயாரிக்க உறுதுணையாக இருந்த, மதிப்பிற்குரிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர், பால்வளத் துறை ஆணையர், ஆவின் மேலாளர், இயக்குநர்கள் மற்றும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறி எனது பதிலுரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணுரிமை, மருத்துவம், கல்வி, தொழில் வளர்ச்சி, மாற்றுத் திறனாளிகள் நலன், விவசாயிகளின் நலன் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்திட்ட சமூக நீதிக் காவலர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

"காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது" என்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய வாசகங்களை மெய்ப்பிக்கின்ற வகையிலே, இப்படியும் ஒரு தலைவர், நாள் முழுவதும் உழைக்க முடியுமா என்பதற்கு எடுத்துக்காட்டாக, முதல் நாள் தஞ்சாவூரில் நிகழ்ச்சி, தொடர்ந்து திருச்சியில் நலத் திட்ட உதவி, இரவு 12-00 மணிக்கு சென்னை ரிப்பன் மாளிகையில், Corporation *அலுவலகத்தில் மழை வெள்ள நீர் பாதிப்பு குறித்து ஆய்வு, மறுநாள் காலை தலைமைச் செயலகத்தில் பணி, தொடர்ந்து துபாய் பயணம், அதில் ரூ.6,200 கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்தல், தொடர்ந்து மாநில உரிமைக்காக டெல்லி பயணம், மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் ஒன்றிய அமைச்சர்களைச் சந்தித்தல், சட்டமன்றக் கூட்டம், கேரள மாநிலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு மாநில உரிமைக்காகக் குரல் கொடுத்தல், செங்கல்பட்டில் பட்ஜெட் விளக்கப் பொதுக் கூட்டம், மானியக் கோரிக்கை தொடர்பான விவாதங்களில் பங்கெடுப்பு, இதற்கிடையில் ஓராயிரம் மக்கள் பணிகள்; தலைவா, இந்த நூற்றாண்டில் இப்படி ஓர் உழைப்பாளியை உலகம் இதற்கு முன்னால் பார்த்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) உளமாரத் தங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வளம் பெற, வலிமை பெற, தலைவர் தளபதி அவர்களுக்கு உறுதுணையாக நாளும் உழைத்திடும் அவை முன்னவர், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், கழக வளர்ச்சிக்காக முழு நேரமும் உழைத்து, இயக்கத்திற்கு வலு சேர்த்திட்ட கழக இளைஞரணிச் செயலாளர், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் உரிமைக்காக ஓங்கிக் குரல் கொடுக்கும் எங்களது நாடாளுமன்ற

உறுப்பினர் திருமிகு கனிமொழி கருணாநிதி, எம்.பி. அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்போதும் என்னோடு இருக்கின்ற எங்கள் தொகுதி மக்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடையைத் தங்கள் வாழ்வின் ஓர் அங்கமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள். 'மாடு' என்றால் தமிழில் 'செல்வம்' என்று பொருள். மாடுகளைத் தாங்கள் பெற்ற பிள்ளையைப்போல பாவித்து வளர்த்து வருபவர்கள் தமிழர்கள்.

தமிழர்களின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு, உலகப் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். விவசாயமும், கால்நடை வளர்ப்பும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவையாகும். இன்றைக்கும் கால்நடை வளர்ப்பு மட்டுந்தான் கிராமப்புறத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வளர்த்து வருவதோடு, ஏழை, எளிய மக்களின் பொருள் ஈட்டும் செல்வங்களாக, அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் துணையாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பின்மூலம்தான் கிராமப்புற ஏழை, எளிய விவசாயிகள் பொருளாதார சமநிலை அடைய முடியும் என்பதில் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளார்கள். எனவேதான், கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற மகளிருக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கி, நிலையான வருமானம் பெற்று, பொருளாதார வளர்ச்சி பெற 38,800 ஆதரவற்ற ஏழை, எளிய பெண்களுக்கு தலா 5 ஆடுகள் வழங்கப்படும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 20–வது கால்நடைக் கணக்கெடுப்பின்படி, 95 இலட்சம் பசு இனமும், 5 இலட்சம் எருமையினமும், 45 இலட்சம் செம்மறியாடுகளும், 99 இலட்சம் வெள்ளாடுகளும் மற்றும் 12 கோடியே 8 இலட்சம் கோழியினங்களும் உள்ளன.

விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கான மருத்துவத் தேவைக்காக அருகிலுள்ள மருத்துவ நிலையத்திற்குக் கால்நடைகளை நடத்திச் செல்வது நடைமுறையில் உள்ளது.

நோயுற்ற கால்நடைகளை கால்நடை மருத்துவ நிலையங்களுக்குக் கூட்டிச் செல்வதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள், செலவிடப்படும் நேரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் கால்நடைகளுக்கு அவற்றின் கொட்டகைகளுக்கே சென்று தரமான சிகிச்சை அளிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கின்றார்கள். இதற்காக, மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் ஆணையின்படி, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்புடன் 245 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் ஏற்படுத்தப்படும் என்பதையும், இனி கால்நடைகளுக்குக் கால்நடைகளின் கொட்டகைகளுக்கே சென்று சிறப்பான சிகிச்சை வழங்கப்படும் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் வளர்ச்சியில் இன்று மனிதர்களுக்கு எத்தகைய சிகிச்சைகளெல்லாம் வழங்கப்படுகின்றனவோ அவற்றிற்கு ஈடாக கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவக் கட்டமைப்புகளை மேம்படுத்திட மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, கால்நடைகளுக்குச் சிறப்பான சிகிச்சை மட்டுமல்லாமல், அவற்றுக்குச் சிறந்த உணவும் கிடைக்க வேண்டும் என்பதில் நம் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் கால்நடைகளுக்கான பசுந்தீவன உற்பத்தியில் சுமார் 40 சதவிகிதம் குறைபாடு உள்ளது. எனவேதான், மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக்குறையைப் போக்கிட பொது மேய்ச்சல் தரைகளின் தீவன உற்பத்தியை அதிகரிக்க சிறப்புக் கவனம் செலுத்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன் அடிப்படையில் தரிசு நிலங்களாக உள்ள பொது மேய்ச்சல் நிலங்களை அறிவியல் ரீதியாக மேம்படுத்தி பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளும் பணி தமிழகத்தின் 29 மாவட்டங்களில் 1,000 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தமிழகத்தின் 18 மாவட்டங்களில் பசுந்தீவன வங்கிகள் ஏற்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடமேற்கு மண்டலங்களில் பசுந்தீவன தேவையைச் சரிசெய்திட தீவன விதை உற்பத்திப்

பிரிவு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 25 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2,741 கால்நடை மருந்தகங்கள், 152 கால்நடை மருத்துவமனைகள், 14 பெரு மருத்துவமனைகள், 16 பன்முக மருத்துவமனைகள், 31 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஆகியன செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், அகில இந்திய அளவில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி கால்நடை பராமரிப்பு குறித்த செய்திகள் வெறும் 5% மட்டும்தான் கால்நடை வளர்ப்போரை சென்று சேர்கின்றன என்ற தகவல் உள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். அதன் அடிப்படையில் 7,760 சிறப்புக் கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாம்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முகாம்கள் மூலமாக சுமார் 76 இலட்சத்து 54 ஆயிரம் கால்நடைகள் மற்றும் கோழியினங்களும், சுமார் 8 இலட்சத்து 6 ஆயிரம் விவசாயிகளும் பயன்பெற்றுள்ளார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த விழிப்புணர்வு முகாம்களில் கால்நடைகளின் உடல்நலம் பேணுதல், சரிவிகித உணவு அளித்தல், நோய்த் தடுப்பு முறைகள், கால்நடைப் பொருட்கள் உற்பத்தி, கால்நடை உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற முக்கியப் பணிகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி வழங்கப்பட்டது என்பதையும் இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பண்ணை முறை கோழி வளர்ப்பு கடந்த பல ஆண்டுகளாகச் சிறப்பாக நடைபெற்று, அயலினக் கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு கோடிகளில் இலாபம் ஈட்டும் தொழிலாக நடைபெற்று வருகிறது. அதேவேளையில், நாட்டுக் கோழி வளர்ப்பு தற்போது ஊரகப் பகுதிகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்குவிக்க மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் தரமான நாட்டுக் கோழிக் குஞ்சுகள் அரசு நிர்ணயிக்கும் விலையில் தொடர்ந்து கிடைப்பதை

உறுதி செய்திட ரூபாய் 9 கோடியே 42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாட்டுக் கோழியினப் பெருக்கப் பண்ணை மற்றும் குஞ்சுப் பொரிப்பகம் நெல்லை மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஏற்படுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சமமான வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள், கோழி வளர்ப்புத் தொழில் தென் மாவட்டங்களிலும் நடைபெறும் வகையில் வரும் நிதியாண்டில் சிவகங்கை மாவட்ட கால்நடைப் பண்ணையில் குஞ்சு பொரிப்பகத்துடன்கூடிய நாட்டுக் கோழிப் பண்ணையை ஏற்படுத்திட அனுமதி அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சிறுவிடை கோழியினங்களை அழிவிலிருந்து காக்கும்பொருட்டு ரூபாய் 1 கோடியே 52 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மாதவரத்தில் ஒரு வள மையமும், உள் நாட்டு செம்மறி ஆடுகளை அழிவு நிலையிலிருந்து பாதுகாத்திட பட்டணம் மற்றும் திருச்சி கருப்பு ஆகிய ஆட்டின ஆராய்ச்சிக்கென ரூபாய் 3 கோடியே 77 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தஞ்சாவூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒரு வள மையமும் அமைக்க மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் அடிப்படையில், விவசாயிகளுக்குத் தரமான உயர் மரபுத்திறன் கொண்ட உள்நாட்டின கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பாரம்பரிய ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்திட இந்த ஆண்டில் 239 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன. கால்நடைகளுக்கோ, மனிதர்களுக்கோ எந்தவித துன்பமும் ஏற்படாத வண்ணம் சிறப்புடன் நடத்தப்பட்டது. வரும் ஆண்டுகளில் மேலும் சிறப்பான திட்டமிடுதலுடன், கூடுதல் பாதுகாப்பு அம்சங்களுடன் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலார் அவர்கள் பெயரில் பல்லுயிர்க் காப்பகங்களை ரூபாய் இருபது கோடியில் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். இதன்மூலம், தெருக்களில்

ஆதரவின்றி சுற்றித் திரியும் செல்லப் பிராணிகள், கால்நடைகள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் பணியை அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அரசு மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, வாயில்லாத ஐந்தறிவு ஜீவன்கள் மீதும் தாங்கள் காட்டும் அன்பு, பரிவு கண்டு இம்மாமன்றத்தின் சார்பில் தங்களுக்கு எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களுக்கு ஏற்படும் 70 சதவிகித நோய்கள் கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகள்மூலம் பரவுகின்றன என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இவற்றில் முக்கிய நோயான வெறி நோயைக் கட்டுப்படுத்தவும், இந்நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையின்படி ரூபாய் 77 இலட்சத்து 36 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் 'வெறிநோய் தடுப்பூசி முகாம்கள்' நடத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. மேலும், ரூபாய் ஒரு கோடியே 62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளமும் நெல்லை மாவட்டத்தில் நிறுவப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குக்கிராமங்கள், தொலைதூரக் கிராமங்களில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கும் சிறந்த மருத்துவ சேவை கிடைப்பதை உறுதி செய்ய கடந்த ஆண்டில் 50 புதிய கிளை நிலையங்கள் தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில் 25 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்த அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறை பண்ணைகளில் சிறந்த பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு, உறைவிந்து சேகரிக்கப்பட்டு, செயற்கைமுறை கருவூட்டலுக்கென வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலும் செயற்கைமுறை கருவூட்டல் பணியைத் தீவிரமாக மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இதற்கென பொலிகாளை நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த அறிவுரைகள் வழங்கியுள்ளதோடு அதற்கான நிதியையும் வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் பல்வகை பல்லுயிர்களின் இருப்பிடமாக இருப்பது நமக்கு பெருமைக்குரிய ஒன்றாகும். காட்டுவாழ் விலங்குகள் மட்டுமல்லாது, உள்நாட்டு வகை கால்நடை மற்றும் கோழியினங்கள் தமிழகத்தில் மிகுந்து காணப்படுகின்றன. பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர்களால் பராமரிக்கப்பட்டு வந்த உள்நாட்டு கால்நடை இனங்களை அழிவிலிருந்து பாதுகாக்கவும், அவற்றின் மரபுத் திறனை மேம்படுத்தவும் தமிழக முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, பர்கூர் மற்றும் புலிக்குளம் ஆகியவற்றையும், உள்நாட்டு செம்மறி ஆடு இனங்களான சென்னை சிகப்பு, இராமநாதபுரம் வெள்ளை, திருச்சி கருப்பு, மேச்சேரி, வேம்பூர் கச்சக்கட்டி கருப்பு, கீழக்கரிசல், செவ்வாடு, நீலகிரி, கோயம்புத்தூர், பட்டணம் ஆகியவற்றையும், உள்நாட்டு வெள்ளாட்டு இனங்களான கன்னியாடு, கொடியாடு, சேலம் கருப்பு ஆகியவற்றையும் துறையின் பண்ணைகள்மூலம் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

உள்நாட்டு நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை ஆகியவை இராணுவம், காவல் துறை ஆகியவற்றில் பல நுட்பமான வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுமட்டுமல்லாது, நாட்டுக் கோழியினங்களும் தமிழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகள் மற்றும் விலங்குகளின் நலன் பேணுவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெறும் அரசு, கால்நடைகளுக்கு காப்பீட்டுத் திட்டம் மற்றும் கால்நடை உற்பத்தியைப் பெருக்கி கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தி, பொருளாதார முன்னேற்றத்தில் ஏழையெளிய மக்களை முக்கியப் பங்குதாரர்களாக ஆக்கும் திட்டங்களையும் செயல்படுத்த உறுதிபூண்டுள்ளது.

காலநடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையங்கள் வாயிலாக கால்நடை பண்ணையாளர்கள், கிராமப்புற இளைஞர்கள் ஆகியோருக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், செயல் விளக்கப் பயிற்சிகள், விரிவாக்கப் பணிகள் ஆகியவை நடத்தப்படுவதுடன் பண்ணை இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கால்நடை வளர்ப்பு ஒரு சிறந்த கருவி என்பதை உணர்ந்தே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கால்நடை வளர்ப்பு குறித்த ஆராய்ச்சிகளை முன்னெடுக்கவும், சிறந்த கால்நடை மருத்துவர்களை உருவாக்கவும், கடந்த 1989 ஆம் ஆண்டில் தெற்கு ஆசியாவிலேயே முதன்முறையாக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைத் தொலைநோக்குப் பார்வையுடன் ஏற்படுத்தினார்கள் என்பதையும் இந்த அவையில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு தமிழக முதல்வரின் சீரிய தலைமையில் தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என கூறிக்கொண்டு, 2022–2023 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான அனுமதியுடன் வெளியிடுகின்றேன்.

பிற்பகல் 3–20

அறிவிப்புகள்

கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

1. தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் இருப்பிடத்தில் கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக 245 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்கள் எண்பத்து ஐந்து கோடியே ஐம்பத்து மூன்று இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று கால்நடைகளுக்கு மருத்துவச்

சேவையை வழங்கும்பொருட்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 85.53 கோடி நிதி ஒதுக்கீட்டில் 245 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்கள் வழங்கப்படும்.

2. 37 கால்நடை மருத்துவ நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் இருபத்து ஐந்து கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்

நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் மையங்களாகவும், அறிவுசார் மையங்களாகவும், விரிவாக்க மையங்களாகவும் விளங்கும் கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 25.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 37 கால்நடை மருத்துவ நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

3. வள்ளலார் அவர்களின் 200–வது பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் மற்றும் பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கு "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" இருபது கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும்

வள்ளலார் அவர்களின் 200–வது பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் மற்றும் பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 20.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டம் துவங்கப்படும்.

4. செட்டிநாடு, கால்நடைப் பண்ணையில் நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணை, கோழிக்குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவை பதினான்கு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

பெருகி வரும் நாட்டுக் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் தேவையைக் கருத்தில் கொண்டு, அறிவியல் மற்றும் நவீன

மயமாக்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நாட்டுக்கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 14.73 கோடி நிதி ஒதுக்கீட்டில், சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணை, கோழிக்குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவை நிறுவப்படும்.

5. தொலைதூரக் கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குச் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (7,760) ஏழு கோடியே எழுபத்து ஆறு இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்

தொலைதூரக் கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளின் நலன்களைப் பேணுவதற்காகவும், தரமான சிகிச்சை வழங்குவதற்காகவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும். இம்முகாம்களில் கால்நடைகளுக்குச் சிகிச்சை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி, ஆண்மை நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகள், மகப்பேறியல் சிகிச்சைகள், அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை வழங்கப்படும்.

6. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீர்ப்பாசனத் திட்டத்தின்மூலம் 15 மாவட்டங்களில் 9 உப வடிநிலப் பகுதிகளில் கால்நடை பராமரிப்புப் பணிகள் நான்கு கோடியே எண்பத்து நான்கு இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் நான்காம் கட்டமாக 15 மாவட்டங்களை உள்ளடக்கிய மேலும் 9 உப வடிநிலப் பகுதிகளில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 4.84 கோடி நிதி ஒதுக்கீட்டில் பால்வள ஆர்வலர் குழுக்கள் அமைத்தல், கன்று மேலாண்மை, மடிவீக்க நோய் மேலாண்மை, மலடுநீக்க சிகிச்சை,

தீவன அபிவிருத்தி மற்றும் செயற்கைமுறைக் கருவூட்டல் போன்ற கால்நடை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

7. உதகை மாவட்ட கால்நடை பண்ணையில் நோய் இல்லாத உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்ய காளைகளுக்கான தனிமைப்படுத்துதல் (Quarantine) நிலையம் இரண்டு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்

உறைவிந்துக் குச்சி உற்பத்தி நிலையங்களில் நோயில்லாத தரமான உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்வதற்காக, ஒன்றிய அரசு வகுத்துள்ள வழிகாட்டுதல்களின்படி, புதிதாகக் கொள்முதல் செய்யப்படும் கால்நடைகள், பண்ணையில் சேர்க்கப்படும்முன் நோய் தொற்று உள்ளதா எனக் கண்டறிய கால்நடைகளுக்குத் தனிமைப்படுத்துதல் வசதி இருக்க வேண்டும். இதன்பொருட்டு உதகை, மாவட்ட கால்நடை பண்ணையைச் சேர்ந்த தனிமைப்படுத்தும் நிலையம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 2.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் வலுப்படுத்தப்படும்.

8. நாட்டுக் கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புறப் பயனாளிகளுக்கு சிறிய அளவிலான (250 கோழிகள்/அலகு) 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள் 50% மானியத்தில் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

நாட்டுக் கோழி வளர்ப்பதில் திறமையும் ஆர்வமுள்ள 100 தொழில்முனைவோரைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிப்பதற்காக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் நாட்டுக் கோழிப் பண்ணைகளை நிறுவுவதற்குத் தேவையான உள்ளீடுகள் (250 நான்கு வார வயதுடைய கோழிக் குஞ்சுகள், தீவனம், உபகரணங்கள், குஞ்சு பொரிப்பகம்) 50% மானிய விலையில் வழங்கப்படும். இந்த விவசாயிகள் நாட்டுக் கோழிக் குஞ்சுகளை வளர்த்து விற்பனை செய்வதன்மூலம் வருமானம் ஈட்டலாம்.

9. கால்நடை பராமரிப்புத் துறையின் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் (உதகை, ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூர்)

தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு RTPCR இயந்திரங்கள் எழுபத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

உறைவிந்து உற்பத்தி நிலையத்திற்காக ஒன்றிய அரசினால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நோய் இல்லாத உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக, உதகமண்டலம், ஈச்சங்கோட்டை மற்றும் ஒசூரில் உள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்தும்பொருட்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 75.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், RTPCR *இயந்திரங்கள் வழங்கப்படும்.*

10. 2,000 ஏக்கரில் கால்நடை தீவனப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் ஏக்கருக்கு ரூ.3,000 மானியமாக வழங்கும் திட்டம் அறுபது இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

பயிர் சாகுபடி பரப்பளவுக் குறைந்து வருவதன்மூலம் எழுந்துள்ள தீவனப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக, உணவுப் பயிர் சாகுபடி செய்யும் 2000 ஏக்கர் நிலங்களில் தீவனப் பயிர்களை ஊடு பயிராகவோ அல்லது வரப்புப் பயிராகவோ சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 60.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், ஓர் ஏக்கருக்கு 3,000 ரூபாய் வீதம் விவசாயிகளுக்குப் பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.

11. பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு 25% மானிய விலையில் பண்ணைக் கருவிகளை வழங்கி, விவசாயிகளைத் தொழில்முனைவோராக உருவாக்கும் திட்டம் நாற்பத்திரண்டு இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

வணிகரீதியிலான பசுந்தீவன சாகுபடியை மேற்கொண்டு பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி, அவர்களைத் தொழில்முனைவோராக உருவாக்க, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 42.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில்,

வணிக ரீதியில் ஊறுகாய் புல் உற்பத்தி செய்யும் நான்கு அலகுகளை நிறுவுவதற்கான பண்ணைக் கருவிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

12. கரூர் மாவட்டத்தில் புழக்கடை கோழியின ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் இரண்டு கோடியே பன்னிரெண்டு இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

தமிழ்நாட்டின் விவசாயிகள் புழக்கடை கோழி வளர்ப்பின்மூலம் குறைந்த செலவில் கணிசமான அளவு இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி செய்து பயனுறும் இலக்குடன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் கரூர் மாவட்டத்தில் "புழக்கடை கோழியின ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம்" ரூபாய் 2.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு, பயனாளிகளுக்கு மேலாண்மைப் பயிற்சியுடன் இடுபொருட்களும் வழங்கப்படும்.

13. தமிழ்நாட்டில் உள்ள நாட்டின நாய்களுக்கான (இராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை) இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் ஒரு கோடி ரூபாய் செலவில் தென்காசி மாவட்டத்தில் நிறுவப்படும்

தமிழகத்தின் இராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை ஆகிய நாட்டின நாய்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் தென்காசி மாவட்டத்தில் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்தின் "நாட்டின நாய்களுக்கான இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்" நிறுவப்பட்டு, இவ்வின நாய்க் குட்டிகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

14. கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்படும்

வெண்பன்றி வளர்ப்பில் நவீன மேலாண்மை வழிமுறைகள், தேவைகளைக் கருத்தில்கொண்டு, முத்தமிழறிஞர் டாக்டர்

கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 99.48 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் "கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம்" நிறுவப்படும்.

15. நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம் எண்பத்தியாறு இலட்சத்து இருபத்து ஆறாயிரம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்படும்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் குறைந்து காணப்படும் நாட்டுக்குட்டை மாட்டினத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் முனைப்புடன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 86.26 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் "நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம்" நிறுவப்படும்.

16. உம்பளாச்சேரி மாடுகளின் இனத்தைப் பல்துறை அணுகு முறையின்மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல் எனும் திட்டம் எழுபத்து எட்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்படும்

உம்பளாச்சேரி இன மாடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும் அவற்றின் பால் உற்பத்தித் திறனை உயர்த்தவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "உம்பளாச்சேரி மாட்டினத்தைப் பல்துறை அணுகுமுறையின்மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில்

பாதுகாத்தல்'' எனும் திட்டம் ரூபாய் 78.68 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதிரவனின் ஒளியில் இருள் விலகி விடியல் பிறப்பதுபோல் தமிழக மீனவர்களின் வாழ்வில் புதிய விடியலை ஏற்படுத்தும் நோக்கில் மீனவர்களுக்குத் தாயுள்ளத்தோடு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி நாடு போற்றும் நல்லரசாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள கழக அரசு மீனவர்களின் வாழ்விலே ஒளியேற்றும் விதமாக தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறைக்கு 1,158 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தமிழக மீனவர்கள் சார்பாகவும், மீன் வளத் துறையின் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்தம் குடும்பங்களைக் காப்பதிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அரசு மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வருகிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அந்த வகையில், கடந்த ஆண்டு 'டவ்தே' புயலில் சிக்கி காணாமல் போன 21 தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூபாய் 20 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 4 கோடியே 20 இலட்சம் வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள், 20–1–2022 அன்று தமிழக மீனவப் பிரதிநிதிகளைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்கள். அப்போது, அந்தக் கோரிக்கைகள்மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு, பல்வேறு

நலத் திட்டங்களைச் செயல்படுத்த எங்களுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பாக்-வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையாலும், இலங்கை மீனவர்களாலும் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு, சேதமடைந்த 125 தமிழக மீன்பிடிப் படகுகளுக்கு, தாயுள்ளத்தோடு 5 கோடியே 61 இலட்சம் ரூபாயை நிவாரணமாக வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் ஆணையில் கையொப்பமிட்ட 'மை' காய்வதற்குள் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அந்த நிவாரணத் தொகை சேரவும் மாண்புமிகு அவர்கள் உத்தரவு வழங்கினார்கள். அவ்வாறே, நிவாரண நிதியும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்கள் மீன்பிடிக்கும்போது சில நேரங்களில் வழி தவறி எல்லை தாண்டும் சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அந்த நேரங்களில், நமது மீனவர்கள் அயல்நாட்டினரால் சிறைபிடிக்கப்படுகிறார்கள். இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில், அயல்நாட்டினரால் கைது செய்யப்படும் மீனவர்களைக் காப்பாற்ற நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடியாக மாண்புமிகு பிரதமர் மற்றும் மாண்புமிகு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரை அணுகி, நமது மீனவர்களை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமின்றி, நமது மீனவர்களை மீட்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்களும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு கனிமொழி கருணாநிதி, எம்.பி. அவர்களும் ஒன்றிய அரசைத் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் எல்லை தாண்டாமல் மீன்பிடிக்கவும், புயல் மற்றும் ஆபத்துக் காலங்களில் தேவையான

தகவல் தொடர்புகளை மேற்கொள்ளவும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (ISRO) தொழில்நுட்ப உதவியுடன் தமிழகத்திலுள்ள அனைத்து விசைப் படகுகளுக்கும் Transponders பொருத்தும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்களால் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வாடும்போது, அவர்களுடைய நலனைப் பேணிக் காப்பதில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையால் காசிமேடு மீன்பிடித் துறைமுகம் மற்றும் பிற மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகளுக்கு 5 கோடியே 65 இலட்சம் ரூபாயை நிவாரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

ஒவ்வோராண்டும் கடலில் மீன்பிடிக் குறைவு காலத்தின்போது, மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை, கழக தேர்தல் வாக்குறுதிக்கிணங்க, 2021–2022 ஆம் ஆண்டு முதல் ரூ.5,000/–லிருந்து, ரூ.6,000/– ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி, தமிழகத்தில் உள்ள 1 இலட்சத்து 80 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு ரூ.108 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1 இலட்சத்து 51 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு ரூபாய் 90 கோடியே 91 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள மீனவக் குடும்பங்களுக்கு வரும் மே மாதத்தில் வழங்கப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடல் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரண நிதித் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டில் 4 இலட்சத்து 20 ஆயிரம் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு 125 கோடி ரூபாயை அரசின் பங்களிப்பாக வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் தங்கள் தொழில் நிமித்தம் கடன் மற்றும் இதர வங்கிச் சேவைகளை எளிதாகப் பெறும்பொருட்டு, விவசாயிகளுக்குக் கூட்டுறவு

வங்கிகள் செயல்படுவதுபோல, மீனவர்களுக்கென்றும் கூட்டுறவு வங்கிகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், மீனவர்கள் வங்கிச் சேவைகளை எளிதில் பெற்று, அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கடலோரத்திலுள்ள மீனவர்களுக்கு சிலபேர் வட்டிக்கு பணம் கொடுத்துவிட்டு, மீன்களை எடுத்துச் செல்லும் நிலைகளெல்லாம் இருந்தன. அந்த நிலைகளையெல்லாம் மாற்றுவதற்காக, மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள், மீனவர்களுக்கென்று தனி கூட்டுறவு வங்கி அமைக்கப்பட வேண்டும் என்ற வகையில் ஆய்வு செய்திருக்கிறார்கள். அந்த வங்கியை உடனடியாகத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவு வழங்குவார்கள்.

பிற்பகல் 3–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து முன்னெடுப்பதில் இந்த அரசு பல சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக, தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியோடு கூண்டுகளில் கடல்மீன் வளர்க்கும் திட்டம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது மீனவச் சமுதாய மக்களுக்கு ஒரு சிறந்த மாற்று வாழ்வாதாரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் பாதுகாப்பாக தங்கள் படகுகளை நிறுத்தவும், மீனவக் கிராமங்களை புயல் மற்றும் கடலரிப்பிலிருந்து பாதுகாக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். அந்தவகையில், தமிழகத்தின் 44 கடற்கரைக் கிராமங்களில் சுமார் ரூ.743 கோடி செலவில் மீன்பிடி இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள், நேர்கல் சுவர் அமைத்தல் மற்றும் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களின் வாயிலாக இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 13] [திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்]

மேலும், தமிழகத்தில் எங்கெல்லாம் மீன் இறங்குதளம், தூண்டில் வளைவுகள், மீன்பிடித் துறைமுகங்கள், கடலரிப்புத் தடுப்புச் சுவர் வசதிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் ஆய்வு செய்து அந்த வசதிகளை ஏற்படுத்திட வேண்டுமென்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் தாங்கள் பிடித்துவரும் மீன்களைச் சுகாதாரமாகக் கையாளுவதற்கு உரிய கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், அன்னியச் செலாவணியைப் பெற்றுத்தரும் மீன்கள் ஏற்றுமதித் தொழிலை மேம்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 16–3–2022 அன்று கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறால் வளர்ப்போர் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தி, அவர்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டன. அரசு மேற்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக இறால் வளர்ப்புக்கு உரிமை பெறும் முறைகள் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளன. கடல் பொருள் ஏற்றுமதியாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக மீன் பதனிடும் நிலையங்கள் அமைப்பதற்கான உரிமங்களை ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் கடல் மீன் உணவு ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தில் மீன் பதனிடுதல் மற்றும் ஏற்றுமதிக்குத் தேவையான கட்டமைப்புகளை அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதனால் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் கடல் மீன் உணவு ஏற்றுமதி தமிழ்நாட்டில் அதிகரிக்கும். மேலும், மீன்களைச் சுகாதாரமாகக் கையாளவும் பொதுமக்களுக்குத் தரமான மீன்கள் நியாயமான விலையில் கிடைத்திடவும் துறை மூலமாகவும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு இணையம் மூலமாகவும் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் மீனவர்களுக்குத் தரும் முக்கியத்துவத்தை உள்நாட்டு மீனவர்களுக்கும் தந்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

நமது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு நீர்நிலைப் பரப்பு 3.85 இலட்சம் ஹெக்டேர் ஆகும். இதில், 1.75 இலட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உள்நாட்டு நீர்நிலைகளின் மீன் வளத்தைப் பெருக்கிட பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு, பெரிய நீர்நிலைகளில் கூண்டுகள் அமைத்து மீன் வளர்ப்பு, குறுகிய காலத்தில் விரைவாக வளரும் மீன் இனமான மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் வளர்த்தல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின மீன்களான அயிரை, சேல் கெண்டை, கரி மீன் மற்றும் கல்பாசு போன்ற மீன்களை வளர்த்து உள்நாட்டு மீனவர்களின் வருவாயைப் பெருக்கிட மீன் உற்பத்திக் கட்டமைப்புகள் விரிவாக்கப்படும்.

புதிய தொழில்நுட்பங்களை மீன் வளர்ப்போருக்கு அறிமுகப்படுத்தி, குறைந்த பரப்பளவில் குறைந்த காலத்தில் அதிக மீன்களை உற்பத்தி செய்து, உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் உயர பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள-நிலவளத் திட்டத்தின்கீழ் ரூபாய் 7 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டிலும், வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூபாய் 9 கோடியே 4 இலட்சம் செலவிலும் பல்வேறு உள்நாட்டு மீன்வளத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வருங்காலங்களில் தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தி பல உயரங்களைத் தொடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை மிகவும் இலாபகரமான ஒரு தொழிலாக விளங்கி வருகிறது. சென்னையில் நமது முதல்வர் அவர்களின் தொகுதியான கொளத்தூர்தான் தமிழ்நாட்டின் வண்ண மீன் உற்பத்திக்கே மையமாக விளங்குகிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொளத்தூர் பகுதி வண்ண மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடி, அவர்கள் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்து

பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்கள். அதன்படி, கொளத்தூர் பகுதியில் சர்வதேச தரத்தில் ஒரு வண்ண மீன் வர்த்தக மையம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வண்ண மீன் வர்த்தகர்களின் விருப்பத்திற்கேற்ப இடமும் தேர்வு செய்யப்பட்டு, வண்ண மீன் வர்த்தக மையத்தைக் கட்டமைப்பதற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு, மீனவப் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு நிற்காமல், அவர்கள் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டுமென்ற வகையிலே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்த வகையிலே, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இளங்கலை பட்டப் படிப்பில் 5 சதவிகிதமாக இருந்த இட ஒதுக்கீட்டை மேலும் 15 சதவிகிதமாக அதிகப்படுத்தி, மொத்தம் 20 சதவிகிதமாக உயர்த்தி, சமூக நீதி காக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, இந்த ஆண்டு 24 மீனவ சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மீன்வளப் பட்டப் படிப்பு படிக்க வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் வளர்ப்போர் மற்றும் மீனவர்களுக்குப் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு நான்கு புதிய தொழில்நுட்பங்கள், நான்கு புதிய பொருட்கள், ஐந்து கருவிகள் மற்றும் ஒரு செயலி ஆகியவை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தால் 21–1–2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டன. இவை, மீன் வளர்ப்போருக்கும், மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோருக்கும் பெரிதும் பயன்படும். மேலும், மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு தற்போது ரூபாய் 30 கோடியே 45 இலட்சம் செலவில் புதிய கட்டமைப்புகள் மற்றும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதிலும், அவர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துவதிலும் மாண்புமிகு தமிழக முதல்வரின் தலைமையிலான இந்த அரசு எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. தமிழக மீனவர்களினுடைய உரிமையைப் பாதிக்கும் எந்த ஒரு விஷயத்திலும் பாரபட்சமின்றி உரிய தொடர் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பாக அறிவுறுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்கள் பாதுகாப்பாக மீன்பிடித் தொழில் செய்ய ஏதுவாக கச்சத் தீவை மீட்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்றிய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே, தமிழகத்திலுள்ள அனைத்து மீனவர்களின் காவல் அரணாக நின்று, அவர்களுடைய சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது, 2022–2023 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான அனுமதியுடன் வெளியிடுகின்றேன். மீனவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

“ஒருநாள் போவார், ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
அரை ஜாண் வயிற்றை வளர்ப்பவர்
உயிரை ஊரார் நினைப்பது சுலபம்” (குறுக்கீடு)

அப்போது, தி.மு.க.-வின் பொருளாளராக எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைப் பார்த்துப் படியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பாட்டை பாடி முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:

‘உலகத்தின் தூக்கம் கலையாதோ!
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ!’

அந்தப் பாட்டைப் பாடினால், பாடிக் கொண்டே இருக்கலாம்.

நான், தற்போது என்னுடைய துறைசார்ந்த அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான், இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

1. மீன்களை கையாளுவதற்கு பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், குளிர்பதனக் கிடங்குகள், மீன் அங்காடிகள் அமைத்தல், குளிர்காப்பு வாகனம், இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் வாங்கிட 393 பயனாளிகளுக்கு 24 கோடியே 54 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

மீன்களின் தரம் குறையாமல் காப்பதற்கும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 22 பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், 6 குளிர்பதனக் கிடங்குகள், 30 மீன் அங்காடிகள், 2 உயிர் மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். மேலும், 68 குளிர்காப்பு வாகனங்கள், குளிர்காப்பு பெட்டிகளுடன்கூடிய 225 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 40 மூன்று சக்கர வாகனங்கள் 48 கோடியே 49 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்பீட்டில் 393 பயனாளிகளுக்கு 24 கோடியே 54 இலட்சம் ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும்.

2. தமிழகத்தில் 169 ஒருங்கிணைந்த, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வண்ண மீன் வளர்ப்பு மையங்கள் அமைத்திட ஆறு கோடியே 47 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

பொதுமக்களிடையே பிரபலமான பொழுதுபோக்காக வண்ண மீன் வளர்ப்பு திகழ்வதால் உலக அளவில் மிகப் பெரிய பொருளாதார வாய்ப்பைக் கொண்டுள்ளது. மேலும், நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு நல்லதொரு சுய தொழில் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது. வண்ண மீன் ஏற்றுமதியில் தமிழகம், நாட்டிலேயே இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. எனவே, வண்ண மீன் உற்பத்தியை மேலும் அதிகரித்திடவும், அதன்மூலம் வேலைவாய்ப்பினை

உருவாக்கிடவும் ஏதுவாக வண்ண மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட 24 ஒருங்கிணைந்த, 35 நடுத்தர மற்றும் 110 சிறிய அளவிலான வண்ண மீன் வளர்ப்பு அலகுகள் அமைத்திட பயனாளிகளுக்கு ஆறு கோடியே 47 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

3. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை மீனவர் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்

தமிழ்நாடு மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கான சாதனங்கள் வாங்குதல், ஆழ்கடல் மீன்பிடித்தல், பாரம்பரிய மீன்பிடிப் படகுகளை நவீனமயமாக்கல், உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரங்களை வாங்குதல் போன்றவற்றிற்கு எளிதில் கடன் பெறுவதற்கும், தனி நபர்களிடம் மற்றும் பிற நிதி நிறுவனங்களிலிருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்குவதைத் தடுக்கும் நோக்கிலும் மீனவர்களுக்கென தனியாக மீனவர் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதலில் கடலோர மாவட்டங்களில் நல்ல முறையில் செயல்பட்டுவரும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைக் கண்டறிந்து அவற்றை மீனவர் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

4. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுதுபார்க்கும் தளம் போன்ற கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் 576 விசைப் படகுகளும், 448 கண்ணாடி நாரிழைப் படகுகளும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இத்துறைமுகத்தில் தொடர்ந்து அதிகரித்துவரும் படகுகளின் எண்ணிக்கையினால் இட நெருக்கடி ஏற்படுகிறது. எனவே, படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை ஏற்றுமதிக்கு உகந்தவகையில் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், இதன்மூலம் அன்னியச் செலாவணியை அதிகரித்திடவும், 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுதுபார்க்கும் தளம், வலை பின்னும் கூடம், ஏலக் கூடங்கள், சாலை வசதிகள், சுகாதார வளாகம் போன்ற கூடுதல் கட்டமைப்பு வசதிகளுடன் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தப்படும். இதனால், இங்குள்ள 3,600–க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பயனடையும்.

5. தூத்துக்குடி மாவட்டம், அமலி நகர் மற்றும் ஜீவா நகர் (திருச்செந்தூர்) ஆகிய மீன் இறங்குதளங்களில் கடலரிப்புத் தடுப்பு மற்றும் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் 83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

தூத்துக்குடி மாவட்டம், அமலி நகர் மீன் இறங்குதளம் பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள கடலரிப்பினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு கடல் அரிப்பினைத் தடுத்து படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திட ஏதுவாக தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும்.

மேலும், ஜீவா நகர் (திருச்செந்தூர்) மீன் இறங்குதளத்தில் கடல் அரிப்பினைத் தடுத்திட நேர்கல் சுவர்கள் அமைக்கப்படும். மேற்கண்ட பணிகள் 83 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் இப்பகுதியிலுள்ள 1,300-க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பயனடைவர்.

6. திருவள்ளூர் மாவட்டம், சாட்டாங்குப்பம், சுண்ணாம்புகுளம், அரங்கங்குப்பம் மற்றும் கூனங்குப்பம் ஆகிய கிராமங்களில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்

திருவள்ளூர் மாவட்டம், சாட்டாங்குப்பம், சுண்ணாம்புகுளம், அரங்கங்குப்பம் மற்றும் கூனங்குப்பம் ஆகிய மீனவக் கிராமங்களில் பாரம்பரிய மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுவதற்கும், தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலை பெற்றிடவும், படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், இக்கிராமங்களில் படகு அணையும் தளம், அணுகு கால்வாய், மீன் ஏலக் கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர்களம், சாலை வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளங்கள் 26 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 5,000 மீனவ மக்கள் பயனடைவர்.

7. சென்னை மாவட்டம், நெட்டுக்குப்பம் மற்றும் தாழங்குப்பம் ஆகிய கிராமங்களில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்

சென்னை மாவட்டம், நெட்டுக்குப்பம் மற்றும் தாழங்குப்பம் ஆகிய மீனவக் கிராமங்களில் 275 கண்ணாடி நாரிழைப் படகுகள் உள்ளன. இக்கிராம மீனவர்கள் தங்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களைச் சுகாதாரமாகக் கையாளுவதற்கும், படகு அணையும் தளம், மீன் ஏலக் கூடம், வலை பின்னும் கூடம், உட்புற அணுகு சாலை மற்றும் மீன் உலர்களம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட மீன் இறங்கு தளங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதனால் இங்குள்ள 2,500 மீனவ மக்கள் பயனடைவர்.

8. கன்னியாகுமரி மாவட்டம், கீழக்கடியப்பட்டணம் கிராமத்தில் கடலரிப்பினைத் தடுத்திட கூடுதல் நேர்கல் சுவர் (Groynes) அமைக்கும் பணிகள் மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தினைத் தூர்வாரி ஆழப்படுத்தி, சீரமைக்கும் பணிகள் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

கன்னியாகுமரி மாவட்டம், கீழக்கடியப்பட்டணம் கிராமத்தைக் கடலரிப்பிலிருந்து பாதுகாத்திடவும், படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திடவும், கூடுதல் நேர்கல் சுவர்கள், படகு அணையும் தளம், அணுகு சாலைகள் அமைக்கும் பணிகள் மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தில் பருவ மழைக் காலங்களில் கடல் கொந்தளிப்பால் துறைமுக நுழைவு வாயில் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மணல் திட்டுகளைத் தூர்வாரி ஆழப்படுத்தி, சீரமைக்கும் பணிகள் 40 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை மேற்கொள்வதனால் சுமார் 4,000 மீனவ மக்கள் பயனடைவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாட்டு பாடி எல்லோரையும் உற்சாகப்படுத்திவிட்டீர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:

9. விழுப்புரம் மாவட்டம், முதலியார்குப்பம், செட்டிநகர், புதுக்குப்பம், அனிச்சங்குப்பம் மற்றும் கடலூர் மாவட்டம் சித்திரைப்பேட்டை, நஞ்சலிங்கம்பேட்டை, சுனாமி நகர்,

அக்கரைகோரி, சொத்திக்குப்பம், ராசாப்பேட்டை மற்றும் சோனாங்குப்பம் ஆகிய மீனவக் கிராமங்களில் 40 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்

விழுப்புரம் மாவட்டம், முதலியார்குப்பம், செட்டிநகர், புதுக்குப்பம், அனிச்சங்குப்பம் மற்றும் கடலூர் மாவட்டம், சித்திரைப்பேட்டை, நஞ்சலிங்கம்பேட்டை, சுனாமி நகர், அக்கரைகோரி, சொத்திக்குப்பம், ராசாப்பேட்டை மற்றும் சோனாங்குப்பம் ஆகிய மீனவக் கிராமங்களில் மீனவர்கள் பிடித்துவரும் மீன்களைச் சுகாதாரமான முறையில் ஏலம் விடுவதற்கும் மற்றும் மீன்பிடி வலைகளைச் சரி செய்வதற்கும், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்களைக் கொண்டு செல்வதற்கும், இரவு நேரங்களில் மீன்களைக் கையாளுவதற்கும், மீன் ஏலக் கூடங்கள், வலை பின்னும் கூடங்கள், அணுகு சாலைகள் மற்றும் உயர் மின் விளக்குகள் ஆகியவை 40 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதனால், இக்கிராமங்களில் உள்ள 7,400–க்கும் அதிகமான மீனவ மக்கள் பயனடைவர்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சங்கர் அவர்கள், வாணியன்குப்பத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித்தருமாறு கேட்டிருக்கின்றார். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, அங்கு தூண்டில் வளைவு அமைப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் எடுப்போம்.

பிற்பகல் 3–40

10. மயிலாடுதுறை மாவட்டம், பழையாறு மீன்பிடித் துறைமுகம் 26 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

மயிலாடுதுறை மாவட்டம், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் 297 விசைப் படகுகளும், 534 கண்ணாடி நாரிழைப் படகுகளும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இம்மீன்பிடித் துறைமுகத்தில் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும், மீன்களைக் கையாளுவதற்கும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துவது அவசியமாகிறது. எனவே, படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், கூடுதல் படகு அணையும் தளம், தடுப்புச் சுவர், மீன் ஏலக்கூடம், மீன் விற்பனை நிலையம், பனிக்கட்டி உற்பத்தி நிலையம், மீன் பதப்படுத்தும்

மையம், குடிநீர் வசதிகள், சாலை மற்றும் வடிகால் வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் 26 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழையாறு மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தப்படும்.

11. தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் சுமார் 250 விசைப்படகுகள்மூலம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மீனவர்கள் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், விற்பனைச் செய்வதற்கும், தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லையெனவும், இதற்கெனக் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரவும் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகின்றனர். இப்பகுதி மீனவர்களின் கோரிக்கையினை ஏற்று, தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளான மீன் ஏலக் கூடம், வலைபின்னும் கூடம், சுற்றுச் சுவர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, உயர்மின் கோபுர விளக்குகள், தார்ச் சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இதனால் சுமார் 20,000 மீனவ மக்கள் பயனடைவர்.

12. கள்ளக்குறிச்சி மாவட்டம், கோமுகி அணை மற்றும் தூத்துக்குடி மாவட்டம், கடம்பா ஆகிய இடங்களில் புதிய அரசு மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

உள்நாட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கும் வகையில், மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகள் எளிதில் கிடைக்கும்பொருட்டு, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கோமுகி அணை மற்றும் தூத்துக்குடி மாவட்டம், கடம்பா பகுதியில் இந்திய பெருங்கெண்டை வகைகளான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் மொத்தம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இம்மையங்களில், கான்கிரீட் மீன் வளர்ப்புத் தொட்டிகள் மற்றும் குளங்கள் அமைக்கப்பட்டு, மீன் குஞ்சு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம், சுமார் 70 இலட்சம் மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன் வளர்ப்போருக்குக் குறைந்த விலையில் வழங்கப்படும்.

13. மயிலாடுதுறை மாவட்டம், சந்திரபாடி மீனவக் கிராமத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும்

மயிலாடுதுறை மாவட்டம், சந்திரபாடி மீனவக் கிராமத்தில் 26 விசைப் படகுகளும், 150 கண்ணாடி நாரிழைப் படகுகளும் உள்ளன. இங்குள்ள மீனவர்கள் மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பான முறையில் நிறுத்திடவும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தால், பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, மீனவர்களின் சிரமங்களைக் களைந்திடும் வகையில், சந்திரபாடி மீனவக் கிராமத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் படகு அணையும் சுவர், மீன் ஏலக் கூடம் மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 425 மீனவக் குடும்பங்கள் பயன்பெறுவதோடு, தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையும் பெற்றிட இயலும்.

14. திருநெல்வேலியில் வண்ண மீன் காட்சியகம் அமைக்கும் பணி ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

பல்வேறு வகையான நன்னீர் மற்றும் கடல் வண்ண மீன்களை ஒரே இடத்தில் காட்சிப்படுத்தி, அனைத்து வயதினரையும் கவர்ந்து வண்ண மீன் வளர்ப்பை பொழுதுபோக்கு அம்சமாக ஊக்குவித்திட, ஒருங்கிணைந்த வண்ண மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்புப் பிரிவுடன்கூடிய வண்ண மீன் காட்சியகம் திருநெல்வேலியில் ஐந்து கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்புப் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் வண்ண மீன்கள், காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படும்.

15. தஞ்சாவூர் மாவட்டம், திருமங்கலக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் மற்றும் கடலூர் மாவட்டம், அகரம் ஆகிய அரசு மீன் பண்ணைகளில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (கிஃப்ட்) மீன் குஞ்சு பொரிப்பகங்கள் 13 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

வேகமாக வளரக்கூடிய கிஃப்ட் திலேப்பியா வகை மீன் வளர்ப்பு நல்ல இலாபம் ஈட்டும் தொழிலாக விளங்குவதால்,

இவ்வகை மீன் குஞ்சுகளுக்கான தேவை பெருமளவில் அதிகரித்துள்ளது. இந்த வகை மீன் குஞ்சுகளைத் தரமான முறையில் உற்பத்தி செய்து குறைந்த விலையில் வழங்கிடும்பொருட்டு, தஞ்சாவூர் மாவட்டம், திருமங்கலக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் மற்றும் கடலூர் மாவட்டம், அகரம் ஆகிய அரசு மீன் பண்ணைகளில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகங்கள் 13 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இந்நிலையங்களில், சுமார் 60 இலட்சம் கிஃப்ட் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும்.

16. தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அணையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் பயிற்சி மையத்துடன்கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் அரசு திட்டங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஒரே இடத்தில் பெறும் வகையில், தூத்துக்குடியில் மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் மண்டல இணை இயக்குநர், உதவி இயக்குநர் மற்றும் மீன்பிடித் துறைமுக திட்ட கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்கள், பயிற்சி மையம் மற்றும் சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளருக்கான அலுவலகங்கள் மற்றும் பயிற்சி மையம் எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

17. நீலகிரி மாவட்டம், அவலாஞ்சியில் உள்ள அரசு ட்ரவுட் மீன் பண்ணை இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்

குளிர்நீர் மீன் இனமான ட்ரவுட் மீன் குஞ்சு உற்பத்தியினைப் பெருக்கி அங்குள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்வதன்மூலம், அருகி வரும் இம்மீனினத்தின் இருப்பினை இயற்கை நீர்நிலைகளில் அதிகரித்திட இயலும். நீலகிரி மாவட்டம், அவலாஞ்சியில் உள்ள அரசு ட்ரவுட் மீன் பண்ணையில், சினைமீன் குளங்கள், பொரிப்பக வசதிகள், தடுப்பணை, வடிகால் வசதிகள், இணைப்புப் பாலம் போன்ற கட்டமைப்பு வசதிகள் இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, ட்ரவுட் மீன் குஞ்சு உற்பத்தி அதிகரிக்கப்படும்.

18. திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தில் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைத்தல் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் பாலாறு—பொருந்தலாறு அணை அரசு மீன் பண்ணையை மேம்படுத்தும் பணிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தில் புதிதாகத் தாய்மீன் பராமரிப்புக் குளங்கள், நாற்றங்கால்கள், மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள், வடிகால் வசதிகள், பணியாளர் குடியிருப்பு போன்ற வசதிகளுடன் புதிய மீன் குஞ்சு பொரிப்பகம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில், பாலாறு-பொருந்தலாறு அணை அரசு மீன் பண்ணையில் புதிய மீன் வளர்ப்புத் தொட்டிகள், சிப்பமிடும் அறை, அலுவலகக் கட்டடம், சாலை வசதிகள், தண்ணீர் வசதிகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போன்ற வசதிகள் மொத்தம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் திருப்பத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தேவையான மீன் குஞ்சு விரலிகள் இந்த மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

19. தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனமயமாக்குதல் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்கான ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புப் பணிகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகங்களில், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் கடல் சீற்றத்தினால், கடற்கரையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இத்துறைமுகங்களில் இருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் தங்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், கடல் சீற்றத்திலிருந்து இத்துறைமுகங்களைக் காப்பதற்கும், நவீனமயமாக்குதல் மற்றும் விரிவுபடுத்துதல் அவசியமாகிறது. எனவே, இதற்கான பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்படும்.

20. பாரம்பரிய படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்கிட 300 மீனவர்களுக்கு ஆறு கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்

பாரம்பரிய நாட்டுப் படகு மீனவர்களின் மீன்பிடித் திறன் மற்றும் வருவாயினை அதிகரித்திட அவர்களது பாரம்பரிய படகுகளுக்கு மாற்றாக, உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள், மீன்பிடி வலைகள் மற்றும் குளிர்காப்பு பெட்டிகளுடன்கூடிய 10 மீட்டர் வரை நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்கிட அலகு ஒன்றிற்கு பொதுப் பிரிவினருக்கு 40 விழுக்காடும், மகளிருக்கு 60 விழுக்காடும் மானியம் வழங்கப்படும். நடப்பாண்டில், 300 பயனாளிகளுக்குக் கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்கிட ஆறு கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

21. மீன்பிடி விசைப் படகுகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாசுபடுத்தாத கழிப்பறைகள் (Bio–Toilet) அமைத்திட 20 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

*மீன்பிடி விசைப் படகுகளில் போதிய கழிப்பறை வசதி இல்லாததால், மீனவர்களுக்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. மேலும், மீன்பிடிப் படகுகளின் சுகாதாரமும் பாதிக்கப்படுகிறது. மீனவர்களின் பாதுகாப்பு, சுகாதாரமாக மீன்களைக் கையாளுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, மீன்பிடி விசைப்படகுகளில், சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிப்பறைகள் (*Bio–Toilet*) அமைத்திட 40 விழுக்காடு, அதிகபட்சமாக படகு ஒன்றிற்கு 20,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும். நடப்பாண்டில், 100 விசைப்படகுகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிப்பறைகள் அமைத்திட 20 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.*

22. மீன்பிடி விசைப்படகுகளில் தானியங்கி கடற்கலன் கண்காணிப்புக் கருவி (AIS–B Transponders) பொருத்திட 70 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

*மீன்பிடி விசைப்படகுகள் கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும்போது அப்படகுகளின் இருப்பிடத்தை அவ்வழியே பயணம் செய்யும் சரக்கு கப்பல்கள் மற்றும் இதர கலன்கள் தானாக அறிந்துகொள்வதற்கு தானியங்கி கடற்கலன் கண்காணிப்புக் கருவிகள் (*AIS–B Transponders*) உதவுகின்றன. கடலில் செல்லும் கப்பல்கள், செயற்கைக்கோள் சமிக்ஞைகள்மூலம் மீன்பிடிப்*

படகுகளின் இருப்பிடத்தை அறிவதால், கப்பல்கள்மூலம் ஏற்படும் விபத்துகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படும். விசைப்படகுகளில் கடற்கலன் கண்காணிப்புக் கருவிகள் பொருத்திட, அலகு ஒன்றுக்கு 40 விழுக்காடு, அதிகபட்சமாக 14,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். நடப்பாண்டில் 500 விசைப்படகுகளில் கடற்கலன் கண்காணிப்புக் கருவிகள் பொருத்த 70 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

23. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களிலுள்ள உவர்நீர் நிலப்பரப்புகளில் 100 ஹெக்டேரில் புதிய இறால் பண்ணைகள் அமைத்திடவும், அவற்றிற்கு இடுபொருள் வழங்கிடவும், ஐந்து கோடியே 99 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்

தமிழகத்தின் நீண்ட கடற்கரை பகுதியில் விவசாயத்திற்கு அல்லது வேறு தொழில்களுக்குப் பயன்படாத உவர்நீர் நிலங்கள் அதிகமாக உள்ளன. இந்நிலங்களில், புதிய பண்ணைகள் அமைத்து, இறால் வளர்ப்பினை மேற்கொள்வதற்கு, உள்ளீட்டுச் செலவினங்கள் உட்பட ஹெக்டேர் ஒன்றிற்கு 14 இலட்சம் ரூபாய் அலகுத் தொகையில், பொதுப் பிரிவினருக்கு 40 விழுக்காடும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் மற்றும் மகளிருக்கு 60 விழுக்காடும் மானியம் வழங்கப்படும். நடப்பாண்டில், 100 ஹெக்டேர் பரப்பில் புதிய இறால் பண்ணைகள் அமைத்திட ஐந்து கோடியே 99 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் கூடுதலாக 1,000 டன்கள் இறால் உற்பத்தி செய்யப்படுவதோடு, ஏற்றுமதியையும் அதிகரிக்க இயலும்.

24. நவீன உயிர்கூழ்ம (Bio–floc) தொழில்நுட்பத்தின்மூலம் உவர்நீர் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்

தற்போது, குறைந்த பரப்பில் அதிக மீன் உற்பத்தி செய்திட பல்வேறு தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அத்தகைய உயிர்கூழ்ம (Bio–floc) தொழில்நுட்பத்தின்மூலம், அதிக அளவில் உவர்நீர் மீன் உற்பத்தியினை, குறிப்பாக இறால் உற்பத்தியினைப் பெருக்கிட இயலும். மேற்கண்ட நவீன மீன் வளர்ப்புத் தொழில்நுட்பமான உயிர்கூழ்ம முறையினை, மீன் வளர்ப்போர் பின்பற்றுவதை ஊக்கப்படுத்திடும் வகையில், உயிர்கூழ்ம வளர்ப்பு முறைக்கான மூலதன மற்றும் நடைமுறை செலவிற்கு, ஒரு அலகிற்கான செலவினமான 18 இலட்சம் ரூபாயில்,

பொதுப் பிரிவினருக்கு 40% வீதமும் மற்றும் மகளிருக்கு 60% வீதமும் மானியமாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில், 25 அலகுகளுக்கு ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

25. கடல் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள ஒரு கோடியே எட்டு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்க்கும் திட்டம் மீனவர்களுக்குச் சிறந்த ஒரு மாற்று வாழ்வாதாரத் திட்டமாக விளங்குகிறது. இத்தொழில்நுட்பம் குறித்து மீனவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. கடல் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பினை ஊக்கப்படுத்திடும் வகையில், ஓர் அலகிற்கான செலவினமான 5 இலட்சம் ரூபாயில், பொதுப் பிரிவினருக்கு 40 விழுக்காடும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் மற்றும் மகளிருக்கு 60 விழுக்காடும் மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 50 மிதவைக் கூண்டுகள் அமைத்திட ஒரு கோடியே எட்டு இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

26. சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் 50 கோடி ரூபாய் செலவில் நவீன மீன் சந்தைகள் நிறுவப்படும்

கடல் மற்றும் உள்நாட்டில் பிடிக்கப்படும் மீன்களின் தரம் குறையாமல் நுகர்வோருக்கு சுகாதாரமான முறையில் வழங்கிட நவீன மீன் சந்தைகள் அவசியமாகிறது. எனவே, மீன்களை சுகாதாரமான முறையில் விற்பனை செய்வதுடன், மீனவர்கள் பிடித்து வரும் மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்கப் பெறுவதை உறுதி செய்திட, சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய 5 மாவட்டங்களில் 50 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் மீன் சந்தைகள் நிறுவப்படும்.

27. தமிழகத்தில் மீன் மற்றும் மீன் பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவித்திட தனியார் பங்களிப்புடன் (PPP) தொடர் குளிர்காப்பு வசதிகளை (Cold Chain facilities) ஏற்படுத்திட 50 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்

தமிழகத்தில் மீன் மற்றும் மீன் பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவித்திட, ஆழ்கடல் மீன்பிடிப்பு, இறால் உற்பத்தியை அதிகரித்தல், தொடர் குளிர்காப்பு வசதிகள், மீன் பதப்படுத்தும்

நிலையங்கள், மீன் மதிப்புக் கூட்டு வசதிகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகள் குறித்து முழுமையாக ஆராய்ந்து, அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன், இவ்வசதிகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த விரிவான ஆய்வு 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதன்மூலம், தமிழ்நாட்டின் கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை வெகுவாக அதிகரிக்க இயலும்.

28. நாட்டின மீன் குஞ்சுகள் ஒரு கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் ஆறுகளில் இருப்பு செய்யப்படும்

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்கு ஆறுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆறுகளில் நாட்டின மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன்மூலம் நாட்டின மீன் குஞ்சுகளை பாதுகாத்துப் புத்துயிரூட்ட இயலும். தமிழ்நாட்டில் ஆறுகளில் நாட்டின மீன் வகைகளைப் பாதுகாத்திட, 40 இலட்சம் சேல் கெண்டை (Labeo fimbriatus) மற்றும் கல்பாசு (Labeo calbasu) வகை நாட்டின மீன் குஞ்சுகள் ஒரு கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, இருப்பு செய்யப்படும். இதன்மூலம் நாட்டின மீன் வகைகள் பாதுகாக்கப்பட்டு, உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதுடன், ஆறுகளைத் தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்களின் வருமானமும் கணிசமாக உயர்ந்திட வழிவகை ஏற்படும்.

29. தமிழகத்தின் நாட்டின மீன்களைப் பாதுகாத்து பெருக்கிட ஐந்து கோடி ரூபாய் செலவில் நாட்டின மீன் குஞ்சு பொரிப்பகங்கள் அமைக்கப்படும்

தமிழகத்தின் நாட்டின மீன் இனங்கள் சுவையில் சிறந்த மீன் உணவுகளாக கருதப்படுவதோடு, ஊட்டச் சத்துமிக்க மற்றும் மருத்துவ குணம் வாய்ந்த உணவாக விளங்குகின்றன. நாட்டின மீன் வகைகளான அயிரை, சேல்கெண்டை, கரி மீன் மற்றும் காக்கை கெண்டை போன்றவை மிகவும் பிரசித்திபெற்ற இனங்களாகும். தற்போது, நாட்டின மீன் இனங்கள் இயற்கை நீர்நிலைகளில் குறைந்து வருவதைக் கருத்திற்கொண்டு, நாட்டின மீன்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் அரசு முக்கியத்துவம் அளித்து, நாட்டின மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்திட ஐந்து கோடி ரூபாய் செலவில்

அரசு நாட்டின மீன் குஞ்சு பொரிப்பகங்கள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளை உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்வதன் வாயிலாக, நாட்டின வகை மீன் உற்பத்தியினைக் கணிசமாக அதிகரிப்பதோடு, மீன் வளர்ப்போர் நாட்டின மீன்களை வளர்த்து உயர் வருவாய் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

30. பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும்

ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதில் மீன் வளர்ப்பு பெரும் பங்கு வகிக்கிறது. மீன் வளர்ப்போரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும், நிலையான வருமானம் பெறுவதை உறுதி செய்திடவும், பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள மீன் குஞ்சு, மீன் தீவனம் போன்ற உள்ளீட்டு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. இதன்மூலம் மீன் வளர்ப்போரின் வாழ்வாதாரம் மேம்பட்டு, சுய வேலைவாய்ப்பு ஏற்படுவதுடன், கணிசமான வருவாயினையும் ஈட்டிட இயலும். மேலும், புரதச்சத்துமிக்க மீன் உணவு ஊரகப் பகுதிகளுக்குக் கிடைத்திட வழிகோலும். பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள மீன் வளர்ப்போருக்கு ஒரு கோடி ரூபாய் இடுபொருள் மானியமாக வழங்கப்படும்.

31. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் புதிய டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கடலோர மாவட்டங்களில் 31 இடங்களில் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் விற்பனை நிலையங்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 இடங்களில் மானிய விலையிலான மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களை நிறுவி மீனவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறது. தற்போது, கூடுதலாக, நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் மற்றும் வெள்ளப்பள்ளம் ஆகிய இரண்டு இடங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் பயன்பெறும் வகையில், புதிதாக இரண்டு டீசல் விற்பனை நிலையங்கள் தலா 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இயந்திரம் பொருத்தப்பட்ட

நாட்டுப்படகு மீனவர்கள் பயன்பெறும் வகையில், மானிய விலையிலான மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் ஒன்று 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

32. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்திடும்பொருட்டு, 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்

I. கோவை மாநகரத்தில் மூன்று சக்கர நடமாடும் மீன் விற்பனை ஊர்திகள் 15 இலட்சம் ரூபாய் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.

II. நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கண்ணியில் மீனவ மகளிர் பயன்பெறும் வகையில், மீன் உணவு விற்பனை நிலையங்கள் 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

III. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகப் பகுதியில் மீன் கழிவு மேலாண்மைத் திட்டம் 10 இலட்சம் ரூபாய் செலவில் மீனவ மகளிர்மூலம் செயல்படுத்தப்படும்.

IV. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் வணிக ரீதியிலான செயல்பாடுகளை விரிவுபடுத்திட 10 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான ஆய்வுகள் கலந்தாய்வர்/ஆலோசகர்மூலம் மேற்கொள்ளப்படும்.

33. செங்கல்பட்டு மாவட்டம், வாயலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், திருப்பாலைக்குடி ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் (TAFCOFED) வாயிலாக சில்லரை டீசல் விற்பனை நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் டீசல் விற்பனை நிலையங்கள்மூலம் மீனவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசலை விற்பனை செய்து வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம், வாயலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், திருப்பாலைக்குடி ஆகிய கிராமங்களில் உள்ள பாரம்பரிய மீனவர்கள் வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசலைப் பெறுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் வாயிலாக இரண்டு சில்லரை டீசல் விற்பனை நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

34. அயிரை மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும்பொருட்டு, தேனி மாவட்டத்தில் அயிரை மீன் ஆராய்ச்சி மையம் இரண்டு கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

தமிழகத்தின் உள்நாட்டுப் பகுதிகளில் பொதுவாக கெண்டை மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் குறைவான வளர்ப்புக் காலத்தில் வளரும் மற்றும் மிகுந்த சந்தை மதிப்பு கொண்ட நமது நாட்டின மீன் இனமான அயிரை மீன் இலாபகரமான மீன் வளர்ப்பிற்கு ஒரு சிறந்த தேர்வாக அமைகிறது. உணவுக்கான மீனாக மட்டுமின்றி, வண்ண மீன் வணிகத்திலும் அயிரை மீன்களுக்கு சிறப்பான இடம் உள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, அயிரை மீன் வளர்ப்பைப் பரவலாக்கும்பொருட்டு, இரண்டு கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் அயிரை மீன் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, மரக்காணம் பகுதியில் மீன் வளத் துறைமூலம், விழுப்புரம் மாவட்ட மீனவர்கள் பயன்பெறும் வகையில், அழகன்குப்பம் மற்றும் ஆலம்பரைகுப்பம் பகுதி, கழுகுவேலி ஆற்றில் 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். கடந்த ஆட்சியில், அதற்குரிய சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் பணியைத் துவக்கியதன் காரணமாக, பணி தடைபட்டுள்ளது. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுச்சூழல் அனுமதி பெற்று, உடனடியாக, அதற்கான பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பிற்பகல் 3–45

அதேபோல, முன்னாள் உணவுத் துறை அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் பேசும்போது, நாட்டின கால்நடைகளை பாதுகாப்பதற்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடவில்லை என்று சொன்னார்கள். தமிழகத்திலே 90.08 இலட்சம் கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 2020 ஆம் ஆண்டிற்குப் பின் ஒன்றிய அரசால் கோமாரி நோய்த் தடுப்பூசி வழங்கப்படாத நிலை ஏற்பட்டது. 6 மாதங்களுக்கு ஒருமுறை போட வேண்டிய தடுப்பூசிப் பணியை மேற்கொள்ள

இயலவில்லை. கழக அரசு பொறுப்பேற்ற பின்பு, ஒன்றிய அரசை வற்புறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியால் தடுப்பூசிகள் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கோமாரி நோய் தடுப்பூசிகள் இருக்கின்றன. நீங்கள் கேட்டால், உங்கள் மாவட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால்நடைகளுக்கு எல்லா இடங்களிலும் தடுப்பூசிகள் போடுகிறார்கள். நன்றி. மாண்புமிகு அமைச்சர், முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மத்திய அரசிடமிருந்து வர வேண்டிய தடுப்பூசிகள். . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: உங்கள் ஆட்சியில் தொடர்ந்து வராததன் காரணமாகத்தான் மாடுகள் இறந்து போயிருக்கும். மற்றபடி எங்களுடைய ஆட்சி பொறுப்பேற்றவுடன் எங்களுடைய தலைவர் உடனடியாக ஒன்றிய அரசைத் தொடர்பு கொண்டு, கண்டிப்பாக கோமாரி நோய்த் தடுப்பூசிகளைத் தர வேண்டுமென்று வலியுறுத்தி, அதனை வாங்கி எல்லா மாடுகளுக்கும் தடுப்பூசி போடுகின்ற பணியை மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவோடு நாங்கள் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், நம்முடைய முதல்வர் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு தளபதி அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, தளபதி என்றால், 'உழைப்பு, உழைப்பு, உழைப்பு' என்று சொல்வார்கள். அந்த உழைப்பிற்கு இலக்கணமாக விளங்கும் நமது மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களுடைய சீரிய தலைமையில், நாங்களும் அயராது உழைப்போம் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் அரசு அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய தென்காசி திரு. சு. ஜவஹர், I.A.S. அவர்களுக்கும், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் டாக்டர் K.S. பழனிசாமி, I.A.S. அவர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறை

ஆணையர் திரு. அ. ஞானசேகரன், I.A.S. அவர்களுக்கும் மற்றும் துறை அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன்வளம்-மீனவர் நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்புத் துறையில் 128 வெட்டுத் தீர்மானங்களையும், மீன்வளத் துறையில் 78 வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்துள்ளார்கள். அவற்றை நான் முழுமையாகப் படித்துப் பார்த்தேன். அவற்றிற்கு முடிந்தவரை பதில் கூறியுள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை சந்தோஷமாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்கு ஒரு வாய்ப்பினைத் தந்து முதன் முதலாக 1996-ல் என்னை அமைச்சராக்கி, இந்த அளவிற்கு நான் வருவதற்குக் காரணமாக இருந்த, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொள்கின்ற திசை நோக்கி எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகை அச்சுறுத்திய கொரோனாவின்போது ஊரே முடங்கிக் கிடந்த நிலையில், கண்துஞ்சாது கழனியில் கால் பதித்து, உயிரையே துச்சமென நினைத்து, உலகிற்கே உணவளித்த உழவர்களின் நலன் காக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்தில் உருவான வேளாண்மை-உழவர் நலத் துறை என்ற புதிய பரிணாமத்தில், பெருமைமிகு தமிழகத்தில் விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதே தன் கடமையென மற்றுமொரு

2022 ஏப்ரல் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட எங்களின் இனிய முதல்வரே உழவையும், தொழிலையும் உயிராக மதித்து உழைத்திடும் விவசாயிகளின் வியர்வையைத் துடைத்திட, வள்ளுவரின் கருத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், உழவர்களின் கருத்துகளையும் பல நிலைகளில் கேட்டு, தமிழக வரலாற்றில் முதன் முறையாக உழவனுக்காக தனி நிதிநிலை அறிக்கை தந்த, உழவனின் இருள் நீக்கி, ஒளி தரும் 'உதயசூரியனாம்' எம் முதல்வர்.

பிற்பகல் 3–50

வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை தந்த தலைவரே, நீங்கள் கண்ட கனவுத் திட்டம், கலைஞரின் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், தரிசு நிலங்களுக்கான பரிசுத் திட்டம், நெல் தரிசில் பயிர், வரப்பில் பயிர், ஊடுபயிர், அது தரும் உயிர்ச் சத்து, உடல் நலம் காக்கும் சிறுதானியம், அது உணவில் தன்னிறைவு, மாற்றுப் பயிர்களுக்கு ஏற்றம், அவை தருமே ஒரு மாற்றம். பனைக்குப் பாதுகாப்பு, பலாவிற்கு ஓர் ஆராய்ச்சி மையம், இயற்கை வேளாண்மைக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம், மூங்கிலுக்கு ஓர் இயக்கம், உழவர் வாழ்வு மேம்பட உழவர் சந்தை, உணவுப் பூங்கா, முத்தான பல திட்டங்கள், உணவு தானிய உற்பத்தியில் உச்சம் என கடந்த ஆண்டு நீங்கள் அள்ளித் தந்த திட்டங்கள் ஏராளம்; அதனால் இன்று உழவர்களின் முகத்தில் மகிழ்ச்சியோ தாராளம். இனி மாநிலத்தில் நிரந்தரம் எனும் நிலை. இனி தமிழகம்தான் அனைத்திலும் முன்னிலை. கொரோனா பெருந்தொற்று காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கிப்பிடித்த வேளாண் துறையின்மூலம் ஏராளமான மானியத் திட்டங்கள் தாராளமாய்த் தந்து, கட்டாந்தரையிலும் பயிர் விளைவிக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டெடுத்து, கழனி செழித்திட தமிழகம் தழைத்திட, பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் ஆண்ட வழியில், தமிழகத்தைத் தரணி மெச்சிட வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வேளாண்மை–உழவர் நலத் துறை நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றது; *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று மட்டுமல்ல, என்றென்றும் நன்றியுடன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, இதற்கெல்லாம் உதாரணம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். இப்போது அவர் நிறைவேற்றிய திட்டங்களைப் பற்றிச் சொல்லிவிட்டேன். பத்து நிமிடங்களில் நான் உரையை முடித்துவிடுகிறேன். ஆகவே, அவருக்கு உறுதுணையாக, ஒரு செங்கல்லை வைத்தே தமிழகத்தில் ஓர் அரசியல் புரட்சி செய்த

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2022 ஏப்ரல் 13

(மேசையைத் தட்டும் ஒலி) உதயநிதி உதயா, உதயநிதி இளையநிதி உதயா அவர்களுக்கும் வணக்கம். இங்கே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை ஆரம்பிக்கின்றேன்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை கூறியுள்ளார்கள். அவற்றில், நம்முடைய முன்னாள் அமைச்சர், பத்தாண்டுக் காலம் அமைச்சராக இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றியவர், விவசாயத் துறைக்கு எதுவும் செய்யவில்லை என்றும், பத்தாண்டுக் காலம் நாங்கள் செய்தோம் என்றும் அவர் கூறினார். ஆக, நீங்கள் விவசாயத் துறையில் இப்போது அதிக அளவிற்கு நெல்லை கொள்முதல் செய்யவில்லை என்று சொல்கிறார். இந்த பத்து மாதக் காலத்தில் அதிகமான நெல்லை உற்பத்தி செய்து, புரட்சி செய்திருக்கின்றோம். முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் நெல்லை கொள்முதல் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆக, நீங்கள் பத்தாண்டுக் காலத்தில், அதற்குத் தேவையான கொள்முதல் நிலையங்களை, godown வசதிகளை சரியாகக் கையாளாத நிலையிலும், இந்த ஆண்டு, இந்த பத்து மாத ஆட்சிக் காலத்தில் நாங்கள் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். அந்த நெல்லைக் கொண்டு வந்து சேமித்து வைப்பதற்குக்கூட, நீங்கள் அதற்கு சரியான இடவசதி தயார் செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 10 ஆண்டுக் காலம் உணவுத் துறை அமைச்சராக இருந்தார்கள். ஆக, அந்த பத்தாண்டு காலத்தில் இவ்வளவு உணவு உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை நீங்கள் செய்யாததால், இந்த பத்து மாதத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் கூடுதலாகக் குறுவை நெல் உற்பத்தி செய்ததை, கிட்டத்தட்ட 46 ஆண்டுக்கால சாதனையாகச் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டைவிட ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் கூடுதலாகக் குறுவை நெல் உற்பத்தி செய்திருக்கிறோம். அதேபோல தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட ஐந்து இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் ஏக்கர் கூடுதலாக பயிர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது; வளர்ச்சிதான்; இன்றையதினம் நாங்கள் ஆட்சிக்கு வந்து பத்து மாதங்கள்கூட ஆகவில்லை. இதற்கிடையே என்னாச்சு, என்னாச்சு என்று கேட்கிறீர்கள். நீங்கள் பத்து ஆண்டுக் காலம் செய்யாததை, அதற்குள் என்னாச்சு, என்னாச்சு என்று எங்களை கேட்கிறீர்களே! அதை நீங்கள் கேட்கலாமா? (மேசையைத் தட்டும் ஒலி)

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது உங்கள் மேலுள்ள நம்பிக்கை. நீங்கள் செய்து கொடுப்பீர்கள் என்று.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: கடந்த காலத்தில் பெய்த ஒரு மழையிலேயே அடுக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் தண்ணீரில் நனைந்திருந்ததையும் நாங்கள் பார்த்தோம். நாங்கள் உற்பத்தி செய்ததனால்தான், நீங்கள் open godown-ல் நெல் கொள்முதல் செய்து வைத்திருந்தீர்கள். அந்த நெல் முளைத்து விட்டதால், அதுகுறித்து இதே சட்டமன்றத்தில் நாங்கள் விவாதம் செய்திருக்கிறோம். அதுபோல நடக்கக் கூடாது என்றுதான் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆகியோர் அடங்கிய ஒரு கூட்டத்தை நடத்தி, உடனடியாக ஒரு வாரக் காலத்தில் அனைத்து நெல் மூட்டைகளையும் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்றவர்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வார காலத்தில் அனைத்தையும் நாங்கள் அங்கே கொண்டு சேர்த்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–55

மிக அதிகமான அளவு நெல் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. TKM 9 நெல் என்பது மோட்டா இரக நெல். இங்கே அதிகமாக உற்பத்தி செய்யப்படும் TKM 9 இரக நெல்லை கேரள மாநில மக்கள் சாப்பிடுகிறார்கள். தமிழகத்தில் சன்ன இரக நெல்லைத்தான் அதிகளவு சாப்பிடுகிறார்கள். கிராமப்புறங்களில் சன்ன இரக நெல்தான் வேண்டும்; மோட்டா இரக நெல் வேண்டாம் என்று நியாய விலைக் கடைகளில் மக்கள் வாங்க மறுக்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட ரூ.150 கோடி மதிப்புள்ள TKM 9 இரக நெல் வழங்கப்படாமல் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலமாக மக்கி, சீரழிந்திருக்கிறது. எங்களுக்குத்தான் அந்தப் புள்ளிவிவரங்கள் தெரியும்; உங்களுக்கும் தெரியும். TKM 9 மோட்டா இரக நெல்லை விற்பதற்கு சிரமப்பட வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் முன்னெச்சரிக்கையாக அவற்றை விவசாயிகள் பயிரிட வேண்டாம் என்று நாங்கள் கூறுகிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள். ஒன்றும் பிரச்சினை இல்லை. திரு. ஓ.எஸ். மணியன் அங்கேதான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியின் அடிப்படையில் இந்த ஆண்டு ஒரு இலட்சம் மின் இணைப்பு மின்சாரத் துறையின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இலட்சம் மின் இணைப்பு பூர்த்தி செய்யப்படவுள்ளது. வரும் ஆண்டு கிட்டத்தட்ட 5 இலட்சம் ஏக்கர் கூடுதலான நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் கிடைக்கின்ற காரணத்தால், நெல் உற்பத்தி அதிகமாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதனைத் திட்டமிட்டு, செயலாக்கம் செய்கின்ற நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இப்போதுதான் கல்யாணம் ஆகியிருக்கிறது; குழந்தைக்கு பெயர் கேட்பது போன்று இருக்கிறது; என்ன குழந்தை என்று கேட்பது போன்று இருக்கிறது. அதற்கும் கால நேரம் வேண்டும்.

தேர்தல் நேரத்தில் விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னீர்கள். தள்ளுபடி செய்கிறோம் என்று G.O. போட்டுவிட்டுச் சென்றீர்கள்; நிதி ஒதுக்கவில்லை. அந்தப் பணத்தையும், 12,500 கோடி ரூபாய், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது விடுவித்துள்ளார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட நகைக் கடன், தற்போது எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தள்ளுபடி ஆனது. அது ரூ.5,000 கோடி. ஆக 12–ம், 5–ம் 17 ஆயிரம் கோடி ரூபாய். மகளிருடைய கடன் 2,700 கோடி ரூபாய். கணக்குப் போட்டு பார்த்தால் 20,000 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. அந்த நிலையில் நாங்கள் இருக்கிறோம். அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகின்றபோது, இதுவும் நிறைவேற்றப்படும். தற்போது வேளாண் துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை அறிவிக்கப்பட்டது. தற்போதுதான் குழந்தை பிறந்து தவழ்ந்து கொண்டிருக்கிறது; இன்னும் நடக்க வேண்டும்; நடந்து ஓடி விளையாட வேண்டும். அதற்குக் காலம் வேண்டும். தற்போது ஒரு நம்பிக்கை வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைப் பார்த்தே பேசி முடித்து விடுங்கள். தற்போது பிற்பகல் 4–00 மணி ஆகிறது.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை நல்ல ஆரோக்கியமாக வளர்வதற்கு இந்தச் சத்தான திட்டங்களெல்லாம் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்த 10 மாதக் காலத்தில் கிட்டத்தட்ட 64 இலட்சம் விவசாயிகளுக்கு

அரசினுடைய திட்டங்கள் சென்றடைந்திருக்கின்றன. இது குறுகிய காலத்தில் நிகழ்த்தப்பட்ட சாதனை. முன்பு எந்தெந்த விவசாயிகளுக்கு திட்டங்கள், என்ன செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. வாழை விவசாயிக்கு என்ன திட்டம் என்பதை அறிவித்திருக்கிறோம்; அதுபோல் நெல் விவசாயிகளுக்கும், கரும்பு விவசாயிகளுக்கும் அறிவித்திருக்கிறோம். கரும்பு விவசாயிகளுக்குத் தற்போதுதான் மகிழ்ச்சி வந்திருக்கிறது. நானே மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். ஏனென்றால், நான் இதே சட்டமன்றத்தில் இதே அவையில் கடைசியாக ஓர் ஓரமாக அமர வைக்கப்பட்டிருந்தேன். நானும் மாண்புமிகு அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களும் அப்போது கரும்பு விவசாயத்திற்கு இதே அவையில் குரல் கொடுத்திருக்கிறோம். திரு. சம்பத் அவர்கள்தான் தொழில் துறை அமைச்சர்; உடனே நிறுத்துவார்; அவரும் எங்களுடைய மாவட்டம்தான். ஏனென்றால் அப்போது நிதியில்லை. அந்த நிலுவைத் தொகையை இந்த பத்து மாதக் காலத்தில் அனைத்துக் கரும்பு விவசாயிகளுக்கும் கொடுத்திருக்கிறோம். தற்போது கரும்பு விவசாயத்தில் முற்றிலுமாக நிலுவைத் தொகையே கிடையாது. இன்னும் சொல்லப்போனால், கலைஞர் அவர்கள் 2006-ல் முதலமைச்சராக இருந்தபோது 12 கரும்பு சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி co-generation செய்வதற்கு உத்தரவு போட்டு, கிட்டத்தட்ட ரூ.1,200 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், இந்தப் பத்து வருடக் காலத்தில், நீங்கள் 6 mill-களுக்குத்தான் போட்டிருக்கிறீர்கள்; மீதமுள்ளவற்றிற்குப் போடவில்லை. தற்போது 1,400 கோடி ரூபாய் வட்டி ஏறிப்போயிருக்கிறது. அப்போதிருந்த மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதனைக் கண்காணிக்கவில்லை. ஆகையால், நாங்கள் தேடிப்பிடித்து தற்போது 3 சர்க்கரை ஆலைகளில் co-generation தயாராகவுள்ளது. ஆக, இவற்றையெல்லாம் நாங்கள் சரி செய்வதற்கே எங்களுக்கு இரண்டு ஆண்டுகள் ஆகும் போலிருக்கிறது. அதற்குப் பிறகு அதிலிருந்து மீண்டு வருவதற்குள் நான்கு ஆண்டுகள் ஆகிவிடும். எங்களுடைய முழுமையான ஐந்து ஆண்டுக் காலத்தைப் பூர்த்தி செய்யும்போது, விவசாயிகள் தன்னிறைவு பெற்ற விவசாயிகளாக, வங்கிகளுக்கு கடன் கேட்டுச் செல்லக்கூடிய வாய்ப்பை உருவாக்காமல் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அது உறுதி என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2022 ஏப்ரல் 13
பிற்பகல் 4–00

அடுத்து, துறையினுடைய அறிவிப்புகளுக்குப் போய்விடலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால், பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட தனி வேளாண் நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தின்போதே இத்துறை குறித்து விவாதித்துவிட்டோம். வேளாண் நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தின்போது 3, 4 நாட்கள் விவாதம் நடத்தப்பட்டு, அதற்குப் பதிலுரையும் வழங்கியாகிவிட்டது.

விவசாயிகளைச் சந்தித்து, அவர்களிடம் கருத்துகளைக் கேட்டறிந்து, வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதற்காக, கிட்டத்தட்ட 2,410 விவசாயிகளிடம் கருத்துகளைக் கேட்டுத்தான் வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டது. அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, உள்வாங்கி, அதனடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் வேளாண்மை நிதிநிலை அறிக்கை. ஆகவே, அந்த அடிப்படையில் கடந்த ஆண்டைவிட கரும்பின் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. கரும்பு உற்பத்தியைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டில் சுமார் ரூ.120 கோடி அளவிற்குக் கூடுதலாக வருமானம் வரக்கூடிய வாய்ப்பும், சூழ்நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட leakages–ஐயெல்லாம் அடைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அதுபோல, பல திட்டங்களை அறிவித்திருக்கிறோம்.

கரும்பு விவசாயிகளுக்குத் தேவையான அளவில் இரசாயன உரம் இல்லை என்கிறார்கள். சுமார் 1 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உரங்கள் கையிருப்பில் இருக்கின்றன. அடுத்து நடைபெறவிருக்கும் குறுவை, சம்பா பயிர்களுக்குத் தேவையான உரம் தயாராக இருக்கிறது. அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளால்தான் சாத்தியமாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இரண்டு முறை ஒன்றிய உரத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதி, அதனடிப்படையில் ஒன்றிய அரசிடமிருந்து உரங்கள் பெறப்பட்டு, தட்டுப்பாடுகளைக் களையும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, பயிருக்கான insurance திட்டம். விவசாயிகளுக்கு insurance தொகை சரியாக வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியில், தேர்தல் நேரத்தில் குறுவை சாகுபடிக்கு insurance-க்காக பதிவு செய்வதைக் கைவிட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும்போது, குறுவை நெல் நடப்படும் சூழ்நிலை வந்துவிட்டது. அதற்குப் பிறகு மழையும் வந்துவிட்டது. அதனால், formalities முடித்து, tender விடுவதற்குக் காலமில்லாத காரணத்தினால், குறுவை சாகுபடிக்குக் கொடுக்க முடியவில்லை. தற்போது சம்பா சாகுபடிக்கு insurance-க்காகப் பதிவு செய்யும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த முயற்சிகளின் காரணமாக கடந்த சம்பா சாகுபடி காலத்திற்கான insurance தொகையும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக, இந்த நடவடிக்கைகளெல்லாம் இந்த அரசினுடைய சாதனைகளாகக் கருதலாம் என்பதை மாண்புமிகு முன்னாள் அமைச்சர், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அவர்கள் ஏதோ பேச வேண்டும்; வேறு வழியில்லை, அவர்கள் பேசித்தான் ஆகவேண்டும். ஆட்சியின்மீது குறை சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்களுடைய ஆட்சியில் நாங்கள் செய்தோம் என்று அவர்கள் சொல்வார்கள். ஆனால், எங்களிடத்தில் புள்ளிவிவரம் இருக்கிறது. தற்போது உங்களிடத்தில் புள்ளிவிவரங்கள் கிடையாது. ஆகவே, அப்பொழுது நீங்கள் அவ்வாறு சொன்னீர்கள். ஆனால், நாங்கள் புள்ளிவிவரங்களோடு பேசியிருக்கிறோம். இந்தப் புள்ளிவிவரங்கள் சரியான புள்ளிவிவரங்கள்தான்.

நெல்லைப் பொறுத்தவரையில், அவற்றைப் பாதுகாப்பான இடங்களில் வைத்திருப்பதை ஒரு சாதனையாகவே சொல்லலாம். நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களுடைய ஆட்சியில் ஒரு மூட்டைக்கு ரூ.3/- என்ற வகையில் கூலி கொடுக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தத் தொகை ஒரு மூட்டைக்கு ரூ.10/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு, அதில் எவ்விதமான தவறுகளும் நடைபெறாத வகையில் இருப்பதற்கு வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, கேட்பதைக் கொடுக்கின்ற முதல்வர் இருக்கின்றார். ஏனென்றால், நேரடியாக திருவாரூருக்குச் செல்கின்றபோது, நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு செய்யும்போது, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களிடம் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்கள். அவர்கள் ஆட்சியின்போது, ஒரு மூட்டைக்கு ரூ.3/- என்ற அளவில் கூலியாகக் கொடுக்கப்பட்டு

வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்குள்ள பிரச்சினையை நேரடியாகப் பார்த்தபோது, அந்தக் கூலித் தொகையை ஒரு மூட்டைக்கு ரூ.10/– ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அங்குள்ள விவசாயிகள் கோரிக்கை வைத்ததன் காரணமாக, அந்தத் தொகை ரூ.10/– ஆக உயர்த்தப்பட்டு, அது சரிசெய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றையும் நேரடியாகப் பார்த்து, நடவடிக்கை எடுக்கும் action முதல்வராக இருக்கிற காரணத்தினால்தான், active முதல்வராக இல்லை, action முதல்வராக இருக்கிற காரணத்தினால்தான், ஒவ்வொரு இடத்திற்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

பேருந்துகளில் ஏறிப் பார்க்கிறார்கள்; பயணிகளிடம் என்ன பிரச்சினை என்று கேட்டறிகிறார்கள். அதைப்போலத்தான், இந்த photo—வைப் பாருங்கள். இந்த photo-வைப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும்.

(மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு புகைப்படத்தைக் காண்பித்தார்கள்.)

நிலத்தில் நடவு செய்கின்ற பெண்களிடம் அவர்களுடைய கருத்துகளைக் கேட்கிறார்கள். ஒவ்வொருவரிடமும் அவர்களுடைய வலிகளை, கஷ்டங்களைக் கேட்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கின்ற முதல்வருடைய ஆட்சியில் வேளாண்மைத் துறை கண்டிப்பாகஇன்னும்பலமடங்குமுன்னேறுகின்றஅளவிற்குஅரசின் நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இத்துறை சார்ந்த அறிவிப்புகளுக்கு வந்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அறிவிப்பை மட்டும் வெளியிடுகிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 4–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள், யாருக்கும் வாய்ப்பு அளிக்க இயலாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையை முடிக்கட்டும். முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன். முதலில் அனைவரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளைப் படிக்கிறேன். முதல் அறிவிப்பை மட்டும் படிக்கிறேன். அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். இந்த அவையில் படித்ததாக கருதி, மீதமுள்ளவற்றைத் தாங்கள் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், 2022–2023 ஆம் ஆண்டில் நெல் தரிசில் பயறு சாகுபடித் திட்டம் பத்து இலட்சம் ஏக்கரில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

வேளாண் விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், சம்பா நெல் அறுவடைக்குப் பின், உளுந்து, பச்சைப் பயறு பத்து இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்திட ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் மானியம் வழங்குவதற்காக 2022–2023 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம் தமிழகத்தின் பயறு உற்பத்தி இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயரும் என்பதுடன், 12 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

ஒரு ஏக்கருக்கு உளுந்து விதை வாங்குவதற்கு ரூ.800/– செலவாகும். அதற்கு ரூ.400/– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மானியமாக கொடுக்கின்றார்கள். அதற்கு நன்றாக தட்டலாம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. செங்கல்வராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளுக்கு அரவை இயந்திர பகுதிக்குத் தேவையான கியர் பாக்ஸ்கள் (Planetary Gear Box) இரண்டு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்

செங்கல்வராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் கோள் கல பல் சக்கர பெட்டிகளில் பழுது ஏற்பட்டுள்ளதால், கரும்பு அரவைக்கு அதிக நேரமாகிறது. எனவே, 2022–2023 ஆம் ஆண்டில் இவ்விரு ஆலைகளும் பயன்பெறும் வகையில், இரண்டு கியர் பாக்ஸ்கள் இரண்டு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

3. வேலூர், அறிஞர் அண்ணா, தருமபுரி சர்க்கரை ஆலைகளின் அரவை இயந்திர மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவிகளும், செங்கல்வராயன், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு, பல் சக்கரத்துடன்கூடிய அழுத்த உருளையின் (Toothed Roller Pressure Feeder) மின் மோட்டாரைக்

கட்டுப்படுத்தும் கருவியும் 2022–2023 ஆம் ஆண்டில் இரண்டு கோடியே ஏழு இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்

2022–2023 ஆம் ஆண்டில், வேலூர், அறிஞர் அண்ணா, தருமபுரி சர்க்கரை ஆலைகளின் அரவை இயந்திர மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவிகளும், செங்கல்வராயன், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு, பல் சக்கரத்துடன்கூடிய அழுத்த உருளையின் (Toothed Roller Pressure Feeder) மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவியும், இரண்டு கோடியே ஏழு இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

4. கள்ளக்குறிச்சி–1, கள்ளக்குறிச்சி–2, செங்கல்வராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் புதிய உருளைக் கொள்முதல் செய்யவும், கள்ளக்குறிச்சி–1, கள்ளக்குறிச்சி–2, எம்.ஆர்.கே., செங்கல்வராயன், தருமபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவைப் பகுதியினை தானியங்கிமயமாக்கவும் 2022–2023 ஆம் ஆண்டில் மூன்று கோடியே 81 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்

கள்ளக்குறிச்சி–1, கள்ளக்குறிச்சி–2, செங்கல்வராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் புதிய உருளைக் கொள்முதல் செய்யவும், கள்ளக்குறிச்சி–1, கள்ளக்குறிச்சி–2, எம்.ஆர்.கே., செங்கல்வராயன் மற்றும் தருமபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் அரவைப் பணியினை முழுமையாகத் தானியங்கிமயமாக்கவும், 2022–2023 ஆம் ஆண்டில் மூன்று கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

5. 2022–2023 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் கொதிகலன் நீரேற்றும் பம்பும், தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை நிலைய மின் மோட்டாரும் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்

சர்க்கரை ஆலைகளில் விரைவில் அரவைப் பணி மேற்கொள்வதற்கு செய்யாறு, வேலூர், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைகளுக்கும் பொதுவாக கொதிகலன் நீரேற்றும் பம்பு ஒன்று அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையிலும், வேலூர், அறிஞர் அண்ணா, தருமபுரி சர்க்கரை ஆலைகளுக்கும் பொதுவாக ஒரு புதிய உதிரி 500 கிலோ வாட் மின் மோட்டார் தருமபுரி கூட்டுறவு

சர்க்கரை ஆலையிலும் நிறுவுவதற்கு 2022–2023 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி செலவிடப்படும்.

6. 2022–2023 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா, பெரம்பலூர் கள்ளக்குறிச்சி–1, சர்க்கரை ஆலையில் வளி அழுத்த முறையில் இயங்கும் பேன் (Pan) திறப்பு தடுக்கிதழ் (Valve) 92 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

வளி அழுத்த முறையில் இயங்கும் பேன் (Pan) மூலம் திறப்பு தடுக்கிதழ் இயக்கத்தை எளிமைப்படுத்த 2022–2023 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் 31 இலட்சம் ரூபாய் செலவிலும், பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 35 இலட்சம் ரூபாய் செலவிலும், கள்ளக்குறிச்சி-1, கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 26 இலட்சம் ரூபாய் செலவிலும் ஆக, மொத்தம் 92 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

7. கரும்பு, தானியத்திலிருந்து எத்தனால் தயாரிப்பினை ஊக்கப்படுத்தி, எத்தனால் ஆலை தொடர்ச்சியாக இயங்கும்வகையில், நாளொன்றுக்கு 80 ஆயிரம் லிட்டர் திறனுடன் எத்தனால் ஆலையினை பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்விட பத்து இலட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

சர்க்கரை ஆலையின் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன், கரும்பு, தானியத்திலிருந்து எத்தனால் தயாரித்து, தொடர்ந்து எத்தனால் ஆலை இயங்கும்வகையில், எரியூட்டு கொதிகலன் அடிப்படையில் கழிவுநீர் ஏதும் வெளியேறாத வகையில், நாளொன்றுக்கு 80 ஆயிரம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலையினை பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் அமைப்பதற்கு பொருளாதாரரீதியில் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்திட 2022–2023 ஆம் ஆண்டில் பத்து இலட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

8. மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய 2022–2023 ஆம் ஆண்டில் குழு அமைக்கப்படும்

மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் அமைந்துள்ள தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 2019–2020 ஆம் ஆண்டு முதல்

இயங்காமல் இருப்பதால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்த ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள 2022–2023 ஆம் ஆண்டில் குழு ஒன்று அமைக்கப்படும்.

9. 2022–2023 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மா மகத்துவ மையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லி மகத்துவ மையமும் ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

மா, நெல்லியில் அதிக மகசூல் தரும் இரகங்களைச் சேகரித்து, பாதுகாத்து, தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்யவும், சாகுபடி முதல் மதிப்புக் கூட்டுதல் வரையிலான உயர் தொழில்நுட்பங்கள் பற்றி செயல்விளக்கம்மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்திடவும், 2022–2023 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மா மகத்துவ மையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லி மகத்துவ மையமும் ஆறு கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும்.

10. தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடியினை அதிகரித்திட, 2022–2023 ஆம் ஆண்டில் நான்கு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் முந்திரி மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்படும்

உள்நாடு, வெளி நாடுகளில் முந்திரிக்கான சந்தை வாய்ப்பு அதிகரித்துவரும் நிலையில், அரியலூர், கடலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தரிசு நிலங்களில் உயர் விளைச்சல் இரகக் கன்றுகள் விநியோகம், அடர் நடவு, பயிர்ப் பாதுகாப்பு போன்ற நவீன சாகுபடி முறைகள்மூலம் ஐந்தாயிரம் ஏக்கரில் முந்திரி சாகுபடியினை அதிகரிக்கவும், முந்திரிப் பழம், பருப்பை பிரித்தெடுக்கும் கருவி மற்றும் இயந்திரங்களை மானியத்தில் வழங்கவும், 2022–2023 ஆம் ஆண்டில் முந்திரி மேம்பாட்டு இயக்கம் நான்கு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

11. தமிழகத்தில் வெங்காய சாகுபடிப் பரப்பினை உயர்த்தியும், வெங்காய சேமிப்பு அமைப்புகளை உருவாக்கியும், பொது மக்களுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி வெங்காயம் கிடைக்கும்வகையில், 2022–2023 ஆம் ஆண்டில்

வெங்காய சாகுபடி இயக்கம் 40 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

தமிழக மக்களுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி வெங்காயம் கிடைக்கும்வகையில், 27,170 ஏக்கரில், விதை, இடுபொருட்களுக்கு ஏக்கருக்கு ரூ.8,000 வீதம் மானியம் வழங்கியும், அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தினைச் சேமித்து வைத்து, தேவையானபோது சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக, மானியத்தில் வெங்காய சேமிப்பு அமைப்புகள் அமைக்கவும், 2022–2023 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் செலவில் வெங்காய சாகுபடி இயக்கம் செயல்படுத்தப்படும்.

12. கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்தில் 2022–2023 ஆம் ஆண்டில் பலா மதிப்புக் கூட்டும் மையம் ரூ.3.75 கோடி செலவில் அமைக்கப்படும்

பண்ருட்டி வட்டாரத்தில் 1,442 ஏக்கர் பரப்பளவில் பலா சாகுபடி செய்யப்படுகிறது. பலா விவசாயிகளின் வருமானம் உயரும்வகையில், சேமியா, பாஸ்தா, ஜாம், தேன், உலர் பலாப் பழத் துண்டுகள், ஸ்குவாஷ், ஜெல்லி, சாக்லேட், கேக், ஒயின், ஐஸ்கிரீம்கள் போன்று மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பினை ஊக்குவித்து, உள்நாட்டு சந்தைகள் மட்டுமின்றி சர்வதேச ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக, 2022–2023 ஆம் ஆண்டில் பலா மதிப்புக் கூட்டும் மையம் மூன்று கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

13. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்களை சிறு தானியம், பயறு வகைப் பயிர்களையும் அறுவடை செய்வதற்கு ஏதுவாக 2022–2023 ஆம் ஆண்டில் 18 இலட்சம் ரூபாய் செலவில் 25 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் மாற்றி வடிவமைக்கப்படும்

நெல் அறுவடை மட்டுமல்லாது, சிறு தானியங்கள், பயறு வகைப் பயிர்களையும் அறுவடை செய்வதற்கு ஏதுவாக 2022–2023 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள 25 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் 18 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றி வடிவமைத்து, விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்படும்.

14. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களின் பயன்பாட்டினைக் கண்காணிக்க, 2022–2023 ஆம் ஆண்டில் புவியியல் தகவல் நிலை அறியும் ஜி.பி.எஸ். கருவிகள் 44 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டுவரும் வேளாண் இயந்திரங்களின் செயல்பாட்டினைத் துல்லியமாகக் கண்காணிக்க 2022–2023 ஆம் ஆண்டில் 343 வேளாண் இயந்திரங்களில் புவியியல் தகவல் நிலை அறியும் கருவிகள் (GPS) 44 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

பிற்பகல் 4–10

15. நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த, 2022–2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்

பகுதிக்கேற்ற நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்துகொள்ளும் வகையில், விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த, 2022–2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, செயல்விளக்கங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்.

நன்றி. இந்த மானியக் கோரிக்கை, இந்த நிதிநிலை அறிக்கை தயாரித்து, இந்த அளவிற்கு உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதித் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு. என். முருகானந்தம், இ.ஆ.ப. அவர்களுக்கும், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப. அவர்களுக்கும், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர், (சர்க்கரை) திரு.ஹர்மந்தர்சிங்,இ.ஆ.ப.அவர்களுக்கும்,அரசுசிறப்புச்செயலாளர் திரு. ஆப்ரஹாம் இ.ஆ.ப. அவர்களுக்கும், வேளாண்மை இயக்குநர், திரு. அண்ணாதுரை, இ.ஆ.ப. அவர்களுக்கும், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் முனைவர் இரா. பிருந்தாதேவி,

இ.ஆ.ப. அவர்களுக்கும், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் முனைவர் நடராஜன், இ.ஆ.ப. அவர்களுக்கும், சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் திரு. அன்பழகன், இ.ஆ.ப. அவர்களுக்கும், வேளாண்மைத் துறையின் கூடுதல் இயக்குநர் திரு. சுவரன் குமார் ஜடாவத், இ.ஆ.ப. அவர்களுக்கும், தமிழ்நாடு நீர்வழி பகுதி மேம்பாட்டு முகமை செயல் இயக்குநர் திருமதி சுதாதேவி, இ.ஆ.ப. அவர்களுக்கும், துணை வேந்தர் முனைவர் கீதாலெட்சுமி அவர்களுக்கும், முதன்மைப் பொறியாளர் திரு. முருகேசன், Ph.D. அவர்களுக்கும், துறையைச் சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி தெறிவித்துக்கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது பதிலில் ஓரளவிற்குத் திருப்தியடைந்திருப்பீர்கள். இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்துகளை அதிகாரிகள் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அவற்றையெல்லாம் கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நம்பிக்கையுடன் வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.12,875,31,22,000/–, மூலதனக் கணக்கில் ரூ.274,47,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.75,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும்

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,192,10,71,000/–, மூலதனக் கணக்கில் ரூ.122,33,75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2022 ஏப்ரல் 13]

(இ) கோரிக்கை எண் 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.551,92,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.606,30,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க . (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–15

(ஈ) கோரிக்கை எண் 8-பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.49,99,01,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.13,46,64,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் 18–4–2022 (திங்கட்கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

84. வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

85. மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்

2022 ஏப்ரல் 13]

நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

86. மானியக் கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

87. மானியக் கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

88. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)

89. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

இணைப்பு I

(166 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023

முன்னுரை

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

(திருக்குறள் : 1033)

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால் மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

(கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை)

நாட்டின் ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மை முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்களின் வாழ்வாதாரமாக திகழ்ந்து உணவு அளிப்பதோடு, வேலை வாய்ப்பளித்தல், தொழில் துறை முன்னேற்றம், பன்னாட்டு வாணிபம், வறுமை ஒழிப்பு என பல்வேறு இனங்களிலும் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 70 சதவீத மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. வேளாண்மையில் ஏற்படக்கூடிய எந்த ஒரு சிறு மாற்றமும் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தமிழக அரசு, வேளாண் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

குறைந்த அளவு நில உடைமை, வேளாண் அல்லாத இதர பயன்பாட்டிற்கு விளைநிலங்களை மாற்றுதல், கணிக்க இயலாத பருவநிலை, விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறை, வேளாண் விளை பொருட்களைச் சந்தைப்படுத்துதல் ஆகியவை வேளாண் தொழில் சந்திக்கும் பெரும் சவால்களாகும்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் தொழிலினை மேம்படுத்தி வேளாண் பெருமக்களின் உயர்விற்காக

பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் நிலவும் தட்பவெப்பம், மழையளவு, மண்வளம் ஆகியவற்றிற்கேற்ப பயிர் இரகங்களும், உற்பத்தியை பெருக்கிட நவீன தொழில்நுட்பங்களும் பரிந்துரைக்கப்படுகின்றன.

வேளாண் தொழில் சார்ந்த கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, வேளாண் காடுகள் போன்ற தொழில்களையும் மேற்கொண்டு விவசாயிகளின் வருமானத்தை நிலைப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த பண்ணைய முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் நெல் உற்பத்தித் திட்டம், ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானிய இயக்கம், பயறு உற்பத்தி பெருக்க இயக்கம், எண்ணெய்வித்து உற்பத்தி இயக்கம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டப் பயன்கள், விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்ய விரிவாக்கப் பணிகள் முறைப்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வேளாண் வளர்ச்சிக்கான அரசின் முயற்சிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மேட்டூர் அணை 12.06.2021 அன்று பாசனத்திற்காகத் திறக்கப்பட்டு ரூ.61.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் குறுவைத் தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனால், இயல்பான குறுவை சாகுபடிப் பரப்பான 3.21 இலட்சம் ஏக்கர் பரப்பினைவிடக் கூடுதலாக 1.69 இலட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டு மொத்தம் 4.9 இலட்சம் ஏக்கர் சாதனை அடையப்பட்டுள்ளது. இது கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத மாபெரும் சரித்திர சாதனை ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமான நிகர சாகுபடிப் பரப்பினை 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடாக உயர்த்தும் முயற்சியில் ஒரு மைல்கல்லாக, முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்களில் தனிக்கவனம் மேற்கொண்டதன் பயனாக முந்தைய ஆண்டைவிட 6.32 இலட்சம் ஏக்கர் சாகுபடிப் பரப்பு கூடுதலாக அதிகரித்து, மொத்தம் 116.63 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் குறுவைப் பருவத்தில் அதிக பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாலும், சாதகமான பருவ மழையாலும், உணவு தானிய உற்பத்தி மூன்றாவது முன் மதிப்பீட்டின்படி (07.04.2022 நாளது வரை) 118.01 இலட்சம் மெட்ரிக்

2022 ஏப்ரல் 13]

டன் என்ற அளவில் அடையப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தி இறுதி மதிப்பீட்டில் கடந்த ஆண்டைவிட கூடுதலாகவே சாதனை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தென்னை, பருத்திப் பயிரில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்விற்காக விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன.

மக்களின் நலன்பேணும் இவ்வரசு, இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர் பாதுகாப்பு மூலம் இடுபொருள் செலவைக் குறைத்து, நச்சுத்தன்மையற்ற சூழலுக்கு வழிவகுத்து செயல்பட்டு வருகிறது.

இயற்கை இடர்பாடுகள் ஏற்படுத்தும் இன்னல்களில் இருந்து மீளும் வகையில், பிரதம மந்திரி பயிர் காப்பீடுத் திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் பயிர் இழப்பீட்டுத் தொகையாக இதுவரை ரூ.2,082 கோடி சுமார் 9.65 இலட்சம் விவசாயிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்ட இயற்கை இடர்பாடுகளால், 4,44,988 ஏக்கர் பரப்பளவு சேதமடைந்ததால், பாதிக்கப்பட்ட 3,37,043 வேளாண் பெருமக்கள், மீண்டும் சாகுபடி செய்திட ஏதுவாக இடுபொருள் மானியமாக ரூ.155.02 கோடி நிவாரண நிதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உழவுத் தொழிலை தொடர்ந்து மேற்கொள்வோரை ஊக்குவிக்கும் விதமாக பல உன்னதத் திட்டங்கள் முதலாம் வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுச் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாவது வேளாண் நிதிநிலை அறிக்கையில் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப, புதிய மின்னணு முறைகளும் வேளாண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களின் மண்வளத்தினை அறிந்துகொள்ளவும். மண்வள அட்டையினை அச்சிட்டுக்கொள்ளவும் வசதியாக "தமிழ் மண் வளம்" என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

பண்டமாற்று முறையில் தொடங்கிய பரிவர்த்தனையானது தற்சமயம் பணமில்லா பரிவர்த்தனையாக மாறியுள்ள காலகட்டத்தில், விவசாயிகளும் இடுபொருட்களை எளிதாக பெறுவதற்கு பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தப்பட உள்ளது.

திட்டப் பயனாளிகள் தேர்வில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட திட்டப் பயனாளிகளின் பெயர் பட்டியல் கிராம

[2022 ஏப்ரல் 13

ஊராட்சிகளின் கிராம சபைக் கூட்டங்களில் பார்வைக்காக வைக்கப்பட உள்ளது.

நிலையான வளர்ச்சிக்கான, "நிதி ஆயோக்" அமைப்பானது, 2030 ஆம் ஆண்டின் "உலகத்தின் மாற்றத்திற்கான" இலக்கினை அடையும் பொறுப்பினை ஏற்றுள்ளது. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள், சாதனைக்கான பல செயல்முறைகளின்மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 17 இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறைக்கு வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, தேவைக்கு ஏற்ப உற்பத்தி மற்றும் பயன்பாடு மற்றும் நீரின் முக்கியத்துவம் ஆகிய நான்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இலக்குகளின்படி சாதனைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் வேளாண் நிதிநிலை அறிக்கையானது, விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், ஏற்றுமதியாளர்கள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள், வர்த்தகர்கள், வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த துறை அதிகாரிகளுடனும் நேரடியாகவும், காணொலி வாயிலாகவும் மற்றும் மனுக்கள் மூலமாகவும் பெற்ற கருத்துகளை ஆராய்ந்து அறிக்கையாக தயார் செய்து 19.03.2022 அன்று மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

வேளாண்மைத் துறையின் தோற்றம்

இந்திய பஞ்ச ஆணையம் 1880 ஆம் ஆண்டில், வழங்கிய பரிந்துரைகளின்படி, வேளாண்மைத் துறையானது 1882 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, வேளாண்மை இயக்குநரகமாக 1904 ஆம் ஆண்டில் தேவையான பணியாளர்களுடன் தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் வேளாண்மை


தமிழ்நாடு, நிலவியல் அமைப்பில் மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்ப மண்டலத்தின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் 11-வது பெரிய மாநிலமாகவும் (1.3 இலட்சம் சதுர கி.மீ. பரப்பளவு), ஏழாவது அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாகவும் (2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 7,21,47,000) விளங்குகிறது. அகில இந்திய அளவில் நான்கு சதவீத பரப்பினையும், ஆறு சதவீத மக்கள் தொகையினையும், மூன்று சதவீத நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் 59.71 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடுகின்றனர். (இந்திய

2022 ஏப்ரல் 13]

அரசின் 10-வது வேளாண்மை கணக்கெடுப்பின்படி) மொத்த நிலவுடைமைதாரர்களில், குறு சிறு விவசாயிகள் 93 சதவீதமாகவும், நடுத்தர மற்றும் பெரு விவசாயிகள் ஏழு சதவீதமாகவும் முறையே 62 மற்றும் 38 சதவீதம் நிலப்பரப்பிற்கு நில உடைமைதாரர்களாக உள்ளனர். இந்திய சராசரி நிலவுடைமைப் பரப்புடன் (1.08 எக்டர்) ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் சராசரி நிலவுடைமைப் பரப்பானது 0.75 எக்டராக உள்ளது.

படம்: 1 - தமிழ்நாட்டின் நிலப் பயன்பாடு 2020-21




மொத்த நிலப்பரப்பு - 130.33 இலட்சம் எக்டர் பயிரிடு திறன் (%) - 127.35 (மொத்த சாகுபடி பரப்பு / நிகர சாகுபடி பரப்பு x 100)

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு.)

தமிழ்நாட்டின் சராசரி மழையளவு

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு 937.5 மி.மீ. ஆகும். நாட்டின் சராசரி மழையளவான 1200 மி.மீ. உடன் ஒப்பிடுகையில், இது 28 சதவீதம் குறைவானதாகும்.

படம்: 2 - 2021 ஆம் ஆண்டில் பருவம் வாரியாக பெறப்பட்ட மழையளவு



(ஆதாரம் : இந்திய வானிலைத்துறை)

பாசன நீர் ஆதாரம்


அட்டவணை: 1.1 நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு (2020-21)

பாசன ஆதாரம்	எண்ணிக்கை (எண்கள்)	நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்)	நிகர பாசனப் பரப்பு (சதவீதம்)
கால்வாய்கள்	2,241	6.68	24.16
ஏரிகள்	41,123	3.72	13.47
கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள்	18,80,126	17.20	62.22
இதர பாசனம்		0.04	0.15
மொத்தம்		27.64	100.00

ஆதாரம் : பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு

2022 ஏப்ரல் 13]

படம்: 3-தமிழ்நாட்டின் 7 வேளாண் தட்பவெப்ப மண்டலங்கள்



ஆதாரம் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் இணையதளம்


[2022 ஏப்ரல் 13

1. வேளாண்மை

1.1.பயிர்சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்தல்

தமிழ்நாட்டில் நெல் மற்றும் இதர பயிர் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்களை மாநில மற்றும் ஒன்றிய அரசுத் திட்டங்கள் மூலம் விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்ததன்மூலம் கடந்த 2020-21 ஆம் ஆண்டில் 108.24 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியைவிட நடப்பாண்டில் (2021-22) 118.01 இலட்சம் மெட்ரிக் டன் மூன்றாவது முன் மதிப்பீட்டின்படி (07.04.2022 நாளது வரை) கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த வேளாண் பயிர்களின் உற்பத்தி கடந்த ஆண்டைவிட ஒன்பது சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத சாதனையாகும்.

படம்: 4 - கடந்த ஐந்தாண்டுகளில் உணவு தானிய உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)



** (மூன்றாவது முன் மதிப்பீட்டின் படி)

2022 ஏப்ரல் 13]

அட்டவணை: 1.2 –2022-23 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

வ. எண்	பயிர்கள்	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெ.டன்)	உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்)
1	நெல்	19.00	75.50	3,973
2	சிறுதானியங்கள்	9.67	42.75	4,421
3	பயறு வகைகள்	9.48	7.90	833
மொத்த உணவு தானியங்கள்		38.16	126.15	
4	எண்ணெய் வித்துக்கள்	5.50	14.30	2,603
5	பருத்தி	1.74	4.40*	430**
6	கரும்பு	1.60	200.00	125***
	மொத்தம்	47.00		

* உற்பத்தி இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு 170 கிலோ
** உற்பத்தித் திறன்-பஞ்சு ** * உற்பத்தி மெட்ரிக் டன் / எக்டர்

1.2 முதன்மை வேளாண்மை திட்டங்கள்

1.2.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு அடைந்திடும் நோக்கத்துடன் 2021-22 ஆம் ஆண்டில் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டம் ரூ.227.059 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,997 கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ஆழ்துளை குழாய் கிணறுகளுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டம் 3,204, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் ஒருங்கிணைந்து ரூ. 300 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

1.2.2. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

2021-22 ஆம் ஆண்டில் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் ரூ.146.64 கோடி திட்ட மதிப்பீட்டில் மானாவாரி நிலங்களின்

மேம்பாட்டிற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதால், 3.15 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.132 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் 3,000 மானாவாரி நிலத்தொகுப்புகளை உருவாக்கி தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.2.3. தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்

2021-22ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.11.14 கோடி ஒன்றிய மற்றும் மாநில நிதி ஒதுக்கீட்டில், முழு மானியத்தில் 73 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உயர் மதிப்பு மரவகைகளான தேக்கு, செம்மரம், வேங்கை, மஞ்சள் கடம்பு, சந்தனமரம், மலை வேம்பு, ஈட்டிமரம், நீர்மருது , மகோகனி, மருத்துவ குணமுள்ள மரவகைகள், நாவல் மற்றும் புளி உள்பட அதிக பலன் தரும் மரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் 80 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு முழு மானியத்தில் வழங்கிடும் வகையில் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

1.2.4. ஆதி திராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவிகித மானியம்

உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பை சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள மானியத்துடன் 20 சதவிகித கூடுதல் மானியம் மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்கென 2022-23 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3. மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்கப்படுத்துதல்

அதிக நீர் தேவைப்படும் நெல் பயிருக்கு மாற்றாக குறைந்த நீர்த் தேவை உள்ள பயறுவகைகள், சிறுதானியங்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் பயிரிடுவதன்மூலம் மண்ணின் வளம் மற்றும் நீடித்த வேளாண்மையினை அடைந்திட வாய்ப்பாகும் என்பதால் மாற்றுப்பயிர் சாகுபடியினை இவ்வரசு ஊக்கப்படுத்துகிறது.

2022 ஏப்ரல் 13]

நெல் பயிறுக்கு மாற்றாக மேற்கண்ட பயிர்களில் 66,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள 2022-23 ஆம் ஆண்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4. பயிர் சாகுபடி விவரம்

1.4.1. நெல்

நெல் சாகுபடியானது, அனைத்து மாவட்டங்களிலும், மூன்று பருவங்களிலும் – கார், குறுவை, சொர்ணவாரி (ஏப்ரல் முதல் ஜூலை வரை), சம்பா, தாளடி, பிசானம் (ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை) மற்றும் நவரை, கோடை (டிசம்பர் முதல் மார்ச் வரை) மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் இயல்பாக 19 இலட்சம் எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு 68.66 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மகசூல் அடையப்பெறுகிறது.

2021–22ஆம் ஆண்டில் செம்மை நெல் சாகுபடி மற்றும் நேரடி நெல் விதைப்பு முறையே 13.21 இலட்சம் எக்டர் மற்றும் 4.3 இலட்சம் எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெற்பயிரின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் முறையே ரூ.21 கோடி மற்றும் ரூ.7.51 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டிலும் இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.


மேலும், விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் வழங்குதல், நெல் குழித்தட்டு நாற்று நடவு முறை செயல்விளக்கத் திடல் அமைத்தல், வரப்பு பயிர் சாகுபடி, துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் இடுதலை ஊக்குவித்தல் ஆகிய தொழில்நுட்பங்கள் மற்றும் திட்டங்கள் 2022-23 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

1.4.2. சிறுதானியங்கள்:

சிறுதானியங்கள் ஊட்டச்சத்து நிறைந்தவை. சிறுதானியங்கள் சராசரியாக 8.94 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 31.35 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்படுகிறது.

[2022 ஏப்ரல் 13

படம் : 5-2020-21 சிறுதானியப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி



ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு)

1.4.2.1. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்


சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் “இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்”, அமைக்கப்பட்டு, “சிறுதானிய திருவிழா” மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படவுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின்கீழ் மக்காச்சோளம் மற்றும் ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்கள் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க ரூபாய் 2.74 கோடி மற்றும் 13.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.


1.4.3. பயறுவகைப் பயிர்கள்

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய பயறுவகைப் பயிர்களான உளுந்து, பச்சைப்பயறு, துவரை மற்றும் கொள்ளு ஆகிய பயிர்களின் இயல்பான பரப்பு 8.17 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி 5.05 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் உள்ளது.

2022 ஏப்ரல் 13]

படம் : 6-2020-21 ஆம் ஆண்டு பயறுவகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி





ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு)

பயறு வகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு 2021-22 ஆம் ஆண்டில் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ரூ. 34.51 கோடி மற்றும் ரூ.5 கோடி நிதி செலவில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும், துவரை உற்பத்தியை அதிகரிக்க 2022-23 ஆம் ஆண்டில் ”துவரை சாகுபடி சிறப்பு மண்டலம்” அமைக்கப்பட உள்ளது.


2021-22 ஆம் ஆண்டில் சம்பா நெல் அறுவடைக்குப் பின், பயறுவகைகளின் இயல்பான சாகுபடி பரப்பை 2.2 இலட்சம் எக்டர் பரப்பிலிருந்து அதிகரித்திட திட்டமிட்டு இதுவரை 3.07 இலட்சம் எக்டர் சாகுபடி பரப்பில் சாதனை அடையப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் நெல் தரிசில் பயறு சாகுபடித்திட்டம் ரூ.3.03 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.


1.4.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

எண்ணெய்வித்துக்கள் இயல்பாக, 3.82 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு எக்டருக்கு 2,405 கிலோ உற்பத்தித் திறன் என்ற அளவில் 9.18 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி

செய்யப்படுகின்றன.

படம்: 7-2020-21-எண்ணெய் வித்துக்கள் பரப்பு, உற்பத்தி





(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு-2020-21 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீடு)

2022 ஏப்ரல் 13]

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எண்ணெய்வித்துப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க *2021-22* ஆம் ஆண்டில் முறையே ரூ. *25.20* கோடி மற்றும் ரூ.*65* இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

நெல் அறுவடைக்குப்பின், நிலக்கடலை, எள் போன்ற எண்ணெய்வித்துப் பயிர்களை பயிரிடும் நோக்கத்துடன் *2021-22* ஆம் ஆண்டில், ரூ.*50* இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

சோயாபீன்ஸ் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தில் "தங்கப்பயறு சோயாபீன்ஸ்" என்ற திட்டம் *2022-23* ஆம் ஆண்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

1.4.5. பருத்தி

தமிழ்நாட்டின் வணிகப் பயிரான பருத்தி சராசரியாக *1.62* இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஒரு எக்டருக்கு *411* கிலோ பஞ்சு மகசூலுடன் *3.92* இலட்சம் பஞ்சுப் பொதிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீண்ட மற்றும் மிக நீண்ட இழை பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் "நீடித்த நிலையான பருத்தி இயக்கம்" *2021-22* ஆம் ஆண்டில் ரூ. *11* கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டிலும், தேசிய உணவு பாதுகாப்பு (பருத்தி) இயக்கத்தின்கீழ் ரூ. *2.83* கோடி நிதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் *2022-23* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.4.6. கரும்பு

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய வணிகப் பயிரான கரும்பு *36* மாவட்டங்களில் சராசரியாக சுமார் *1.56* இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு *161* இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (கரும்பு) ரூ. *42* இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டன. பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத் திட்டத்தின் (PMKSY) மூலம்

சொட்டு நீர் பாசனம் அமைக்க கரும்பு விவசாயிகளுக்கு 5,519 எக்டர் பரப்பளவிற்கு கூடுதல் உபகரணங்களுக்கான மாநில அரசின் மானியமாக ரூ.14.51 கோடி செலவிடப்பட்டுள்ளது. இவ்வரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாக 2021-22 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி பரப்பு கடந்த ஆண்டைவிட 30 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.4.7. தென்னை

தமிழ்நாட்டில் தென்னை அனைத்து மாவட்டங்களிலும் 4.39 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு 49,474 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2021-22ஆம் ஆண்டில் தென்னை சாகுபடியை ஊக்குவிக்க தென்னையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, தென்னையில் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை முறையே மூன்று கோடி ரூபாய் மற்றும் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்பது கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கண்ட திட்டங்களுடன், தென்னை, மா, முந்திரி போன்ற பயிர்களில் ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

1.5. வேளாண் துறையின் இதர திட்டங்கள்

1.5.1. நீடித்த நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணையம்

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் - மானாவாரி பகுதி மேம்பாடு ஆகிய இரு திட்டங்களின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர் சாகுபடி, கறவை மாடு, எருமை, ஆடுகள், செம்மறி ஆடுகள், கோழிகள் வளர்ப்பு, பழமரக்கன்றுகள், தீவனப்பயிர் சாகுபடி, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் தேனீ வளர்ப்பு உள்ளிட்ட தொகுப்பிற்கு 50 சதவீதம் அல்லது ரூ.45,000/- நிதியுதவியுடன், 13,300 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள்

2022 ஏப்ரல் 13]

2021–22 ஆம் ஆண்டில் ரூ.59.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-23ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.5.2. இயற்கை வேளாண்மை ஊக்குவிப்பு

இயற்கை வேளாண்மையில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு 2022-23 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பசுந்தாள் உர விதைகளும், மண்புழு உரம், அமிர்தகரைசல் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 உழவர் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

2022-23ஆம் ஆண்டில், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயற்கை வேளாண்மையில் ஆர்வமுள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து 150 இயற்கை வேளாண்மை தொகுப்புகள் 7,500 ஏக்கர் பரப்பளவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

1.5.3. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் சிறப்பு திட்டம்

சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தில், ஓராண்டுக்கு மேலாக தரிசாக இருக்கும் நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருவதன்மூலம், 2021-22 ஆம் ஆண்டில், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் முறையே 6,929 எக்டர், 6,347 எக்டர் மற்றும் 1,728 எக்டர் பயிர் சாகுபடிக்கு கொண்டுவர ரூ. 20.57 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.5.4. இளைஞர்களை வேளாண் தொழில்முனைவோராக்குதல்

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு படித்த இளைஞர்களை தேர்வு செய்து, அக்ரி கிளினிக் அல்லது வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்கு 2021-22 ஆம் ஆண்டில் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் 193 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அக்ரி கிளினிக் அல்லது வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்கு பட்டதாரி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் 200 இளைஞர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

[2022 ஏப்ரல் 13

1.5.5. உயர்தர உள்ளூர் இரகங்களை பிரபலப்படுத்துவதற்கான கண்காட்சிகள் (Genetic Diversity Fairs)

பாரம்பரியமிக்க மற்றும் உள்ளூர் பயிர் இரகங்களைக் கண்டறிந்து, சிறந்த இரகங்களை உருவாக்க ஆண்டுக்கு மூன்று முறை இரகங்களை பிரபலப்படுத்துவதற்கான கண்காட்சிகள் மாவட்டந்தோறும் நடத்தப்படும். இத்திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

1.5.6. நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

2021-22 ஆம் ஆண்டில் 33 அரசு விதைப் பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பளவில் 15 பாரம்பரிய நெல் இரகங்கள் பயிரிடப்பட்டு, அதன்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் விநியோகிக்கப்பட உள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

1.5.7. உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்குதல்

2021-22 ஆம் ஆண்டில் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மண்வெட்டி, களைகொத்து, இரும்பு சட்டி, கடப்பாறை மற்றும் கதிர் அரிவாள் அடங்கிய 64,444 வேளாண் உபகரணத் தொகுப்புகள் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட உள்ளது.

1.6. தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)


வேளாண்மைத் துறையின்கீழ் 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) துவங்கப்பட்டு, விதைகள் மற்றும் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் 33 அரசு விதைப்பண்ணைகளும், ஆறு அரசு எண்ணெய்வித்துப் பண்ணைகளும் மற்றும் ஓர் அரசு பயறு பெருக்கப் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி ஆகிய பயிர்களின் சான்று விதைகள் மொத்தம் 25,933 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டது.

2022 ஏப்ரல் 13]

2022-23 ஆம் ஆண்டில் 30,345 மெட்ரிக் டன் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி ஆகிய பயிர்களின் விதைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

படம்: 8-2022-23 ஆம் ஆண்டிற்கான விதை கொள்முதல் மற்றும் விநியோகத்திட்டம்



1.6.1.தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

தமிழ்நாட்டில் இயங்கி வரும் 23 தென்னை நாற்றுப் பண்ணைகள், 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்கள்மூலம் 2021-22 ஆம் ஆண்டில் 9.84 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. 2022-23 ஆம் ஆண்டில் 17.4 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட உள்ளன.

1.6.2. விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கிட 126 விதை சுத்திகரிப்பு நிலையங்கள்மூலம் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

[2022 ஏப்ரல் 13

1.6.3. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம்:

தரமான சான்று பெற்ற விதைகளை மானியத்தில் வழங்குவதற்காக இத்திட்டம் 2021-22 ஆம் ஆண்டில் ரூ. 29.43 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.6.4. வேளாண்மை விரிவாக்க மையங்கள்:

தமிழ்நாட்டில் மொத்தம் 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 383 மையங்கள் வட்டார அளவில் முதன்மை மையங்களாகவும், 497 மையங்கள் குறுவட்ட அளவில் துணை மையங்களாகவும் செயல்படுகின்றன.

இவற்றுள் 228 முதன்மை மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 256 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

1.7. பயிர் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த முறையில் பூச்சி நோய் மேலாண்மை, தரமான, பாதுகாப்பான பூச்சிக்கொல்லிகள் விநியோகம், பூச்சி நோய் தாக்குதலிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அயல்நாட்டு புதியவகை பூச்சி, நோய் நுழைவினை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

1.7.1. உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்தல்

தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கும் 24 உயிரி கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் வாயிலாக உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2022 ஏப்ரல் 13]

அட்டவணை: 1.3-2021- 22 ஆம் ஆண்டில் உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

வ. எண்	உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள்	உற்பத்தி மற்றும் விநியோகம்
1.	டிரைகோடெர்மா விரிடி (கிலோ)	1,58,700
2.	சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (கிலோ)	1,52,175
3.	பவேரியா பேசியானா (கிலோ)	38,332
4.	டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி)	17,924
5.	மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ)	1,28,520
6.	கிரைசோபெர்லா (எண்கள்)	79,29,000

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.7.2. பயிர்களில் பூச்சிநோய் தாக்குதலை எதிர்கொள்ள சிறப்பு நிதி

புதிய பூச்சிகள், நோய் ஆகியவற்றின் தாக்கம் துவங்கியவுடனே அவற்றை எதிர்கொள்ளும் வகையில் ஐந்து கோடி ரூபாய் கொண்ட ஒரு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தி பூச்சி நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.8. உரம்

முக்கிய இடுபொருளான இரசாயன உரங்கள் ஒன்றிய அரசின் உரம் மற்றும் இரசாயனத்துறைமூலம் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டில் 21.62 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 13

அட்டவணை: 1.4-ஆண்டு வாரியாக உர விநியோக விவரங்கள் பின்வருமாறு

உரம்	உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்)	
	2020 - 21	2021 - 22
யூரியா	8.66	9.51
டி.ஏ.பி	2.50	2.20
பொட்டாஷ்	2.62	2.35
காம்ப்ளக்ஸ்	5.44	7.56
மொத்தம்	19.22	21.62

1.9. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

தமிழ்நாட்டில் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களும், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களும், மூன்று மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகத்துடன் கூடிய குறியீட்டு மையங்களும், இரண்டு அங்கக உர பரிசோதனை ஆய்வகங்களும் செயல்பட்டு வருகின்றன. இது தவிர திருச்சி மாவட்டத்தில் உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய கட்டுப்பாடு ஆய்வகம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

1.9.1. உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் செயல்பாடுகள்

தரமான உரங்கள் விற்பனையாவதை உறுதிப்படுத்தும் வகையில், 2021-22 ஆம் ஆண்டில் 19,495 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 459 தரமற்ற உர மாதிரிகள் கண்டறியப்பட்டது. அவற்றுள் 376 மாதிரிகளுக்கு துறைரீதியாகவும், 56 மாதிரிகளுக்கு சட்டரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 24,500 உர மாதிரிகள் பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் ISO 17025:2017 தேசிய தர நிர்ணயச்சான்று (NABL Accreditation) பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில் 1,402 அங்கக உர மாதிரிகள், 1,001 உயிர் உர மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டதில், 112 அங்கக

2022 ஏப்ரல் 13]

உர மாதிரிகள் மற்றும் 31 உயிர் உர மாதிரிகள் தரமற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டில், 2,160 அங்கக உர மாதிரிகள் மற்றும் 2,200 உயிர் உர மாதிரிகளை பரிசோதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1.9.2. பூச்சிக்கொல்லி ஆய்வகங்களின் செயல்பாடுகள்

ISO: *17025:2017 தேசிய தர நிர்ணயச் சான்று கோயம்புத்தூர் ஆய்வகத்திற்கு பெறப்பட்டதுடன், காஞ்சிபுரம் பூச்சிக்கொல்லி ஆய்வகத்திற்கு சான்று பெறும் நிலையில் உள்ளது. மீதமுள்ள 10 ஆய்வகங்களுக்கு சான்று பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

2021-22 ஆம் ஆண்டில், 21,952 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில், 113 மாதிரிகள் தரமற்றது எனக் கண்டறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில், 21,850 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1.9.3. உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்

2022-23 ஆம் ஆண்டில், டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், பெவேரியா போன்ற உயிரி கட்டுப்பாட்டு காரணிகளின் 500 மாதிரிகளின் தரப் பரிசோதனை திருச்சிராப்பள்ளியிலுள்ள புதிய உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1.10. மண் வள மேம்பாடு

1.10.1. மண் பரிசோதனை நிலையங்கள்

தமிழ்நாட்டில் 32 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாட்டு நிறுவனம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. விரிவான மண் வகையீடு விவரங்களை ஆவணப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2022 ஏப்ரல் 13

விவசாயிகளின் நலனுக்காக, 2022-23 ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனை நிலையம் அமைக்கப்பட உள்ளது.

1.11. நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம்

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையில் 14 அத்தியாவசியமான நுண்ணூட்டக் கலவைகள் தயாரிக்கப்பட்டு 2021-22 ஆம் ஆண்டில் 2,836 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், 3,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1.12. உயிர் உர உற்பத்தி மையங்கள்

தமிழ்நாட்டில் எட்டு வகையான உயிர் உரங்கள், 22 உயிர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது. துத்தநாகத்தை கரைத்துக்கொடுக்கும் பாக்டீரியா உற்பத்தி செய்யப்பட்டு மாநில அரசு விதைப்பண்ணைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 11.38 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.13. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் – மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் – அட்மா

வேளாண் விரிவாக்கத் துணை இயக்கத் திட்டமானது வேளாண்மை மற்றும் சகோதர துறைகள், கால்நடைப் பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை, வனத்துறை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.13.1. அட்மா திட்ட செயலாக்கம்

2021-22 ஆம் ஆண்டு அட்மா திட்டத்தில் வேளாண்மை குறித்த பயிற்சி வழங்குதல், கண்டுணர் பயணங்கள், செயல்விளக்கத்திடல்கள்மூலம் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள், விவசாய விளைபொருட்களை

2022 ஏப்ரல் 13]

மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்தும் முறைகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளுக்கு ரூ. 52.01 கோடி செலவிடப்பட்டு இதுவரை 4,76,154 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

அட்டவணை: 1.5 - 2021-22 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்

வ. எண்	இனம்	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை
1	உள் மாநில பயிற்சி	313	12,920
2	உள்மாவட்ட பயிற்சி	7,404	2,96,160
3	மாநிலங்களுக்குள்ளான கண்டுணர் பயணம்	555	27,750
4	உள் மாநில கண்டுணர் பயணம்	1,379	68,950
5	செயல் விளக்கங்கள்	6,914	6,914
6	பண்ணைப் பள்ளிகள்	473	11,825

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.14. வேளாண்மை பயிற்சி நிலையங்கள்

1.14.1. உழவர் பயிற்சி நிலையங்கள்

வேளாண்மைத் துறையின்கீழ் 22 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் விவசாயிகள், விவசாய ஒருங்கிணைப்பாளர், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்து வருகின்றன.

1.14.2. மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்)

வேளாண்மைத் துறையில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு, வேளாண்மை விரிவாக்கம்,

நிர்வாகம், மேலாண்மை மற்றும் கணினி தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தினால் அளிக்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், 1,033 அலுவலர்களுக்கு, ரூ.24.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.14.3. மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (சமிதி)

வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் இடைநிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண்மை விரிவாக்க மேலாண்மை முதுகலை பட்டயப் படிப்பு (PGDAEM), இடுபொருள் விற்பனையாளர்களுக்கான வேளாண் விரிவாக்க சேவை பட்டயப்படிப்பு (DAESI), பூச்சிக்கொல்லி விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் அவர்களுக்கான பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்த சான்றிதழ் படிப்பு, கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி (STRY) மற்றும் சான்றுபெற்ற பண்ணை ஆலோசகர் (Certified Farm Advisor) போன்ற திட்டங்களை ஒருங்கிணைத்து, கண்காணிப்பு செய்து செயல்படுத்தப்படுகின்றன.

2021-22 ஆம் ஆண்டில், 2,282 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ. 65.14 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.14.4. நீர் மேலாண்மை பயிற்சி மையம்

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் அமைந்துள்ள இம்மையத்தின்மூலம் விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு நீர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.15. உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சியில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 10 முன்னோடி விவசாயிகளை தெரிவு செய்து (இரண்டு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விவசாயிகள் உட்பட) புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கங்களும், பயிற்சிகளும் வேளாண்மை

2022 ஏப்ரல் 13]

விரிவாக்க அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

விரிவாக்க அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்கு வருகை புரியும் தேதி மற்றும் இடம் பற்றிய விவரம் முன்னோடி விவசாயிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதோடு, அவர்களின் வருகையை உழவன் செயலிமூலம் அறிந்து கொள்ளலாம்.

1.15.1. கைபேசி செயலிமூலம் கண்காணித்தல்

வேளாண் விரிவாக்க அலுவலர்கள், கிராம ஊராட்சிகளுக்கு பயணம் மேற்கொண்ட விவரங்களை பதிவேற்றம் செய்திடவும் அவர்கள் மேற்கொள்ளும் பயணங்களை வேளாண் உயர் அலுவலர்கள் கண்காணிக்கவும் ஒரு தனி கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களின் களப்பயணம், மேற்கொள்ள தவறிய களப்பயணம், விவசாயிகள் தெரிவித்த களப்பிரச்சினைகள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களின் ஆய்வு ஆகியவற்றை உள்ளடக்கிய, இணையதள முகப்பு (Dash board) உருவாக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணியாளர்களின் பெயர், தொடர்பு எண், கிராம ஊராட்சியில் அவரின் தொடர்பு மையம் ஆகியவற்றை விவசாயிகள் உழவன் செயலியில் காணலாம்.

1.15.2 ஊரக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

விவசாயம், விவசாயம் சார்ந்த தொழிலை இலாபகரமாக மாற்ற 2,500 ஊரக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கடந்த ஆண்டைப் போலவே 2022-23 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.

1.16. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

இத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன், நீர்ப்பாசன மேலாண்மை, காலநிலை மாற்றத்திற்கு உகந்த இறவைப்பாசன வேளாண்மை ஆகியவற்றின்மூலம் பயிர் உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்திற்காக, 66 துணையாற்றுப் படுகைகளில், 2017-2018 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ரூ.84.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2021-22 ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களாக, 43 துணையாற்றுப் படுகைகளில் பயிர் செயல்விளக்கங்கள், இயந்திரக் களையெடுப்பு மற்றும் மாதிரி கிராமங்கள் திட்டம் ஆகிய இனங்களைக் கொண்டு ரூ.17.17 கோடி நிதி ஒதுக்கீட்டில்

செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.17. வேளாண்மைத் துறை சார்ந்த விருதுகள்

1.17.1. செம்மை நெல் சாகுபடிக்கான "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறன் விருது".

2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தின விழாவில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையினை கடைப்பிடித்து, அதிக நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு திரு. சி. நாராயணசாமி நாயுடு அவர்கள் பெயரில் விருது, பரிசுத்தொகையாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்விருது 2021-22 ஆம் ஆண்டில் சாதனை புரிந்த விவசாயிக்கு நடப்பாண்டில் வழங்கப்படும்.

1.17.2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது:

பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்து, பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாக 2018-19 ஆம் ஆண்டு முதல் "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது" மாநில அளவில் முதல் மூன்று விவசாயிகளுக்குப் பரிசுத்தொகையாக முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்விருது 2021-22 ஆம் ஆண்டில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு நடப்பாண்டில் வழங்கப்படும்.

1.17.3. வேளாண்மையில் சிறப்பாக செயலாற்றும் விவசாயிகளுக்குப் பரிசு

விவசாயிகளையும், புதிய கருவிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிக்கும் விவசாயிகளையும் ஊக்குவித்து பரிசு வழங்கிட, 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் ஆகிய மூன்று துறைகளிலும் விவசாயிகளை ஊக்கப்படுத்த, ஒவ்வொரு துறைக்கும் இரண்டு இலட்சம் வீதம், ஆறு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2022 ஏப்ரல் 13]

1.18. பயிர் விளைச்சல் போட்டி

சிறந்த வேளாண் சாகுபடி முறைகளை விவசாயிகள் கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதற்காக, மாநில மற்றும் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு ரொக்கப்பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அட்டவணை 1.6 மாநில மற்றும் மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுத் தொகை

பயிர்கள்	முதல் பரிசு (ரூபாய்)	இரண்டாம் பரிசு (ரூபாய்)
மாநில அளவில்		
நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி	25,000/-	15,000/-
சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் துவரை.	15,000/-	10,000/-
மாவட்ட அளவில்		
நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி	15,000/-	10,000/-
சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் துவரை.	10,000/-	5,000/-

1.19. மின்னணு வேளாண்மை திட்டம் (Digital Agriculture Scheme)

விளைநிலங்கள் வாரியாக பயிரின் விதைப்பு முதல் அறுவடை செய்து விற்பனை செய்யும்வரை அனைத்து தொழில்நுட்பங்களையும், புவியிடக் குறியீடு (Geo Tagging), செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (Artificial Intelligence), வலைதளத்தினைக் கொண்டு செயல்படும் பொருட்கள் (Internet of Things), “புவி இடஞ்சார்ந்த தொழில்நுட்பம்” (Geo Spatial Technology), மற்றும் “தொலையுணர்தல்” (Remote Sensing)

[2022 ஏப்ரல் 13

போன்ற மின்னணு முறைகளைக் கொண்டு விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, உயர் மகசூல் மற்றும் அதிக வருமானம் பெற வழிவகை செய்யப்படும்.

விவசாயிகள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்களைப் பெறும்போது, தங்கள் பங்களிப்புத் தொகையினை இ-சலான், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை (Unified Payment Interface) மூலம் செலுத்த வழிவகை செய்யப்படும். இது சோதனை முறையில் ஒரு மாவட்டத்தில் ஒரு வட்டாரத்தில் செயல்படுத்தப்படும்.

1.20. பயிர் காப்பீடு

இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பயிர் மகசூல் இழப்பினை விவசாயிகள் ஈடுகட்டுவதற்கு பயிர் காப்பீடுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மாநில அரசு மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கிடையே, 80:20 பகிர்மான அடிப்படையில் இணை காப்பீட்டுத் திட்டமாக தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மற்றும் இப்கோ டோக்கியோ பொது காப்பீட்டு நிறுவனத்தால் 37 மாவட்டங்கள் அடங்கிய 14 தொகுப்புகளில் செயல்படுத்தப்பட்டது. இதுவரை 26.06 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, 40.63 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2020-2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சம்பா பருவத்தில் 6.25 இலட்சம் விவசாயிகள் கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2021-2022 ஆம் ஆண்டு குளிர்கால பருவத்திற்கான பயிர் காப்பீட்டு பாலிசியை விவசாயிகளின் இல்லங்களுக்கே சென்று விநியோகம் செய்யும் திட்டம் வேளாண்மை - உழவர் நலத் துறையால் 26-02-2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.1,950 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டதுடன், 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.2,324 கோடி காப்பீட்டுக் கட்டண மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாடு அரசு எடுத்த சீரிய முயற்சியால் 2020-2021-ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகையாக, இதுவரை ரூ.2,082 கோடி 9.65 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில், ரூ.2,339 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.21. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு

வேளாண்மைத் துறை மொத்தம் 10,575 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

அட்டவணை: 1.7 - தொழில்நுட்ப அலுவலர்கள்

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப்ப பட்ட பணியிடங்கள்
1	வேளாண்மை கூடுதல் இயக்குநர்	5
2	வேளாண்மை இணை இயக்குநர்	37
3	வேளாண்மை துணை இயக்குநர்	132
4	வேளாண்மை உதவி இயக்குநர்	424
5	வேளாண்மை அலுவலர்	1,099
6	துணை வேளாண்மை அலுவலர்	337
7	உதவி விதை அலுவலர்	509
8	உதவி வேளாண்மை அலுவலர்	2,320
	மொத்தம் தொழில்நுட்ப அலுவலர்கள்	4,863

[2022 ஏப்ரல் 13

அட்டவணை: 1.8-அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப் பட்ட பணியிடங்கள்
1	துணை இயக்குநர் (நிர்வாகம்)	2
2	ஆட்சி அலுவலர்	34
3	கண்காணிப்பாளர்	185
4	உதவியாளர்	650
5	இளநிலை உதவியாளர்	389
6	தட்டச்சர்	366
7	கண்காணிப்பாளர் (பிணையம்)	149
8	உதவியாளர் (பிணையம்)	249
9	இளநிலை உதவியாளர் (பிணையம்)	573
10	சுருக்குத் தட்டச்சர் (தரம்-1)	1
11	சுருக்குத் தட்டச்சர் (தரம்-2)	39
12	சுருக்குத் தட்டச்சர் (தரம்-3)	95
13	ஓட்டுநர்	292
14	ஆய்வக உதவியாளர்	143
15	பதிவறை எழுத்தர்	157
16	அலுவலக உதவியாளர்	586
17	காவலாள்	1,133
18	தொலைபேசி இயக்குபவர்	2
19	இதர பணியாளர்கள்	667
	மொத்தம் தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்	5,712

2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

தமிழ்நாட்டில், 1979 ஆம் ஆண்டில் 6.6 இலட்சம் எக்டராக இருந்த தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பு தற்பொழுது 15.28 இலட்சம் எக்டராக அதிகரித்துள்ளது. இது 1979 இல் தோட்டக்கலைத் துறை என்ற தனித் துறை உருவாகிய பின் ஏற்பட்ட முன்னேற்றமாக கருதப்படுகிறது. தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதாலும்,

2022 ஏப்ரல் 13]

தரப்படுத்துதல், சந்தைபடுத்துதல்மூலம் வேலைவாய்ப்புகளை வழங்குவதாலும், மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதாலும், வேளாண்மையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்களின் தேவை நாள்தோறும் அதிகரித்து வருவதால், இவைகளின் உற்பத்தியினைப் பெருக்கிடவும், புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடையவும், தோட்டக்கலைத் துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக குழித்தட்டு நாற்றுகள் உற்பத்தி, வெண்ணெய்ப்பழம் (Avacado), துரியன், ஸ்டிராபெர்ரி, கொடுக்காப்புளி, டிராகன் போன்ற புதிய பயிர்கள் அறிமுகம், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி, நுண்ணீர்ப் பாசனம், நீர்வழி உர மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பூச்சி, நோய் மேலாண்மை, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் போன்ற உயர் தொழில்நுட்பங்களும், வீட்டுக் காய்கறித் தோட்டம், மாடித் தோட்டம், பந்தல் காய்கறிகள் சாகுபடி, காளான் வளர்ப்பு, ஊட்டச்சத்துத் தோட்டம் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2.1. தேசிய அளவில் தோட்டக்கலை பயிர்களில் தமிழ்நாட்டின் பங்கு

தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி 15.28 இலட்சம் எக்டர் மற்றும் உற்பத்தி 206.39 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவை தாளித, மணம் கூட்டும் பயிர்கள், மூலிகை, வாசனை திரவிய பயிர்கள், மலர்கள் உற்பத்தி கடந்த ஆண்டைவிட 6.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

அட்டவணை - 2.1: தோட்டக்கலை பயிர்கள் – பரப்பு, உற்பத்தி, உற்பத்தி திறன்

வ. எண்	பயிர்	2020-21			2021-22 (முதல் முன் மதிப்பீடு)		
		பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெ.டன்)	உற்பத்தி திறன் (மெ. டன்/ எக்டர்)	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெ. டன்)	உற்பத்தி திறன் (மெ.டன்/எக்டர்)
1	பழங்கள்	3.13	56.34	18.02	3.30	60.72	18.40
2	காய்கறிகள்	3.34	82.02	24.49	3.83	94.03	24.55
3	சுவை தாளித மணம் கூட்டும் பயிர்கள்	1.17	2.51	2.15	1.27	2.73	2.15
4	தோட்டப் பயிர்கள்	7.01	57.51	8.20	7.08	58.13	8.21
5	மூலிகை மற்றும் வாசனை திரவியப் பயிர்கள்	0.20	2.85	13.96	0.13	1.82	14.01
6	மலர்கள்	0.43	5.16	12.03	0.45	5.45	12.10
மொத்தம்		15.28	206.39		16.06	222.87	

2.1.1. பழப்பயிர்கள்

தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் மொத்த சாகுபடி பரப்பில், பழப்பயிர்களின் பரப்பு 20 சதவீதமாகும். பல்வேறு வகையான பழங்கள் சாகுபடி செய்யப்பட்ட போதிலும், முக்கியமாக மா மற்றும் வாழை 2.44 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்படுகிறது. இது பழங்களின் மொத்த சாகுபடிப் பரப்பில் 78 சதவீதமாகும். கொய்யா, எலுமிச்சை, தர்பூசணி, நெல்லி, சப்போட்டா, பலா, ஆரஞ்சு, திராட்சை உள்ளிட்ட இதர பழங்கள் 22 சதவீத பரப்பில் பயிரிடப்படுகிறது. தோட்டக்கலை பயிர்களின் மொத்த உற்பத்தியில், பழங்களின் உற்பத்தி 27 சதவீதமாகும்.

2022 ஏப்ரல் 13]

மா சாகுபடி பரப்பில், கிருஷ்ணகிரி மாவட்டமும் (31,176 எக்டர்), உற்பத்தியில் திருவள்ளூர் மாவட்டமும் (99,745 மெட்ரிக் டன்) முதலிடம் வகிக்கின்றன.

வாழை சாகுபடி பரப்பு (15,272 எக்டர்) மற்றும் உற்பத்தியில் (5,60,756 மெட்ரிக் டன்) ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. ஈரோடுக்கு அடுத்தபடியாக சாகுபடி பரப்பில் தூத்துக்குடி மாவட்டம் (8,283 எக்டர்) இரண்டாம் இடத்திலும், உற்பத்தியில் தேனி மாவட்டம் (4,21,134 மெட்ரிக் டன்) இரண்டாம் இடத்திலும் உள்ளது.

மாநில அளவில், திருநெல்வேலி மாவட்டம் நெல்லி சாகுபடி பரப்பு (1,208 எக்டர்) மற்றும் உற்பத்தியில் (28,992 மெட்ரிக் டன்) முதல் இடத்தில் உள்ளது.

அட்டவணை 2.2: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள்

வ. எண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டர்)
1	மா	1,46,071	கிருஷ்ணகிரி (31,176), தருமபுரி (16,509), திண்டுக்கல் (15,816), திருவள்ளூர் (11,059), தேனி (9,385)
2	வாழை	97,644	ஈரோடு(15,272), தூத்துக்குடி (8,283), கோயம்புத்தூர் (7,012), தேனி (6,122), திருச்சிராப்பள்ளி (6,113)
3	கொய்யா	12,958	திண்டுக்கல் (1,938), மதுரை (1,533), விருதுநகர் (1,214), விழுப்புரம் (1,144). கடலூர் (1,087)
4	எலுமிச்சை	11,757	தென்காசி(3,057), திண்டுக்கல் (2,388), திருச்சிராப்பள்ளி (1,023), தேனி(748), தூத்துக்குடி (679)
5	தர்பூசணி	10,841	செங்கல்பட்டு (3,338), விழுப்புரம் (1,886), திருவள்ளூர் (1,262), சேலம் (648), தருமபுரி (625)

வ. எண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டர்)
6	நெல்லி	*7,297*	திருநெல்வேலி *(1,208)*, தென்காசி *(1,063)*, திண்டுக்கல் *(1054)*, திருப்பூர் *(498)*, தேனி *(345)*
7	சப்போட்டா	*5,268*	திண்டுக்கல் *(1,006)*, திருப்பத்தூர் *(393)*, விருதுநகர் *(387)*, கிருஷ்ணகிரி *(321)*, தேனி *(314)*
8	பலா	*3,180*	கடலூர் *(718)*, கன்னியாகுமரி *(567)*, திண்டுக்கல் *(382)*, நாமக்கல் *(258)*, புதுக்கோட்டை *(226)*.
9	ஆரஞ்சு	*2,228*	திண்டுக்கல் *(1,337)*, சேலம் *(702)*, நீலகிரி *(93)*
10	திராட்சை	*2,070*	தேனி *(1,796)*, திண்டுக்கல் *(195)*
11	இதர பழங்கள்	*13,229*	கன்னியாகுமரி *(1,720)*, ஈரோடு *(1,351)*, திண்டுக்கல் *(1,257)*, திருவண்ணாமலை *(1,109)*, நாமக்கல் *(1,067)*

2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாக ரூ. *71.36* கோடி நிதியில் *31,259* எக்டர் பரப்பில் பழப்பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2.1.2. காய்கறிகள்

தமிழ்நாட்டில், தோட்டக்கலை பயிர்களின் மொத்த சாகுபடி பரப்பில் காய்கறி பயிர்களின் சாகுபடி பரப்பு *22* சதவீதமாகவும், உற்பத்தி *40* சதவீதமாகவும் உள்ளது. தருமபுரி, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் காய்கறி பயிர்கள் அதிகமாக பயிரிடப்படுகின்றன.

காய்கறி பயிர்கள் சாகுபடி பரப்பில் தருமபுரி மாவட்டம் *(44,970* எக்டர்) முதலிடமும், கிருஷ்ணகிரி மாவட்டம் *(32,800*

2022 ஏப்ரல் 13]

எக்டர்) இரண்டாவது இடமும், நாமக்கல் மாவட்டம் *(29,616 எக்டர்)* மூன்றாவது இடமும் வகிக்கின்றன.

மொத்த காய்கறி சாகுபடி பரப்பில், வெங்காயம், தக்காளி, கத்தரி, வெண்டை, கீரை வகைகள், பீன்ஸ், கேரட், பாகல் , அவரை ஆகிய பயிர்கள் *59* சதவீதம் பயிரிடப்படுகிறது.

அட்டவணை 2.3 : காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்

வ.ண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்)
1	வெங்காயம்	*53,891*	பெரம்பலூர் *(9,589)*, நாமக்கல் *(5,764)*, திருச்சிராப்பள்ளி *(5,540)*, தூத்துக்குடி *(5,426)*, திண்டுக்கல் *(4,314)*
2	தக்காளி	*44,918*	தருமபுரி *(13,542)*, கிருஷ்ணகிரி *(10,845)*, சேலம் *(5,000)*, திண்டுக்கல் *(2,501)*, திருப்பூர் *(2,399)*
3	கத்தரி	*26,873*	தருமபுரி *(4,477)*, சேலம் *(3,515)*, திருவண்ணாமலை *(2,817)*, கிருஷ்ணகிரி *(1,936)* *(1,076)* கள்ளக்குறிச்சி
4	வெண்டை	*22,876*	தருமபுரி *(4,883)*, சேலம்*(3,739)*, திருவண்ணாமலை *(2,187)*, கள்ளக்குறிச்சி *(1,004)*, இராணிப்பேட்டை *(900)*
5	முருங்கை	*18,199*	திண்டுக்கல் *(4,354)*, தேனி *(3,078)*, கரூர் *(2,482)*, தூத்துக்குடி *(1,661)*, அரியலூர் *(1,628)*

[2022 ஏப்ரல் 13

வ.ண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்)
6	கீரை வகைகள்	10,267	கிருஷ்ணகிரி (4439), சேலம் (1,242), வேலூர் (913), திருவள்ளூர் (790), நாமக்கல் (706)
7	பீன்ஸ்	6,796	கிருஷ்ணகிரி (4,439), திண்டுக்கல் (1,113), நீலகிரி (329), சேலம் (261), ஈரோடு (243)
8.	கேரட்	5,659	நீலகிரி (3,728), திண்டுக்கல் (978), கிருஷ்ணகிரி (946)
9	பாகல்	5,069	தருமபுரி (1,072), சேலம் (684), கோயம்புத்தூர் (532), திருவண்ணாமலை (274), கிருஷ்ணகிரி (218)
10	அவரை	4,278	தருமபுரி (1,292), சேலம் (742), திண்டுக்கல் (673), தேனி (426), கிருஷ்ணகிரி (337)
11	இதர காய்கறிகள்	44,613	கிருஷ்ணகிரி (6,973), திண்டுக்கல் (4,900), தருமபுரி (4,727), சேலம் (3,208) நீலகிரி (2,986)

காய்கறிகளின் தேவையை கருத்தில் கொண்டு, உற்பத்தியினை பெருக்கிட 2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, மாநில தோட்டக்கலை வளர்ச்சித்திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக காய்கறி பயிர்களின் சாகுபடிப் பரப்பினை 60,959 எக்டரில் அதிகரிக்க ரூ.118.58 கோடி நிதியில் திட்டமிடப்பட்டுள்ளது.

2.1.3. மலர்கள்

தமிழ்நாட்டில் முக்கிய மலர்களான மல்லிகை, முல்லை, பிச்சி, சம்பங்கி, ரோஜா, செவ்வந்தி, செண்டு மல்லி, வாடாமல்லி,

2022 ஏப்ரல் 13]

கோழிக்கொண்டை, அரளி ஆகியன அதிக அளவில் பயிரிடப்படுகிறது. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பில், மலர்களின் சாகுபடிப் பரப்பு 2.8 சதவீதமாகவும், உற்பத்தியில் 2.5 சதவீதமாகவும் உள்ளது.

மலர்கள் சாகுபடிப் பரப்பில், மல்லிகை, முல்லை, காக்கடான் மற்றும் பிச்சிப்பூ 40 சதவீதமும், சம்பங்கி 16 சதவீதமும் பயிரிடப்படுகிறது.

அட்டவணை 2 . 4 : மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்

வ. எண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்)
1	மல்லிகை	13,719	மதுரை (1,666), தருமபுரி (1,394), திருவள்ளூர் (1,139), ஈரோடு (1,138), சேலம் (909)
2	சம்பங்கி	7,026	தருமபுரி(2,936), திருவண்ணாமலை (1,626), ஈரோடு (344), திண்டுக்கல் (311), திருவள்ளூர்(187)
3	செவ்வந்தி	6,913	தருமபுரி (2,448), கிருஷ்ணகிரி (2,398), சேலம் (1,075), திருவண்ணாமலை (508)
4	ரோஜா	3,019	கிருஷ்ணகிரி (1,298), தருமபுரி (554), திருவண்ணாமலை(199), நாமக்கல் (145), திண்டுக்கல் (105)
5	அரளி	2,303	சேலம் (868), தருமபுரி (517), நாமக்கல் (420), திண்டுக்கல் (322)
6	இதர மலர்கள்	9,940	கிருஷ்ணகிரி(1,687), திருவண்ணாமலை (1,467), தருமபுரி (1,187), திண்டுக்கல் (807), சேலம் (547)

2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் 4 இலட்சம் சதுர மீட்டரில் பசுமை குடில்கள் மற்றும் நிழல் வலை

கூடங்கள் அமைத்து, மலர்கள் சாகுபடி செய்து விவசாயிகள் கூடுதல் மகசூல் மற்றும் உயர் தரமான மலர்களைப்பெற ரூ.17.57கோடி நிதியில் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் ரூ. 8.83 கோடி நிதியில் 2,805, எக்டரில் மலர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது.

2.1.4: சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள்

தமிழ்நாட்டில் மிளகாய், மஞ்சள், புளி, கொத்தமல்லி, மிளகு, ஏலக்காய், கிராம்பு, இஞ்சி, பூண்டு போன்ற சுவை தாளித, மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில், சுவை தாளித, மணம் கூட்டும் பயிர்களின் சாகுபடிப் பரப்பு 7.5 சதவீதமாகவும், உற்பத்தி 1.2 சதவீதமாகவும் உள்ளது.

அட்டவணை 2.5 : சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்

வ.எண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்)
1	மிளகாய்	54,231	இராமநாதபுரம் (15,939), தூத்துக்குடி (13,689), சிவகங்கை (5,064), திருவண்ணாமலை (2,344), சேலம் (1,643)
2	மஞ்சள்	20,771	தருமபுரி (6,704), ஈரோடு (4,251), சேலம் (3,302), கள்ளக்குறிச்சி(2154). நாமக்கல் (1,396)
3	புளி	14,496	திண்டுக்கல் (3,294), தேனி(1,607), தருமபுரி (1,305) மதுரை (1,146), கன்னியாகுமரி (907)

2022 ஏப்ரல் 13]

வ.எண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்)
4	கொத்த மல்லி	9,334	தூத்துக்குடி (3,672), இராமநாதபுரம் (1,916), விருதுநகர் (1,797), திருப்பூர்(682), தருமபுரி (414),
5	மிளகு	6,604	நாமக்கல் (2,348), திண்டுக்கல் (1,224), சேலம் (1,181), நீலகிரி (984), கன்னியாகுமரி (319)
6	இதர சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள்	11,299	கோவை(2,194), நீலகிரி(1,807), தேனி(1,657), திண்டுக்கல்(959), கன்னியாகுமரி (906)

2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக ரூ.10.88 கோடி நிதியில் 7,250 எக்டர் பரப்பில் சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளன.

2.1.5: தோட்டப் பயிர்கள்

தமிழ்நாட்டில், மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பில், தோட்டப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு 46 சதவீதமாகவும், உற்பத்தி 28 சதவீதமாகவும் உள்ளது.

தோட்டப்பயிர்களில் தென்னை, சாகுபடி பரப்பில் 63 சதவீதமும், உற்பத்தியில் 65 சதவீதமும் பங்களிக்கிறது. தென்னைக்கு அடுத்தப்படியாக முந்திரி, தேயிலை, காப்பி, பாக்கு, கோகோ மற்றும் இரப்பர் ஆகியன அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

[2022 ஏப்ரல் 13

அட்டவணை 2.6: தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்

வ. எண்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டரில்)
1	முந்திரி	84,924	அரியலூர் (30,524), கடலூர் (29,483), புதுக்கோட்டை (5,929), விழுப்புரம் (3,031), சிவகங்கை (2,838)
2	தேயிலை	69,743	நீலகிரி (55,910), கோயம்புத்தூர் (11,191), தேனி (1,621), திருநெல்வேலி (804), கன்னியாகுமரி (214)
3	காப்பி	33,360	திண்டுக்கல் (11093), நீலகிரி (7,457), சேலம் (7,008), தேனி (3,107), கோயம்புத்தூர் (2,248)
4	பாக்கு	7,762	கோயம்புத்தூர் (2,282), சேலம் (2,006), ஈரோடு (802), தருமபுரி (737), நாமக்கல் (681)
5	கோகோ	2,170	கோயம்புத்தூர் (748), தருமபுரி (433), சேலம் (238), திண்டுக்கல்(135)
6	இதர தோட்டப் பயிர்கள்	5,03,068	கோவை(88,527), திருப்பூர் (63,174), கன்னியாகுமரி (53,940), தஞ்சாவூர் (41,868), திண்டுக்கல் (28,873)

2022-23 ஆம் ஆண்டில், முந்திரி சாகுபடி 5,160 எக்டர் பரப்பில் ரூ. 9.95 கோடி நிதியில் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு ஆகிய திட்டங்களின்கீ ழ் மேற்கொள்ளப்பட உள்ளது.

2.1.6: மூலிகை மற்றும் வாசனைப் பயிர்கள்

தமிழ்நாட்டில் மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பில், மூலிகை மற்றும் வாசனைப் பயிர்களின் சாகுபடி, உற்பத்தி ஒரு சதவிகிதமாக உள்ளது.

தமிழ்நாட்டில் மூலிகை, வாசனை திரவியப் பயிர்கள் பரப்பில் திண்டுக்கல் (4,955 எக்டர்) மாவட்டம் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து திருப்பூர் (3,917 எக்டர்), தருமபுரி (2,023 எக்டர்), திருவண்ணாமலை (1,992 எக்டர்), கரூர் (1,315 எக்டர்) ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

2022 ஏப்ரல் 13]

அட்டவணை 2.7: மூலிகை மற்றும் வாசனைப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்

வ.எ்	பயிர்கள்	பரப்பு (எக்டர்)	அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டரில்)
1	கண்வலிக்கிழங்கு	5,134	திண்டுக்கல் (2,370), திருப்பூர் (2,037), கரூர் (603)
2	மருந்துக்கூர்க்கன்	3,403	கள்ளக்குறிச்சி (1,151), சேலம் (1,011), திருவண்ணாமலை (779)
3	பால்மரோசா	791	திருவண்ணாமலை (546), தருமபுரி (202)
4.	எலுமிச்சை புல்	363	திருவண்ணாமலை (360)
5.	இதர மூலிகை, வாசனைப் பயிர்கள்	10,748	திண்டுக்கல் (2,584), திருப்பூர் (1,879), தருமபுரி (1,805), விருதுநகர் (1,045), கரூர் (709)

2.2:ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

2.2.1: சிக்கன நீர் பாசனத் திட்டம் (Scheme for judicious use of irrigation water)

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், உற்பத்தியை பெருக்கவும், தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, அதிக பரப்பளவை சாகுபடிக்கு கொண்டுவர, நுண்ணீர்ப் பாசன திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் முயற்சியாக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

[2022 ஏப்ரல் 13

இத்திட்டம், 2022-23 ஆம் ஆண்டில், ரூ.960 கோடி நிதியில், ஒரு இலட்சம் எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களில், நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை ஏற்படுத்தி, பயிர் உற்பத்தி திறனைப் பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.2: ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம்—தேசிய தோட்டக்கலை இயக்கம் (MIDH—National Horticulture Mission)

இத்திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணை திட்டமாக 2014-15 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள், மூலிகை மற்றும் வாசனை திரவிய பயிர்கள் மற்றும் மலர்கள் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும் தொழில்நுட்பங்களான காளான் வளர்ப்பு, மண்புழு உர உற்பத்தி, தேனீ வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள விவசாயிகளுக்கு பயிற்சியும், மானியமும் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், ரூ.125 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் ரூ.53.27 கோடி நிதியில், தோட்டக்கலை பயிர்களில் 24,188 எக்டரில் பரப்பு விரிவாக்கமும், 17,700 எக்டரில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண்களை தொழில் முனைவோர்களாக முன்னேற்றுவதற்காக, சிறிய அளவிலான காளான் உற்பத்திக் கூடம் அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. பலா சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும், புதிய தொழில்நுட்பங்கள் மூலம் பதப்படுத்துதலை மேம்படுத்துவதற்காகவும். கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்தில், பனிக்கன்குப்பம் கிராமத்தில், பலா சிறப்பு மையம் ஐந்து கோடி ரூபாய் நிதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 13]

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.340.31 கோடி நிதியில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.3. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் [National Agriculture Development Programme (NADP)]

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் 2021-22 ஆம் ஆண்டில் ரூ. 61.05 கோடி நிதியில், இயற்கை வேளாண்மை முறையில் 40,000 எக்டர் பரப்பில் காய்கறிகளை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கியும், தரமான கொடி வகை காய்கறிகள் மற்றும் பழங்களை உற்பத்தி செய்திட 638 எக்டர் பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்திடவும், காய்கறி சாகுபடி மேற்கொள்ளாத கிராமங்களில் 1,250 எக்டர் பரப்பில், காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கவும் செயல்படுத்தப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.86.39 கோடி நிதியில், தோட்டக்கலை பயிர்களில் இயற்கை வேளாண் சாகுபடி முறையை 41,000 எக்டர் பரப்பில் ஊக்குவித்தல், குறைந்த மகசூல் தரும் பயிருக்கு மாற்றாக அதிக மகசூல் தரும் தோட்டக்கலைப் பயிர்களை 8,381 எக்டர் பரப்பில் பயிரிடுதல், பாரம்பரிய காய்கறி இரகங்களை 1,000 எக்டர் பரப்பில் சாகுபடி செய்ய ஊக்குவித்தல், பூண்டு, மங்குஸ்தான், வெண்ணைப்பழம், முருங்கை, வெங்காயம் முதலிய தோட்டக்கலைப் பயிர்களை 5,500 எக்டர் பரப்பில் சாகுபடி செய்தல், 200 எக்டர் பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்து சாகுபடி மேற்கொள்ளுதல், வாழை, தக்காளி, பீன்ஸ் போன்ற பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 3,000 எக்டரில் 'Y' வடிவ பந்தல் அமைத்தல் போன்ற திட்டக்கூறுகளுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.4: நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) – மானாவாரி பகுதி மேம்பாடு [Rainfed Area Development – RAD]

தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடியை, கால்நடை, மீன்வளர்ப்பு, வனவியல், வேளாண்மை போன்றவற்றுடன் ஒருங்கிணைத்து, விளை பொருட்களை மதிப்பு கூட்டி, வருமானத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2021-22 ஆம் ஆண்டில், மானாவாரி பகுதி மேம்பாடு 23 மாவட்டங்களில் ரூ. 16.24 கோடி நிதியில், 4,400 அலகுகள் அமைத்து,

தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு, ஆடு வளர்ப்பு போன்றவை அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணையம், மண்புழு உரப்படுக்கைகள், பயிற்சிகள் மற்றும் செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளுடன் செயல்படுத்தப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ. 25.45 கோடி நிதியில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, தீவனப்பயிர்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரப்படுக்கைகள் அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணையம் 5,000 அலகுகள் அமைத்து, அலகு ஒன்றுக்கு ரூ.50,000 மானியத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.5: தேசிய மூங்கில் இயக்கம் (National Bamboo Mission - NBM)

வனம் அல்லாத, அரசு மற்றும் தனியார் நிலங்களில் மூங்கில் தோட்டங்களின் பரப்பளவை அதிகரித்தல், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுடன் ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், ரூ.2.91 கோடி நிதியில் 614 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், 2022-23 ஆம் ஆண்டில், ரூ.3.75 கோடி நிதியில் 850 எக்டர் பரப்பில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.6: மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (State Horticulture Development Scheme - SHDS)

தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கத்தில் சிறப்பு கவனம் செலுத்திட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்ட திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இதில் இரண்டு இலட்சம் காய்கறி விதை தளைகள், ஒரு இலட்சம் மாடித் தோட்ட தளைகள் மற்றும் இரண்டு இலட்சம் ஊட்டச்சத்து தோட்ட தளைகள் ஆகியவை 75 சதவீத மானியத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இணையவழி மூலம் விண்ணப்பித்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

2022 ஏப்ரல் 13]

2021-22 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 41.53 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.33.38 கோடி நிதியில் செயல்படுத்தப்பட உள்ளது.

2.2.7: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் - 2022-23 [Kalaignarin All Village Integrated Agriculture Development Programme 2022-23 - KAVIADP]

2021-22 வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, தமிழ்நாட்டில் ஐந்தாண்டு காலத்தில் அனைத்து கிராமங்களிலும், விவசாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்து, விவசாய தன்னிறைவு அடையும் வகையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மாநில நிதியில் செயல்படுத்தப்படுகிறது.

இச்சீரிய திட்டம் 2021-22 இல் 1,997 கிராமங்களில் ரூ.2.58 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 3,204 கிராமங்களில் தோட்டக்கலை சார்ந்த இனங்கள் ரூ. 8.27 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

2.2.8: தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் [Tamil Nadu Irrigated Agriculture Modernization Project – TNIAMP]

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டம் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஒரு பல்நோக்கு திட்டமாகும். தேர்வு செய்யப்பட்ட உபவடி நீர் நிலப்பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களில் இருந்து குறைந்த நீர் தேவைப்படும் அதிக வருவாய் தரக்கூடிய தோட்டக்கலை பயிர்களை உயர் மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாகுபடியினை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2021-22 ஆம் ஆண்டில், 5,486 எக்டர் பரப்பில் பயிர் செயல்விளக்கங்களும், 2,073 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசன அமைப்புகளும், மாதிரி கிராமங்களுக்கான பணிகளும் ரூ.35.62 கோடி நிதியில் மேற்கொள்ளப்பட்டன.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.45.57 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.9: பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் [Pradhan Mantri Fasal Bima Yojana – PMFBY]

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட குறுவட்டங்களில், அறிவிக்கை செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம்.

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை – காரீப் பருவம் – 13 பயிர்கள் - வாழை, மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், உருளைக்கிழங்கு, வெங்காயம், சிவப்பு மிளகாய், வெண்டை, கத்தரி, முட்டைக்கோஸ், கேரட், பூண்டு, இஞ்சி, தக்காளி.

அக்டோபர் முதல் மார்ச் வரை - ராபி பருவம் - 13 பயிர்கள் - வாழை, மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, வெங்காயம், சிவப்பு மிளகாய், வெண்டை, கத்தரி, முட்டைக்கோஸ், கேரட், பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி, தக்காளி.

தோட்டக்கலைப் பயிர்களுக்கு இரண்டு பருவங்களிலும் காப்பீட்டுத் தொகையில் ஐந்து சதவீதத்தை பயிர் காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்த வேண்டும்.

2021-22 ஆம் ஆண்டில், 1,38,466 விவசாயிகள் 42,603 எக்டர் பரப்பளவில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களில் பயிர் காப்பீடு செய்துள்ளனர்.

2.2.10: நிலையான வளர்ச்சி இலக்குகள் [Sustainable Development Goal]

2020–2021 ஆம் நிதியாண்டில் 3,000 புதிய உழவர் ஆர்வலர் குழுக்கள், 29,647 எக்டர் பரப்பளவில் அங்கக தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மற்றும் 2,14,216 எக்டர் பரப்பளவிற்கு நுண்ணீர் பாசன அமைப்புகள் ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குக்கான குறியீடுகள் அடையப்பெற்றுள்ளன.

மேலும், இலக்குகளில் கோரப்பட்ட 82.02 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள், 56.33 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் 2.51 இலட்சம் மெட்ரிக் டன் வாசனை, சுவை தாளிதப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2022 ஏப்ரல் 13]

2.3: தோட்டக்கலைத் துறையின் கட்டமைப்பு வசதிகள்

2.3.1. அரசு தோட்டக்கலை பண்ணைகள் [State Horticulture Farms – SHF]

தமிழ்நாட்டில், தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையின்கீ ழ், 36 மாவட்டங்களில், 79 அரசு தோட்டக்கலை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன (இணைப்பு 1). தோட்டக்கலைப் பயிர்களின் இனத்தூய்மையான, தரமான நடவுசெடிகளை சரியான நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் முக்கிய நோக்கமாகும். இப்பண்ணைகள் விவசாயிகளுக்கு சமீபத்திய தொழில்நுட்பங்களை விளக்கும் "மாதிரி செயல்விளக்க பண்ணைகளாக" திகழ்வதுடன், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கி வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டில், 37.28 கோடி நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதில் 25.37 கோடி குழித்தட்டு காய்கறி மற்றும் மலர் நாற்றுகளும் அடங்கும்.

2022-23 ஆம் ஆண்டில் 40.9 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 328 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல், மாடித்தோட்டம் அமைத்தல் மூலம் காய்கறி விதை தளைகளாக பல்வேறு திட்டங்கள் வாயிலாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டில், 350 மெ.டன் தக்காளி, கத்தரி, வெண்டை, வெங்காயம், கீரை வகைகள், பூசணி, புடல், பாகல், பீர்க்கன், சுரை, சாம்பல் பூசணி, முருங்கை, கொத்தவரை, அவரை, பட்டாணி, பீன்ஸ், காராமணி, உருளைக்கிழங்கு போன்ற பல்வேறு வகையான உண்மை நிலை காய்கறி விதைகளை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 13

தமிழ்நாட்டின் மாநில மரமாகிய பனை மரம், வேறுபட்ட மண் வகைகளிலும், புயல், சுழல் காற்று மற்றும் வறட்சி போன்ற பல்வேறு காலநிலைகளை தாங்கி வளரும் தன்மையுடையது. பனை மரத்தின் முக்கியத்துவம் கருதி 2021-22 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் பனங்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய, அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2.3.1.1 : மண்புழு உர உற்பத்தி

மண்புழு உரமானது, மண்ணில் நுண்ணுயிர் செயல்பாடு மற்றும் அங்கக தன்மையை அதிகரித்து காற்றோட்டம், நீர்த் தேக்க சக்தி ஆகியவற்றை கூட்டுவதன் மூலம் தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கச் செய்கிறது. 2021-22ஆம் ஆண்டில் 823 மெட்ரிக் டன் மண்புழு உரம் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டில் 1,000 மெட்ரிக் டன் மண்புழு உரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2.3.2 : பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 24 பூங்காக்களை பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்வதுடன், தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றன (இணைப்பு 2).

2021-22ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் இரண்டு கோடி ரூபாய் நிதியில் நெய்தல் பூங்கா அமைக்கவும், கடலூர் மாவட்டம், வடலூரில் ஒரு கோடி ரூபாய் நிதியில் தோட்டக்கலை பூங்கா அமைக்கவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.3.3: நில எழிலூட்டும் பிரிவு (Landscape Wing):

மாநகரங்களில் வசிக்கும் மக்களின் நில எழிலூட்டும் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, திட்ட வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்திற்கு தொழில்நுட்ப அலுவலர்களை கொண்டு நில எழிலூட்டும் பிரிவை உருவாக்கியுள்ளது. இப்பிரிவானது பொதுமக்கள், அரசுத்

2022 ஏப்ரல் 13]

துறை அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் புதிய நில எழில் வடிவமைப்பை உருவாக்குவதிலும், ஏற்கெனவே உள்ள எழில் வடிவமைப்பை மேலும் அழகுபடுத்துவதிலும், மாடித் தோட்டம் போன்ற அமைப்புக்களை தேவைக்கேற்ப அமைத்துக் கொடுப்பதிலும் ஈடுபட்டு வருகிறது.

நில எழிலூட்டல் பிரிவின் மூலம், 2021-22 ஆம் ஆண்டில் எழும்பூர் அருங்காட்சியகத்தில் தோட்டம் அமைக்கும் பணியும், ஆளுநர் மாளிகையில் புல் தரை புதுப்பிக்கும் பணியும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2022-23 ஆம் ஆண்டில், தஞ்சாவூர் விமானபடைத்தளம் மற்றும் செம்மஞ்சேரி குடிசை மாற்று வாரியத்தில் நில எழிலூட்டலுக்கான பணிகள் ரூ.0.8 கோடி மதிப்பில் தொடங்கப்பட உள்ளன.

2.3.4 : மகத்துவ மையங்கள்

உயர் தொழில்நுட்பங்களுடன் கூடிய செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும், விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கவும், ஆறு இடங்களில் பயிர்களுக்கு ஏற்ப மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.8: மகத்துவ மையங்கள் விவரம்

வ. எண்	மகத்துவ மையம்	இடம்
1.	கொய் மலர்கள்	தளி, கிருஷ்ணகிரி மாவட்டம்
2.	காய்கறிகள்	ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
3.	மலை காய்கறிகள்	நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம்.
4.	வெப்ப மண்டல பழப்பயிர்கள்	கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
5.	தேனீ வளர்ப்பு	பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம்.
6.	பாரம்பரிய மலர்கள்	திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்.

[2022 ஏப்ரல் 13

2.3.5: தோட்டக்கலை பயிற்சி மையங்கள் (Horticulture Training Centre)

சென்னை - மாதவரம், புதுக்கோட்டை – குடுமியான்மலை, கிருஷ்ணகிரி – தளி மற்றும் நீலகிரி – உதகமண்டலம் ஆகிய நான்கு இடங்களில் தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையின்கீழ் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன.

2.3.6 : தோட்டக்கலை பட்டயப் படிப்பு

தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம் - மாதவரம், சென்னை, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் – தளி, கிருஷ்ணகிரி மற்றும் காய்கறி மகத்துவ மையம்- ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் ஆகிய மூன்று இடங்களில், ஆண்டு தோறும் தலா 50 மாணவர்களுக்கு ஈராண்டு பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

2021 ஆம் ஆண்டு முதல், இப்பட்டயப் படிப்பிற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

2.4. : பணியாளர்கள் விவரம்

தோட்டக்கலைத் துறையின்கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கீழ்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்:

அட்டவணை 2.9: பணியாளர் விவரம்

வ. எண்	பணியிட விவரம்	மொத்த பணியிடம்
அ.	தொழில்நுட்ப அலுவலர்கள்	
1.	தோட்டக்கலை கூடுதல் இயக்குநர்	2
2.	தோட்டக்கலை இணை இயக்குநர்	6
3.	தோட்டக்கலை துணை இயக்குநர்	43
4.	தோட்டக்கலை உதவி இயக்குநர்	398
5.	தோட்டக்கலை அலுவலர்	404
6.	தோட்டக்கலை துணை அலுவலர்	123

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பணியிட விவரம்	மொத்த பணியிடம்
7.	உதவி தோட்டக்கலை அலுவலர்	1,625
8.	உதவி விதை அலுவலர்	5
	மொத்தம்	2606
ஆ.	அமைச்சுப் பணியாளர்கள்	
9.	இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள்	1,222
	மொத்தம்	3,828

இணைப்பு-1

மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகள்

வ. எண்	மாவட்டம்	அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர்	அமைக்கப்-பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
1	அரியலூர்	கீழப்பழூர்	2018	7.58
2	சென்னை	மாதவரம்	1980	4.38
3	கோயம்புத்தூர்	ஆனைக்கட்டி	1986	12 .00
4	கோயம்புத்தூர்	கண்ணம்பாளையம்	2001	11.20
5	கடலூர்	நெய்வேலி	1985	39.53
6	கடலூர்	விருத்தாச்சலம்	1975	10.43
7	தருமபுரி	போளயம்பள்ளி	2013	2.73
8	தருமபுரி	வட்டார நாற்றங்கால் மையம், தர்மபுரி	2020	0.40

[2022 ஏப்ரல் 13

வ. எண்	மாவட்டம்	அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர்	அமைக்கப்-பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
9	திண்டுக்கல்	சந்தையூர்	2018	15.20
10	திண்டுக்கல்	நீலமலைக் கோட்டை	2020	0.40
11	திண்டுக்கல்	கொடைக்கானல்	1961	1.73
12	திண்டுக்கல்	தாண்டிக்குடி	1985	5.45
13	திண்டுக்கல்	சிறுமலை	1980	200.04
14	திண்டுக்கல்	காய்கறி மகத்துவ மையம், ரெட்டியார் சத்திரம்	2012	5.33
15	திண்டுக்கல்	கொத்தபுள்ளி	2021	5.87
16	ஈரோடு	பகுத்தம்பாளையம்	2018	10.00
17	செங்கல்பட்டு	ஆத்தூர்	1961	12.24
18	காஞ்சிபுரம்	விச்சந்தாங்கல்	1982	23.25
19	காஞ்சிபுரம்	மேல்கதிர்பூர்	1982	42.63
20	காஞ்சிபுரம்	மேலொட்டிவாக்கம்	1982	20.60
21	காஞ்சிபுரம்	பிச்சிவாக்கம்	1982	34.00
22	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	1922	12.64
23	கன்னியாகுமரி	பேச்சிப்பாறை	1967	6.00
24	கரூர்	முதலைப்பட்டி	1978	23.96
25	கிருஷ்ணகிரி	திம்மாபுரம்	1952	9.62
26	கிருஷ்ணகிரி	ஜீனூர்	1980	123.45
27	கிருஷ்ணகிரி	கொய்மலர்கள் மகத்துவ மையம், தளி	2012	22.00

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டம்	அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர்	அமைக்கப்-பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
28	மதுரை	பூஞ்சுத்தி	2012	5.76
29	மதுரை	பாரம்பரிய மலர்களுக்கான மகத்துவ மையம் . திருப்பரங்குன்றம்	2019	2.65
30	நாகப்பட்டினம்	வண்டுவாஞ்சேரி	2018	6.54
31	நாகப்பட்டினம்	புஷ்பவனம்	2021	10.25
32	நாமக்கல்	செம்மேடு	1974	11.60
33	நாமக்கல்	படசோலை	1989	22.67
34	பெரம்பலூர்	வெங்கலம்	2018	4.72
35	புதுக்கோட்டை	குடுமியான்மலை	1974	118.68
36	புதுக்கோட்டை	வல்லத்திராக் கோட்டை	1977	521.20
37	புதுக்கோட்டை	நாட்டுமங்கலம்	1985	53.02
38	இராமநாதபுரம்	ஓரியூர்	2013	14.77
39	சேலம்	மாபெரும் பழப்பண்ணை கருமந்துறை	1981	419.77
40	சேலம்	மணியார்குன்றம்	1982	101.21
41	சேலம்	அ.தோ.ப. கருமந்துறை	1981	39.35
42	சேலம்	முள்ளுவாடி	1985	48.40
43	சேலம்	சிறுமலை	1987	8.00
44	சேலம்	ஏற்காடு	1975	10.13
45	சிவகங்கை	தேவக்கோட்டை	1985	81.19
46	சிவகங்கை	நேமம்	1979	38.77

[2022 ஏப்ரல் 13

வ. எண்	மாவட்டம்	அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர்	அமைக்கப்-பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
47	சிவகங்கை	கிளாதரி	2019	12.81
48	தஞ்சாவூர்	ஆடுதுறை	1988	8.90
49	தஞ்சாவூர்	மருங்குளம்	1966	10.77
50	நீலகிரி	பர்லியார்	1871	6.25
51	நீலகிரி	கல்லார்	1900	6.77
52	நீலகிரி	பழப்பதனிடும் நிலையம் குன்னூர்	1965	4.05
53	நீலகிரி	பழவியல் நிலையம் குன்னூர்	1948	10.46
54	நீலகிரி	காட்டேரி	1974	16.96
55	நீலகிரி	தொட்டபெட்டா	1969	2.52
56	நீலகிரி	தும்மனட்டி	1956	9.80
57	நீலகிரி	நஞ்சநாடு	1917	64.00
58	நீலகிரி	தேவாலா	1978	80.00
59	நீலகிரி	கோல்கிரைன்	1989	20.40
60	தேனி	பெரியகுளம்	1950	9.32
61	தூத்துக்குடி	கீழவல்லநாடு	2019	3.82
62	திருவாரூர்	மூவாநல்லூர்	2018	5.82
63	திருப்பூர்	சங்கராமநல்லூர்	2018	10.12
64	திருநெல்வேலி	வன்னிக்கோனேந்தல்	2018	10.86
65	திருவண்ணா-மலை	புதூர் செக்கடி	2018	12.76
66	திருவண்ணா-மலை	வட்டார நாற்றங்கால் பண்ணை, ஜமுனாமரத்தூர்	2019	0.68
67	திருவண்ணா-மலை	வட்டார நாற்றங்கால் பண்ணை. போளூர்	2020	1.52
68	திருச்சிராப்பள்ளி	தொரக்குடி	2013	4.05

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டம்	அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர்	அமைக்கப்-பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
69	திருச்சிராப்பள்ளி	வெப்ப மண்டல பழப்பயிர்கள் மகத்துவ மையம், கஞ்சநாயக்கன்பட்டி	2019	8.67
70	திருப்பத்தூர்	தகரக்குப்பம்	1985	34.40
71	திருப்பத்தூர்	கூடப்பட்டு	1961	10.08
72	திருவள்ளூர்	ஈக்காடு கண்டிகை	2020	3.62
73	இராணிப்பேட்டை	நவ்லாக்	1981	84.42
74	கள்ளக்குறிச்சி	ஏ. சாத்தனூர்	2018	10.00
75	வேலூர்	அகரம்சேரி	2020	34.76
76	விருதுநகர்	பூவாணி	1967	9.46
77	விருதுநகர்	ஸ்ரீவில்லிபுத்தூர்	1982	46.27
78	விருதுநகர்	ஆதித்தநேந்தல்	2020	0.81
79	விழுப்புரம்	எலவளப்பாக்கம்	2022	7.20
		மொத்தம்		2743. 67

இணைப்பு 2

மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பூங்காக்கள்

வ. எண்	மாவட்டம்	பூங்காக்களின் பெயர்	அமைக்கப் பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
1	சென்னை	செம்மொழிப் பூங்கா, சென்னை	2010	3.21
2	சென்னை	தோட்டக் கலைப் பூங்கா, மாதவரம்	2018	8.90
3	சென்னை	செங்காந்தள் பூங்கா	2021	2.76

வ. எண்	மாவட்டம்	பூங்காக்களின் பெயர்	அமைக்கப் பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
4	சென்னை	பாரம்பரியப் பூங்கா, வண்ணாரப் பேட்டை	2021	1.56
5	கன்னியாகுமரி	சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி	2018	6.07
6	இராமநாதபுரம்	பாலை மரபணுப் பூங்கா, அச்சடிபிரம்பு	2015	4.04
7	சேலம்	ரோஜா தோட்டம், ஏற்காடு	2005	2.02
8	சேலம்	ஏரி பூங்கா, ஏற்காடு	2018	1.32
9	சேலம்	அண்ணா பூங்கா, ஏற்காடு	1999	1.74
10	சேலம்	அரசு தாவரவியல் பூங்கா-1. ஏற்காடு	2012	8.50
11	சேலம்	அரசு தாவரவியல் பூங்கா-2, ஏற்காடு	2012	7.69
12	சேலம்	ஐந்திணை குறிஞ்சி மரபணுப் பூங்கா, ஏற்காடு	2012	7.28
13	தென்காசி	சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம்	1986	15.07
14	திருவண்ணா-மலை	திருவண்ணாமலை பூங்கா	2021	3.64

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டம்	பூங்காக்களின் பெயர்	அமைக்கப் பட்ட வருடம்	பரப்பு (எக்டரில்)
15	திண்டுக்கல்	ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல்	2012	4.05
16	திண்டுக்கல்	பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல்	1900	8.29
17	திண்டுக்கல்	செட்டியார் பூங்கா, கொடைக்கானல்	1980	2.02
18	நீலகிரி	அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி	1848	21.60
19	நீலகிரி	அரசு ரோஜா பூங்கா, ஊட்டி	1995	7.29
20	நீலகிரி	சிம்ஸ் பூங்கா, குன்னூர்	1874	11.34
21	நீலகிரி	காட்டேரி பூங்கா	2012	2.00
22	நீலகிரி	தேயிலை பூங்கா, தொட்டபெட்டா	2015	1. 60
23	நீலகிரி	மரவியல் பூங்கா, உதகை	2008	1.58
24	நீலகிரி	சுற்றுச்சூழல் பூங்கா, கல்லார்	2021	2.15
		மொத்தம்		134.12

[*2022 ஏப்ரல் 13*

3. வேளாண்மைப் பொறியியல்

நிலம் சீர்திருத்தத்தில் தொடங்கி விதைப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடை மற்றும் அறுவடைக்குப்பின் மதிப்புக் கூட்டுதல் போன்ற பல்வேறு வேளாண் பணிகளை மேற்கொள்ள, வேளாண்மைக்கு தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாகிவிட்ட இன்றைய சூழலில், கால விரயமின்றி குறித்த நேரத்தில் மேற்கொள்ள ஏதுவாக, வேளாண் இயந்திரமயமாக்கலை விவசாயிகளிடையே கொண்டு சேர்ப்பதில் இன்றியமையாததாக வேளாண்மைப் பொறியியல் துறை விளங்குகிறது.

விவசாயத்திற்கு பெருகி வரும் நீரின் தேவையினை, குறைந்து வரும் நீர் ஆதாரங்களைக் கொண்டு சிறப்பான நீர்வள பாதுகாப்பு, நீர் மேலாண்மை உத்திகளைக் கையாண்டு, விவசாயிகளிடம் நீங்காத இடம் பெற்றுள்ளது வேளாண்மைப் பொறியியல் துறை. மண் வளத்தினை பாதுகாத்திடவும், புதிய பாசன ஆதாரங்களை உருவாக்கிடவும், பாசன நீரினை இறைத்திட புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான தொழில்நுட்பங்களை புகுத்திடவும் விவசாயிகளுக்கு துணை புரிகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

விளைவித்த வேளாண் விளைபொருட்கள் உரிய விலையின்றி வீணாவதை தடுத்து, விவசாயிகள் மதிப்புக் கூட்டி, இலாபம் ஈட்ட, முக்கிய பங்காற்றுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

இத்தகைய முயற்சிகளை தங்கு தடையின்றி விவசாயிகளிடம் கொண்டு சேர்த்திட, பல்வேறு சிறப்பான திட்டங்களை சீரான முறையில்கீழ்க்கண்டவாறு வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது:

1. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்
2. வேளாண் இயந்திரமயமாக்குதல்
3. வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல்
4. சூரிய சக்திமூலம் வேளாண்மை
5. மண் - நீர்வளப் பாதுகாப்பு
6. நீர் மேலாண்மை
7. கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

2022 ஏப்ரல் 13]

3.1. இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையால் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக நில மேம்பாடு, சிறு பாசனத் திட்டங்களின்கீழ் பல்வேறு நவீன புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

3.1.1. நிலமேம்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில், புதர் அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல் மற்றும் நிலம் சீரமைத்தலுக்காக 86 மண்தள்ளும் இயந்திரங்கள் (புல்டோசர்), நீர்நிலைகளை பராமரிக்கவும், மேம்படுத்தவும், கரைகளை வலுப்படுத்தவும், ஆழப்படுத்தி அதன் கொள்ளளவினை அதிகரிக்கவும் 60 சக்கர வகை மண் அள்ளும் இயந்திரங்கள், 10 டிராக் வகை மண் அள்ளும் இயந்திரங்கள், உழவுப் பணிகள் மேற்கொள்ள 272 டிராக்டர்கள், ஆறு மினி டிராக்டர்கள், 44 நெல் அறுவடை இயந்திரங்கள், 20 வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரங்கள், ஒரு கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் ஆகியவை உள்ளன. இவ்வியந்திரங்கள் தேவைப்படும் விவசாயிகளுக்கு இணைப்பு கருவிகளுடன் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

3.1.2.சிறுபாசனத்திற்கான நிலத்தடி நீர் ஆதாரங்களை உருவாக்குதல்

இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வண்டல் மண் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 25 சுழல் விசைத் துளைக் கருவிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கடின பாறைப் பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வண்டல் மண் பகுதிகளுக்கு நான்கு பெர்குஷன் துளைக் கருவிகள் மற்றும் திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள குறைந்த ஆழமுள்ள பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 21 சிறு விசைத் துளைக் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையில், குறைந்த ஆழத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்திட 19 கைத்துளைக் கருவிகள், திறந்தவெளி கிணறுகளை ஆழப்படுத்தவும், விவசாய நிலங்களில் உள்ள பாறைகளை தகர்த்து அப்புறப்படுத்துவதற்கும் எட்டு பாறை வெடிக் கருவிகள், குழாய்க் கிணறு மற்றும் ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு ஏற்ற நிலத்தடி நீர் இருக்கக்கூடிய மண்

[2022 ஏப்ரல் 13

படிவங்களின் அமைப்பினை கண்டறிந்திட 21 நவீன நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் மற்றும் நிலத்தடி நீரின் தன்மையையும், அளவினையும் கண்டறிந்திட இரண்டு மின்னியல் ஆய்வுக் கருவிகள் என பல்வேறு சிறு பாசன திட்டக் கருவிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

3.1.3. இ-வாடகை ஆன்லைன் கைபேசி செயலி

விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்களை இணையதளம்மூலம் வீட்டிலிருந்தும், வயல்களிலிருந்தும் எளிதாக முன்பதிவு செய்திடவும், மிக எளிதாக வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் பெற்றுப் பயன்பெறவும், வாடகைத் தொகையை முன்னதாக இணையதளம் அல்லது செயலிமூலம் செலுத்திடவும் “இ—வாடகை” ஆன்லைன் கைபேசி செயலி 08.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயலி விவசாயிகளிடம் பெரும் வரவேற்பைப் பெற்று சிறப்பாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

3.1.4. பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

இயற்கை பேரழிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்ள டிராக்டரால் இயங்கக்கூடிய 21 நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் 805 அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன. பேரிடர் மீட்புப் பணிகளுக்காக மண்தள்ளும் இயந்திரங்கள் மற்றும் டிராக்டர்களுடன் நீர் இறைக்கும் பம்புகளும், மரம் அறுக்கும் கருவிகளும் வேளாண்மைப் பொறியியல் துறையால் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

3.1.5. நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள்

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை வலுப்படுத்துவதற்காக, 2021-2022 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, ரூ.22.89 கோடி மதிப்பீட்டில், விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய, உழவுப் பணிகள் மற்றும் இதர வேளாண் பணிகளை மேற்கொள்ள 185 டிராக்டர்கள், நிலங்களில் உள்ள அழிக்கப்பட வேண்டிய மற்றும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய செடி மற்றும் இதர புல் பூண்டுகளை பற்பல துண்டுகளாக்கி மண்ணுடன் கலந்து

2022 ஏப்ரல் 13]

நிலத்திற்கேற்ற உரமாக்கும் வகையில் 185 ரோட்டவேட்டர்கள், மண் கட்டிகளை உடைத்து, நிலத்தின் கடினத் தன்மையினை குறைத்து, உழவுக்கு பயன்தரக்கூடிய 120 ஸ்பிரிங் வகை ஒன்பது வரிசை கொத்து கலப்பைகள், 65 ரிஜிட் வகை ஒன்பது வரிசை கொத்துக் கலப்பைகள் மற்றும் சேற்று உழவிற்கு 120 கேஜ் வீல்கள் ஆகியவற்றை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைமூலம் பெறப்பட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியுதவியுடன் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.1.6. வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் இருப்பினை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறைக்கு மேற்குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் கொள்முதல் செய்யப்பட்ட பிறகு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2021-2022-இல் குறிப்பிட்டுள்ளபடி, தற்பொழுது வருவாய் கோட்ட அளவில் செயலாக்கத்தில் உள்ள வேளாண் இயந்திரங்களை, விவசாயிகள் பயன்பெறும் வகையில், வட்டார அளவில் முதற்கட்டமாக டெல்டா மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

3.1.7. புதிய வேளாண் இயந்திரங்கள், நடமாடும் பழுது நீக்கும் வாகனம் (Mobile Servicing Unit)

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை நடப்பாண்டில் மேலும் வலுப்படுத்துவதற்காகவும், நெல் அறுவடை காலங்களில் அறுவடை தங்குதடையின்றி நடைபெறவும், 2022-2023 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, பத்து நெல் அறுவடை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களையும், கருவிகளையும் பணித் தளத்திலேயே பழுதுபார்த்திட ஏதுவாக மூன்று நடமாடும் பழுது நீக்கும் வாகனங்கள் அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.1.8. வேளாண் இயந்திரங்களுக்கான பராமரிப்புக் கூடங்கள்

விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்ற வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் மற்றும்

கருவிகளை பாதுகாப்பாக வைக்கவேண்டிய அவசியத்தினை கருத்திற்கொண்டு, பழுதினை உடனுக்குடன் நீக்கி முழுமையான பயன்பாட்டினை உறுதிசெய்யவும், வேளாண் இயந்திர பராமரிப்புக் கூடம் ஒவ்வொன்றும் தலா ரூ.20 இலட்சம் என்ற மதிப்பீட்டில் மொத்தம் 35 வேளாண் இயந்திர பராமரிப்புக் கூடங்கள் அமைக்கும் பணிகள் ஏழு கோடி ரூபாய் செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேலும், 2022-23 ஆம் நிதியாண்டில் பத்து வேளாண் இயந்திரங்களுக்கான பராமரிப்புக் கூடங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

3.2. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

வேளாண்மையில் இயந்திர சக்தியின் பயன்பாட்டினை ஊக்குவித்து, அதிகரித்து வரும் வேளாண் பணியாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட, வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், பல்வேறு வகையான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல் முதலான திட்டங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசின் 60 சதவீத பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளில், விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான இயந்திரங்களின் மாடல்களை தேர்வு செய்து பயன் பெறலாம்.

3.2.1. தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல்

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் தனிப்பட்ட விவசாயிகள் டிராக்டர், பவர் டில்லர், சுழல் கலப்பை, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம், நிலக்கடலை தோண்டும் கருவி, கரும்பு தோகை உரிக்கும் கருவி, அறுவடை இயந்திரம் போன்ற இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியினர் மற்றும் பெண்

2022 ஏப்ரல் 13]

*விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம், நேரடி மானியம் வழங்குதல் முறை (*Direct Benefit Transfer-DBT*)-யின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.*

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் ஆண்டில் 1,598 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.25.87 கோடி மானியத்தில் வழங்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுதானிய பயிர்கள் மற்றும் பயறு வகைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, 2022-2023 ஆம் ஆண்டில் விவசாயிகள் பயன் பெறும் வகையில் 6,357 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

இயந்திரங்கள் வாங்க இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், வேளாண் இயந்திரப்பணிகளுக்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு 800 ரூபாய் வீதம் அதிகபட்சமாக ஐந்து ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும். இத்திட்டம் 62,000 ஏக்கரில் உள்ள சுமார் 37,000 சிறு, குறு விவசாயிகள் பயனடையும் வகையில் பத்து கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

3.2.2. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்

*நவீன வேளாண் தொழில்நுட்பங்களான "ட்ரோன்"(*Drone*) போன்றவற்றை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தி வேளாண்மையை மேம்படுத்திடவும், வேளாண் பணிகளுக்கு தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், உயர் தொழில்நுட்பம் மற்றும் அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்கி பராமரிக்க இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு உதவிடவும், கிராமப்புற தொழில் முனைவோர்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்மூலம் வட்டார அளவிலும், கிராம அளவிலும் மற்றும் கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படுகிறது. இம்மையங்கள்மூலம், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.*

வட்டார அளவிலான வாடகை மையங்களை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு 40 சதவீத மானிய அடிப்படையில், அதிகபட்சமாக ரூபாய் பத்து இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இத்தகைய வட்டார அளவிலான 36 வாடகை

[2022 ஏப்ரல் 13

மையங்கள் 2021-22 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம அளவில் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூபாய் பத்து இலட்சம் திட்ட மதிப்பில் அமைக்க, ஒரு மையத்திற்கு 80 சதவீத மானியத்தின்படி அதிகபட்சம் ரூபாய் எட்டு இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் உள்ள விவசாய தொகுப்புகள் அடங்கிய கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இம்மையங்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி ரூ.14.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 180 வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும், கிரிஷி கல்யாண் அபியான் (KKA III) திட்டத்தின்கீழ் 11 கிராம அளவிலான வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்குதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர மற்றும் கருவிகள் வாடகை மையம் தொழில்முனைவோர்கள்மூலம் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு, 40 சதவீத அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.60 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில், 15 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் பெரம்பலூர், கடலூர், அரியலூர், திருச்சி, தேனி, செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சிவகங்கை, நாமக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

3.2.3. வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை பழுது நீக்கி பராமரிக்கும் மையங்கள்

விவசாயிகளின் விளைநிலங்களிலேயே வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகளை கால விரயமின்றி பழுது நீக்கி பராமரித்து, வேளாண் பணிகளை குறித்த காலத்தே செய்திடவும், கிராமப்புற இளைஞர்கள், தொழில்முனைவோர்கள், விவசாய குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு, எட்டு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால்

2022 ஏப்ரல் 13]

இயங்கும் பம்பு செட்டுகள் பழுது நீக்கி பராமரிக்கும் மையம் அமைப்பதற்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக நான்கு இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

கடந்த 2021-22 ஆம் ஆண்டில் 19 மையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, எட்டு மையங்கள் அமைக்க மாவட்ட அளவிலான செயற்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, இதுவரை இரண்டு மையங்கள் அமைக்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, வேளாண் பொறியியல், இயந்திரவியல் பொறியியல், தானியங்கி பொறியியல் போன்றவற்றில் பட்டயம் அல்லது பட்டம் பெற்ற இளைஞர்கள்மூலம் விவசாயிகளுக்கு உதவும் வகையில், 25 வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் பழுது நீக்கி பராமரிக்கும் மையங்கள் 50 சதவீத மானியத்துடன் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளன.

3.2.4. ஊரக இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

விவசாயிகள் தங்கள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகளை கிராமப்புற பகுதிகளிலேயே பழுதுநீக்கி, பராமரிப்பதற்கு தேவையான திறன் வாய்ந்த நபர்களை உருவாக்கிடவும், ஊரக வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகள் கையாளுதல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் குறித்தான பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி மையங்களில் மொத்தம் 600 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கிட ஒப்புதல் பெறப்பட்டு பயிற்சிகள் துவக்கப்படவுள்ளன.

[2022 ஏப்ரல் 13

2022-2023 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவாறு, மேலும் 750 ஊரக வேலையில்லா இளைஞர்கள் மற்றும் வேளாண் இயந்திர வாடகை மைய உரிமையாளர்களும் பயன் பெறும் வகையில் ரூ.63.48 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

3.3. வேளாண் விளைபொருள் மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல்

விவசாயிகள் தாங்கள் விளைவித்த சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் இதர வேளாண் விளைபொருட்களின் சேமிப்பு கால அளவினை அதிகரித்து, அவற்றின் மதிப்பைக் கூட்டிட, வேளாண் விளைபொருட்கள் மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை மானியத்தில் வாங்கிட தனிப்பட்ட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவி குழுக்கள், விவசாய பயன்பாட்டு குழுக்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு 40 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2021-22 ஆம் ஆண்டில் 208 மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, 292 மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் 40 சதவீத மானியத்தில் ஐந்து கோடி ரூபாய் செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட உள்ளன.

3.4. சூரிய சக்திமூலம் வேளாண்மை

பசுமை ஆற்றலான சூரிய சக்தியை வேளாண்மையில் பயன்படுத்திட பல்வேறு திட்டங்கள் விவசாயிகளுக்கு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மின் இணைப்பு இல்லாத விவசாயிகளுக்கு பாசன நீரை இறைப்பதற்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல், சூரிய சக்தியை பயன்படுத்தி வேளாண் விளைபொருட்களை இயற்கை தன்மை மாறாமல் உலரவைப்பதற்கு சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல் போன்ற தொழில்நுட்பங்களை வேளாண்மைப் பொறியியல் துறை பிரபலப்படுத்தி விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

2022 ஏப்ரல் 13]

3.4.1. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் கடந்த 2021-22 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 171 விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்தில் ரூ.3.8 கோடி மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021-2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின்கீழ் மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 10 குதிரைத்திறன் வரையிலான 5,000 பம்புசெட்டுகள் 70 சதவீத மானிய உதவியுடன் விவசாயிகளுக்கு அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் தவணையாக 2,000 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்தில் அமைத்திட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 850 பயனாளிகளுக்கு பணியாணைகள் வழங்கப்பட்டு விவசாயிகளின் நிலங்களில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022-2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு 10 குதிரைத்திறன் வரையிலான 3,000 மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் 70 சதவீத மானியத்தில் ரூ.65.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட உள்ளன.

3.4.2. சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல்

இயற்கையில் அபரிமிதமாக கிடைக்கக்கூடிய சூரிய ஆற்றலினைக் கொண்டு, விவசாயிகள், விவசாய குழுக்கள்மூலம் பசுமை குடில் வகையிலான 400 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரையிலான சூரிய கூடார உலர்த்திகள் அமைத்து, எண்ணெய்வித்துக்களான கொப்பரை தேங்காய், எள், நிலக்கடலை, பழவகைகளான வாழைப்பழம், நெல்லிக்காய், வாசனைப் பொருட்களான கிராம்பு, இஞ்சி மற்றும் மிளகாய், முருங்கை இலை, கருவேப்பிலை, மூலிகைச் செடி இலைகள் போன்ற வேளாண் விளைபொருட்களை சீரான முறையில் சுகாதாரமாக உலர்த்தி, அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்து, அதன் சேமிப்பு காலத்தை அதிகரித்து, அதிக விலைக்கு விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டிட முடிகிறது.

[2022 ஏப்ரல் 13

சூரிய கூடார உலர்த்திகள் விவசாயிகள்/விவசாய குழுக்களுக்கு 40 சதவீத மானியத்துடன் அமைக்கும் திட்டத்திற்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டங்களின்கீழ் 2021-22 ஆம் நிதியாண்டில் 90 சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022-2023 இல் அறிவித்தபடி, வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 145 சூரிய கூடார உலர்த்திகள் 40 சதவீத மானியத்தில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளன.

3.5. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

மழைநீரால் வளமிக்க மேல் மண் அடித்து செல்லப்படுவதை தடுத்திட வேளாண்மையின் ஆதாரமான மண்ணை ஆங்காங்கே நிறுத்தி, நிலங்களின் வளத்தை நிலைக்கச்செய்து வேளாண் உற்பத்தித் திறனை அதிகப்படுத்திட கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

3.5.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

வேளாண்மைத்துறையால் 1,997 கிராமங்களில் உருவாக்கப்பட்ட தொகுப்புகளுக்கு நில நீர் ஆய்வு அடிப்படையில் பாசன ஆதாரத்திற்கான ஆழ்துளைக் கிணறு அல்லது குழாய் கிணறுகளை அமைத்து மின்மோட்டார் அல்லது சோலார் பம்பு செட்டுகள் மூலம் விவசாய நிலத்திற்கு நீரினை எடுத்துச் செல்லும் நீர் விநியோக குழாய்கள் ஆகியவை ஏற்படுத்தப்படுகின்றன. இப்பணிகள் 100 சதவீத மானியத்தில் சென்னை மற்றும் உதகமண்டலம் மாவட்டம் நீங்கலாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன.

மேலும், 500 விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் உருவாக்குதல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசனக் குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றில் மொத்தமாக 1,700 இடங்களில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான இயந்திரங்களை பயன்படுத்தி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

2022 ஏப்ரல் 13]

மேற்குறிப்பிட்ட இனங்களில் உள்ள பணிகள் ரூ.210.02 கோடி மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022-2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, ரூ.270.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் 3,204 கிராமங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்துடன் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

3.5.2. நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரித்தல்

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021-2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, 1,700 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் பராமரிப்பு பணிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள அரசாணை பிறப்பிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீர்வடிப்பகுதிகளில், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IWDP), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் (IWMP) ஆகிய திட்டங்களின்கீழ் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) மூலமாக ஏற்படுத்தப்பட்ட நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளுக்கு வரும் நீரோட்டத்தை அதிகரிக்க, தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரித்திட வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை, 97 பணிகள் முடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022-2023 ஆம் ஆண்டில் அறிவித்தபடி, 1,500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் பராமரிப்புப் பணிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைமூலம் பெறப்பட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளன.

3.5.3. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி வனப்பகுதிகளின் அருகே உள்ள கிராமங்களில், சிறப்பு பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் விவசாயிகளின் தேவைகளின் அடிப்படையில், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை அணுகுமுறையில் நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள்,

வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையிலும் நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் வகையிலும் செயல்படுத்தப்படுகின்றன.

வனப்பகுதி கிராமங்களின் பழங்குடியின விவசாய நிலங்களில் 90 சதவீத மானியத்துடனும், ஆதி திராவிட விவசாய நிலங்களில் 80 சதவீத மானியத்துடனும், இதர விவசாயிகளின் நிலங்களில் 50 சதவீத மானியத்துடனும் மற்றும் சமுதாய நிலங்களில் 100 சதவீத மானியத்துடனும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தில் 2021-22 ஆம் நிதியாண்டில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகளான, கம்பிவலை தடுப்பணைகள், தடுப்பணைகள், கம்பிவலை தடுப்புச் சுவர் அமைத்தல், ஓடை பராமரிப்புப் பணிகள் மற்றும் நிலச்சரிவு தடுப்புப் பணிகள் ஆகியவை ரூ.20 கோடி மதிப்பில் மாநில அரசின் நிதியுதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

3.5.4. நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்

வேளாண்மை, மின் உற்பத்தி, குடிநீர் உள்ளிட்ட பல்நோக்குடன் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கங்களுக்குள் மழை நீரினால் அடித்துச் செல்லப்படும் வண்டல் மண் படிந்து அதன் கொள்திறன் குறைவதை தடுக்கவும், மண்ணினை அந்தந்த இடத்திலேயே நிறுத்தி, நிலத்தின் தரம் மற்றும் ஈரம் நிலைநிறுத்தப்படவும் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம் தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2013-14 ஆம் ஆண்டு முதல் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 100 சதவீத அரசின் நிதி உதவியுடனும், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் கற்சுவர் அமைக்கும் பணிகள் விவசாயிகளின்

2022 ஏப்ரல் 13]

நிலங்களில் 50 சதவீத விவசாயிகள் பங்களிப்போடும் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில் 2021-22 ஆம் ஆண்டில் 41 கட்டுமானப் பணிகள், 12 எக்டர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் ஆகியவை ஒன்றிய அரசின் 60 சதவீத பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

3.5.5. நீர்வள நவீனமயமாக்குதல் - பண்ணைக்குட்டைகள் அமைத்தல்

தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டம், பல்துறைகளின் ஒருங்கிணைப்போடு 43 உபவடி நிலப் பகுதிகளில் 2017-18 ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் 1,899 பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகள் செயல்படுத்திட ரூ.15.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் ஆண்டில் 83 பண்ணைக் குட்டைகள் ரூ.61.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.5.6. வளம் குன்றிய நிலங்களை சீர் செய்தல்

தமிழகத்தில் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தியமையால் நிலப்பரப்பில் களர் மற்றும் உவர் கொண்ட வளம் குன்றிய மண் காணப்படுகிறது. எனவே, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாக வளம் குன்றிய நிலங்களை சீர் செய்தல் என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், புதிய நீர் சேகரிப்பு கட்டுமானங்களை உருவாக்குதல், கடல் நீர் உட்புகாதவாறு தடுப்பணைகள் கட்டுதல், வடிகால்கள் சீரமைத்தல், ஆழ உழுதல், பசுந்தாள் உரமிட்டு சுழற்கலப்பைமூலம் நிலத்தில் சேர்த்தல், இடு பொருட்கள் வழங்குதல், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் ஒன்றிய அரசின் 60 சதவீத

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில், ரூ.3.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 573 எக்டர் நிலப்பரப்பில் உவர் நில சீர்திருத்தப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

3.6. நீர் மேலாண்மை

நிலத்தடி நீர் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் இருப்பும் வெகுவாகக் குறைந்து வருவதால், கிடைக்கக்கூடிய நீரையும் செம்மையாக பயன்படுத்திட நீர் மேலாண்மை மிகவும் அத்தியாவசியமாகிறது. நீரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, நீர் பயன்பாட்டினை செம்மையாக நிர்வகிக்கும் பொருட்டு, நீர் மேலாண்மை செயல்பாடுகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.6.1. டெல்டா மாவட்டங்களில் “சி”, “டி” பிரிவு வாய்க்கால்களை தூர்வாருதல்

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் உள்ள வாய்க்கால்களில் நீரை சீராக கொண்டு செல்வதற்கும், சரியான நேரத்தில் மற்றும் தேவையான அளவில் நீர் கடைமடையை அடையவும் “சி”, “டி” பிரிவு வாய்க்கால்களை தூர்வாருவது மிக அவசியம்.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022-2023 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டவாறு, காவேரி மற்றும் வெண்ணாறு வடிநிலப்பகுதியில் உள்ள 1,580 கிலோ மீட்டர் “சி”, “டி” வாய்க்கால்களை தூர்வாரும் பணிகள் இரண்டு இலட்சம் ஏக்கர் பயன்பெறும் வகையில் ஐந்து கோடி ரூபாய் மாநில அரசு நிதி உதவியுடன் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளன.

3.6.2. மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள்

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021-2022-ல் குறிப்பிட்டுள்ளபடி, மூன்று ஏக்கர் வரை நிலம் உள்ள, புதிய மின்மோட்டார் வாங்க வசதி இல்லாத ஏற்கெனவே மின்வசதி

2022 ஏப்ரல் 13]

கொண்ட சிறு, குறு விவசாயிகள் பாசன நீரை இறைத்திட உதவும் வகையில், மானியத்தில் புதிய திறன்மிகு மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தவும், 1,000 விவசாயிகள் பயனடையும் வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் மாநில அரசின் நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதுவரை, 136 பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022-2023இல் அறிவிக்கப்பட்டபடி, ஒரு மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.10,000/- அல்லது மின்மோட்டார் பம்புசெட் வாங்கிட ஆகும் மொத்த தொகையில் 50 சதவீதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் 5,000 விவசாயிகளுக்கு மொத்தம் ஐந்து கோடி ரூபாய் மானியம் வழங்கிடும் வகையில் பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டம்-ஒரு துளி நீரில் அதிக பயிர்-இதர செயல்பாடுகள்-துணைநிலை நீர் மேலாண்மை செயல்பாடுகள் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

3.6.3. கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகள் வழங்குதல்

விவசாயிகளின் பாசன கிணறுகளில் உள்ள நீர் வீணாவதை குறைக்கும் பொருட்டும் பாசன கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள பம்புசெட்டுகளை இரவு நேரங்களில் நேரில் சென்று இயக்கும் பொழுது விவசாயிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளான பாம்புக்கடி, காயமடைதல் ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, பம்புசெட்டுகளை தொலைவில் இருந்து கைபேசியின்மூலம் இயக்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகள் 3,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு கருவிக்கு 50 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.5,000/- மானியத்தில் ரூ.1.5 கோடி செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட உள்ளன.

3.7. உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையானது வேளாண்மை - உழவர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சகோதரத்

[2022 ஏப்ரல் 13

துறைகளான வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகியவற்றின் உட்கட்டமைப்புப் பணிகளுக்கு தனது பங்களிப்பாக தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் உதவிகளைச் செய்வதுடன் அத்துறைகளின் உட்கட்டமைப்புப் பணிகள், அரசு விதைப் பண்ணைகள், மாநில தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்களில் மேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்துவதுடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் உட்கட்டமைப்புப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

வேளாண்மைத் துறைக்காக 14 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், 225 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், மதுரை மாவட்டம், விநாயகபுரத்திலுள்ள நீர் மேலாண்மை பயிற்சி நிலைய அலுவலகக் கட்டடம் ஆகியவை கட்டும் பணிகள் நபார்டு மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களின்கீழ் ரூ.122 கோடி மதிப்பீட்டில் கடந்த 2021-22 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறைக்காக 2021-22 ஆம் ஆண்டில் நான்கு வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் ஒவ்வொன்றும் தலா ரூ.50 இலட்சம் வீதம் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

3.8. நிர்வாக அமைப்பு

வேளாண்மைப் பொறியியல் துறையின் பல்வேறு விவசாய நலத்திட்டங்களை செயல்படுத்திட தலைமையிடத்தில் ஒரு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), ஒரு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) -நதிப்பள்ளத்தாக்கு திட்டம், மூன்று கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் இரண்டு செயற்பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மண்டல அளவில் 11 கண்காணிப்புப் பொறியாளர்களும், மாவட்ட அளவில் 31 செயற்பொறியாளர்களும், சிறப்புத் திட்டங்களுக்காக 5 செயற்பொறியாளர்களும், வருவாய் கோட்ட அளவிலும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு 125 உதவி செயற் பொறியாளர்களும், 850 உதவிப் பொறியாளர்கள்/இளநிலைப் பொறியாளர்களும், 1,120 அமைச்சுப் பணியாளர்களும், 1,866

2022 ஏப்ரல் 13]

களப் பணியாளர்களும் வேளாண்மைப் பொறியியல் துறையில் பணியாற்றிவருகின்றனர்.

அட்டவணை 3.1. பணியாளர்களின் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	எண்கள்
1	தலைமைப்பொறியாளர் (வே.பொ)	1
2	தலைமைப்பொறியாளர் (வே.பொ), நபதி	1
3	கண்காணிப்புப் பொறியாளர் (வே. பொ)	14
4	செயற்பொறியாளர் (வே.பொ)	38
5	உதவி செயற்பொறியாளர் (வே.பொ)	125
6	உதவிப் பொறியாளர் (வே.பொ)/ இளநிலைப் பொறியாளர்(வே.பொ)	850
7	அமைச்சுப் பணியாளர்கள்	1,120
8	களப் பணியாளர்கள்	1,866
	மொத்தம்	4,015

வருவாய் கோட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை செயல்படுத்துவது உதவி செயற் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும், மாவட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் அந்தந்த மாவட்ட செயற்பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும், மண்டல அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை தொழில்நுட்பத்துடன் நிர்வகிக்கும் பொறுப்பு கண்காணிப்புப் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

[2022 ஏப்ரல் 13

4. வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

மாநிலத்தின் நிலம், நீர் மற்றும் மனித வள மேம்பாட்டிற்காக வேளாண் உற்பத்தித் திறனைத் தொடர்ந்து அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைப்புடன் நிறைவேற்றி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 18 உறுப்புக் கல்லூரிகள்மூலம் 12 இளநிலைப் படிப்புகள், 35 முதுநிலை மற்றும் 30 முனைவர் பட்ட படிப்புகளை வழங்குகின்றது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 29 இணைப்புக் (தனியார்) கல்லூரிகளும் இயங்கி வருகின்றன.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் அண்மையில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில் தமிழ்வழி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை உருவாக்க கட்டமைக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்புத் திட்டங்கள்மூலம் இப்பல்கலைக்கழகம் விவசாயத்தில் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வியை வழங்குகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் முன்னிலைப் பெற்று, அதன்மூலம் பயிர் இரகங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் போன்றவற்றை விவசாய சமூகத்திற்கு பயனளிக்கும் வண்ணம் வெளியிட்டு வருகின்றது.

விவசாயிகளிடையே புதிய வகை பயிர்களை பிரபலப்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. மேலும், புதிய முனைப்புகளில் தொலையுணர்வு திறன் தொழில்நுட்பங்கள், வேளாண் தொழில்முனைவை ஊக்குவித்தல் மற்றும் நானோ தொழில்நுட்பங்கள் பயன்பாடு ஆகியவை அடங்கும். ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்களின்மூலம் வரும் ஆண்டுகளில் "ட்ரோனை" அறிமுகப்படுத்தி, விவசாயத்தில் ஆள் பற்றாக்குறையினை தீர்க்கவும், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபாட்டிக்ஸ் போன்ற கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தவும் இப்பல்கலைக்கழகம் முனைப்புடன் செயலாற்றி வருகின்றது.

2022 ஏப்ரல் 13]

4.1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிதி ஒதுக்கீடு

வேளாண்மையில் மேம்பட்ட உற்பத்தியை அடைவதற்கும் விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு உறுப்புக் கல்லூரிகள், ஆராய்ச்சி மற்றும் அறிவியல் நிலையங்கள்மூலம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய கூறுகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வருடாந்திர நிதியாக ரூ. 530.96 கோடியில் செயல்பட்டு வருகின்றது.

4.2. கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு கல்லூரிகளுக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியின்கீழ் 19 பணிகளுக்காக 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.58.68 கோடி அனுமதிக்கப்பட்டது. ஆறு வளாகங்களில் அதாவது வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (மேட்டுப்பாளையம்), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (திருச்சிராப்பள்ளி), தோட்டக்கலைக் கல்வி நிறுவனம் (பேச்சிப்பாறை), தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் (ஊட்டி), திருச்சிராப்பள்ளி மற்றும் வம்பன் வேளாண்மைக் கல்வி நிறுவனங்கள் ஆகிய கல்வி வளாகங்களில் உடற்கல்வி பாடத்திற்கான கட்டமைப்பு வசதிகள், விரிவுரை அரங்கம், மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள், படிப்பு மையம், பயிற்சி விடுதி, நிர்வாக அலுவலகம், வளாகச் சுவர்கள் போன்றவற்றை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 19 பணிகளில் 15 பணிகள் முடிக்கப்பட்டு கட்டடங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மீதமுள்ள நான்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பாரம்பரியக் கட்டடத்தைப் பாதுகாத்தல், மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு ரூ.4.2 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.1.6 கோடி விடுவிக்கப்பட்டது.

உயிர் தொழில்நுட்ப சிறப்பு மையம் நிறுவுவதற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் பத்தாண்டு திட்ட மொத்த ஒதுக்கீடாக ரூ.430 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முதல் ஆண்டு நிதியாக ரூ.10 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு முதல் தவணையாக 2020-21 ஆம்

[2022 ஏப்ரல் 13

ஆண்டிற்கு ரூ.5.7 கோடி விடுவிக்கப்பட்டது. 2021-22 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் தவணையாக ரூ.4.3 கோடி விடுவிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூரில் புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம்,கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு மற்றும் கரூர் மாவட்டத்தில் என மூன்று புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் அமைக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கல்லூரி ஒன்றிற்கு தலா இரண்டு கோடி ரூபாய் நிதி அளிக்கப்பட்டுள்ளது.

4.3. வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்பொழுது 12 இளமறிவியல், 35 முதுநிலை மற்றும் 30 முனைவர் பட்டப் படிப்புகளை தனது உறுப்புக் கல்லூரிகள் வாயிலாக வழங்கி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நான்கு உறுப்பு பட்டயப்படிப்பு நிறுவனங்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப்படிப்பினை வழங்கி வருகின்றன.

இளநிலை பட்டப்படிப்பிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 2011-12 ஆம் ஆண்டில் 9,652 ஆக இருந்தது 2021-22 ஆம் ஆண்டில் 40,585 ஆக பன்மடங்கு அதிகரித்துள்ளது.

அட்டவணை: 4.1. மாணவர்கள் சேர்க்கை மற்றும் தேர்ச்சி (2021-22)

படிப்பு விவரம்	சேர்க்கை	தேர்ச்சி
இளநிலை	நடைபெற்று வருகிறது	2,370
முதுநிலை	398	477*
முனைவர்	166	117
பட்டயப்படிப்பு	நடைபெற்று வருகிறது	371

*முந்தைய கல்வியாண்டுகளில் தேர்ச்சி பெறாமல் தற்போது தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உள்பட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

4.4. புதிய முனைப்புகள்

பயிர் பரப்பு, பயிர் நிலை, மகசூல் மற்றும் பண்ணை அளவில் சேத மதிப்பீடு, நிலப் பதிவேடுகளை கணினிமயமாக்குதல், தாவர பாதுகாப்பு இரசாயனங்கள் (பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக் கொல்லிகள், களைக்கொல்லிகள்), ஊட்டச் சத்துக்கள், பயிர் ஊக்கிகள் மற்றும் உயிர் உரங்களை ட்ரோன்மூலம் தெளித்தல் உள்ளிட்ட செயல்பாடுகளுக்கு கிசான் ட்ரோன்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல். ட்ரோன் உபயோகம் குறித்த நெறிமுறைகளை வகுக்க டிரோன் குழுவை உருவாக்கி, முக்கிய பயிர்களில் ட்ரோன் உபயோகத்தை செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை - உழவர் நலத் துறைமூலம் அறுபது ட்ரோன்களை வாங்குவதற்கும், 14,400 எக்டரில் ட்ரோன் தெளிப்பு செயல்பாட்டிற்கும் ரூ.10.32 கோடி செலவில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பனை மரத்தின் மரபியல் வளங்களை சேகரித்தல், அதிக மகசூல் தரும் பனை வகைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நாற்றங்கால் நுட்பங்கள்மூலம் பனை ஆராய்ச்சியை மேம்படுத்த கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, பனை பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டங்கள் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மஞ்சள் ஆராய்ச்சி நிலையத்தில் மஞ்சள் தொடர்பான அனைத்து ஆராய்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பெயரில் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்தப்பட்ட கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் நிலையான இயற்கை வேளாண்மைத் துறையில் இயற்கை வேளாண்மைக்கான ஆராய்ச்சி மற்றும் நடைமுறைகளை நெறிமுறைப்படுத்த கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

[2022 ஏப்ரல் 13

4.5. மாணவர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனை

மாணவர் நல மையம், மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள் மற்றும் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவற்றை நடத்தி ஆற்றல் மிக்க மாணவர்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

மாணவர் நல மையம் வாயிலாக 2021-22 ஆம் ஆண்டில் மொத்தம் 212 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவற்றில் வேளாண் தொழில் நிறுவனங்கள் (36), உணவு நிறுவனங்கள் (39), அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் (128), நிதி நிறுவனங்கள் (7) மற்றும் இதர நிறுவனங்கள் (2) ஆகும். மாணவர்களின் தனித்திறனையும் கருத்துப் பரிமாற்ற திறனையும் மேம்படுத்தும் விதத்தில் அதிநவீன ஆய்வகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

4.6. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு முழுவதும் 18 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 39 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆய்வுகளுக்குத் தேவையான நிதி மாநில அரசு, சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகத்தின் வாயிலாக பெறப்படுகின்றது.

4.6.1. வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த 2021-22 ஆம் ஆண்டில் பின்வரும் 17 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது:

1. நெல் கோ 55

குறுகிய கால இரகம் (115 நாட்கள்); அதி விளைச்சல் இரகம், சராசரி தானிய விளைச்சலாக எக்டருக்கு 6,050 கிலோ தரவல்லது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (66 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (62 சதவீதம்) தரவல்லது; தமிழ்நாட்டில் சொர்ணவாரி, கார், குறுவை, நவரை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது.

2022 ஏப்ரல் 13]

2. நெல் ஏடீடி 57

குறுகிய கால இரகம் (115 நாட்கள்); அதி விளைச்சல் இரகம், சராசரி தானிய விளைச்சலாக எக்டருக்கு 6,500 கிலோ தரவல்லது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (69 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (60 சதவீதம்) தரவல்லது; தமிழ்நாட்டில் சொர்ணவாரி, கார், குறுவை, நவரை மற்றும் கோடை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது.

3. நெல் டிகேஎம் 15

குறுகிய கால வறட்சியைத் தாங்கி வளரும் இரகம் (115-120 நாட்கள்); சராசரியாக எக்டருக்கு 4,200 கிலோ மகசூல் தரக்கூடியது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (68 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (63 சதவீதம்) தரவல்லது; நேரடி நெல் விதைப்பிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விதைக்க ஏற்ற இரகமாகும்.

4. நெல் டிஆர்ஒய் 5

குறுகிய கால இரகம் (110 – 115 நாட்கள்); சராசரியாக எக்டருக்கு 5,100 கிலோ மகசூல் தரக்கூடியது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (64 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (54 சதவீதம்) தரவல்லது; உவர் நிலங்களுக்கு ஏற்ற இரகமாகும்; குறுவை, பின் தாளடி மற்றும் நவரை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது.

5. உளுந்து ஏடீடி 7

ஏடீடி 7 என்ற புதிய உளுந்து இரகமானது ஏடீடி 3 இரகத்திலிருந்து மரபு உருமாற்றத்தில் பெறப்பட்டது; 65-70 நாட்கள் வயது கொண்டது; அதிகபட்ச தானிய விளைச்சலாக எக்டருக்கு 724 கிலோ கொடுக்கவல்லது. நெல் தரிசுக்கு உகந்த இரகம்.

6. பச்சைபயறு விபிஎன் 5

குறுகிய கால இரகம் (70-75 நாட்கள்) சராசரியாக எக்டருக்கு 870 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டுள்ளது; அனைத்து பருவங்களிலும் பயிரிட உகந்தது.

7. நிலக்கடலை விஆர்ஐ 9

குறுகிய கால (115 நாட்கள்) அடர் கொத்து இரகம்; சராசரியாக எக்டருக்கு 2,500 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது; அதிக விதை நம்பகத்தன்மையுடன் 47% எண்ணெய் சத்து கொண்டுள்ளது; பயிர் முதிர்ந்த பருவத்தில் முதிர்ந்த காய்கள் செடியிலேயே முளைக்கும் பண்பு அற்றது; சித்திரை, ஆடி, ஐப்பசி போன்ற பருவங்களில் மழைக்கால பயிராகவும் மார்கழிப்பட்டத்தில் இறவை பயிராகவும் பயிரிட ஏற்ற இரகமாகும்.

8. நிலக்கடலை விஆர்ஐ 10

குறுகிய கால (95 நாட்கள்) அடர் கொத்து இரகம் சராசரியாக எக்டருக்கு 2,530 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது; அதிக விதை நம்பகத்தன்மையுடன் 48% எண்ணெய் சத்து கொண்டுள்ளது; பயிர் முதிர்ந்த பருவத்தில் முதிர்ந்த காய்கள் செடியிலேயே முளைக்கும் பண்பு அற்றது; சித்திரை, ஆடி, ஐப்பசி போன்ற பருவங்களில் மழைக்கால பயிராகவும் மார்கழிப்பட்டத்தில் இறவை பயிராகவும் பயிரிட ஏற்ற இரகமாகும்.

9. கரும்பு கோஜி 7

இடைக்காலப் பருவ இரகம் (12 மாதங்கள்); சராசரியாக எக்டருக்கு 134 டன் கரும்பு மகசூல் நல்ல மண் வள தன்மையிலும் மற்றும் எக்டருக்கு 126 டன் கரும்பு மகசூல் உவர் நிலத்திலும் கொடுக்கவல்லது. சிகப்பு அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

10. வாழை கோ 3

இதன் வயது 13 மாதங்கள்; சராசரியாக வாழைக்குலையின் எடை 21 கிலோ கொண்டிருக்கும். வாழைக்குலையில் 10-11 சீப்புகளும் ஒரு சீப்பில் 16 பழங்களும் கொண்டிருக்கும்; பழம் வெளிர் நிற மஞ்சள் நிறத்தில் சாம்பல் நிற படிவம் இல்லாமல் காணப்படும்; வேர் நுண்புழு தாக்குதலை தாங்கி வளரும் தன்மை கொண்டது.

2022 ஏப்ரல் 13]

11. பலா பிகேஎம் 1

இது தாய் மரபு வழித் தேர்வால் உருவாக்கப்பட்டது; வருடத்திற்கு ஒரு மரம் 2.3 டன் பழங்கள் கொடுக்கவல்லது; ஒரு பழத்தின் எடை சராசரியாக 21 கிலோ; ஒரு மரத்திற்கு 106 பழங்கள் கிடைக்கும்; எக்டருக்கு 156 மரங்கள் நடலாம்; வருடத்தில் மார்ச் - மே மற்றும் நவம்பர் – டிசம்பர் என இரண்டு அறுவடைகள் செய்யலாம்; வெப்ப மண்டல மற்றும் மிதமான வெப்ப மண்டல பகுதிகளில் பயிர் செய்ய ஏற்றது.

12. நாவல் பிகேஎம் 1

மரத்தின் கிளைகள்கீழ்சாய்ந்த வண்ணம் காணப்படும்; சராசரியாக ஒரு மரமானது ஓராண்டிற்கு 82 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; பழங்கள் பெரிதாகவும் ஒரு பழம் 17 கிராம் எடை கொண்டதாகவும், மருத்துவ குணங்களான ஆண்டி ஆக்சிடண்ட் மற்றும் முக்கிய தாதுக்களான பொட்டாசியம், இரும்பு மற்றும் வைட்டமின் சி ஆகியவற்றை கொண்டதாகவும் இருக்கும். வறண்ட நிலங்களிலும் பயன்படாத நிலங்களிலும் பயிர் செய்ய ஏற்ற பழவகை மரமாகும்.

13. கத்தரி எம்டியூ 2

பயிர் காலம் 140 நாட்கள்; சராசரியாக எக்டருக்கு 31 டன் மகசூல் கொடுக்கவல்லது; தண்டு துளைப்பான் மற்றும் பூஞ்சாண நோய்க்கு மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது; ஜூன்- செப்டம்பர், மற்றும் நவம்பர் – பிப்ரவரி போன்ற மாதங்களில் பயிரிட ஏற்றது.

14. அவரை கோ 15

பந்தல் வகையைச் சார்ந்த இரகம்; செடிக்கு 14 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; நட்ட 70-வது நாள் முதல் காய்கள் காய்க்க தொடங்கி, 240 நாட்கள் வரை காய்க்கும்; சுமாராக 25 அறுவடைகள் செய்யலாம்.

15. சேனைக் கிழங்கு கோ 1

பயிர் காலம் 240 நாட்கள்; சராசரியாக கிழங்கு மகசூல் எக்டருக்கு 50 டன் கொடுக்கவல்லது; பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடவு செய்யலாம்; சேலம், நாமக்கல், ஈரோடு, அரியலூர், திருப்பூர், திண்டுக்கல், கடலூர், தேனி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு ஏற்றது.

[*2022 ஏப்ரல் 13*

16. மஞ்சள் பிஎஸ்ஆர் 3

பயிர் காலம் 240 - 250 நாட்கள்; சராசரியாக மஞ்சள் மகசூல் எக்டருக்கு 51 டன் கொடுக்கவல்லது; மே முதல் ஜூன் மாதங்களில் நடவு செய்யலாம். இதில் கர்குமின் பொருள் 4.8 சதவீதம் உள்ளது; இலைப்புள்ளி நோய் மற்றும் இலை கருகல் நோய் போன்றவற்றுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது; கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சாகுபடிக்கு ஏற்றது.

17. கொத்தமல்லி கோ 5

35 – 40 நாட்கள் முதல் பச்சை இலை அறுவடை செய்யலாம்; எக்டருக்கு 4.7 டன்கள் என்ற அளவில் மகசூல் கிடைக்கும்; லினாலூள் என்ற வேதிப் பொருள் சற்று அதிகமாக உள்ளது; கரீப் மற்றும் ராபி பருவங்களில் பயிர் செய்ய ஏற்றது.

4.6.2. ஆராய்ச்சித் திட்டங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்முனை ஆராய்ச்சித் திட்டங்களை பல்வேறு நிதி வழங்கும் நிறுவனங்கள் வாயிலாக பெறப்பட்ட நிதியினை கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

4.6.2.1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில் பின்வரும் ஐந்து திட்டங்களை ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் அரசு வழங்கியுள்ளது:

ஏற்காட்டில் பல அடுக்கு அமைப்பில் மலை சார்ந்த பயிர்களை ஊக்குவிப்பதன்மூலம் சேர்வராயன்மலை விவசாயிகளின் வருமானத்தை பெருக்குதல் (ரூ. 2 கோடி)

மாப்பிள்ளை சம்பா போன்ற மேம்படுத்தப்பட்ட நெல் வகைகளை உருவாக்குவதற்கும், புதிய இரகங்களை விரைவாக அறிமுகப்படுத்துவதற்கும் வேக இனப்பெருக்கம் வசதி அறிமுகப்படுத்துதல் (ரூ.1.9 கோடி)

விவசாயிகள் பங்கேற்பு விதை உற்பத்திமூலம் பயறு மற்றும் எண்ணெய்வித்துக்களில் விதை மாற்று விகிதத்தை அதிகரிப்பது (ரூ.1.34 கோடி).

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டின் வறண்ட பகுதிகளில் சோதனை அடிப்படையில் ப்ரோசோபிஸ் சினேரியா உற்பத்தி மற்றும் பிரபலப்படுத்துதல் (ரூ. 20 இலட்சம்).

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முண்டுமிளகாய் உற்பத்தித் தொழில்நுட்பங்களை மறுவரையறை செய்தல் மற்றும் தொழில்நுட்பப் பரவல் தத்தெடுப்புமூலம் அதன் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் (ரூ.12 இலட்சம்)

4.6.2.2. தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீன மயமாக்கும் திட்டம் (TN- IAMP)

*உலக வங்கியின் நிதியுதவியில் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீன மயமாக்கும் திட்டம்மூலம் (*TN-IAMP*) 40 உபவடி நீர்ப்படுகைப் பகுதிகளுக்கான சீரான காலநிலை மற்றும் சந்தை சார்ந்த வேளாண்மையை ஊக்குவிக்க, 2017-24 ஆம் ஆண்டுகளுக்காக ரூ. 87.46 கோடி அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.*

4.7. வேளாண் விரிவாக்கக் கல்வி

4.7.1. வேளாண்மை அறிவியல் நிலையங்கள்

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (*KVK*) வாயிலாக கடந்த 2021-22 ஆம் ஆண்டில் 189 பண்ணை வழி ஆய்வுகள், 314 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள், பயிற்சிகள், விவசாயிகள் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டன. விவசாயிகளுக்கும் விரிவாக்க செயல்பாட்டாளர்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களும், வேளாண்மை அறிவியல் நிலையங்களில் நடத்தப்படுகின்றன.*

4.7.2. கல்வி ஊடக மையம்

கல்வி ஊடக மையம் விவசாயிகளிடையே தொழில்நுட்பம் பரப்புவதற்காக 63 வீடியோ நிகழ்ச்சிகளை நடத்தியது. 2021-22 ஆம் ஆண்டில் விவசாயிகள்/பொது மக்களின் நம்பகத் தன்மையை அதிகரிக்க 51 வீடியோ நிகழ்ச்சிகள் TNAU TV YouTube *சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.*

4.7.3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 11 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு 871 நபர்களும், ஒரு வருடத்திற்கு 3.2 இலட்சம் நபர்களும் இணையதளத்தை பயன்படுத்திக்கொள்கின்றனர்.

4.7.4. வேளாண்மையில் ஆன்ட்ராய்டு செயலிகளின் பயன்பாடு

நெல், கரும்பு, கேழ்வரகு, தென்னை, வாழை ஆகிய பயிர்கள் மற்றும் கால்நடை தொழில் சார்ந்த பசு, எருமை, ஆடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய கைபேசி ஆன்ட்ராய்டு செயலிகள், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கூகுள் ப்ளே ஸ்டோர் (Google Play Store) மூலம் வழங்கப்படுகிறது. கூகுள் ப்ளே ஸ்டோரில் (Google Play Store) மொத்தம் 12 ஆன்ட்ராய்டு செயலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

4.7.5. உழவரின் வளரும் வேளாண்மை

உழவரின் வளரும் வேளாண்மை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 1975 ஆம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வரும் தமிழ் மாத இதழாகும். இந்த உழவரின் வளரும் வேளாண்மை இதழை இதுவரை 9,698 சந்தாதாரர்கள் பதிவு செய்துள்ளனர். இவ்வாண்டில் (2021-22) 1,518 ஆண்டு சந்தாதாரர்கள் மற்றும் 21 வாழ்நாள் சந்தாதாரர்கள் புதிதாக பதிவு செய்துள்ளனர்.

4.7.6. விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)

இம்மையத்தின் மூலம் விவசாயிகள் 1551 அல்லது 1800-180-1551 என்ற எண்ணில் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் தொலை பேசியில் கலந்துரையாடலாம். இம்மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. 2021-22 ஆம் ஆண்டில், மொத்தம், 1,48,367 தொலைபேசி அழைப்புகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

4.7.7. சமுதாய வானொலி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வானொலி நிலையம், விவசாயி சமுதாய அலைவரிசை 107.4. என்ற

2022 ஏப்ரல் 13]

அலைவரிசையில் 2010 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. உழவர்கள் மற்றும் பொது மக்கள் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம், இந்த அலைவரிசை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவில் சென்றடைகின்றது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10-12 மணி வரை கோயம்புத்தூர் மாவட்ட உழவர்களுக்கான வேளாண் தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. 2021-22 ஆம் ஆண்டில் இதுவரை 1,315 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

4.8. தரமான விதைகள் உற்பத்தி

கடந்த, 2021-22 ஆம் ஆண்டில், 150 டன் வல்லுநர் விதைகள், 53.01 டன் ஆதார விதைகள், 15.48 டன் சான்று விதைகள், 52.48 டன் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டன. மேலும், 12.48 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டு, 158.28 டன் வல்லுநர் விதைகள், 100 டன் ஆதார விதைகள், 9.3 டன் சான்று விதைகள், 56.38 டன் உண்மை நிலை விதைகள் மற்றும் 27 இலட்சம் நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4.9. காலநிலை ஆராய்ச்சி மையம்

தமிழ்நாடு வேளண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் வானிலை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சிக்கான மேம்பாட்டு மையமாகும். இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD), புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் உள்ள இந்த மையம், தமிழ்நாட்டில் “கிராமின் கிருஷி மௌசம் சேவா” (GKMS) என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. தொகுதி மற்றும் மாவட்ட அளவில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டின் ஏழு வேளாண் பகுதிகளை உள்ளடக்கிய 11 வேளாண் வானிலை ஆய்வுப் பிரிவுகள் வாயிலாக, வானிலை அடிப்படையிலான வேளாண் ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றது. மேலும் கூடுதலாக 14 வேளாண் வானிலை அலகுகள், பல்வேறு மாவட்டங்களில் உள்ள வேளாண் அறிவியல் நிலையங்களில் தொகுதி அளவிலான ஆலோசனைகள் வழங்க தொடங்கப்பட்டுள்ளன. இந்த மையங்கள் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பைப் பாதுகாப்பதற்காக தீவிர வானிலை நிகழ்வுகளை வெளியிடுகின்றன.

[2022 ஏப்ரல் 13

அலைபேசி குறுஞ்செய்தி சேவை மூலம் சுமார் 8.25 இலட்சம் விவசாயிகள் பயனடைகின்றனர். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் தென்மேற்குப் பருவ மழை மற்றும் வடகிழக்குப் பருவ மழையை, மாவட்ட வாரியாக கணித்து, மழைக்காலங்கள் தொடங்குவதற்கு முன்பே முன்னறிவிப்பை திறம்பட வழங்குகின்றது.

4.10. விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்தகவல்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையமானது (DEMIC), வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையத்தில் (CARDS) இயங்கி வருகின்றது. தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் (TN-IAMP) விவசாயிகளுக்கு முக்கிய விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை வழங்குகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் வாசனைப் பயிர்கள் உள்ளிட்ட 14 முக்கியப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இந்த விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை ஆலோசனைகளானது விதைப்பதற்கு முன்பும், அறுவடைக்கு முன்பும் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் சரியான நேரத்தில் விவசாயிகளுக்கு விதைப்பு, விற்பனை, சேமிப்பு முடிவை எடுக்க உதவுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில், விதைப்பு குறித்த 11 சந்தை ஆலோசனைகளையும், அறுவடைக்கு முந்தைய 16 ஆலோசனைகளையும் இந்த தகவல் மையம் வழங்கியுள்ளது.

4.11. வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில், வேளாண் வணிக காப்பகம், தொழில்நுட்பம், வீரிய ஒட்டு இரகம் மற்றும் இயந்திர வணிகமயமாக்கல், ஆலோசனை சேவைகள், தொழில் முதலீட்டு உதவிகள், மாணவர் தொழில்முனைவோர், நிர்வாக மேம்பாட்டு திட்டம், நிறுவன மேம்பாட்டு திட்டம் மற்றும் உன்னத் பாரத் அபியான் 2.0 ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒன்றிய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமான (MHRD) உன்னத் பாரத் அபியான் திட்டத்தின்கீழ்,

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் வணிக இயக்குநரகம், 174 பங்கேற்பு நிறுவனங்களின் செயல்பாடுகளை வழிநடத்தவும், கண்காணிக்கவும் மற்றும் எளிதாக்கவும் வட்டார ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகின்றது.

4.12. அறிவுசார் சொத்துக் காப்புரிமை (Intellectual Property Rights)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 75 காப்புரிமைகள், இரண்டு பதிப்புரிமை விண்ணப்பங்கள் மற்றும் இரண்டு புவியியல் குறியீடுகளை தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 16 காப்புரிமைகள் மற்றும் இரண்டு பதிப்புரிமைகளைப் பெற்றுள்ளது.

5. சர்க்கரைத் துறை

அரும் பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பு இவண் தந்தோன் பெரும் பிறங்கடையே.

-குறுந்தொகை

பொருள்: அவன் (அதியமான்), அயல்நாட்டிலிருந்து பெறுதற்கரிய அமிழ்தம் போன்ற கரும்பை இந்நாட்டிற்குக் கொண்டு வந்தவனுடைய பெரிய வழித்தோன்றல்.

விவசாயிகளின் வாழ்வாதாரம், சர்க்கரை ஆலைகளின் செயல்திறன், தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் முதன்மைத்தொழிலான வேளாண்மையை கருத்தில் கொண்டு சர்க்கரைத் துறை முழுமையாக வேளாண்மை - உழவர் நலத் துறையின்கீழ் செயல்பாட்டிற்கு இந்தாண்டு முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

விவசாயம் சார்ந்த தொழிலான சர்க்கரை ஆலைகள், தமிழ்நாட்டில் 1,50,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. சர்க்கரை ஆலைகள் 50,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும் 4,00,000க்கும் மேற்பட்டவர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்குகிறது. இந்தியாவில் சர்க்கரை

[2022 ஏப்ரல் 13

உற்பத்தியில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் உள்ளது. மாநிலத்தின் ஆண்டு சர்க்கரைத் தேவை 15 இலட்சம் மெட்ரிக் டன் என்று இருக்கும்போது ஆண்டிற்கு சுமார் எட்டு இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை மட்டுமே தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள 42 சர்க்கரை ஆலைகளில் 16 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையின் கீழும், இரண்டு சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையின் கீழும், 24 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையின் கீழும் உள்ளன. 2021-22 அரவை பருவத்தில் 13 கூட்டுறவு, இரண்டு பொது மற்றும் 14 தனியார் துறை சர்க்கரை ஆலைகள் என மொத்தம் 29 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

5.1. கரும்பு சாகுபடி

தமிழ்நாட்டில், வெண் சர்க்கரை உற்பத்திக்காக கரும்பு சுமார் 1.27 இலட்சம் எக்டர் பரப்பளவில் ஒரு எக்டருக்கு 101.5 மெட்ரிக் டன் உற்பத்தி திறனுடன் சாகுபடி செய்யப்படுவதுடன் இந்திய அளவில் உற்பத்தித் திறனில் முதலிடத்தில் உள்ளது. சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் முக்கிய உப பொருட்களான கரும்பு சக்கை, கழிவுப்பாகு மற்றும் கழிவு மண் ஆகியவை சர்க்கரை ஆலைகளுக்கு கூடுதல் வருவாயை அளிக்கிறது.

கரும்பில் மகசூல் மற்றும் சர்க்கரை கட்டுமானத்தை உயர்த்துவதற்காக தமிழ்நாடு அரசால் பல்வேறு சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டுறவு, பொது மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளில் அதிக மகசூல் தரக்கூடிய மற்றும் அதிக சர்க்கரை கட்டுமானம் தரக்கூடிய கரும்பு இரகங்களான கோ 11015, கோ.கு 6, கோ.க 13339, கோ 0212 மற்றும் கோ 86032 ஆகிய இரகங்களை பயிரிட சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 2022-23 நடவுப் பருவத்தில் 1.4 இலட்சம் எக்டர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

5.1.1. கரும்பு சாகுபடி மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

2022 ஏப்ரல் 13]

5.1.1.2. கரும்பு விவசாயிகளுக்கு இடைக்கால உற்பத்திக்கான ஊக்கத்தொகை (TPI) மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை

கரும்பு விவசாயிகளின் நலனைக் காக்கும் வகையிலும், கரும்பு விலையை உயர்த்தி வழங்கவேண்டும் என்ற கரும்பு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை நிவர்த்தி செய்யும் வகையிலும், தமிழ்நாடு அரசு, 2020-21 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலை (FRP) யைவிட கூடுதலாக டன் ஒன்றிற்கு ரூ.42.5-இடைக்கால உற்பத்தி ஊக்கத் தொகையும், சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.150/-வும் அறிவித்து, முறையே ரூ.39.4 கோடி மற்றும் ரூ.139.18 கோடி ஒதுக்கீடு செய்யதுள்ளது.

அதனடிப்படையில், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதியுள்ள 91,120 கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு ரூ.150.89 கோடி இடைக்கால உற்பத்திக்கான ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக நேரடியாக வழங்கப்பட்டுள்ளதன் வாயிலாக நீண்ட இடைவெளியான 2015-16 அரவைப்பருவத்திற்கு பிறகு விவசாயிகள் டன் ஒன்றிற்கு ரூ.2900/- கிடைக்கப் பெற்றுள்ளனர்.

ஒன்றிய அரசு 2021-22 அரவைப் பருவத்திற்கு 9.5 சதவிகித சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு, நியாயமான மற்றும் ஆதாய விலையாக ரூ.2,755/- எனவும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.29/- எனவும் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் சராசரி சர்க்கரை கட்டுமானம் 9.5 சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதால், பெரும்பாலான கரும்பு விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2,755/- மட்டுமே பெறுகிறார்கள்.

இதன் காரணமாக, கரும்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திடவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்திடவும், 2021-22 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.195/- என மாநில அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம், தமிழ்நாட்டிலுள்ள 1.2 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

[2022 ஏப்ரல் 13

5.1.1.3.கரும்பு சாகுபடி மேம்பாடு மற்றும் சாகுபடி செலவினங்களை குறைக்கும் செயல்பாடுகள்

1. கரும்பு உற்பத்தி, உற்பத்தி திறன், சர்க்கரைக் கட்டுமானம், புதிய கரும்பு இரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்திட ஊக்குவிக்கும் வகையில், 2022-23 ஆம் நிதி ஆண்டில் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

2. பண்ணையாட்களின் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு கரும்பு சாகுபடியில் நிலம் தயார் செய்வது முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கல் (SMAM) துணைத் திட்டத்தின்கீ ழ் 15 கரும்பு அறுவடை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், தகுதியுள்ள கரும்பு விவசாயிகளுக்கு 25 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

3. கரும்பு விவசாயிகளுக்கு தரமான விதைப் பொருட்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் மூன்று நிலை நாற்றங்கால் திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு தரமான திசு வளர்ப்பு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்காக கள்ளக்குறிச்சி-1 சர்க்கரை ஆலையில் திசு வளர்ப்பு ஆய்வகம் 2021 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 2021-22 நடவு பருவத்தில், 1,20,000 தரமான திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு கரும்பு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

5. 1982 முதல் செங்கல்பட்டில் இயங்கி வரும் ஒரு இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட முதன்மை உயிரியல்-கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தில் (MBRL) அசிட்டோபாக்டர், பாஸ்போபாக்டீரியா, டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம், பேசிலஸ் துரிஞ்ஜியன்சிஸ், ஆர்பஸ்குலர்

2022 ஏப்ரல் 13]

மைகோரைசா போன்ற உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் வணிக ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

6. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் மூலம் மேம்பட்ட கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள், சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள், கரும்பு விவசாயிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் கட்டுரைகள் போன்ற பல்வேறு தகவல்கள் அடங்கிய கரும்பு கரங்கள் என்ற மாத இதழ் தமிழ் மொழியில் கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலைகள் மற்றும் பிற பங்குதாரர்கள் பயன்பெறும் வகையில் வெளியிடப்படுகிறது.

5.2. சர்க்கரை உற்பத்தி

தமிழ்நாட்டில் 2020-21 ஆம் ஆண்டில், கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் 98.67 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 8.97 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 8.85 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2021-22 ஆம் அரவைப் பருவத்தில் 15.03.2022 வரை 64.32 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 9.16 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 5.76 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது

5.2.1. சர்க்கரை தொழிற்சாலை மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

5.2.1.1. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் இணை மின் நிலைய திட்ட செயல்பாடுகள்

அனுமதிக்கப்பட்ட 12 இணை மின் நிலைய திட்ட பணிகளில் தற்போது வரை ஐந்து ஆலைகளில் (செங்கல்ராயன், வேலூர், செய்யார், அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர்) இணை மின் திட்ட நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தற்போது தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 12 மெகா வாட் இணைமின் திட்டப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு, நிர்மாணப் பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டத்துடன் 2021-22 அரவைப் பருவத்தில் 07.03.2022 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மே மாதம் 2015 முதல் இணை மின் திட்டப் பணிகள் ஏதும் நடைபெறாமல் இருந்த எம்.ஆர்.கே, கள்ளக்குறிச்சி-1 மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மீண்டும் பணிகள் துவங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட மூன்று ஆலைகளிலும் திட்டப் பணிகள் முடிந்து, வருகின்ற 2022-23 அரவைப் பருவத்தில் இணை மின் நிலையம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.2.1.2. சர்க்கரை ஆலைகளுக்கான இதர நடவடிக்கைகள்

1. விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் நீண்ட நாள் கோரிக்கையை கருத்தில் கொண்டு, மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையினை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி குழு ஒன்று அமைக்கப்படும்.

2. 2022-23 ஆம் ஆண்டில், 15 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஏற்கெனவே பயன்பாட்டிலுள்ள கரும்பு எடைத்தளங்கள் ரூ.1.5 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்ட நவீன தானியங்கி எடைத்தள அமைப்பாக மேம்படுத்தப்பட உள்ளன.

3. சர்க்கரை ஆலைகளில் ஆய்வுக்கூடங்களில் ஆய்வுகளை விரைவாகவும் துல்லியமாகவும் மேற்கொள்ளும் வகையில், 2022-23 ஆம் ஆண்டில் 15 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் உள்ள ஆய்வகங்கள் ரூ.3 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட உள்ளது.

5.3. சர்க்கரை மற்றும் உப பொருட்கள் விற்பனை

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளினால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை மற்றும் அதன் உப பொருட்கள் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

5.3.1. சர்க்கரை விற்பனை வருவாய்

2021-22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 2.58 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டு ரூ.856.68 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

5.3.2. கரும்புச் சக்கை விற்பனை வருவாய்

சர்க்கரை ஆலை மற்றும் இணைமின் நிலைய எரிபொருள் தேவைக்கு எஞ்சிய கரும்புச் சக்கையானது காகித தொழிற்சாலை மற்றும் உயிர் ஆற்றல் அலகுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2021-22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 60,332 மெட்ரிக் டன் கரும்புச் சக்கை விற்பனை செய்யப்பட்டு ரூ.14.63 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5.3.3. கரும்புக் கசண்டு விற்பனை வருவாய்

அமராவதி மற்றும் சேலம் வடிப்பாலைகளின் தேவையினை பூர்த்தி செய்த பின்னர் எஞ்சிய கரும்புக் கசண்டு தனியார் வடிப்பாலைகள், கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர பயன்பாட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2021-22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 84,843 மெட்ரிக் டன் கரும்புக் கசண்டு விற்பனை செய்யப்பட்டு ரூ.64.42 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5.3.4. எரிசாராய விற்பனை வருவாய்

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பாலைகளில் 2021-22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 37.85 இலட்சம் லிட்டர் எரிசாராயம் விற்பனை செய்யப்பட்டு ரூ.18.19 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5.4 பணியாளர் அமைப்பு

5.4.1. சர்க்கரைத் துறை

சர்க்கரைத் துறை மொத்தம் 59 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

அட்டவணை: 5.1. - அலுவலர்கள்

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
1	கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் இ.ஆ.ப.	1
2	கூடுதல் ஆணையர் இ.ஆ.ப.	1

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
3	கூடுதல் இயக்குநர்	1
4	இணை இயக்குநர் (கரும்பு)	1
5	துணை இயக்குநர் (கணக்கு)	1
6	உதவி இயக்குநர்	2
7	கணக்கு அலுவலர்	1
8	தொழில்நுட்ப அலுவலர்	1
மொத்தம்		9

அட்டவணை: 5.2. – அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
1	கூட்டுறவு சார்பதிவாளர் (தா&நி)	4
2	கண்காணிப்பாளர்கள்	6
3	உதவியாளர்கள்	15
4	சுருக்கெழுத்து தட்டச்சர்கள்	4
5	தட்டச்சர்கள்	3
6	இளநிலை உதவியாளர்கள்	3
7	தொலைபேசி இயக்குபவர்	1
8	ஓட்டுநர்	1
9	பதிவறை எழுத்தர்	1
10	அலுவலக உதவியாளர்கள்	12
மொத்தம்		50

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

5.4.2. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் பணியாளர்கள் விவரம்

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 8,446 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

அட்டவணை : 5.3. - பணியாளர்கள் விவரம்

வ. எண்	சர்க்கரை ஆலைகள்	அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை
அ. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்		
1	அமராவதி	516
	வடிப்பாலை	47
2	ஆம்பூர்	516
3	செய்யாறு	496
4	செங்கல்ராயன்	509
5	தருமபுரி	505
6	கள்ளக்குறிச்சி -1	529
7	கள்ளக்குறிச்சி-2	356
8	மதுராந்தகம்	-
9	எம்.ஆர்.கே.	495
10	ந.பு.கே.ஆர்.ஆர்	548
11	நேஷனல்	529
12	சுப்ரமணிய சிவா	476
13	சேலம்	506
	வடிப்பாலை	47
14	திருத்தணி	504

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	சர்க்கரை ஆலைகள்	அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை
15	திருப்பத்தூர்	444
16	வேலூர்	514
ஆ. பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்		
17	அறிஞர் அண்ணா	440
18	பெரம்பலூர்	469
	மொத்தம்	8,446

6. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றளிப்பு

வேளாண் தொழிலானது தேசத்தின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், இந்திய தொழில் துறையின் மூலப்பொருட்களின் தேவையையும் நிறைவு செய்கிறது. நமது தேசத்தின் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தரமான விதைகளே முக்கிய காரணியாக உள்ளன. அனைத்து வேளாண்மைத் திட்டங்களின் வெற்றிக்கும் தரமான விதை உற்பத்தியே அடித்தளமாக அமைவதுடன் விவசாயிகளின் வருமானத்தையும் இருமடங்காக உயர்த்துவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் அர்ப்பணிப்பு சேவை வாயிலாக தரமான விதைகள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இத்துறையானது உணவுப் பயிர்கள், எண்ணெய்வித்துக்கள், தீவனம் மற்றும் நார் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை மேற்கொள்ள, அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் உற்பத்தியாளர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கின்றது.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையானது தரமான விதைகளுக்கு சான்று செய்வதுடன், விதை விநியோக நிலைகளை கண்காணித்து, விதையின் தரத்தை உறுதி செய்யும் பணிகளை மேற்கொள்கின்றது. மேலும் அங்கக பண்ணைகளை சான்று செய்து, அங்கக விளை பொருட்களின் பயன்பாட்டை

2022 ஏப்ரல் 13]

ஊக்குவிக்கின்றது. இப்பணிகளானதுகீ ழ்க்காணும் பிரிவுகளைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1) விதைச்சான்று

2) விதை தரக்கட்டுப்பாடு

3) விதை பரிசோதனை

 i விதை பரிசோதனை நிலையங்கள்

 ii. டி.என்.ஏ கைரேகை ஆய்வகம்

 iii பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை

 iv. ஒப்பீட்டு ஆய்வகம் மற்றும் பி. டி நஞ்சு பரிசோதனை ஆய்வகம்

4) பயிற்சி

5) அங்ககச்சான்று

6.1. விதைச்சான்றளிப்பு:

விதைச்சான்று பிரிவு, விதைகள் சட்டம், 1966 மற்றும் விதைகள் விதிகள், 1968 இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி செயல்படுகிறது. அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களில், இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களின் அடிப்படையில், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை கொண்ட விதைகளை சான்றளிப்பு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையானது நெல் மற்றும் தானியங்களில் நிர்ணயிக்கப்பட்ட சான்று விதை உற்பத்தி இலக்கினை அடைந்துள்ளது. மேலும் பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், தீவனப் பயிர்கள், நார் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை அதிகரிக்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

விதைச்சான்றளிப்பு திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில் 65,359 எக்டர் பரப்பளவில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகப்படியாக விதைப்பண்ணை பதிவானது திருப்பூர் (9,375 எக்டர்), தஞ்சாவூர் (6,826 எக்டர்), திருவாரூர் (6,560 எக்டர்), விழுப்புரம் (3,876 எக்டர்), நாகப்பட்டினம்

[*2022 ஏப்ரல் 13*

(3,765 எக்டர்) ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் 34,957 எக்டர் விதைப்பண்ணை பதிவு செய்யப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளில் மொத்தம் 1,29,907 மெட்ரிக் டன் அளவு விதை சான்று செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் (71,282 மெ. டன்), விழுப்புரம் (8,128 மெ. டன்), மதுரை (5,668 மெ. டன்), திருநெல்வேலி (4,831 மெ. டன்) மற்றும் நாமக்கல் (3,318 மெ. டன்) ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் விதை சான்று செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் 36,680 மெட்ரிக் டன் விதை சான்று செய்யப்பட்டுள்ளது.

விதைச்சான்று துறையில் 2022-23 ஆம் ஆண்டில் 57,000 எக்டர் பரப்பளவில் விதைப்பண்ணைகள் பதிவு செய்து 1,10,000 மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 6. 1 விதைச்சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு - 2021-2022

வ. எண்	தலைமையிடம்	விதைப்பண்ணை பதிவு பரப்பு (எக்டர்)			
		அரசு	அரசு சார்பு	தனியார்	மொத்தம்
1	காஞ்சிபுரம்	1038	0	476	1514
2	திருவள்ளூர்	833	0	171	1004
3	கடலூர்	1835	11	608	2454
4	விழுப்புரம்	2460	0	1416	3876
5	வேலூர்	1031	0	193	1224
6	திருவண்ணாமலை	2427	0	95	2522
7	சேலம்	1193	65	439	1697
8	நாமக்கல்	668	42	95	805
9	தருமபுரி	903	0	4	907

2022 ஏப்ரல் 13]

வ. எண்	தலைமையிடம்	விதைப்பண்ணை பதிவு பரப்பு (எக்டர்)			
		அரசு	அரசு சார்பு	தனியார்	மொத்தம்
10	கிருஷ்ணகிரி	891	0	20	911
11	கோயம்புத்தூர்	291	68	632	991
12	ஈரோடு	650	158	2463	3271
13	திருச்சி	928	33	536	1497
14	பெரம்பலூர்	571	0	605	1176
15	கரூர்	387	0	150	537
16	புதுக்கோட்டை	928	72	165	1165
17	தஞ்சாவூர்	1746	83	4997	6826
18	நாகப்பட்டினம்	2139	41	1585	3765
19	திருவாரூர்	2221	9	4330	6560
20	மதுரை	529	59	1592	2180
21	தேனி	244	0	652	896
22	திண்டுக்கல்	417	109	2825	3351
23	இராமநாதபுரம்	678	0	17	695
24	சிவகங்கை	439	0	27	466
25	விருதுநகர்	501	10	585	1096
26	திருநெல்வேலி	1368	8	1569	2945
27	தூத்துக்குடி	1252	20	228	1500
28	கன்னியாகுமரி	136	0	18	154
29	திருப்பூர்	457	22	8896	9375
	மொத்தம்	29161	810	35389	65360

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

6.2. விதைத் தரக்கட்டுப்பாடு:

விதைத் தரக்கட்டுப்பாடு பிரிவு பிற மாநிலங்களைக் காட்டிலும் தேசத்தின் முன்னோடியாகவும், செயலாக்கத்தில் முதன்மையிடத்திலும் உள்ளது. இப்பிரிவானது விதைகள் சட்டம், 1966, விதைகள் விதிகள், 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்புச் சட்டம்), 1986 போன்ற பல்வேறு விதைச்சட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி செயல்பட்டு வருகின்றது. விதைகளின் தரத்தை கண்காணித்தும், ஒழுங்குப்படுத்தியும் தரமான விதை விற்பனையை உறுதிப்படுத்துகிறது.

இத்துறையின்மூலம் 1,405 அரசு நிறுவனங்களுக்கும், 1,167 அரசு சார்பு நிறுவனங்களுக்கும் மற்றும் 10,079 தனியார் நிறுவனங்களுக்கும் ஆக மொத்தம் 12,651 விதை விற்பனை நிலையங்களுக்கு விதைகள் (கட்டுப்பாட்டு) ஆணை, 1983-ன்படி விதை விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2021-2022 ஆம் நிதியாண்டில், விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 80,909 ஆய்வாளர் மற்றும் பணி விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதில் 1,775 மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டு துறை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தரமற்ற மற்றும் பிற விதி மீறல்களுக்காக 2,541 மெட்ரிக் டன் அளவிலான விதைகளுக்கு விற்பனை தடை ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.22.21 கோடி ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில் விதை விற்பனை நிலையங்களில் 70,000 ஆய்வுகள் மேற்கொள்ளவும், 81,000 ஆய்வாளர் மற்றும் பணி விதை மாதிரிகள் தரப்பரிசோதனைக்காக எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

6.3 விதைப்பரிசோதனை

விதைத் தரக்கட்டுப்பாட்டில் விதைப் பரிசோதனை முக்கிய பங்கு வகிக்கிறது. அறிவிக்கை செய்யப்பட்ட விதைப்பரிசோதனை நிலையங்களில் விதை மாதிரிகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிறரக கலவன்கள் ஆகிய தரக்குறியீடுகள் ஆய்வு செய்யப்படுகின்றன. இதன்மூலம் விவசாயிகளுக்கு தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டில், 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப்பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. திருப்பூரில் புதியதாக விதைப்பரிசோதனை நிலையம் 01.03.2022 முதல் செயல்பட துவங்கியுள்ளது. அறிவிக்கை செய்யப்பட்ட விதைப்பரிசோதனை நிலையங்களில் விதைச்சான்று மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவிலிருந்து முறையே பெறப்படும் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

2021-22 ஆம் ஆண்டில் மொத்தம் 1,09,563 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2022-23 ஆம் ஆண்டில் 1,10,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

6.3.1. பன்னாட்டு விதைப்பரிசோதனை குழும அங்கீகாரம் பெற்ற விதைப்பரிசோதனை நிலையம்

கோவை விதைப்பரிசோதனை நிலையம் 2014 ஆம் ஆண்டில் பன்னாட்டு விதைப்பரிசோதனை குழுமத்தின்(ISTA, Switzerland) அங்கீகாரம் பெற்ற ஆய்வகமாக தரம் உயர்த்தப்பட்டது. இந்த ஆய்வகம் இந்தியாவிலேயே பொதுத் துறைகளில் பன்னாட்டுக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற முதல் ஆய்வகம் ஆகும். இப்பரிசோதனை நிலையம் தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறி பயிர்களுக்கு விதைக்குவியல்களிலிருந்து மாதிரிகள் எடுக்கவும் அவற்றின் புறத்தூய்மை, பிற தானிய விதை, முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் கண்டறியும் பரிசோதனைக்காகவும் பன்னாட்டு குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆய்வகம் சர்வதேச தரத்தில் ஏற்றுமதியாகும் விதைக்குவியல்களுக்கு ஆரஞ்சு சர்வதேச விதைக்குவியல் சான்றிதழ் மற்றும் நீல சர்வதேச விதைமாதிரி சான்றிதழ்கள் வழங்கும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

6.3.2. மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் விரைவாகவும், உரிய காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு உயர்தர தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய டி.என்.ஏ மரபணு ஆய்வகம் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்ககம்,

கோவையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மரபணு பரிசோதனை பகுப்பாய்வு முறையில் நெல் இனத்தூய்மை பரிசோதனை முடிவுகள் நான்கு முதல் ஐந்து நாட்களில் மிகத் துல்லியமாக கண்டறியப்படுகின்றன. இந்தியாவிலேயே வேளாண்மைத் துறையின்கீழ் முதன் முதலாக நிறுவப்பட்ட மரபணு பரிசோதனை நிலையம் இதுவே ஆகும். மேலும் 2014-இல் தமிழக அரசால் "மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம்" என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம் தற்போது தமிழ்நாட்டில் பிரதானமாகப் பயிரிடப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட 25 நெல் இரகங்களுக்கு SSR மரபணு குறியீட்டை பயன்படுத்தி மிகத் துல்லியமாக இனத்தூய்மை பரிசோதனை செய்யும் திறன் கொண்டுள்ளது.

6.3.3. பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை

தமிழ்நாடு அரசின்மூலம் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநரகத்தின்கீழ் கோவை மாவட்டம், கண்ணம்பாளையத்தில் 1997 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. விதை குவியல்களிலிருந்து பெறப்பட்ட விதை மாதிரிகளின் இனத்தூய்மை இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களின்படி ஆய்வு செய்யப்படுகிறது. விதை மாதிரிகளின் இனத்தூய்மையானது பயிர்களின் வளர் பருவகாலம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. இனத்தூய்மை பகுப்பாய்விற்கு பெறப்பட்ட பயிர் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களில் அந்தந்த இரகங்களுக்கு உரிய தனித்துவ புறத்தோற்ற வெளிப்பாடுகளைக் கொண்டு இனத்தூய்மை மேற்கொள்ளப்படுகிறது. பயிர் வளர்ப்பு பரிசோதனையின் முடிவுகள், விதைச்சட்டம், 1966, பிரிவு 12பி-இன்படி விதைப் பகுப்பாய்வாளரால் அறிவிக்கப்படுகிறது. 2021-22ஆம் ஆண்டில் 4,145 விதை மாதிரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டு 2022-23-இல் 4,200 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6.4. பயிற்சி பிரிவு:

இத்துறை சார்ந்த பணிகள் குறித்தும், தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் பொருட்டும், இத்துறையின் அலுவலர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் அங்கக விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022 ஏப்ரல் 13]

2021-2022 ஆம் ஆண்டில், 47,320 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 50,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

6.5 அங்கக சான்றளிப்பு:

தமிழ்நாடு அங்கக சான்றளிப்பு துறையானது 2007-ம் ஆண்டு தமிழக அரசால் துவங்கப்பட்டது. அங்கக முறையில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டும், நுகர்வோர்களிடையே நம்பகத்தன்மையை ஏற்படுத்தும் வகையிலும் தரம் வாய்ந்த அங்கக உற்பத்தி நடைமுறையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு சான்றளிப்பு பணியை அர்ப்பணிப்புடன் செய்து வருகிறது. மேலும் இது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்தின் (APEDA) மதிப்பேற்றல் பெற்ற சான்றளிப்பு துறையாகும். இத்துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் சான்றளிப்பு நடைமுறைகள் தேசிய அங்கக உற்பத்தி தரத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

துறையில் வழங்கப்படும் சான்றுகள்:

அ) பயிர் உற்பத்தி

ஆ) வேளாண் விளைபொருள் பதனிடுதல்

இ) வணிகம் மற்றும் ஏற்றுமதி

இந்தியாவில் செயல்பாட்டிலுள்ள 33 அங்கககச்சான்று நிறுவனங்களுள் மிக அதிகமான தனிநபர் விவசாயிகளை உள்ளடக்கிய நிறுவனம் என்ற தனித்துவத்தை தமிழ்நாடு அங்கககச்சான்றளிப்பு துறை பெற்றுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்ந்த விவசாயிகளுக்கு அதிக அளவில் குழு சான்று வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின்மூலம் வழங்கப்படும் வாய்ப்பு சான்றானது (Scope Certificate) ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும். 2021-2022

ஆம் ஆண்டில் 1,632 தனிநபர் விவசாயிகளுக்கும், 158 குழு மூலம் 23,867 விவசாயிகளுக்கும், ஆறு உணவு பதனிடும் விவசாயிகளுக்கும் மற்றும் நான்கு வணிக நிறுவனங்களுக்கும் வாய்ப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின் மூலம் 2021-2022 ஆம் ஆண்டில் 77.6 மெட்ரிக் டன் அளவுள்ள தேங்காய் எண்ணெய், காபி, முருங்கை, தேயிலை, கோகோ ஆகியவற்றிற்கு வணிகமாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 38.92 இலட்சம் ஆகும்.

2021-22 ஆம் ஆண்டில் 1,15,597 ஏக்கர் பரப்பளவில் அங்ககப்பண்ணை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் திண்டுக்கல் (9,519 ஏக்கர்), சேலம் (9,044 ஏக்கர்), கிருஷ்ணகிரி (8,082 ஏக்கர்), தருமபுரி (7,384 ஏக்கர்) மற்றும் நீலகிரி (6,428 ஏக்கர்) ஆகிய மாவட்டங்களில் அதிகளவு பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் (75,122 ஏக்கர்) பரப்பளவு பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் 1,25,000 ஏக்கர் பரப்பளவில் அங்ககச்சான்று பதிவு மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

6.6. விதைச்சான்றளிப்புத் துறையை கணிணிமயமாக்குதல் (SPECS - விதை உற்பத்தி. அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை):

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் அனைத்து தொழில்நுட்ப நடைமுறைகளையும் கணினிமயமாக்கும் பொருட்டு, SPECS எனும் பிரத்யேக மென்பொருள் வேளாண்மை இயக்குநரக கணினி பிரிவின்மூலம் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்மென்பொருள்மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் அமலாக்கப்பணிகளை இணைய வழியில் அளிப்பதன்மூலம் துறையின் அனைத்து சேவைகளையும் பயனீட்டாளர்களுக்கு துரிதமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் வழங்கப்படுவது உறுதிபடுத்தப்படுவதுடன், துறைசார்ந்த நிகழ்வுகளை அரசு கண்காணிக்கவும் உதவுகிறது.

இம்முயற்சியானது, இந்தியாவிலுள்ள ஏனைய விதைச்சான்று துறை, முகமைகளிடையே முதன்மையானது என்பது ஒரு சிறப்பம்சமாகும். தற்பொழுது, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் அனைத்து பயனீட்டாளர்களும்

2022 ஏப்ரல் 13]

இத்துறை சார்ந்த சேவைகளை விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், துல்லியமாகவும் SPECS மென்பொருள்மூலம் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

6.7. பணியாளர்கள் விவரம்:

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை மொத்தம் 845 பணியாளர்களுடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

அட்டவணை: 6.2. அலுவலர்கள் விவரம்

வ. எண்	பணியிட விபரம்	ஒப்பளிக்கப் பட்ட பணியிடங்கள்
1	விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர்	*1*
2	விதைச்சான்று இணை இயக்குநர்	*1*
3	விதை ஆய்வு இணை இயக்குநர்	*1*
4	தரமேலாளர்	*1*
5	விதை ஆய்வு துணை இயக்குநர்	*15*
6	விதைச்சான்று உதவி இயக்குநர்	*38*
7	விதைச்சான்று அலுவலர்	*119*
8	விதைச்சான்று அலுவலர் மற்றும் அங்ககச்சான்று அலுவலர்	*26*
9	விதை ஆய்வாளர்கள்	*70*
10	வேளாண்மை அலுவலர்கள்	*63*
11	அங்ககச்சான்று ஆய்வாளர்கள்	*10*
12	ஆட்சி அலுவலர், சட்ட ஆலோசகர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள்	*500*
	மொத்தம்	*845*

[2022 ஏப்ரல் 13

7. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

தமிழக அரசு விளைபொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு பல்வேறு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் விளைபொருட்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. விளைந்த விளைபொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெறுவதற்குரிய விற்பனை தளத்தினை ஒழுங்குமுறை விற்பனைகூடங்களின் வாயிலாக வழங்கி வருகிறது. எனினும், விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுதல், விற்பனையை மேம்படுத்துதல் வாயிலாக விவசாயிகளை வேளாண் தொழில் முனைவோராக மாற்றுவதற்குரிய அனைத்து பணிகளையும் இத்துறை செயல்படுத்தி வருகின்றது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களை நியாயமான விலையில், சரியான எடையில் விற்பனை செய்வதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றது. விலை வீழ்ச்சி காலங்களில், விளைபொருட்களை இருப்பு வைத்து பின்னர் விலையேற்ற காலங்களில் விற்பனை செய்வதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகளையும் வேளாண்மை விற்பனை பிரிவு செயல்படுத்துகின்றது.

விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு தேசிய அளவில் அதிக விலை கிடைப்பதை உறுதி செய்திட மின்னணு விற்பனை முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்மூலம் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி மற்றும் தேங்காய் கொப்பரை போன்ற விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சந்தை விலை குறையும் காலத்தில், விவசாயிகளிடமிருந்து பயறுவகைகளும், கொப்பரை தேங்காயும் விலை ஆதரவு திட்டம்மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

7.1. வேளாண்மை விற்பனை பிரிவின் செயல்பாடுகள்

7.1.1. விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டில் 27 விற்பனைக் குழுக்களின்கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வேளாண் விளைபொருள் விற்பனையை முறைப்படுத்த செயல்பட்டு வருகின்றன. இங்கு விவசாயிகள் மறைமுக ஏலமுறையில் கலந்துகொண்டு தங்களது விளைபொருள்களை உள்ளூர் சந்தை விலை அல்லது பண்ணைவாயில் விலையை விட அதிக விலைக்கு விற்று நல்ல லாபம் பெற வழிவகை செய்யப்படுகிறது.


விற்பனைக்குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (ஒழுங்குப்படுத்துதல்) சட்டம், 1987 மற்றும் அதன் விதிகள், 1991-ன் படி செயல்படுகின்றன.

2021-22 ஆம் ஆண்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் 27 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருள் வர்த்தகம் செய்யப்பட்டு, ரூ.130.94 கோடி வரவினம் பெறப்பட்டுள்ளது.

அறுவடை காலங்களில் ஏற்படும் வேளாண் விளைபொருள்களின் விலை குறைவை தவிர்க்கவும், விளைபொருட்களை சேமிப்புக் கிடங்குகளில் சேமிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் ரூ.3 இலட்சம் அல்லது விளைபொருட்களின் மதிப்பில் 50 சதவீத தொகையானது, ஐந்து சதவீத வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில், 1,700 விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடனாக ரூ.36.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா செய்வதற்காக விளைபொருளின் மதிப்பில் 50 சதவீதம் அல்லது இரண்டு இலட்சம் ரூபாய், ஒன்பது சதவீத வட்டியில் வியாபாரிகளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில் 269 வியாபாரிகளுக்கு ரூ.4.65 கோடி பொருளீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வழங்கப்படும் சேவைகளுக்கு விவசாயிகளிடமிருந்து எந்த ஒரு கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.



7.1.2 மின்னணு தேசிய வேளாண் சந்தை

மின்னணு தேசிய வேளாண் சந்தை (e-NAM) *என்னும் ஒரு அகில இந்திய மின்னணு வர்த்தகதளம் தொடங்கியதையடுத்து, வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை, விவசாயிகளுக்கு நல்ல விலை, விரைவு ஏல முறை, விளைபொருட்களின் தரத்திற்கேற்ற விலை மற்றும் மின்னணு பணப்பரிவர்த்தனை மூலம் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக பணம் செலுத்துதல் ஆகியவை உறுதி செய்யப்பட்டுள்ளது.*

தேசிய மின்னணு வேளாண் சந்தைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 63 சந்தைகளில் 2021-22 ஆம் ஆண்டில் மின்னணு வர்த்தகம்மூலம் ரூ.471.48 கோடி மதிப்பிலான 13.39 இலட்சம் தேங்காய் மற்றும் 23.98 இலட்சம் குவிண்டால் இதர விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 1.60 இலட்சம்

2022 ஏப்ரல் 13]
விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.445.08 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 2021-2022 ஆம் ஆண்டில் சந்தைகளுக்கு இடையிலான வர்த்தகமானது மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டத்தின்மூலம் ரூ.14.13 கோடி மதிப்புடைய 5.85 இலட்சம் குவிண்டால் வேளாண் விளைபொருட்கள் 152 வர்த்தகர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்தின்கீழ் மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளகீழ்ப்பெண்ணாத்தூர், மயிலாடுதுறை, பண்ருட்டி, உடுமலைப்பேட்டை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய சந்தைகளிலிருந்து புதுச்சேரியுடன் ரூ.1.47 இலட்சம் மதிப்புடைய 59.38 குவிண்டால் வேளாண் விளைபொருட்களான உளுந்து, எள், நெல் மற்றும் கேழ்வரகு ஆகியவை வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையினை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG-Goal 2) பசியின்மை இலக்கின்கீழ் தேசிய அளவிலான குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 63 விற்பனைக் கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ளன. இது 22 சதவீதமாக உள்ளது.

7.2. வேளாண் வணிக செயல்பாடுகள்

7.2.1. உழவர் சந்தை

உழவர் சந்தை திட்டம் என்பது 1999 ஆம் ஆண்டு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு புதுமையான திட்டமாகும், இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான காய், கனிகளை இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்வதன்மூலம் நல்ல விலையைப் பெற்றிடலாம். தற்போது, தமிழ்நாட்டில் 180 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.

உழவர் சந்தையின் தினசரி விலை விவரங்களை துறை இணையதளத்தி லும், (www.agrimark.tn.gov.in) "உழவன்" செயலியிலும் (Uzhavan App) தெரிந்துகொள்ளலாம். நாளொன்றுக்கு

[2022 ஏப்ரல் 13

சராசரியாக, ரூ5.5 கோடி மதிப்புள்ள 1,900 மெட்ரிக் டன் காய், கனிகள் 7,000 விவசாயிகளினால் மூன்று இலட்சம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

2021-22 வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, 50 உழவர் சந்தைகளை ரூ.12.50 கோடி செலவில் புனரமைக்கும் பணியும், 10 புதிய உழவர் சந்தைகளை ரூ.4.53 கோடி மதிப்பில் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2022-23 ஆம் ஆண்டில் மேலும் 50 உழவர் சந்தைகள் ரூ.15 கோடி செலவில் புதுப்பிக்கப்படும். உழவர் சந்தைகளில் கணினிகள், விலைக் காட்சிப் பலகைகள் போன்ற வசதிகளும் வழங்கப்படும்.

ஐம்பது உழவர் சந்தைகளில், உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் காய்கனிகள் சந்தைப்படுத்துவதற்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும். வேளாண்மை, தோட்டக்கலை துறைகளுக்கு விதைகள், உயிர் உரங்கள், காய்கறி விதைகள், நாற்றுகள், பழச் செடிகளை விற்பனை செய்ய கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உழவர்சந்தை விவசாயிகள் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்/பயிற்சிகள் நடத்தப்படும். உணவு தானியங்களை விற்பனை செய்ய மாவட்டத்திற்கு ஓர் உழவர் சந்தை வீதம் மாலை நேரத்தில் செயல்படும்.

7.2.2. விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டல் வாய்ப்புகளை உருவாக்க பொதுவான வசதி மையங்களை நிறுவுதல்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்திட விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தியும், ஊக்குவித்தும் வருகின்றன. இது தொடர்பாக விவசாயிகளுக்கு ஆதரவாக பல்வேறு திட்டங்களின்கீழ் முதன்மை நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை பதப்படுத்தும் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டில் சிறுதானிய இயக்கத்தின்கீழ் இத்தகைய மதிப்புக் கூட்டுதலுக்கான பொது வசதிகள் அமைக்கப்படும். மேலும், காஃபி, மிளகினை மதிப்புக் கூட்ட காஃபிக் கொட்டை

2022 ஏப்ரல் 13]

உடைத்து தரம் பிரிக்கும் இயந்திரம், மிளகு தரம் பிரித்து பொடி செய்யும் இயந்திரம் ரூ.75 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட உள்ளது.

7.2.3 குளிர்பதன சேமிப்பு வசதிகள்

பண்ணை பசுமை காய்கனிகள் உபரியாக விளையும் காலங்களில் குளிர்பதனக் கிடங்குகளில் சேமித்து, தரம் குறையாமல் பாதுகாத்து, விற்பனை செய்ய ஏதுவாக தமிழ்நாட்டில் 17,527 மெ.டன் கொள்ளளவு கொண்ட 194 குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை: 7.1 - கொள்ளளவு அடிப்படையில் குளிர்பதனக் கிடங்குகள் விவரம்

கொள்ளளவு (மெ.டன்)	எண்ணிக்கை	மொத்த கொள்ளளவு (மெ.டன்)
2,000	2	4,000
500-1,000	12	8,000
100-200	18	2,155
40-75	17	850
13-25	94	2,266
2-10	51	256
மொத்தம்	194	17,527

குளிர்பதனக் கிடங்கு வசதியை பரவலாக்குவதற்காக குறு மற்றும் பெரிய அளவிலான குளிர்பதனக் கிடங்கு வசதிகள் தமிழ்நாட்டில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பண்ருட்டி மற்றும் ஒட்டன்சத்திரத்தில் முறையே 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலான இரண்டு குளிர்பதனக் கிடங்குகள் நிறுவப்பட்டு வருகின்றன. இதன்மூலம் குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 40,427 மெட்ரிக் டன்கள் ஆக உயரும்.

[2022 ஏப்ரல் 13

7.2.4 ஒருங்கிணைந்த விற்பனை வளாகம்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் உழவர் சந்தைகள் விவசாயப் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஒருங்கிணைந்த தளமாக செயல்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் சேவைகளை உறுதி செய்வதற்காக ஒரு சந்தைக்குள் இடுபொருள் கடைகள், பண்ணை இயந்திரங்கள், வங்கி, ஆலோசனை சேவைகள் போன்ற ஒருங்கிணைந்த வசதிகளை வழங்க ஒரு முன்னுதாரண மாற்றம் அவசியம். இத்தகைய ஒருங்கிணைந்த சந்தைகள் மதுரை, நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.

7.2.5. விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தல்

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கவும், விவசாயிகளை பெரும் சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் ஒருங்கிணைக்கவும், உற்பத்தி உபரியினை மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்றவும் தரமான பழங்கள், காய்கறிகளை நுகர்வோர்களுக்குத் தடையின்றி வழங்கி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டமானது தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி (தென்காசியும் சேர்த்து) ஆகிய பத்து மாவட்டங்களில் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி கிடங்கு உட்கட்டமைப்பு நிதி உதவியுடன் இத்துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம் (செங்கல்பட்டும் சேர்த்து), திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் அமைத்திட நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிமூலம் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

2022 ஏப்ரல் 13]

7.2.6. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

விளைபொருட்களை உற்பத்தி செய்து, அவ்விளை பொருட்களை ஒருங்கிணைத்து சந்தைப்படுத்துவதன்மூலம் நல்ல விலை கிடைப்பதற்கு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO) உறுதுணையாகச் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் சுருக்கம்

வ. எண்	உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்கிய துறை	எண்கள்
1	வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை	381
2	நபார்டு	259
3	தன்னார்வ நிறுவனங்கள்	163
4	ஒன்றிய சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு	36
5	தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் (NCDC)	24
6	தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு (NAFED)	25
7	தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP)	15
	மொத்தம்	903

7.2.6.1. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான மாநில அரசு திட்டம்

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் நிலைத்து, செயல்பட மூலதன நிதியாக ரூ.266.70 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு NABKISAN நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட தொகை மூன்று கூறுகளின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(i) இடைநிலை (Mezzanine) மூலதன உதவி

(ii) வங்கியில் கடன் பெறுவதற்கு கடன் உத்தரவாதம் வழங்குதல் (Credit Guarantee)

(iii) சலுகையுடன் கூடிய சுழல் நிதி (Revolving Fund)

7.2.6.2. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான இதர ஆதரவுகள்

(i) ஐம்பது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் விதை சுத்திகரிப்பு மற்றும் சேமிப்புக் கிடங்குகளை அமைத்து வருகின்றன.

(ii) பத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பருப்பு ஆலைகள் அமைக்க தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் ரூ.1.54 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

(iii) ஐந்து மாநகராட்சிகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்யும் தளமாக 50 சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

(iv) முன்னூற்று பத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறந்த வேளாண் நடைமுறைகள், நிறுவன நிருவாகம், திட்டம் மற்றும் வணிக மேலாண்மை, கணக்கு பராமரிப்பு, ஏற்றுமதி சந்தை, போன்றவற்றில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயணம் மேற்கொள்வது ஆகியவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளது.

(v) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலமாக சிறுதானியங்களை கொள்முதல் செய்து சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள கூட்டுறவு அங்காடிகளிலும், நியாய விலைக் கடைகளிலும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(vi) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கையானது நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கு (SDG Goal 1) குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், 903 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2022 ஏப்ரல் 13]

7.2.7. உணவு பதப்படுத்துதல்

7.2.7.1. தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் கொள்கை, 2018

மாநிலத்தில் உணவு பதப்படுத்துதலுக்கான பிரத்யேக கொள்கையை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

கொள்கையின் தொலைநோக்குப் பார்வை:

(i) தமிழ்நாட்டின் உற்பத்தித் திறன், நீண்ட கால தொழில் கலாச்சாரம், தொழில்நுட்ப மனிதவளம், சாதகமான வேளாண்-கால நிலைகள் மற்றும் சிறந்த இணைப்பு வசதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன்மூலம் தமிழ்நாட்டினை இந்தியாவின் முதன்மையான உணவு பதப்படுத்தும் மையமாக விளங்கச்செய்தல்.

(ii) மாநிலத்தின் செறிவுமிக்க மற்றும் பலதரப்பட்ட உணவு உற்பத்தி கட்டமைப்புகளை பயன்படுத்தி உணவு பதப்படுத்தும் தொழிலில் முன்னேற்றம் அடைதல்.

7.2.7.2. பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்

அமைப்புசாரா உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களை அமைக்கவும் மேம்படுத்தவும் "பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்" ஒன்றிய அரசு, மாநில அரசின் நிதி பங்களிப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் நோக்கமானது தனிப்பட்ட குறு நிறுவனங்களின் முறைப்படுத்துதலை ஊக்குவிக்க போட்டி திறனை அதிகரிப்பதும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு உற்பத்தியாளர்களின் விளைபொருட்களின் மதிப்பு சங்கிலியை மேம்படுத்துவதும் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் ஐந்து ஆண்டு காலத்தில் 12,000 தனிநபர் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது 'ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள்' என்ற அணுகுமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (இணைப்பு-II)

[2022 ஏப்ரல் 13

2021-22 ஆம் ஆண்டில், தனிநபர் பிரிவின்கீழ், இதுவரை 206 கடன்கள் ஒப்பளிக்கப்பட்டு ரூ.7.50 கோடி மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. குழு விண்ணப்பப் பிரிவின்கீழ், ஓர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூ.5.25 இலட்சம் மானியம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 3,942 தனிநபர்களுக்கும், 29 குழு நிறுவனங்களும், விதை மூலதனக் கூறின்கீழ் 4,520 சுய உதவிக் குழு உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

7.2.8 தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) ரூ.125 கோடி மதிப்பீட்டில் 66 உபவடி நீர்ப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல், ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக மேம்பாடு, வேளாண் தொழில் முனைவோரை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நவீனமயமாக்குதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மானியத் தொகை

1. தொடக்க மானியம் ஒரு நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம்.
2. உற்பத்தி முதலீட்டு மானியம் ஒரு நிறுவனத்திற்கு ரூ.20 இலட்சம்.
3. வணிக விரிவாக்கம் மானியம் ஒரு நிறுவனத்திற்கு ரூ.30 இலட்சம்.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.14.15 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

திட்ட விவரம்

(ரூ.கோடியில்)

நிலை	மாவட்டங்கள்	உபவடிநீர் பகுதி	நிருவாக ஒப்புதல்	உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்	பயனாளிகள்	நிதி ஒதுக்கீடு (2022-23)
I.	20	18	51.72	26	25,451	12.30
II.	17	16	26.38	24	19,700	7.80
III.	9	9	19.42	13	7,844	12.52

7.2.9. அக்மார்க் தரம் பிரிப்பு

இந்தத் திட்டம் நுகர்வோருக்கு கலப்படமற்ற உணவுப் பொருட்களை வழங்குவதற்கான தன்னார்வத் திட்டமாகும். நிர்ணயித்த தரத்தினை உறுதிப்படுத்திட, 30 மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகங்களும், ஒரு முதன்மை ஆய்வகமும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

"அக்மார்க்" என்பது ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களுக்கான தரச் சான்றாகும். வேளாண் விளைபொருட்கள் (தரம் பிரித்தலும், குறியிடுதலும்) சட்டம், 1937-ஐ (1986-ல் திருத்தியமைக்கப்பட்டது) அடிப்படையாகக் கொண்டு ஒன்றிய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்குநரகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தில் 230 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

2021-22 ஆம் நிதியாண்டில் 35.65 இலட்சம் குவிண்டால் உணவுப் பொருட்கள் தரம்பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் தரம்பிரிப்பிற்கான ஆய்வுக் கட்டணமாக தமிழக அரசுக்கு ரூ.92.34 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இத்திட்டம், 2022-23 ஆம் ஆண்டிலும் தொடரும்.

7.3 மனிதவள மேம்பாடு

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டு செயல்படும் இத்துறையின்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள், உழவர்

[2022 ஏப்ரல் 13

உற்பத்தியாளர் நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், சந்தை சார்ந்த தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் களப்பணியாளர்கள்மூலம் கொண்டு சேர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறை 1,343 துறைப் பணியாளர்கள், 1,674 விற்பனைக் குழுப் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில் ஏற்றுமதி, மதிப்புக் கூட்டல், திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள ஏதுவாக துறை வலுப்படுத்தப்பட்டு, சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை: 7.2-துறை பணியாளர்கள் விவரம்

வ. எண்	பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1	வேளாண்மை கூடுதல் இயக்குநர்	1
2	வேளாண்மை இணை இயக்குநர்	2
3	வேளாண்மை துணை இயக்குநர் (வேவ)	37
4	வேளாண்மை உதவி இயக்குநர்	5
5	வேளாண்மை அலுவலர்	170
6	துணை வேளாண்மை அலுவலர்	47
7	உதவி வேளாண்மை அலுவலர்	627
8	ஆட்சி அலுவலர்	1
9	உதவி கணக்கு அலுவலர்	1
10	இதரப் பணியாளர்கள்	452
	மொத்தம்	1,343

அட்டவணை: 7.3-விற்பனைக் குழுப் பணியாளர்கள் விவரம்

வ. எண்	பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1	முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர்	2

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
2	முதுநிலை செயலாளர்	2
3	செயலாளர் / வேளாண்மை உதவி இயக்குநர்	11
4	செயலாளர்	11
5	கண்காணிப்பாளர்	202
6	பொறியியல் மேற்பார்வையாளர்	9
7	மேற்பார்வையாளர்	346
8	இதரப் பணியாளர்கள்	1,091
	மொத்தம்	1,674

7.4 தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987-ன்படி வாரியமாக மீள திருத்தி அமைக்கப்பட்டது.

7.4.1 . வாரியத்தின் அமைப்பு

தலைவர்: அரசால் நியமனம் செய்யப்படுபவர். தலைவர் நியமிக்கப்படாத பட்சத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வேளாண்மை- உழவர் நலத் துறை அவர்கள் தலைவராகச் செயல்படுவார்.

உறுப்பினர்கள்:

i. அரசு சாரா உறுப்பினர்கள் (27 வேளாண் விற்பனைக் குழுக்களின் தலைவர்/ சிறப்பு அலுவலர்)

ii. இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை.

iii. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

iv. பொது மேலாளர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகம்.

v. ஆலோசகர், வேளாண்மை விற்பனை, ஒன்றிய அரசு.

vi. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்.

vii. தலைமைச் செயலக வேளாண்மை-உழவர் நலத் துறை சார்ந்த துணைச் செயலாளர்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் செயல்பட்டு வருகின்றது.

7.4.2. நிதி ஆதாரம்

விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக்கட்டணம் மற்றும் சந்தை கட்டண தொகையிலிருந்து 15 சதவீதத்தை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்குப் பங்குத் தொகையாகச் செலுத்துகின்றன.

7.4.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

1. சந்தை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள்.

2. சந்தை சார்ந்த உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், பராமரித்தல்.

3. விவசாயிகள், அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.

4. கருத்தரங்குகள், மாநாடு மற்றும் பொருட்காட்சிகள் நடத்துதல்.

5. விலை ஆதரவுத் திட்டத்திற்கு மாநில இணைப்பு முகமையாக செயல்படுதல்.

6. வேளாண் ஏற்றுமதி தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.

7.4.3.1 திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

சேலத்தில் மாநில பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் வேளாண்மை விற்பனை, வேளாண் வணிகத் துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டுதல், விளைபொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மின்னணு சந்தை தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

2021-22 ஆம் ஆண்டில் ரூ.12.15 இலட்சம் மதிப்பில், 45 பயிற்சிகள் 1,522 தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டிலும் இப்பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

2022 ஏப்ரல் 13]

7.4.3.2. கட்டுமானப் பணிகள்/பராமரிப்புப் பணிகள்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் கட்டுப்பாட்டில் பொறியியல் பிரிவு செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவிற்கு சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உபகோட்ட அலுவலகங்கள் உள்ளன. பொறியியல் பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள், உணவுப் பூங்காக்கள், கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள் போன்ற கட்டுமானங்களை உருவாக்கி அவற்றைப் பராமரித்து வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டில் ரூ.275 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டிலும் கட்டுமானப் பணிகள், பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்,

7.4.3.3 விலை ஆதரவுத் திட்டம்

பயிர் அறுவடைக் காலங்களில் விலை வீழ்ச்சி ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுத்திட, விலை ஆதரவுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மாநில செயலாக்க முகமையாக செயல்பட்டு வருகின்றது. “ஒன்றிய கொள்முதல் முகமையாக” ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) சார்பில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், விவசாயிகளிடமிருந்து நேரடியாக விளைபொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் கொள்முதல் செய்யப்படுகின்றது. ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்படுகின்றது.

திட்ட துவக்க காலத்திலிருந்து இதுவரை ரூ.116.15 கோடி மதிப்பிலான 17,072 மெட்ரிக் டன் பயறு வகைகள் மற்றும் 387 மெட்ரிக் டன் கொப்பரை ஆகியவை 15,488 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் 50,000 மெட்ரிக் டன் அரவைக் கொப்பரையும் 1,000 மெட்ரிக் டன் பந்து கொப்பரையும் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.12.52 கோடி மதிப்பிலான 1182 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 10,992 மெட்ரிக் டன் துவரை, 14,282 மெட்ரிக் டன் பச்சைப்

[*2022 ஏப்ரல் 13*

பயறு மற்றும் 57,350 மெட்ரிக் டன் உளுந்து ஆகியவற்றையும் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வெளிச்சந்தை விலை குறைவிலிருந்து விவசாயிகளை பாதுகாத்திட 2022-23 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

அரசின் இச்செயல்பாட்டினால், பயறு வகைகள், கொப்பரை ஆகியவற்றின் வெளிச்சந்தை விலையினை நிலைப்படுத்துவதுடன், விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்திடவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

7.4.3.4. வேளாண் ஏற்றுமதி வளர்ச்சிப் பணிகள்

தமிழக அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விளைபொருட்களின் அளவினை அதிகரிக்கும் நோக்கத்தோடு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. விவசாயிகளுக்கு ஏற்றுமதி குறித்து உதவுவதற்கு சென்னையில் வேளாண்மை ஏற்றுமதி சேவை மையம் உருவாக்கப்பட உள்ளது.

*ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் வாய்ந்த வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை ஊக்குவிப்பதற்கு வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (*APEDA*) மற்றும் தேசிய பயிர் பாதுகாப்பு நிறுவனம் (*NPPO*) போன்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்திட்டம் வகுக்கப்படும். முதல் முறையாக ஏற்றுமதி செய்பவர்களுக்கு பரிசோதனை ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (*NABL*) அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களில், ஏற்றுமதிக்காக மேற்கொள்ளப்படும் ஆய்வக சோதனைகளுக்கு 50% நிதியுதவி (அதிகபட்சமாக ரூ.10,000/-) வழங்கப்படவுள்ளது. விவசாய ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயி கண்டறியப்பட்டு அவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படவுள்ளது.*

புவிசார் குறியீடு பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அதன் தேவை மற்றும் ஏற்றுமதி அளவை அதிகரிக்கலாம். இதனைக் கருத்தில் கொண்டு மாநிலத்தின் தனித்துவமான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் நடவடிக்கைகளை அரசு துவக்கியுள்ளது. தற்போது சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, முந்திரி போன்றவற்றிற்கான புவிசார் குறியீடு பெற பதிவு செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும், முருங்கை தற்போது அதிக ஏற்றுமதி திறனைக் கொண்டுள்ளது. முருங்கை மற்றும் அதன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி திறனை கருத்தில் கொண்டு தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அரசு அறிவித்துள்ளது. முருங்கை ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிக்க மதுரையில் சிறப்பு ஏற்றுமதி வசதி மையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.4.3.5 உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

வேளாண் விளை பொருட்களில் மதிப்புக் கூட்டல் அதிக வருமானத்திற்கு வழிவகுக்கிறது, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் கொள்கையின்படி தமிழ்நாட்டில் உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

i. திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா அமைத்தல்:

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் உள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மைய வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில், "பெரிய அளவிலான உணவுப் பூங்கா" ரூ.77.02 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் இத்திட்டத்தின் திட்ட செயலாக்க முகமையாக செயல்பட்டு வருகிறது.

ii. சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள்/வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைத்தல்:

சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள் பத்து ஏக்கர் பரப்பளவில் கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம் மற்றும் மதுரை ஆகிய ஏழு இடங்களில் ரூ.191.88 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. விற்பனைக் குழு செயலாளர்கள் இத்திட்டத்திற்கு திட்டச் செயலாக்க முகமைகளாக செயல்பட்டு வருகின்றனர்.

திருவாரூர், தருமபுரி, அரியலூர், கரூர், பெரம்பலூர், இராமநாதபுரம் மற்றும் தென்காசி ஆகிய ஏழு மாவட்டங்களில் சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2022 ஏப்ரல் 13

இணைப்பு I

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

(அலகு எண்களில்)

வ. எண்	மாவட்டம்	உழவர் சந்தை	முதன்மை பதப்படுத்தும் நிலையம்	கிடங்குகள்	கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்)	குளிர்பதனக் கிடங்குகள்	குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்)	பரிவர்த்தனைக் கூடம்	வணிகர் கடைகள்	உலர்களம்	சிறப்பு வணிக வளாகங்கள்
1	காஞ்சிபுரம்	4	-	7	4000	-	-	6	-	7	-
2	செங்கல்பட்டு	10	-	2	2600	1	2	1	-	2	-
3	திருவள்ளூர்	6	-	10	12800	-	-	5	-	7	-
4	கடலூர்	5	-	14	19600	4	77	29	10	15	-
5	விழுப்புரம்	3	-	17	41100	2	40	38	-	11	-
6	கள்ளக் குறிச்சி	3	-	16	23000	2	50	29	-	7	-
7	வேலூர்	4	-	8	5000	2	27	4	-	3	-
8	இராணிப் பேட்டை	2	-	10	8500	-	-	10	-	6	-
9	திருப்பத்தூர்	3	-	8	7250	4	77	1	-	2	-
10	திருவண்ணா மலை	8	-	31	34100	7	175	47	10	12	-
11	தருமபுரி	5	5	8	7600	7	1310	6	10	10	1
12	கிருஷ்ணகிரி	5	10	10	9600	21	1547	3	-	10	1
13	சேலம்	11	-	17	15000	12	260	17	-	16	-
14	நாமக்கல்	6	-	8	7600	6	84	4	-	5	1
15	ஈரோடு	5	-	40	53602	7	1225	36	10	34	3
16	திருப்பூர்	6	-	59	81650	6	152	33	-	45	2
17	கோயம்பு த்தூர்	8	7	31	26405	20	1694	19	10	30	3
18	நீலகிரி	4	9	-	-	9	592	1	-	-	1
19	பெரம்பலூர்	2	-	2	2500	2	75	1	-	1	1

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டம்	உழவர் சந்தை	முதன்மை பதப்படுத்தும் நிலையம்	கிடங்குகள்	கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்)	குளிர்பதனக் கிடங்குகள்	குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்)	பரிவர்த்தனைக் கூடம்	வணிகர் கடைகள்	உலர்களம்	சிறப்பு வணிக வளாகங்கள்
20	அரியலூர்	2	-	5	5500	1	25	14	-	7	-
21	திருச்சிராப் பள்ளி	7	12	14	13000	12	3282	15	-	20	4
22	கரூர்	5	-	2	1000	2	27	1	-	-	-
23	தஞ்சாவூர்	5	-	28	41150	3	127	22	-	5	2
24	திருவாரூர்	7	-	17	14600	1	2	9	-	8	-
25	நாகப் பட்டினம்	1	-	13	11320	-	-	4	-	-	-
26	மயிலாடு துறை	2	-	4	3500	-	-	7	-	5	-
27	புதுக் கோட்டை	6	-	6	4350	2	125	3	-	4	1
28	மதுரை	7	-	13	15900	3	29	4	-	7	1
29	திண்டுக்கல்	5	5	14	19200	9	1115	6	-	8	1
30	தேனி	7	5	12	13500	12	722	8	-	7	3
31	விருதுநகர்	8	-	15	17200	3	150	5	-	5	-
32	சிவகங்கை	5	-	17	16450	1	25	3	-	7	-
33	இராமநாத புரம்	3	3	9	13050	6	2155	3	25	9	1
34	திருநெல்வேலி	4	2	8	10800	5	72	4	-	5	2
35	தென்காசி	2	3	6	12000	9	1980	6	10	5	-
36	தூத்துக்குடி	2	3	18	20100	11	277	7	-	5	1
37	கன்னியா குமரி	2	-	11	10500	2	27	3	-	4	2
	மொத்தம்	**180**	**64**	**510**	**605027**	**194**	**17527**	**414**	**85**	**334**	**31**

[2022 ஏப்ரல் 13

இணைப்பு-II

மாவட்டவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளைபொருட்கள் விவரம்

வ. எண்	மாவட்டம்	விளைபொருட்கள்
1.	அரியலூர்	முந்திரி சார்ந்த பொருட்கள்
2.	செங்கல்பட்டு	மீன்வளப் பொருட்கள்
3.	சென்னை	அடுமனை பொருட்கள்
4.	கோயம்புத்தூர்	தென்னை சார்ந்த பொருட்கள்
5.	கடலூர்	முந்திரி சார்ந்த பொருட்கள்
6.	தருமபுரி	சிறு தானிய பொருட்கள் (மக்காச் சோளம் தவிர)
7.	திண்டுக்கல்	கால்நடை தீவனம்
8.	ஈரோடு	மஞ்சள் சார்ந்த பொருட்கள்
9.	கள்ளக்குறிச்சி	சமையல் எண்ணெய் (நிலக்கடலை)
10.	காஞ்சிபுரம்	சமையல் எண்ணெய் (நிலக்கடலை)
11.	கன்னியாகுமரி	மீன்வளப் பொருட்கள்
12.	கரூர்	முருங்கை சார்ந்த பொருட்கள்
13.	கிருஷ்ணகிரி	மா சார்ந்த பொருட்கள்
14.	மதுரை	பருப்பு சார்ந்த பொருட்கள்
15.	நாகப்பட்டினம்	மீன்வளப் பொருட்கள்
16.	நாமக்கல்	கோழி தீவனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள்
17.	பெரம்பலூர்	கால்நடை தீவனம்
18.	புதுக்கோட்டை	நிலக்கடலை சார்ந்த பொருட்கள்
19.	இராமநாதபுரம்	மீன்வளப் பொருட்கள்
20.	இராணிப்பேட்டை	சமையல் எண்ணெய் (நிலக்கடலை)
21.	சேலம்	மரவள்ளிக் கிழங்கு சார்ந்த பொருட்கள்
22.	சிவகங்கை	தென்னை சார்ந்த பொருட்கள்
23.	தென்காசி	எலுமிச்சை சார்ந்த பொருட்கள்
24.	தஞ்சாவூர்	தென்னை சார்ந்த பொருட்கள்

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டம்	விளைபொருட்கள்
25.	நீலகிரி	காய்கறி சார்ந்த பொருட்கள்
26.	தேனி	வாழை சார்ந்த பொருட்கள்
27.	திருவள்ளூர்	பருப்பு சார்ந்த பொருட்கள்
28.	தூத்துக்குடி	பனை பொருட்கள்
29.	திருநெல்வேலி	வாழை சார்ந்த பொருட்கள்
30.	திருப்பத்தூர்	நிலக்கடலை சார்ந்த பொருட்கள்
31.	திருப்பூர்	கோழித் தீவனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள்
32.	திருவண்ணாமலை	நிலக்கடலை சார்ந்த பொருட்கள்
33.	திருவாரூர்	பருப்பு சார்ந்த பொருட்கள்
34.	திருச்சி	வாழை சார்ந்த பொருட்கள்
35.	வேலூர்	பால் பொருட்கள்
36.	விழுப்புரம்	சமையல் எண்ணெய் (நிலக்கடலை)
37.	விருதுநகர்	சிறு தானியப் பொருட்கள் (மக்காச் சோளம் தவிர)

8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

8.1. தரிசு நிலங்களில் உள்ள நீர்வடிப்பகுதிகளை பங்கேற்பு அணுகுமுறையில் மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் நிறுவப்பட்டது. பின்னர், *2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின்கீழ் மாநில அளவிலான இணைப்பு முகமை (*SLNA*) அமைக்கப்பட்டு, நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (*DPAP*), ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (*IWDP*), தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (*NWDPRA*) மற்றும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (*IWMP*) ஆகியவை இதன் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுத்தப்பட்டன.*

தற்போது,கீழ்க்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின்மூலம் செயல்படுத்தப்படுகின்றன:

[2022 ஏப்ரல் 13

1. நீர்வடிப்பகுதி மேம்பாடு-பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்-2.0 (WDC - PMKSY 2.0)
2. நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி (WDF)
3. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம் (NAFCC).

மேலும், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்கீழ்க்கண்ட திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அறிவிக்கப்பட்டு, ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் திட்ட செயலாக்கத் துறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது:

1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்-(RKVY/NADP)-RAFTAAR
2. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA)
3. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)
 i. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்-துளி நீரில் அதிக பயிர் (PMKSY-PDMC)
 ii. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்-ஒவ்வொரு பண்ணைக்கும் நீர் (PMKSY-HKKP)
 iii. விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம் (AIBP)
4. வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AIF)

8.2. நீர்வடிப்பகுதி மேம்பாடு-பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்–2.0 (WDC–PMKSY 2.0)

நீர்வடிப்பகுதி மேம்பாடு-பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்-2.0 (WDC–PMKSY 2.0) என்பது மானாவாரி மற்றும் வளங்குன்றிய நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

பொருளாதாரம் (Economy)-இயற்கை வளங்களை சமச்சீரான, ஒருங்கிணைந்த, நிலையான, திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன்

2022 ஏப்ரல் 13]

மூலம் பல்வேறு பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் நீர்வடிப்பகுதிகளிலுள்ள கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துதல்.

சூழலியல் (Ecology)-சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய, சாத்தியமான (affordable) தொழில்நுட்பங்களையும், நடைமுறைகளையும் ஊக்குவிப்பதன்மூலம் இயற்கை வளங்களைப் (சூழல் சமநிலையை மீட்டெடுக்க) பயன்படுத்துதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல்.

சமபங்கு (Equity)-நிலம், நீர் மற்றும் வளங்களை ஏழை, நிலமற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்களை சமமாக அணுகுவதை உறுதிபடுத்துவதோடு, பல்வேறு சமுதாய நிறுவனங்களில் அவர்களை ஈடுபடுத்தி சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

இத்திட்டமானது, பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப்பகுதிகளில் 27 திட்டங்களை ரூ286.73. கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டுக்காலத்தில் 1,30,330 இலட்சம் எக்டர் பரப்பில் செயல்படுத்த ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 8.1 மாவட்ட வாரியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

வ. எண்	மாவட்டம்	திட்டங்களின் எண்ணிக்கை	நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை	திட்டப் பரப்பு (எக்டரில்)	திட்ட மதிப்பு (ரூ.கோடியில்)
1	பெரம்பலூர்	3	28	11,855	26.08
2	தூத்துக்குடி	7	66	35,430	77.95
3	கிருஷ்ணகிரி	3	52	16,203	35.65
4	இராமநாதபுரம்	3	21	15,000	33.00
5	திண்டுக்கல்	5	33	21,067	46.35
6	தருமபுரி	3	31	15,775	34.71
7	விருதுநகர்	3	44	15,000	33.00
	மொத்தம்	27	275	1,30,330	286.74

[*2022 ஏப்ரல் 13*

8.2.1 திட்ட செயல்பாடுகள்

இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஐந்து வருடங்களில் செயல்படுத்தப்படும்.

i. **கட்டம்-I:** *ஆரம்பக் கட்டம் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை திட்டமிடுதல், திறன் மேம்பாட்டுப் பணிகள், நுழைவுக் கட்டப் பணிகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல் ஆகியன மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஆறு சதவீதம் செயல்படுத்தப்படும்.*

ii. **கட்டம்-II:** *செயலாக்கக் கட்டம் - இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 79%. இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள், பண்ணை உற்பத்தி அமைப்புப் பணிகள், நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகள், குறு நிறுவனங்கள் மற்றும் வணிக மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படும்.*

இயற்கைவள மேம்பாட்டுப் பணிகளின்கீழ், பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க் குட்டைகள், சிறு, நடுத்தர மற்றும் பெரிய தடுப்பணைகள், கிராம குட்டைகள், ஊருணிகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல், கேபியான் அமைப்புகள், நீர் செறிவூட்டம் அமைப்புகள், கிணறுகளைச் சீரமைத்தல் மற்றும் அமிழ்வு நீர்க் குட்டைகள் அமைக்கப்படும்.

பண்ணை உற்பத்தி அமைப்புப் பணிகளின்கீழ், தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண் காடுகள், மலர் பயிர்கள் மற்றும் தீவனப் புல் வளர்த்தல், பயிர் செயல் விளக்கங்கள், மண் புழு உரம் தயாரித்தல், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், தார்ப்பாலின் மற்றும் புல்வெட்டும் கருவி விநியோகம், பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்தல், வெள்ளாடு/செம்மறியாடு வழங்குதல், தேனீ வளர்ப்புக் கூடுகள் விநியோகம் மற்றும் கோழி வளர்த்தல் ஆகிய செயல்பாடுகள் நீர்வடிப்பகுதி கிராமங்களின் சமுதாயத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த செயல்படுத்தப்படும்.

நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகளின்கீழ், ஆயத்த ஆடை தயாரித்தல், தையல் இயந்திரம், கறவைமாடு வழங்குதல், வீடுகளில் கோழி வளர்த்தல், உணவுப் பொருள் தயார் செய்தல் மற்றும் வெதுப்பகம், பெட்டிக்கடை, கரி தயாரித்தல், உணவு மற்றும்

2022 ஏப்ரல் 13]

நிகழ்ச்சி மேலாண்மை, கைவினைப் பொருட்கள் தயாரித்தல், ஆடு வளர்த்தல், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வழங்குதல், தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, தேனீ கூடு விநியோகம், இட்லி/ தோசை மாவு அரைக்கும் இயந்திரம் வழங்குதல் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்மூலம் நீர்வடிப்பகுதிகளில் உள்ள கிராம சமுதாயத்தில் சமூக மற்றும் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பணிகள் செயல்படுத்தப்படும்.

iii. **கட்டம்-III:** ஒருங்கிணைப்பு மற்றும் திரும்பப்பெறுதல் கட்டம்-கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பணிகள்- ஆறு மாதம் முதல் ஒரு வருட காலத்தில் திட்ட நிதி ஒதுக்கீட்டில் ஐந்து சதவீதம்.

2021-22 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் ரூ.71.68 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒன்றிய அரசு விடுவிக்கப்பட்ட தொகையின் அடிப்படையில் 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.17.92 கோடி ஒப்புதல் வழங்கி அரசாணை வழங்கப்பட்டது. விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல், நுழைவு கட்டப்பணிகள் மேற்கொள்ளுதல், திறன் மேம்பாட்டுப் பணிகள், நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகள், இயற்கைவள மேம்பாட்டுப் பணிகள், பண்ணை உற்பத்தி அமைப்புப் பணிகள் மற்றும் குறு நிறுவனங்கள் மற்றும் வணிக மேம்பாடு நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டு ரூ.125.44 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

8.2.2 திட்டத்தின் பலன்கள்

i பயிர்கள், கால்நடைகள், பிற விவசாயம் சார்ந்த இனங்களில் சராசரி உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

ii அனைத்து விவசாய விளைபொருட்களின் ஒட்டுமொத்த உற்பத்தியினை அதிகரித்தல்.

iii பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தி முறைமூலம் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் நிலைகளில் உள்ள அபாயம், நிச்சயமற்ற தன்மைகளைக் குறைத்தல்.

iv. விவசாயிகளின் சராசரி வருமானத்தை அதிகரித்தல்.

v. விவசாயிகள் மத்தியில் நீடித்த நிலையான உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் பண்ணை மேலாண்மை நடைமுறைகளை பிரபலப்படுத்துதல்.

[2022 ஏப்ரல் 13

8.3. நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம்

இத்திட்டம் 2004 ஆம் ஆண்டு முதல் அரசுசாரா நிறுவனங்களின் (NGO) மூலம் செயல்படுத்தப் படுகின்றது. இந்நீர்வடிப்பகுதி திட்டங்கள் மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவினால் (State Level Steering Committee) அனுமதியளிக்கப்பட்டு, திறன் மேம்பாட்டுக் கட்டத்திற்குப் (Capacity Building Phase) பின் முழு செயலாக்கக் கட்டத்தை (Full Implementation Phase) செயல்படுத்திட தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்படுகின்றன. இத்திட்டமானது மாநில அரசு (50% கடன்) மற்றும் நபார்டு வங்கி 50% மானியம்) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

8.3.1. தற்போது செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டங்கள்

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையால் எட்டு திட்டங்கள் முறையே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒடுக்கூர், மாம்பட்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் கொப்பூர், திருச்சி மாவட்டத்தில் அய்யம்பாளையம், கடலூர் மாவட்டத்தில் காரைக்காடு, மதுரை மாவட்டத்தில் கேசம்பட்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் சேத்துப்பட்டு மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் இடையாமேலூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் முழு செயலாக்கக் கட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களுக்கான 50% திட்ட ஒதுக்கீடான ரூ.3.47 கோடியில் அரசுசாரா நிறுவனங்களுக்கு ரூ.3.11 கோடி விடுவிக்கப்பட்டு இதுவரை ரூ.2.97 கோடியில் செயல்பரப்புப் பணிகள், வடிகால் அமைப்புப் பணிகள், நிலமற்ற மகளிருக்கு வாழ்வாதார உதவிகள், பயிற்சி ஆகிய இனங்களில் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டங்கள், 2022-23 ஆம் ஆண்டும் தொடர்ந்து ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும்.

8.4. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதி (Grants-in-aid) உதவியுடன், நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும் (National

2022 ஏப்ரல் 13]

Implementing Entity), *தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையை செயலாக்க நிறுவனமாகவும் (*Executive Entity*) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயலாக்க காலம் 2019-20 முதல் 2022-23 வரை ஆகும்.

8.4.1 திட்டத்தின் நோக்கம்

1. *மண், நீர் பாதுகாப்பு மேலாண்மைமூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை தகவமைத்தல்.*
2. *பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன்மூலம் நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல்.*
3. *காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல்.*

8.4.2. திட்டத்தின் இனங்கள்

கிராம மக்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, நீர்வடிப்பகுதியின் மிக முக்கிய தேவையான நீர் சேமிப்பு தொட்டிகள் நுழைவுக்கட்டப் பணியாக அமைக்கப்பட்டுள்ளன. திட்ட செயலாக்கத்தின் தொடர்ச்சியாக, நீர்வள மண்வள மேலாண்மை செயல்பாடுகளான தடுப்பணைகள் அமைத்தல், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்துதல் ஆகியனவும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், குறுசிறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், வீடுகளில் கோழி வளர்ப்பு ஆகியனவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பருவநிலை பாதுகாப்புச் செயல்பாடுகளான மாற்றுப் பயிர்கள், பருவகாலமாற்ற நிலையை தாங்கக்கூடிய பயிர் ரகங்கள், பொது மற்றும் தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கும் உரம் தயாரிப்பு, உயிரி எரிபொருள் அமைப்புகள், வானிலை கண்காணிப்பு நிலையங்கள் ஆகியன வழங்கப்படுகின்றன.

[*2022 ஏப்ரல் 13*

2021-2022 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின்மூலம் ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, இதுவரை ரூ.7.63 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், ரூ.12.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருவநிலை பாதுகாப்பு திட்டப் பணிகள் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

8.5. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

இலக்கு : *6 பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி*

குறிக்கோள் : *6.6 மலைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்து, மீட்டெடுத்தல்.*

மாநில குறிகாட்டி : 6.6.4 வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் தோட்டக்கலைத் துறைமூலம் உருவாக்கப்பட்ட பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தற்போதுள்ள கட்டமைப்புகளின் எண்ணிக்கை.

2022-23 ஆம் ஆண்டு 3,845 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் மற்றும் 2,54,170 மீட்டர் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் ஏழு மாவட்டங்களில் பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசனத் திட்டம் 2.0 திட்டத்தின்கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பருவ நிலை மாற்றத்திற்கான, தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் 935 மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்படவுள்ளன.

8.6. வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள வேளாண்மை உட்கட்டமைப்புக்கான நிதியின்கீழ், அறுவடைப் பின்செய் மேலாண்மைக்கான நிலைத்த கட்டமைப்புகளுக்கும், சமுதாய வேளாண் கட்டமைப்புகளுக்கும் தேவைப்படும் முதலீடுகளுக்கான நிதி உதவி, மத்திய காலக் கடனாகவோ நீண்ட காலக் கடனாகவோ வழங்கப்படும்.

2022 ஏப்ரல் 13]

அறுவடைக்குப் பிந்தைய வேளாண் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன்மூலம் விளைப்பொருட்கள் வீணாவதைக் குறைத்து, மதிப்புக் கூட்டி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யலாம்.

*இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக இரண்டு கோடி ரூபாய் வரையிலான கடனுக்கு, ஏழு ஆண்டு காலத்திற்கு, ஆண்டிற்கு மூன்று சதவீதம் வட்டியில் சலுகை (*Interest Subvention*) வழங்கப்படுகின்றது. இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கடனாக இருந்தால், இரண்டு கோடி ரூபாய் வரையிலான தொகைக்கு மட்டும் மூன்று சதவீதம் வட்டிச் சலுகை கட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், இரண்டு கோடி ரூபாய் வரை உள்ள கடன்களுக்கு கடன் உத்தரவாதமும் வழங்கப்படுகிறது.*

*இத்தகைய வேளாண்மை உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்குத் தேவைப்படும் கடன் தொகையை ஆண்டுக்கு ஒன்பது சதவீத வட்டி வீதத்தில் மூன்று சதவீத வட்டிக் குறைப்புடன் வழங்கும் வகையில், பட்டியலிடப்பட்ட பொதுத் துறை, தனியர் வணிக வங்கிகள், சிறு நிதி நிறுவனங்கள், மண்டல, கிராம வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், ஒன்றிய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (*PACCS*), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (*FPOs*), சுய உதவிக் குழுக்கள் (*SHGs*), விவசாயிகள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (*JLGs*), பல்வகை கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் தொழில்முனைவோர், புதியதாக தொழில் துவங்க முன்வரும் நிறுவனங்கள், கடன் வசதி பெற இயலும்.*

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 முதல் 2032-33 வரையான திட்டக் காலத்தில் ரூ.5,990 கோடி கடன் வசதியுடன் வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

வேளாண் உட்கட்டமைப்பு நிதியின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில், ரூ.33.62 கோடி மதிப்பிலான 290 திட்டங்கள், நபார்டு வங்கியின்மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், ரூ.59.71 கோடி மதிப்பிலான 95 திட்டங்கள் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள்மூலம் தனிநபர் பயனாளிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

[2022 ஏப்ரல் 13

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.1660 கோடி நிதியில் வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கோரிக்கை 5-வேளாண்மை-உழவர் நலத் துறை

2022–2023-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு 2022-2023 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
மானியக் கோரிக்கை அனுமதித்தது	12,875,31,22	274,47,08	75,17	13,150,53,47
மொத்த தொகை சாட்டியது	3	---	---	3

நிகரச் செலவு

(ரூபாய் ஆயிரத்தில்)

கணக்குத் தலைப்பு		2020–2021 கணக்குகள்	2021–2022 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2021–2022 திருத்த மதிப்பீடு	2022-2023 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2059	பொதுப் பணிகள்	2,31,29	2,70,75	2,70,75	2,82,50
2401	பயிர் வளர்ப்பு	9,144,58,36	10,963,39,78	10,861,29,29	11,951,17,39
2402	மண்வள, நீர்வளப் பாதுகாப்பு	87,38,69	166,61,24	136,28,16	147,51,06
2408	உணவு சேமிப்பு – கிடங்கு வசதி	46,57,62	161,05,01	59,52,88	5,00,03
2415	வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும்	592,72,00	622,61,44	523,56,78	486,74,82

2022 ஏப்ரல் 13]

கணக்குத் தலைப்பு		2020–2021 கணக்குகள்	2021–2022 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2021–2022 திருத்த மதிப்பீடு	2022-2023 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்	224,32,19	275,61,76	285,17,99	246,83,18
2501	ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள்	-	6	6	-
2551	மலைப் பகுதிகள்	69,96	73,76	72,03	82,96
2702	சிறுபாசனம்	6,64,16	7,25,85	6,85,24	8,27,39
2705	பாசனப் பகுதி மேம்பாடு	-	3	3	-
2810	புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி	-	31,62,38	1	1
3054	சாலைகளும் பாலங்களும்	-	-	-	3,74,68
3451	தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள்	12,83,29	17,73,94	14,27,80	16,37,10
4401	பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு	90,12,03	221,17,08	142,84,17	165,94,74
4402	மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு	23,35,26	26,61,01	23,15,21	24,49,80
4435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	173,34,84	301,61,28	190,70,62	84,02,54

கணக்குத் தலைப்பு		2020–2021 கணக்குகள்	2021–2022 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2021–2022 திருத்த மதிப்பீடு	2022-2023 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
6401	பயிர் வளர்ப்புக்கான கடன்கள்	-	130,00,00	130,00,00	1
6425	கூட்டுறவு குறித்த கடன்கள்	-	-	-	16
7610	அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	61,10	75,00	75,00	75,00

கோரிக்கை 5-வேளாண்மை-உழவர் நலத் துறை

2022–2023 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

[ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)]

வ. எண்	துறைத் தலைவர்			வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	005 01	வேளாண்மை – உழவர் நலத் துறை - தலைமைச் செயலகம்	அனுமதித்தது	16,37,10	---	75,00	17,12,10
2.	005 02	வேளாண்மை இயக்ககம்	அனுமதித்தது	9,204,89,41	163,75,73	1	9,368,65,15
3.	005 03	வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம்	அனுமதித்தது	245,46,67	84,02,54	---	329,49,21
4.	005 04	விதைச் சான்று இயக்ககம்	அனுமதித்தது	44,88,17	---	---	44,88,17

2022 ஏப்ரல் 13]

வ. எண்	துறைத் தலைவர்			வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
5.	005 05	தோட்டக்கலை, மலைத்தோட்டப் பயிர்கள் இயக்ககம்	சாட்டியது	1	---	---	1
			அனுமதித்தது	1,969,49,15	2,19,00	---	1,971,68,15
6.	005 06	வேளாண்மைப் பொறியியல் துறை	சாட்டியது	2	---	---	2
			அனுமதித்தது	912,28,19	24,49,81	---	936,78,00
7.	005 07	வேளாண் பொறியியல் பணிகள்	அனுமதித்தது	70,02	---	---	70,02
8.	005 08	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்	அனுமதித்தது	471,75,25	---	---	471,75,25
9.	005 09	அங்ககச் சான்றளிப்பு இயக்ககம்	அனுமதித்தது	78,19	---	---	78,19
10.	005 10	சர்க்கரை இயக்ககம்	அனுமதித்தது	8,69,07	---	16	8,69,23
மொத்தம்			சாட்டியது	3	---	---	3
			அனுமதித்தது	12,875,31,22	274,47,08	75,17	13,150,53,47

நிறைவுரை

வேளாண் பெருமக்களின் நலன் காக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நற்சிந்தனையின்படி வேளாண்மை–உழவர் நலத் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, முதன் முறையாக 2021-2022 ஆம் ஆண்டில், விவசாயிகள் முதல் வேளாண்சார் வல்லுநர்கள் வரை அனைவரின் கருத்துகளையும் கேட்டறிந்து, வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கையினை தமிழக சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்து, பல்வேறு சிறப்பான செயல்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

[2022 ஏப்ரல் 13

முதலாமாண்டில் திட்டச் செயல்பாடுகளில் கிடைத்த அனுபவங்கள், ஏற்றுமதியாளர்கள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள், வர்த்தகர்கள், வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த துறை அலுவலர்களின் கருத்துகளைப் பெற்று, 2022-2023 ஆம் ஆண்டில் இரண்டாம் வேளாண் நிதிநிலை அறிக்கை, செவ்வனே தாக்கல் செய்யப்பட்டு மேலும், பல புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளன.

பாரம்பரிய தொழில்நுட்பங்களுடன் காலமுறை மாற்றத்திற்கு உகந்த வகையில் மின்னணு முறைகளும் வேளாண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டு, வேளாண்மை-உழவர் நலத் துறை ஆக்கப்பூர்வமான பரிணாம வளர்ச்சி பெற்று வேளாண் பெருமக்களின் வாழ்வில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி. மேலும், விவசாயிகள் விதைப்பு முதல் சந்தைப்படுத்துதல் வரை எதிர்கொள்ளும் சிரமங்களைக் களையும் வகையில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன.

வேளாண்மையை வணிக ரீதியாக இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்றுவதற்காக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், பனை மேம்பாட்டு இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் சந்தை, வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதியை உயர்த்துவதற்கென்று தனித் துறை என்று விவசாயிகளின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே, தமிழ்நாடு அரசு எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளினால், தமிழ்நாட்டில் உணவுப் பாதுகாப்பும், ஊட்டச்சத்து பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும் என்பதுடன், விவசாயிகளின் வருமானமும் உயரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இணைப்பு II

(167 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023

1. முன்னுரை

கால்நடைகள் காலங்காலமாக கிராமப்புற பொருளாதாரத்தின் ஓர் அங்கமாக இருந்து வருகின்றன. மக்களின் மத, சமூக மற்றும் கலாச்சார நெறிமுறைகளுடன் பின்னிப்பிணைந்த அவற்றின் முக்கியத்துவம் நாகரீகத்தைக் கடந்தும் நிலைத்திருக்கிறது. கால்நடை வளர்ப்பானது பயிர் வேளாண்மையை முழுமைப்படுத்தி துணைபுரிவதுடன், பருவமழையின் மாறுபாடுகளால் பயிர் விவசாயம் தோல்வியுற்ற காலத்திலும் விவசாயிகளுக்கு ஆதரவையும், பாதுகாப்பையும் அளித்து வருகிறது.

கால்நடைகள் விவசாய உற்பத்தியின் உலகளாவிய மதிப்பில் 40% ஆகும், இது உலகின் மிக வறுமை நிலையில் உள்ள ஒரு பில்லியன் மக்களை ஆதரிக்கிறது.

வருமான வளர்ச்சி, நகரமயமாக்கலுடன் வீட்டுச் செலவுகள் மற்றும் உணவு நுகர்வு முறையை கணிசமாக மாற்றியுள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுச் செலவு முறைகள் தானியங்களிலிருந்து விலகி கால்நடைப் பொருட்களை நோக்கி மாறியுள்ளன; உணவுப் பொருட்கள் நுகர்வில் கால்நடை சார்ந்த பொருட்கள் 25% வரை அடங்கியுள்ளன. குறைந்த வருவாய் பிரிவினரிடையே உணவுக்கான செலவின முறைகள் மாறியுள்ளன. குறைந்த வருவாய் பிரிவினரிடையே உணவுக்கான மொத்த செலவினத்தில் கால்நடை உற்பத்திப் பொருட்களுக்கு செலவிடும் தொகை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது.

சமீப காலங்களில் கால்நடை பராமரிப்புத் தொழிலானது துணை நிலையிலிருந்து ஒரு முக்கிய தொழிலாக மாறியுள்ளது. பால் உற்பத்தியின் மதிப்பு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை விட அதிகமாக ஆனதிலிருந்து இதை தெரிந்து கொள்ளலாம்.

[2022 ஏப்ரல் 13

2019 ஆம் ஆண்டில் தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) நடத்திய 77வது கணக்கெடுப்பின்படி, 2019-20 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் கால்நடைத் துறை ஒட்டுமொத்த ஆண்டு வளர்ச்சி விகிதம் 8.15% அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இந்தத் தொழிலானது விவசாயக் குடும்பங்கள் அனைத்திலும் அவர்களின் சராசரி மாத வருமானத்தில் சுமார் 15 சதவீதத்தைக் கொண்டு நிலையான வருவாயை ஈட்டித்தரும் தொழிலாக விளங்கி வருகிறது. கால்நடை வளர்ப்பு மக்கள் இடம்பெயர்வதைக் குறைக்கிறது, ஏனெனில், அது அவர்களுக்கு அர்த்தமுள்ள வேலைவாய்ப்பை வழங்கி நிலையான வருமானத்தை ஏற்படுத்தி மனித வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது. இது கணிசமான எண்ணிக்கையிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது, அவர்களில் பலர் பெண்கள் ஆவர். அவர்கள் கால்நடைகளின் பராமரிப்பு மற்றும் நிருவாகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நாட்கள் செல்லச் செல்ல, அதிகமான இளைஞர்கள் கால்நடை வளர்ப்பை முதன்மைத் தொழிலாக மேற்கொள்கின்றனர், ஏனெனில், இது ஆண்டு முழுவதும் நீடித்த மற்றும் நிலையான வருமானத்தை வழங்குகிறது. பெரும்பாலாக சிறு பண்ணை உற்பத்தி முறையைக் கொண்ட இந்தியாவில், 48% குறு விவசாயிகள், பாதிக்கும் மேலான கால்நடைச் செல்வங்களை வைத்திருப்பது மற்றும் 24% நிலங்களைக் கொண்டிருந்த போதிலும், மூன்றில் இரண்டு பங்கு ஆடுகளை வைத்திருப்பதும், கால்நடைச் செல்வங்கள்மூலம் அதிக உற்பத்தி மற்றும் இலாபம் ஈட்ட அவர்களால் முடிகிறது.

கால்நடைகள் பால், இறைச்சி மற்றும் முட்டை வடிவில் மிகவும் தேவையான சமச்சீரான சத்தான விலங்கு புரதத்தை வழங்குகின்றன மற்றும் வீட்டின் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு தேசிய ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்துவதிலும் பங்களிக்கின்றன. கால்நடைப் பொருட்கள் 17 சதவிகித கிலோ கலோரி நுகர்வுக்கும், உலக அளவில் 33 சதவிகித புரத நுகர்வுக்கும் பங்களிக்கின்றன.

இந்தியா உலகிலேயே மிகப்பெரிய கால்நடை எண்ணிக்கையைக் கொண்டு ரூ.11596.36 பில்லியன் (2019) மதிப்பிலான கால்நடை பொருட்களை உற்பத்தி செய்கிறது. வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளின், துறை வாரியான மொத்த மதிப்புக் கூட்டல் (GVA)க்கான தேசிய கணக்கு புள்ளிவிவரங்கள் (NAS) 2020-ன் மதிப்பீடுகளின்படி, தேசிய

2022 ஏப்ரல் 13]

மொத்த வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்து துறையின் GVA-*ல் (நிலையான விலையில்) கால்நடைகளின் பங்களிப்பு 24.32%-லிருந்து (2014-15) 29.35% (2019-20) ஆக அதிகரித்துள்ளது. மேலும், 2019-20-ல் நாட்டின் மொத்த மதிப்புக் கூட்டல்* GVA-*ல் கால்நடை வளர்ப்பு மட்டும் 4.35% பங்களித்துள்ளது. இதேபோல், 2020-21-ல் ரூ.939.97 பில்லியன் மொத்த மாநில மதிப்புக் கூட்டல் (*GSVA*) உடன், தமிழ்நாட்டில் கால்நடைகளின் பங்களிப்பு 2011-12-ல் 3.78 சதவிகிதத்தில் இருந்து 2020-21-ல் 5.43 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. அதே சமயம் மாநில வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் பங்களிப்பு 29.86 சதவிகிதத்தில் இருந்து 42.79 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.*

20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி (2019), உலக அளவில் இந்தியாவின் கால்நடை வளர்ப்புத் தொழில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, உலக கால்நடை எண்ணிக்கையில் இந்தியாவின் பங்களிப்பு 11.6% ஆகும். இந்தியாவில் உள்ள 536.76 மில்லியன் கால்நடைகளின் எண்ணிக்கையில் 193.46 மில்லியன் பசுவினம், 109.85 மில்லியன் எருமைகள், 74.26 மில்லியன் செம்மறி ஆடுகள், 148.88 மில்லியன் வெள்ளாடுகள் மற்றும் 9.06 மில்லியன் பன்றிகள், 851.81 மில்லியன் கோழிகள் ஆகியவை அடங்கி உள்ளன. இந்தியாவின் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை முந்தைய கால்நடை கணக்கெடுப்பை விட 4.6% அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் 9.52 மில்லியன் பசுவினங்கள், 0.52 மில்லியன் எருமைகள், 4.50 மில்லியன் செம்மறி ஆடுகள், 9.89 மில்லியன் வெள்ளாடுகள், 0.07 மில்லியன் பன்றிகள், 1.29 மில்லியன் நாய்கள் மற்றும் 120.78 மில்லியன் கோழிகள் தேசிய கால்நடை வளத்தில் கணிசமான பங்கைப் பகிர்ந்து கொள்கின்றன. அகில இந்திய அளவில் தமிழ்நாடு கோழியின எண்ணிக்கையில் 1-வது இடத்திலும், செம்மறியாட்டினத்தில் 4-வது இடத்திலும், வெள்ளாட்டினதில் 7-வது இடத்திலும், பசுவினத்தில் 13-வது இடத்திலும் மற்றும் எருமையினத்தில் 14-வது இடத்திலும் உள்ளன. 19-வது மற்றும் 20-வது ஆண்டு கால்நடை கணக்கெடுப்புக் காலங்களுக்கு இடையே தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 88.14 இலட்சத்திலிருந்து 95.19 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் ஆடுகளின் எண்ணிக்கை 81.43 இலட்சத்திலிருந்து 98.89 இலட்சமாக அதிகரித்துள்ளது. மாநில அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகள் இந்த பாராட்டத்தக்க வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன.

உலக அளவில் பால் உற்பத்தியில் 20.17 சதவிகிதம் அளவு பால் உற்பத்தி செய்து இந்தியா முதலிடத்தில் உள்ளது. 2019-20-ல் இந்தியாவின் பால் உற்பத்தி 198.44 மில்லியன் டன்னாக இருந்தது, ஒரு நபருக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவு 406 கிராம் ஆகும். 2019-20 ஆம் ஆண்டில் 8.76 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து தமிழ்நாடு இந்தியாவில் 11-வது இடத்தைப் பிடித்துள்ளது அதன் பங்களிப்பு 4.41% ஆகும். மாநிலத்தில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவு 316 கிராம் ஆகும். தமிழகத்தில் பால் உற்பத்தி கடந்த ஆண்டைவிட 4.75 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் முட்டை உற்பத்தி 2004-05-ல் 45.2 பில்லியனில் இருந்தது, 2019-20-ல் 114.38 பில்லியனாக உயர்ந்துள்ளது. ஓர் ஆண்டில் ஒரு தனிநபருக்குக் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 42-லிருந்து 86 ஆக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் மொத்த முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு 17.5% பங்கைக் கொண்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில், தமிழ்நாடு 20.02 பில்லியன் முட்டைகளை உற்பத்தி செய்துள்ளது. தனிநபருக்கு ஓர் ஆண்டில் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 265 முட்டைகள் ஆக உள்ளது.

2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த இறைச்சி உற்பத்தி 8.6 மில்லியன் டன்களாக இருந்தது மற்றும் நாட்டின் மொத்த இறைச்சி உற்பத்தியில் கோழி இறைச்சியின் பங்களிப்பு சுமார் 50.5% ஆகும். தமிழ்நாடு, 2019-20 ஆம் ஆண்டில் 0.66 மில்லியன் டன் இறைச்சியை உற்பத்தி செய்து மொத்த இறைச்சி உற்பத்தியில் 7.72% அளவுக்கு பங்களித்து, இந்தியாவில் ஆறாவது இடத்தில் உள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையானது, கால்நடை மருத்துவ நிலையங்களின் பரந்த கட்டமைப்பைக் கொண்டு, கால்நடை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் அனைத்துத் துறைகளிலும் ஈடுபடுத்திக் கொண்டு, ஏழைகள் மற்றும் வறுமை நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை சாதகமாக மேம்படுத்துகிறது.

2022 ஏப்ரல் 13]

2. துறையின் குறிக்கோள்கள்

❖ பசுவினங்களுக்கு அயலின மற்றும் கலப்பின உறைவிந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொண்டு, உள்ளூர் இன பசுக்களின் தரத்தையும், முர்ரா இன உறைவிந்தை பயன்படுத்தி எருமைகளின் தரத்தையும் உயர்த்துவது.

❖ உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களிலேயே பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது.

❖ கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கி அதன்மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது.

❖ விஞ்ஞான அடிப்படையில் கால்நடை பராமரிப்பில் கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.

❖ கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தேவையான நவீன மருத்துவ சேவையை உரிய காலத்தே அளிப்பது.

❖ தடுப்பூசிகள் போடுதல், நோய் கண்காணிப்பு மற்றும் நோய் கடுங்கண்காணிப்பு வாயிலாக, கால்நடை நோய்களைத் தடுத்து அனைத்துக் கால்நடைகளின் உடல்நலனை உறுதி செய்வது.

❖ கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது.

❖ கால்நடைகள்மூலம் மனிதர்களுக்கு பரவும் நோய்களைக் கண்டறிந்து மனிதர்களை நோயிலிருந்து பாதுகாத்தல்.

❖ நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

❖ விவசாயிகளுக்கு மற்றும் தொழில் முனைவோருக்கும் அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சியை அளிப்பது.

❖ இளைஞர்களிடையே தொழில் முனைவோர் திறன்களை உருவாக்குதல் மற்றும் வழங்குதல்

[2022 ஏப்ரல் 13

3. துறையின் மைல்கற்கள்

1799	➢ *இந்தியாவில் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் இனப்பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கிந்திய கம்பெனியால் ஐந்து கால்நடை மருத்துவர்கள் லண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டு, இந்தியாவில் கால்நடை மருத்துவ சேவை தொடங்கப்பட்டது.*
1892	➢ *இராணுவ அதிகாரிகளைக் கொண்டு தனியாக கால்நடை மருத்துவத் துறை தொடங்கப்பட்டது.*
1903	➢ *சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது.*
1924	➢ *இராணுவத்திடம் இருந்து ஒசூர் கால்நடைப் பண்ணை எடுத்துக் கொள்ளப்பட்டு கால்நடை இனப்பெருக்க நிலையம் நிறுவப்பட்டது.*
1948	➢ *துறைத் தலைவர் பதவி, கால்நடை பராமரிப்பு இயக்குநர் என்று மாற்றப்பட்டது. திரவ விந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது.*
1959	➢ *நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன.*
1969	➢ *கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் தனியாகத் தொடங்கப்பட்டது.*
1970	➢ *துறை மறுசீரமைக்கப்பட்டது.*
1975	➢ *உறைவிந்துக் குச்சிகள் வாயிலாக செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது.*
1977	➢ *கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன.*
1981	➢ *ஈரோட்டில், கோழி நோய் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டது.*
1999	➢ *கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம் அமைக்கப்பட்டது.*

2022 ஏப்ரல் 13]

2003	➢ தேசிய பசு மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தொடங்கப்பட்டது. (TNLDA)
2005-2006	➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிதி-X வாயிலாக கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது.
2006-2007	➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.
2007-2008	➢ தமிழ்நாடு கால்நடை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (TNVIIP) நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் - XI நிதியுதவியுடன் தொடங்கப்பட்டது.
2008-2009	➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.
2009-2010	➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இவ்வாறாக காப்பீட்டுத் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.
2011-2012	➢ மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் தொடங்கப்பட்டன. ➢ தீவன உற்பத்தியை பெருமளவில் அதிகரிக்க மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது. ➢ 585 கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன. ➢ வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டங்களின் எண்ணிக்கை 65 லிருந்து 76 ஆக அதிகரிக்கப்பட்டது.

	➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி XVII வாயிலாக 360 கால்நடை நிலையங்கள் மற்றும் 12 கால்நடைப் பண்ணைகளில் உள் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது.
	➢ இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் (IVPM) உள்ள நுண்ணுயிரி தடுப்பூசிகள் தயாரிப்பு ஆய்வகம் சிறந்த தயாரிப்பு முறைகள் தரத்திற்கு (GMP) மேம்படுத்த ஆணையிடப்பட்டது.
2012-2013	➢ கோழியின அபிவிருத்தித் திட்டம் தொடங்கப் பட்டது. ➢ மாவட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக, புதிய 5 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. (சென்னை நீங்கலாக). ➢ ஒசூரில் அமைந்துள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், கள அளவில் 8 மாவட்டங்களிலும் கருமாற்று தொழில் நுட்பம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது. ➢ 19-வது கால்நடை மற்றும் கோழியின ஐந்தாண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. ➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாடு ஆகிய இரு இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டன.
2013-2014	➢ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரகத்திற்குத் தரமான சேவை மற்றும் சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தியதற்காக சுதந்திர தினவிழாவில் "நல் ஆளுமை விருது" வழங்கப்பட்டது. ➢ 100 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன.

2022 ஏப்ரல் 13]

2013-2014	➢ *11 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன.* ➢ *கால்நடை பெரு மருத்துவமனைகள், கால்நடைப் பண்ணைகள் மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டப் பிரிவுகளுக்கு 53 நுண்ணலை நுண்ணாய்வுக் கருவிகள் (*Ultrasound Scanners*) வழங்கப்பட்டன.* ➢ *எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய நுண்ணலை நுண்ணாய்வுக் கருவிகள் (*Portable Ultrasound Scanners*) 5 பன்முக மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன.* ➢ *உள்நாட்டின மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் பர்கூர் ஆகியவற்றைப் பாதுகாக்க கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.* ➢ *"ஒருங்கிணைந்த சிறிய அசைபோடும் விலங்குகள் மற்றும் முயல்கள் மேம்பாட்டுத் திட்ட"த்தின்கீழ் கொட்டில் முறையில் வெள்ளாடுகள் வளர்ப்புத் திட்டம், அபிசேகப்பட்டி, செட்டிநாடு, சாத்தூர், சின்னசேலம் மற்றும் ஓசூர் ஆகிய 5 கால்நடைப் பண்ணைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.* ➢ *பெரிய அளவிலான கோமாரி நோய்க் கிளர்ச்சி, போர்க்கால அடிப்படையிலான தீவிர கட்டுப்பாடு நடவடிக்கைகளின் வாயிலாக முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது.* ➢ *கிராமப்புற புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் (சென்னை நீங்கலாக) விரிவுபடுத்தப்பட்டது.* ➢ *சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள நாய் இனப் பெருக்கப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டது.* ➢ *நபார்டு வங்கியின் XIX-வது, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன், 450 கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது.*

	➢ இந்தியாவிலேயே முதன் முறையாக "விலங்கினங்களுக்கான ஆதார செல் ஆராய்ச்சி மையம்" (Stem Cell Research Centre for Animals) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19-6-2013 அன்று துவக்கப்பட்டது. ➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம்.
2014-2015	➢ ஸ்ரீரங்கம், இலுப்பூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் புதியதாக 3 கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் வாயிலாக, வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு இணையாக, கால்நடை பராமரிப்புக் கோட்டங்களின் எண்ணிக்கை 76-லிருந்து 79 ஆக உயர்த்தப்பட்டது. ➢ புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதியதாக 2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. ➢ 100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன. ➢ 50 புதிய கால்நடை கிளைநிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ➢ கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு, போர்க்கால அடிப்படையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ➢ 500 கிராமப்புற இளைஞர்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி மற்றும் உள்ளீடுகள் வழங்கி, 500 தனியார் செயற்கைமுறை கருவூட்டல் மையங்கள் நிறுவ ஆணையிடப்பட்டது. ➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் பொருட்டு, தேசிய கால்நடை இயக்கத் திட்டத்தின்கீழ் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டது.

2022 ஏப்ரல் 13]

2014-2015	➢ நபார்டு வங்கியின் XX-வது ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் 226 புதிய கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது.
2015-2016	➢ நடமாடும் அவசர ஊர்தித் திட்டம் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. ➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் நிறுவப்பட்டது,. ➢ தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையில் உள்ள முதன்மைச் செயல் அலுவலர் பதவியை கூடுதல் இயக்குநர் பதவிக்கு நிகராக தரமுயர்த்தப்பட்டது.
2016-2017	➢ திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தீவன மற்றும் நீர் பகுப்பாய்வு ஆய்வகம் நிறுவப்பட்டது. ➢ காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டன. ➢ திருப்பூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. ➢ சென்னை, சைதாப்பேட்டையில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது.
2017-2018	➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ➢ பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டத்தில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் நிறுவப்பட்டன. ➢ மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களில் 16 புதிய நிருவாகப் பதவி தோற்றுவிக்கப்பட்டது. ➢ சிவகங்கை மாவட்டத்தில் புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. ➢ ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.

[2022 ஏப்ரல் 13

2018-2019	➢ தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் நிறுவப்பட்டது. ➢ திருநெல்வேலியில் கால்நடை மற்றும் கோழித் தீவன தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது. ➢ தருமபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி இன ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.
2019-2020	➢ சின்னசேலத்தில் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவுடன் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. ➢ திருவாரூர் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம் கட்டப்பட்டது. ➢ அரியலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் நிறுவப்பட்டன. ➢ திருப்பூர் மாவட்டத்தில் கால்நடை பன்முக மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டது. ➢ தஞ்சாவூர் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் அலுவலக புதிய கட்டிடம் கட்டப்பட்டது.
2020-2021	➢ தென்காசி மாவட்டத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம் புதியதாக நிறுவப்பட்டது. ➢ தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. ➢ தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டது ➢ இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தேனி மற்றும் உடுமலைப்பேட்டையில் தோற்றுவிக்கப்பட்டன.

4. தமிழகத்தின் கால்நடை வளம்

"கால்நடைகள் குறைந்த நிலம் ஒருபோதும் வசதியானது அல்ல, கால்நடைகள் நிறைந்த நிலம் ஒருபோதும் ஏழ்மையாக இருக்காது" என்ற அரேபிய பழமொழியை அடிக்கோடிட்டு, தமிழகம் வளமான

2022 ஏப்ரல் 13]

மற்றும் பல்வகைப்பட்ட கால்நடை வளத்தைக் கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பு என்பது தமிழ்நாட்டின் வேளாண் சமூகங்களின் வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் வறுமைகோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் பொருளாதாரத்தில் கால்நடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடைகளின் உற்பத்தி, பிறருக்கு வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் சில நேரங்களில் சிக்கலான, மதிப்புச் சங்கிலிகளில் பங்களிக்கிறது. அவை ஏழைகளுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஒரு முக்கியமான சொத்து மற்றும் பாதுகாப்பு வலையாகும், மேலும் அவை கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்களுக்கு ஊட்டச்சத்துக்கான முக்கிய ஆதாரமாக உள்ளன.

தமிழ்நாட்டில் 245 இலட்சம் பல்வேறு முக்கிய கால்நடைகள் தவிர 1207.80 இலட்சம் கோழிகள் (2019 கால்நடை கணக்கெடுப்பு) உள்ளன.

அட்டவணை 1: 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் கால்நடைகள், கோழியினங்களின் எண்ணிக்கை

இனம்	*கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)*
பசுவினம்	*95.19*
எருமையினம்	*5.19*
செம்மறியாடுகள்	*45.00*
வெள்ளாடுகள்	*98.88*
பன்றிகள்	*0.67*
மற்றவை (குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேரி கழுதைகள், கழுதைகள் மற்றும் ஒட்டகம்)	*0.07*
மொத்த கால்நடைகள்	*245.00*

TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

இனம்	கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
கோழிகள் மற்றும் இதர பறவைகள் (பண்ணை)	995.16
கோழிகள் மற்றும் இதர பறவைகள் (புழக்கடை)	212.64
மொத்த கோழியினம்	1,207.80

தேசிய அளவில் தமிழ்நாடு கோழியின எண்ணிக்கையில், 1-வது இடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையில் 4-வது இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையில் 7-வது இடத்திலும், பசுவின எண்ணிக்கையில் 13-வது இடத்திலும், எருமையின எண்ணிக்கையில் 14-வது இடத்திலும் உள்ளது.

தமிழ்நாட்டில் காங்கேயம் (திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் கரூர் மாவட்டங்கள்), உம்பளாச்சேரி (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்கள்) ஆலம்பாடி (தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்கள்) புலிக்குளம் (சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி) பர்கூர் (ஈரோடு மாவட்டம்) மற்றும் தோடா எருமைகள் (நீலகிரி மாவட்டம்) போன்ற நாட்டு மாடுகள் வளர்க்கப்படுகின்றன. இத்தகைய உள்நாட்டினங்கள் மட்டுமல்லாது கூடுதலான பால் உற்பத்தியைத் தரும் ஜெர்சி கலப்பின மாடுகள் (சமவெளிப் பகுதிகள்), ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பின மாடுகள் (மலைப் பிரதேசங்கள்) விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன.

அதேபோல், உள்நாட்டின செம்மறி ஆடுகளில் மேச்சேரி (சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்), இராம்நாடு வெள்ளை (தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்), சென்னை சிவப்பு (சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்), கிலக்கரிசல் (இராமநாதபுரம், விருதுநகர், மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்), வேம்பூர் (தூத்துக்குடி மாவட்டம்), திருச்சி கருப்பு (பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்), கோயம்புத்தூர் (கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்) மற்றும் நீலகிரி (நீலகிரி மாவட்டம்) மற்றும் உள்நாட்டின வெள்ளாடுகளில் கன்னி ஆடு (விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்), கொடி ஆடு (தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்), சேலம் கருப்பு (சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) வளர்க்கப்படுகின்றன.

2022 ஏப்ரல் 13]

5. நிருவாக அமைப்பு

கால்நடை பராமரிப்புத் துறை, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையிலான கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர்/இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பப் பணிகளில் ஆணையர்/இயக்குநர் அவர்களுக்கு உதவுவதற்காக ஐந்து கூடுதல் இயக்குநர்கள், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு துணை இயக்குநர் மற்றும் ஒன்பது உதவி இயக்குநர்கள் இயக்குநரகத்தில் பணிபுரிகின்றனர். ஓர் இணை இயக்குநர் (நிருவாகம்), ஒரு துணை இயக்குநர் (பணியாளர்) மற்றும் இரண்டு நிருவாக அலுவலர்கள் துறை நிர்வாகம் சம்பந்தமான பணிகளில் இயக்குநருக்கு உதவுகின்றனர்.


நிதி மற்றும் கணக்கு சம்பந்தமான பணிகளில் உதவுவதற்காக அயற்பணியில் நிதித் துறையிலிருந்து நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர், கருவூலக் கணக்குத் துறையிலிருந்து கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், வேளாண்மைத் துறையிலிருந்து வேளாண் உதவி இயக்குநர் மற்றும் கூட்டுறவுத் துறையிலிருந்து துணைப் பதிவாளர் ஆகியோர் ஆணையர் / இயக்குநரகத்தில் துறை சார்ந்த பணிகளில் உதவுகின்றனர்.

மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்களும் மற்றும் துணை இயக்குநர்களும், கோட்ட அளவில் உதவி இயக்குநர்களும் கால்நடை பராமரிப்புத் துறையின் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் (IVPM) கால்நடை தடுப்பூசிகள், கால்நடை உயிரியல் காரணிகளைத் தயாரிக்கிறது. இந்த நிலையம் கூடுதல் இயக்குநர் பதவி நிலையில் உள்ள ஓர் இயக்குநர் தலைமையில் நிருவகிக்கப்படுகிறது.

சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் ஓர் இணை இயக்குநரின் தலைமையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைத்தும் கண்காணித்தும் வருகிறது.

துறை நிருவாக அமைப்பு விளக்கப்படம்



2022 ஏப்ரல் 13]

6. கால்நடை மருத்துவச் சேவைகள்

கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்குக் குறித்த நேரத்தில் தேவையான மருத்துவச் சேவையை வழங்கி, மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தி அளவு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. 1959-60-களில் 120 என்ற குறைந்த எண்ணிக்கையில் இருந்த கால்நடை நிலையங்களின் எண்ணிக்கை 2020-21-ல் 2,979 என்ற அளவுக்கு விரிவடைந்துள்ளது. இத்துறையில் 16 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 14 கால்நடை பெருமருத்துவமனைகள், 152 கால்நடை மருத்துவமனைகள், 2,741 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 56 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஆகியவை கள அளவில் இயங்கி வருகின்றன. அவை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை, ஈனியல் சிகிச்சை, சினையுறாத் தன்மை நீக்க சிகிச்சை, நோய் தடுப்பு முறைகள் உள்ளிட்ட பல்வேறு கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன.

கால்நடை பன்முக மருத்துவமனைகள் பிரதம மருத்துவரைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக கால்நடை உதவி மருத்துவர்களையும் கொண்டு 24 மணி நேரமும் செயல்பட்டு சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

கால்நடை பெருமருத்துவமனைகள் பிரதம மருத்துவரைத் தலைவராகக் கொண்டு முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்கள் உதவியுடன் சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருத்துவர்களைத் தலைவராகக் கொண்டு, முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்கள் உதவியுடன் விவசாயிகளுக்குக் கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன.

கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின்கீழ் செயல்பட்டு, விவசாயிகளுக்குக் கால்நடை மருத்துவச் சேவைகளையும், அரசு நலத் திட்டங்களையும் மற்றும் விரிவாக்கச் சேவைகளையும் வழங்கி வருகின்றன.

நடமாடும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன.

கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை ஆய்வாளர்கள்மூலம் முதலுதவிச் சேவைகளையும் சிறு மருத்துவச் சேவைகளையும் வழங்கி வருகின்றன.

[2022 ஏப்ரல் 13

மேற்கண்ட கால்நடை நிலையங்களில் 2021-22 காலப் பகுதியில் ஆற்றிய பணிகள் பின்வருமாறு:

அட்டவணை 2: கால்நடை நிலையங்களில் ஆற்றிய பணிகள் 2021-22

பணிகள்		(இலட்சத்தில்)
1	சிகிச்சை அளித்தவை (முதலுதவி உட்பட)	377.39
2	செயற்கைமுறை கருவூட்டல் பணிகள்	44.62
3	தடுப்பூசி பணிகள்	405.18
4	ஆண்மை நீக்க பணிகள்	8.66
5	குடற்புழு நீக்கம்	385.92
6	கன்று பிறப்பு	22.96

அட்டவணை 3: மாவட்ட வாரியாக கால்நடை நிலையங்களின் விவரம்

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவ மனைகள்	பெருமருத்துவ மனைகள்	மருத்துவமனைகள்	மருந்தகங்கள்	கிளை நிலையங்கள்	நடமாடும் கா.ம. பிரிவுகள்
1	அரியலூர்	0	0	2	44	9	1
2	சென்னை	1	0	1	0	0	1
3	கோயம்புத்தூர்	1	1	15	98	26	2
4	கடலூர்	0	1	5	92	56	1
5	தருமபுரி	0	1	3	80	10	2
6	திண்டுக்கல்	1	0	5	106	63	1
7	ஈரோடு	2	0	6	106	24	3
8	காஞ்சிபுரம்	0	1	0	45	14	1
9	செங்கல்பட்டு	0	1	1	61	24	1
10	கன்னியாகுமரி	1	0	2	49	15	2
11	கரூர்	0	1	2	72	12	1
12	கிருஷ்ணகிரி	1	0	2	79	14	1

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவ மனைகள்	பெருமருத்துவ மனைகள்	மருத்துவமனைகள்	மருந்தகங்கள்	கிளை நிலையங்கள்	நடமாடும் கா.ம. பிரிவுகள்
13	மதுரை	1	0	4	96	53	1
14	நாகப்பட்டினம்	0	0	3	34	14	1
15	மயிலாடுதுறை	0	2	1	38	7	1
16	நாமக்கல்	0	0	5	105	8	3
17	பெரம்பலூர்	0	0	0	37	5	0
18	புதுக்கோட்டை	0	1	4	101	32	2
19	இராமநாதபுரம்	0	0	4	55	14	0
20	சேலம்	1	0	7	149	9	6
21	சிவகங்கை	0	0	2	79	47	0
22	தஞ்சாவூர்	1	1	7	105	28	3
23	தேனி	0	0	3	53	46	1
24	நீலகிரி	0	1	2	29	7	3
25	திருப்பூர்	2	0	7	102	39	1
26	திருவள்ளூர்	0	0	5	88	26	1
27	திருவண்ணாமலை	0	1	5	124	21	3
28	திருவாரூர்	0	1	10	72	30	1
29	தூத்துக்குடி	1	0	2	70	41	1
30	திருச்சிராப்பள்ளி	1	0	8	103	34	2
31	திருநெல்வேலி	1	0	5	51	16	1
32	தென்காசி	0	0	3	61	19	0
33	வேலூர்	1	0	4	38	7	1
34	திருப்பத்தூர்	0	0	2	37	9	2
35	ராணிப்பேட்டை	0	0	2	46	10	1
36	விழுப்புரம்	0	0	5	101	6	2
37	கள்ளக்குறிச்சி	0	1	2	53	18	2
38	விருதுநகர்	0	0	6	82	27	0
	மொத்தம்	16	14	152	2741	840	56

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

7. மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப் பொருட்கள்

இத்துறைக்குத் தேவையான மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப்பொருட்கள், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. நிதி ஒதுக்கீடு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 4: நிதி ஒதுக்கீடு விவரம் (2021-2022)

வ. எண்	பொருளடக்கம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1	மருந்துகள்	2,582.08
2	உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள்	321.17
3	தீவிர சுகாதாரத் திட்டம்	105.00
4	தாது உப்புக் கலவை	496.77
5	மாற்று மருந்துகள்	160.59
6	காப்பு நிதி	209.29
	மொத்தம்	3874.90

கிளை நிலையங்கள் உட்பட அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் மருந்துகள் விநியோகம் நிதி உச்சவரம்பு விதிமுறைகளைக் கவனமாக பின்பற்றுவதன்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

8. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், ராணிப்பேட்டை (Institute of Veterinary Preventive Medicine - IVPM)

தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின்கீழ் ஓர் அலகாக ராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் மாநிலத்தில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களின் பயன்பாட்டுக்காக உயிர்க்காரணிகள் மற்றும் மருந்துகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 13]

தோற்றம்

- *இந்த நிலையம் முதலில் 1932 ஆம் ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் "ஊநீர் நிலையம்" என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது.*
- *1948 ஆம் ஆண்டு இந்நிலையம் ராணிப்பேட்டையில் தற்போது உள்ள 70.961 ஏக்கர் வளாகத்திற்கு மாற்றப்பட்டது.*
- *1954 ஆம் ஆண்டு முதல் இது கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் என்று அழைக்கப்படுகிறது.*

இந்தியாவில் கால்நடை உயிர்க்காரணிகள் உற்பத்தியில் முன்னோடி

- *கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இந்தியாவில் உள்ள கால்நடை உயிர்க்காரணிகள் உற்பத்தி நிலையங்களிலே ஒரு முன்னோடி நிலையமாகத் தொடர்ந்து தன்னை நிரூபித்து வருகிறது.*
- *ஒன்றிய அரசின் மருந்து உரிம ஆணையத்தின் கட்டாயத் தேவையின்படி, தடுப்பூசி தயாரிப்பு வசதியை நல் உற்பத்தி தரத்திற்கு மாற்றியமைக்க இந்நிலையம் முதல் நடவடிக்கை மேற்கொண்டது.*
- *கோழி நோய் தடுப்பூசி தயாரிப்பு வசதி, நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது மற்றும் சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் துள்ளுமாரி போன்ற பாக்டீரியா தடுப்பூசிகளைத் தயாரிப்பதற்காக நொதிப்பானுடன்கூடிய முழு அளவிலான நல்ல தயாரிப்பு வழிமுறைகள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*
- *அடைப்பான் ஸ்போர் தடுப்பூசி தயாரிப்பு நல் உற்பத்தி தர வசதி (*GMP*) மற்றும் சோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு (*GLP*) வசதிக்கான பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் இந்த வசதிகள்* GMP/GLP *தரநிலைகளுடன் கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் விரைவில் தொடங்கப்படும்.*

[2022 ஏப்ரல் 13

நோக்கங்கள்

- முறையான தடுப்பூசிப் பணிகள்மூலம் கால்நடை நோய்களைத் தடுத்து அதன்மூலம் மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்.

- கால்நடைகளின் சுகாதாரப் பாதுகாப்புக்குத் தேவையான தடுப்பூசிகள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதிசெய்து, கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்.

- கோமாரி நோய்த் தடுப்பு மண்டல மையங்கள்மூலம் கோமாரி நோய் கடுங்கண்காணிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் கோமாரி நோய் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பைக் குறைத்தல்.

- கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம்மூலம் மாநிலத்தில் பல்வேறு நோய் கடுங்கண்காணிப்புப் பணிகளை மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் வாயிலாக மேற்கொள்ளுதல்.

- தடுப்பூசி உற்பத்தி நிலையம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தை, நல்ல தயாரிப்பு வழிமுறைகள் மற்றும் நல் ஆய்வுக்கூட வழிமுறைகள் தரத்திற்கு உயர்த்துதல். அதன்மூலம், தடுப்பூசிகளின் உற்பத்தி மற்றும் சோதனையில் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்தல்.

நிலையத்தின் பணிகள்

- இந்த நிலையம் நான்கு நுண்ணியிர் தடுப்பூசிகளையும், ஐந்து நச்சுயிரி தடுப்பூசிகளையும், ஆறு கண்டுபிடிப்பான்களையும், ஒன்பது மருந்துப் பொருட்களையும் மற்றும் ஒரு கரைப்பானையும் உற்பத்தி செய்து வருகிறது.

- அஸ்காட் தடுப்பூசி, நோய்கிளர்ச்சிகள் மற்றும் பேரிடர் போன்ற காலங்களில், கால்நடை மருத்துவ நிலையங்களின் இலக்கு மற்றும் விவசாயிகளின் தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படுகின்றன

2022 ஏப்ரல் 13]

மருந்து பொருட்கள்

களிம்புகள்	திரவியங்கள்
1. போரிக் அமிலம் 2. மெத்தில் சலிசிலிகேட் உடன் அயோடின் 3. கந்தகம் 4. துத்தநாக ஆக்சைடு 5. விட்ஃபீல்டு	1. டர்பன்டைன் 2. மெத்தில் சலிசிலேட் 3. பென்சைல் பென்சோயேட் 4.அயோடின் வலிமை குறைந்த கரைசல்

கோமாரி நோய் தடுப்பு மண்டல மையம்

இந்த மையம் கோமாரி நோய் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியைப் பெறுகிறது. கோமாரி நோய்க் கிளர்ச்சி பரவும் போது, இந்த மையத்தால் ஆய்வு மற்றும் நச்சுயிரி வகைப்படுத்துதல் மேற்கொள்ளப்படும்.

தற்போதைய பணிகள்

- விதை மற்றும் வீரியமுள்ள உயிரியல் பொருட்களைப் பராமரித்தல்.
- அஸ்காட் திட்டத்தின்கீழ் பொது மற்றும் குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்வதற்காக நுண்ணியிரி தடுப்பூசிகள், நச்சுயிரி தடுப்பூசிகள், கண்டுபிடிப்பான்கள் மற்றும் கரைப்பான்களை வழக்கமாக உற்பத்தி செய்தல்.
- இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்குத் தடுப்பூசிகளை விற்பனை செய்தல்.
- கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள எப்டிவி பிரிவில் தொழில் துறை வகை ஃப்ரீஸ் டிரையர்மூலம் நச்சுயிரி தடுப்பூசிகளை உறைந்து உலர்த்துதல்.
- கினிப் பன்றிகள், எலிகள் மற்றும் முயல்கள் கொண்டு விலங்குகள் மீதான பரிசோதனைகளின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் நோக்கத்திற்கான குழு (CPCSEA) உரிமம் பெற்று சிறிய விலங்குகள் பிரிவைத்

தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின்மூலம் தடுப்பூசிகளைச் சோதிப்பதற்காகப் பராமரித்தல்.

- *தடுப்பூசிகளின் உள் ஆய்வகச் சோதனை மற்றும் பிற தயாரிப்புகளின் விலங்கு சோதனை மேற்கொள்ளுதல்.*
- *உயிரியல் தயாரிப்புகளை கட்டுதல் மற்றும் அனுப்புதல்.*
- *ராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோமாரி நோய் மண்டல மையத்தின்* A.I.C.R.P *மூலம் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் கோமாரி நோய் பற்றிய நோயியல் ஆய்வு மேற்கொள்ளுதல்.*
- *மாநிலத்தில் எல்லா கோழிகளுக்கும் கோழிக்கழிச்சல் தடுப்பு மருந்து போடுவதற்காக, கரைசல் மற்றும் தடுப்பு மருந்தை விநியோகித்தல்.*
- *தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் அண்டை மாநில பல்கலைக்கழக கால்நடை மருத்துவ மாணவர்களுக்கு தடுப்பூசி பற்றிய கல்வியை அளித்தல்.*
- *ஆய்வகத் தொழில்நுட்பர்களுக்கான பயிற்சி அளித்தல்.*

ராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் முடிக்கப்பட்டுள்ள முதன்மையானத் திட்டங்கள்:

1. நுண்ணுயிரி தடுப்பூசி உற்பத்தி ஆய்வகத்தை நல் உற்பத்தி தரத்திற்கு உயர்த்துதல்

- *நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்*
- *மொத்த நிதி - ரூ.12.02 கோடி*
- *புதிய நல் உற்பத்தி தரத்திலான ஆய்வகத்தில் நுண்ணுயிரி தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி தொடங்கியுள்ளன.*

2. உயிர் பாதுகாப்பு சுவர் கட்டுதல்

- *நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்*
- *மொத்த நிதி - ரூ.2.07 கோடி*
- *உயிர் பாதுகாப்பு சுவர் கட்டப்பட்டுள்ளது.*

2022 ஏப்ரல் 13]

3. ராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தருதல்

- *நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்*
- *மொத்த நிதி - ரூ.1.02 கோடி*
- *திட்டம் முடிவுற்றது. நிலையத்திற்கு தண்ணீர் தினமும் வழங்கப்பட்டு வருகிறது.*

4. கோழியின தடுப்பூசி உற்பத்தி ஆய்வகத்தை நல் உற்பத்தி தரத்திற்கு உயர்த்துதல்

- *நிதியுதவி - தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்*
- *மொத்த நிதி - ரூ.3.00 கோடி*
- *புதிய நல் உற்பத்தி தரத்திலான ஆய்வகத்தில் கோழியின தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி தொடங்கியுள்ளன.*

ராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

1. அடைப்பான் ஸ்போர் தடுப்பூசி ஆய்வுக் கூடம் நிறுவுதல்

- *2012-13-ல் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இசைவளிக்கப்பட்டது.*
- *மொத்த செலவினம் – ரூ.57.98 கோடி*
- *தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலமாக தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*
- *ஆகஸ்ட் 2018-ல் கட்டுமானப் பணிகள் தொடங்கின, தற்போது மொத்த கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.*
- *பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2. தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தை நிறுவுதல்

- *நிதியுதவி – நபார்டு*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

- மொத்த செலவினம் – ரூ.19.925 கோடி
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலமாக தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஆகஸ்ட் 2018-ல் கட்டுமானப் பணிகள் தொடங்கின, தற்போது மொத்த கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.
- முக்கிய உபகரணங்களை வாங்கும் பணி நடைபெற்று வருகிறது.

3. நல் உற்பத்தித் தர மருந்து ஆய்வுக்கூடத்தை நிறுவுதல்

- 2018-19 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிவிப்பு
- மொத்த செலவினம் – ரூ.10.00 கோடி
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் GMP தர ஆலோசகரை அடையாளம் கண்டுள்ளது, திட்டத்திற்கான வடிவமைப்பு குழு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அமைப்புக்கு உற்பத்தி திறன்களின் அடிப்படையில் உபகரணங்களை இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.
- அது முடிவுற்றதும், ஆனந்திலுள்ள தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தினால், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள்:

1. நல் உற்பத்தி தரத்திற்கு ஏற்ப கன்று வீச்சு நோய் மற்றும் புலனாய்வுப் பிரிவைத் தரம் உயர்த்துதல்.

 (உத்தேசமான திட்ட செலவினம் – ரூ.28.00 கோடி)

2. நல் உற்பத்தி தரத்திற்கு ஏற்ப ஆட்டம்மை தடுப்பூசி மருந்து உற்பத்தி நிலையத்தைத் தரம் உயர்த்துதல்.

 (உத்தேசமான திட்ட செலவினம் – ரூ.35.00 கோடி)

2022 ஏப்ரல் 13]

அட்டவணை 5: நோய் தடுப்பு மருந்து உற்பத்தி விவரம் 2021-22

வ. எண்	உற்பத்தி செய்யப்படும் ஊநீர்	டோஸ்கள்
அ.	**நுண்ணுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)**	
1	அடைப்பான்	*30.00*
2	சப்பை நோய்	*3.98*
3	துள்ளுமாரி	*0.59*
4	தொண்டை அடைப்பான்	*0.59*
ஆ.	**நச்சுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)**	
1	ஆட்டம்மை	*2.24*
2	வாத்துக் கழிச்சல்	*165.26*
3	கோழிக்கழிச்சல் - F	-
4	கோழிக்கழிச்சல் - K	*405.04*
5	கோழிக்கழிச்சல் - Lasota	-
இ.	**நோய் கண்டுபிடிப்பான்கள் (மி.லிட்டரில்)**	
1	CMT - நோய்க்காரணி	*900*
2	கன்று வீச்சு நோய் - நிறமூட்டப்பட்ட நோய்க்காரணி	*990*
3	கன்று வீச்சு நோய் – பிளெய்ன் நோய்க்காரணி	*1500*
4	கன்று வீச்சு நோய் – MRT நோய்க்காரணி	*1250*
5	SPC – நோய்க்காரணி	*0*
ஈ.	**கரைப்பான் (லிட்டரில்)**	
1	பாஸ்பேட் பஃப்பர் கரைசல்	*4500*

[2022 ஏப்ரல் 13

இந்நிலையத்திலுள்ள பல்வேறு தடுப்பூசி உற்பத்தி ஆய்வகங்கள் தேசிய பால் அபிவிருத்தி வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 'நல் உற்பத்தி தரத்திற்குத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

நல் உற்பத்தி தரக் கட்டுப்பாடு/தரஉறுதி ஆய்வுக்கூடம் மற்றும் அடைப்பான் ஸ்போர் தடுப்பூசி உற்பத்தி ஆய்வுக்கூடம் ஆகியவற்றைக் கட்டும் பணி, நல் உற்பத்தி தரத்தில் சிறு பிராணிகள் சோதனைக்கூடம் (நல்ல ஆய்வக நடைமுறைகள்) கட்டும் பணி ஆகியவை தற்போது ராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9. நோய் கண்காணித்தல், கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்

பல்வேறு நுண்ணுயிரி, நச்சுயிரி, முதல் உயிரி மற்றும் ஒட்டுண்ணி கிருமிகள், கால்நடைகள் மற்றும் கோழியினங்களைத் தாக்கி விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன. கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி, நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அத்தியாவசியமானது ஆகும்.

இந்த நோக்கத்திற்காக மாநிலத்தில் 31 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளும், 3 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களும், ஒரு நோய் நிகழ்வியல் பிரிவு மற்றும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடமும் செயல்பட்டு வருகின்றன.

9.1 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் – (ADIU)

கால்நடைகளின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கு தடுப்பூசி, கண்காணிப்பு மற்றும் கடுங்கண்காணிப்பு பணிகள் கொள்ளை கால்நடை நோய்களைத் தடுப்பது அவசியம். இப்பிரிவுகள் நோய் முன்னறிவிப்பு, நோய்க் கிளர்ச்சி தடுப்பு நடவடிக்கை, விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல், தடுப்பூசிகள் விநியோகம் மற்றும் தடுப்பூசி பணிகளைக் கண்காணித்தல், பல்வேறு நோய்களுக்கான சீரம் மாதிரிகள் சேகரிப்பு, குறிப்பாக கால் மற்றும் வாய் நோய் (FMD), ஆட்டுக்கொல்லி நோய் (PPR), கன்றுவீச்சு நோய் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கின்றன

2022 ஏப்ரல் 13]

இவை தடுப்பூசிப் பணிகளின் திறனைக் கண்காணிப்பு செய்தல், நோய் எதிர்ப்புத் திறனை மதிப்பீடு செய்தல், ஒட்டுண்ணி நோய் முதல் மனிதர்களுக்குப் பரவக்கூடிய கருச்சிதைவு நோய், எலும்புருக்கி நோய், குடல் அழற்சி நோய், பறவைக் காய்ச்சல் நோய் போன்ற ஆபத்தான நோய்கள் வரை ஊநீர் பரிசோதனைக்கு மாதிரிகளைச் சேகரித்து கண்காணிப்புப் பணிக்கு உதவுதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன.

*இப்பிரிவுகளில் நவீன கருவிகளான இரத்தம் மற்றும் சிறுநீர் பகுப்பாய்வுக் கருவி மற்றும் உயிர் வேதியியல் பகுப்பாய்வு கருவிகள் போன்றவை உள்ளன. தடுப்பூசிகள் மற்றும் உயிரியல் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாத்து தடுப்பூசிகளின் குளிர் பதன நிலையினைத் தக்கவைக்க குளிர்பதன அறைகள் (*walk-in-cooler*) மற்றும் குளிர்பதனப் பெட்டிகள் உதவுகின்றன.*

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் 31 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன (சென்னை நீங்கலாக மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களான தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, மற்றும் மயிலாடுதுறை) இப்பிரிவுகள் தோற்றுவிக்கப்படாத மாவட்டங்களின் தேவையை முறையே திருநெல்வேலி, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கவனித்து வருகின்றன.

9.2 கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் (Poultry Disease Diagnostic Laboratory - PDDL)

*கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ள இடங்களில் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் நாமக்கல் மாவட்டம் ஆண்டகலூர்கேட் மற்றும் ஈரோட்டில் இயங்கி வருகின்றன. நச்சுயிரி நோய்களான கோழிக்கழிச்சல் (*RD*), பர்சா தொற்றுநோய் (*IBD*), சுவாச தொற்றுநோய் (*IB*) மற்றும் பறவையின லூக்கோசிஸ் தொகுப்பு மற்றும் நுண்ணுயிரி நோய்களான சால்மோனெல்லா, இ.கோலி மற்றும் ஒட்டுண்ணி நோய்கள் கோழி எச்சம், இதர மாதிரிகள் பரிசோதித்தல் மற்றும் பிரேதப் பரிசோதனை செய்து கோழியின நோய்களைக் கண்டறிதல் ஆகியவற்றை இவ்வாய்வுக்கூடங்கள் மேற்கொள்கின்றன.*

உயிர் பாதுகாப்பு நிலை II (BSL-II) தரத்திலான இந்த ஆய்வுக்கூடங்கள் பறவைக் காய்ச்சலைக் கண்டறிவதற்கான முதற்கட்ட ஆய்வுகளையும் மேற்கொள்கின்றன.

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தேசிய பால் மேம்பாட்டு வாரியம் (NDDB) மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) இணைந்து நீர் மற்றும் தீவன பரிசோதனை ஆய்வகத்துடன்கூடிய கோழியின நோய்களைக் கண்டறியும் ஆய்வுக்கூடம் அப்பகுதியில் ஏராளமான கறிக்கோழி (பிராய்லர்) விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கட்டப்பட்டுள்ளது.

9.3 கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு (Veterinary Epidemiology Centre - VEC)

கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, சென்னை-35, சைதாப்பேட்டையில் செப்டம்பர்-2017-ல் தோற்றுவிக்கப்பட்டது. இது தமிழ்நாட்டில் கால்நடைகள் மற்றும் கோழி நோய்களின் கடுங்கண்காணிப்பு, கண்காணிப்பு மற்றும் கால்நடை மற்றும் கோழி நோய்கள் பற்றிய முன்னறிவிப்பை மேற்கொள்ளும் மாநில அளவிலான உயர்மட்ட அமைப்பாகும்.

இந்தப் பிரிவுக்கு இணை இயக்குநர் நிலையில் உள்ள முதன்மை நோய் நிகழ்வியல் அலுவலர் தலைமை வகிக்கிறார்.

இப்பிரிவானது, மாவட்ட அளவில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வுகூடங்களின் செயல்பாடுகளை அவ்வப்போது கண்காணித்து, நோய் பரவல் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குகிறது மற்றும் நோயின் தாக்கம் விரைவில் குறைக்கப்படுவதை உறுதி செய்கிறது.

ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தரநிலை நெறிமுறையின்படி (MSP) மண்டல நோய் கண்டறியும் ஆய்வகத்துடன் இணைந்து மூன்று துறைசார்ந்த பண்ணைகளின் (மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர், அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகை) உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பராமரிக்கப்படும் பொலிகாளைகளை பரிசோதிப்பதில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. நோயற்ற

2022 ஏப்ரல் 13]

கால்நடைகளிலிருந்து பெறப்பட்ட செயற்கை கருவூட்டலுக்கான உறைவிந்து குச்சிகள் விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

ஒன்றிய அரசால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு பறவைக் காய்ச்சலுக்கு எதிராக கோழிப் பண்ணைகள்/நிறுவனங்களை ஆய்வு செய்வதை ஒருங்கிணைக்கிறது, அவ்வப்போது சர்வதேச கால்நடை சுகாதார அமைப்பினால் (OIE) பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளின்படி பண்ணைகள் இயங்குவது மற்றும் தேவையான அனைத்து உயிர்பாதுகாப்பு மற்றும் உயிர் காப்பு தரநிலைகளையும் பராமரிக்கிறது என்பதையும் உறுதி செய்கிறது.

நடப்பாண்டில் 2021-22 இதுவரை 39 கால்நடை நோய் கிளர்ச்சிகள் தொடர்பான ஆய்வுகளும், கோமாரி நோய் தடுப்பூசிப் பணி, அஸ்காடு தடுப்பூசிக் கண்காணிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

9.4 மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் (Central Referral Laboratory - CRL)

மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், மாநிலத்தின் உச்ச நிலை ஆய்வுக்கூடமாகும். இது ராணிப்பேட்டை மாவட்டத்தில் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

சர்வதேச கால்நடை சுகாதார அமைப்பினால் (OIE) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூட உத்திகளின்மூலம் நோய்களை உறுதிப்படுத்துவதிலும், நோய்க் கிளர்ச்சியை அறிவிப்பதிலும், நோய்க் கிளர்ச்சியின்போது நோயைக் கட்டுப்படுத்த தொழில்நுட்ப அறிவுரைகளை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்/கோழியின நோய்க் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றிற்கு வழங்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

9.5 நோய் தடுப்பு நடவடிக்கைகள்

தடுப்பூசி பணிகள் அனைத்தும் கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கால்நடை நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும், முந்தைய 5 ஆண்டுகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தின் அடிப்படையில் நோய் முன்னறிவிப்பு செய்யப்பட்டு, நோய்த் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ள காலத்திற்கு முன்பாகவே அனைத்து மாட்டினங்களுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

[2022 ஏப்ரல் 13

ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி ஒன்றிய அரசின் திட்டத்தின் (PPR-CP) மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களான அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை நோய்களுக்கான தடுப்பூசிகள் ராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்கான நிதி ஆதாரம், கால்நடைகளின் நோய்களை கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கும் ஒன்றிய அரசு திட்டத்தின் (ASCAD) மூலம் பெறப்பட்டு தடுப்பூசிப் பணிகள் அனைத்தும் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 6: தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரம் 2021-2022

நோய்	தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை	தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்)
அடைப்பான்	மாட்டினம் மற்றும் ஆட்டினம்	29.430
சப்பை நோய்	மாட்டினம்	4.500
கால் மற்றும் வாய் கோமாரி	மாட்டினம்	63.300
தொண்டை அடைப்பான்	மாட்டினம்	0.810
ஆட்டுக்கொல்லி	வெள்ளாடு	12.000
வெறிநோய்	செல்லப்பிராணிகள்	1.250
ஆட்டம்மை	செம்மறியாடு	0.039
மொத்தம்		111.329

கோமாரி நோய் என்பது இரட்டைக் குளம்பின கால்நடைகளைத் தாக்கி, கொப்புளங்களை ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்று நோய் ஆகும். இந்நோய் அதிக அளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக,

2022 ஏப்ரல் 13]

*ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி நோய் தடுப்புத் திட்டம் (*FMD-CP*) செயல்படுத்தப்பட்டது.*

*இதுவரை, கோமாரி நோய் தடுப்புத் திட்டம் திட்டத்தின் (*FMD-CP*)கீழ் மாநிலத்தில் 17 சுற்றுகள் கோமாரி நோய் தடுப்பூசி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, தகுதியுள்ள தோராயமாக 94 இலட்சம் பசுவினங்களுக்கு ஒவ்வொரு சுற்றும் ஆறு மாத இடைவெளியில் தடுப்பூசி போடப்பட்டது.*

9.5.1 தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்- கோமாரி நோய் மற்றும் கன்றுவீச்சு நோய் (NADCP)

*கோமாரி நோய் மற்றும் கன்றுவீச்சு நோய் திட்டம் (*NADCP*) ஒன்றிய அரசின் 100% நிதி ஒதுக்கீட்டின்கீழ், மாநிலத்தில் உள்ள தகுதியுள்ள மாடுகளுக்கும் கால் மற்றும் வாய் நோய்க்கு எதிரான தடுப்பூசிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் முதல் சுற்றில் தகுதியான 87.03 இலட்சம் மாட்டினங்களுக்குக் கோமாரி நோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டது.

2021-22 ஆம் ஆண்டில், இரண்டாவது சுற்றில், 29.3.2022 தேதிவரை தகுதியான 63.30 இலட்சம் மாட்டினங்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

NADCP-*ன்கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசினால் வழங்கப்படும் கன்று வீச்சு நோய் தடுப்பூசிப் பணி தகுதியான பசுக் கன்றுகளுக்கு மேற்கொள்ளப்படும்.*

10. கால்நடை அபிவிருத்தி

10.1 கால்நடைப் பண்ணைகள்

இத்துறையில் 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகியவை அடங்கும். கால்நடை பராமரிப்புத் தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப உத்திகளைக் கால்நடை வளர்ப்போருக்கு எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்கும் விதமாக துறைப் பண்ணைகள் மாதிரி அலகுகளாகச் செயல்பட்டு வருகின்றன. தீவன விதைகள், தீவன புல்கரணைகள் மற்றும் சிறந்த மரபு திறன் கொண்ட கால்நடைகள் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள நியாய விலையில் வழங்கப்படும்.

அட்டவணை 7: துறை பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பராமரிக்கப்படும் கால்நடை இனங்கள்

வ. எண்	பண்ணையின் பெயர்	வகை	இனங்கள்
1	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி
		எருமையினம்	முர்ரா
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிந்தி, காங்கேயம், பர்கூர், புலிக்குளம்
		செம்மறியாடுகள்	மேச்சேரி
		வெள்ளாடுகள்	தலைச்சேரி, கொடியாடு, சேலம் கருப்பு
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்க்ஷயர்
		கோழிகள்	அசில்
		குதிரைகள்	கத்தியவார் மற்றும் தரோ இனம் (Thoroughbred)
3	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், சாஹிவால்
		செம்மறியாடுகள்	கீழக்கரிசல்
		வெள்ளாடுகள்	கன்னிஆடு
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்க்ஷயர், லேண்ட்ரேஸ்
		கோழிகள்	வனராஜா, அசில்

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பண்ணையின் பெயர்	வகை	இனங்கள்
4	*மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)*	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம்
5	*மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)*	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம்
		செம்மறியாடுகள்	இராமநாதபுரம் வெள்ளை
		வெள்ளாடுகள்	ஜமுனாபாரி
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்கைஷயர், லேண்ட்ரேஸ்
6	*மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)*	பசுவினம்	ஜெர்சி
		எருமையினம்	முர்ரா
7	*மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)*	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், தார்ப்பார்க்கர், சாஹிவால்
		செம்மறியாடுகள்	இராமநாதபுரம் வெள்ளை
		வெள்ளாடுகள்	ஜமுனாபாரி, தலைச்சேரி
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்கைஷயர்
		கோழிகள்	அசில்

[2022 ஏப்ரல் 13

வ. எண்	பண்ணையின் பெயர்	வகை	இனங்கள்
8	கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்)	பசுவினம்	உம்பளாச்சேரி
9	ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (கள்ளக்குறிச்சி மாவட்டம்)	செம்மறியாடுகள்	மேச்சேரி, சென்னை சிவப்பு
		வெள்ளாடுகள்	சேலம் கருப்பு, தலைச்சேரி
10	ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)	செம்மறியாடுகள்	சென்னை சிவப்பு
11	ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)	செம்மறியாடுகள்	வெம்பூர்
		வெள்ளாடுகள்	கன்னிஆடு
12	கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (செங்கல்பட்டு மாவட்டம்)	கோழிகள்	வனராஜா, அசில், நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன், ரோட் ஐலாண்ட் சிவப்பு,
		வான்கோழிகள்	பெல்ட்ஸ்வில்லி வெள்ளை
		காடை	ஜப்பானிய காடை
13	தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)		தீவன சோளம் கோஎப்எஸ்-31, கம்பு நேப்பியர்-கோ-4, கோ-5, வேலி மசால், அகத்தி

10.2 உறைவிந்து உற்பத்தி

மாட்டினங்களில் பால் உற்பத்தியை உயர்த்தும் நோக்கோடு மரபணு தரத்தை உயர்த்துவதற்காகவும், தரமான உறைவிந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை, மாவட்ட கால்நடைப்

2022 ஏப்ரல் 13]

பண்ணை, ஓசூர் மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணை ஆகிய 3 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில், தரமான உறை விந்து உற்பத்தி செய்யும் நோக்குடன், இந்திய அரசு வகுத்துள்ள குறைந்தபட்ச தர நிர்ணய வழிகாட்டுதல்கள் முழுமையாகப் பின்பற்றப்படுகின்றன. மேலும், ஈச்சங்கோட்டை மற்றும் உதகமண்டலம் உறைவிந்து நிலையங்களுக்கு இந்திய தர நிலைகளின் பணியகம் (Bureau of Indian Standards) I.S.O சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் விவசாயிகள் பராமரிக்கும் கால்நடைகளில் சிறந்த கருவுறுதல், சினைபிடிப்பு சதவிகிதம் மற்றும் விரைவான மரபுவழி முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கு ஏற்ற உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்கின்றன.

உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து குச்சிகளை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏதுவாக, 31 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பிரிவுகள் தீவன விதைகள், தீவன நாற்றுகள் மற்றும் தீவன மரக் கன்றுகளைத் தேவையான விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல் ஆகியவற்றின் வாயிலாக தீவன அபிவிருத்திப் பணியிலும் ஈடுபட்டுள்ளன.

அட்டவணை 8: உறைவிந்து உற்பத்தி (இலட்சம் டோஸ்களில்)

வ. எண்	உறைவிந்து உற்பத்தி நிலையம்	2018-19	2019-20	2020-21	2021-22
1	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை	29.33	38.42	49.13	28.79
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர்	11.05	16.05	14.84	10.73
3	மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகை	18.43	10.34	11.74	10.30
மொத்தம்		58.81	64.81	75.73	49.82

[2022 ஏப்ரல் 13

11. திட்டங்கள்

கால்நடை பராமரிப்பு, இலட்சக்கணக்கான குறு, சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை மக்களுக்கு வாழ்வாதாரத்தை அளிக்கும் தொழிலாக விளங்குகிறது. இத்துறையானது வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி, பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து, கிராமப்புறப் பகுதிகளில் நீடித்த, நிலையான வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஏழை, எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான, பயனாளிகள் சார்ந்த பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

11.1 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் 18.1.2000 அன்று தற்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வந்தது. தற்போதைய நிதியாண்டில் இத்திட்டமானது சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் என தரம் உயர்த்தப்பட்டு, நடப்பு நிதியாண்டில் ரூ.7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில், 7760 சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் தொலைதூர அணுக முடியாத கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் கால்நடை சுகாதார வசதிகளை வழங்கவும், விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில், நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி, ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சினை சரிபார்ப்பு, சுண்டுவாத அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறப்பு மகப்பேறியல் மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளுடன் தாது உப்பு கலவைகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதுவரை, 7760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதனால் 8.06 இலட்சம் விவசாயிகளின் 76.54 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் பயன்பெற்றுள்ளன.

2022 ஏப்ரல் 13]

11.2 தீவன அபிவிருத்தி

சமச்சீர் ஊட்டச்சத்து என்பது கால்நடைகளின் உற்பத்தி திறன், ஆரோக்கியம் மற்றும் நலனைப் பாதுகாக்கும் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். சீரான விகிதத்தில் நல்ல தரமான தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதன்மூலம் மட்டுமே பால் உற்பத்தி அதிகரிப்பின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய முடியும். பசுந்தீவனத்தின் வழி, ஊட்டச்சத்தினைக் கால்நடைகளுக்கு வழங்குவது பொருளாதார சிக்கனத்திற்கான ஆதாரமாகும். இது கால்நடைகளின் நல்ல ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும், இனப்பெருக்கத் திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. கால்நடைகளுக்குப் பசுந்தீவனத்தை அதிகளவில் பயன்படுத்துவதால் பால் உற்பத்தி செலவினைக் குறைத்து அதிக லாபம் கிடைத்திட வழி வகுக்கின்றது.

பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வளமற்ற மேய்ச்சல் நிலங்களில் இருந்து கிடைக்கும் தீவனத்தைவிட, பயிரிடப்பட்ட தீவனங்களில் இருந்து பெறப்படும் ஊட்டச்சத்து கால்நடை உற்பத்திக்கு உகந்ததாகும். உணவு மற்றும் பணப் பயிர்களுக்கான தேவை அதிகரித்துள்ளதால் விவசாய நிலத்தில் பசுந்தீவன சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது.

11.2.1 பசுந்தீவன உற்பத்தியில் உள்ள இடர்பாடுகள்

அதிக மகசூல் தரும் பசுந்தீவன இரகங்கள் குறைந்த அளவில் கிடைப்பது, மேம்படுத்தப்பட்ட இரகங்களின் தரமான விதைகள் போதிய அளவு இல்லாமை, தரம் குறைந்த உலர் தீவனங்கள், பணப் பயிர்களுக்கென்று சாகுபடி நிலங்களை மாற்றுவது போன்றவை பசுந்தீவனப் பயிர்களின் பரப்பை அதிகரிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களாகும். இது தவிர விவசாயிகள் பசுந்தீவன உற்பத்தியில் முதலீடு செய்யாமை, பசுந்தீவன அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை இல்லாமை, உபரி பசுந்தீவனங்களை பாதுகாத்து சேமிக்காதது, மேய்ச்சல் நிலங்களின் ஒழுங்கற்ற மேய்ச்சல் மேலாண்மை, போதிய விரிவாக்கம் மற்றும் மனிதவள ஆதரவு இல்லாமையே தீவன பற்றாக்குறை நிலைமையை கணிசமாக அதிகரித்ததற்கான முக்கிய காரணங்களாகும்.

பசுந்தீவனத்தின் தேவைக்கும் இருப்புக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க, சான்றளிக்கப்பட்ட விதைகள்/

[*2022 ஏப்ரல் 13*

மேம்படுத்தப்பட்ட உயர் விளைச்சல் தரக்கூடிய தீவனப் பயிர்களின் தரமான நடவுப் பொருட்களைப் பயன்படுத்தி பசுந்தீவன விளைச்சலை மேம்படுத்த வேண்டும். ஆண்டு முழுவதும் பசுந்தீவன உற்பத்தியை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு பண்ணையிலும் தேவைக்கு மிகுதியாக உள்ள தீவனத்தை ஊறுகாய் புல்லாகவோ (சைலேஜ்) அல்லது உலர்ந்த நிலையிலோ சேமித்து வைப்பது அவசியம். மேலும், பசுந்தீவனம் அதிகம் கிடைக்கும் காலங்களில் ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு உணவளிக்கும் பொருட்டு தீவனங்களை பாதுகாத்து சேமிக்கப்பட வேண்டும்.

11.2.2 துறையினால் மேற்கொள்ளப்படும் நிலையான தீவன உற்பத்தி முயற்சிகள்

மாநில தீவன மேம்பாட்டுத் திட்டம் (SFDS) பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய அரசினால் பகிரப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம், குறிப்பாக தீவன தட்டுப்பாடு ஏற்படும் காலங்கள் மற்றும் வறட்சி/வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களின்போது, தீவனப் பற்றாக்குறையைச் சமாளிக்க, தீவன உற்பத்தியை அதிகரிப்பது, கிடைக்கும் தீவனங்களைப் பாதுகாத்தல் மற்றும் தீவன மேலாண்மை செய்தல் ஆகியவற்றில் இத்துறையானது கவனம் செலுத்துகிறது. தேசிய கால்நடை இயக்கம் (NLM), தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) துரிதப்படுத்தப்பட்ட தீவன உற்பத்தித் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) மற்றும் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) போன்றவை.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

- **விழிப்புணர்வு ஏற்படுத்துதல்** - சமச்சீர் ஊட்டச்சத்து நிறைந்த பசுந்தீவனங்களைக் கால்நடைகளுக்கு வழங்குவது, கால்நடைகளில் ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பசுந்தீவன உற்பத்தி ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு கிராம அளவில் நடத்தப்படும் "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" மூலம் உருவாக்கப்பட்டு வருகிறது.

- **விவசாயிகள் நிலங்களில் செயல்விளக்க திடல்கள் அமைத்தல்** - விவசாயிகளிடையே சமச்சீரான ஊட்டச்சத்து தீவனங்களை பயிரிடுவதையும், கால்நடைகளுக்கு வழங்குவதையும் விளக்கும் வகையில்,

2022 ஏப்ரல் 13]

தீவனசோளம் CSV 33, ஸ்டைலோ ஸ்கேப்ரா, ஸ்டைலோ ஸ்கோஃபீல்ட் மற்றும் தீவன காராமணி போன்ற தீவன விதை தளைகள் (Kits) அடங்கிய 100 எண்ணிக்கையிலான செயல்விளக்க அலகுகள், சேலம், நீலகிரி, கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

- **வணிக ரீதியான தீவன உற்பத்தி**-விவசாயிகள்/கிராமப்புற இளைஞர்களை வணிக ரீதியாக தீவன உற்பத்தி மற்றும் பாதுகாப்பு நுட்பங்களில் ஊக்குவிக்கும் வகையில், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், விருதுநகர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 150 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களைத் தீவன மக்காச்சோளம்/சோளம் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டு, சாகுபடி செலவில் விதைகள் உட்பட (அறுவடை செலவு தவிர) 50% மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. தீவனப் பயிர்களை அறுவடை செய்யும் பணி இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 712 மெட்ரிக் டன் பசுந்தீவனங்கள் ரூ.3.50/கிலோ என்ற வீதத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, 11,700 சைலோ பேல்களாக மாற்றி மாவட்ட கால்நடை பண்ணை, ஓசூர், செட்டிநாடு, புதுக்கோட்டை மற்றும் ஆட்டுப்பண்ணை, சாத்தூரில் அவசர கால தேவைக்காகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

- **அறிவியல் ரீதியாக மேய்க்கால் நிலம் மேம்பாடு** - கிராமப்புற பொருளாதாரத்திற்கு, குறிப்பாக குறு மற்றும் சிறு விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்பு தவிர்க்க முடியாதது. இந்த விவசாயிகள் அவர்களது கால்நடைகளின் தீவன தேவைகளுக்கு தங்கள் கிராமத்தில் உள்ள பொது மேய்ச்சல் நிலங்களையே சார்ந்துள்ளனர். எனவே கிராம அளவில் பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்திட விஞ்ஞான ரீதியாக மேய்க்கால் நிலங்களை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதற்கென முன்னோடித் திட்டமாக தற்போது மாநிலத்தில் 31 மாவட்டங்களில் 1,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தை மேம்படுத்தும் பணி ரூ.1.67 கோடி ஒதுக்கீட்டுடன் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து இராஜ் துறையில் MGNREGS நிதியினை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முள்புதர் அகற்றும்

பணி, நிலத்தை மேம்படுத்துதல், உயிர் வேலி அமைத்தல் மற்றும் நிலத்தைச் சீரமைத்து பகுதிகளாகப் பிரித்து அதன் ஓரங்களில் அந்த இடத்திற்கும், பருவ நிலைக்கும் ஏற்றவாறு தீவன மரங்கள் அதாவது சூபாபுல், வெல்வேல், கிளைரிசிடியா போன்ற மரங்களைப் பயிர் செய்தல். தீவன மரக்கன்றுகளுக்கு இடையேயான இடைவெளியில் அதிக விளைச்சல் தரும் பல்லாண்டு வகை புல், பயறு வகைகள்-செங்கரஸ் மற்றும் ஸ்டைலோ தீவன விதைகளை விதைத்து ஓராண்டு பராமரித்து அந்தந்த ஊராட்சிகளில் ஒப்படைக்கப்படும். ஓராண்டு வரை மேம்படுத்தப்பட்ட மேய்க்கால் நிலங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்காமல் பாதுகாத்து இரண்டாவது வருடம் முதல் கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்காக பயன்படுத்திட அனுமதி வழங்கப்படும். இதனால் கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் அதிக மகசூல் தரும் பல்லாண்டு புல் மற்றும் பயறு வகை தீவனங்கள் கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் கிடைக்கும்.

- **மாற்று தீவன உற்பத்தியை ஊக்குவித்தல்** *-கால்நடைகளுக்கு மாற்றுத் தீவனங்களைப் பயன்படுத்தும்போது தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, தீவனச் செலவுகளைக் குறைக்க இயலும். அசோலா ஒரு மாற்றுத் தீவனம் மற்றும் அனைத்து வகையான கால்நடைகளுக்கும் சமச்சீரான ஊட்டச்சத்தினை வழங்கும் தீவனமாகும். மாற்றுத் தீவனங்களை அளிப்பதன் முக்கியத்துவம் மற்றும் அதன் சாகுபடி முறை குறித்து விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக விவசாயிகள் வயலில் 30,958 அசோலா உற்பத்தி அலகுகள் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன.*

- **மாற்று தீவன உற்பத்தி தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல்** *- குறைந்த மழைப் பொழிவு மற்றும் சாகுபடி பரப்பு சுருங்கி வருவதால், விவசாயிகள் தீவன உற்பத்திக்கென்று தங்கள் பண்ணைப் பகுதியை ஒதுக்க இயலவில்லை. எனவே, மண்ணில்லா பசுந்தீவன வளர்ப்பு முறையான நீர்ம தீவன வளர்ப்பு ஹைட்ரோபோனிக்ஸ் (Hydrophonics) மூலம் தீவன உற்பத்தி ஒரு சாத்தியமான மற்றும் செலவு குறைந்த முறை என்பதை விளக்கும்*

2022 ஏப்ரல் 13]

விதமாக விவசாயிகள் வயலில் 3,600 ஹைட்ரோபோனிக்ஸ் அலகுகள் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன.

*மாதிரி சில்விபாஸ்டோரல் அமைப்பை நிறுவுதல்** - *கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், தீவனப் பற்றாக்குறையை போக்கவும், மரத் தீவனங்கள், மேய்ச்சல் புற்கள் மற்றும் பயறு வகைகளை கால்நடைகளுக்கு உணவாக அளிப்பதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு உணர்த்தும் வகையில், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சாத்தூர் ஆட்டுப் பண்ணையில் மாதிரி சில்விபாஸ்ச்சர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.*

11.2.3 தீவன பதப்படுத்துதல்/சேமிப்பு நடவடிக்கைகள்

- **ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகுகளை நிறுவுதல்** - *பருவமழை காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனத்தை விவசாயிகளே ஊறுகாய் புல் (சைலேஜ்) தயாரித்தல்மூலம் பாதுகாத்து, தீவனப் பற்றாக்குறைக் காலத்தில் பயன்படுத்துவதன்மூலம் ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் வழங்கப்படுவதை செயல் விளக்கங்களாக விளக்கும் வகையில், 30 மாவட்டங்களில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்-மானாவாரிப் பகுதி மேம்பாட்டின்கீழ் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் 125 சைலேஜ் தயாரிக்கும் அலகுகள் ரூ.1.17 கோடி செலவில் செயல்விளக்க அலகுகளாக நிறுவப்பட்டு வருகிறது.*

- **தீவன விரயத்தைக் குறைப்பதன்மூலம் தீவனப் பாதுகாப்பை உறுதி செய்தல்**- *கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனத்தில் 15-20%வரை கால்நடைகளால் உட்கொள்ளாமல் விரயமாகிறது. எனவே, வீண் விரயத்தைக் குறைக்க தீவனங்களை நறுக்கி சிறு துண்டுகளாக்கி வழங்குவது அவசியம். தீவன உற்பத்தியில் உள்ள இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, கிடைக்கும் தீவனத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 1,000 புல் நறுக்கும் கருவிகள் 75% மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

- **பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்** - *தீவன உற்பத்தி மற்றும் நாள்தோறும் தீவனங்களைக் கால்நடைளுக்கு வழங்குவது, அதிக உழைப்பு மற்றும் அதிக நேரம் விரயமாவதாக விவசாயிகளால் கருதப்படுகிறது. பெரும்பாலான தீவனப் பயிர்கள் அதிக அளவில் கால்நடைகளுக்கு வழங்கப்பட வேண்டும். எனவே, தீவன உற்பத்தியை மேம்படுத்தவும், ஒரு யூனிட் பரப்பளவில் உற்பத்தியை அதிகரிக்கவும், தீவன அறுவடையில் தகுந்த இயந்திரமயமாக்கல் அவசியமாகிறது. பண்ணை செயல்பாட்டில் உள்ள வேலைப்பளுவைக் குறைப்பதற்கும், பண்ணை வேலைகளை இலாபகரமானதாக மாற்றுவதற்கும் தீவனப் பயிர்களை அறுவடை செய்வதற்காக 75% மானியத்தில் 2,500 புல் வெட்டும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

11.2.4 துறைசார் பண்ணைகளில் தீவன மேம்பாடு

துறை சார்ந்த பண்ணைகள் விவசாயிகளுக்கு பசுந்தீவனம், தீவன நடவு பொருட்கள், தீவன மரக்கன்றுகள் மற்றும் மண்புழு உரம் ஆகியவற்றை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் வழங்குவதை உறுதி செய்கிறது. புல் வகை தீவனங்கள் முக்கியமாக கரணைகள்/நாற்றுகள்மூலம் பயிரிடப்படுகின்றன. நமது மாநிலத்தில் பயிரிடப்படும் முக்கிய புல் தீவனம் ஒட்டு இரக கம்பு நேப்பியர் புல் ஆகும். கடந்த பல ஆண்டுகளாகத் துறையின் இடைவிடாத முயற்சியால், தீவனப் பெருக்கம் என்ற கருத்து விவசாயிகள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது. இதனால் விவசாயிகளிடையே தரமான தீவன நடவு பொருட்களை உற்பத்தி செய்து, விவசாயிகள் தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொண்டும் வருகின்றனர். மேலும், செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு ஒரு பேலர் யூனிட் ரூ.9.50 இலட்சத்திற்குக் கொள்முதல் செய்யப்பட்டு, பருவத்தில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனங்கள் அறுவடை செய்து, பேல்களாக்கப்பட்டு தீவனப் பற்றாக்குறைக் காலத்தில் தேவைப்படும் பண்ணைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2021—22 ஆம் ஆண்டில், 12 துறை சார்ந்த பண்ணைகளில் 965 ஏக்கர் பரப்பளவில் தீவனம் பயிரிடப்பட்டு, சுமார் 18,500 மெ.டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும்,

2022 ஏப்ரல் 13]

28.19 இலட்சம் எண்கள் தீவன புல்கரணைகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையினால் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளின்மூலம், விவசாயிகளின் சொந்த நிலம், மேய்க்கால் நிலங்களில் தீவனப் பயிரிடுதல் மற்றும் வணிகரீதியான தீவன உற்பத்தியை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் வரும் காலங்களில் தீவன தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளி கனிசமாக குறைக்கப்படும்.

11.3 விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்

2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.75.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஊரக ஏழ்மை நிலையிலுள்ள கணவனை இழந்த/கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற மற்றும் மூன்றாம் பாலின 38,800 பெண்களுக்கு தலா 5 வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் 100% மானியத்தில் வழங்கி தொழில்முனைவோராக உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் அவர்களின் நிலையான வாழ்வாதார வழிக்கு உதவுவதன்மூலம் வறுமையின் நிகழ்வுகளைக் குறைக்கும்.

11.4 கோழியின அபிவிருத்தி

11.4.1 குறைந்த இடுபொருள் தேவை கொண்ட கோழி (ம) கறிக்கோழி வளர்ப்புக்காக புதுமையான கோழி உற்பத்தித் திட்டம்

குறைந்த இடுபொருள் மற்றும் பராமரிப்புத் தேவை கொண்ட (கிரிராஜா, வனராஜா மற்றும் கிராமபிரியா) போன்ற கோழி வகைகள் வளர்ப்பினை துறை ஊக்குவிக்கிறது. 'தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில்' மத்திய அரசின் 60 விழுக்காடு மற்றும் மாநில அரசின் 40 விழுக்காடு நிதியுதவியுடன் தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.140 இலட்சம் நிதியுதவியுடன் 2018-19 மற்றும் 2019-20 ஆம் நிதியாண்டிலும், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.100 இலட்சம் நிதியுதவியுடன் 2020-21 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2022 ஏப்ரல் 13

இத்திட்டத்தின்படி (ஒரு மாவட்டத்திற்கு 200 பயனாளிகள் வீதம்) பயனாளி ஒருவருக்கு இருவகைதிறன் (இறைச்சி மற்றும் முட்டை) கொண்ட 4 வார வயதுடைய 200 கோழிகள் மற்றும் இரவு கூண்டுகள் கொள்முதல் செய்ய நிதி வழங்கப்பட்டுள்ளது. முட்டை உற்பத்திக் காலமான 72 வார இடைவெளியில் இரண்டாவது தொகுப்பாக பயனாளிக்கு 200 கோழிகள் கொள்முதல் செய்ய நிதி வழங்கப்படுவதன்மூலம் கோழிப் பண்ணைகளின் நிலையான தன்மையை உறுதி செய்வதோடு விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இதை தவிர 2018-19-ம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில் கறிக்கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் 200 பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு ஒரு நாள் வயதுடைய 600 கோழிக் குஞ்சுகள், (150 கோழிக் குஞ்சுகளாக நான்கு முறை) கொள்முதல் செய்ய நிதி வழங்கப்பட்டுள்ளது. கறிக் கோழிகளுக்குத் தேவையான கொட்டகைக் கட்டுமான நிதியுடன், தீவனம் மற்றும் தண்ணீர் வைப்பதற்கான உபகரணங்கள் மற்றும் தீவனத் தொகையுடன் 1,20,000 கோழிக்குஞ்சுகள் கொள்முதல் செய்ய ரூ.225 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் மொத்தம் 400 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.450 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இதுபோன்ற கோழிப் பண்ணை நிறுவனங்களைத் தொடங்க மற்றவர்களிடையே ஆர்வத்தை உருவாக்குகிறது.

11.4.2 நாட்டுக்கோழி வளர்ப்பின்மூலம் தொழில் முனைவோரை உருவாக்குதல்

கிராமப் பகுதிகளில் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்தவும், நாட்டினக் கோழி வளர்ப்பைப் பிரபலப் படுத்துவதற்காகவும், கோழி வளர்ப்பில் தொழில்முனைவோராக மாற்றுவதற்கும் 388 ஊராட்சி ஒன்றியங்களில் 1925 விவசாயிகளுக்கு தலா 1000 நாட்டின கோழிக் குஞ்சுகள், ஒரு மாதத்திற்கான தீவனம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பான் கொள்முதல் செய்வதற்கு 50 சதவிகிதம் மானியம் வழங்க மொத்தம் ரூ.14.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 13]
இத்திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டதால் கிராமப்புற மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு கிடைக்கிறது.

11.4.3 துறைப் பண்ணைகளில் செயல்படும் கோழி அலகுகள்

துறையின் நான்கு பண்ணைகளில் கோழிப் பண்ணை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் முன்மாதிரி பண்ணைகளாகவும், விஞ்ஞான முறையில் கோழி வளர்ப்பதற்கான செயல்விளக்க அலகுகளாகவும் விளங்குகின்றன.

அட்டவணை 10: துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கோழியினங்கள்

வ. எண்	பண்ணையின் பெயர்	இனங்கள்
1	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	அசில்
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	வனராஜா, கிரிராஜா
3	மாவட்ட கால்நடை பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)	அசில்
4	கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)	வனராஜா, அசில், நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன், ரோட் ஐலாண்ட் சிவப்பு, பெல்ட்ஸ்வில்லி வெள்ளை வான்கோழி மற்றும் ஜப்பானிய காடை

[2022 ஏப்ரல் 13

11.4.3.1 ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம்

மாநிலத்தில் நிலவும் நாட்டுக் கோழிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.6.74 கோடி ஒதுக்கீட்டில், வளரும் கோழிகள், முட்டை கோழிகளுக்கான கொட்டகைகள் மற்றும் குஞ்சு பொறிப்பகம் கொண்ட கோழி இனப்பெருக்க வளாகம் ஒன்று தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. தீவிர கோழி வளர்ப்பு முறையின்கீழ் நாட்டுக் கோழிகளை வளர்ப்பதற்கு கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஆண்டுக்கு 10 முதல் 12 இலட்சம் கோழிக் குஞ்சுகள் பொரிக்கும்வண்ணம் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் கட்டப்பட்டுள்ளது.

11.4.3.2 மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டியில் கோழி இனப்பெருக்க வளாகம்

நல்ல தரமான நாட்டுக் கோழிக் குஞ்களை விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் திருநெல்வேலி மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில், 2021-22 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 60:40 என்ற வீதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், நாட்டுக் கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் ரூ.942.31 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படவுள்ளது. முதல் தவணையாக ரூ.471.16 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, நாட்டுக் கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பக கட்டடப் பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. இந்த நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணைமூலம், ஒவ்வொரு வாரமும், 10,000 கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, வருடத்திற்கு சுமார் 5 இலட்சம் கோழிக் குஞ்சுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

11.5 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TN IAMP)

பல்வேறு துறைகளை ஈடுபடுத்தி உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையும்

2022 ஏப்ரல் 13]

ஒன்று. கால்நடை பராமரிப்புப் பணிகள், 34 மாவட்டங்களை உள்ளடக்கி 66 உப வடிநிலங்களில் ரூ.38 கோடியில் 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கால்நடை பராமரிப்பு முக்கியப் பணிகளான பால்வள ஆர்வலர் குழுக்கள் அமைத்தல், கன்றுகளுக்குக் குடற்புழு நீக்க மேலாண்மை, மடிவீக்க நோய் மேலாண்மை, மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம், திட்டமிடப்பட்ட இனப்பெருக்கம், விவசாயிகளின் இருப்பிடத்திலேயே செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் தீவன அபிவிருத்தி முதலிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை 43 உபவடி நிலப் பகுதிகளில் 2450 விவசாயிகள் அடங்கிய 98 பால்வள ஆர்வலர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன; 16950 கிடேரிக் கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளன, 16950 கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்பு கட்டிகள் வழங்கப்பட்டுள்ளன; 26397 பசுக்களுக்கு மடிவீக்க நோய் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன, 2700 மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்ட இனப்பெருக்கத்தின்கீழ் 26453 பசுக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. 628208 பசுக்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2944 ஹெக்டேர் தீவன சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்கண்ட நடவடிக்கைகளால் 2.56 இலட்சம் விவசாயிகள் பயனடைந்து, 1.45 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.

2022-23 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புப் பணிகள் மேலும் 9 உப வடிநிலப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது. அதன்படி மொத்தமாக 9300 கிடேரிக் கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம், 9300 கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்பு கட்டிகள், 15366 பசுக்களுக்கு மடிவீக்க நோய் சிகிச்சை, 1488 மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம்கள், திட்டமிடப்பட்ட இனப்பெருக்கத்தின்கீழ் 14880 பசுக்களுக்கு சிகிச்சை, 215900 பசுக்களுக்கு விவசாயிகளின் இருப்பிடத்திலேயே செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளுதல், 1607 ஹெக்டேர் தீவன சாகுபடியின்கீழ் கொண்டு வருதல் ஆகிய பணிகள்2022-23 ஆம் ஆண்டில் ரூ.8.78 கோடி நிதி ஒதுக்கீட்டில், திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

[2022 ஏப்ரல் 13

11.6 கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்

சேலம் மாவட்டம் தலைவாசல் கூட்டுரோட்டிற்கு அருகில் அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான 1102.25 ஏக்கர் பரப்பில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையமானது ரூ.564.44 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

11.6.1 குறிக்கோள்கள்

1. விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளும்படியான நிரூபிக்கப்பட்ட அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகள் நிறுவப்படும். உயர் மரபுத்திறன் கொண்ட கன்றுகள்/ கோழிக் குஞ்சுகள் விவசாயிகள் தங்களின் கால்நடை/ கோழியின வளத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும்.

2. கால்நடை மருத்துவ அறிவியல், பால் வளம், கோழியினங்கள் மற்றும் உணவு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் பிரத்யேக மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வாய்ப்பாக அமையும்.

3. கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பிற்கான வசதிகள் உருவாக்கப்படும்.

4. இந்த ஆராய்ச்சி நிலையமானது மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் களத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிவதற்கும் அதற்குத் தகுந்த தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகளை உருவாக்கும்.

5. விவசாயிகள் மற்றும் கள கால்நடை மருத்துவர்களின் தேவைக்கேற்ப பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு திறன் மேம்படுத்தப்படும்.

6. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் பல் துறை சார்ந்த அறிவுரைகள் வழங்குவதற்கும், கால்நடை உற்பத்திப் பொருட்களை முறையாகச் சந்தைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும்.

2022 ஏப்ரல் 13]

இந்நிறுவனத்தை ஆசியாவில் ஒரு புகழ்பெற்ற நிறுவனமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, கல்வி, ஆராய்ச்சி, உற்பத்தி மற்றும் செயலாக்கம், கால்நடை துறை தொடர்பான விரிவாக்கம் மற்றும் வணிக வளாகங்கள் அனைத்தும் ஒரே குடையின்கீழ் உள்ளன. ஒன்றோடொன்று தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் பத்து முக்கிய வளாகங்களாகப் பின்வருமாறு அமையவுள்ளன:

1. **கால்நடைப் பண்ணை வளாகம்**-இவ்வளாகத்தில் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் இடம்பெறும்.

2. **பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வளாகம்**- இவ்வளாகத்தில் கலப்பின கறவை மாட்டுப் பண்ணை, பால் பதனிடுதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வசதி, மாட்டுத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை தயாரிப்பு அலகுகள் இடம் பெறவுள்ளன.

3. **மீன்வள செயல்முறை வளாகம்**-இவ்வளாகத்தில் தீவிரமுறையில் காற்றுப் புகுத்திகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதி, நவீன மீன் விற்பனையகம், மீன் வளர்ப்புடன்கூடிய நீர்த் தாவர வளர்ப்புப் பிரிவு மற்றும் அலங்கார மீன்வளர்ப்புப் பிரிவு ஆகியவை அமைக்கப்படவுள்ளன.

4. **முதுநிலைக் கல்வி/பட்ட மேற்படிப்பு வளாகம்**–இவ்வளாகத்தில் நிருவாகக் கட்டடம், கல்வி வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகங்கள், ஆசிரியர் அறைகள், விடுதிகள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவை நிறுவப்பட்டு வருகின்றன.

5. **விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகம்**–இவ்வளாகத்தில் விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி மையம், உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைப்பண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான விடுதிகள் ஆகியவை நிறுவப்பட்டு வருகின்றன.

[*2022 ஏப்ரல் 13*

6. **ஆராய்ச்சி வளாகம்**-கால்நடை இனப்பெருக்கம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

7. **தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம்**-தொழில் உருவாக்க மையமும், தொழில் ஒருங்கிணைப்பு மையமும் இடம்பெறும்.

8. **இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம்**-செம்மறியாடு, வெள்ளாடு, கோழி மற்றும் பன்றியினங்களுக்கென பிரித்தியேக வசதிகள் ஏற்படுத்தப்படும்.

9. **பசுந்தீவன ஆராய்ச்சி மண்டலம்** - இத்தீவன ஆராய்ச்சி வளாகத்தில் தீவனப் பயிர் உற்பத்தி, மரவகை தீவனப் பயிர்களுடன்கூடிய மேய்ச்சல் நிலம், உலர் தீவன உற்பத்தி, ஊறுகாய்ப்புல் உற்பத்தி மற்றும் தீவன விதை உற்பத்தி ஆகியவற்றிற்கான பரப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

10. **பொதுமக்கள் கலந்துரையாடும் பகுதி**-இப்பகுதியில் குழந்தைகள் பூங்கா, கால்நடை அறிவியல் மற்றும் தொடர்புடைய துறைகளில் பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்தும் அரங்கு, வாகன நிறுத்தம், ஓய்வு அறைகள், சில்லறை அங்காடி, வங்கிகள் மற்றும் தானியங்கி பணம் வழங்கும் மையம் ஆகியவை அமைக்கப்படும். மேலும் கால்நடை உற்பத்திப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள், பசுந்தீவன உள்ளீடுகள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை விற்பனை செய்வதற்கான விற்பனையகங்களும் அமைக்கப்படும்.

திறன் மேம்பாட்டு வளாகம், தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம், ஆராய்ச்சி வளாகம், இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம், முதுநிலைக் கல்வி வளாகம் மற்றும் கால்நடைப் பண்ணை வளாகத்தில் உள்ள கோழியினப் பிரிவுகள், ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தின் நிருவாக அலுவலகம், முக்கிய விருந்தினர் இல்லம் மற்றும் நுழைவுவாயில் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022 ஏப்ரல் 13]

பொதுமக்கள் கலந்தாலோசிக்கும் பிரிவின் கட்டுமானப் பணிகளும் பொதுப் பணித் துறை வாயிலாகவே செயல்படுத்தப்படவுள்ளன.

கால்நடைப் பண்ணை வளாகத்தில் அமையவிருக்கும் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகத்தில் அமையவிருக்கும் உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைப் பண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புகள் ஆகியவற்றின் பணிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீன்வள செயல்முறை வளாகத்தில் தீவிர முறையில் காற்றுப் புகுத்திகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் பிரிவானது மீன் வளத் துறை மூலமாகவும், மீன் வளர்ப்புடன்கூடிய நீர்த்தாவர வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு பிரிவுகள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகம் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை ஆகியவற்றின் வாயிலாகவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11.6.2 விவசாயிகளுக்கான பயிற்சி, உயர் மரபுத்திறன் கொண்ட ஜெர்ம்ப்ளாசம் கிடைப்பது, சந்தை தகவல்களை வழங்குதல்

விவசாயிகளுக்குச் சிறந்த மரபுத் தன்மையுடைய கால்நடைகள் மிகக் குறைந்த விலையில் கிடைப்பதால் அவர்கள் தங்கள் பண்ணையின் தரத்தை உயர்த்தவும் அதன் வாயிலாகக் கால்நடைகளின் உற்பத்தித் திறனை பெருக்குவதோடு, அதிக இலாபம் சம்பாதிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நவீன வர்த்தக வசதிகளின் விளைவாக இடைத்தரகர்கள் நீக்கப்படுவதால் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல சந்தை மதிப்பை பெற்றுத் தர இயலும். அழிவின் விளிம்பில் உள்ள உள்நாட்டு கால்நடை இனங்கள் பாதுகாக்கப்படும்.

கால்நடை வளர்ப்பில் வணிக ரீதியான முயற்சிகளில் தொழில் முனைவோருக்கான புதிய உத்திகள் உருவாக்கப்படும்.

கால்நடை உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரிப்பிற்கான புதிய உத்திகள் தொழில் முனைவோருக்கான வியாபார நோக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்.

11.6.3 தொழில் முனைவோருக்கான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் சந்தை நுண்ணறிவினை வழங்குதல்

பல்நோக்குடன்கூடிய ஒருங்கிணைந்த பண்ணை வசதிகள் ஆற்றல்மிக்க தொழில் முனைவோருக்குக் கால்நடை வளர்ப்பில் தனிக் களத்தினை உருவாக்க ஒரு வாய்ப்பாக அமையும்.

மாநிலத்திற்குள் மற்றும் மாநிலத்திற்கு வெளியே சந்தைகளில் உள்ள பல்வேறு பொருட்களின் விலைகள் குறித்து தொழில் முனைவோருக்கு சந்தை நுண்ணறிவு கிடைக்கும். தொழில் முனைவோருக்கு ஏற்றுமதி வசதியும் செய்து தரப்படும்.

11.6.4 மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குக் கற்றலுக்கான உலகத்தர வசதிகளை வழங்குதல்

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குப் புதிய தொழில்நுட்பங்கள் புகழ் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதோடு கூட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் வாய்ப்புகள் அமையும்.

11.6.5 நுகர்வோர்

நுகர்வோர்களுக்குத் தரம் உயர்ந்த, சுத்தமான கால்நடை உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கும். மின்னணு வர்த்தக வசதியானது பலதரப்பட்ட புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட கால்நடை உற்பத்தி பொருட்கள் எளிதில் கிடைக்க வழிவகுக்கும்.

கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று ரூ.196.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

இத்தகைய பெரிய அளவிலான திட்டத்தின் சுமுக செயல்பாட்டிற்குத் தேவையான நீரைத் தடையற்ற முறையில் வழங்கிட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இத்திட்டத்திற்கு நாளொன்றுக்கு தேவையான 10 மில்லியன் லிட்டர் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சிறப்புக் குடிநீர் வழங்கல் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக காவிரி நதிப் பாதையிலுள்ள கூடக்கல் என்ற இடத்திலிருந்து இவ்வளாகத்திற்குச் சுமார் 155 கி.மீ. தொலைவிற்கு குழாய்கள் வாயிலாகக் குடிநீர் கொண்டுவரும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினை நடப்பு நிதி ஆண்டிற்குள் செயல்பாட்டிற்குக் கொண்டுவரும் பொருட்டு அனைத்துப் பணிகளும் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

11.7 நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை

இராஜபாளையம், சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகிய சிறந்த நாட்டின நாய் இனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்த நாட்டின நாய்களைப் பாதுகாத்து இனப்பெருக்கம் செய்ய 1980 ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரிவிலிருந்து பெறப்படும் நாய்க்குட்டிகள் பொதுமக்களுக்குப் பதிவு மூப்பு அடிப்படையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அரசு ஆணை (டி) எண் 297 கா.ப,மீ மற்றும் மீ.வ துறை (காப4) நாள் 18.11.2021.

12. கால்நடை மருத்துவத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள்

கால்நடை பன்முக மருத்துவமனைகள், கால்நடை பெருமருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், கோழி நோய் ஆய்வுக்கூடங்கள் மற்றும் நோய் நிகழ்வியல் பிரிவுமூலம் கால்நடைகளின் உடல்நலம் பேணுதல், நோய் கட்டுப்படுத்துதல், மருத்துவச் சேவைகள் மற்றும் இனவிருத்திச் சேவைகள் ஆகியவற்றை இத்துறை வழங்கி வருகிறது. இத்துறையில் எட்டு கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகிய 13 பண்ணைகள் இயங்கி வருகின்றன.

கால்நடை மருத்துவ நிலையங்கள் நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் மையங்களாகவும், அறிவுசார் மையங்களாகவும் மற்றும் விரிவாக்க மையங்களாகவும்

[2022 ஏப்ரல் 13

உருமாறியுள்ளன. துறையினால் வழங்கப்படும் எந்த ஒரு சேவையையும் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்தில் விவசாயிகள் பெற்றுக்கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால், அனைத்துக் கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகிறது. உள்-கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்குவதன் வாயிலாக, கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்கும். ஊரக மேம்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மாநில அரசின் நிதி, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF), ஒன்றிய அரசின் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP), கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம் (ESVHD) மூலம் துறையின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களின்கீழ் 2,076 புதிய கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் ரூ.631.72 கோடி மொத்த செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும் ரூ.52.31 கோடி நிதி ஒதுக்கீட்டில் 80 கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் நபார்டு ஆர்.ஐ.டி.எப் XXVII திட்டத்தின்கீழ் ரூபாய் 57.46 கோடி செலவில் 88 கால்நடை நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது .

கால்நடைகளுக்கான குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 1,658 கால்நடை மருந்தக வளாகங்களில் தண்ணீர் தொட்டிகள் ரூ.3.95 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

அட்டவணை 11: கட்டமைப்பு மேம்பாடு கட்டுமானப் பணிக்கான திட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு

வ. எண்	திட்டத்தின் பெயர்	கட்டடங்களின் எண்ணிக்கை	மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
1	மாநில நிதி	34	60.67
2	கால்நடை மருத்துவ நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் (ESVHD)	256	25.51

2022 ஏப்ரல் 13]

வ. எண்	திட்டத்தின் பெயர்	கட்டடங்களின் எண்ணிக்கை	மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
3	தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP)	100	28.66
4	நபார்டு (NABARD)	1,854	626.66
மொத்தம்		2,244	741.50

13. கால்நடைக் கணக்கெடுப்பு மற்றும் மாதிரி வரைவுத் திட்டம்

13.1 கால்நடைக் கணக்கெடுப்பு

கால்நடைக் கணக்கெடுப்புப் பணி 1919-20 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கால்நடைக் கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை உள்ளடக்கியது.

தற்போதைய 20 வது கால்நடைக் கணக்கெடுப்பு 2019 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி கையடக்கக் கணினியைப் பயன்படுத்தி கணக்கெடுக்கப்பட்டது. கால்நடைக் கணக்கெடுப்புப் பணி 100 சதவிகிதம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படுகிறது.

13.2 ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்

கடந்த 1977-78 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் மாதிரி வரைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தில் ஓர் ஆண்டானது கோடைக்காலம், மழைக்காலம் மற்றும் குளிர்காலம் என மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, பருவ வேறுபாடுகளால் ஏற்படும் உற்பத்தி

மாற்றங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 விழுக்காடு கிராமங்களில் மேற்கூறிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, பல்வேறு திட்டங்களை வகுக்கவும், மேற்பார்வையிடவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும், அவற்றின் விளைவுகளால் ஏற்படும் தாக்கத்தைக் கணக்கிடவும் மாதிரி வரைவுத் திட்டத்தின்மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள் பயன்படுகின்றன.

14. ஜல்லிக்கட்டு -தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம்

ஜல்லிக்கட்டு என்பது பொங்கல் திருவிழாவின்போது தமிழ்நாட்டில் கிராம மக்களிடையே நடத்தப்படுகின்ற பாரம்பரியம்மிக்க கலாச்சார நிகழ்ச்சியாகும். இது 5,000 ஆண்டு பழமை வாய்ந்ததுடன், தமிழ்நாட்டின் சமூக பண்பாட்டு பழக்கங்களுடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ளதாகும்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் மாநில அரசிதழில் அறிவிக்கப்படும் இடங்களில் மட்டுமே நடத்தப்படுகின்றன. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு விலங்குகள் வதைத் தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகள், 2017-ன் வரையறைகளுக்கு உட்பட்டவை ஆகும்.

தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததன் வாயிலாக, பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம்), 2017 முறையாக பின்பற்றப்படுவதை இத்துறை உறுதி செய்துள்ளது. தமிழகத்தின் கலாச்சார உணர்வுகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், காளைகள் தேவையில்லாத துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவதும் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்து, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது காளை உரிமையாளர்கள், மாடு தழுவும் வீரர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் பொறுப்புகளை விளக்கும் விளம்பரப் பதாகைகள் முக்கிய இடங்களில் வைக்கப்படுகின்றன. இவற்றில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை விளக்கப்படுகின்றன.

2022 ஏப்ரல் 13]

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு முன்பாக, நடத்தப்படும்போது மற்றும் நடந்து முடிந்த பிறகு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மிகச் சரியாகப் பின்பற்றப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் காரணமாக மாநிலத்தில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பெருமளவில் தவிர்க்கப்படுகிறது. பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம்) 2017-ன்படி ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் மே மாதம் வரை நடத்தப்படும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் மாநில அரசிதழில் அறிவிக்கப்படுகின்றன. அரசு அனுமதி வழங்கப்படாத இடங்களில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் மேற்படி சட்டத்திற்கு புறம்பானவையாகக் கருதப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் 221 ஜல்லிக்கட்டு நிகழ்வுகள்ந டத்தப்பட்டன. பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (ஜல்லிக்கட்டு நடைமுறை) விதிகள் 2017-ன்படி, ஜல்லிக்கட்டு நிகழ்வுகளின்போது ஏற்படும் விதிமீறல்கள், சட்டப்படி முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்து மாவட்ட நிருவாகத்தின்மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

15. பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள்

15.1 தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் செயல்பாடுகள் (Tamil Nadu Animal Welfare Board)

பிராணிகளுக்கு உணர்வுகளும், உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமும் நம்மை போன்றே அமையப் பெற்றுள்ளன என்று அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, அவற்றின் அடிப்படைத் தேவைகளை நாம் மதித்து நிறைவேற்ற வேண்டும். பிராணிகள் மனிதத் தன்மையுடனும், இரக்கத்துடனும் நடத்தப்பட வேண்டும் என்பதை இந்திய அரசமைப்புச் சட்ட விதி 51(A) (g), உணர்த்துகிறது. "இந்திய நாட்டின் இயற்கை வளங்களான காடுகள், குளங்கள், ஆறுகள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பது, மேம்படுத்துவது மற்றும் அனைத்து உயிரினங்களிடமும் பற்றுதலுடன் நடந்துகொள்வது ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை". எனவே, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கிணங்க, தமிழக அரசு அரசாணை (நிலை) எண். 208, கால்நடை பராமரிப்பு பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப3) துறை, நாள்.24.10.2018-ன் வழி

[2022 ஏப்ரல் 13

"தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம்" தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவு-சட்டம் 1975-ன்கீழ் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியமானது தமிழகத்தில் உள்ள பிராணிகளின் நலன் குறித்த பிரச்சினைகளைக் கண்காணித்து தீர்க்கும் வகையில் செயல்படும்.

மத்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகிய இந்திய பிராணிகள் நல வாரியம், அந்தந்த மாநில பிராணிகள் நல வாரியங்கள் மூலமாக பிராணிகள் வதை தடுப்புச் சட்டம் 1960-ன் நோக்கங்களை நிறைவேற்றுகிறது.

தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் செயல்படுவார்கள். இவ்வாரியத்தின் இதர உறுப்பினர்களாகத் தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறைகளின் முதன்மைச் செயலாளர்கள், பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கத்தின் இயக்குநர்கள், பதிவாளர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் விளங்குகின்றனர். இந்த வாரியம் பொதுக் குழு, நிருவாகக் குழு மற்றும் நிலைக் குழு என்ற மூன்று நிலைக் குழுக்களைக் கொண்டுள்ளது.

பிராணிகள் நலம் குறித்து "பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960"-ன்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள கால்நடைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கான விதிகள் (Transportation of Animal Act, 1978), கால்நடைகளை சந்தைப்படுத்துவதற்கான விதிகள் (Regulation of Livestock Markets Rules 2016), நாய் இனப்பெருக்க மற்றும் சந்தைப்படுத்துவதற்கான விதிகள் (Dog Breeding and Marketing Rules 2016), செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்களைப் பதிவு செய்யும் விதிகள் (Pet Shop Rule 2018), நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை விதிகள் (Animal Birth Control 2001) மற்றும் பிராணிகள் வதைத் தடுப்பின் பொருட்டு பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கங்களை (Society for Prevention of Cruelty to Animals) நிறுவி முறைப்படுத்துதல் போன்ற அனைத்து விதிகளும் இந்த பிராணிகள் நல வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

2022 ஏப்ரல் 13]

15.2 பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம் (Society for Prevention of Cruelty to Animals)

அனைத்து மாவட்டங்களிலும் விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கங்கள் தோற்றுவிக்கப்படுதல் மற்றும் முறைப்படுத்துதலானது விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960 (1960-ன் 59-வது சட்டம்) பிரிவு 38, உட்பிரிவு 1-ன்கீழ், ஒன்றிய அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண் S.O.271(E), நாள் 26.3.2001-ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கங்களின் பணிகள், விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960-ன் விதிகளை அமல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உதவுவதும், தன் கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கான துணை விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதும், மருத்துவ நிலையங்கள், விலங்கு தங்குமிடங்களை அமைப்பதும் ஆகும்.

உள்ளாட்சி அமைப்புகளால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்படும் அனைத்து வயதான பசுக்கள் காப்பகங்கள் மற்றும் கால்நடை பட்டிகள், விலங்கு வதைத் தடுப்புச் சங்கம் அல்லது பிராணிகள் நல வாரியத்தால் இணைந்து நடத்தப்படும்.

எந்தவொரு பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கமும் சிறப்பாக மற்றும் திறமையாக நடத்தப்படுவதற்கு வழிகாட்டுவதே தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் பணி ஆகும். மாநில அரசு, வாரியத்துடன் கலந்தாலோசித்து, தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கத்திற்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்கலாம்.

15.3 விலங்குகள் இனவிருத்தி கட்டுப்பாடுத் திட்டம்

ஆதரவற்ற நாய்கள் அபரிமிதமாகப் பெருகுவதைத் தடுப்பதற்காகவும், வெறிநாய்க்கடி நோய் நிகழ்வுகளைக் குறைப்பதற்காகவுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தெரு நாய்களின் எண்ணிக்கையை நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசு பிராணிகள் கருத்தடை (நாய்கள்) விதி, 2001-ஐ வகுத்துள்ளது.

[2022 ஏப்ரல் 13

இத்திட்டத்தின்கீழ் ஆதரவற்ற நாய்களை மனிதாபிமான முறையில் பிடித்து, கருத்தடை செய்து, வெறிநோய் தடுப்பூசி செலுத்தி, அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன.

நகராட்சி நிருவாகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் ஆகியவை ஒருங்கிணைந்து, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றன.

15.4 செல்லப்பிராணிகள் விற்பனை நிலையம்

மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் செல்லப்பிராணி விற்பனை நிலையங்கள் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி வணிகம் செய்து வருகின்றன. இனிமேல், மாநிலம் முழுவதிலும் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்கள், மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட செல்லப்பிராணிகள் விற்பனை நிலைய விதிகள் 2018, அறிவிப்பு G.S.R.844(E) நாள் 6.9.2018-ன்படி மாவட்ட நிருவாகத்தின் ஒத்துழைப்புடன் மாநில பிராணிகள் நல வாரியத்தால் ஒழுங்குப்படுத்தப்படும்.

செல்லப்பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர், விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னர் ஒரு விண்ணப்பம் மற்றும் பிரமாணப் பத்திரத்துடன் திரும்பப் பெற இயலாத ரூ.5,000 செலுத்தி மாநில பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று விதிகள் குறிப்பிடுகின்றன.

அதற்குப் பிறகு, செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசு கால்நடை மருத்துவரால் ஆய்வு செய்யப்பட்டு, அவரது அறிக்கையின் அடிப்படையில், உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்தபின் பதிவு தொடரும் அல்லது இரத்து செய்யப்படும். வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட பின்னரே உரிமம் வழங்கப்படும். இதுவரை 391 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு வாரியத்தால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து செல்ல பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர்களும் தங்களுடைய விற்பனை நிலையங்களைத் தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பொது அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

16. நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது ஐக்கிய நாடுகளின் பொது சபையால் 2030 ஆம் ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டில் நிர்ணயித்த 17 உலகளாவிய இலக்குகளின் தொகுப்பாகும். கால்நடை பராமரிப்புத் துறை நிலையான வளர்ச்சி இலக்குகளான இலக்கு-1 (வறுமை ஒழிப்பு), இலக்கு-2 (பட்டினியின்மை) இலக்கு-3 (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு), இலக்கு-5 (பாலின சமத்துவம்) மற்றும் இலக்கு-12 (நீடித்த நுகர்வு மற்றும் உற்பத்தியும்) ஆகியவற்றை அடைய பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி பங்களித்து வருகின்றது.

ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த/ கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற கிராமப்புற பெண்களுக்கு வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்துவதன்மூலமாக இலக்கு 1-வறுமையின்மை, இலக்கு 2-பசியின்மை, இலக்கு 3-நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மற்றும் இலக்கு 5-பாலின சமத்துவம் அடைய பங்களிக்கின்றது. 2923 கால்நடை நிலையங்கள்மூலம் கால்நடை மருத்துவச் சேவைகள், இனப்பெருக்கம் மற்றும் தீவனம் மேம்பாடு, 35 நோய் கண்காணிப்பு பிரிவுகள்மூலம் நோய் கண்காணிப்பு, தடுப்பு மற்றும் கட்டுபடுத்துதல் நடவடிக்கைகள் வாயிலாக பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரித்து, இலக்கு 12-நீடித்த நுகர்வும் மற்றும் உற்பத்தி மேம்படுத்துதல் ஆகிய இலக்குகளை அடைய பங்களிக்கின்றது.

நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து இதர துறைகளுடன் ஒருங்கிணைந்து பணி மேற்கொள்ள மாநில, மாவட்ட மற்றும் கள அலுவலகங்களில் நிலையான வளர்ச்சி பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

17. ஒழுங்கு முறை இணக்கம்மூலம் எளிதான வழிகளில் சேவைகளை மேற்கொள்ளுதல்

கால்நடை பராமரிப்புத் துறையில் மருத்துவச் சேவைகள் மற்றும் திட்டச் செயல்பாடுகளை எளிதாக்கவும், அதன் ஒழுங்குமுறை விதிகளில் உள்ள சுமைகளைக் குறைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் உள்ள அனைத்து செல்லப்பிராணி விற்பனை

நிலையங்களையும் தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்யும் நெறிமுறைகளை மின்னணு வழியாக பரிவர்த்தனை செய்திடவும் (digital) அதற்கான அனுமதி மற்றும் சான்றிதழ்கள் மின்னணு மூலமே வழங்கிடவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் காலவிரயம் தவிர்க்கப்படுவதோடு எளிதான முறையில் இப்பதிவு செய்தல் மேம்படுத்தப்பட உள்ளது.

கால்நடை வளர்ப்போருக்காக கால்நடை பராமரிப்புத் துறையின் மருத்துவச் சேவைகள் மற்றும் திட்ட செயல்பாடுகளை ஒரே மின்னணு மேடையில் கொண்டு சென்று அவற்றினை மேம்படுத்தி சிறப்பான கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்குவதற்கும், ஒருங்கிணைக்கவும் டிஜிட்டல் மேலாண்மை முறையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கால்நடை மருத்துவச் சிகிச்சை மேலாண்மை, கால்நடை மருத்துவ நிலையக் களப்பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் வருகை, கால்நடை நிலையங்களிலுள்ள மருந்துகளின் இருப்பு மற்றும் தேவை விவரம், விவசாயிகளின் வீட்டிற்கு சென்று சிகிச்சை அளித்தல், மாநில மற்றும் மத்திய அரசுகளின் திட்ட செயல்பாடுகள் குறித்த விவரங்கள் தெரிவித்தல், கால்நடை சுகாதார முகாம்கள், பல்வேறு தடுப்பூசி முகாம்கள் நடைபெறும் இடம் ஜிபிஎஸ் மூலம் தெரிவித்தல், மேலும் தேதி, நேரம் பற்றிய முன்னறிவிப்புகள் போன்ற இத்தகைய பணிகள் மக்களை எளிதாக சென்றடைய வழிவகை செய்யப்படுகிறது.

மேலும் இத்துறையில் உள்ள செயல்பாடுகளை எளிதாக்கும் பொருட்டுகீழ்க்கண்ட பழமையான சட்டங்களை நீக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1. விலங்குகளில் தொற்று, தொற்றும் தன்மை கொண்ட நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் சட்டம் 2009-ன்கீழ் (மத்திய சட்டம் 2009-ல் 27)கீழ்க்கண்ட சட்ட விவரங்கள் கொண்டு வரப்பட்டு, அவற்றை நீக்க பரிந்துரைக்கப்பட்டது. இச்சட்டம் மாநிலத்தில் 24.4.2009 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

 - தமிழ்நாடு கால்நடை நோய் சட்டம், 1866 (தமிழ்நாடு சட்டம், XI 1866)
 - தமிழ்நாடு ரிண்டர்பெஸ்ட் சட்டம், 1940 (தமிழ்நாடு சட்டம், XIX 1940)

2022 ஏப்ரல் 13]

- *தமிழ்நாடு கால்நடை நோய் (திருத்தச் சட்டம்) சட்டம், 1963(தமிழ்நாடு சட்டம், 29/1863)*
- *தமிழ்நாடு ரிண்டர்பெஸ்ட் (திருத்தம்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 14/1964)*
- *கிளாண்டர்ஸ் & பார்சி சட்டம் 1899, பொது விதி 1899/13*
- *கிளாண்டர்ஸ் & பார்சி 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டம் (1965 ஆம் ஆண்டின் தமிழ்நாடு திருத்தச் சட்டம் 36)*

2. மாநில சட்ட இயக்ககம்,கீழ்க்கண்ட சட்டங்களை நீக்க பரிந்துரைக்கிறது

- *தமிழ்நாடு கால்நடை மருத்துவர் பதிவுச் சட்டம், 1957 (தமிழ்நாடு சட்டம் 1957* XXI*)*
- *தமிழ்நாடு கால்நடை மருத்துவர் பதிவுச் (திருத்த சட்டம்) சட்டம், 1993*

3. தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுச் சட்டம், 1940, 2019 ஆம் ஆண்டு கால்நடை இனப்பெருக்க சட்டத்தின்கீழ் உட்படுத்தப்படும்.

18. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

பசு மற்றும் எருமை இனப்பெருக்கம், பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பது இன்றியமையாத செயலாகும். தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் எருமை வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. முகமையின் முதன்மை நோக்கம்

இம்முகமையின் முதன்மை நோக்கம், இனப்பெருக்கம் செய்யக்கூடிய வயதிலுள்ள அனைத்து பசுக்களையும், எருமைகளையும் வரையறுக்கப்பட்ட இனப்பெருக்கத்தின்கீழ் கொண்டு வந்து பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகும்.

[2022 ஏப்ரல் 13

செயல்பாடுகள்

- *திரவ நைட்ரஜன் கொள்கலன்கள், உறைந்த விந்து சேமிப்பு மற்றும் போக்குவரத்து கொள்கலன்கள், உபகரணங்கள் மற்றும் பிற உள்ளீடுகளைக் கொள்முதல் செய்து வழங்குவதன்மூலம் செயற்கைமுறை கருவூட்டல் மையங்களை வலுப்படுத்துதல், விந்து சேமிப்பு மற்றும் விநியோக மையங்களை வலுப்படுத்துதல் மற்றும் விந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்துதல்*

- *மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உறைந்த விந்து உற்பத்திக்கு உயர் மரபணு தகுதி கொண்ட காளைகள் கிடைக்க வழிவகை செய்தல். நல்ல தரமான நாட்டு மாடுகளை உற்பத்தி செய்யவும், பாதுகாக்கவும், கருமாற்று திட்டம் செயல்படுத்த வழிவகை செய்தல்.*

- *இனப்பெருக்கம் செய்யக்கூடிய பசு மற்றும் எருமைகள் அனைத்தையும் செயற்கை முறை கருவூட்டலின்கீழ் கொண்டு வர விவசாயிகளின் வீட்டிற்கே சென்று உயர் மரபணு தகுதி கொண்ட காளைகளின் உறைவிந்து கொண்டு செயற்கை முறை கருவூட்டல் செய்யும் பணி மேற்கொள்ளுதல்.*

- *துயர்துடைப்பு மற்றும் இன்னல் மேலாண்மைக்காகக் கால்நடை காப்பீடுத் திட்டம் செயல் படுத்துதல்.*

- *கால்நடை பராமரிப்புத் துறையின் பல்வேறு திட்டங்களின்கீழ் உள்ளீடுகளைக் கொள்முதல் செய்தல்.*

3. மேற்கொள்ளப்பட்ட பணிகள்

3.1 உறைவிந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்துதல்

தரமான உறைவிந்து உற்பத்தி செய்ய தஞ்சாவூர் ஈச்சன்கோட்டையில் உள்ள உயரின கால்நடை பெருக்கு பண்ணை, கிருஷ்ணகிரி ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணை ஆகியன, அமுக்கவடுகலன் நீர் சுத்திகரிப்பு அலகுகள், இன்குபேட்டர்கள், ஃபோட்டோ மீட்டர்களுக்கான டைலுட்டர்கள் மற்றும் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப் பண்ணைக்கு உறைவிந்து நிரப்பி சீல் செய்யும் இயந்திரம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வழங்கி ரூ.1.61 கோடி மதிப்பீட்டில்

2022 ஏப்ரல் 13]

பலப்படுத்தப்பட்டன. உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஆய்வகத்தின் பழுது நீக்கம், பணியாளர்களுக்கான அறை அமைக்கும் பணி எடுத்துகொள்ளப்பட்டுள்ளது.

3.2 உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட பொலிகாளைகள் கிடைக்க வழிவகை செய்தல்

உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட 5 கலப்பின ஹோல்ஸ்டின் பிரிசியன், 3 சாகிவால்,14 கலப்பினஜெர்சி காளைகளும், ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப் பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட 5 ஜெர்சி, 5 முர்ரா பொலிகாளைகளும், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட ஒரு சாகிவால் பொலிகாளையும் வழங்க வழிவகை செய்யப்பட்டது.

3.3 உறைவிந்து சேமிப்பு மற்றும் விநியோக மையங்களை வலுப்படுத்துதல்

திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து குச்சிகள் சேமிப்பு மற்றும் விநியோக முறையை வலுப்படுத்த ரூ.2.5 கோடி செலவில், 47 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 120 உறைவிந்து குச்சி சேமிப்பு குடுவைகள், 50 லிட்டர் கொள்ளளவுக்கொண்ட 800 திரவ நைட்ரஜன் சேமிப்பு குடுவைகள் மற்றும் இதர பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மூவாயிரம் லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்பு கொள்கலன்கள் 5 இடங்களில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.4 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை பலப்படுத்துதல்

தரமான செயற்கை முறை கருவூட்டல் சேவைகள் வழங்க 1600 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு தேவையான 0.5 லிட்டர், 3-4 லிட்டர், மற்றும் 30-35 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட உறைவிந்து குச்சி சேமிப்பு குடுவைகள் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் உபகரணங்கள் ரூ.4.00 கோடி செலவில் வழங்கப்பட்டன.

3.5 கருமாற்று தொழில்நுட்பம்

கிருஷ்ணகிரி மாவட்ட, ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று மற்றும் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பம் ரூ.4.55 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மூன்றாண்டுகளில் 84 உயர் மரபணு கொண்ட பொலிகாளைகள் (சிந்தி-34, காங்கேயம்-20, உம்பளாச்சேரி-10,

[2022 ஏப்ரல் 13

புலிக்குளம் – 10, பர்கூர் - 10) மற்றும் 85 பொலிகாளைகள் உற்பத்தி செய்ய தாய் பசுக்கள் (சிந்தி-35, காங்கேயம்-20, உம்பளாச்சேரி-10, புலிக்குளம்-10, பர்கூர்-10) உற்பத்தி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பம் மேற்கொள்ள ஆய்வுக்கூடம் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கருமாற்று தொழில்நுட்பப் பணிக்கு, பால் உற்பத்தி பதிவு செய்யப்பட்ட 23 காங்கேயம், ஒரு பர்கூர், 2 புலிக்குளம் பசுக்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 23 டோனர் பசுக்களிலிருந்து (சிந்தி-7, காங்கேயம்-13, புலிக்குளம்-2, பர்கூர்-1) 487 கரு (சிந்தி - 444, காங்கேயம் - 34, புலிக்குளம்-8, பர்கூர்-1) சேகரிக்கப்பட்டு 330 கரு (சிந்தி -287, காங்கேயம் - 34, புலிக்குளம்-8 பர்கூர் -1) மாற்றப்பட்டு 157 கரு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 34 கன்றுகள் (சிந்தி-25, காங்கேயம்-6, புலிக்குளம்- 3) பிறந்துள்ளன.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.2.51 கோடி செலவில் 105 காங்கேயம் மற்றும் 55 பர்கூர் பசுக்கள் உற்பத்தி செய்ய கருமாற்று தொழில்நுட்பம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 17 டோனர் பசுக்கள் (காங்கேயம் - 12, பர்கூர் - 5) பராமரிக்கப்பட்டு 184 கரு (காங்கேயம்-134, பர்கூர்-50) உற்பத்தி செய்யப்பட்டு, 86 கரு (காங்கேயம்-66, பர்கூர் -20) மாற்றப்பட்டு, 33 கரு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு பர்கூர் 3 காங்கேயம் கன்று பிறந்துள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3.6 உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்

உள்நாட்டு கால்நடை இனங்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டம் அந்தியூரில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக பர்கூர் இன ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கு ரூ.5.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி ஐந்தாண்டுகளுக்குத் திட்டமிடப்பட்டு இத்திட்டத்தின்மூலம் பர்கூர் கிடேரி கன்றுகள் கொள்முதல், வேலி அமைத்தல், நிலம் சீர்படுத்துதல், நுண்ணீர் பாசன வசதி அமைத்தல், உபகரணங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துருசனம்பாளையத்தில் நிருவாக அலுவலகம் மற்றும் கால்நடைப் பண்ணை, சங்கராபாளையம் மற்றும் தட்டாக்கரை கிராமங்களில்

2022 ஏப்ரல் 13]

தீவனப்பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மொத்தம் 126 பர்கூர் மாடுகள் (113 பசு / கிடேரி மற்றும் 13 காளை / காளை கன்று) பராமரிக்கப்படுகின்றது.

3.7 அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினைப் பயன்படுத்தி அதிக அளவில் பசு மற்றும் எருமைகளை செயற்கை முறை கருவூட்டலின்கீழ் கொண்டு வந்து மேம்படுத்த கால்நடை வளர்ப்போரின் வீட்டிற்கே சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்வது

50%-க்கும் குறைவான எண்ணிக்கையில் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில், சிறந்த கன்றுகள் பிறப்பதற்கும், பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கும் விவசாயிகளின் வீட்டிற்கே சென்று இனப்பெருக்க வயதில் உள்ள மாட்டினங்களில் செயற்கை முறை கருவூட்டல் சேவை வழங்கும் நோக்கத்துடன் நாடு தழுவிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருவண்ணாமலை, விருதுநகர், விழுப்புரம், சென்னை, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், உதகமண்டலம், திருவள்ளூர் ஆகிய 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 1.8.2020 முதல் 31.7.2021 வரையிலான காலகட்டத்தில் 6.50 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்ய அதே 13 மாவட்டங்களில் ரூ.11.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மொத்தம் 7.64 இலட்சம், கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல். செய்யப்பட்டுள்ளன, இதுவரை 81,925 கன்றுகள் பிறந்துள்ளன.

திட்டத்தின் மூன்றாம் கட்டம் அதே 13 மாவட்டங்களில் 1.8.2021 முதல் 31.5.2022 வரையிலான காலகட்டத்தில் 13.95 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்ய குறியீட்டுடன் ரூ.49.47 கோடி நிதி அனுமதியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை மொத்தம் 5.42 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல். செய்யப்பட்டுள்ளன.

[2022 ஏப்ரல் 13

3.8 தேசிய கால்நடை இயக்கம்- துயர் துடைப்பு மற்றும் இன்னல் மேலாண்மை

தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் கால்நடை காப்பீடுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. ரூ.13.08 கோடி செலவில் 2.50 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு (பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி) அனைத்து மாவட்டங்களிலும் காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டு 2.50 இலட்சம் கால்நடை அலகுகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

3.9 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவுதல்

மாவட்டங்களில் உள்ள 32 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவ அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

19. முன்னேற்றத்தை நோக்கிய பயணம்

கால்நடை வளர்ப்பு என்பது ஒரு நிலையான வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் நடவடிக்கையாகும், இது பெரும்பான்மையான கிராமப்புற குடும்பங்களுக்கு, குறிப்பாக நிலமற்ற மற்றும் குறு விவசாயிகளுக்கு வாழ்வாதார ஆதரவை வழங்குகிறது. இது தொடர்ச்சியான வேலைவாய்ப்பை வழங்கும் மற்றும் உபரி உழைப்பை பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலைக் கொண்ட ஒரு உழைப்பாளர்-தீவிரமான தொழிலாக இருப்பதால், கால்நடை வளர்ப்பு ஏழைகளுக்கு ஆதரவாக விளங்குகிறது.

கடந்த 34 ஆண்டுகளாகக் கால்நடை வளமானது, தொடர்ந்து நேரடியான வளர்ச்சி விகிதத்தைப் பெற்றுள்ளது. மாநிலத்தில் கால்நடை வளர்ப்போர் பல குழுக்கள் செயல்பட்டு கால்நடை வளத்தை முக்கிய வருமானமாக நம்பியிருப்பதால் கால்நடை உற்பத்தி திறனைப் பெருக்கி, 2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைவதற்கு, தேவைக்கேற்ப உற்பத்தி இடைவெளியை குறைத்து, உற்பத்தித் திறனை அதிகரிப்பது கட்டாயமாகும்.

2022 ஏப்ரல் 13]

முன்மொழியப்பட்ட கொள்கை முயற்சிகள்

காலநடை பராமரிப்பில் முக்கிய சவால்களான இன மேம்பாடு, பல்வேறு மரபணு வளங்களைப் பாதுகாத்தல், தீவனம் மற்றும் தீவனப் பற்றாக்குறை, கால்நடை நோய்களைத் திறம்படக் கட்டுப்படுத்துதல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்குத் தொழில்நுட்பம், திறன்கள் மற்றும் தரமான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். மேலும், கால்நடை வளத்தின் விரைவான வளர்ச்சிக்கும் குறைந்த எண்ணிக்கையில் கால்நடைகளை வைத்துள்ள கால்நடை வளர்ப்போருக்குத் திறமையான சந்தைப்படுத்துதல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் அவசியமாகும்.

கால்நடை வளர்ப்பில் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளும் பல்முனை அணுகுமுறைகள் பின்வரும் கொள்கை முயற்சிகள்மூலம் மேற்கொள்ளப்படும்:

1. **கால்நடைகள்மூலம் சிறந்த வாழ்க்கைக்கு முதலீடு செய்தல்:** *சொத்து இல்லாத கிராமப்புற ஏழைப் பெண்களைக் கண்டறிந்து, அவர்களை வருமானம் ஈட்டும் கால்நடை சொத்துகளுக்கு உரிமையாளர்களாக்கி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்தல்.*

2. **தீவனம் மற்றும் பசுந்தீவனம் வழங்கல்:** *தீவனம் மற்றும் தீவன வளங்கள் இலாபகரமான கால்நடை வளர்ப்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கால்நடை வளர்ப்பில் தீவனம் மற்றும் தீவன வளங்கள் சுமார் 65% பங்கை கொண்டுள்ளன. அதன் முக்கியப் பங்கைக் கருத்தில் கொண்டு, தேவையான உள்ளீடுகள் மற்றும் மானியங்களை வழங்குவதன்மூலம் தீவன உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவித்தல்.*

3. **வணிக மற்றும் புழக்கடை கோழி உற்பத்தி முறைகளின் விரிவாக்கம்:** *இந்திய கோழி சந்தை 2021-2026-ல்* CAGR-ல் *15.2% வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மலிவான மற்றும் மானிய விலையில் உள்ளீடுகளை வழங்குவதால், புழக்கடை கோழி வளர்ப்பில் முழுமையான சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தல், புழக்கடை கோழி வளர்ப்பை விரைவுபடுத்துவதோடு, வறுமை ஒழிப்பு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும் ஏதுவாகும். தீவனப்*

பொருட்களின் நிலையான வழங்குதல் (பின்னோக்கிய இணைப்பு) மற்றும் மதிப்புச் சங்கிலியின் மேம்பாடு (முன்னோக்கிய இணைப்பு) ஆகியவை புதிய மற்றும் மீண்டும் தோன்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் வணிக கோழி உற்பத்திக்கு சாதகமாக இருக்கும்.

4. **கால்நடை சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும் முறையை மேம்படுத்துதல்:** கால்நடைகளின் உற்பத்தித் திறன், குறைவான செயல்திறன் பதிவைக் கொண்ட கால்நடை சுகாதார அமைப்பைப் பொறுத்துள்ளது. கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கை பெரிய அளவில் மாறியுள்ளதால், கால்நடை பராமரிப்பு சேவைகளின் தரம், நோய் கண்காணிப்பு, கட்டுப்பாடு, கண்டறிதல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவை வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கு ஒரு முக்கிய அங்கமாகத் தொடர்கின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை கலப்பினங்களை நோக்கி வளைந்துள்ளது. எனவே, கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் நீடித்த ஆதரவு அமைப்புகளுக்கு புத்துயிர் அளித்து வளப்படுத்துகிறது மற்றும் பொது சேவை விநியோக அமைப்புகளை மிகவும் திறமையாகவும் பதிலளிக்கக்கூடியதாகவும் மாற்றுகிறது. இந்தச் சூழலில், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஒரு சுகாதார அணுகுமுறையில் முதலீடு செய்வதும் முக்கியம் ஆகும்.

5. **கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்:** கால்நடைப் பண்ணைகள், விந்து உற்பத்தி நிலையம், செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மற்றும் கால்நடை நிலையங்கள் போன்றவற்றின் உள்கட்டமைப்பு வசதிகள் கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. கால்நடைப் பண்ணைகள் உள்நாட்டு இனங்களின் வளர்ச்சிக்கும் கலப்பின இனப்பெருக்கத் திட்டத்தை மேற்கொள்வதற்கும் முக்கியமானது ஆகும். இத்தகைய கால்நடைப் பண்ணைகள் சமுதாயத்திற்கு நல்ல தரமான கறவை மாடுகள் அல்லது பிற கால்நடைகளை வழங்குவதை உறுதி செய்யும். உயர் மரபணு தகுதி கொண்ட காளைகள் மற்றும் தேவையான உள்கட்டமைப்புகளுடன் உறைவிந்து

2022 ஏப்ரல் 13]

நிலையங்களை வலுப்படுத்துதல், கருமாற்றம், இன்விட்ரோ கருத்தரித்தல் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் போன்றவை உறைவிந்து குச்சிகள் தேவை மற்றும் செயற்கை முறை திட்டத்தில் உள்ள சவால்களை நிவர்த்தி செய்யும்.

6. **நிலையான வளர்ச்சிக்காக மக்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் முதலீடு செய்தல்:** *துறைக்குத் தேவையான முற்போக்கான மாற்றங்களை ஆதரிக்க திறமையான வல்லுநர்களை உருவாக்குதல்; அனுபவம் மற்றும் அறிவு சார்ந்த முதலீடு; விவசாயிகளுக்கு மேம்பட்ட சேவைகள் மற்றும் ஆதரவை வழங்குவதற்கான அறிவு இடைவெளியைக் குறைப்பதற்காக அதிக கூட்டாண்மை உட்பட ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துதல். நல் உற்பத்தி நடைமுறைகள் தரத்திற்கு இணக்கமான தடுப்பூசி தயாரிப்பு ஆய்வகங்களை நிறுவுவதன்மூலம் ஆய்வக உள்கட்டமைப்பை உலகளாவிய தரத்திற்கு மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.*

7. **சூழலியல், சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகளைப் பராமரித்தல்:** *உயிர்க்கோளத்தின் இயல்பான செயல்பாடு விலங்குகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகளின் முடிவில்லாத தொடர்புகளைச் சார்ந்துள்ளது. வனவிலங்குகள் நமது கலாச்சாரத்தில் வணக்கத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரிய ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளன. வன விலங்குகள், உயிர்வாழும் மற்றும் இனப்பெருக்கம் செய்யும் திறனை சவாலாக உள்ள வெளிப்புற அழுத்தங்கள் அல்லது அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து எதிர்கொள்கின்றன. மேலும், வனம் மற்றும் புல்வெளி பரப்பைக் குறைத்தல், விலங்குகள் மற்றும் மனித மக்கள்தொகையை விரிவுபடுத்துதல் மற்றும் நகரமயமாக்கல் மற்றும் குறைந்துவரும் வளங்கள் ஆகியவை முன்பு இல்லாத அளவுக்கு மற்றும் மனித-விலங்கு மோதல்களை ஏற்படுத்துகின்றன. ஓர் ஒருங்கிணைப்பு மையத்தை நிறுவி கால்நடை மருத்துவர்களின் பயிற்சி மற்றும் திறனை மேம்படுத்துவதன்மூலம் மனித-விலங்கு மோதல்களை நிவர்த்தி செய்து மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.*

[2022 ஏப்ரல் 13

மேலே உள்ள கொள்கைச் சிந்தனைகளை ஆதரிப்பதற்காக, கால்நடை பராமரிப்புத் துறை பின்வரும் குறிப்பிட்ட செயல்பாடுகளை முன்வைக்கிறது:

1. நுண்ணூட்டச் சத்துக்களை (கனிமக் கலவை) கூடுதலாகச் சேர்ப்பதன்மூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் இனப்பெருக்க சுகாதார மேலாண்மையில் புதிய வழிமுறைகளைப் புகுத்துதல்.
2. உள்ளீடுகள்மூலம் தீவன உற்பத்தியை ஊக்குவித்தல்
3. insitu மற்றும் exsitu பாதுகாப்பு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கம்மூலம் உள்நாட்டு கால்நடைகள் மற்றும் கோழி இனங்களை பாதுகாத்தல்.
4. களப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் கால்நடைகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்களான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுதல்.
5. பொருத்தமான ICT கருவிகளின் உதவியுடன் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை மாற்றுதல்.
6. கால்நடைகளைக் காப்பீடு செய்வதன்மூலம் கால்நடைகளின் இழப்பினால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப்படும்.
7. கால்நடைகள் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1960 மற்றும் அதன் அனைத்து திருத்தங்களின்கீழ் வழங்கப்பட்ட மற்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 51(A)(g)-ன்கீழ் வழங்கப்பட்டவாறு கால்நடைகளின் நலன் பாதுகாக்கப்படும்.
8. நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளின்படி நோய் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் செயல்படுத்தப்படும்.
9. பொது - தனியார் கூட்டாண்மைமூலம் கால்நடைத் துறையில் முதலீடுகளை மேம்படுத்துதல்
10. ஆட்டினங்களின் உற்பத்திக்காக உழவர் உற்பத்தியாளர்களின் அமைப்பை (FPO) உருவாக்குதல்.
11. கிராமப்புறங்களில் இறைச்சி மதிப்புச் சங்கிலிகளை நிறுவுதல், இதில் கிராமப்புற இறைச்சிக்கூடங்களை

2022 ஏப்ரல் 13]

நிறுவுதல், இறைச்சியைச் சேமிப்பதற்கான குளிர்பதனக் கிடங்குகள் நிறுவுதல், இறைச்சியை செலவு குறைந்த குளிரூட்டும் வாகனங்கள்மூலம் எடுத்து செல்லுதல் ஆகியவை அடங்கும்.

12. மனித - வன விலங்கு பிரச்சனைகளைத் தவிர்க்க முனைப்பு மையத்தை நிறுவுதல்.

13. பங்குதாரர்களுக்கான திறன் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குதல்.

14. புதிய கால்நடை மருத்துவ நிலையங்களை உருவாக்குதல் மற்றும் இருப்பில் உள்ள கால்நடை நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் நடமாடும் கால்நடை மருத்துவச் சேவையை வலுப்படுத்துதல்.

20. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் தரமான மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 1989-ல் கால்நடைகள் மற்றும் பொது நலன் காப்பாளரும், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் கால்நடைகளுக்கு மேம்பட்ட மருத்துவப் பாதுகாப்பை அளிக்கவும் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும் ஆசியாவின் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைகீ ழ்க்காணும் நோக்கங்களுடன் நிறுவினார்:

- பல்கலைக்கழகம் நிர்ணயத்தவாறு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் கல்வியினை அளித்தல்

- கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் நவீன கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயல்பாட்டினை மேம்படுத்துதல்

பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிச் செயல்பாட்டின் முடிவுகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களுக்கு விரிவுபடுத்தும் பணியினை மேற்கொள்ளுதல்

- இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவச் சிகிச்சையில் முன்னோடிப் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து வருகிறது. மேலும், நாட்டின் கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் முதன்மையானதாகத் தொடர்கிறது :

[2022 ஏப்ரல் 13

20.1.1 பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்

வ. எண்	கல்லூரிகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
1.	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை	120
2.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்	80
3.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு	80
4.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி	80
5.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம்	40
6.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி	40
7.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர்	40
8.	உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி, திருவள்ளூர்	60
9.	கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஓசூர்	40
மொத்தம்		580

20.1.2 பல்கலைக்கழகத்தின் புறநகர் ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வகங்கள் மற்றும் மையங்கள

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
1.	சென்னை	• கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம் • கால்நடைப் பண்ணை வளாகம், மாதவரம்
1.	சென்னை	• பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் • நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் • நுண்ணுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் • விலங்குவழி பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம், மாதவரம் • ஆய்வக விலங்கினப் பிரிவு, மாதவரம் • கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம், மாதவரம் • கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளம், மாதவரம் • உயிர்ப் பாதுகாப்பு நிலை III ஆய்வகம், மாதவரம் • மைய சிகிச்சையியல் ஆய்வகம், வேப்பேரி • முதன்மைச் செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருந்தக மையம், வேப்பேரி
2.	செங்கல்பட்டு	• கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம்
		• கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம்
		• மத்திய தீவன தொழில்நுட்ப மையம், காட்டுப்பாக்கம்

[2022 ஏப்ரல் 13

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
2.	செங்கல்பட்டு	• வேளாண் அறிவியல் மையம், காட்டுப்பாக்கம் • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், மேல்மருவத்தூர்
3.	காஞ்சிபுரம்	• உழவர் பயிற்சி மையம், காஞ்சிபுரம்
4.	தருமபுரி	• ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
5.	விழுப்புரம்	• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் • உழவர் பயிற்சி மையம்
6.	சேலம்	• மேச்சேரி செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி • பறவையின நோயாய்வுக் கூடம், தலைவாசல் • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
7.	ஈரோடு	• பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், பர்கூர் • காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோடு • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
8.	நீலகிரி	• செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாந்திநல்லா
9.	நாமக்கல்	• கோழியின நோயறி மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகம் • கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடம் • கோழிகளுக்கான பாரம்பரிய கால்நடை மருத்துவ மூலிகை ஆராய்ச்சி மையம் • வேளாண் அறிவியல் மையம்
10.	சிவகங்கை	• புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை • வேளாண் அறிவியல் மையம், குன்றக்குடி
11.	புதுக்கோட்டை	• மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம்
12.	மதுரை	• கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையம்
13.	தேனி	• உழவர் பயிற்சி மையம்
14.	திருவாரூர்	

[2022 ஏப்ரல் 13


வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
15.	இராமநாதபுரம்	
16.	கன்னியாகுமரி (நாகர்கோவில்)	
17.	வேலூர்	
18.	திருவண்ணாமலை	
19.	கிருஷ்ணகிரி	
20.	கடலூர்	
21.	பெரம்பலூர்	• கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்
22.	திருப்பூர்	
23.	கோயம்புத்தூர்	
24.	கரூர்	
25.	தஞ்சாவூர்	
26.	நாகப்பட்டினம்	
27.	திண்டுக்கல்	
28.	திருச்சிராப்பள்ளி	
29.	விருதுநகர் (இராஜபாளையம்)	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

20.1.3 நிருவாகக் கட்டமைப்பு

பல்கலைக்கழகத்தின் செயலமைப்பு



20.2 கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்ட / பட்டய வகுப்புகள் மற்றும் அதன் மாணவர் சேர்க்கை விவரங்கள் பின்வருமாறு:

பட்ட / பட்டய வகுப்புகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் விலங்கினப் பராமரிப்பில் இளநிலைப் பட்டம்	480
உணவுத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம்	40
கோழியினத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம்	40

பட்ட / பட்டய வகுப்புகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
பால்வளத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம்	20
கால்நடை மருத்துவ அறிவியலில் முதுநிலை பட்டம்	166
எம்.டெக் (உணவு தொழில்நுட்பம்)	10
எம்.டெக் (கோழியின தொழில்நுட்பம்)	3
எம்.டெக் (பால்வள தொழில்நுட்பம்)	3
எம்.டெக் (பால்வள வேதியியல்)	3
எம்ஃபில் பட்டம் (உயிர்த் தொழில் நுட்பவியல்)	8
எம்.எஸ்சி., (உயிர்த் தகவல் நுட்பவியல்)	10
எம்.எஸ்சி., (உயிர் புள்ளியியல்)	3
எம்.எஸ்சி., (உயிர்த் தொழில் நுட்பவியல்)	10
பி.எச்.டி., (கால்நடைப் புலம்) (கால்நடை பராமரிப்புத் துறையினர்— 5 தவிர)	100
பி.எச்டி., (உயிர்த் தொழில் நுட்பவியல்)	5
பி.எச்.டி., (உணவு தொழில்நுட்பம்)	5
முதுநிலைப் பட்டயம்	42
முதுநிலைப் பட்டயம் (தொலைநிலைக் கல்வி வழி)	170
எம்.பி.ஏ. (உணவு மற்றும் கால்நடை வணிக மேலாண்மை)	10

2022 ஏப்ரல் 13]

20.3 2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சாதனைகள்

- *தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரவரிசைப் பட்டியல் 2020-ன்படி இந்தியாவில் மாநில அளவிலான கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையில் 12-வது இடத்தையும் பெற்றுள்ளது. இதனை மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறை டிசம்பர் 2021-ல் வெளியிட்டது*

- *தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளத்தின் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்தி, துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பின் உறுப்பினரான இல்லும் ஜீன் எனும் துவக்க நிலை நிறுவனத்தின்மூலம், கள அளவில் நாய்களைத் தாக்கும் இரத்த ஓரணு ஒட்டுண்ணிகளைக் கண்டறியும் சேவையைத் துவக்கியுள்ளது.*

- *2021 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கிய நான்கு தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன*

- *கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்படும் நோக்குடன் நான்கு கல்வி நிறுவனங்களுடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.*

- *பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட 'செயலிழக்கம் செய்யப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி'. வீரியம் அழிக்கப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி' மற்றும் 'செயலிழக்கம் செய்யப்பட்ட பன்றி சிர்கோ நச்சுயிரி-2 தடுப்பூசி' ஆகிய மூன்று நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களைத் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென 7.6.2021 அன்று கர்நாடகாவில் உள்ள பயோவெட் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.*

[2022 ஏப்ரல் 13

20.4 ஆராய்ச்சி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்புத் துறை எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்கு ஏற்ப நவீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வலுவான ஆராய்ச்சி கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், 12 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 ஆராய்ச்சி ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்டு கால்நடை நலம், கால்நடை உற்பத்தி, கால்நடை மருத்துவ உயிரியல், விலங்குவழி நோய்கள், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு, நோயறிதல் மற்றும் கண்காணித்தல், பாரம்பரிய கால்நடை மருத்துவம், கால்நடை மருந்துக் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 2021 ஆம் ஆண்டில், பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு நிதி முகமைகளின்மூலம் ரூபாய் 2,327.64 இலட்சம் மதிப்பீட்டில் 28 ஆராய்ச்சித் திட்டங்களை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

20.4.1 திட்டங்களின் செயல்பாடுகள்

ஒன்றிய அரசு நாட்டினக் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு ஊக்கமளித்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தின் நாட்டினக் கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, “தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறியாட்டின மையம் நிறுவுதல்”, “கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் நிறுவுதல்" மற்றும் “சிறுவிடை கோழியின வள மையம் மாதவரத்தில் நிறுவுதல்" ஆகிய மூன்று திட்டங்களை ரூ.527.94 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் திட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தின் தென் மண்டலப் பகுதிகளில் விலங்கு வழிப் பரவும் நோயறிதல் மற்றும் நோய் மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்குடன் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் “விலங்குவழி பரவும் நோய் ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம்" ரூ.160.65 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022 ஏப்ரல் 13]

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உயர்ரக தீவன விதைகள் மற்றும் கரணைகளை உற்பத்தி செய்து கால்நடை விவசாயிகளுக்கு வழங்கிட, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் "தமிழகத்தின் வடமேற்கு மண்டலப் பகுதியில் நிலையான கால்நடை உற்பத்திக்கென தீவன விதை உற்பத்திப் பிரிவு" ரூ.149.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவிட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் குறைந்த விலையில் தரமான பண்ணை உபகரணங்களைக் கால்நடை விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கிட, "பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையம் மேம்படுத்துதல்" எனும் திட்டத்தினை ரூ.250 இலட்சம் செலவில் செயல்படுத்திட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு உரிய பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நிதியுதவியுடன், கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் துறைமூலம் இலவச கறவை மாடு திட்டப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கென ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தில் "கன்று நலச் சாதனப் பெட்டி" 12,000 எண்ணிக்கையில் உற்பத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

20.5 தொழில்நுட்பங்கள்

கால்நடை மற்றும் கோழியின - நலம், உற்பத்தி, மதிப்பூட்டிய இறைச்சி மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி ஆகியவை சார்ந்த தொழில்நுட்பங்களை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. வர்த்தக மயமாக்கத்திற்குத் தயாராக உள்ள இப்பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களாவன: ஆக்டிவ் ஹீல். ஐவர்மெக்டின் சார்ந்த "ஸ்பாட் ஆன்" எனும் ஒட்டுண்ணித் தடுப்பான், நானோ மெதிகோன் குழைவு, மெட்டிரோ சிங்க் குழைவு மற்றும் நாய்களில் வாய்ப்பகுதியை சீர்படுத்தும் குழைவு, புளி விதையின் துகள்களைப் பயன்படுத்தி நார்ச்சத்து நிறைந்த பால் பொருட்களான பால் லாலிகள், யோகர்ட் மற்றும் மொஸரெல்லா சீஸ் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள், நெய், மைசூர்பாகு, சுவையான ஊநீர் பானம், சென்னா பேடா, இறைச்சியினாலான பேட்டீஸ், நக்கட்ஸ் மற்றும் சமோசா ஆகியவற்றின் தயாரிப்புத் தொழில்நுட்பங்கள் மெருகேற்றப்பட்டுள்ளன.

[2022 ஏப்ரல் 13

'செயலிழக்கம் செய்யப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி'. வீரியம் அழிக்கப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி' மற்றும் 'செயலிழக்கம் செய்யப்பட்ட பன்றி சிர்கோ நச்சுயிரி-2 தடுப்பூசி' ஆகிய மூன்று நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கியுள்ளனர்.

20.5.1 கொரோனா பெருந்தொற்று மீட்பிற்கான முயற்சிகள்

- கொரோனா பெருந்தொற்றுக் காலக்கட்டத்தில், மொத்தம் 189.5 மெட்ரிக் டன் கால்நடை மற்றும் கோழித் தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் பல்கலைக்கழகத்தின் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

- தமிழக அரசின் சுகாதாரத் துறையுடன் இணைந்து, கொரோனா பெருந்தொற்றிற்கான 35 சிறப்புத் தடுப்பூசி முகாம்களை இப்பல்கலைக்கழகம் அதன் உறுப்புக் கல்லூரிகளில் நடத்தியதன் வாயிலாக 2330 கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது.

- திருச்சிராப்பள்ளி, ஐசிஐசிஐ அறக்கட்டளையுடன் பல்கலைக்கழகம் இணைந்து, விவசாயிகளின் நன்மைக்காக "கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் சுகாதார மேலாண்மை, கால்நடைகளில் நோய்களைக் கண்டறிதல் மற்றும் கால்நடைகளுக்கு முதன்மைச் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குதல்" எனும் தலைப்பில் இணையவழியில் சிறப்பு விரிவுரையை 21.5.2021 அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தியதில் தஞ்சாவூரில் சுற்றியுள்ள 76 விவசாயிகள் பயனடைந்தனர்.

- "கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் கால்நடை நலன் கண்காணிப்பு மற்றும் கால்நடை உற்பத்தித் திறனை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் மாநில அளவில் விவசாயிகளுக்கான இணையவழிக் கருத்தரங்கு மற்றும் குழு விவாதம் 1.7.2021, 2.7.2021 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டதில் 747 விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

2022 ஏப்ரல் 13]

20.6 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியல் புலங்களில் ஏற்படும் அண்மைக்கால முன்னேற்றங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு இப்பல்கலைக்கழகம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

20.6.1 மாணவர்களுக்கான முயற்சிகள்

- பல்கலைக்கழகம் "தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் உலகளாவிய பெரிய பிராணிகள் மருத்துவ அறிவியல் இணையக் கருத்தரங்குத் தொடர் II - 2021"-ஐ 7.1.2021 மற்றும் 8.1.2021 ஆம் தேதிகளில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தியதன் வாயிலாக மொத்தம் 3,344 கால்நடை மருத்துவம் பயிலும் இளநிலைப் பட்ட மாணவர்கள், முதுநிலைப் பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பயனடைந்தனர்.

- கால்நடை மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் தற்காப்பின் அவசியம் குறித்த தேசிய இணையவழி நிகழ்ச்சி 28.1.2021 மற்றும் 29.1.2021 ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 1,028 மாணவர்கள் பயனுற்றனர்.

- "தரமான ஆய்விற்கு கேப் அப்ஸ்ட்ராக்ட்களின் சிறந்த பயன்பாடு" குறித்த இணையவழிப் பயிற்சி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 23.6.2021 அன்று நடத்தப்பட்டதில் மொத்தம் 210 ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்காக, பல்கலைக்கழகம் "ஸ்கோபஸ் பகுப்பாய்வுடன் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்" என்ற இணையப் பயிற்சியினை 30.7.2021 அன்று நடத்தியதில் 120 நபர்கள் பங்கேற்றுப் பயனுற்றனர்.

- பல்கலைக்கழகத்தில் இளநிலை / முதுநிலைப் பட்ட மாணவர்கள் பயனுறும் வண்ணம் "பல்கலைக்கழகக்

கால்நடை மருத்துவத் துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் மாணவர்களுக்கான தொழில்முனைதல் வாய்ப்புகள்" குறித்த பயிலரங்கு ஒரத்தநாடு, திருநெல்வேலி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் முறையே 16.11.2021, 17.11.2021 மற்றும் 18.11.2021 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன.

20.6.2 ஆசிரியர்களுக்கான முயற்சிகள்

- கேரளா கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இப்பல்கலைக்கழகம் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களின் நலனுக்காக "உறுதிபூணும் மரபணு மற்றும் மரபணுத் தொழில்நுட்பங்கள் - கால்நடைத் தெரிவு மற்றும் மேம்பாடு" எனும் உலகளாவிய இணைய மாநாட்டை 27.1.2021 மற்றும் 28.1.2021 ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தியதில் 362 நபர்கள் பயனடைந்தனர்.

- "கால்நடைக் கழிவு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" குறித்த உலகளாவிய இணைய நிகழ்ச்சி 12.1.2021 அன்று திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் 200 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- "நாய்களில் இனப்பெருக்க மீயொலி மற்றும் பிறப்புறுப்பு வழி குட்டிகள் ஈனுதலைக் கையாளுதல்" குறித்த உலகளாவிய கால்நடை இனப்பெருக்கம் குறித்த இணைய நிகழ்ச்சி 11.3.2021 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டதில் மொத்தம் 805 நபர்கள் பங்கேற்றனர்.

- "விலங்குகளில் ஒட்டுண்ணி நோய் கண்டறிதல்" குறித்த உலகளாவிய இணையக் கருத்தரங்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 23.4.2021 அன்று நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் இந்தியா மற்றும் அயல்நாடுகளைச் சார்ந்த கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், களப்பணிக் கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என மொத்தம் 192 நபர்கள் பயனுற்றனர்.

- "நிலையான கால்நடை வளர்ச்சிக்குப் புதுமையான விரிவாக்க உத்திகள்" எனும் இணையக் கருத்தரங்கு

2022 ஏப்ரல் 13]

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 29.4.2021 அன்று நடத்தப்பட்டதில் மொத்தம் 498 நபர்கள் பயனுற்றனர்.

- *கால்நடை வளர்ச்சிக்கான கால்நடை மருத்துவத் தொடர் கல்வித் திட்டத்தின்கீழ் காமன்வெல்த் கற்றல் அமைப்பு, கனடா மற்றும் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், கான்பூர் ஆகியவற்றுடன் இணைந்து இப்பல்கலைக்கழகம் "கறவை மாடுகளில் மலட்டுத்தன்மை மேலாண்மை" குறித்த பன்னாட்டுப் பயிலரங்கைக் காணொலிக் காட்சிமூலம் 7.5.2021 அன்று நடத்தியது.*

- *"உணவுப் பாதுகாப்பு மற்றும் நீடித்த உணவிற்கான கூட்டிணைவை அடைவதற்கான வழிமுறைகளைச் செயற்படுத்துதல், அவற்றின் முன்னேற்றம் மற்றும் சவால்கள்" எனும் தலைப்பில் நாடளாவிய இணையக் கருத்தரங்கு 29.7.2021, 30.7.2021 ஆகிய தேதிகளில் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 604 நபர்கள் பயனுற்றனர்.*

- *"நாய்கள் மற்றும் பூனைகளில் இதயம் மற்றும் நுரையீரல் ஆகியவற்றின் அவசர மருத்துவ நிலைகளில் பராமரிப்பு மற்றும் சிகிச்சைகள்" குறித்த இணைய நிகழ்ச்சி 18.8.2021 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இதில் உலகம் முழுவதிலும் இருந்து 1,119 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றுப் பயனுற்றனர்.*

- *7.10.2021 மற்றும் 8.10.2021 ஆம் தேதிகளில் சென்னை, நச்சுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி மையத்தில் "விலங்குவழிப் பரவும் நச்சுயிரி நோய்கள்" குறித்த செயல்முறைப் பயிற்சி கால்நடை மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டது.*

- *பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமனம் பெற்ற 45 உதவிப் பேராசிரியர்களுக்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் "புத்தாக்கம் மற்றும் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி" 25.10.2021 முதல் 29.10.2021 வரை அளிக்கப்பட்டது.*

- *"நிலையான மற்றும் உறுதியான உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் அமைப்புகளை*

உருவாக்குதல்" எனும் ஐந்து நாள் ஆசிரியர் மேம்பாட்டு இணையவழிப் பயிற்சி 25.10.2021 முதல் 29.10.2021 வரை கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 148 நபர்கள் பங்கேற்றனர்.

20.7 சிகிச்சையியல் பணிகள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சிறந்த பயிற்றுவிப்பு கால்நடை மருத்துவமனை வசதிகளைக் கொண்டு கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு சிசிச்சை அளித்து வருகின்றது. 2021 ஆம் ஆண்டில் மொத்தம் 2,35,039 கால்நடைகளுக்குப் புறநோயாளிகள் பிரிவின் மூலமும், 4,946 கால்நடைகளுக்கு உள் நோயாளிகள் பிரிவின் மூலமும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மீயொலிக் கருவி (Ultrasonography), உள்நோக்குக் கருவி (Endoscopy), இதய துடிப்பலைப் பதிவுக் கருவி (Electrocardiography), எலும்பு முறிவுச் சிகிச்சை (Orthopaedics), இரத்தச் சுத்திகரிப்புக் கருவி (Haemodialysis), கண் மருத்துவம் (Ophthalmology), தோல் நோயியல் (Dermatology), நாய்களுக்கான இரத்த வங்கி ஆகிய உயர்தர மருத்துவ வசதிகளை இப்பல்கலைக்கழகத்தின் மருத்துவமனைகள் பெற்றுள்ளன. சென்னை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிடி ஸ்கேன் வசதிகளும் உள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கு 2.7.2021 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் "மோப்ப நாய்கள் பராமரிப்பு" குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

20.8 விரிவாக்கப் பணிகள்

விவசாயிகள், கிராமப்புற மகளிர் மற்றும் இளைஞர்கள், பள்ளி இடைநின்றோர், சுய உதவிக் குழுவினர் ஆகியோரது வாழ்வாதாரத்தைக் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பின்மூலம் மேம்படுத்தும் நோக்கில், கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வெண் பன்றி வளர்ப்பு, பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, கால்நடைத் தீவனம் மற்றும் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி உள்ளிட்ட தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், பண்ணைப் பரிசோதனைத் திட்டங்கள், முதல்நிலைச் செயல் விளக்கத் திட்டங்கள் ஆகிய விரிவாக்கப் பணிகள் இப்பல்கலைக்கழகத்தால்

2022 ஏப்ரல் 13]

வழங்கப்பட்டு வருகின்றது. அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகக் கால்நடை மற்றும் கோழியினத் தொழில் நுட்பங்களைப் பிரபலப்படுத்தும் பணியினையும் இப்பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

2021 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு விரிவாக்க மையங்கள் வாயிலாக மொத்தம் 42,312 கால்நடை விவசாயிகளுக்கு 1,105 பயிற்சிகளும், 49,799 எண்ணிக்கையில் ஆலோசனைச் சேவைகளும் அளிக்கப்பட்டன. இவை தவிர கால்நடை விவசாயிகளுக்குப் பண்ணை இடுபொருட்களும் வழங்கப்பட்டன. இக்குறிப்பாண்டில் விரிவாக்கப் பணி சார்ந்து நடத்தப்பட்ட இணையவழிக் கருத்தரங்குகள் பின்வருமாறு:

- கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் கால்நடை வளர்ப்போருக்கு செம்மறியாடு வளர்ப்பு பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி 30.7.2021 அன்று அளிக்கப்பட்டது.
- 27.7.2021, 30.7.2021 ஆம் தேதிகளில் பட்டியலின வகுப்பைச் சார்ந்த 40 கால்நடை விவசாயிகளுக்கு ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மரபுசார் கால்நடை மருத்துவப் பயிலரங்கு நடத்தப்பட்டது.
- 27.7.2021 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் "கழுதை வளர்ப்போருக்கான கருத்தரங்கு" நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- இந்தியாவின் 75-வது ஆண்டு சுதந்திர தினத்தினை முன்னிட்டு 26.8.2021 அன்று "சுதந்திரத்தின் அமுதப் பெருவிழா" கொண்டாட்டத்தை ஒட்டி நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் "விவசாயிகளுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து" குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் நடைபெற்ற கண்காட்சியில் சிறுதானியங்கள், பால், இறைச்சி, மீன் ஆகியவற்றின்மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்புக் கூட்டிய ஊட்டச்சத்து பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பப்பட்டதில் 213 விவசாயிகள் பயன்பெற்றனர்..

[2022 ஏப்ரல் 13

- *தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி ஆணைய நிதியுதவியுடன் "தமிழ்நாட்டின் காவேரி டெல்டாப் பகுதி விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள்" குறித்து பயிற்சி 17.8.2021 மற்றும் 18.8.2021 ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் 64 கால்நடை விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

- *இந்திய வேளாண் திறன் மேம்பாட்டுக் கழக நிதியுதவியுடன் நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் "கரிம விவசாய முறை" குறித்து திறன் மேம்பாட்டுப் பயிற்சி 25 நாட்களுக்கு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.*

- *"கால்நடைகளின் நலம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தத் தொழில்நுட்பங்கள்" குறித்து விவசாயிகள் கருத்தரங்கு 23.8.2021 அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் பட்டியலின வகுப்பைச் சார்ந்த 100 கால்நடை விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

- *காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் "தமிழ்நாட்டில் முயல் வளர்ப்பின் நிலை, சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" குறித்த மாநில அளவிலான பண்ணையாளர் கருத்தரங்கு 29.10.2021 அன்று நடத்தப்பட்டதில் 62 கால்நடை விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

20.8.1 தொலைநிலைக் கல்வி வகுப்புகள்

கால்நடை மருத்துவ அறிவியலில் உள்ள நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு 17 பாடப் பிரிவுகளில் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் கால்நடை மருத்துவர்களுக்குத் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர கால்நடை மற்றும் கோழியின உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற வருவாயைப் பெருக்கும் பொருட்டு 15 தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 11 தலைப்புகளில் சுய வேலைவாய்ப்பு பயிற்சிகளும் கால்நடை வளர்ப்போர் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டில், தொலைநிலைக் கல்வி வாயிலாக நடத்தப்பட்ட வகுப்புகளின் விவரம் பின்வருமாறு:

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பாடத் தலைப்பு
I	**கால்நடை மருத்துவர்களுக்கான பட்டய படிப்பு**
1.	புத்தாக்க மருத்துவம்
2.	சிறு விலங்கின அல்ட்ராசவுண்ட் நோயறி முறைகள்
3.	மாட்டினங்களில் கருத்தங்காமையும் அதன் மேலாண்மை முறைகளும்
4.	வனவிலங்கு நோய் மேலாண்மை
5.	கால்நடை சிகிச்சையியல் ஆய்வக நோயறிதல்
6.	கால்நடை நல பொருளியல்
7.	கால்நடை மருத்துவ எண்டாஸ்கோபி
8.	பாரம்பரிய கால்நடை மருத்துவ முறைகள்
9.	விலங்கு மாதிரிகளைக் கொண்டு நவீன இனவிருத்தி உயிர்த் தொழில்நுட்பம்
10.	இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் தர நிர்ணயம்
11.	பால் பதப்படுத்துதல் மற்றும் தர நிர்ணயம்
12.	தீவன உற்பத்தி தொழில்நுட்பம்
13.	வர்த்தக ரீதியில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை
II	**திறன் மேம்பாட்டுப் பயிற்சி**
1.	தீவன ஆலைக் கண்காணிப்பாளர்
2.	கால்நடைப் பண்ணை மேலாளர்
3.	கோழிப் பண்ணை மேலாளர்
4.	குஞ்சுப் பொரிப்பகக் கண்காணிப்பாளர்

[2022 ஏப்ரல் 13

வ. எண்	பாடத் தலைப்பு
III	**சுய வேலைவாய்ப்புப் பயிற்சி**
1.	*கறவை மாட்டுப் பண்ணையம்*
2.	*செம்மறியாட்டுப் பண்ணையம்*
3.	*வெள்ளாட்டுப் பண்ணையம்*
4.	*தீவனம் மற்றும் தீவன விதை உற்பத்தி*
5.	*மதிப்புக்கூட்டிய பால் பொருட்கள் உற்பத்தி*
6.	*முயல் பண்ணையம்*
7.	*பன்றிப் பண்ணையம்*
8.	*ஜப்பானியக் காடைப் பண்ணையம்*
9.	*நாட்டினக் கோழி வளர்ப்பு*

20.9 விருதுகள் / அங்கீகாரங்கள்

- *பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் மேம்படுத்தப்பட்டகீழ்க் குறிப்பிட்டுள்ள நான்கு தொழில்நுட்பங்களுக்கு 2021 ஆம் ஆண்டில் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது:*

 1. *கோழி தோல் கொழுப்பிலிருந்து பெறப்பட்ட எண்ணெயில் இருந்து உயிரி டீசல் உற்பத்தி*

 2. *பறவையினங்களைத் தாக்கும் புற்றுநோய் நச்சுயிரிகளைக் கண்டறிய பன்முனை பிசிஆர் பிரைமர்கள்*

 3. *ஆந்த்ராக்ஸ் நச்சுயிரித் தடுப்பூசியின் ஊநீர்ப் பகுப்பாய்வு செய்வதற்கான அகார் ஜெல் இம்யூனோடிப்யூசன் சோதனை சாதனம்*

 4. *மான்டனைட் சேர்க்கப்பட்ட ஆந்த்ராக்ஸ் தடுப்பூசி தயாரிக்கும் தொழில்நுட்பம்*

2022 ஏப்ரல் 13]

20.10 நிலையான வளர்ச்சி இலக்குகள் - தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) கட்டமைப்பானது சமூக ஒருங்கிணைப்பு, பொருளாதார செழுமை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பு ஆகியன நிலையான வளர்ச்சியடைய இன்றியமையாதவை ஆகும். இவ்விலக்குகளை அடைவதற்கு இப்பல்கலைக்கழகம் முக்கியப் பங்களிப்பினை வழங்கி வருகின்றது. பண்ணையம் சார்ந்த அனைத்து கள செயல்முறைகளிலும், இப்பல்கலைக்கழகம் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்கு வகுக்கின்றது. பல்கலைக்கழகத்திற்கு உரித்தான இலக்குகளாவன: இலக்கு 1: வறுமையின்மை; இலக்கு 2: பசியின்மை; இலக்கு 4: தரமான கல்வி; இலக்கு 5: பாலின சமத்துவம்; இலக்கு 12: நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி. இவற்றினை நோக்கிய பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பின்வருமாறு:

20.10.1 இலக்கு 1: வறுமையின்மை

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

- *"அனைத்து நிலைகளிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவரும்" இலக்கை அடைய, பல்கலைக்கழகம் விவசாய சமூகத்தினை அறிவியல் ரீதியாக கால்நடை வளர்ப்பு சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தி அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தி பின்னடைவுகளைத் தவிர்க்க ஊக்குவித்து வருகிறது.*

- *இப்பல்கலைக்கழகம்மூலம் 2021-22 ஆம் ஆண்டில் கோழி வளர்ப்போர் தரமான கோழிகளை உற்பத்தி செய்திட, 51,578 எண்ணிக்கையில் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள், 15.567 வளர் கோழிகள், 1,64,862 ஒரு நாள் காடைக் குஞ்சுகள், 9,327 வளர்ந்த காடைகள் மற்றும் 64,159 குஞ்சு பொரிக்கும் முட்டைகளும் வழங்கப்பட்டன.*

- *கால்நடை உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகளான கால்நடை பராமரிப்புச் செலவுகளை குறைத்தல்; சினையுறுதலை அதிகரித்தல்; கால்நடை மதிப்புகூட்டிய பொருட்கள் தயாரிப்பு*

தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் புதிய சந்தைகளை அணுகுதல் ஆகியன மறைமுகமாக வறுமையை ஒழிக்க உதவும். இவ்விலக்கினைப் பூர்த்தி செய்ய பல்கலைக்கழகம் உரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இலக்கு 2: பசியின்மை

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

- இந்த இலக்கு "பசியினை போக்குதல், உணவுப் பாதுகாப்பு, மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்" ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. புரதம் மற்றும் பிற ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவை வழங்குவதன்மூலம் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மக்கள் தொகை அதிகரிப்பு, தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட நில வளங்களின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கக்கூடும் என்பதால், பெருகி வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கால்நடை வளர்ப்பு தவிர்க்க முடியாதவையாகின்றன. பசியினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விவசாய மேம்பாடு மற்றும் அதனைச் சார்ந்த கால்நடை வளர்ப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பல்கலைக்கழகம் கால்நடை வளர்ப்பை அதன் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளின்மூலம் ஊக்குவிக்கின்றது. பல்கலைக்கழகத்தின் செயல்களான கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், நீக்குதல் மற்றும் ஒழித்தல் ஆகியவை முட்டை, பால் மற்றும் இறைச்சியின் உற்பத்தி மற்றும் உற்பத்தி அளவை மேம்படுத்துவதன்மூலம் கால்நடைகளின் ஆரோக்கியத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிக்கின்றன. கால்நடைகளில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் போதிய அளவில் பயன்படுத்துதல், நுகர்வோரின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், நிலையான விவசாயத்திற்கும் உதவுகிறது. இதன் விளைவாக, பல்கலைக்கழகம் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் அளவான பயன்பாட்டை ஆதரிப்பதுடன் பாரம்பரிய மூலிகை

2022 ஏப்ரல் 13]

மருத்துவ முறைகளை மாற்றாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்கிறது. இதன்மூலம் கரிம வேளாண்மையினை ஊக்குவிக்க இயலும். நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடத்தில் பாதுகாத்தல் மூலம் அதன் நிலைப்புத் தன்மை நீடிக்க வாய்ப்புள்ளதால், அரசாங்கத்தின் ஒருங்கிணைப்புடன் பல்கலைக்கழகம் நாட்டு இனங்களைப் பாதுகாப்பதற்கான மையங்களை நிறுவியுள்ளது. இதன் பொருட்டு 2021-22 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம் நாட்டின கால்நடைகளைப் பாதுகாப்பதற்காகவும், நிலையான கால்நடை உற்பத்திக்காகவும் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தத் துவங்கியுள்ளது:

- *தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கறுப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்*
- *தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நிறுவுதல்*
- *தமிழ்நாட்டின சிறுவிடை கோழியின வள மையம் மாதவரம் பால்பண்ணையில் நிறுவுதல்*
- *கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவு நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்*

இலக்கு 4: தரமான கல்வி

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

“தரமான சம கல்வி அளிப்பதனை உறுதி செய்தலை உள்ளடக்கி அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்” என்ற கொள்கையில், இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவம் மற்றும் உணவு அறிவியல் துறைகளில் அறிவுத்திறன் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கி வருகின்றது. வழக்கமான வளாகக் கல்வியுடன் இப்பல்கலைக்கழகம், புறநிலைய பயிற்சித் திட்டங்கள் வாயிலாக கிராமப்புற மக்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியினைப் பெற ஊக்குவிக்கிறது. பல்கலைக்கழகம் கால்நடை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மருத்துவத்தில் பல்வேறு பட்டப் படிப்புகள் மற்றும் பட்டயப் படிப்புகளை வழங்கி வருகின்றது, இவற்றிற்கான மாணவர் சேர்க்கையானது அரசாங்கத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி நடைபெறுகிறது. இப்பல்கலைக்கழகம் கள நிலை கால்நடை மருத்துவர்களது மருத்துவத் திறனை மேம்படுத்தும் வகையில் தொடர் கல்வித் திட்டத்தினையும் செயல்படுத்தி வருகின்றது. இப்பல்கலைக்கழகம் அதன் மாணவர்கள், விவசாய சமூகம் மற்றும் தொழில்முனைவோர்களுக்குத் தரமான கல்வியை அளிக்கும் வகையில், பின்வரும் திட்டங்களை செயல்படுத்திச் வருகின்றது:

- கற்கும் போதே வருவாய் ஈட்டல் – மாணவர்களுக்கான செயல்முறைக் கல்வி
- தொழில்முனைவு நடவடிக்கைகள் சார்ந்த 15 திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் 10 சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள்

இலக்கு 5: பாலின சமத்துவம்

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

இந்த இலக்கு "பாலின சமத்துவத்தை அடைவதையும், அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் திறனை மேம்படுத்துதலையும்" நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு பாலின சமத்துவம் முக்கியமானதாக விளங்குவதுடன் ஒட்டுமொத்த சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது. இப்பல்கலைக்கழகம் அதன் நிருவாகம், கற்பித்தல் மற்றும் கற்றல், சமூக ஈடுபாடு, தொழிலகங்களின் பங்களிப்பு மற்றும் ஆராய்ச்சிமூலம் இந்த இலக்கை நோக்கிச் செயல்பட உறுதிபூண்டுள்ளது. மேலும், கால்நடை வளர்ப்புத் துறையில் பெண்களின் பங்களிப்பினைப் புரிந்துகொண்டு, இப்பல்கலைக்கழகம் பல திட்டங்களை மாநிலம் முழுவதும் பரவியுள்ள அதன் விரிவாக்க மையங்களின் வாயிலாக பெண்களின் முன்னேற்றத்திகான முன்முயற்சிகளை மேற்கொள்கிறது.

- 2021-22 ஆம் ஆண்டில் மொத்தம் 1,102 பயிற்சித் திட்டங்களை நடத்தியதன் வாயிலாக 26,615 பெண்கள் பயனடைந்துள்ளனர்

2022 ஏப்ரல் 13]

இலக்கு 12: நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி

பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை

"நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தலை" இந்த இலக்கு வலியுறுத்துகிறது. கால்நடைப் பண்ணையங்களில் நீர் பயன்பாட்டைக் குறைத்தல், சிறந்த மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் கழிவுகளைக் குறைத்தல் ஆகியவற்றின்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நிலையான நடைமுறைகளைப் பின்பற்ற இப்பல்கலைக்கழகம் உறுதிபூண்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் உணவில் மூன்றில் ஒரு பங்கு வீணடிக்கப்படுவதை உணர்ந்து, மேம்படுத்தப்பட்ட செயல்திறன் மற்றும் நிலைப்புத் தன்மைக்கு பங்களிக்கும் விநியோகச் சங்கிலியில் ஏற்படும் விரயங்கள் மற்றும் இழப்புகளைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழகம் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் இறைச்சி அறிவியலில் அறுவடைக்குப் பிந்தைய பொறியியல் தொழில்நுட்பம் குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. 2021-22 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- *இறைச்சி பதப்படுத்தும் கருவிகளை உருவாக்கி இறைச்சி பதப்படுத்தும் தரத்தை மேம்படுத்துவதன்மூலம் அதிக வருவாய் பெற வழிவகுத்தல்*

- *குறைந்த மதிப்புள்ள இறைச்சியினைப் பயன்படுத்த, மதிப்புக்கூட்டிய செயல்பாட்டு இறைச்சிப் பொருட்களை உருவாக்குதல்.*

- *செல்லப் பிராணிகளுக்கான உணவு, செல்லப் பிராணிகளுக்கான விருப்ப உணவுகள், ஜப்பானிய காடைகளுக்கான தீவனம் மற்றும் கொலாஜன் காண்ட்ராய்டின் சல்பேட் சாரக்கட்டுகள் மற்றும் கெரட்டின் பயோஃபில்ம்கள் பயன்படுத்தி இறைச்சிக்கூடக் கழிவுகளை மதிப்புக்கூட்டிய பொருட்களாக உற்பத்தி செய்தல்மூலம் இறைச்சிக் கூடக் கழிவுகளை முறையாகப் பயன்படுத்துதல்.*

[2022 ஏப்ரல் 13

20.11 கால்நடை துறையில் துவக்க நிலை நிறுவனங்கள்

கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் அதன் சார்புத்துறைகளில் துவக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் கால்நடை அறிவியல் துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பினை (VIF@TANUVAS) இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் முக்கிய நடவடிக்கைகளாவன:

- புதிய கால்நடை பராமரிப்பு சார்ந்த பொருட்கள்/ தொழில்நுட்பங்களை உருவாக்கும் பொருட்டு ஆறு துவக்க நிலை நிறுவனங்கள் கால்நடை அறிவியல் தொடக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்து பயனடைந்துள்ளன.

- புதிய அணுகுமுறையாக, கால்நடை அறிவியல் துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பானது பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குனரகத்துடன் இணைந்து முன்னோடி கால்நடை விவசாயிகள் வலை அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த வலை அமைப்பின்மூலம் முன்னோடி கால்நடை விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு 100 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட உள்ளனர். கால்நடை அறிவியல் துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்துள்ள துவக்க நிலை நிறுவனங்களால் உருவாக்கப்படும் புதிய பொருட்கள்/ தொழில்நுட்பங்கள் இம்முன்னோடி விவசாய உறுப்பினர்கள்மூலம் கள அளவில் மதிப்பீட்டாய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு இளநிலைப் பட்டம் பயிலும் மாணவர்களிடையே தொழில்முனைவு திறன் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பணியினையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் செயல்படும் தமிழக அரசின் கண்டுபிடிப்பாளர் அறிமுகத் திட்டம்-A-ன்கீழ் VIF@TANUVAS-ன் நான்கு துவக்க

2022 ஏப்ரல் 13]

நிலை நிறுவனங்களும், கண்டுபிடிப்பாளர் அறிமுகத் திட்டம்–B-ன்கீழ் ஒரு துவக்க நிலை நிறுவனமும் நிதியுதவி பெற்றுள்ளன.

- துவக்க நிலை நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட மடிவீக்க நோயைத் தடுப்பதற்கான நானோ தொழில்நுட்பம் சார்ந்த டீட் டிப் (Teat Dip), கால்நடை மாதிரிகள் சேகரிப்பு சாதனம், கால்நடைகள் அடையாளம் காணும் தொழில்நுட்பம், நாய்களைத் தாக்கும் ஓரணு உயிரி நோய்களைக் கண்டறியும் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப ஆலோசனை, மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளுதல் ஆகிய வசதிகளை VIF@TANUVAS செய்து தருகின்றது.

20.12 தொழிலக-கல்வி நிறுவனத் தொடர்பு

தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்களில் இணைந்து செயல்படும் நோக்குடன் 2021 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பின்வருமாறு :

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களைத் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென 7.6.2021 அன்று கர்நாடகாவில் உள்ள பயோவெட் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

- பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் வாயிலாகக் கறவைப் பண்ணையாளர்கள் நிலைத்த பண்ணை மேலாண்மை முறைகளை அறிந்துகொள்ளும் இலக்குடன் 3.9.2021 அன்று இப்பல்கலைக்கழகம் திருமலா பால் பொருட்கள் தனியார் நிறுவனம், சென்னை மற்றும் அசிஸ்ட் டெவலப்மெண்ட் சொல்யூசன்ஸ், சென்னை ஆகியவற்றுடன் முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் செயல்படும் கல்வி நிலைய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் "தொழில்துறைக்குத் தேவையான திறனுடன் கால்நடை மருத்துவர்களை உருவாக்குதல்"

[2022 ஏப்ரல் 13

குறித்த தொழில் பயிலரங்கு 18.2.2021 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும். 12.3.2021 அன்று கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லிலும் நடத்தப்பட்டன. இவற்றில் 117 தொழில் துறை சார்ந்தவர்களுக்கு 125 இளங்கலை/ முதுகலை மாணவர்களும் பங்கேற்றனர்.

- *தெர்மோ ஃபிஷர் சயின்டிஃபிக் நிறுவனத்துடன் இணைந்து "அடுத்த தலைமுறை மரபணு வரிசைப்படுத்துதல்" குறித்த பயிற்சி 12.8.2021 முதல் 14.8.2021 வரை கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தில் நடத்தப்பட்டதில் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் பயனடைந்தனர்.*
- *இப்பல்கலைக்கழகம் ஐசிஐசிஐ அறக்கட்டளையுடன் இணைந்து ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 24.8.2021 மற்றும் 25.8.2021 ஆம் தேதிகளில் "கால்நடை உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு - சிறு மற்றும் துவக்க நிலைத் தொழில்முனைவோர்கள்" குறித்த மாநில அளவிலான தொழில்முனைவோர் இணையப் பயிலரங்கு மற்றும் குழு விவாத நிகழ்ச்சியினை நடத்தியதில் 847 நபர்கள் பயனுற்றனர்.*
- *முருங்கை இலை கொண்டு தயாரிக்கப்பட்ட தீவனங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வினை இணைந்து மேற்கொள்ள இப்பல்கலைக்கழகம் 1.12,2021 அன்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.*

20.13 2022-2023 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்

கால்நடை துறைச் சார்ந்த கிராமப்புற வாழ்வாதார சார்பு நிலை பெருகிக்கொண்டிருக்கிறது. இதனை கருத்தில் கொண்டு நவீன உத்திகள்மூலம் கால்நடை நலம் பேணுதல், எருமைகளின் இனப்பெருக்கத்தினை ஊக்குவித்தல். வாழ்வாதார உற்பத்தியினைப் பெருக்குதல், நடுநிலையான சுற்றுச்சூழலுக்கு வழிவகுத்தல், கால்நடை மரபியல் திறனை மேம்படுத்துதல், இயற்கை முறையில் கால்நடை வளர்ப்பினை ஊக்குவித்தல்

2022 ஏப்ரல் 13]

ஆகியவற்றினை மேற்கொண்டு கால்நடை துறையின் நிலைப்புத்தன்மை உறுதிச் செய்யப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. மேலும் இளைஞர்கள் மற்றும் பெண்களை கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்துதல், கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கையை அதகரித்தல், கால்நடை சார் தொழில்முனைத் திறனை ஊக்குவித்தல், “களநிலையில் இருந்து ஆய்வகம்” அதாவது களநிலைப் பிரச்சனைகளுக்கு ஆராய்ச்சி வழி தீர்வுகாணலுக்கு முன்னுரிமை அளித்து கால்நடை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை கால்நடை துறை மேம்பாட்டிற்கு வழிவகுப்பனவாகும். தன்னிகரற்ற இப்பல்கலைக்கழகமானது கால்நடை துறையின் வளர்ச்சிக்கு இருகரம் கோர்த்து உரிய பணிகளை மேற்கொள்வதுடன் “ஒரே சுகாதார அணுகுமுறையை” பின்பற்றி மனித வள மேம்பாட்டிற்கும் வழிவகை செய்யும்.

‘ஒரே சுகாதார அணுகுமுறையின்’மூலம் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து இப்பல்கலைக்கழகம் கால்நடைத் துறையை மட்டுமல்ல, மனித நல்வாழ்வினையும் மேம்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகின்றது, மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆரோக்கியத்தைப் பெறும் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச அளவில் பணிபுரியும் பல துறைகளின் கூட்டு முயற்சியால் இந்த அணுகுமுறை செயல்படுத்தப்படுகிறது, இதன்மூலம் வெறிநோய், புருசெல்லோசிஸ், எலிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், அடைப்பான் போன்ற விலங்குவழி பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த உதவும்.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

- கால்நடைகளுக்குத் தரமான சிகிச்சை அளித்து அதன் நலன் பேண ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவமனைத் தகவல் அமைப்பு உருவாக்குதல்

- பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம், மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதாரச் சேவைகள் இயக்குநரகத்தின் அமைப்புசாரா தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான மாநில மையம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஒருங்கிணைந்த ஒரே சுகாதார அணுகுமுறையை வலுப்படுத்துதல்

[*2022 ஏப்ரல் 13*

- *தமிழகத்தில் உள்ள மலட்டு எருமைகளின் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத் திறனை அதிகரிக்க இனப்பெருக்க உதவி தொழில்நுட்பங்கள்மூலம் எருமைகளில் மலட்டுத் தன்மைக்குத் தீர்வு காணுதல்*

- *கூடுதல் ஊட்டச்சத்து/தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்துமூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்*

- *தமிழகத்தின் நாட்டின கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாத்தல்*

- *கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டிணைவு*

- *வேலையற்ற இளைஞர்கள் மற்றும் ஊரகப் பெண்களுக்குக் கால்நடைப் பராமரிப்பு நடவடிக்கைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்*

- *சிறந்த மேலாண்மை முறைகள் மற்றும் செயலிகள்மூலம் மின் ஆளுமையினை மேம்படுத்துதல்*

- *கால்நடை மருத்துவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்*

- *தொழிலகம்-பல்கலைக்கழகம் இணைந்த ஆராய்ச்சிக் கூட்டமைப்பினை நிறுவி தொழிலகங்களின் தேவையறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய துவக்கநிலை நிறுவனங்களை ஊக்குவித்தல்.*

- *கால்நடைகளில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள வழிமுறைகள்/தணிப்புத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்*

- *நடப்பிலுள்ள "ஆய்வகத்திலிருந்து களம்" நோக்கிய அணுகுமுறையினைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின்*

பார்வை "களநிலையிலிந்து ஆய்வகம்" நோக்கி கால்நடை விவசாயிகள் எதிர்கொள்ளும் களப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளித்து ஆய்வக ஆராய்ச்சி வழி தீர்வுகாண முனைதல்

2022 ஏப்ரல் 13]

21. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2022-2023

2022-2023 ஆம் நிதி ஆண்டுக்கு ரூ.1,314.84 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. அதில் ரூ.1,192.11 கோடி வருவாய் செலவினமாக இருக்கும், ரூ.122.34 கோடி மூலதன செலவினமாக இருக்கும் மற்றும் கடன் ரூ.0.40 கோடியாக இருக்கும்.

22. முடிவுரை

மாநிலத்தில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் கிராமப்புற ஏழைகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆற்றல் மிக்க தலைமையின்கீழ், மேற்கூறிய உறுதிமொழியை அடைய இத்துறை அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

கால்நடை பராமரிப்புத் துறையானது கால்நடைகளின் மரபணுத் திறனை மேம்படுத்துதல், போதுமான செயற்கை முறை கருவூட்டல் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல், மலட்டுத்தன்மை நிகழ்வுகளைக் குறைத்தல், கால்நடைகளின் நோய் எதிர்ப்புத் திறனை மேம்படுத்துதல், தீவன உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் கால்நடை உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவற்றின்மூலம் கால்நடை பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அதன் மேம்பட்ட கற்றல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க உள்கட்டமைப்புடன், கால்நடை மருத்துவம், கால்நடை மற்றும் உணவு அறிவியல் கல்வியில் தொடர்ந்து சிறந்து விளங்குவதுடன், முன்னோடி ஆராய்ச்சி மற்றும் தொலைநோக்கு திட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது.

கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துள்ளது. இத்துறை கால்நடை உற்பத்தியாளர்களின் திறனை உள்ளடக்கிய மற்றும் நிலையான மேம்பாடு அடையச்செய்யும். இதன்மூலம் அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்றவாறு கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதுடன் கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

இணைப்பு III

(167 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

கொள்கை விளக்கக்குறிப்பு, 2022-2023

முன்னுரை

மீன் ஒரு ஊட்டச்சத்து நிறைந்த புரத உணவு ஆகும். இது வளர்ந்து வரும் மக்கள்தொகையின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழகத்தின் மீன்வள ஆதாரங்களாக உள்ள கடல்கள், கழிமுகங்கள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் குளங்கள் போன்றவை மாநிலத்தின் ஒட்டுமொத்த மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான மகத்தான வாய்ப்பை வழங்குகின்றன. மீன் வளப் பிரிவானது கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. மீன் அதன் ஊட்டச்சத்து மற்றும் சுவைக்காகப் பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழக அரசு, மீனவர்களின் நலனுக்காகவும், மீன் வளப் பிரிவின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இப்பிரிவின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, மீன்வளத்தைப் பாதுகாத்தல், நிலையான மீன் பிடிப்பு மற்றும் மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின்மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு புதுமையான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன் பிடிக்கும் இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்கியுள்ளது.

2022 ஏப்ரல் 13]

*மீன்பிடிப்பு தடைக்காலம் மற்றும் மீன்பிடிப்பு குறைவு காலங்களில் கடல் மீனவர்களின் சிரமங்களைப் போக்கவும், அவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அரசு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட, தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பை இத்துறை நிறுவியுள்ளதுடன், செயற்கைக்கோள் தொலைபேசிகள், உயர் அதிர்வெண் தொலைத்தொடர்பு கருவிகள் (*VHF sets*), டிரான்ஸ்பாண்டர்கள் போன்ற நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

கச்சத்தீவை மீட்டெடுப்பது மற்றும் அதன்மூலம் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியான பாக் வளைகுடாவில் மீன் பிடிக்கும் உரிமையைக் காப்பதென்பது அரசின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்கள் மற்றும் அவர்களது உடைமைகள்மீது இலங்கை அரசு தாக்குதல் நடத்தும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண தமிழக அரசு ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன்வளர்ப்பு போன்ற மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழலுக்குகந்த மற்றும் நீடித்த முறையிலான ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேம்படுத்திடும் வகையில் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துகிறது.

*மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட, அனைத்து நீர்நிலைகளிலும், தரமான மீன் குஞ்சுகள் இருப்பு செய்து, மீன் வளர்ப்பு மேற்கொள்ளும் வகையில், உள்நாட்டு மீன் குஞ்சு உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் இடையே உள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மீன் வளப் பிரிவின் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மீன் வளர்ப்போரைச் சென்றடையச் செய்திட, நீர் மறு சுழற்சி முறை மீன் வளர்ப்பு (*RAS*) மற்றும் உயிர்க்கூழ்ம (*Bio-floc*) முறை மீன் வளர்ப்பு போன்ற திட்டங்கள் மானியம் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றன.*

தமிழகத்திலிருந்து கடல் உணவுப் பொருள் ஏற்றுமதியை இரட்டிப்பாக்கிட, உவர் நீர் மீன் வளர்ப்பைப் பெருமளவில் விரிவுபடுத்திடவும், அதே நேரத்தில் கடலோரப் பகுதிகளில் உள்ள விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைக் கண்டறிந்து, இதற்காக பயன்படுத்தவும் அரசு தெளிவான தொலைநோக்குத் திட்டங்களைக் கொண்டுள்ளது. மேலும், மீன் பதனிடுதல் மற்றும் ஏற்றுமதிக்குத் தேவையான தொடர் குளிர்காப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து நன்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

2019-20 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 14.16 மில்லியன் மெட்ரிக் டன் ஆகும். நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில் தமிழகம் 2-வது இடத்தில் உள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் தமிழகத்தின் மொத்த மீன் உற்பத்தி 7.57 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். கடல் உணவு ஏற்றுமதியில் உலகளவில் இந்தியா முன்னணியில் உள்ள நிலையில், தமிழகம் நாட்டின் மொத்த கடல் உணவு ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது. 2020-21 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த கடல் உணவு ஏற்றுமதி ரூ.43,717.26 கோடி மதிப்பிலான, 11.49 இலட்சம் மெட்ரிக் டன் என்றுள்ள நிலையில், தமிழ்நாடு 1.10 இலட்சம் மெட்ரிக் டன் கடல் பொருட்கள் ஏற்றுமதிமூலம் ரூ.5,565.46 கோடி அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது.

2. மீன்வளக் கொள்கை

மீனவர் நலன், மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரின் வருவாயினை உயர்த்துதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன்வளக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

2.1 தொலைநோக்குப் பார்வை

“மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புமூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை, பாதுகாப்பினை உறுதி செய்தல்”.

2022 ஏப்ரல் 13]

2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மைச் செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்துமிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

2.3 முக்கியக் கொள்கைகள்

மீன்வளம் சார்ந்த அரசின் முக்கியக் கொள்கைகள் பின்வருமாறு:

1. *தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்.*
2. *பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.*
3. *நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்வள ஆதாரங்களின்மூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.*
4. *மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.*
5. *அரசு மீன் பண்ணைகள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தொடர்குளிர்காப்பு, மதிப்புக்கூட்டுதல் மற்றும் மீன் பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிகரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.*
6. *மீன் வளர்ப்பின்மூலம் ஊரகப் பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.*
7. *மீனவ மகளிர் குறிப்பாக மீனவ கைம்பெண்களுக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துதல்மூலம் மீனவ மகளிருக்கு அதிகார பகிர்வளித்தல்.*

8. மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.

9. விலை மதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

10. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் வாயிலாக மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மீன்வளங்களை அதிகரித்தல் மற்றும் மேலாண்மைச் செய்தல்.

11. மீனவர்கள் மற்றும் மீன் துறை அலுவலர்களுக்குத் திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின்மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.

12. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்.


13. மின் ஆளுமைமூலம் வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதைக் கண்காணித்து உறுதி செய்தல்.

3. நிருவாக அமைப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிருவாக அமைப்பு



மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,797 ஆகும். பதவிவாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை 1—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 1

பதவிவாரியாக அலுவலர்கள் விவரம்

வ எண்	பதவியின் பெயர்	பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது+ அயற்பணி)
1	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர்	1
2	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கூடுதல் இயக்குநர்	2+1
3	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இணை இயக்குநர்	4+1
4	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை துணை இயக்குநர்	11+2
5	துணை இயக்குநர் (பணியாளர்)	1
6	துணை இயக்குநர் (பொறியியல்)	1
7	நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர்	1
8	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர்/ மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் (இயந்திரவியல்)	49+8
9	நேர்முக உதவியாளர்	12
10	துணை பதிவாளர்	1
11	கணக்கு அலுவலர்	1
12	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆய்வாளர்	167

2022 ஏப்ரல் 13]

வ எண்	பதவியின் பெயர்	பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது+ அயற்பணி)
13	கூட்டுறவு சார் பதிவாளர்	*16*
14	கடல் முதல்வர்	*13*
15	மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்-ஆய்வாளர்	*84*
16	கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்	*27*
17	மீன்வள உதவியாளர்	*168*
18	அமைச்சுப் பணி மற்றும் களப் பணியாளர்கள்	*1,028*
	மொத்தம்	**1,587**
	பொறியியல் பிரிவு	
1	தலைமைப் பொறியாளர்	*1*
2	செயற்பொறியாளர்	*5*
3	உதவி செயற்பொறியாளர்	*13*
4	உதவி பொறியாளர்	*13*
5	இளநிலை பொறியாளர்	*17*
6	முதுநிலை வரைவு அலுவலர்	*1*
7	வரைவு அலுவலர்	*8*
8	இளநிலை வரைவு அலுவலர்	*4*
9	கோட்ட கணக்கு அலுவலர்	*4*
10	தொழில்நுட்ப உதவியாளர்	*23*
11	அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள்	*9*
	மொத்தம்	**98**

[2022 ஏப்ரல் 13

வ எண்	பதவியின் பெயர்	பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது+ அயற்பணி)
கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு		
1.	காவல் துறை கண்காணிப்பாளர்	1
2.	துணை காவல் கண்காணிப்பாளர்	1
3.	காவல் ஆய்வாளர்	10
4.	காவல் சார்-ஆய்வாளர்	8
5.	தலைமைக் காவலர்/காவலர்	53
6.	காவல் ஊர்தி ஓட்டுநர்	19
7.	கண்காணிப்பாளர்	1
8	உதவியாளர்	2
9.	முகாம் உதவியாளர்	17
	மொத்தம்	112
	மொத்தக் கூடுதல்	1,797+12

4. தமிழ்நாட்டின் மீன்வளம்- ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையினையும், 41,412 சதுர கி.மீ. கண்டத்திட்டையும், 1.9 இலட்சம் சதுர கி.மீ. பிரத்யேக பொருளாதார மண்டலத்தையும் (EEZ) தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.48 இலட்சம் மெட்ரிக் டன் (2020-21) ஆகும். இம்மீன் உற்பத்தி 10.48 இலட்சம் கடல் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக உள்ளது. இதில் 1.10 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.5,565.46 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது. 5,924 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 43,982 நாட்டுப்படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாட்டில் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளடக்கிய 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. சுமார் 56,000 ஹெக்டேர் உவர் நீர்பரப்பில் உப்பங்கழிகள், கழிமுகங்கள் மற்றும் முகத்துவாரங்கள் போன்ற மீன்பிடிப்பிற்கு உகந்த மீன்வள ஆதாரங்களாக உள்ளன. தற்பொழுது, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் 3,387.33 ஹெக்டேர் பரப்பளவில் 1,932 பண்ணைகளில் குறிப்பாக, இறால் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்நாட்டு மீன்வளம் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது.

4.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு, 14 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. கடல் மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 2—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 2

கடல் மீன்வளம் குறித்த புள்ளிவிவரங்கள்–2021–22

கடற்கரை நீளம்	1,076 கி.மீ.
பிரத்யேக பொருளாதார மண்டலம் (EEZ)	1.9 இலட்சம் ச.கி.மீ.
கண்டத்திட்டு(Continental shelf)	41,412 ச.கி.மீ.
கடலோர மாவட்டங்கள்	14
மீனவக் கிராமங்கள்	608
கடலோர மீனவ மக்கட்தொகை	10.48 இலட்சம்
பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணைய வழி)	
மீன்பிடி விசைப்படகுகள்	5,924

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை)	43,982 (40,181 + 3,801)
உட்கட்டமைப்பு வசதிகள்	
பெரிய மீன்பிடித் துறைமுகங்கள்	9 (சென்னை, பூம்புகார், நாகப்பட்டினம், மூக்கையூர், தூத்துக்குடி, சின்னமுட்டம், முட்டம் (PPP), குளச்சல் மற்றும் தேங்காப்பட்டினம்)
நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள்	3 (பழையாறு, மல்லிப்பட்டினம் மற்றும் கடலூர்)
கட்டுமானத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள்	6 (திருவொற்றியூர்குப்பம், அழகன்குப்பம்-ஆலம்பரைகுப்பம், வெள்ளப்பள்ளம், தரங்கம்பாடி, ஆற்காட்டுத்துறை மற்றும் நம்பியார் நகர்)
மீன் இறங்கு தளங்கள்/படகு அணையும் தளங்கள்	52
மீன் இறங்கு மையங்கள்	251
கடல்மீன் உற்பத்தி (2020—21)	5.48 இலட்சம் மெட்ரிக் டன்
கடல்பொருள் ஏற்றுமதி (2020—21) *	அளவு: 1,10,023 மெட்ரிக் டன் மதிப்பு: ரூ.5,565.46 கோடி

2022 ஏப்ரல் 13]

ஆதாரம்:

* கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் அளவிலான உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் உள்ளன. இதில் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் மீன்பிடிப்பிற்கும் மற்றும் மீன் வளர்ப்பிற்கும் உகந்ததாக உள்ளன.

உள்நாட்டு மீன்வளப் பிரிவின் கண்ணோட்டம் அட்டவணை எண் 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 3

உள்நாட்டு மீன்வளப் புள்ளிவிவரங்கள் 2021–2022

உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள்	3,85,761 ஹெக்டேர்
நீர்த்தேக்கங்கள்	62,015 ஹெக்டேர்
பெரிய, சிறிய பாசனக் குளங்கள் மற்றும் குட்டைகள்	2,67,746 ஹெக்டேர்
உவர்நீர் பரப்பளவு	56,000 ஹெக்டேர்
உள்நாட்டு மீனவ மக்கட்தொகை	2.36 இலட்சம்
உள்நாட்டு மீன்வளக் கட்டமைப்புகள்	
மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்	
அரசு மீன் பண்ணைகள்	11
தனியார் மீன் பண்ணைகள்	46
மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்	
அரசு மீன் பண்ணைகள்	39
தனியார் மீன் பண்ணைகள்	271
தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	5

கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு (அரசு)	3
2020-21 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி	1.75 இலட்சம் மெட்ரிக் டன்

தமிழ்நாடு அரசு உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட முனைப்புடன் செயல்பட்டு உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்திட தரமான மீன்குஞ்சுகளை நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்து வருகிறது. மேலும், நீர்வள ஆதாரத் துறைக்குச் சொந்தமான விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், மதுரை மற்றும் தேனி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்புக் குளங்களை மீன்பாசிக் குத்தகைக்கு விடுதல், மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்மூலம் பாசனக் குளங்களில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள ஊக்குவித்தல் மற்றும் குளங்களின் உரிமையாளர்களாகிய சம்பந்தப்பட்ட துறைகளின்மூலம் மீன்வளர்ப்பிற்கு உகந்த குளங்களை மீன் பாசிக் குத்தகைக்கு விட்டு மீன் வளர்ப்பினை மேற்கொள்ளும் சீரிய நடவடிக்கையினை எடுத்து வருகிறது. மேலும், அரசு சிறப்பு முயற்சியாக பல்வேறு திட்டங்களின்மூலம் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து வருகிறது.

4.3 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் உவர் நீர் மீன்வளம்

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதிலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கிறது. உவர் நீர் மீன் வளர்ப்பினை மேற்கொள்ளக்கூடிய பரந்து விரிந்த முகத்துவாரங்கள், உப்பங்கழிகள் மற்றும் உப்பினால் பாதிக்கப்பட்ட நிலப் பகுதிகள் கொண்ட நீண்ட கடற்கரையைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்போது, மாநில கடலோரப் பகுதிகளில் இறால் வளர்ப்பு அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. உவர் நீர் பகுதிகளில் இறால்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கையாக கழிநண்டு, பால் கெண்டை, மடவை மற்றும் கொடுவா மீன் போன்ற மாற்று மீன் இனங்களை வளர்க்கும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

5. துறையின் முக்கியச் செயல்பாடுகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் முக்கியச் செயல்பாடுகள் பின்வருமாறு:

i. *தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.*

ii. *கடல் மீன்பிடிப்பின்போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.*

iii. *இயற்கை பேரிடர் காலங்களில் தேடுதல், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.*

iv. *மீனவர்களுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.*

v. *மீன்வளச் சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துதல்.*

vi. *கடல் மற்றும் உள்நாட்டு மீன் குஞ்சுகளை உற்பத்தி மற்றும் இருப்பு செய்வதன்மூலம் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து மேலாண்மை செய்தல்.*

vii. *உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின்மூலம் மேம்படுத்துதல்.*

viii. *மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் அரசு மீன் பண்ணைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.*

ix. *சுகாதாரமான முறையில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் குளிர்காப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.*

x. *மீனவ மகளிருக்கென சிறப்பு மாற்று வாழ்வாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.*

xi. *மீனவர் மற்றும் மீன் வளர்ப்போருக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்.*

xii. *விரிவாக்கப் பணிகள்மூலம் திட்டங்கள் சென்றடையச் செய்தல்.*

xiii. மீனவக் கூட்டுறவுச் சங்கங்களை மேலாண்மை செய்தல்.

xiv மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள்மூலம் மீனவர்களின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

xv. மீன் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.

xvi. மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்குதல் போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

xvii. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்மூலம் நிவாரணம் மற்றும் உதவி வழங்குதல்.

5.1 கடல் மீன்வளத் திட்டங்கள்

தமிழக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நலத் திட்டங்களின் பயன்கள் குறுகிய காலத்திற்குள் வெளிப்படைத்தன்மையுடன் பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்திடவும், அரசு நலத் திட்டங்களின்மூலம் வழங்கப்படும் நிதியுதவிகளை, பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் சென்றடைவதை உறுதி செய்கிறது.

2021-22 ஆம் ஆண்டிற்கு பல்வேறு மீனவர் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்திட மொத்தம் ரூ.320.03 கோடி தமிழக அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

பல்வேறு நலத் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

I. மாநிலத் திட்டங்கள்

5.1.1 மீன்பிடித் தடைக் காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக் காத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மீன்பிடித் தடைக் காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்காலம் கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் (இராஜாக்கமங்கலம்துறை முதல் நீரோடி வரை) ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும் 61 நாட்களுக்கு அமல்படுத்தப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில்

2022 ஏப்ரல் 13]

14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,71,234 மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையாக ரூ.85.62 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2022-2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.2 கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடிப்பு குறைவு காலத்தில் சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்

கடல் மீனவர் குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக மீன்பிடிக் குறைவு காலத்தில், மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடிக் குறைவு கால சிறப்பு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டு முதல் மீன்பிடி குறைவுக் காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு நிவாரணத் தொகை ரூ.5,000-லிருந்து ரூ.6,000 ஆக உயர்த்தி வழங்கிட அரசால் அக்டோபர் 2021-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2021-22 ஆம் ஆண்டிற்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.108 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,51,484 மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.90.89 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவப் பயனாளிகளுக்கு வரும் மே 2022 திங்களில் சிறப்பு நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

இத்திட்டம் 2022-2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.3 கடல் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மீனவரும், 9 மாதங்களில் ரூ.1,500 செலுத்துவர். இத்தொகையுடன் மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.3,000 சேர்க்கப்பட்டு, மொத்தம் ரூ.4,500 ஒரு பயனாளிக்கு வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டிற்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.63.19 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,75,072 மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.52.52 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வரும் மே 2022 திங்களில் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.4 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மீனவ மகளிரும், 9 மாதங்களில் ரூ.1,500 செலுத்துவர். இத்தொகையுடன் மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.3,000 சேர்க்கப்பட்டு, ஆக மொத்தம் ரூ.4,500 மீன்பிடிப்புக் குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

2021-22 ஆம் ஆண்டிற்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.62.80 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,73,671 மீனவ மகளிர் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.52.10 கோடி, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வரும் மே 2022 திங்களில் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

2022 ஏப்ரல் 13]

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.5. மீனவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு அரசு, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விசைப்படகிற்கும் வருடத்திற்கு (மீன் பிடிப்பு உள்ள 10 மாதங்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1,800 லிட்டர் வீதம் 2 மாதம் மீன்பிடி தடைகாலம் நீங்கலாக) அதிகபட்சமாக 18,000 லிட்டரும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகிற்கு வருடத்திற்கு அதிகபட்சமாக 4,000 லிட்டரும் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்கி வருகிறது.

2021-22 ஆம் நிதியாண்டில், (2022 பிப்ரவரித் திங்கள் முடிய) 93,858.41 கிலோ லிட்டர் டீசல் எரியெண்ணெய்க்கு ரூ.166.36 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022-23 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.6 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களுக்கு தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்களுக்கு லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் ஒரு படகிற்கு ஆண்டு ஒன்றுக்கு 3,400 லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் நிதியாண்டில், (2022 பிப்ரவரி திங்கள் முடிய) 14,544.37 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய்க்கு ரூ.39.34 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022-23 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.7 கடலில் மீன்பிடிக்கும்போது பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன் பிடிக்கும்போது பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்தினரின்

[2022 ஏப்ரல் 13

வாழ்வாதாரத்தினைப் பாதுகாத்திடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250 வீதம் தின உதவித் தொகையாக அரசு வழங்கி வருகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், சிறைபிடிக்கப்பட்ட 101 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.12.37 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.8 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித் தொகையாக ரூ.250 வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500) மாநில அரசால் வழங்கப்படுகிறது. கடலில் மீன் பிடிப்பிற்காகச் சென்று காணாமல் போயிருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகையினை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது குழு விபத்து காப்புறுதித் திட்டம்/தமிழ்நாடு மீனவர் நல வாரியம் ஆகியவற்றின்கீழ் நிவாரண உதவி பெறப்படும் வரை வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.13.67 இலட்சம் தின உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.9 இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு/காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக்வளைகுடா பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல்/ துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின்போது மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது

2022 ஏப்ரல் 13]

நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக்கூடிய ஒரே நபராக இருக்கும்பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறுகாயம் அடையும்போது முறையே ரூ.50,000 மற்றும் ரூ.20,000 கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

இலங்கை கடற்படையினரின் கப்பல், மீன்பிடி படகின்மீது மோதிய விபத்தில் இறந்த ஒரு மீனவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது. மேலும் மற்றொரு சம்பவத்தில் சிறு காயம் அடைந்த ஒரு மீனவருக்குக் கருணை தொகையாக ரூ.20,000 வழங்கப்பட்டது.

5.1.10 புதிய சூரை மீன்பிடித் தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

கடலோர மீன்வளங்களைப் பாதுகாப்பதன்மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், 'தூண்டில் மற்றும் செவுள் வலையுடன்கூடிய புதிய சூரை மீன்பிடிப் படகுகள்' வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், படகு ஒன்றினைக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை ரூ.51.30 கோடி திட்ட மதிப்பீட்டில் 171 சூரை மீன்பிடிப் படகுகள் கட்டுவதற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஐந்து படகுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பரிசீலனைக்கு பிறகு எஞ்சிய 67 படகுகளுக்குப் பணியாணை வழங்கப்படும். 99 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் அதற்கென ரூ.29.41 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

II. மத்திய அரசு பங்களிப்புத் திட்டங்கள்

5.1.11 மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

இத்திட்டம் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்மூலம் (NFDB) பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (PMMSY) மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தின்கீழ் விபத்தில் இறந்த மீனவருக்கு ரூ.5 இலட்சம் மற்றும் காயமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டிற்கு 5,23,237 மீனவர்களுக்கு மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.1.19 கோடி செலுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் காப்புறுதிக் காலம் 18.10.2021 முதல் 25.7.2022 வரை ஆகும்.

இக்காப்பீட்டுத் திட்டம் இந்த ஆண்டிலும் புதுப்பிக்கப்படும்.

5.1.12 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்

மீனவர்கள் வெளிப்பொருத்தும் இயந்திரம்/உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு இயந்திரத்தின் ஒரு அலகிற்கான விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், மாநில அரசின் திட்டத்தின்கீழ், பாரம்பரிய நாட்டு படகு மீனவர்களுக்கு 1,374 உட்பொருத்தும்/ வெளிபொருத்தும் இயந்திரங்கள் ரூ.4.80 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 2021-22 ஆம் ஆண்டிற்கு, இத்திட்டத்தின்கீழ் ரூ.24 கோடி திட்ட மதிப்பீட்டில் 2,000 இயந்திரங்களை வழங்கிட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.9.71 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளது.

5.1.13 பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழைப்படகு மற்றும் இதர உபகரணங்கள் வாங்க மானியம் வழங்குதல்

பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் திறனை மேம்படுத்திடும் பொருட்டு மரத்திலான படகுகளுக்கு மாற்றாக, கண்ணாடி நாரிழைப் படகுடன் வலைகள், வெளிப்பொருத்தும் இயந்திரம்

2022 ஏப்ரல் 13]

மற்றும் குளிர்காப்பு பெட்டி வழங்குவதற்கு 40% மானிய உதவி வழங்கப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தின்கீழ், 200 கண்ணாடி நாரிழைப் படகுகள் மற்றும் உபகரணங்களை ரூ.8.50 கோடி திட்ட மதிப்பீட்டில் வழங்கிட அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நீலப்புரட்சி திட்டத்தின்கீழ் 100 அலகுகளுக்கு, அலகு ஒன்றிற்கு ரூ.4.25 இலட்சம் என்ற மதிப்பில் மானியத் தொகையாக ரூ.1.7 இலட்சம் வழங்கப்படும்.'பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 100 அலகுகளுக்கு, அலகு ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் என்ற மதிப்பில், 40 விழுக்காடு மானியத் தொகை அல்லது அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

5.2 மீன்பிடி ஒழுங்குபடுத்துதல் மற்றும் சட்ட அமலாக்கம் செய்தல்

5.2.1 மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல்

கடலோரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு, மீன்பிடிக் கலன்கள் இணையதளம்மூலம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம், 5,924 மீன்பிடி விசைப்படகுகள், 40,181 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகள் மற்றும் 3,801 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுபடகுகள் 31.3.2022 வரை 'ReAlCraft' *இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

5.2.2 கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கபிரிவு

தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்திடவும், சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பைத் தடுத்தல், மீன்வள ஆதாரத்தைப் பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்கு அமலாக்கப் பிரிவு, 112 பணியிடங்களில் 92 காவல் துறை அலுவலர்களுடன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 14 கடலோர மாவட்டங்களில், கடலில் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தினை (1983) அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், எட்டு காவல் சார்-ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் ஆகிய நிரந்தரப் பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

சட்டத்திற்குப் புறம்பான மீன்பிடித்தல், அழிவை ஏற்படுத்தும் மீன்பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப்

பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் மீன்பிடித்தலில் ஒழுங்குமுறையை நிலைநாட்டிட கடலில் ரோந்து பணி மேற்கொள்ளுதல், ரோந்துப் பணியின்போது சேகரிக்கப்படும் சமூக விரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களைக் கடலோர பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கியப் பணிகளை இந்த அமலாக்கப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளுக்கென ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ8.65 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

5.3 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைச் செய்தல்

மீன்வளத்தினைப் பாதுகாத்திடவும், அதிகரித்திடவும், மீன்பிடித் தடைக் காலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன்வளத்தினைத் திறனுடன் நிருவகிக்க சுற்றுச்சூழலுக்குகந்த முறையில் கூட்டு மேலாண்மைத் தத்துவத்தின் அடிப்படையில் மேலாண்மைச் செய்யப்பட்டு வருகிறது. மீனவ பங்களிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் மீன்வள ஆதாரங்களைத் திறனுடன் பாதுகாக்க இந்நடவடிக்கை உதவிடும். மாநிலத்திலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்கு தளங்கள் கூட்டு மேலாண்மைக் குழுக்கள்மூலம் நிருவகிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5.3.1 மீன்பிடித் தடைக் காலம்

கடல் மீன்வளத்தைப் பாதுகாத்திட, ஒவ்வோர் ஆண்டும் மீன்களின் இனப் பெருக்கக் காலங்களில் தமிழக அரசால் அண்மைக் கடல் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல (EEZ) பகுதிகளில் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மீன்பிடித் தடைக் காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நடைமுறை நாட்டுப்படகுகளுக்கு பொருந்தாது. கிழக்குக் கடற்கரைப் பகுதியில், ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும், 61 நாட்கள் மீன்பிடித் தடைக் காலம் அமல்படுத்தப்படுகிறது.

2022 ஏப்ரல் 13]

5.3.2 கடல் ஆமைகளைப் பாதுகாத்தல்

தமிழக கடற்பகுதியில் கடல் ஆமைகளைப் பாதுகாத்திடும் பொருட்டு, மீன்பிடி இழுவலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச் செல்ல ஏதுவாக, இழுவலைகளில் உள்ள தூர்மடியில் Turtle Excluder Device (TED) *கருவிகள் பொருத்திடவும், ஒவ்வோர் ஆண்டும் கடல் ஆமைகளின் இனப் பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 முடிய நான்கு மாதங்களுக்குக் கடல் ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியின் 5 கடல் மைல்களுக்குள் அனைத்து வகை படகுகளும் மீன்பிடிக்கத் தடையாணை பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.*

5.4 பேரிடர் தயார் நிலை, மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

மோசமான வானிலை மற்றும் இயற்கைப் பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

அ) மீனவர்களுக்கு வானிலை மற்றும் புயல் எச்சரிக்கை தகவல்களைப் பகிர்தல்.

ஆ) வானிலைத் தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணி நேரமும் வழங்கிடத் தேவையான தொலைதொடர்பு வசதிகளுடன்கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்தக் கட்டுப்பாட்டு அறைப் பணிக்காக பிரத்யேக தொலைபேசி எண். 044-29530392 வழங்கப்பட்டுள்ளது.

இ) தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் கடலோரக் காவல் குழுமம், இந்திய கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பல் படை ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

5.4.1 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பிற்கான நடவடிக்கைகள்

5.4.1.1 கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல்

கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கி தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும்பொருட்டு 18 தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலில் உள்ள மீனவர்கள் தங்கள் மீன்பிடிக் கலன்களிலிருந்து கரைப் பகுதியினைத் தொடர்புகொள்ள ஏதுவாக 15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு விலையில்லா 5 வாட் வி.எச்.எப். கருவிகள் 17,795 எண்ணம் மற்றும் விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 3,135 எண்ணம் 25 வாட் வி.எச்.எப். கருவிகளும், ஆக மொத்தம் 20,930 வி.எச்.எப். தொலைத்தொடர்புக் கருவிகள் துறையால் வழங்கப்பட்டுள்ளன.

5.4.1.2 விசைப்படகுகளில் 'டிரான்ஸ்பாண்டர்கள்' (Transponders) பொருத்துதல்

ஒன்றிய அரசானது, 200 கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும்பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின்மூலம் டிரான்ஸ்பாண்டர்களை உருவாக்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ள 4,997 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்களைப் பொருத்திடும்பொருட்டு ஒன்றிய அரசு ரூ.18.01 கோடி நிதி விடுவித்துள்ளது. 15 முன்மாதிரி டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டு கள ஆய்வில் உள்ளது. விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி இவ்வாண்டில் முழுமையாக முடிக்கப்படும்.

5.4.1.3 செயற்கைகோள் தொலைபேசி, "நேவிக்" (NAvic) மற்றும் "நேவ்டெக்ஸ்" (NAVtex) தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பினை உறுதி செய்யும் வகையில் 80 விசைப்படகு குழுக்களுக்கு ரூ.2.28 கோடி செலவில்

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

160 செயற்கைகோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் ஆகிய தொலைதொடர்புக் கருவிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானிய விலையில் 500 விசைப்படகுகளுக்கு செயற்கைகோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

5.4.1.4 "தூண்டில்" – கைபேசி செயலியுடன்கூடிய இணையதளச் சேவை

மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடிக் கலன்களைக் கண்காணிப்பதின்மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விவரங்களைப் பதிவு செய்திடவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, ஒன்றிய அரசின் புவிஅறிவியல் அமைச்சகத்தின் (MoES) தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையத்துடன் (NCCR) இணைந்து, இணையதளச் சேவைமூலம் "தூண்டில்" எனும் கைபேசி செயலி இயக்கப்படுகிறது.

இந்த "தூண்டில்" எனும் கைபேசி செயலியுடன்கூடிய இணையதள சேவையானது, அரசு நிர்வாகத்திற்கு உதவுவதுடன், கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், கடற்பயண பதிவுகள், பாதுகாப்பான இடம் செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளைக் கைபேசியில் பதிவு செய்தல், மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களைப் பெறுதல், மாறி வரும் வானிலை, புயல், அதிக மழை மற்றும் உயரும் கடல் அலைகள் போன்ற விவரங்களை மீனவர்கள் உடனடியாக அறிந்து கொள்வதன்மூலம் தங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் உதவுகிறது.

5.4.2 அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடிப் படகுகளுக்கு நிவாரணம் வழங்குதல்

அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடிப் படகுகள்/ மீன்பிடி உபகரணங்கள்/ வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும் பொருட்டு, ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் அனைத்து கடலோர மாவட்டங்களுக்கும் ரூ.1.30 கோடி சுழல் நிதியம் தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

[2022 ஏப்ரல் 13

இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில் மோசமான வானிலையால் சேதமடைந்த 28 படகுகளுக்கு ரூ.10.49 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

5.4.3 புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்:

5.4.3.1 'டவ்தே'புயல்:

'டவ்தே' புயலின்போது இரண்டு நிகழ்வுகளில் 21 தமிழ்நாடு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போயினர். இவ்விரு நிகழ்வுகளிலும் காணாமல் போன 21 தமிழக மீனவர்களைக் கண்டுபிடிக்க இயலாத சூழலில், அவர்களது குடும்பத்தாரின் துயர்துடைக்கும் பொருட்டு காணாமல் போன மீனவர்களது குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் ரூ.4.20 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

5.4.3.2 வடகிழக்குப் பருவமழை 2021

வடகிழக்குப் பருவமழைக் காரணமாக கடந்த 2021 ஆம் ஆண்டு உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் வீசிய காற்று மற்றும் கனமழை காரணமாக திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த விசைப்படகுகள், கண்ணாடி நாரிழைப் படகு, கட்டுமரம், மீன்பிடி வலைகள் மற்றும் மீன் பண்ணைகள் சேதமடைந்தன. அவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.1.2022 அன்று ரூ.5.66 கோடியினை நிவாரணமாக அறிவித்ததைத் தொடர்ந்து அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

5.5 தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

5.5.1 கச்சத்தீவினைத் திரும்ப பெறுதல்

பாக் நீரிணை பகுதியில் 2,490 விசைப்படகுகள், 12,443 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 1,020 நாட்டுப் படகுகள் பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பாக் நீரிணை பகுதி மாவட்டங்களில் உள்ள 286

2022 ஏப்ரல் 13]

மீனவக் கிராமங்களில் 2,08,827 மீனவ மக்கள் வாழ்கின்றனர். பாக் நீரிணை பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் சுமார் 80,000 மீனவர்கள் நேரடியாக மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடிக்கும்போது சர்வதேச கடல் எல்லையைக் கடப்பதாக கூறி இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். இலங்கை அரசால் நமது மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடிப் படகுகள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது தமிழக மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, "கச்சத்தீவை" மீட்டெடுத்து மீண்டும் இந்தியாவிற்கு கிடைப்பது மற்றும் பாக் நீரிணை பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது தமிழக அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது. தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், 1974-ல் இந்திய அரசால் இலங்கைக்கு ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட "கச்சத்தீவை" மீட்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்திலும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழக அரசும் வாதியாக இணைந்து, கச்சத்தீவை மீட்க இந்திய அரசை வலியுறுத்தியது.

அதன்பின் SLP.*எண்8013/2017-ல், தனி நபர் ஒருவர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 6-வது பிரிவைச் செயல்படுத்த/ அமல்படுத்த இந்திய ஒன்றியத்திற்கு எதிராக மனுத் தாக்கல் செய்துள்ளார். அத்துடன் அவ்வொப்பந்தம் தொடர்பான 23.3.1976 நாளைய கடிதத்திலுள்ள ஆட்சேபனைக்குரிய பிரிவுகளை நீக்கிடக் கோரியுள்ளார். தமிழக அரசு 5.8.2021 அன்று மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளது.*

இது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 17.6.2021 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வழங்கிய கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார். மேலும்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2022 ஏப்ரல் 13*

1.4.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டியும், பாரம்பரிய கடற்பகுதியில் தங்களது மீன்பிடி உரிமையை மீட்டெடுப்பதற்கும் மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். எனவே, மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதைத் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

5.5.2 இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களின் படகுகளை விடுவித்தல்

தமிழக மீனவர்கள் பாரம்பரியமான பாக்-வளைகுடா பகுதியில் தங்கள் மீன்பிடிப்பை மேற்கொள்ளும்போது சர்வதேச கடல் எல்லையைத் தாண்டுவதாக தெரிவித்து, இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் தொடர் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுதல், துன்புறுத்தப்படுதல், சிறைபிடிக்கப்படுதல் போன்ற சம்பவங்களால் பாதிக்கப்படும்போது, அவர்களை விடுவிக்க வலியுறுத்தி தமிழ்நாடு அரசால் பல்வேறு கடிதங்கள் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு, கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரக ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது. இதற்கு முன்பு அதிகபட்சமாக 113 நாட்கள் வரை இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள், இந்த அரசு பதவியேற்றவுடன் எடுத்த முயற்சிகளினால், மிகக்குறைந்த காலமான பதினாறு நாட்களிலேயே தாய்நாடு திரும்பியுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசால் பிடிக்கப்பட்ட 88 படகுகள் மற்றும் 23 மீனவர்களை (31.3.2022 வரை) மீட்க அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. மேலும், 1.4.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்-மீனவர்

2022 ஏப்ரல் 13]

நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்க, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார்.

5.5.3 இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு மீட்க இயலாத நிலையில் உள்ள படகுகளுக்கு நிவாரணம்

இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு பல்வேறு கடற்படை தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 125 படகுகளில் 108 விசைப்படகு உரிமையாளர்களுக்குத் தலா ரூ.5 இலட்சமும், 14 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்குத் தலா ரூ.1.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5.66 கோடி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.1.2022 அன்று அறிவித்ததன் அடிப்படையில், 122 படகுகளுக்கு நிவாரணமாக மொத்தம் ரூ.5.61 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு நிவாரணம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.5.4 மீன்வளத்திற்கான இந்திய-இலங்கை கூட்டுப் பணிக் குழுக் கூட்டம் (JWG)

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப் படகுகளை விடுவிப்பது, ரோந்து, கைது நடவடிக்கையின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்/நெறிமுறைகள் மற்றும் மீனவர்களை மனிதாபிமான முறையில் கையாளுவது குறித்து மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக் குழுக் கூட்டம் (JWG) நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஐந்து சுற்றுகள் இந்திய-இலங்கை கூட்டு பணிக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த கூட்டங்களின்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவித்து, திருப்பி அனுப்புவது குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இந்தியா மற்றும் இலங்கை இடையே மீன்பிடித் தொழில் தொடர்பான ஐந்தாவது கூட்டுப் பணிக் குழுக் கூட்டம் 25.3.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது தரப்பில் விவாதிக்கப்பட்ட முக்கிய விஷயங்கள் பின்வருமாறு;

i. மீன்பிடிப்பின்பொழுது ரோந்துப் பணியில் கூடுதல் ஒத்துழைப்பு நல்குதல்,

ii. தமிழக மீனவர்களின் சமீபத்திய மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையினைப் பகிர்தல்,

iii. கைது நடவடிக்கையின்போது அதிகபட்ச முன்னெச்சரிக்கை மற்றும் மனிதாபிமான அணுகுமுறையைக் கையாளுதல்,

iv. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான படகுகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவித்தல்,

v. இலங்கை மீன்பிடிச் சட்டத் திருத்தம், 2018-க்கு முன்னர் கைது செய்யப்பட்ட தமிழக மீன்பிடிப் படகுகளை விடுவித்தல்,

vi. பாக் நீரிணை பகுதியில் கடல் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன,

vii. அண்மைக் கடல் பகுதியில் மீன்பிடி அழுத்தத்தைக் குறைக்க, பாக் நீரிணை பகுதியின் கடல் சூழலைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து விவரிக்கப்பட்டது,

viii. இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பதற்றத்தை தணிக்க மீனவர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடத்த கோரப்பட்டது.

5.6 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

5.6.1 கடலோர இறால் வளர்ப்பு

தமிழ்நாட்டில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்த 12,000 ஹெக்டேர் நிலப்பரப்பில், தற்பொழுது 6,500 ஹெக்டேர் பரப்பளவு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.த மி ழ க கடலோர நிலப்பரப்பில், இறால் வளர்ப்பு முக்கியத் தொழிலாக மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது 1,932 இறால் பண்ணைகள்

2022 ஏப்ரல் 13]

3,837.33 ஹெக்டேர் பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு பெற்று இயங்கி வருகின்றன. தமிழகத்தில் இயங்கி வரும் 71 இறால் குஞ்சு பொரிப்பகங்கள் தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களுக்குத் தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 82 பதிவு செய்யப்பட்ட இறால் குஞ்சு பொரிப்பகங்களிலிருந்து 7,000 கோடி இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன, தமிழகத்தில் 40 பில்லியன் உற்பத்தி திறன் கொண்ட பொரிப்பகங்களிலிருந்து 25 பில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது தேசிய உற்பத்தியில் சராசரியாக 30 விழுக்காடு ஆகும்.

*நாட்டின் மொத்த இறால் உற்பத்தியான 7.5 இலட்சம் மெட்ரிக் டன்னில் 25,000 மெட்ரிக் டன் தமிழ்நாடு உற்பத்தி செய்து உள்ளது. தமிழகத்தில், தற்போது 'வெள்ளை இறால்' (*Penaeus vannamei*) பெருமளவில் வளர்க்கப்படுகிறது. இவ்வகையான இறால்களை வளர்த்திட பிரத்யேக அனுமதியினை மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி கடலோர உயிரின வளர்ப்பு ஆணையம் வழங்குகிறது.*

*தமிழ்நாட்டில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினைப் பெருக்கிட வளம் மிகுந்திருப்பினும் தற்பொழுது 13% மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. தமிழக அரசால், உவர்நீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில் உவர் நீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடங்களைக் கண்டறிந்து வரைபடம் தயாரிக்கும் பணிகள் (*Resource Mapping*) செய்து முடிக்கப்பட்டுள்ளது. இறால் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக அரசு கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கடலோர தரிசு நிலங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த இறால் வளர்ப்பினை மேற்கொள்ள நில குத்தகை கொள்கையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயத்திற்குப் பயன்படாத தரிசு நிலங்களில் உவர் நீர் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் கடலோரப் பகுதிகளில் உள்ள பெரிய உவர் நிலப்பரப்புகள் கண்டறியப்பட்டு, பிரத்யேக உவர் நீர் மீன் வளர்ப்பு மண்டலங்கள் உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.*

5.6.2 கடல் உயிரின வளர்ப்பு

கடலில் மீன்பிடி உற்பத்தி அளவு தேக்க நிலையினை அடைந்துள்ளது, இதனால் கடலில் மீன் வளர்ப்புமூலம் மீன் உற்பத்திக்கான சாத்திய கூறுகளை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. கடலில் மீன் வளர்ப்பு முறையானது மீனவர்களை மீன்பிடித் தொழிலில் இருந்து, மீன்களை இருப்பு செய்தல் மற்றும் அறுவடை செய்தல் என்ற புதிய மாற்றத்திற்கு வழி வகுக்கிறது.

ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ள தேசிய கடல் உயிரின வளர்ப்பு கொள்கையின்படி, அரசு கடலில் மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் அண்மைக் கடல் பகுதியில் பல்வேறு மீன் வளர்ப்பிற்கு உகந்த பகுதிகளை அறிவியல் தொழில்நுட்பம், உள்ளூர் சமூக, கலாச்சார பண்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படையில் வரையறை செய்து அண்மைக் கடல் பகுதியில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள அரசின்மூலம் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.6.3 கடற்பாசி வளர்ப்பு

கடற்பாசிகள் ஆழமற்ற கடலோரப் பகுதிகளில் வளரும் பாசி வகையைச் சார்ந்ததாகும். கடற்பாசிகள், சிவப்பு, பழுப்பு மற்றும் பச்சை கடற்பாசி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய கடற்பரப்பில் 844 வகையான கடற்பாசிகள் உள்ளன. இவற்றில் 60 இனங்கள் வணிகரீதியாக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன, இதில் 10 கடற்பாசி இனங்கள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன.

தமிழகத்தில், கடற்பாசி வளர்ப்பை, மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கையாக ஊக்குவிப்பதற்கு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மாநில மற்றும் ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ், 1,926 மீனவப் பெண்களுக்கு கடற்பாசி வளர்ப்பினை மேற்கொள்ள 16,262 எண்ணிக்கையிலான கடற்பாசி மிதவைகள் மற்றும் கடற்பாசி வளர்ப்பிற்கான கயிறுகள் (monolines) வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு அரசின் முயற்சியால் தமிழகத்தில் தற்போதைய கடற்பாசி உற்பத்தி ஆண்டொன்றுக்கு சராசரியாக 10,000 மெட்ரிக் டன்களாக உள்ளது.

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அறிவியல்பூர்வ மற்றும் பாரம்பரிய கடற்பாசி வளர்ப்பின்மூலம் அதன்

2022 ஏப்ரல் 13]

உற்பத்தியைப் பெருக்கிட, பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய பல்நோக்கு கடற்பாசி பூங்காவை ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து தமிழகத்தில் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

அட்டவணை: 4

மையம் I - கடற்பாசி விதை வளர்ப்பு பூங்கா	மையம் II - கடற்பாசி பதப்படுத்தும் பூங்கா
➢ கடற்பாசி திசு வளர்ப்பு ஆய்வு கூடம்	➢ கடற்பாசி பதனிடும் தொழிற்சாலை மனைகள்
➢ உட்புற இளம் தாவர வளர்ப்பு அலகு	➢ நிருவாகக் கட்டடம்
➢ வெளிப்புற கடற்பாசி விதை வளர்ப்பு குளம்	➢ புதிய கண்டுபிடிப்புகள்/ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்
➢ பயிற்சி வளாகம்	➢ சோதனை ஆய்வகம்
➢ உலர் தளங்கள்	➢ உலர் தளங்கள்
➢ நீர் பரிசோதனை ஆய்வகம்	➢ சேமிப்புக் கிடங்குகள்
➢ குளத்தில் கடற்பாசி வளர்ப்பிற்கான இடம்	➢ ஒற்றைச் சாளர அலுவலகம்
➢ நீரேற்று அமைப்பு மற்றும் நீர்த்தேக்கங்கள்	➢ நன்னீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர்த்தேக்கம்
➢ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்	➢ தொழில் முனைவோர் உருவாக்க மையம்
➢ உப்புநீரைக் குடிநீராக்கும் வசதி	➢ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
➢ சாலை அமைப்பு மற்றும் மின்சார வசதி	➢ சாலை அமைப்பு மற்றும் மின்சார வசதி

5.6.4 கடற்கூண்டுகளில் மீன்வளர்ப்பு (Open Sea Cage Culture)

தமிழகத்தில் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள நீண்ட கடற்கரை, அமைதியான கடல் பகுதிகள் கூண்டு மீன் வளர்ப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளன. மேற்கூறிய பகுதிகளில் கூண்டு மீன் வளர்ப்பை விரிவுபடுத்துவதன்மூலம் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடிப்பில் ஏற்படும் அழுத்தத்தைக் குறைப்பதற்கு வாய்ப்புள்ளது. கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பதன்மூலம் விலை மதிப்புமிக்க கடல் மீன்கள் உற்பத்தியினை அதிகரிக்க இயலும்.

[2022 ஏப்ரல் 13

கடல் விரால் (Cobia), கொடுவா (Seabass), கலவா (Grouper), பாம்பனோ பாறை (Silver pompano) மற்றும் சிங்கி இறால் (Lobster) போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களைக் கூண்டுகளில் வளர்த்திட இயலும். பல்வேறு ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின்கீழ் இதுவரை ரூ.947.29 இலட்சம் செலவில் 220 மிதவைக் கூண்டுகள் கடலோர மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடலில் கூண்டுகள் அமைத்து மீன் வளர்ப்போருக்குத் தேவையான அளவு கடல் மீன் குஞ்சுகளை வழங்குவதற்காக இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடல் மீன் குஞ்சு வளர்ப்பு மையம் மாநில அரசால் நிறுவப்பட்டுள்ளது.

5.7 மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் நிதியுதவி பெற்று தமிழகத்தில் உள்ள மீன் இறங்கும் பகுதிகளை மீன் இறங்குதளங்களாகவும், மீன் இறங்குதளங்களை மீன்பிடித் துறைமுகங்களாகவும் தரம் உயர்த்திடவும், தற்பொழுது உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களை நவீனப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திடவும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளவும், ஏற்றுமதி வாய்ப்புகளை ஏற்படுத்தி மீனவர்களுக்குக் கூடுதல் விலை கிடைத்திடவும் வழிவகை செய்யப்படுகிறது. மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படுவதால் மீனவர்கள் மற்றும் பொது மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

5.7.1 மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, அரசின் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 340 மீ. நீளமுள்ள வடக்கு அலைத் தடுப்புச் சுவர், 1,070 மீ. நீளமுள்ள தெற்கு அலைத் தடுப்புச் சுவர்களுடன், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர

2022 ஏப்ரல் 13]

கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

5.7.2 திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைத்திட மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 510 மீ. நீளமுள்ள வடக்கு அலைத் தடுப்புச் சுவர், 849 மீ. நீளமுள்ள தெற்கு அலை தடுப்புச் சுவர்களுடன் சூரை மீன்கள் மற்றும் ஆழ்கடல் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 80% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.3 நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் நவீன வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 1080 மீ. நீளமுள்ள வடக்கு அலைத் தடுப்புச் சுவர், 1,300 மீ. நீளமுள்ள தெற்கு அலைத் தடுப்புச் சுவர், 240மீ நீளமுள்ள படகு அணையும் தளங்களுடன், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.4 கடலூர் மாவட்டம், முதுநகர் மீன்பிடித் துறைமுகத்தினைப் புனரமைத்தல்

கடலூர் மாவட்டம், முதுநகரில் மீன்பிடித் துறைமுகத்தினைப் புனரமைக்கும் பணிக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அமைத்திட தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூடுதல் வசதிகளுடன் படகு அணையும் சுவர் 1,040 மீ. நீளம், தடுப்புச் சுவர் 600 மீ. நீளம் மற்றும் மீன்களை சுகாதாரமான

முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 90% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.5 கழுவேலி ஆற்றின் கரையோரங்களில், விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், ஆலம்பரை குப்பத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்

கழுவேலி ஆற்றின் கரையோரங்களில், விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பத்திலும் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், ஆலம்பரைகுப்பத்திலும் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்திட ரூ.235 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கு மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் (CRZ) அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், நிலைப்படுத்தும் சுவர் 900 மீ. நீளம், படகு அணையும் சுவர் 1,100 மீ. நீளம், கடற்கரை பாதுகாப்பு கட்டமைப்பு 300 மீ. நீளம், சாய்வு தளம் 2 எண்ணம், கரைகளைப் பலப்படுத்தும் பணி 400 மீ. நீளம், தூர்வாரி சமன்படுத்துதல் மற்றும் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.6 நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ரூ.150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வடக்கு அலைத் தடுப்புச் சுவர் 1,650 மீ. நீளம், தெற்கு அலைத் தடுப்புச் சுவர் 2,000 மீ. நீளம், படகு அணையும் தளம் 340 மீ. நீளம், தூர்வாரி சமன்படுத்துதல் மற்றும் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, 40% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022 ஏப்ரல் 13]

5.7.7 கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்புச் சுவரை நீட்டித்தல் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்புச் சுவரை மத்திய நீர் மற்றும் மின்சக்தி ஆராய்ச்சி நிலையத்தின் (CWPRS) பரிந்துரையின்படி, 213 மீ நீளத்திற்கு நீட்டிக்கவும் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ரூ.137 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 25% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.8 தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் படகு அணையும் தளம் (T-Jetty) விரிவாக்கம் செய்தல்

தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் படகு அணையும் தளத்தை விரிவாக்கம் செய்ய ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 50% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.9 தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் படகு அணையும் தளம் அமைத்தல்

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் அதிகமான படகுகள் நிறுத்துவதற்கு, கூடுதல் படகு அணையும் தளம் அமைத்திட ரூ.25 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 10% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.10 இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் 20% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

[*2022 ஏப்ரல் 13*

5.7.11 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் (வடக்கு) மற்றும் (தெற்கு) கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் (வடக்கு) மற்றும் (தெற்கு) கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 60% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.12 இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 30% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.13 வானகிரி, கீழதோட்டம், வடக்கம்மாப்பட்டினம், புதுக்குடி மற்றும் கோட்டைபட்டினம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைத்தல் மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி, தஞ்சாவூர் மாவட்டம், கீழதோட்டம், புதுக்கோட்டை மாவட்டம், வடக்கம்மாப்பட்டினம், புதுக்குடி மற்றும் கோட்டைபட்டினம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைக்கவும், நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ரூ.28 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.14 திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு

2022 ஏப்ரல் 13]

மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.15 கடலூர் மாவட்டம், அன்னங்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகளை அமைத்தல்

கடலூர் மாவட்டம், அன்னங்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்களில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த ரூ.19.50 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 20% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.16 நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் மீன் இறங்குதளத்தின் முகத்துவாரத்தினைத் தூர்வாருதல் மற்றும் அலை தடுப்புச்சுவர் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் உள்ள மீன் இறங்குதளத்தின் முகத்துவாரத்தினைத் தூர்வாருதல் மற்றும் வடக்கு அலை தடுப்புச் சுவர் அமைக்க ரூ.19.87 கோடிக்கு, நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 35% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.17 திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்த ரூ.26.85 கோடிக்கு, நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சட்டபூர்வ அனுமதி, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.18 இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர், தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம் கொடியம்பாளையம், சின்னமேடு ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம் சின்னமேடு மற்றும்

கொடியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.31.50 கோடிக்கு, நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.19 கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைத்தல்

கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.13.06 கோடிக்கு, நபார்டு நிதியின்கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 40% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.20 இராமநாதபுரம் மாவட்டம், களிமண்குண்டு, தொண்டி மற்றும் முள்ளிமுனை கிராம மீன் இறங்குதளங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம், களிமண்குண்டு, தொண்டி மற்றும் முள்ளிமுனை ஆகிய கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நபார்டு நிதியின்கீழ் ரூ.4.92 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 50% பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.21 திருச்சி, கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்

திருச்சி, கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையங்கள் அமைத்திட மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.9.60 கோடிக்கு மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.7.22 இராமேஸ்வரம், உவரி, பழவேற்காடு மற்றும் வாணியக்குடி ஆகிய இடங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் (ரூ.1 கோடி), திருநெல்வேலி மாவட்டம், உவரி (ரூ.1 கோடி), திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு (ரூ.1 கோடி) மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி (ரூ.1 கோடி) ஆகிய

2022 ஏப்ரல் 13]

இடங்களில் புதிய மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்க பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.23 தூத்துக்குடி மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகங்களை விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல்

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம் (ரூ.1 கோடி) மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தினை (ரூ.1 கோடி) விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.2 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.24 செங்கல்பட்டு மாவட்டம், கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம் கொக்கிலமேடு மற்றும் ஆழிகுப்பம் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

செங்கல்பட்டு மாவட்டம், கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம், கொக்கிலமேடு மற்றும் ஆழிகுப்பம் கிராமத்தில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.39 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.25 தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்

தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி முகத்துவாரத்தினை நிரந்தரமாக

நிலைப்படுத்திட தெற்கு அலைத்தடுப்புச் சுவர் மற்றும் வடக்கு அலைத்தடுப்புச் சுவர்களை முறையே 940 மீ மற்றும் 120 மீ. நீளத்தில் அமைத்து முகத்துவாரத்தை ஆழப்படுத்திட ரூ.45 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.26 தூத்துக்குடி மாவட்டம், ஜீவா நகர் (திருச்செந்தூர்), அமலி நகர், ஆலந்தலை, குலசேகரபட்டினம், வீரபாண்டியன்பட்டினம் மற்றும் மீனவர் காலனி (தெர்மல் – II அருகில்) மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம் ஜீவா நகர் (திருச்செந்தூர்), அமலி நகர், ஆலந்தலை, குலசேகரபட்டினம், வீரபாண்டியன்பட்டினம் மற்றும் மீனவர் காலனி (தெர்மல்–II அருகில்) ஆகிய இடங்களில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.17 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.27 மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், தூத்துக்குடி மாவட்டம், சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளங்களை மேம்படுத்தும் பணிகள்

மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், தூத்துக்குடி மாவட்டம், சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளங்களை மேம்படுத்த ரூ.66 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.28 செங்கல்பட்டு மாவட்டம், அங்காளம்மன் குப்பம், புதுநடுக்குப்பம், பழையநடுக்குப்பம், கரிக்காட்டுகுப்பம் மற்றும் செம்மஞ்சேரிகுப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

செங்கல்பட்டு மாவட்டம், அங்காளம்மன்குப்பம் புதுநடுக்குப்பம், பழையநடுக்குப்பம், கரிக்காட்டுகுப்பம், மற்றும் செம்மஞ்சேரி ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக ரூ.57 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

2022 ஏப்ரல் 13]

5.7.29 கன்னியாகுமரி மாவட்டம், கேசவபுத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமங்களில் கடலரிப்பினைத் தடுப்பதற்காகக் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டம், கேசவபுத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமங்களில் கடலரிப்பினைத் தடுப்பதற்காகக் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கீழ மணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.101 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.30 கடலூர் மாவட்டம், வெள்ளார் முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம், சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்

கடலூர் மாவட்டம், வெள்ளார் முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம், சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்திட ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளார் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்திட, 512 மீ நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களும் மற்றும் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தில் 305 மீ நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.31 கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் அமைக்கும் பணிகள்

கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக ரூ.22 கோடி மதிப்பீட்டில்

நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.32 கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.13 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.33 நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கடலரிப்பைத் தடுக்க நேர்கல் சுவர்கள் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கடலரிப்பைத் தடுக்க நேர்கல் சுவர்கள் அமைக்க ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.34 மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி மீன் இறங்குதளத்தை மேம்படுத்துதல்

மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி கிராமத்தில் படகு அணையும் சுவர் 580 மீ நீளம், நேர்கல் சுவர்கள் தெற்கு மற்றும் வடக்கில் தலா 245மீ நீளம் மற்றும் சிறிய நேர்கல் சுவர்கள் 50 மீ நீளம் (2 எண்ணம்) மற்றும் சாலை வசதிகளுடன் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்திட ரூ.55 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.35 இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் உள்ள படகு அணையும் தளத்தினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் 200 மீ. நீளம் மற்றும் 150 மீ. நீளமுள்ள இரண்டு படகு அணையும் தளங்களைப் புனரமைத்து மேம்படுத்திட ரூ.22.77 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

2022 ஏப்ரல் 13]

5.7.36 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்குப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்குப் பகுதியில் 843 மீ நீளத்தில் அலைத்தடுப்புச் சுவர் (வடக்கு) அமைத்து, கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.30 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.37 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தெற்கு கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் தெற்கு பகுதியில் 1,032 மீ. நீளத்தில் அலைத்தடுப்புச் சுவர் (தெற்கு) மற்றும் 84மீ நீளத்தில் நேர்கல் சுவர் அமைத்து கடலரிப்பிலிருந்து, பாதுகாத்திட மற்றும் ஏலக்கூடம் அமைத்திடவும் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.38 கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல்

கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்களை மேம்படுத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் கோடிமுனை பகுதியில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 160மீ மற்றும் 116 மீ. சைமன் காலனி பகுதியில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 163 மீ. மற்றும் 100 மீ. மற்றும் குறும்பனையில் நேர்கல் சுவர் 100மீ நீளத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.39 விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.14.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

[2022 ஏப்ரல் 13

5.7.40 செங்கல்பட்டு மாவட்டம், புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

செங்கல்பட்டு மாவட்டம், புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.9.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

5.7.41 மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம்

தமிழ்நாடு அரசு கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 5,000 வீடுகள் கட்டி வழங்கிட ரூ.85 கோடி செலவினத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதனில் ரூ.61.97 கோடி பெறப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,098 வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு, 1,951 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

5.8 உள்நாட்டு மீன்வள மேம்பாடு

உள்நாட்டு மீன்வளப் பிரிவு மாநிலத்தின் ஊட்டச்சத்து தேவையினைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிப்பதுடன், கிராமப்புற மேம்பாட்டிற்கும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கி, மாநிலத்தின் சமூக, பொருளாதார செழுமையினை உறுதி செய்திட வழிவகுக்கிறது. தற்பொழுது, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள்மூலம் 75 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும், மாநிலத்தில் உள்ள தகுதியான அனைத்து நீர்நிலைகளிலும் இருப்பு செய்ய வேண்டிய மீன் குஞ்சுகளின் தேவை 100 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் தேவைக்கான இடைவெளியினைப் பூர்த்தி செய்திடும் விதமாக, அரசு பல்வேறு திட்டங்களின்கீழ் அரசு மற்றும் தனியார் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களை அமைத்து மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு

- *தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து மீன் வளர்ப்போருக்கு விநியோகித்தல்.*
- *மீன் குஞ்சு தேவையினைப் பூர்த்தி செய்திட மீன் குஞ்சு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.*
- *உள்நாட்டு நீர்வள ஆதாரங்களைப் பயன்படுத்தி மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.*
- *உள்நாட்டு நீர்வள ஆதாரங்களைப் புவியிடம் சார்ந்த குறியீடு செய்து மீன் உற்பத்தித் திறனை மதிப்பிடுவதற்கும் மற்றும் உள்நாட்டு மீன்வளப் பிரிவின் எதிர்கால வளர்ச்சிக்காகத் திட்டமிடுதலுக்கும் பயன்படுத்துதல்.*
- *மீன் வளர்ப்பினை மேற்கொள்ள மானியம் வழங்கி மீன் வளர்ப்போரை ஊக்குவித்தல்.*
- *மீன் வளர்ப்புடன் ஒருங்கிணைந்த முறையில் விவசாயத்தை மேற்கொண்டு விவசாயிகளின் வருவாயினை இரட்டிப்பாக்குதல்.*
- *கூட்டு மீன் வளர்ப்பில் நீரின் பல்வேறு அடுக்குகளை தகுந்த முறையில் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்தல்.*
- *கூட்டு முறை மீன் வளர்ப்பினை பிரபலப்படுத்தி உள்நாட்டு மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்.*
- *நாட்டின மீன் இனங்களைப் பாதுகாத்திட செயற்கை முறையில் இனவிருத்தி மேற்கொண்டு நீர்நிலைகளில் இருப்பு செய்தல்.*
- *மீன் வளர்ப்பு முறைகளை விரிவுபடுத்துதல்மூலம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்.*
- *வேகமாக வளரும் மீன் இனங்களின் வளர்ப்பினைக் குறுகிய கால நீர்நிலைகளில் மேற்கொள்வதை ஊக்குவித்து குறுகிய கால நீர் இருப்பினையும் முறையாக பயன்படுத்துதல்.*

[2022 ஏப்ரல் 13

- *விலையுயர்ந்த மீன் இனங்களான விரால் மற்றும் நன்னீர் இறால் வளர்ப்பினைப் பிரபலப்படுத்தி கூடுதல் வருவாய் ஈட்டுதல்.*

5.8.1 உள்நாட்டு மீன் வளக் கொள்கை

புரதச்சத்துமிக்க உணவினை ஊரகப் பகுதி மக்களுக்கு வழங்கிடவும், மேலும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்திடவும் வரைவு தமிழ்நாடு உள்நாட்டு மீன் வளக் கொள்கை தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களை முறையாகப் பராமரித்து, பாதுகாத்து நிலையான வாழ்வாதாரத்தினை வழங்கவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யவும், பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்தவும் வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

5.8.2 உள்நாட்டு மீன் வளத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்பு முயற்சிகள்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் மீன்வள மேம்பாட்டிற்கு உகந்ததாக உள்ளன. இந்த மீன்வள ஆதாரங்கள் பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்துள்ளன. குறைந்த மழை அளவு, மீன்களின் இனப்பெருக்கக் காலத்திற்கும் மற்றும் நீர்நிலைகளில் நீர் நிறைந்திருக்கும் கால அளவிற்கும் உள்ள வேறுபாடுகள், நீர்நிலைகளில் குறைவான கால அளவே நீர் நிறைந்திருத்தல் மற்றும் மீன் தீவனத்திற்காக அதிகப்படியான செலவினம் ஆகியவை உள்நாட்டு மீன் உற்பத்திக்குச் சவால்களாகும்.

மேற்கூறப்பட்ட சவால்களை எதிர்கொண்டு உள்நாட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கிட பின்வரும் சிறப்பு முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது:

- *நீர்த்தேக்கங்கள் மற்றும் பாசனக் குளங்களில் மிதவைக் கூண்டுகள்மூலம் தீவிர மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பினை கூட்டு முறையில் மேற்கொள்ள ஊக்குவித்தல்.*

- *தரமான மீன் குஞ்சுகள் ஆண்டு முழுவதும் கிடைத்திட வழிவகை செய்தல்.*

2022 ஏப்ரல் 13]

- *தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தகுதியான நீர்நிலைகளில் மீன்குஞ்சு இருப்பினை மேற்கொண்டு முறையாகப் பயன்படுத்துதல்.*

- *தீவிர மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல் மற்றும் மீன் வளர்ப்போருக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்தல்.*

- *வேகமாக வளரும் மீன் இனங்களின் வளர்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் மீன் வளர்ப்பிற்குத் தேவையான மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா ஆகிய மீன் குஞ்சுகளை விநியோகித்தல்.*

- *தஞ்சாவூர் மாவட்டம், அச்சம்பட்டியில் அரசு மீன் தீவன உற்பத்தி ஆலை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் தரமான மீன் தீவனம் அரசு மீன் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

- *சினை மீன்களின் தரத்தினை மேம்படுத்திட சேலம் மாவட்டம், மேட்டூர் மற்றும் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு மீன் பண்ணைகளில் தூய மரபின சினை மீன் வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

- *நவீன முறை தீவிர மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களான உயிர்கூழ்ம முறையில் மீன் வளர்ப்பு மற்றும் நீரினை மறுசுழற்சி முறையினை பிரபலப்படுத்தி மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.*

5.8.3 மாநிலத்தின் நாட்டின மீன் வகைகளைப் பாதுகாத்தல்

நாட்டின மீன் இனங்களைப் பாதுகாத்திட ஏதுவாக செயற்கை முறையில் மீன் குஞ்சு உற்பத்தி மேற்கொண்டு, நீர்நிலைகளில் இருப்பு செய்து நாட்டின மீன் இனங்களைப் புத்துயிரூட்டுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. சுவையில் சிறந்த மற்றும் மருத்துவக்குணம் வாய்ந்த நாட்டின மீன்களுக்கு அதிக தேவையுள்ளது.

[2022 ஏப்ரல் 13

பெருகி வரும் நாட்டின மீன் தேவையினைக் கருத்திற் கொண்டு அயிரை (லெபிடோசெபாலிச்தைஸ் தெர்மாலிஸ்), கரிமீன் (எட்ரோப்லஸ் சுரடென்சிஸ்), கல்பாசு (லேபியோ கல்பாசு) மற்றும் சேல்கெண்டை (லேபியோ ஃபிம்பிரியேட்டஸ்) ஆகிய நாட்டின மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்திடவும் மற்றும் ஊரகப் பகுதி மக்களுக்கு புரதம் மிகுந்த மீன் உணவு கிடைப்பதை உறுதி செய்திட ஏதுவாக ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் நாட்டின மீன் குஞ்சு பொரிப்பகங்களை மொத்தம் ரூ.5 கோடி செலவில் அமைத்திட அரசு அறிவித்துள்ளது. மாநிலத்தின் இயற்கை நீர்நிலைகளில் இம்மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன்மூலம் நாட்டின மீன் வளத்தைப் பெருக்க இயலும். நாட்டின மீன் வளத்தை பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தலின் வாயிலாக இயற்கை நீர்நிலைகளை நம்பியுள்ள உள்நாட்டு மீனவர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும்.

5.8.4 மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் 37 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன, அதன் முக்கியச் செயல்பாடுகள் பின்வருமாறு:

- *தகுந்த நீர்நிலைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.*
- *விவசாயிகளுக்கு மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்களை வழங்குதல்.*
- *மீன் வளர்ப்பிற்கு மீனவ விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணமாக மானியம் வழங்குதல்.*
- *ஊரகப் பகுதிகளில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.*

5.8.5 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை 62 நீர்த்தேக்கங்களில் இத்துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 13]

உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்தல், நிலையான மீன்வள மேலாண்மை மற்றும் நீர்த்தேக்கங்களைத் தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் ஆகியன நீர்த்தேக்க மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கங்களாகும்.

அரசிற்கு வருவாயினை அதிகரித்திட பொது ஏல ஒப்பந்தப்புள்ளி முறையில் நீர்த்தேக்கங்கள் மீன்பாசிக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன. சில நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் பங்கு மீன்பிடிப்பு முறைகள் கடைபிடிக்கப்பட்டு அதன்மூலம் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

நீர்த்தேக்கங்களை மீன்பாசிக் குத்தகைக்கு விட்டதன்மூலம் 2021—22 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ.11.34 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

நீர்வள ஆதாரத் துறையின் ஒத்திசைவின்படி இதர தகுதியான நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மையினை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

5.8.6 அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

தமிழ்நாட்டில் 11 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின்மூலம் நுண்மீன் குஞ்சுகள் மற்றும் இளமீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விவரம் பின்வருமாறு:

[2022 ஏப்ரல் 13

அட்டவணை: 5

அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

வ. எண்	அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்	மாவட்டம்	உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள்
1.	பூண்டி	திருவள்ளூர்	இந்திய பெருங்கெண்டைகள்
2.	சாத்தனூர் (TNFDC)	திருவண்ணாமலை	இந்திய பெருங்கெண்டைகள்
3.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	மரபுவழி மேம்படுத்தப் பட்ட திலேப்பியா மற்றும் அமூர் கெண்டை
4.	மேட்டூர் அணை	சேலம்	இந்திய பெருங்கெண்டைகள்
5.	பவானிசாகர்	ஈரோடு	இந்திய பெருங்கெண்டைகள்
6.	திருக்காம்புலியூர்	கரூர்	இந்திய பெருங்கெண்டைகள்
7.	தட்டான்குளம்	தஞ்சாவூர்	இந்திய பெருங்கெண்டைகள்
8.	கரந்தை	தஞ்சாவூர்	இந்திய பெருங்கெண்டைகள்
9.	நல்லிக்கோட்டை	திருவாரூர்	இந்திய பெருங்கெண்டைகள்
10.	மஞ்சளாறு	தேனி	மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா
11.	மணிமுத்தாறு	திருநெல்வேலி	இந்திய பெருங்கெண்டைகள்

2022 ஏப்ரல் 13]

அரசு மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட முக்கியத்துவம் வழங்கி மாநிலத்தில் தரமான மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின்மூலம் 2021-22 ஆம் ஆண்டில் 65.68 கோடி நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், மீன் குஞ்சு பொரிப்பகங்களை அமைத்திடவும் தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்திடவும் அரசு மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

5.8.7 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் 39 அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் துறையின் கீழும், ஐந்து மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கீழும் செயல்பட்டு வருகின்றன. 2021—22 ஆம் ஆண்டில் மொத்தம் 9.34 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை: 6

அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

வ. எண்	அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	மாவட்டம்
மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்		
1.	பூண்டி	திருவள்ளூர்
2.	செம்பரம்பாக்கம்	காஞ்சிபுரம்
3.	ஆத்தூர்	செங்கல்பட்டு
4.	மோர்தானா	வேலூர்
5.	வீடூர்	விழுப்புரம்
6.	லால்பேட்டை	கடலூர்
7.	அகரம்	கடலூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	மாவட்டம்
8.	அசூர்	திருச்சிராப்பள்ளி
9.	குளித்தலை	கரூர்
10.	திருக்காம்புலியூர்	கரூர்
11.	நெய்தலூர்	தஞ்சாவூர்
12.	அகரப்பேட்டை	தஞ்சாவூர்
13.	கரந்தை	தஞ்சாவூர்
14.	திருமங்கலக்கோட்டை	தஞ்சாவூர்
15.	நல்லிக்கோட்டை	திருவாரூர்
16.	தட்டாமனைப்பட்டி	புதுக்கோட்டை
17.	குருங்களூர்	புதுக்கோட்டை
18.	கருவிடைச்சேரி	புதுக்கோட்டை
19.	மேட்டூர் அணை	சேலம்
20.	ஆணைமடுவு	சேலம்
21.	பவானிசாகர்	ஈரோடு
22.	ஒகேனக்கல்	தருமபுரி
23.	சின்னாறு	தருமபுரி
24.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
25.	பாம்பார்	கிருஷ்ணகிரி
26.	கெலவரப்பள்ளி	கிருஷ்ணகிரி
27.	சாத்தையாறு	மதுரை
28.	வைகை அணை	தேனி

2022 ஏப்ரல் 13]

வ. எண்	அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	மாவட்டம்
29.	மஞ்சளாறு அணை	தேனி
30.	அணைப்பட்டி	திண்டுக்கல்
31.	பிளவக்கல்	விருதுநகர்
32.	மானகிரி	சிவகங்கை
33.	பிரவலூர்	சிவகங்கை
34.	மணிமுத்தாறு	திருநெல்வேலி
35.	கூனியூர்	திருநெல்வேலி
36.	கடனா	தென்காசி
37.	பேச்சிப்பாறை	கன்னியாகுமரி
38.	சிற்றாறு-I	கன்னியாகுமரி
39.	சிற்றாறு-II	கன்னியாகுமரி
தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்		
40.	சாத்தனூர்	திருவண்ணாமலை
41.	ஆழியாறு	கோயம்புத்தூர்
42.	திருமூர்த்தி	திருப்பூர்
43.	அமராவதி	திருப்பூர்
44.	பாலாறு — பொருந்தலாறு	திண்டுக்கல்

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை, தருமபுரி மாவட்டம், தொப்பையாறு அணை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், கொளவாய் ஏரி ஆகிய மூன்று இடங்களில் மிதவைக் கூடுகளில் மீன் விரலிகள் வளர்த்தெடுத்தல் மேற்கொள்ளப்பட்டு தரமான மீன் விரலிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் மீன் பண்ணையாளர்களை ஊக்குவித்து

[2022 ஏப்ரல் 13

தனியார் மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களை அமைத்திட அரசு பல்வேறு திட்டங்களின்கீழ் மானிய உதவிகளை வழங்கி வருகிறது.

சினை மீன்களின் முட்டையிடும் திறன் மற்றும் முட்டைகளின் பொரிக்கும் திறனை அதிகரித்திடவும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் அரசு மீன் பண்ணைகளில் தூய மரபின இந்திய பெருங்கெண்டை சினை மீன் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கங்கை நதியிலிருந்து இந்திய பெருங்கெண்டை மீன்கள் சேகரிக்கப்பட்டு அரசு மீன் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குத் தூய மரபின மீன்குஞ்சுகளை விநியோகம் செய்து சினை மீன்கள் உற்பத்தியினை அதிகரிப்பதன்மூலம் சினை மீன்களில் மரபு குறைபாட்டைத் தவிர்த்து தரமான சினை மீன்களை அதிகரித்திட இயலும். மேலும், தரமான மீன்குஞ்சுகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட மீன் விதை வங்கிகள் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் நிதி உதவியின்கீழ் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

5.8.8 அரசு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகங்கள் மற்றும் வளர்ப்பு நிலையம்

வேகமாக வளரும் மீன்களைக் குறுகிய கால நீர்நிலைகளில் இருப்பு செய்திடுவதை ஊக்குவித்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. துறையின்மூலம் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகங்கள் கிருஷ்ணகிரி மற்றும் தேனி மாவட்டம், மஞ்சளாறு அணை அரசு மீன் பண்ணைகளில் அமைக்கப்பட்டு ஆண்டொன்றிற்கு 40 இலட்சம் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மாநிலத்திலுள்ள மீன்வளர்ப்போருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பெருகிவரும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு தேவையினைக் கருத்திற்கொண்டு திருநெல்வேலி மாவட்டம், கூனியூர் அரசு மீன் பண்ணையில் ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் விரலிகள்

2022 ஏப்ரல் 13]

உற்பத்தித் திறனுள்ள வளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அரசு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகங்கள் மற்றும் மீன் விரலிகள் வளர்த்தெடுக்கும் நிலையம் உள்நாட்டு மீன் வளப் பிரிவின் மேம்பாட்டிற்கு வரப்பிரசாதமாக அமைந்து தீவிர மீன் வளர்ப்பு மேற்கொள்வோருக்கு அதிக வருமானம் ஈட்டக்கூடியதாக விளங்குகிறது.

5.9 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) 2020-21

அரசு மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) 2020-21 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம், மதுரை மாவட்டம், சாத்தையாறு, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு மற்றும் தென்காசி மாவட்டம் கடானா ஆகிய ஐந்து அரசு மீன் பண்ணைகளை நவீனமயமாக்கிட ரூ.18.30 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.10 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2020-21

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2020-21-ன்கீழ் மொத்தம் ரூ.11.94 கோடி செலவில் அரசு மீன் பண்ணைகளில் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை: 7

வ. எண்	திட்டம்	திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)
1	உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் வாயிலாகப் புவியிடம் சார் குறியீடு செய்தல்	25.00
2	நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் உள்ள 'ட்ரவுட்' மீன்குஞ்சு பொரிப்பகத்தினைப் புதுப்பித்தல்	10.00

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2022 ஏப்ரல் 13

வ. எண்	திட்டம்	திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)
3	அரசு மீன் பண்ணைகளில் தீவிர மீன்குஞ்சு வளர்ப்பு செய்திடும் வசதிகளை ஏற்படுத்துதல்	80.00
4	திருவள்ளூர் மாவட்டம், பூண்டி அரசு மீன் பண்ணையில் மீன்குஞ்சு வளர்ப்பு தொட்டிகள் அமைத்தல்	109.00
5	தேனி மாவட்டம், வைகை அரசு மீன் பண்ணையில் கூடுதல் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்துதல்	142.00
6	ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு பழைய மீன்பண்ணையில் சினை மீன் குளங்களைப் புனரமைத்தல்	368.00
7	திருநெல்வேலி மாவட்டம் கூனியூர் அரசு மீன் பண்ணையில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல்	379.53
8	தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை அரசு மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் பொரிப்பகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்	81.25
	மொத்தம்	1,194.78

மேலும், அரசு 2020-21 ஆம் ஆண்டிற்குப் பின்வரும் பயனாளிகள் சார்ந்த திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கி திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன:

2022 ஏப்ரல் 13]

அட்டவணை:8

வ. எண்	திட்டம்	அலகு	தொகை (ரூ. இலட்சம்)
1	மீன் குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்திட மானியம் வழங்குதல்	*10* ஹெக்டேர்	*36.00*
2	மீன் வளர்ப்பினை அதிகரித்திட மீன் வளர்ப்போருக்கு மானியம் வழங்குதல்	*50* ஹெக்டேர்	*205.00*
3	கிருஷ்ணகிரி மாவட்ட பாசனக் குளங்களில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல்	*52* எண்ணம்	*315.12*
	மொத்தம்		*556.12*

5.11 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (2021-22)

அரசு மீன் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு கீழ்க்காணும் திட்டங்களுக்குத் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.*5.72* கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. திட்ட விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை:9

வ. எண்	திட்டம்	திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)
1	கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் அரசு மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல்	*450.00*

வ. எண்	திட்டம்	திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)
2	சேலம் மாவட்டம், ஆணைமடுவு அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல்	70.00
3	கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு-2 அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல்	32.00
4	கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல்	20.00
	மொத்தம்	572.00

மேலும், அரசு 2021-22 ஆம் ஆண்டிற்கு பயனாளிகள் சார்ந்த பின்வரும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது:

அட்டவணை:10

வ. எண்	திட்டம்	அலகு	தொகை (ரூ. இலட்சம்)
1	பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் கூட்டு மீன்வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பினை ஊக்குவித்தல்	100 எண்ணம்	25.25
2	பண்ணைக் குட்டைகளில் நீர் சேமிப்புத் திறனை மேம்படுத்திட அதிக அடர்த்தி பாலித்தீன் விரிப்புகளிட்டு மீன் வளர்த்தல்	100 எண்ணம்	75.75
3	விரால் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட இடுபொருள் மானியம் வழங்குதல்	100 எண்ணம்	30.30
	மொத்தம்		131.30

2022 ஏப்ரல் 13]

5.12 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (PMMSY) (2020-21)

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-21-ன்கீழ் அரசு ரூ.28.73 கோடி விடுவித்துள்ளது. அனைத்துத் திட்டங்களும் முன்னேற்றத்தில் உள்ளன. திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை:11

வ. எண்	திட்டம்	அலகு	தொகை (ரூ. இலட்சம்)
1	மீன்விதை வங்கிகள் அமைத்தல்	2 எண்ணம்	1,000.00
2	ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டம்	5 எண்ணம்	1,108.25
3	புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்தல்	2 எண்ணம்	25.00
4	புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் அமைத்தல்	10 ஹெக்டேர்	32.20
5	புதிய நன்னீர் மீன்வளர்ப்பு குளங்கள் அமைத்தல்	100 ஹெக்டேர்	322.00
6	நன்னீர் மீன்வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல்	100 ஹெக்டேர்	184.00
7	நடுத்தர உயிர்கூழ்ம (Bio-floc) மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல்	15 எண்ணம்	98.00

[2022 ஏப்ரல் 13

வ. எண்	திட்டம்	அலகு	தொகை (ரூ. இலட்சம்)
8	நீர் மறுசுழற்சி முறை மீன்வளர்ப்புத் தொட்டிகள் அமைத்தல்	20 எண்ணம்	69.00
9	சிறிய உயிர்கூழ்ம (Bio-floc) மீன் வளர்ப்புக் குளங்கள் அமைத்தல்	10 எண்ணம்	34.50
	மொத்தம்		2,872.95

5.13. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2021-22

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2021-22-ன்கீழ் ஒன்றிய அரசு ரூ.21.65 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை:12

வ. எண்	திட்டம்	அலகு	தொகை (ரூ. இலட்சம்)
1	புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்தல்	8 எண்ணம்	200.00
2	புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்கள் அமைத்தல்	40 ஹெக்டேர்	280.00
3	புதிய நன்னீர் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைத்தல்	85 ஹெக்டேர்	595.00
4	நன்னீர் மீன் வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல்	85 ஹெக்டேர்	340.00

2022 ஏப்ரல் 13]

வ. எண்	திட்டம்	அலகு	தொகை (ரூ. இலட்சம்)
5	சிறிய உயிர்கூழ்ம (Bio-floc) மீன் வளர்ப்புக் குளங்கள் அமைத்தல்	100 எண்ணம்	750.00
	மொத்தம்		2,165.00

5.14 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (TN-IAMP)

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-II, கடந்த 2018-19 முதல் 66 உபவடிநிலப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, பயன்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன்வள மேலாண்மை, பண்ணைக் குட்டைகளில் வேகமாக வளரக்கூடிய மீன்கள் இருப்பு மற்றும் மீன் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்திட உலக வங்கிமூலம் ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, மீன்வள மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2018-19 முதல் 2020-21 வரை ரூ.25.65 கோடி செலவில், பவானிசாகர் மற்றும் மேட்டூரில் தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி, மேம்பாடு மற்றும் பராமரிப்பு மையங்கள், மஞ்சளாறு அணை அரசு மீன் பண்ணையில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகம் அமைத்தல், கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் அகரம் அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்துதல், 22,069 ஹெக்டேர் நீர் பாசன குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல், 843 பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்த்தல், 58 மண்ணிலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணைகள், 61 கூடுகளில் மீன்குஞ்சு வளர்த்தல், 15 மிதவைக் கூடுகளில் மீன் வளர்த்தல், 440 மீன்பிடி உபகரணங்கள் மீனவர்களுக்குப் பெற்று வழங்குதல் மற்றும் 13 நவீன மீன் விற்பனை அங்காடிகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் 34 உபவடிநிலப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 13

இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டு, பின்வரும் மீன்வளத் திட்டங்களைச் செயல்படுத்திட ரூ.7.42 கோடிக்கு செலவின ஒப்பளிப்பு வழங்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அட்டவணை:13

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்–II, 2021–22

வ. எண்	திட்டச் செயல்பாடு	அலகு
1	நீண்ட கால மற்றும் குறுகிய கால நீர்ப் பாசனக் குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்புச்செய்தல்	4,605 ஹெக்டேர்
2	பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு	343 எண்ணம்
3	மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்	55 எண்ணம்
4	கூடுகளில் மீன்குஞ்சு வளர்த்தல்	39 எண்ணம்
5	மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்	27 எண்ணம்
6	நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்	2 எண்ணம்
7	மதிப்புமிக்க விரால் மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் வளர்ப்பு மையம் அமைத்தல்	1 எண்ணம்
8	மாதிரி கிராம செயல்பாடுகள்	13 எண்ணம்

இத்திட்டத்தின்மூலம் 2022-23 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் மீன்வளத் திட்டங்கள் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது:

2022 ஏப்ரல் 13]

அட்டவணை:14

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்–II, 2022–23

வ. எண்	திட்ட செயல்பாடு	எண்ணம்
1	நாகப்பட்டினம் மாவட்டம், ஒக்கூர் கிராமத்தில் புதியதாக மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணை அமைத்தல்	1
2	மடித்து எடுக்கக்கூடிய தொட்டிகளில் மீன்வளர்ப்பு	40
3	நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்	6

5.15 வண்ண மீன் வளர்ப்பு

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் வண்ண மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, வண்ண மீன் ஏற்றுமதியில் தமிழகம் நாட்டில் இரண்டாவது, மாநிலமாகத் திகழ்கிறது. வண்ண மீன் உற்பத்தியை அதிகரித்திடவும் அதன் வாயிலாக வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் ரூ.469.34 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், முன்னோடித் திட்டமாக வண்ண மீன் வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.150.87 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.74.58 இலட்சம் என மொத்தம் ரூ.225.45 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பல்வேறு இனங்களான கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்புப் பண்ணைகள் புதிதாக அமைத்தல்/ புனரமைத்தல், நீர்த்தாவரம் வளர்த்தல் மற்றும் வண்ண மீன் வளர்ப்பு உபகரணங்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல், வண்ண மீன் வளர்ப்புத் தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே வண்ண மீன் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ஏதுவாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் வண்ண மீன் தொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2020-21 ஆம் ஆண்டிற்கு, ரூ.165 இலட்சம் மதிப்பிலான

[2022 ஏப்ரல் 13

திட்டங்களுக்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வண்ண மீன் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5.16 மீன் மற்றும் மீன் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்

5.16.1 மீன் விற்பனை சந்தைகள் அமைத்தல்

பொதுமக்களுக்குத் தரமான மீன்களைச் சுகாதாரமான முறையில் வழங்கிடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மீன் சந்தைகள் அமைத்திட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டமானது மாநில அரசு, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியுதவியுடன் ரூ.17.54 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

இத்திட்டத்தின்கீழ், 21 மீன் சந்தைகள் அமைத்திட மாநில அரசின் நிதியுதவியாக ரூ.5.89 கோடி மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியாக ரூ.7.06 கோடி, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்/மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை:15

வ. எண்	மீன் விற்பனை சந்தை அமைவிடம்	திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)
1.	சரலூர் (நாகர்கோவில்), கன்னியாகுமரி மாவட்டம்	81.88
2.	தாராபுரம், திருப்பூர் மாவட்டம்	93.00
3.	வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்	48.59
4.	தோப்புத்துறை, நாகப்பட்டினம் மாவட்டம்	29.49
5.	நாகப்பட்டினம் நகரம்	42.71
6.	ஆசாத் நகர், நாகப்பட்டினம் மாவட்டம்	37.78
7.	குண்டு உப்பலவாடி, கடலூர் மாவட்டம்	22.50

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மீன் விற்பனை சந்தை அமைவிடம்	திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)
8.	தருவைக்குளம், தூத்துக்குடி மாவட்டம்	13.60
9.	காசிவிளங்கி, திருச்சி மாவட்டம்	250.00
10.	இராமநாதபுரம்	93.39
11.	பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்	100.00
12.	மேட்டூர், சேலம் மாவட்டம்	43.00
13.	டி.வி.எஸ். கார்னர், புதுக்கோட்டை மாவட்டம்	53.70
14.	ஆத்தூர், சேலம் மாவட்டம்	96.30
15.	ராணிப்பேட்டை	61.29
16.	மார்த்தாண்டம், கன்னியாகுமரி மாவட்டம்	97.60
17.	காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்	100.00
18.	இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்	100.00
19.	கடையநல்லூர், தென்காசி மாவட்டம்	38.76
20.	கருமாண்டிச்செல்லிப்பாளையம், ஈரோடு மாவட்டம்	100.00
21.	அனிச்சம்பாளையம், விழுப்புரம் மாவட்டம்	250.00
	மொத்தம்	1,754.00

இதனில், 17 மீன் சந்தைகளின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இராமேஸ்வரம், கடையநல்லூர், அனிச்சம்பாளையம் மற்றும் கருமாண்டிச்செல்லிப்பாளையம் ஆகிய 4 இடங்களில் மீன் சந்தைகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.16.2 மாநிலத்தில் மீன் நுகரும் முறை

2020-21 ஆம் ஆண்டு மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 7.22 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். மாநிலத்தில் 2020-21 ஆம் ஆண்டு தனிநபர் மீன் நுகர்வு 9.3 கிலோ கிராம் ஆகும். நவீனமயமாக்கப்பட்ட மீன் சந்தைகள், மீன் கடைகள், நடமாடும் மீன் விற்பனையகங்கள் மற்றும் இணைய வழி விற்பனைமூலம் மாநிலத்தில் மீன் நுகர்வு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

5.16.3 மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி

இந்தியாவில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ரூ.43,717.26 கோடி மதிப்பிலான 11.49 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதியுடன் பெரும்பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலிருந்து 2020-21 ஆம் ஆண்டில் 1.10 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்குக் கடல் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணியாக ரூ.5,565.46 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் உணவுப் பொருட்களான உறைந்த இறால், மீன்கள், கணவாய் மீன், உலர்மீன், குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உயிர் மீன் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன் பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

தமிழகத்தில் அரசால் கட்டப்பட்டுள்ள 9 பெரிய மீன்பிடித் துறைமுகங்கள், 3 நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் 52 மீன் இறங்குதளங்களின்மூலம் மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

5.17 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் பாடப் பிரிவுகளை பயின்றிட, மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளில் 151 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.18 அகில இந்திய குடிமைப் பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்

இத்துறையின் வாயிலாக, 2017 ஆம் ஆண்டு முதல், இந்திய குடிமைப் பணி போட்டித் தேர்வுகளைத் திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு அரசு செலவில் ஆறு மாதக்கால பிரத்யேகப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி (அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி நிலையம், சென்னை) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை நான்கு அணிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.9.56 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு 75 மீனவ இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.19 மீனவர் மற்றும் மீன் வளர்ப்போருக்கு விவசாய கடன் அட்டை (Kisan Credit Card) வழங்குதல்

மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போருக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனச் செலவினங்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிட விவசாயக் கடன் அட்டை வழங்கும் திட்டமானது ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டு, தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக மீன்பிடிப்பு, மீன்/ இறால் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, சிப்பி வளர்ப்பு மற்றும் மீன் விற்பனைக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனச் செலவினங்களை வங்கிகளிடமிருந்து குறுகியக் காலக் கடனாகப் பெற்றிட இயலும். இத்திட்டத்தின்கீழ் தகுதியுடைய மீனவர்/மீன் வளர்ப்போர்க்கு நடைமுறை மூலதனச் செலவிற்குக் கடன் உச்சவரம்பாக ரூ.2 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கடன் தொகைக்கு, ஆண்டொன்றிற்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையில்

[2022 ஏப்ரல் 13

2 விழுக்காடு குறைக்கப்படுகிறது. மேலும், குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாகக் கடனைத் திரும்பச் செலுத்தும் நபருக்கு வட்டித் தொகையில் ஆண்டுக்கு 3 விழுக்காடு குறைக்கப்பட்டு வட்டிச் சலுகை அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழகத்திலுள்ள மீனவர்/ மீன் வளர்ப்போருக்கு 3,341 விவசாயக் கடன் அட்டைகள் ரூ.22.53 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

5.20 விரிவாக்கப் பணிகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையில் செயல்பட்டு வரும் விரிவாக்கப் பிரிவு, அரசின் நலத் திட்டங்களை மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் பிற பங்குதாரர்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு பொருட்காட்சிகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீன்வள மேலாண்மை, கடலில் பாதுகாப்பான மீன்பிடிப்பு முறைகள், மீன்களை சுகாதாரமாகக் கையாளுதல், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களின் தூய்மை குறித்த விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரின் குறைகளைத் தீர்க்க, மீனவர் குறை தீர்க்கும் நாள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கான கூட்டங்கள் இத்துறையால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகிறது. மீன் வளம் தொடர்பான முக்கியத் தினங்களான உலக பெருங்கடல் தினம் (ஜூன்-8), தேசிய மீன் வளர்ப்போர் தினம் (ஜூலை-10) மற்றும் உலக மீன்வள தினம் (நவம்பர்-21) கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் மாநிலத்தில் சிறந்து விளங்கும் மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரை ஊக்குவித்திட விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

5.21 தமிழ்நாடு மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது. இதற்கு முன்பு 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

2022 ஏப்ரல் 13]

இவ்வாண்டு கடல் மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ள அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மீனவர்களின் நலனுக்காக, மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்வதன்மூலம் மீன்வளம் மற்றும் மீனவ மக்களின் தற்போதைய நிலை அறியப்பட்டு, அதன் அடிப்படையில் மீன்வளக் கொள்கைகள் மற்றும் நலத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

5.22 தமிழக மீனவச் சமுதாயத்தின் சமூக பொருளாதார நிலை குறித்து ஆய்வு

தமிழக அரசு மீனவ மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மாநிலம் முழுவதும் உருவாக்குவதன் வாயிலாக அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பல்வேறு நலத் திட்டங்களினால் மீனவ மக்களின் சமூக பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்துகொள்ளும் பொருட்டும், கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் நடத்திட அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திட்டமிடுதல், கொள்கை முடிவு உருவாக்கம், திட்டச் செயல்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றைக் கட்டமைப்பதற்கு இவ்வாய்வு பேருதவியாக அமையும்.

5.23 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் மேலாண்மை

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மீன்வளத் துறையானது மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,431 தொடக்க மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்/ 12 மாவட்டக் கூட்டுறவு இணையங்கள்/1 மாநிலத் தலைமைக் கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.17 இலட்சம் மீனவர்/ மீனவ மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 53 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 12 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

[2022 ஏப்ரல் 13

அட்டவணை: 16

மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்

கூட்டுறவுச் சங்கம்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்		
கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்	558	3,56,992
கடல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்	461	2,60,732
உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்	300	82,986
உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்	72	7,883
இதர வகைச் சங்கங்கள்	27	6,791
மொத்தம்	1,418	7,15,384
மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம்	12	998
தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்	1	814
ஆக மொத்தம்	1,431	7,17,196

6. தொழில் புரிவதற்கான வழி முறைகளை எளிதாக்குவதன்மூலம் மீன்வளப் பிரிவில் தொழில்முனைவோர் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்தல்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையில் நடைமுறையில் உள்ள தேவையற்ற/வழக்கொழிந்த சட்டங்கள் மற்றும் விதிகளை நீக்கி அல்லது திருத்தம் செய்து, தொழில்முனைவோர் மற்றும்

2022 ஏப்ரல் 13]

மக்களுக்கு உதவும் வகையில் "எளிதாக வணிகம் செய்தல்" என்ற கருத்தாக்கத்தைச் செயல்படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதேபோல், நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகளை எளிதில் பின்பற்றும் வண்ணம், இந்தச் சட்டங்களின்கீழ் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக இணையவழி சேவைகளை அறிமுகப்படுத்துவதன்மூலம் வழிமுறைகளை எளிமைப்படுத்தும் பணியும் துவங்கியுள்ளது. மீன்வளப் பிரிவில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(i) தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம், 1995

ஒன்றிய அரசின் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின்மூலம் செயல்பாட்டிலுள்ள சட்டம் (2005), தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 1995-ன் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருப்பதால், தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம் வழக்கொழிந்து போய்விட்டது. எனவே, இந்த சட்டத்தை இரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ii) மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்புடைய செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம், 2007

இச்சட்டம், மீனவர்கள், மீன்பிடிப்பு மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர்களின் விரிவான சமூக பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்யும்வகையில் தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைப்பதற்காக நடைமுறைபடுத்தப்பட்டது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான வழிகாட்டுதல்கள் இச்சட்டத்தில் உள்ளன. இவ்வாரியத்தால் செயல்படுத்தப்படும் இரண்டு சேவைகளான உறுப்பினர் சேர்க்கை மற்றும் நிவாரணம்/ உதவி தொகைக் கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல் ஆகியவை தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட www.tnfwb.tn.gov.in *என்ற வலைத்தளம் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்விரு சேவைகளை இணையவழி சேவைமூலம் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2022 ஏப்ரல் 13

(iii) தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம், 1983

தமிழகத்தில் கடல் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மற்றும் விதிமுறைகள் அமலாக்கம் ஆகியவற்றின் வரையறைகளைக் கொண்ட இச்சட்டம், 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இச்சட்டத்தின்கீழ், தமிழக கடற்பரப்பில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, மீன்பிடிப் படகுகளின் பதிவு, மீன்பிடி உரிமம், மீன்பிடி உரிமத்தினைப் புதுப்பித்தல் மற்றும் பதிவு மாற்றம் ஆகிய சேவைகள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் 'ரியல் கிராஃப்ட்' (ReALCRaft) எனும் இணையதளம் வாயிலாக அகில இந்திய அளவில் வழங்கப்படுகிறது.

புதிய மீன்பிடிப் படகுகள் பதிவு மற்றும் மீன்பிடி உரிமத்தைப் பதிவு செய்வதை எளிதாக்கும் வகையில், மீனவர்கள் நேரடியாக இந்த இணையதளத்தில் பதிவு செய்வதற்கான வசதிகளை உருவாக்க தமிழக அரசு ஒன்றிய அரசிற்குப் பரிந்துரை செய்யும்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை வாயிலாக மீனவர்களுக்கு வழங்கப்படும் இணையவழி சேவைகள் விவரம் பின்வருமாறு:

1. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

2. மீன்பிடிப்பு குறைவு கால நிவாரணத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

3. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

4. தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

7. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

ஐக்கிய நாடுகள் அமைப்பு 2015 ஆம் ஆண்டில் வறுமை, சமத்துவமின்மையினை போக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவைச் சீரமைப்பதற்காகவும் 17 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030 ஆம் ஆண்டிற்குள் அடைவதற்கான குறிக்கோள்களை வகுத்துள்ளது. மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் உற்பத்தியும் உற்பத்திக்கு ஏற்ற நுகர்வு ஓர் அலகாகவும்

2022 ஏப்ரல் 13]

(இலக்கு 12), ஒரு குறிக்கோள் மற்றும் 'கடல்வளம்' (இலக்கு 14) ஆகிய மூன்று குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய களப்பணி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தனிப் பிரிவு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தரவுகள் அவ்வப்போது தகவல் இணையத்தில் ஏற்றப்பட்டு வருகின்றன.

இலக்கு-12-ஐ அடைவதற்கு பல்வேறு திட்டங்களின்மூலம் மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலக்கு-14-ல் கடல்மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல், மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்புச் செய்தல், கடல்வாழ் உயிரின வளர்ப்பு செய்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை அமல்படுத்துவதன் வாயிலாக நீடித்த நிலையான மீன்பிடிப்பை அடைவதற்கு துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

8. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் நலனைப் பேணவும் மற்றும் வாழ்வாதாரத்தினை மீட்டெடுக்கும் பொருட்டும் மீனவத் தொழிலாளர்களுக்கென பிரத்தியேக நல வாரியம் ஒன்றினை அமைத்திடும் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு தமிழக அரசு கடந்த 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தினை நிறுவியது.

இவ்வாரியமானது மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர்/இயக்குநரை-உறுப்பினர்-செயலராகவும், அலுவல் மற்றும் அலுவல்-சாரா உறுப்பினர்களைக் கொண்டு செயல்படும்.

இம்மீனவர் நல வாரியத்தில் மொத்தம் 5.33 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய விதிகளின்படி நிதியத்திற்கான ஆண்டு பங்களிப்பாக நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து முறையே ரூ.20, தமிழ்நாடு

மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணைத்திற்குச் சொந்தமான டீசல் வழங்கு நிலையங்கள்மூலம் விற்பனைச் செய்யப்படும் வரி விலக்களிக்கப்பட்ட டீசலில் இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகு உரிமையாளர்களிடமிருந்து லிட்டருக்கு 10 பைசா வீதமும், விசைப்படகு உரிமையாளர்களிடமிருந்து லிட்டருக்கு 20 பைசா வீதமும், நீர்நிலைகளின் மீன்பாசிக் குத்தகைத் தொகையில் 7 விழுக்காடு வீதமும் மற்றும் மேட்டூர் அணை மீன் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனையில் கிலோ ஒன்றிற்கு ரூ.2 வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 1.4.2008 முதல் 31.3.2022 முடிய ரூ.35.57 கோடி சந்தா தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியம் இவ்வாண்டு (2021-22) அதிகபட்சமாக ரூ.7.78 கோடி நிதியம் வசூலித்துள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் பின்வருமாறு:

அட்டவணை : 17

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

வ. எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)			
1.	உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்கி படிப்பவர்கள்	
		மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்
	அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி	1,250	1,500	1,250	1,500
	ஆ)பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி	1,750	2,000	1,750	2,000
	இ)தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்பப் பயிற்சி (Polytechnic)	1,250	1,750	1,450	1,950

2022 ஏப்ரல் 13]

வ. எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)			
	ஈ) இளங்கலை பட்டப்படிப்பு	1,750	2,250	2,000	2,500
	உ) முதுகலை பட்டப்படிப்பு	2,250	2,750	3,250	3,750
	ஊ) தொழிற் கல்வி, இளங்கலை கல்வி. (மீன்வளம், வேளாண்மை, கால்நடை, சட்டம், பொறியியல், மருத்துவம்)	2,250	2,750	4,250	4,750
	எ) முதுகலை தொழிற் கல்விகள்	4,250	4,750	6,250	6,750
2.	திருமண உதவி			ஆண்	பெண்
	அ) உறுப்பினரின் திருமண உதவி			3,000	5,000
	ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமண உதவி			3,000	5,000
3.	மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை				
	i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/— வீதம் ஆறு மாதங்கள்)			6,000	
	ii) கருச்சிதைவு			3,000	
	iii)மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு			3,000	
4.	விபத்து நிவாரணம்				
(அ)	விபத்தினால் மரணம்			2,00,000	
(ஆ)	இரண்டு கைகள் இழப்பு			1,00,000	
(இ)	இரண்டு கால்கள் இழப்பு			1,00,000	
(ஈ)	ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு			1,00,000	

வ. எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)		
(உ)	இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு			1,00,000
(ஊ)	ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு			1,00,000
(எ)	மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு			50,000
5.	விபத்தின் காரணமாக அல்லாமல் மீன்பிடிக்கையில் அல்லது அதற்குப் பின் மரணம்	2,00,000		
6.	மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர்	2,00,000		
7.	இயற்கை மரணம்	15,000		
8.	ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை	2,500		

8.1 தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர்களுக்கு நிவாரணம்/ உதவித் தொகைத் துரிதமாக வழங்குதல்

- தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் மீனவப் பயனாளிகளுக்கான நிவாரணம்/உதவி தொகையினைத் துரிதமாக வழங்கிடும்பொருட்டு www.tnfwb.tn.gov.in என்ற வலைத்தளம் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

- இவ்வலைதளத்தைப் பயன்படுத்த அனைத்து மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர்களுக்கும் பிரத்தியேகப் பயனாளர் குறியீடு

2022 ஏப்ரல் 13]

(User ID) வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிவாரணம்/ உதவிகோரும் விண்ணப்பங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் பரிசீலனை செய்யப்பட்டு தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் நேரடியாக வலைதளத்தில் பரிந்துரை செய்யப்படுகின்றது.

- இப்புதிய நடைமுறையினால், காலவிரையமின்றி நிவாரணம் கோரும் விண்ணப்பங்கள் துரிதமாகப் பரிசீலிக்கப்படுவதுடன், மின்னணு பணப் பரிமாற்றம்மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் 2021-22 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க சாதனையாக 3,511 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு ரூ.5.64 கோடி நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- மீனவர் நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் பி.எப்.எஸ்.சி/பி.இ, (Fisheries Engineering) பாடப் பிரிவுகளைப் பயில்வதற்கு ஏதுவாக, அப்பாடப் பிரிவுகளில் பயில 5 விழுக்காடு இடஒதுக்கீடு செய்யப்பட்டு நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்குத் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் வாயிலாக கல்விக் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2020-21 ஆம் ஆண்டிற்கு ரூ.4.27 இலட்சம் கல்விக் கட்டணமாகத் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் ஏற்கப்பட்டுள்ளது. இவ்வுதவித் திட்டம் இவ்வாண்டும் செயல்படுத்தப்படும்.

9. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது (வரையறுக்கப்பட்டது) 834 தொடக்க மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கியது. இந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, கடந்த 19.10.1992-லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இணையத்தில் 474 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 152

உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 198 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 10 மாவட்ட மீனவக் கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91. 28 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

இணையத்தின் செயற்பதிவாளராக மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் அவர்களும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கூடுதல் இயக்குநர் அளவில் மேலாண்மை இயக்குநரும் இணையத்தை நிருவகித்து வருகின்றனர். இணையத்தின் நிருவாகக்குழு, தலைவர் மற்றும் 24 குழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகள்

9.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப் படகுகளுக்கு, 2020-21 ஆம் நிதியாண்டில், 13 விற்பனை மையங்கள்மூலம் 6,589 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு. இதன்மூலம் ரூ.131.78 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

9.2 மீன்பிடிக் கலன்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 16 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2021–22 ஆம் ஆண்டில், 23,519 கிலோ லிட்டர் வரி விலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப்படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.470.38 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2022-23 ஆம் நிதியாண்டில் புதிதாக அமைக்கப்படும் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்குதளங்களில் இணையத்தின்மூலம் புதிய டீசல் விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2022 ஏப்ரல் 13]

9.3 மீனவ மகளிருக்கு கருவாடு விற்பனை செய்ய உபகரணங்கள் வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 100 மீனவ மகளிர் பயனாளி கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு கருவாடு தயாரிக்க தேவையான, மீன்களைச் சுகாதாரமான முறையில் உலர்த்த மற்றும் கருவாடு வியாபாரம் செய்வதற்குத் தேவையான அன்னக்கூடை, எடைபோடும் கருவி, குடை மற்றும் நாரினால் ஆன பாய் ஆகியவை 2021-22 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 60% மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

9.4 நவீன மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் பொதுமக்களுக்குத் தரமான மீன்களை, நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு, செங்கல்பட்டு மாவட்டம், வாணியஞ்சாவடி, காஞ்சிபுரம் மாவட்டம், வையாவூர், கடலூர் மாவட்டம், நெய்வேலி நகரம், அரியலூர், மதுரை மாவட்டம், பழங்காநத்தம், இராமநாதபுரம், பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டம், வண்ணாரப்பேட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் 2021-22 ஆம் ஆண்டில் ரூ.9.34 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

9.5 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

ஒருங்கிணைந்தகூட்டுறவு வளர்ச்சித்திட்டத்தின்கீழ், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு (2017-2022) ரூ.887.43 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகங்களிலும் தருவைக்குளம் மீன்பிடி இறங்குதளத்திலும் பனிக்கட்டி நிலையங்கள் அமைக்கவும், டீசல், மண்ணெண்ணெய் வாங்க சுழற்சி நிதியாகவும், தொடக்க மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிறு வணிகக் கடன் வழங்கவும் ரூ.729.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 13

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு ரூ.1 கோடி வழங்கியுள்ளது.

9.6 மீனவ மகளிருக்கு சிறு கடன் வழங்கும் திட்டம்

தற்போது மீனவர்கள், குறிப்பாக மீனவ மகளிர், மீன் கொள்முதல் செய்பவர் மற்றும் தனி நபர்கள்மூலம் அதிக வட்டிக்கு கடன் பெற்று மீன் விற்பனை சார்ந்த தொழிலில் ஈடுபட்டு, குறைவான வருவாயை பெறுகின்றனர். மீனவ மகளிருக்கு உதவிடும் வகையில் இவ்விணையம் குறைந்த வட்டி விகிதத்தில் சிறு கடன் வழங்கி, அதன் வாயிலாக அவர்கள் விற்பனை செய்யும் மீன்களுக்குக் கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்துள்ளது. இதற்காக 2021-22 ஆம் ஆண்டில் மீனவ மகளிர் பயனாளி ஒருவருக்கு தலா ரூ.15,000 வீதம், 180 மீனவ மகளிர் அடங்கிய 36 கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு மொத்தம் ரூ.27 இலட்சம் சிறு கடன் வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் நிதியாண்டில் 50 மீனவ மகளிர் கூட்டுபொறுப்பு குழுக்களுக்கு ரூ.37.50 இலட்சம் சிறு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

9.7 மீன்பிடித் துறைமுகம்/மீன்இறங்குதளம் ஆகியவற்றில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது, நாகப்பட்டினம், தூத்துக்குடி, சின்னமுட்டம், குளச்சல், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகங்களிலும் மற்றும் தருவைக்குளம் மீன்பிடி இறங்குதளத்திலும் கூட்டுறவுப் பண்டகசாலை அமைத்து மீன்பிடிக்கத் தேவையான பொருட்கள் மற்றும் மீனவர்களுக்குத் தேவையான இதர அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. 2021-22 ஆம், ஆண்டில் இதன்மூலம் ரூ.7.12 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

9.8 நிதி நிலை

இவ்விணையம், 2021-22 ஆம் நிதி ஆண்டில் ரூ.186.95 கோடி வரவு செலவினம் செய்து, ரூ.3.81 கோடி (தணிக்கை செய்யப்படாதது) நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

2022 ஏப்ரல் 13]

10. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது, பொதுத் துறை நிறுவனமாக மாநிலத்தின் வணிக ரீதியிலான மீன்வளப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்டது. இக்கழகம் நிறுவனங்களின் சட்டத்தின்கீழ், ரூ.5 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு தமிழக அரசால் பதிவு செய்யப்பட்டு, அரசால் நியமிக்கப்படும் இயக்குநர் குழுமத்தினால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரை அரசு, 28.10.2021 அன்று நியமித்துள்ளது. இக்கழகத்தின் அலுவல் சாரா மேலாண்மை இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர்/இயக்குநர் ஆவார். இக்கழகத்தின் களப்பணிகள் பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள், மேலாளர்கள், துணை மேலாளர்கள், உதவி மேலாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் ஆகியோருடன் மொத்தம் 95 நிரந்தரப் பணியாளர்கள், 11 தொகுப்பூதிய பணியாளர்கள் மற்றும் 320 தனியார் சேவை மையப் பணியாளர்கள் ஆகியோரால் நிருவகிக்கப்படுகிறது. இக்கழகம் தனது வணிக ரீதியிலான பணிகளை விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

10.1 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 8 நீர்த்தேக்கங்களில் வளர்ந்த மீன் விரலிகளை இருப்புச் செய்து, ஆண்டுதோறும் சுமார் 860 மெட்ரிக் டன் உள்நாட்டு மீன்களை உற்பத்தி செய்கிறது. மேலும், அதிகளவு வருமானம் ஈட்டிடும் பொருட்டு அரசின் ஆணைகளின்படி இந்நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையினைத் தனியாருக்கு குத்தகைக்கு அளித்துள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியாறு, திருப்பூர் மாவட்டம், அமராவதி, திருமூர்த்தி மற்றும் திண்டுக்கல் மாவட்டம், பாலாறு-பொருந்தலாறு ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் 3.83 ஹெக்டேர் பரப்பளவுக் கொண்ட ஐந்து மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் தரம் வாய்ந்த மீன்குஞ்சுகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது.

[2022 ஏப்ரல் 13

மேலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது, ஆழியாறு மீன் பண்ணையில் வண்ண மீன் உற்பத்தி மையத்தினை அமைத்துள்ளது. ஆழியாறு, திருமூர்த்தி மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்க பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் "வண்ண மீன் காட்சியகங்கள்" அமைத்து நிருவகித்து வருகிறது.

10.2 மீன் விற்பனை

தரமான மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட கடல் மீன் உணவுப் பொருட்களை நியாயமான விலையில் கழகத்தின் சில்லரை மீன் விற்பனை நிலையங்கள்மூலம் சென்னை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும், நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள்மூலம் சென்னை, திருவண்ணாமலை, கடலூர், கோயம்புத்தூர், மதுரை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மீன் விற்பனையினை விரிவாக்கம் செய்யும்பொருட்டு, பல்வேறு நகரங்களில் அதிக எண்ணிக்கையிலான நவீன மற்றும் நடமாடும் சில்லறை மீன் விற்பனை நிலையங்களை அமைத்து. மீன் விற்பனையினை விரிவுபடுத்திட கழகம் முயற்சிகளை எடுத்து வருகிறது. மேலும், மொத்த மீன் விற்பனை அங்காடி ஒன்று கோயம்புத்தூரில் உக்கடம் பகுதியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

10.3 இணையதளம்மூலம் மீன் விற்பனை வசதிகள ஏற்படுத்துதல் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினுடைய தயாரிப்புகளை வணிக அடையாளப்படுத்துதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது, www.meengal.com என்ற வணிக இணையதளத்தைக் கூடுதல் வசதிகளுடன் புதுப்பித்துள்ளதுடன், கைபேசி பயன்படுத்துவோருக்கு 'Meengal' எனும் கைபேசி செயலியினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகைய மின்னணு வணிக தரவுகளின்மூலம் கோவிட்- 19 பெருந்தொற்று ஊரடங்கு காலக்கட்டத்தில் மீன்களை நுகர்வோர்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்கப்பட்டது. இது வரை 31,240 எண்ணிக்கையிலான விநியோகம் நிறைவேற்றப்பட்டு, 47.43 மெட்ரிக் டன் மீன்கள் ரூ.2.54 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது, அதனுடைய செயல்பாடுகளைப் பொதுமக்களிடையே பிரபலபடுத்திடும் நோக்கில், "இது நம்ம ஊரு மீன்கள்" என்ற வாசகத்துடன்கூடிய புதிய வணிக அடையாள சின்னத்தினை அறிமுகப்படுத்தி, சமூக ஊடகங்கள்மூலம் பிரபலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

10.4 வரி விலக்களிக்கப்பட்ட டீசல் மற்றும் மானிய விலை தொழிலக மண்ணெண்ணெயினை மீன்பிடி படகுகளுக்கு வழங்குதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள்ம ற்றும் மீன் இறங்குதளங்களில் 31 டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்மூலம் மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கும், 10 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்மூலம் இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கும் விநியோகித்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு புதிய டீசல் விற்பனை நிலையங்கள் மூக்கையூர் மற்றும் குந்துகல்லில் அமைக்கப்பட்டு வருகின்றன. புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் கூடுதலாக டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10.5 சேத்துப்பட்டு, பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன்கூடிய பசுமைப் பூங்கா மேலாண்மை

சென்னை, சேத்துப்பட்டிலுள்ள பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன்கூடிய பசுமைப் பூங்காவின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை இக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

இப்பூங்காவில் பின்வரும் வசதிகளான, மீன்காட்சியகம் மற்றும் நீர் வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம், படகுக்குழாம், தூண்டில் மீன்பிடிப்பு சிறுவர் பூங்கா, உணவகம், சிறு ஓட்டம்/ நடைபயிற்சிப் பாதைகள், சிறுவர் விளையாட்டுப் பகுதி, முப்பரிமாணத் திரையரங்கு, விருந்தினர் மாளிகை மற்றும் பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேற்படி வசதிகள் அதிகளவிலான குழந்தைகள் மற்றும் பொதுமக்களைப் பசுமை

[2022 ஏப்ரல் 13

பூங்காவிற்கு ஈர்க்கின்றது. பசுமைப் பூங்காவிலுள்ள பல்வேறு பொழுதுப் போக்கு அம்சங்கள் தனியாருக்குக் குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் கிடைக்கப் பெறும் வருவாய் பூங்காவின் பராமரிப்புப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பசுமைப் பூங்காவில் கூடுதல் பொழுதுபோக்கு வசதிகளை அறிமுகப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10.6 மதிப்புக்கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் பயிற்சி நிலையம், இராயபுரம்

மீனவ மகளிர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மதிப்புக் கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பதற்கு பயிற்சிகள் அளித்திடும் வகையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது பயிற்சி நிலையத்துடன்கூடிய மைய சமையற்கூடம் ஒன்றினை இராயபுரத்தில் அமைத்துள்ளது. இப்பயிற்சி நிலையம்மூலம், 2021-2022 ஆம் ஆண்டில், 120 மீனவர் நல வாரியம் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சிகள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது.

10.7 மீன் தீவனம் தயாரிக்கும் ஆலையினை இயக்குதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தஞ்சாவூர் மாவட்டம், அச்சம்பட்டியில் நிறுவப்பட்டுள்ள மீன் தீவனத் தயாரிப்பு ஆலையினை நடத்திவருகிறது. இவ்வாலையின்மூலம் 491.30 மெட்ரிக் டன் மீன் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு மீன் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

10.8 நிதி நிலை

2021–22 ஆம் நிதியாண்டில் ரூ.702.63 கோடி விற்று முதலில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது ரூ.10.07 (தணிக்கை செய்யப்படாதது) கோடி இலாபம் ஈட்டியுள்ளது. 2022-23 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் ரூ.769.49 கோடி விற்று முதலில் ரூ.12.00 கோடி இலாபம் ஈட்டிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

10.9 தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினுடைய நிதிப் பங்களிப்பு

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ரூ.3.05 கோடியினை மாநில அரசுக்குப் பங்கு ஈவுத் தொகையாக 2021-22 ஆம் ஆண்டில்

2022 ஏப்ரல் 13]

செலுத்தியுள்ளது. மேலும், ரூ.2.07 கோடியினை தனது பங்களிப்புத் தொகையாக 2021–22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு வழங்கியுள்ளது.

மேலும், 2020–21 ஆண்டிற்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது தன்னுடைய பெரு நிறுவன சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து ரூ.23.40 இலட்சத்தினை மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு செலுத்தியுள்ளதுடன், 2021–22 ஆம் ஆண்டிற்கு தூத்துக்குடி மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு ரூ.25 இலட்சத்தினைத் தனது பெரு நிறுவன சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

11. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU)

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது மாநில அரசால் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012-ன்படி, 19.6.2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டது. மீன்வளத்தில் தொழிற்கல்வியை வழங்கி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளின் வாயிலாக மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிப்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

11.1 தொலைநோக்கு

"மக்களுக்கு உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் மீன்வள அறிவியலை சரியாகப் பயன்படுத்துதல்".

11.2 நிருவாக அமைப்பு

இப்பல்கலைக்கழக தலைமையகத்தில் துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குனர், விரிவாக்கத் துறை இயக்குனர், தேர்வு கட்டுப்பாட்டாளர், வளங்குன்றா மீன் வளர்ப்பு இயக்குனர், நிதி அலுவலர் மற்றும் உடைமை அலுவலர் ஆகியோரின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. 115 ஆசிரியர்கள் மற்றும் சுமார் 250 நிருவாக பணியாளர்களைக் கொண்ட இப்பல்கலைக்கழகம் நாட்டின் பெரிய மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகும்.

11.3 கல்வி

பல்கலைக்கழகத்தின் உறுப்பு நிறுவனங்கள் பதிமூன்று மாவட்டங்களில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் 8 கல்லூரிகள், 5 இயக்ககங்கள் மற்றும் 3 இணை தொழில்சார் கல்வி

நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மீன்வள அறிவியல், மீன்வளப் பொறியியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், ஊட்டச்சத்து மற்றும் உணவு தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் மீன்வள வணிகம் ஆகியவற்றில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மீன்வள அறிவியலில் 13 பாடங்களிலும், உயிரின அறிவியலில் ஒரு பாடத்திலும் முனைவர் படிப்புகள் வழங்கப்படுகின்றது. மேற்கூறியவற்றுடன் மீன்வளர்ப்பு, மீன் பதனப்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் மீன்பிடித் தொழில்நுட்பம் ஆகியவற்றில் தொழில்சார்ந்த பட்டப் படிப்புகளும் வழங்கப்படுகின்றது. 2021-22 ஆம் ஆண்டில், இளங்கலைப் பட்டப் படிப்பு பாடங்களில் 371 மாணவர்களும், முதுநிலை பட்டப் படிப்புகளில் 73 மாணவர்களும் சேர்த்துள்ளனர். இப்பல்கலைக்கழகத்தின் தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கை 1,435 ஆகும்.

இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் சேர்க்கை விகிதம் நாட்டில் உள்ள மற்ற மீன்வளப் பல்கலைக்கழகங்கள் மற்றும் மீன்வளக் கல்லூரிகளுடன் ஒப்பிடும்பொழுது அதிகமாக உள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தினால் நடத்தப்பட்ட முதுகலைப் பட்டப் படிப்பிற்கான சேர்க்கையில், அகில இந்திய நுழைவுத் தேர்வில் இப்பல்கலைக்கழக மாணவர்கள் முறையே 5-வது மற்றும் 10-வது இடங்களைப் பெற்றுள்ளனர். மொத்தம் 38 மாணவ/மாணவியர், அகில இந்திய நுழைவுத் தேர்வின்மூலம் தேர்ச்சி பெற்று முதுகலைப் பட்டப் படிப்பில் சேர்ந்துள்ளனர். கல்வியில் முதன்மைப் பெற்ற மாணவர்களை அங்கீகரிக்கும் பொருட்டு 50 விருதுகள் ஒவ்வொரு வருடமும் இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் அரசாணைப்படி, 2021-22 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கான இளங்கலை பட்டப் படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி சேர்க்கை நடைபெற்றது. மேலும், மற்றோர் அரசாணைமூலம் மீனவச் சமுதாய மாணவர்களின் சேர்க்கை 5-லிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டதன்மூலம் 2021-22 ஆம் ஆண்டில் 18 மீனவச் சமுதாய மாணவர்கள் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டப் படிப்பில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

2022 ஏப்ரல் 13]

11.4 ஆராய்ச்சி மற்றும் திட்டங்கள்

இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளனர். 2021-22 ஆம் ஆண்டில் 88 ஆய்வுக் கட்டுரைகள் தேசிய வேளாண் அறிவியல் அகாடமிமூலம் (NAAS) அங்கீகரிக்கப்பட்ட ஆறு மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இப்பல்கலைக்கழகம் இரண்டு காப்புரிமைகளைப் பெற்றுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.67 கோடி நிதியுதவி பெற்றுள்ளது:

அட்டவணை : 18

எண்	நிதி நிறுவனம்	திட்டங்களின் எண்ணிக்கை	நிதி (ரூ. இலட்சம்)
1	அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை - அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம், புதுதில்லி	2	81.52
2	தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், ஐதராபாத்	1	104.68
3	தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், ஐதராபாத்	1	277.60
4	தமிழக அரசின் மாநில புதுமைத் திட்டம்	1	430.66
5	தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்	14	2692.31

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

எண்	நிதி நிறுவனம்	திட்டங்களின் எண்ணிக்கை	நிதி (ரூ. இலட்சம்)
6	தமிழக அரசின் ஒருங்கிணைந்த வேளாண் நவீனமயமாக்கல் திட்டம்	1	250.00
7	மாநில நிதி	2	649.00
8	இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்	1	250.00
9	விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி	3	1865.00
10	பருவநிலைக்கேற்ப விவசாயத்தில் தேசிய புதுமைத் திட்டம்	2	68.25
11	அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை - அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம், புது தில்லி	1	31.11

2021-22 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம் தேசிய அளவிலான நிறுவனங்கள், தனியார் தொழில் முனைவோர் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளின்மூலம் 4 புதிய தொழில்நுட்பத் தொகுப்புகள், 4 புதிய தயாரிப்புகள், 5 மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் ஒரு கைபேசி செயலியை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

11.5 விரிவாக்க செயல்பாடுகள்

விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் 7 மீன்வளர்ப்புத் தர சோதனை ஆய்வகங்கள், 3 நடமாடும் நோய்

2022 ஏப்ரல் 13]

கண்டறியும் ஆய்வகங்கள், 4 மூலக்கூறு கண்டறியும் ஆய்வகங்கள், 3 உணவுப் பொருட்கள் தர சோதனை ஆய்வகங்கள் மற்றும் ஒரு தீவன தர பரிசோதனை ஆய்வகம் ஆகியவை குறைந்த கட்டணத்தில் பல்வேறு தர பரிசோதனைகளைச் செய்து வருகின்றன. இப்பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஆய்வகச் சோதனை செலவில் 30 விழுக்காடு சலுகை தரப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் "கடல் சார் தயாரிப்புகள் வணிக காப்பக மன்றம்" தொழில் முனைவோர் வணிக மேம்பாட்டை ஊக்குவித்து வருகிறது. இளம் மற்றும் ஆரம்ப நிலை தொழில் முனைவோர்களை, மீன் மற்றும் கடல்பாசி மதிப்பூட்டிய பொருட்களை உருவாக்கி ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டத்தின் வாயிலாக இடம், பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வணிக காப்பக வசதிகளைப் பயன்படுத்த இதுவரை 23 தொழில் முனைவோர்கள் பதிவு செய்துள்ளனர். மேலும் இதில் ஒரு வணிக நிறுவனம் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

*நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் மையம் (*KVK*) தொழில்நுட்ப மதிப்பீடு, மேம்படுத்துதல் மற்றும் செயல் விளக்கம் ஆகியவற்றின்மூலம் மாவட்ட அளவில் இடம் சார் (*location specific*) தொழில்நுட்பங்களை உருவாக்கி உரிய தகவல்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கிறது. இதன்மூலம் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களுக்கு தகவல் மற்றும் வள மையமாக வேளாண் அறிவியல் மையம் செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன் மற்றும் செடி வளர்ப்பு, நெல் மற்றும் தீவன உற்பத்தி, தேனீ வளர்ப்பு, தென்னை மற்றும் மர நாற்று உற்பத்தி, காளான் வளர்ப்பு, பஞ்சகவ்யா உற்பத்தி, மண்புழு உரம், தென்னை நார் உரம், கோழி, காடை, கறவைமாடு மற்றும் ஆடு வளர்ப்பு, மீன் மற்றும் இறால் ஊறுகாய் தயாரிப்பு ஆகியவற்றில் செய்முறை விளக்க பண்ணைகளைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.*

தேசிய மற்றும் சர்வதேச அளவில் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், மீன் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் 5 பட்டறைகள், 1 அறிவியல் மாநாடு, 48 இணையவழி கருத்தரங்கங்கள் மற்றும் 341 பயிற்சிகள் இணையவழி மூலமும், நேரடியாகவும் நடத்தப்பட்டது.

[2022 ஏப்ரல் 13

11.6 புதுமையான முயற்சிகள்

இணையவழி வளாகம், தூய்மை வளாகம் மற்றும் பசுமை வளாகம் ஆகியவற்றை முன்னிருத்தி இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது.

கல்வி படிப்புகளில் மாணவர் விண்ணப்பம் மற்றும் சேர்க்கை, இணையவழி முறை வாயிலாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொற்று நோய் காலத்தில் மாணவர்கள் இணைய வழியில் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டனர். இதன்மூலம் நேரம் மற்றும் செலவு குறைவு ஏற்பட்டதால், இனிவரும் காலங்களிலும் இணைய வழியிலேயே மாணவர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்பட உள்ளனர்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் அமைக்கப்பட்டு ஒற்றைச் சாளர முறைமூலம் பயனாளிகளுக்கான தகவல்கள் பரிமாறப்படும்.

மீன்வளப் பல்கலைக்கழக தலைமையகக் கட்டடம் இப்போது 80 KVA *சூரிய சக்தியை உற்பத்தி செய்வதன்மூலம் கிடைக்கும் மின்சாரத்தில் இயங்கி வருகிறது. நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரி மற்றும் பவானிசாகர் வளங்குன்றா நீர்வாழ் மீன் வளர்ப்பு மையம் சூரிய சக்தி மின்சாரத்தில் இயங்கி வருகிறது.*

புதியதாகக் கட்டப்பட்ட பல்கலைக்கழக நூலகக் கட்டடம், பகல் நேரத்தில் இயற்கையான வெளிச்சத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பசுமைக் கட்டடம் ஆகும்.

எல்லா பல்கலைக்கழக வளாகங்களிலும் பசுமை வளாகம் உருவாக்கும் நோக்கில் NSS *மற்றும் இதர ஆர்வலர்கள்மூலம் கழிவுகள் அதன் தன்மைக்கேற்ப பிரிக்கப்பட்டு, அகற்றப்பட்டு, மேலும் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகிறது.*

11.7 இலக்குகள் மற்றும் அதனை அடையும் வழிமுறைகள்

இப்பல்கலைக்கழகமானது உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் மூன்று இலக்குகள் மற்றும் அதனை அடையும் வழிமுறைகளை நிர்ணயித்துள்ளது:

1. *கல்வியில் சிறப்புத்தன்மை*
2. *ஆராய்ச்சியில் தனித்தன்மை*

2022 ஏப்ரல் 13]

3. எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

- *இளைஞர்களை மீன் வளர்ப்பு மற்றும் மீன்வளம் சார்ந்த வணிகத்தில் தொழில் முனைவோர்களாகவும், ஆலோசகர்களாகவும் உருவாக்கும் வகையில், மாணவர்களிடம் இணையவழிக் கற்றல், பேச்சாற்றல் மற்றும் தொழில் திறன்களை ஊக்குவித்தல்.*

- *வழக்கமான கற்றல் முறைகளிலிருந்து திறன் அடிப்படையிலான கற்பித்தலை மாணவர்களுக்கு வழங்குதல். இதன்மூலம் திறன் சார்ந்த கல்வியை அளிப்பதோடு, அவர்களைக் குறிப்பிட்ட துறையில் செயல்திறன் மிக்கவர்களாக உருவாக்குதல்.*

- *பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு உறுப்புக் கல்லூரிகளில் உருவாக்கப்பட்டுள்ள உள்தர அளவீடு அமைப்பு (IQAC) மூலம் கல்வி மேம்பாட்டில் அக்கறை உள்ளவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் மற்றும் கல்வியை மேம்படுத்துதல்.*

- *ஆழ்கடல் மீன்பிடிப்பு, கடலில் கூண்டு அமைத்து மீன் வளர்த்தல், ஊட்டச்சத்துமிக்க மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பு, சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், புதிய மீன் இனங்களை இனங்காணுதல் மற்றும் வளர்த்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் வளர்ப்பு போன்ற துறைகளில் புதுமையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏதுவாக ஆராய்ச்சிக் கட்டமைப்பை உருவாக்குதல்.*

- *சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து கூண்டுகளில் மீன் வளர்ப்பு, மறுசுழற்சி முறை மீன் வளர்ப்பு மற்றும் அக்வாபோனிக்ஸ் போன்றவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சுற்றுப்புறச் சூழல் பாதிக்காத, சாத்தியமான உள்நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.*

- *தொழில் துவங்க தயக்கம் காட்டுபவர்களுக்கு மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பில் செயல்முறை அறிவினையும், தொழில் திறனையும் அளித்து ஊக்குவிக்க, தொழில் காப்பகங்கள் அமைத்தல்.*

- *மாநிலத்தில் தனிநபர் மீன் நுகர்வு அளவினை அதிகரிக்கும் நோக்கில், நுகர்வோர் விரும்பும் வகையில் மீன்*

பொருட்கள் உருவாக்கப்பட்டு புதுமையான பரப்புரைகள் மேற்கொள்ளுதல்.

11.8 நிலையான வளர்ச்சி இலக்குகள்

- வயது வரம்பின்றி அனைவரும் மீன் வளர்ப்பில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில், கல்வி பாடத் திட்டங்கள் மற்றும் பயிற்சிகளை அறிமுகப்படுத்தி மீன்வளம் சார்ந்த கற்றலையும், திறனையும் வழங்குதல்.

- பண்ணைக் கழிவுகளைக் குறைக்கும் நோக்கில், பல் அடுக்கு உணவுசார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, உயிர்கூழ்ம உற்பத்தி தொழில்நுட்பம், மறுசுழற்சி முறை மீன் வளர்ப்பு மற்றும் அக்வாபோனிக்ஸ் போன்றவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

- "கழிவுகளிலிருந்து செல்வம்" என்ற கருத்தின் அடிப்படையில் கடல் உணவு தொழிற்சாலைக் கழிவுகளை, பெப்டைடுகள், கொல்லாஜன், நுண்ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் தீவன உபபொருட்களாக மாற்றுதல்.

12. இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள்

மீன்வளப் பிரிவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான அரசின் எதிர்காலத் திட்டங்கள்:

- மீனவர்களின் நலனை உறுதி செய்திடும் வகையில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

- கடலில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், நவீன தகவல் தொடர்பு அமைப்பினை ஏற்படுத்தி தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்படும்.

- அதிகளவில் காணப்படும் ஆழ்கடல் மீன்வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திட ஏதுவாக, சுற்றுச்சூழலுக்குகந்த மீன்பிடி நடைமுறைகள் மானியத் திட்டங்கள்மூலம் ஊக்குவிக்கப்படும்.

- கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன்

2022 ஏப்ரல் 13]

வளர்ப்பு போன்ற மாற்று வாழ்வாதாரத் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுவதுடன், அவற்றிற்குத் தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும்.

- மத்திய ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தொழில்நுட்ப உதவியுடன், நண்டு வளர்த்தல், கடல் மீன்களைக் குளங்களில் வளர்த்தல் மற்றும் கடல் கூண்டுகளில் சிங்கி இறால் வளர்த்தல் போன்ற கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படும்.

- விவசாயத்திற்குப் பயன்படாத கடற்கரையோர தரிசு நிலங்களை முறையாகப் பயன்படுத்தி, கடலோர மீன் வளர்ப்பின்மூலம் உற்பத்தியை அதிகரிக்க நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான கொள்கைகள் உருவாக்கப்படும்.

- மீன்களைச் சுகாதாரமாகக் கையாளுதல், தரத்தினைப் பேணுதல் மற்றும் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு அதிக விலையினைப் பெறுதல் போன்றவற்றை உறுதி செய்வதற்காக, உலகத் தரம் வாய்ந்த மீன்பிடித் துறைமுகங்கள், கடற்கரை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொடர் குளிர்காப்பு வசதிகள் தமிழகத்தின் கடற்கரை முழுவதும் ஏற்படுத்தப்படும்.

- சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை திறம்பட அமல்படுத்துவதன்மூலம் மீன்வளங்களைப் பாதுகாத்து நிலைத்த மேலாண்மை செய்யப்படும்.

- மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. இதற்காக மீன்குஞ்சு உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் மற்றும் மீன் வளர்ப்பிற்கு அனைத்து நீர் ஆதாரங்களையும் திறம்படப் பயன்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

- வளர்க்கப்பட்ட உள்நாட்டு மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிட குழு (Cluster) அடிப்படையிலான மீன்வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டு, சீரிய முறையில் சந்தைப்படுத்தப்படும்.

[*2022 ஏப்ரல் 13*

- *பொது சுகாதார அணுகுமுறை (One Health Approach). இந்த அணுகுமுறையானது, மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியன உகந்த ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு உள்நாட்டிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் செயல்படும் பல துறைகளின் கூட்டு முயற்சியாகும். இந்த அணுகுமுறையானது அதிக சத்தத்தால் ஏற்படும் காது கேளாமை, தோல் அழற்சி, தசை-எலும்பு நோய்கள் போன்ற தொழில் சார்ந்த நோய்களைக் கட்டுப்படுத்த உதவும்.*

- *பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருத்துவ இயக்குநரகம் மற்றும் மருத்துவம் மற்றும் கிராமப்புறச் சுகாதாரச் சேவைகள் இயக்குநரகத்தின் அமைப்புசாராத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான மாநில செயல்பாட்டு மையம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, இந்த சுகாதார அணுகுமுறையை கருத்துப்பட்டறைகள், கருத்தரங்குகள், மருத்துவக் கல்வியைத் தொடர்தல் மற்றும் பிற திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள்மூலம் வலுப்படுத்துதல்.*

13. நிதி ஒதுக்கீடு (2022-23)

2022-2023 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,158.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.551.92 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.606.30 கோடி மூலதனச் செலவினமாகவும் இருக்கும்.

14. நிறைவுரை

மீனவர்களின் நலனை உறுதி செய்வது, மீன் உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் கடல் உணவு ஏற்றுமதியை அதிகரிப்பதும் அரசின் மீன்வளம் சார்ந்த கொள்கையாகும். பாரம்பரிய கடல் பகுதியில் நமது மீனவர்களின் மீன்பிடி உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான உதவித் தொகை ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/-ஆக உயர்த்தப்பட்டது மற்றும் 'தேசிய மீனவர் நல ஆணையம்' உருவாக்குவதற்கு அரசால் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் ஆகியவை மீனவர் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறையினைக் காட்டுகின்றன.

மீன்வளத்தின் பல்வேறு பிரிவுகளான மீன் பிடிப்பு, மீன் வளர்ப்பு, உள்நாட்டு மற்றும் கடல் மீன்வளம், உவர்நீர்வாழ் உயிரின

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

வளர்ப்பு, கடற்சார் உயிரின வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, மீன் சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் போன்ற அனைத்துத் துறைகளையும் சமமாக மேம்படுத்துவதற்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மீன் பிடிப்பினை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்துதல்மூலம் மீன் வளங்களின் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. அரசின் தலைசிறந்த திட்டங்கள்மூலம், மீன்வளப் பிரிவின் இந்தத் தொலைநோக்கு இலக்குகள் நிச்சயமாக எய்தப்படும்.

[*2022 ஏப்ரல் 13*

இணைப்பு IV

(167 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023

1. அறிமுக உரை

பால் உற்பத்தியில் உலகளவில் 20.17 சதவிகித பங்களிப்பை வழங்கி இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் பால் பண்ணைத் தொழில், கடந்த பல ஆண்டுகளாகக் கணிசமாக வளர்ச்சியடைந்து நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக உருவெடுத்துள்ளது. பால் உற்பத்தியில் 2019-2020 ஆம் ஆண்டில் இந்தியா 198.44 மில்லியன் டன் வருடாந்திர உற்பத்தி வளர்ச்சியை எட்டியுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவில் தனி நபருக்குக் கிடைக்கும் பால் அளவு நாளொன்றுக்கு 406 கிராம் என்ற அளவில் இருந்துள்ளது.

20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, இந்தியா 193.46 மில்லியன் பசுக்கள் மற்றும் 109.85 மில்லியன் எருமைகளின் எண்ணிக்கையுடன், 536.76 மில்லியன் கால்நடைகளை இருப்பில் கொண்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மீன்வளம் ஆகிய துறைகள் உயர் வளர்ச்சி துறைகளாக படிப்படியாக வளர்ந்து வருகின்றன. வேளாண்மை சார்ந்த பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குப் பால் உற்பத்தித் தொழில் வருடம் முழுவதும் கணிசமான வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இதன்மூலம் எட்டு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் நேரடியாகப் பயனடைகின்றனர்.

தேசியப் பொருளாதாரத்தில் 5 சதவிகித மதிப்பிற்கு தனது பங்களிப்பை வழங்கும் தனித்தன்மைக் கொண்ட வேளாண் பொருளாக பால் விளங்குகிறது. இலட்சக்கணக்கான கிராமப்புற குடும்பங்களுக்கு இரண்டாம் நிலை வருமான ஆதாரமாகப் பால் பண்ணைத் தொழில் மாறியுள்ளது. மேலும், முக்கியமாக பெண்கள்

2022 ஏப்ரல் 13]

மற்றும் குறு விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதோடு, வருமானம் ஈட்டித் தரும் வாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

நாட்டின் கிராமப்புறக் குடும்பங்களின் சமூக-பொருளாதார மேம்பாடு அடைவதிலும் பால் பண்ணைத் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலில் பெரும் பங்கு குறு, சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் பெரும்பான்மையான விவசாயிகள் குறு, சிறு விவசாயிகளாக இருப்பது, பால் பண்ணைத் தொழிலை மேற்கொள்ள ஊக்குவிக்கும் ஒரு காரணியாக அமைகிறது.

பால் பண்ணைத் தொழிலில் ஆண்டு முழுவதும் வருமானத்திற்கு வகை செய்வதோடு கிராமப்புறத்தில் பெருமளவில் வேலைவாய்பை உருவாக்குகிறது. ஆனால், குறிப்பிட்ட காலக்கட்டங்களில் மட்டுமே வேளாண் தொழிலில் வருமானம் கிடைக்கும். இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம், நகரமயமாக்கல், தனி நபர் வருமானம் அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு ஆகியன பால் தேவைக்கான காரணிகள் ஆகும். ஆகையினால், பால் பண்ணைத் தொழில் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு ஒரு முக்கியப் காரணியாக விளங்குகிறது.

கொரோனா நோய்த் தொற்றின்போது பல்வேறு தொழில்களும் முடங்கிய நேர்வில், பால் உற்பத்தித் தொழில் தொடர்ந்து நடைபெற்று விவசாயிகளுக்கு வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தினை வழங்கியது.

1.1 தமிழ்நாட்டில் பால் பண்ணை வளர்ச்சி

2019-20 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி பால் உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் 11-வது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் பால் உற்பத்தி 8.76 மில்லியன் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் தனி நபருக்குக் கிடைக்கும் பால் அளவு நாளொன்றுக்கு 316 கிராம் என்ற அளவில் உள்ளது. தமிழ்நாட்டின் பால் உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 4.75 சதவிகிதம் என்ற அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது.

20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில், 24.5 மில்லியன் எண்ணிக்கையில் உள்ள மொத்த கால்நடைகளில், 9.52 மில்லியன் பசுக்கள் மற்றும் 0.52 மில்லியன் எருமைகள் உள்ளன.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

2. பால்வளத் துறை

தமிழ்நாட்டில் 1958 ஆம் ஆண்டு பால்வளத் துறை துவக்கப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/இயக்குநர், இத்துறையின் தலைவராக செயல்படுவதுடன் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பதிவாளராகவும் செயல்படுகிறார். கூட்டுறவுத் துறையில் இருந்து வந்த அனைத்து பால் கூட்டுறவுச் சங்கங்களின் மீதான சட்டப்பூர்வ மற்றும் நிருவாகக் கட்டுப்பாடுகள், 1-8-1965 அன்று முதல் பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டன.

பின்னர், 1972 ஆம் ஆண்டில் இத்துறையின் வணிக நடவடிக்கைகள் அனைத்தும், கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட, தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. மேலும், 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறை உருவாக்கப்பட்டபோது, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு மாற்றப்பட்டன.

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிருவாக இயக்குநராகவும் செயல்பட்டு வந்த நிலையில் கடந்த ஜனவரி 2022-ஆம் ஆண்டு அரசின் கொள்கை முடிவாக பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறைக்கென தனி ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


2021-22 ஆம் ஆண்டில் 9,376 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 38.26 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்புகள்மூலம் பால் கொள்முதலில் ஆவின் நிறுவனம் இந்திய அளவில் மூன்றாம் இடம் வகிக்கின்றது.

2.1 தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள்

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பால் கூட்டுறவுச்

சங்கங்கள் அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பதியப்பட்டு நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

மூன்று அடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு



அடுக்கு-1-கிராம அளவில்

கிராம அளவில் செயல்படும் தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் அடித்தளமாகச் செயல்படுகின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க விவகார எல்லைக்குள் வசிக்கும் பால் உற்பத்தியாளர்கள், சங்கத்தின் பங்குத் தொகையினைச் செலுத்துதல் மூலமாக சங்க உறுப்பினராகலாம். உறுப்பினர் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்காக ஒரு பகுதியை விற்பனை செய்த பிறகு எஞ்சிய பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கி வருகின்றன.

[*2022 ஏப்ரல் 13*

அடுக்கு-2- மாவட்ட அளவில்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களானது, மாவட்ட அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். அதன் விவகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், இதில் உறுப்பினர்களாக உள்ளன. அந்த உறுப்புச் சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும் உபரியாக உள்ள பால், பால் பவுடராகவும், பால் பொருட்களாகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

அடுக்கு-3-மாநில அளவில்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் என்பது மாநில அளவிலான தலைமை பால் கூட்டுறவுச் சங்கமாகும். இதில் அனைத்து மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இணையமானது, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி பால் மற்றும் பால் பொருட்களை சென்னை பெருநகர பால் நுகர்வோர்களுக்கு 'ஆவின்' என்ற வணிக முத்திரையுடன் விற்பனை செய்து வருகிறது.

2.2 பால்வளத் துறையின் நிருவாக அமைப்பு

தலைமைச் செயலகத்தின் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் பால்வளத் துறையின், துறைத் தலைவராக, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/இயக்குநர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/இயக்குநர் அவர்கள் தலைமையில் சென்னை மாதவரம் பால் பண்ணையில் பால்வளத் துறையின் தலைமை அலுவலகம் இயங்கி வருகிறது.

மேலும் மாவட்ட அளவில் சரகங்களில் 29 துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள் செயல்பாட்டில் உள்ளன. 2020 ஆம் ஆண்டு முதல் மதுரையில் மண்டல துணைப் பால் ஆணையர் அலுவலகம் ஒன்று தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது. பால்வளத் துறை ஆணையர் அவர்களுக்கு அலுவலகப் பணிகளில் உதவிட, தலைமை அலுவலகத்தில் ஒரு கூடுதல் பால் ஆணையர், ஒரு துணைப் பதிவாளர் (தலைமையகம்) மற்றும் ஒரு துணைப் பதிவாளர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

(சட்டப் பணிகள்) பணியாற்றி வருகின்றனர். இத்துறைக்கென களப் பணியாளர்கள் உள்ளிட்ட 800 பணியாளர்கள் கொண்ட பணிநிலை திறன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பால்வளத்துறையின் நிர்வாக அமைப்பு



[*2022 ஏப்ரல் 13*

2.3 பால்வளத் துறையின் செயல்பாடுகள்

பால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் என்ற முறையில் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களுக்கு 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்:

- *புதிய பால் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல்*
- *செயலிழந்த சங்கங்களைப் புதுப்பித்தல்*
- *பால் கூட்டுறவுச் சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளைத் தீர்த்தல்*
- *சங்கங்களின் நிருவாகத்திற்கு நிருவாகக் குழுவை தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடத்துதல்*
- *பொதுமக்கள் நலன் கருதி உரிய அறிவுரைகள் வழங்குதல், ஆய்வுக் குறைகள், தணிக்கைக் குறைகள் தொடர்பான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்*

அதிகாரப் பரவலாக்கத்தின் ஒரு பகுதியாக, பதிவாளர் அவர்களின் சில அதிகாரங்கள் துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் துணைப் பதிவாளர் (பால்வளம்) ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைப்படுத்தும் முன்னர், பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992-ன்படி பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/இயக்குநர், மாநில பதிவாளர் ஆக அதிகாரப்படுத்தப்பட்டிருந்தார். எனினும் உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், மேற்படி அதிகாரம் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011-ன்கீழ், நுகர்வோருக்குத் தரமான பால் வழங்கப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்ய நியமிக்கப்பட்ட மாநில கண்காணிப்புக் குழுவின் உறுப்பினராக, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/இயக்குநர் செயல்பட்டு வருகிறார்.

2022 ஏப்ரல் 13]

2.4 குறிக்கோள்கள்

1. பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு நியாயமான விலை வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

2. நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில், இந்திய உணவு பாதுகாப்பு தர ஆணைய வழிகாட்டுதலின்படி சுகாதாரமான மற்றும் தூய்மையான பதப்படுத்தப்பட்ட பால் வழங்கப்படுவதையும் உறுதி செய்தல்.

3. பால் கூட்டுறவுக் கட்டமைப்பின்மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதை நிருவாக வெளிப்படைத் தன்மைமூலம் உறுதி செய்தல்.

4. ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் இல்லாத பால் பண்ணைகளை ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் கொண்டு வருதல்.

5. இதர தொழில் துறை வளர்ச்சிக்கு ஈடாக பால்பண்ணைத் துறையும் சீரான வளர்ச்சி அடைவதை உறுதி செய்தல்.

6. கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து மற்றும் தீவனம் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய போதிய முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

7. பால் உற்பத்தியாளர்கள் அளவில், சங்கங்கள் அளவில், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணைய அளவில் பல்வேறு பால் பண்ணை நடவடிக்கைகளில் சமீபத்திய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்.

8. தமிழ்நாட்டில் பால் உற்பத்தியில் இரண்டாம் வெண்மைப் புரட்சியினை ஏற்படுத்துதல்.

2.4.1 உத்திகள்/புதியவழிமுறைகள்/வழிகாட்டுதல்கள்/யோசனைகள்

பால்வளத் துறையின் குறிக்கோள்களை நிறைவேற்ற பின்வரும் உத்திகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன:

1. பால் உற்பத்தி செலவினைக் கருத்தில் கொண்டு, பால் கொள்முதல் விலையினை அவ்வப்போது மாற்றியமைப்பதன்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான கொள்முதல் விலை வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

[2022 ஏப்ரல் 13

2. பதப்படுத்தப்பட்ட பாலின் விற்பனை விலையினை அவ்வப்போது மாற்றியமைப்பதன் மூலம்,நுகர்வோர்களுக்கு நியாயமான விற்பனை விலையில் பால் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, 16-5-2022 முதல் அனைத்து வகைப் பாலுக்குமான விற்பனை விலையானது லிட்டருக்கு ரூ.3/- குறைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

3. பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நிருவாகக் குழு தேர்தல் உரிய காலகட்டங்களில் நடத்தப்படுகிறது.

4. உணவு பாதுகாப்புச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011-ன் வழிகாட்டுதல்களை அனைத்து பால் கூட்டுறவுகளிலும் செயல்படுத்துதல்.

5. கூட்டுறவு அமைப்பின்கீழ் அதிக எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு வருதல், அனைத்துக் கிராமங்களையும் உள்ளடக்கி பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களைச் செயல்படும் சங்கங்களாக மறுமலர்ச்சி செய்தல்.

6. பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்குப் பால் தொழிலில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.

7. அனைத்து பால் கூட்டுறவுகளிலும் ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை அமைப்பை ஏற்படுத்துதல்.

8. பால் விற்பனையினை அதிகரித்தல்.

3. தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்கள்

முன்னர், பிரதம பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புறங்களில் உபரிப் பாலினை கொள்முதல் செய்து அப்பாலினை பிற கிராமங்களில் விற்பனை செய்து வந்தன. தற்போது பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களானது கிராமப்புறங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாகவும், நகர்ப்புறங்களில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

2022 ஏப்ரல் 13]

3.1. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

3.1.1. கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு அம்சங்கள்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அளவில் உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பாலை சேகரித்து, அதில் சிறிய பகுதியை உள்ளூரில் விற்பனை செய்ததுபோக, எஞ்சிய பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

சங்கத்தின் செயல்பாட்டு பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர தகுதியுடையவர்கள்.

அனைத்துத் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

சாத்தியக்கூறு உள்ள இடங்களில் பிரத்தியேகமாக மகளிர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

சங்கத்தில் பால் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு, மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யப்படுவதோடு, கால்நடை தீவனம் மற்றும் பிற உள்ளீடுகளையும் பெற்று வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

தற்சமயம், கிராம அளவில் 9,376 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன.

3.1.2 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

புதிய பால் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வதற்காக, பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட கிராமத்தில் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்க்க, குறிப்பிட்ட கிராமத்தில் வசிக்கும் 18 வயது பூர்த்தியான குறைந்தபட்சம் 25 பால் உற்பத்தி செய்யும் தகுதிவாய்ந்த குடிமக்கள், பால் கூட்டுறவுச் சங்கத்தை பதிவு செய்ய கோரி சம்பந்தப்பட்ட

மாவட்டத்தின் துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் விரிவாக்க அதிகாரிகள் கள ஆய்வை மேற்கொண்டு, கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தித் திறன், நம்பகத்தன்மை, பால் வழித்தடம் அமையும் தன்மை, இலாபம், பாலின் தரம் மற்றும் பால் வழித்தட பயண நேரம் ஆகியனக் குறித்து ஆய்வு செய்வார்கள்.

மேலும், முன்மொழியப்பட்ட சங்கத்தின் விவகார எல்லை மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் சேர்ந்து இருக்கக் கூடாது. அவ்வாறு உத்தேசிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க விவகார எல்லை வேறொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க விவகார எல்லைக்குள் இருக்கும் நேர்வில் அப்பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்ட பின்னரே உத்தேசிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதன்மை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். மேலும் உறுப்பினர்கள் அப்பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதற்கான குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட முழு வடிவத்திலும் முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தகைய முன்மொழிவு கிடைத்ததும், முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் துணைப் பதிவாளர் (பால்வளம்) சங்கத்தைப் பதிவு செய்வார். எந்தவொரு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி முன்மொழிவு துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்களால் 120 நாட்கள் கால எல்லைக்குள் திருப்பித்தரப்படாவிட்டால், அது பதிவு செய்யப்படவில்லை என்றாலும், 120 நாட்கள் கால வரம்பின் கடைசி தேதியில் அத்தகைய சங்கம் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

ஒன்றியம் வாரியாக சங்கங்கள் மற்றும் கறவை மாடுகள் விவரங்கள் (31-3-2022)

வ எண்	மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர்	செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை	செயலற்ற சங்கங்களின் எண்ணிக்கை	கூட்டுறவு அமைப்பில் கறவை மாடுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
1	காஞ்சிபுரம் திருவள்ளூர்	480	108	0.58
2	விழுப்புரம்	592	21	1.48
3	கடலூர்	185	40	0.18
4	வேலூர்	326	45	1.28
5	திருவண்ணாமலை	611	85	1.78
6	கிருஷ்ணகிரி	234	38	0.32
7	தருமபுரி	266	26	0.55
8	சேலம்	776	18	1.85
9	நாமக்கல்	510	25	0.53
10	ஈரோடு	514	17	0.73
11	திருப்பூர்	439	38	0.56
12	கோயம்புத்தூர்	348	40	1.09
13	நீலகிரி	89	5	0.24
14	மதுரை	728	128	0.5
15	தேனி	499	70	0.24
16	திண்டுக்கல்	190	43	0.29
17	திருச்சி	613	69	2.33
18	கரூர்	156	20	0.46
19	தஞ்சாவூர்	387	61	0.46

வ எண்	மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர்	செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை	செயலற்ற சங்கங்களின் எண்ணிக்கை	கூட்டுறவு அமைப்பில் கறவை மாடுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
20	புதுக்கோட்டை	346	84	0.24
21	சிவகங்கை	504	90	0.25
22	விருதுநகர்	116	24	0.12
23	திருநெல்வேலி	238	21	0.37
24	தூத்துக்குடி	177	46	0.17
25	கன்னியாகுமரி	52	2	0.12
	மொத்தம்	**9,376**	**1,164**	**16.72**

3.1.3 செயலிழந்த சங்கங்களை மறுமலர்ச்சி செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

தமிழகத்தில், 31-1-2022 அன்றைய தேதியில் 1,164 செயலிழந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்குள் செயலிழந்த நிலையில் இருக்கும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களை புதுப்பிக்கவும், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்ற நிலையில் உள்ள சங்கங்களுக்கு மாற்றாக அதே பகுதியில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த ஓராண்டில் மட்டும் 92 செயலற்ற சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

3.2 தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

பால் நுகர்வோர்களுக்குப் பாலை விற்பனை செய்யவும் அவர்களது நலனைப் பாதுகாப்பதற்காகவும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. கிராமங்களில் மட்டுமல்லாது, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சென்னை பெருநகரத்திலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் பால் நுகர்வோருக்கு ஏற்படும் பால் தேவையைக் கருத்தில் கொண்டு தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

2022 ஏப்ரல் 13]

அமைக்கப்படுகின்றன. இதன்மூலம் நகரத்தில் வாழும் பொதுமக்களுக்குப் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சலுகை விலையில் பால் அட்டை வழங்கி பால் விநியோகம் செய்யப்படுகிறது.

மாநிலம் முழுவதும் சுமார் 58 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 48 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் உள்ளன. இவை பால் நுகர்வோர்களுக்கு இணையத்தின் மூலமாக விற்பனை செய்யப்படும் 13.36 இலட்சம் லிட்டர் பாலில், நாளொன்றிற்கு சராசரியாக 2.84 இலட்சம் லிட்டர் பாலினை பால் அட்டைகள்மூலம் விற்பனை செய்கின்றன. இதுதவிர, சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பால் நுகர்வோர் சங்கங்கள், மாதத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்புள்ள பால் உபபொருட்களை நுகர்வோருக்கு விற்பனை செய்ய இணையத்திற்கு உதவுகின்றன.

பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகமும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது.

4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்படி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது மூன்றடுக்கு முறையில் இயங்கும் நடு அடுக்கு அளவிலான ஒரு கூட்டுறவு அமைப்பாகும். மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

தற்போது 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளன. அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் போலவே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் நிருவகிக்கப்படுகின்றன.

[2022 ஏப்ரல் 13

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர், நிருவாகத்தின் செயல் அலுவலராக உள்ளார்.

4.1 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் செயல்பாடுகள்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், விவகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள உறுப்பினர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கின்றன. மேலும் உபரியாக உள்ள பால், பால் பவுடராகவும், பால் பொருட்களாகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து தாங்கள் கொள்முதல் செய்யும் பாலிற்கு தரத்தின் அடிப்படையில் அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் (வாரம் ஒரு முறை, 10 நாட்களுக்கு ஒரு முறை) வழங்குகின்றன.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பாலை பெறுவதற்கு பால் வழித்தடங்களை அமைத்தல், வாகனங்களை ஏற்பாடு செய்தல் பாலை அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான்/குளிரூட்டும் நிலையம்/பால் பண்ணைக்கு கொண்டு சென்று பதப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டு பின்னர் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பதப்படுத்தப்பட்ட பால் விற்பனை மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு உற்பத்திக்கான தங்கள் சொந்த தேவையைப் பூர்த்தி செய்த பின்னர் உபரிப் பாலை விற்பனை செய்வதற்காக சென்னையில் உள்ள இணைய பால் பண்ணைகளுக்கு அவரவர்களின் தேவைக்கேற்ப அனுப்பி வைக்கின்றன.

மேலும், உபரிப் பாலின் ஒரு பகுதி வெண்ணெய் மற்றும் பால் பவுடராக மாற்றப்படுவதற்காக மதுரை, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி போன்ற சமன்படுத்தும் பால் பண்ணைகள் மற்றும் திருவண்ணாமலை இணைய பால் பண்ணை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

2022 ஏப்ரல் 13]

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் மற்றும் செயல்படுத்தும் முகமையாகச் செயல்படுவதிலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

மேலும், தாங்கள் ஈட்டிய இலாபத்தை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட பாலின் அளவிற்கேற்ப ஊக்கத் தொகையாக வழங்கி பகிர்ந்து கொள்கின்றன.

வ.எண்	ஒன்றியத்தின் பெயர்	பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன்		குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்)				
				குளிர்விப்பு மையம்		மொத்த பால் குளிர்விப்பு மையம்		மொத்தம்
		எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	
1	காஞ்சிபுரம் – திருவள்ளூர்	1	1,00,000	2	60,000	25	55,000	2,15,000
2	விழுப்புரம்	1	1,00,000	1	1,00,000	33	77,000	2,77,000
3	கடலூர்	0	0	1	10,000	10	44,000	54,000
4	வேலூர்	1	1,50,000	2	80,000	36	1,21,500	3,51,500
5	திருவண்ணா மலை	0	0	2	1,50,000	77	2,30,500	3,80,500
6	தர்மபுரி	0	0	1	50,000	33	1,23,000	1,73,000
7	கிருஷ்ணகிரி	1	2,00,000	1	10,000	7	31,000	2,41,000
8	சேலம்	1	5,00,000	1	1,30,000	78	2,87,500	9,17,500
9	நாமக்கல்	0	0	2	1,00,000	22	53,000	1,53,000
10	ஈரோடு	1	3,00,000	2	35,000	53	2,49,000	5,84,000
11	கோயம்புத்தூர்	1	5,00,000	3	1,20,000	17	82,000	7,02,000
12	திருப்பூர்	0	0	2	1,10,000	40	1,95,000	3,05,000
13	நீலகிரி	1	50,000	1	10,000	6	11,000	71,000
14	மதுரை	1	5,00,000	0	0	63	1,33,000	6,33,000
15	தேனி	0	0	1	1,00,000	2	7,000	1,07,000
16	திண்டுக்கல்	1	30,000	2	40,000	23	80,000	1,50,000
17	திருச்சி	1	1,50,000	2	1,50,000	44	1,94,000	4,94,000
	பாடாலூர்	1	1,00,000	0	0	0	0	1,00,000
18	கரூர்	0	0	1	50,000	12	24,500	74,500
19	தஞ்சாவூர்	1	48,000	1	30,000	13	51,000	1,29,000
20	புதுக்கோட்டை	1	55,000	0	0	5	25,000	80,000
21	சிவகங்கை	1	50,000	1	10,000	14	58,000	1,18,000
22	விருதுநகர்	1	50,000	1	10,000	1	5,000	65,000

வ.எண்	ஒன்றியத்தின் பெயர்	பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன்		குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்)				
				குளிர்விப்பு மையம்		மொத்த பால் குளிர்விப்பு மையம்		மொத்தம்
		எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	
23	திருநெல்வேலி	1	1,00,000	2	80,000	3	15,000	1,95,000
24	தூத்துக்குடி	0	0	2	20,000	9	43,000	63,000
25	கன்னியாகுமரி	1	30,000	0	0	0	0	30,000
	மொத்தம்	18	30,13,000	34	14,55,000	626	21,95,000	66,63,000
	சென்னை பெருநகர பால்பண்ணைகள் (இணையம்)							
அ	மாதவரம் பால் பண்ணை	1	5,00,000	—	—	—	—	—
ஆ	அம்பத்தூர் பால் பண்ணை	1	5,00,000	—	—	—	—	—
இ	சோழிங்கநல்லூர் பால் பண்ணை	1	6,00,000	—	—	—	—	—
ஈ	அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை	1	65,000	—	—	—	—	—
உ	திருவண்ணாமலை பால் பண்ணையுடன் கூடிய பால்பவுடர் தொழிற்சாலை	1	2,00,000	—	—	—	—	—
	மொத்தம்	5	18,65,000	—	—	—	—	—
	ஆக மொத்தம்	23	48,78,000	34	14,55,000	626	21,95,000	66,63,000

4.2. பணி நிலைத் திறன்

25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணி நிலைத் திறன் எண்ணிக்கை வருமாறு:

வ. எண்	பதவியின்பெயர்	அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை
1	பொது மேலாளர்	25
2	துணை பொது மேலாளர்	20
3	உதவி பொது மேலாளர்	88
4	மேலாளர்	397
5	துணை மேலாளர்	444
6	விரிவாக்க அலுவலர்	284

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பதவியின்பெயர்	அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை
7	அலுவலக ஊழியர்	886
8	ஓட்டுநர்	296
9	தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள்	1853
	மொத்தம்	4,293

5. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 3 அடுக்கு வடிவத்தின் மாநில அளவிலான உயர்மட்ட உச்ச அமைப்பாகும். இதில், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் கூட்டுறவுச் சங்கமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பதிவு செய்யப்பட்டது. அப்போதைய தமிழ்நாடு பால்வள வாரியத்தினால் கையாளப்பட்ட பால் கொள்முதல், பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு வழங்குவதற்காக பதப்படுத்துதல், சிப்பங்கட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற அனைத்து வணிக நடவடிக்கைகளையும் உள்ளடக்கி 1-2-1981 அன்று தொடங்கப்பட்டது. அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கு முன்னர் தமிழ்நாடு பால்வள மேம்பாட்டுக் கழகத்தால் கையாளப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய நிருவாக அலுவலகம் மற்றும் இதர பிரிவு அலுவலகங்கள் தற்போது சென்னை, நந்தனத்தில் 20-6-2018 முதல் செயல்பட்டு வருகின்றன.

இணையத்தின் ஒட்டு மொத்த நிருவாகம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிருவாகக் குழு உறுப்பினர்களிலிருந்து மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது.

[2022 ஏப்ரல் 13

5.1. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

இணையமானது, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்கிறது. பால் பதப்படுத்தப்பட்டு பால் பைகளில் நிரப்பப்பட்டு சென்னை பெருநகரம் மற்றும் அதன் புறநகரப் பகுதிகளில் உள்ள நுகர்வோர்களுக்குப் பால் மற்றும் பால் பொருட்களாக விற்பனை செய்து வருகிறது. இதுதவிர, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் தயாரிக்கப்படும் நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம் உள்ளிட்ட பால் பொருட்களை மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் 'ஆவின்' என்ற வணிக பெயரில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதில் இணையம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இணையமானது, ஒன்றியங்களின் பால் கொள்முதல், பால் கையாளுதல், சந்தைப்படுத்துதல், உட்கட்டமைப்பு உருவாக்கம், தரக் கட்டுப்பாடு மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கி, கண்காணிக்கின்றது.

சென்னை பெருநகர நுகர்வோர்களுக்குத் தேவையான பாலை பதப்படுத்தவும், சிப்பங்கட்டவும், விநியோகிக்கவும் சென்னை பெருநகரத்தில், மாதவரம் பால் பண்ணை, அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் மூன்று பால் பண்ணைகள் இணையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. மேலும், இந்த பால் பண்ணைகள் தவிர, அம்பத்தூரில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் உள்ளது.

திருவண்ணாமலையில் பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, உதகமண்டலத்தில் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை, ஈரோட்டில் எருமை உறை விந்து நிலையம் மற்றும் பால் கறவையின மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் ஆகியவையும் இணையத்தின் சொந்த அலகுகளாகச் செயல்பட்டு வருகின்றன.

இணையம், தனது சொந்த பயன்பாட்டிற்கென போக்குவரத்துப் பிரிவைக் கொண்டுள்ளது. இதில் பல்வேறு

2022 ஏப்ரல் 13]

கொள்ளளவுக் கொண்ட நவீனமயமாக்கப்பட்ட சாலை வழி பால் டேங்கர்கள் பராமரிக்கப்படுகின்றன. மேலும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து தினசரி பால் சேகரிப்பதற்காக வாடகை வாகனங்களையும் இயக்குகிறது. ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்டு அனைத்து வாகனங்களின் இயக்கமும் கண்காணிக்கப்படுகிறது.

பொது மக்களுக்கு, பால் மற்றும் பால் பொருட்களை எடுத்துச் செல்ல ஏதுவாக, இணையம் தனது சொந்த பாலி யுரேதேன் நுரை (PUF) காப்பிடப்பட்ட கொள்கலன் வாகனங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட PUF காப்பிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகிறது.

5.2. பணி நிலைத் திறன்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பணி நிலைத் திறன் கீழ்க்கண்டவாறு உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிருவாகம் மற்றும் பணி நிலைத் திறன் பட்டியல்

வ. எண்	பதவியின் பெயர்	பணி நிலைத் திறன்
1	மேலாண்மை இயக்குநர்	1
2	இணை மேலாண்மை இயக்குநர்	1
3	தலைமை விழிப்புபணி அலுவலர்	1
4	பொது மேலாளர்	10
5	துணைப் பொது மேலாளர்	24
6	உதவி பொது மேலாளர்	65
7	மேலாளர்	108
8	துணை மேலாளர்	173

[2022 ஏப்ரல் 13

வ. எண்	பதவியின் பெயர்	பணி நிலைத் திறன்
9	தனிச் செயலர் நிலை 1, 2 & 3	24
10	செயல் அலுவலர்	165
11	இளநிலை செயல் அலுவலர் (அலுவலகம்)/ தட்டச்சு	146
12	ஓட்டுநர்	240
13	தொழில்நுட்பப் பணியாளர் மற்றும் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர்	1,128
	மொத்தம்	2,086

5.3. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நடத்தப்படும் பால் பண்ணைகள்

வ. எண்	பால் பண்ணையின் பெயர் மற்றும் அமைவிடம்	செயலாக்கத் திறன் பதப்படுத்துதல் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	ISO சான்றிதழ்
1.	மாதவரம் பால் பண்ணை	5.00	ISO 22000:2005 (FSMS)
2.	அம்பத்தூர் பால் பண்ணை	5.00	ISO 22000:2005 (FSMS)
3.	சோழிங்கநல்லூர் பால் பண்ணை	6.00	ISO 22000:2005 (FSMS)
4.	பால் பொருட்கள் பண்ணை, அம்பத்தூர்	0.65	ISO 22000:2005 (FSMS)

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பால் பண்ணையின் பெயர் மற்றும் அமைவிடம்	செயலாக்கத் திறன் பதப்படுத்துதல் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	ISO சான்றிதழ்
5.	பால் மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை, திருவண்ணாமலை	2.00	ISO 22000:2018 and FSSC

- மாதவரத்தில் உள்ள மத்திய பால் பண்ணை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பால் பண்ணை ஆகும்
- சோழிங்கநல்லூர் பால் பண்ணை (III வது பால் பண்ணை) தென்னிந்தியாவில் முதன் முதலாக 1996-ல் நிறுவப்பட்ட தானியங்கி பால் பண்ணை ஆகும்
- சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 1000 – 1100 கிலோ நீராவியை உற்பத்தி செய்யும் செறிவூட்டப்பட்ட சூரிய வெப்ப அமைப்புமூலம், உலை எண்ணெயின் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது
- திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையின் (DCPP) முக்கிய நோக்கம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் உபரிப் பாலை வெண்ணெய் மற்றும் பால் பவுடராக உருமாற்றம் செய்வதே ஆகும்

[2022 ஏப்ரல் 13

ஆவின் பால் பொருட்களின் வகைகள்

இனிப்புகள்	ஐஸ்கிரீம் வகைகள்	நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள்	கூழ்மப் பொருட்கள் மற்றும் பிற
• இனிப்பு கோவா • பேரிச்சை கோவா • மைசூர்பா • குலோப்ஜாமுன் • பால்பேடா • ரசகுல்லா • பிரிமியம் மில்க் கேக் • பாயாசம் மிக்ஸ்	• கப் ஐஸ்கிரீம் • ஐஸ்கிரீம் பேமலி சிப்பம் • பந்து ஐஸ்கிரீம் • சாக்கோ பார் • மாங்கோ டூயட் • பைனாப்பிள் டூயட் • திராட்சை டூயட் 2 இன் 1 பார் • ஸ்ட்ராபெர்ரி கோர் • மாங்கோ கோர் • சாக்கோ பீஸ்ட் • சாக்லேட் பீஸ்ட் • பிரிமியம் வகை கப் ஐஸ்கிரீம் • பிரிமியம் வகை ஸ்கூப் ஐஸ்கிரீம் (6 வகைகள்) • சாக்லேட் கோன் • வெனிலா கோன் • குல்ஃபி பார் • கசட்டா • சுவையூட்டப்பட்ட குல்ஃபி பார் (10 சுவைகள்) • இனிப்பில்லாத குல்ஃபி பார் • லாங் குல்ஃபி பார்	• சுவையூட்டப்பட்ட யோகர்ட் (5 சுவைகள்) • இனிப்பில்லாத யோகர்ட் • தயிர் • லஸ்சி • பாக்கெட் மோர் • பிரிமியம் தயிர்கப்புகள் • பாட்டில்களில் அடைக்கப்பட்டமோர் • புரோபயாட்டிக் தயிர் • புரோபயாட்டிக் லஸ்சி • மாம்பழம் & ஸ்ட்ராபெர்ரி சுவைகளில் யோகர்ட் பானம்	பனீர் <u>பிற பொருட்கள்</u> • இனிப்பு இல்லா கோவா • பால் சாக்லேட் • நட்டி சாக்லேட் • குக்கீஸ் (6 வகைகள்) • பால் புரத நூடுல்ஸ் • டெய்ரி ஒய்ட்னர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

5.4. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் நடத்தப்படும் சேவை நிறுவனங்கள்

5.4.1 கால்நடை தீவன ஆலை – ஈரோடு

1982 ஆம் ஆண்டில் ஈரோட்டில் கால்நடை தீவன ஆலை நிறுவப்பட்டு தற்போது நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக இயங்கி வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டில் ஈரோடு கால்நடை தீவன ஆலையில் தீவன உற்பத்தி 35,454 மெட்ரிக் டன்னாகவும், கால்நடை தீவன விற்பனை 35,171 மெட்ரிக் டன்னாகவும் உள்ளது.

மேலும், 2021—2022 ஆம் ஆண்டில், ஈரோடு கால்நடை தீவனம் தவிர, இதர கூட்டுறவு இணையங்கள்மூலம் 54,766 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

5.4.2 தாது உப்புக் கலவை ஆலை

தற்போது விழுப்புரம், திருச்சி, தூத்துக்குடி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் நாளொன்றுக்கு தலா 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட தாது உப்புக் கலவைத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன.

இத்தாது உப்புக் கலவைத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தாது உப்புக் கலவை, கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கு வழங்கியதுபோக, கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களுக்குத் தங்கு தடையில்லாமல் தாது உப்புக் கலவை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட புதிய தாது உப்புக் கலவை தொழிற்சாலை ரூ.135.00 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் 19.1.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டில் மேற்கூறிய தாது உப்புக் கலவை தொழிற்சாலைகளில் தாது உப்புக் கலவை உற்பத்தி 1,636 மெட்ரிக் டன்னாகும் மற்றும் தாது உப்புக் கலவை விற்பனை 1,289 மெட்ரிக் டன்னாகும்.

[2022 ஏப்ரல் 13

5.4.3 கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை, உதகமண்டலம்

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை 1973 ஆம் வருடம் தரமான உறைவிந்து குச்சிகள் உற்பத்திக்காக தொடங்கப்பட்டது. இப்பண்ணையில் ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் காளைகளில் இருந்து உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகள் பின்னர் ஈரோட்டில் உள்ள எருமையின உறைவிந்து நிலையத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. எருமையின உறைவிந்து நிலையத்திலிருந்து பிரதம பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு மாவட்ட ஒன்றியங்கள்மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளைக் கொண்டு பயிற்சி பெற்ற கிராமநிலை ஊழியர்கள்மூலம் பால் உற்பத்தியாளர்களின் இல்லத்திற்கே சென்று அவர்களின் கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது.

பொலிகாளை பண்ணையில் தற்போது, 99 காளைகள் உள்ளன. அவற்றுள் 65 பொலிகாளைகளிடமிருந்து விந்து சேகரிக்கப்படுகிறது. அயல் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு ஜெர்சி மற்றும் இரண்டு ஹோல்ஸ்டீன்-ஃப்ரீசியன் இனபொலி காளைகள் உறைவிந்து உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பொலிகாளைகள் ஒன்றிய அரசின் குறைந்தபட்ச தரக்கட்டுப்பாட்டு நெறிமுறைகள் அடிப்படையில் (Minimum Standard Protocol) கடுமையான உயிர் பாதுகாப்பு முறைகளின் (Strict Biosecurity measures) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உயர்தர உறைவிந்து குச்சிகள் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. 2021–22 ஆம் வருடம் 7.58 இலட்சம் உறைவிந்து குச்சிகள் இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், 2022–23 ஆம் வருடம் 15.00 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை ISO 9001 : 2015 சான்று பெற்ற நிறுவனம் ஆகும், அத்துடன் ஒன்றிய அரசின் உறைவிந்து நிலையங்களுக்கான தர ஆய்வு குழுவின் ‘B’ தர சான்றும் பெற்றுள்ளது.

2022 ஏப்ரல் 13]

5.4.4 எருமையின உறைவிந்து நிலையம், ஈரோடு

ஒன்றிய அரசின் குறைந்தபட்ச தரக்கட்டுப்பாட்டு நெறிமுறைகள் அடிப்படையில் உறைவிந்து குச்சிகள் விநியோக நிலையம், உறைவிந்து உற்பத்தி நிலையத்திலிருந்து தொலை தூரத்தில் அமைய வேண்டும். அதன் அடிப்படையில், உறைவிந்து விநியோக நிலையம் ஈரோட்டில் உள்ள முந்தைய எருமையின உறைவிந்து நிலையத்தில் அமைந்துள்ளது.

தேசிய பால்வளத் திட்டம் மற்றும் ராஷ்ட்ரீய கோகுல் மிஷன் – வம்சாவழி சோதனை திட்டத்தின் நீண்ட கால பாதுகாப்பு உறைவிந்து குச்சிகள் இந்நிலையத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

உறைவிந்து குச்சிகளின் விநியோகம் மட்டுமின்றி, வம்சாவழி திட்டம் மற்றும் களவெளி செயல்திறன் பதிவு திட்ட கிடேரிகள் இந்நிலையத்தின்கீழ் உள்ள முன்தனிமைபடுத்தும் நிலையம், ஆத்தூர், சேலம் மாவட்டம், தனிமைப்படுத்தும் நிலையம், ஈரோடு மற்றும் கன்று வளர்ப்பு நிலையம், புதுக்குடி, தஞ்சாவூர் மாவட்டம் ஆகியவற்றில் பராமரிக்கப்பட்டு பின் உதகையில் உள்ள பொலிகாளை பண்ணை மற்றும் இதர உறைவிந்து நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்நிலையத்திலிருந்து 2021–22 ஆம் வருடம் 13.06 இலட்சம் பசுவின உறைவிந்து குச்சிகள் மற்றும் 0.27 இலட்சம் எருமையின உறைவிந்து குச்சிகள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

5.4.5 கறவையின மேம்பாட்டுத் திட்ட செயல்பாடுகள், ஈரோடு

இத்திட்ட பிரிவின் முக்கிய நோக்கம், உயர் மரபுத்திறனுள்ள பொலிகாளைக் கன்றுகளை உற்பத்தி செய்து அவற்றை உறைவிந்து நிலையங்களுக்கு விநியோகித்தல் ஆகும்.

இப்பிரிவின்கீழ், ஜெர்சி கலப்பின களவெளி செயல்திறன் திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மேலும் இதுவரை இத்திட்டத்தில் ஐந்து தொகுப்புகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டத்தின்மூலம் 435 பொலிகாளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறை (320) மற்றும் இணையம் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணைக்கு (115) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

[*2022 ஏப்ரல் 13*

தற்போது, ஒன்றிய அரசின் நிதிமூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக ஆறாவது தொகுப்புத் திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 120 உயர் மரபுத் திறனுள்ள பொலிகாளைக் கன்றுகள் ரூ.69.14 இலட்சம் திட்ட மதிப்பில் உற்பத்தி செய்யப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பில் ரூ.47.78 இலட்சம் ஒன்றிய அரசின் பங்காகும்.

ஆறாவது தொகுப்பில் ஜெர்சி கலப்பினக் களவெளி செயல்திறன் பதிவு திட்டம் சேலம், நாமக்கல், கரூர், தருமபுரி, ஈரோடு, கோவை, மதுரை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்பது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் நடைபெறுகிறது.

இத்திட்டத்தின்கீழ் அதிக அளவில் பால் தரும் பசுக்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு 10 மாதங்கள் வரை பால் பதிவு மேற்கொள்ளப்படும். அந்த பதிவுகளின் அடிப்படையில் சிறந்த மரபியல் திறன் உள்ள பசுக்கள் தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட சிறந்த பசுக்களுக்கு வம்சாவழி சோதனைத் திட்டம்மூலம் தரவரிசை செய்யப்பட்ட சிறந்த பொலிகாளைகளிடமிருந்து பெறப்பட்ட உறைவிந்து குச்சிகளைக் கொண்டு செயற்கை முறை கருவூட்டல் செய்து உயர் மரபுத் திறன் உள்ள பொலிகாளைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் காளைக் கன்றுகள் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்குச் சொந்தமான உறைவிந்து நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

6. கால்நடை வளங்கள்

தமிழ்நாட்டில் சுமார் 16.72 இலட்சம் கறவையினங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ளன. இதில் 16.37 இலட்சம் பசுக்கள் மற்றும் 0.35 இலட்சம் எருமைகள் உள்ளன.

மேற்கூறிய கறவையினங்களுக்கான உறைவிந்து குச்சிகள், நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகிறது. கிராம அளவில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்

2022 ஏப்ரல் 13]

சங்கங்களில் உள்ள 2,603 பயிற்சி பெற்ற கிராமநிலை ஊழியர்கள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகின்றன. 2021-22 ஆம் ஆண்டில் 16.77 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் மாவட்ட ஒன்றியங்கள்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், 5.60 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.

7. பால் கொள்முதல்

கிராமப்புற அளவில் செயல்படும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் விற்பனைப் போக, மீதமுள்ள உபரி பால் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கிராமப்புற பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 38.26 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அவற்றுள், 3.66 இலட்சம் லிட்டர் பால் கிராம அளவில் உள்ளூர் தேவைக்காக விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள உபரி பால் 34.60 இலட்சம் லிட்டர் பால் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும், பெருநகர பால் பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பால் உற்பத்தியாளர்கள் வழங்கிய பாலுக்குண்டான பால் பண பட்டுவாடா வாரம் ஒரு முறை/10 நாட்களுக்கு ஒரு முறை/இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை/மாதம் ஒரு முறை அவர்கள் வழங்கிய பாலின் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

மாவட்ட ஒன்றிய வாரியாக பால் கொள்முதல் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்)

வ. எண்	மாவட்ட ஒன்றியத்தின் பெயர்	2021-22 (சராசரி பால் கொள்முதல்)
1	காஞ்சிபுரம்-திருவள்ளூர்	1,13,037
2	விழுப்புரம்	1,78,437

[2022 ஏப்ரல் 13

வ. எண்	மாவட்ட ஒன்றியத்தின் பெயர்	2021-22 (சராசரி பால் கொள்முதல்)
3	கடலூர்	42,112
4	வேலூர்	1,28,791
5	திருவண்ணாமலை	2,53,141
6	தருமபுரி	1,30,870
7	கிருஷ்ணகிரி	83,746
8	சேலம்	5,13,411
9	நாமக்கல்	1,44,421
10	ஈரோடு	2,16,488
11	திருப்பூர்	2,22,436
12	கோயம்புத்தூர்	1,66,649
13	நீலகிரி	11,031
14	மதுரை	2,06,299
15	தேனி	1,04,333
16	திண்டுக்கல்	79,509
17	திருச்சி	4,81,966
18	கரூர்	77,199
19	தஞ்சாவூர்	83,620
20	புதுக்கோட்டை	60,350
21	சிவகங்கை	64,782
22	விருதுநகர்	16,361
23	திருநெல்வேலி	44,666

2022 ஏப்ரல் 13]

வ. எண்	மாவட்ட ஒன்றியத்தின் பெயர்	2021-22 (சராசரி பால் கொள்முதல்)
24	தூத்துக்குடி	31,709
25	கன்னியாகுமரி	4,734
	மொத்தம்	34,60,098

8. பால் விற்பனை

விற்பனையை அதிகரிக்க இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் விற்பனைப் பிரிவு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

பின்வரும் பால் வகைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- நிலைப்படுத்தப்பட்ட பால்
- சிறப்பு நிலைப்படுத்திய பால்
- சமன்படுத்தப்பட்ட பால்
- நிறை கொழுப்புப் பால்
- இருநிலை சமன்படுத்தப்பட்ட பால்
- பசும்பால்
- டிமேட்
- ஆவின் கோல்டு

அனைத்து பால் பொருட்களான நெய், வெண்ணெய், மோர், தயிர், லஸ்ஸி, யோகர்ட், குலாப்ஜாமுன், ரசகுல்லா, கோவா, பல்வேறு வகையான சுவைகளில் சுவையூட்டப்பட்ட பால் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றை ஆவின் நிறுவனம் உற்பத்தி செய்து வருகிறது.

8.1 நுகர்வோர் பால் அட்டைகள்

கூட்டுறவு அமைப்பில் இயங்குகின்ற பால் பண்ணைகளில் ஆவின் நிறுவனம் மட்டும்தான் இந்தியாவில் மாதாந்திர

நுகர்வோர் அட்டைகளை விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம் அதிகமான அளவில் நுகர்வோர்களைக் கவர்வதோடு மட்டுமல்லாமல், முன்பணம் அடிப்படையில் குறைந்த விலைக்கு பாலை விற்பதுமூலம் தடையின்றி நுகர்வோர்களுக்குப் பால் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

நுகர்வோர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று ஆவின் பால் எளிதில் கிடைக்க செய்வதன்மூலம் நுகர்வோர்களுக்கு வழங்குகின்ற சேவையினை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8.2 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் விற்பனை

2021-22 ஆம் நிதியாண்டின் பால் விற்பனை 2020-21 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது சராசரியாக 12 சதவிகிதம் அளவு அதிகரித்துள்ளது. அதாவது, நாளொன்றுக்கு 11.67 இலட்சம் லிட்டர் என்ற விற்பனை அளவிலிருந்து 13.05 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் விற்பனை உயர்ந்துள்ளது.

அதிக அளவில் நுகர்வோர்களைக் கவரும் பொருட்டு ஆவின் தொடர்ந்து புதிய பால் பொருட்களை அறிமுகம் செய்து வருகிறது.

மாவட்ட ஒன்றியம் வாரியான பால் விற்பனை ஒப்பீடு

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	பால் விற்பனை அளவு (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்)			
		2018-19	2019-20	2020-21	2021-22
1	காஞ்சிபுரம்-திருவள்ளூர்	23,777	34,215	57,556	70,356
2	விழுப்புரம்	20,876	16,600	6,276	9,782
3	கடலூர்	--	15,765	21,572	27,831
4	வேலூர்	71,564	68,304	60,331	65,449
5	திருவண்ணாமலை	--	7,502	8,134	9,846
6	தருமபுரி	27,336	6,448	4,994	5,759
7	கிருஷ்ணகிரி	--	18,700	17,967	21,432

2022 ஏப்ரல் 13]

8	சேலம்	1,50,241	1,55,402	1,67,291	1,86,059
9	நாமக்கல்	50,023	61,349	60,199	68,790
10	ஈரோடு	64,312	63,881	57,573	62,342
11	கோயம்புத்தூர்	1,46,734	1,48,498	1,55,191	1,73,197
12	திருப்பூர்	14,582	13,340	15,423	20,367
13	நீலகிரி	16,578	16,542	16,005	17,515
14	மதுரை	1,67,259	1,76,788	1,75,962	1,81,167
15	தேனி	--	6,023	5,388	5,712
16	திண்டுக்கல்	15,981	16,529	17,507	22,659
17	திருச்சி	1,19,896	1,13,406	1,16,753	1,23,164
18	கரூர்	--	5,562	5,266	5,977
19	தஞ்சாவூர்	29,795	32,492	40,666	47,866
20	புதுக்கோட்டை	14,568	17,020	18,013	24,517
21	சிவகங்கை	37,800	43,670	54,734	65,475
22	விருதுநகர்	5,978	6,878	6,238	9,037
23	திருநெல்வேலி	42,860	28,695	33,982	34,545
24	தூத்துக்குடி	-----	21,921	26,187	27,454
25	கன்னியாகுமரி	16,004	18,079	18,145	18,923
	Total	10,42,164	11,13,609	11,67,353	13,05,220

8.3 சென்னை பெருநகரில் பால் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதில் முக்கியப் பங்காற்றுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் சென்னை பெருநகர பால் விற்பனை சராசரியாக நாளொன்றுக்கு 13.36 இலட்சம் லிட்டர் ஆக உள்ளது. மேலும், 2022-23 ஆம் ஆண்டில் 15.00 இலட்சம் லிட்டர் ஆக விற்பனையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 13

சென்னை பெருநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு சராசரி இலட்சம் லிட்டரில்)

வ. எண்	விவரம்	2017-18	2018-19	2019-20	2020-21	2021-22
1	சென்னை பெருநகர பால் விற்பனை	11.91	12.09	12.11	12.63	13.36

8.4 பால் விற்பனை விலை

ஏழைக் குழந்தைகள் மற்றும் மகளிர் பால் நுகர்வோர்கள் பெரிதும் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/— குறைத்து 16.5.2021 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திருத்தி அமைக்கப்பட்ட பால் விற்பனை விலை பட்டியல்

வ. எண்	பாலின் வகை	பால் பை நிறம்	விவரம்		500 மில்லி லிட்டருக்கான விற்பனை விலை (ரூ) (16.5.2021 முதல்)	
			கொழுப்பு சத்து %	கொழுப்பு அல்லாத இதர சத்து %	அட்டை தாரர் களுக்கு	அதிகபட்ச சில்லறை விற்பனை விலை
1	இருமுறை சமன் படுத்தப்பட்ட பால்	மெஜந்தா	1.5	9.0	18.00	18.50
2	சமன் படுத்தப்பட்ட பால்	நீலம்	3.0	8.5	18.50	20.00

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பாலின் வகை	பால் பை நிறம்	விவரம்		500 மில்லி லிட்டருக்கான விற்பனை விலை (ரூ) (16.5.2021 முதல்)	
			கொழுப்பு சத்து %	கொழுப்பு அல்லாத இதர சத்து %	அட்டை தாரர் களுக்கு	அதிகபட்ச சில்லறை விற்பனை விலை
3	நிலைப் படுத்தப்பட்ட பால்	பச்சை	4.5	8.5	21.00	22.00
4	நிறை கொழுப்புப் பால்	ஆரஞ்சு	6.0	9.0	23.00	24.00

மேற்படி விற்பனை விலை குறைப்பு காரணமாக ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு சராசரியாக 2.80 இலட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது.

8.5 சென்னை பெருநகரங்களில் பால் பொருட்கள் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் பொருட்கள் சென்னை பெருநகர மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்னை பெருநகரங்களில் 'ஆவின்' பால் அதிக அளவில் விற்பனையாகிறது. ஆவின் விற்பனைப் பிரிவு சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களை அதிக அளவில் நியமித்து பால் பொருட்களை விற்பனை செய்ய பெரிதும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டில் இருந்த ரூ.26.53 கோடி மாதாந்திர சராசரி விற்பனையானது தற்போது, 2021-22 ஆம் ஆண்டில் ரூ.29.13 கோடியாக உயர்ந்து பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சில்லறை விற்பனை கடைகளில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பது மற்றும் விற்பனை செய்வது குறித்து

பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, கவர்ச்சிகரமான வண்ணங்களில் பெயர் பலகைகள், அறிவிப்பு பலகைகள் மற்றும் தொங்கவிடும் விளம்பர அட்டைகள் ஆகியவை சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

முதல் நிலை விற்பனை பிரிவு ஊழியர்கள்மூலம் சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள முக்கிய விற்பனைக் கடைகள் மற்றும் பிக் பஜார், ரிலையன்ஸ் ஃப்ரெஷ், ரிலையன்ஸ் சில்லறை விற்பனை, பெரிய சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8.6 சென்னை பெருநகர விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்

விற்பனை அளவை அதிகரிக்க, சென்னை பெருநகர் மற்றும் புறநகர் பகுதிகளில், பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ஆவின் நிறுவனம் பின்வரும் நன்கு பிணைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது.

விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள் (31.3.2022)

வ. எண்	உட்கட்டமைப்பு விவரம்		2014-15	2015-16	2016-17	2017-18	2018-19	2019-20	2020-21	2021-22
1	விநியோக வழித்தடங்கள்	113	117	119	132	148	157	157	173	198
2	வட்டார அலுவலகங்கள்	16	16	16	16	27	27	27	27	27
3	பால் வழங்கும் நிலையங்கள்	470	470	433	437	441	493	493	456	471
4	விநியோகிக்கும் இடங்கள்	311	311	361	376	485	512	530	597	645
5	பாலகங்கள்	93	93	114	147	221	227	218	248	255
6	மொத்த பால் விநியோகிப்பாளர்கள்	47	71	71	83	84	84	76	11	63

2022 ஏப்ரல் 13]

வ. எண்	உட்கட்டமைப்பு விவரம்		2014-15	2015-16	2016-17	2017-18	2018-19	2019-20	2020-21	2021-22
7	பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்	48	48	48	48	48	48	48	48	48
8	ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள்	184	202	451	556	594	649	651	1,245	1385
9	பால் பொருட்கள் விநியோக வழித் தடங்கள்	14	16	25	33	33	36	35	42	42

8.7 சந்தைப்படுத்தும் நிலையங்கள்

பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர் மற்றும் பொது மக்களை எளிதில் சென்றடைய ஏதுவாக பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. அனைத்து மாவட்டங்களிலும் தினமும் பால் விநியோகம் செய்ய பால் டிப்போக்கள் மற்றும் பால் விநியோக மையங்கள், விற்பனை நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

2. ஆவின் பால் பொருட்களுக்காகப் பிரத்தியேகமாக விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆவின் அதிநவீன பாலகங்கள் (இணையம்)	21
தனியார் பாலகங்கள்	1,848
மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் நடத்தப்படும் அதிநவீன பாலகங்கள்	44
மொத்த விற்பனையாளர்கள்	377

TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

3. அதிக அளவில் விற்பனையாளர்கள் மற்றும் பால் முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கீழ்க்கண்ட வழிவகைகளிலும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

1. தொழில் நிறுவனங்கள், கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள், விடுதிகள், அகதிகள் முகாம்கள் ஆகியவற்றிற்கும், பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
2. திருமணம் மற்றும் பிற விழாக்களுக்கு முன்கூட்டியே சிறப்பு ஆர்டர்களை முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களின் வீட்டிற்கே சென்று ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுகின்றன.
3. ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் பொதுமக்களைச் சென்றடைய, சிறிய கடைகள், மளிகைக் கடைகள், டீ கடைகள், பேக்கரிகளில் பால் பொருட்கள் விற்கப்பட அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது சிறப்பு பதிவுத் திட்டத்தின்கீழ் சில்லறை விற்பனையாளர்கள் நியமனம் செய்ய வைப்புத் தொகை ரூ.10,000/-க்கு பதிலாக ரூ.1,000/- என குறைக்கப்பட்டுள்ளது.

8.8 சிறப்பு விற்பனை முகாம்கள்

கடந்த ஆண்டு தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகைகளின்போது விற்பனைக்காக இணையம் 5 வகையான ஆவின் சிறப்பு இனிப்புகளை அறிமுகப்படுத்தியது. அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைத்து நகரங்களிலும் தற்காலிக பார்லர்களை அமைத்து அதன்மூலம் பொது மக்களுக்கு இந்த சிறப்பு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டன. இதேபோல், கோடையிலும் தற்காலிக பார்லர்கள் அமைக்கப்பட்டு, தயிர், மோர், லஸ்ஸி போன்ற பானங்கள் விற்பனை செய்யப்பட்டன.

தமிழக அரசின் 2022 வருடத்திற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் ஆவின் 100 மிலி நெய் ஜார் 2,15,67,122 எண்ணிக்கையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப விநியோகக் கழகம் மூலமாக ரூ.120.77 கோடி மதிப்பிற்கு விநியோகம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பயனடைந்தனர்.

2022 ஏப்ரல் 13]

2021 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் நிறுவனத்தின்மூலம் சிறப்பு இனிப்பு வகைகள் மற்றும் இதர பால் பொருட்கள் ரூ.82.11 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டு தீபாவளி பண்டிகை விற்பனையை விட 44 சதவிகிதம் அதிகமாகும்.

8.9 ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்தல்

தரமதிப்பினைக் கூட்டவும், பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையைக் கூட்டவும், ஆவின் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சேலம் ஒன்றியம் அதிவெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட UHT *பால் மற்றும் நறுமண பால் டெட்ரா பாக்கெட்டுகளுக்கு ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது. மேலும் ஈரோடு ஒன்றியம், நெய் ஏற்றுமதிக்கான உரிமம் பெற்றுள்ளது. திருவண்ணாமலை பால் மற்றும் பால் பவுடர் ஆலை, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் நெய்யிற்கான ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது.*

சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் துபாய் போன்ற அயல் நாடுகளுக்கு ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்து வருகிறது. இதர வெளிநாடுகளுக்கும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவின் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை வெளிநாடுகளுக்கு ரூ.355.30 இலட்சம் மதிப்பிலான 7,15,476 லிட்டர் பால் மற்றும் ரூ.115.39 இலட்சம் மதிப்பிலான நெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ.0.99 இலட்சம் மதிப்பிலான 1,107 லிட்டர் நறுமணப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆவின் பொருட்களை ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு 'மொத்த விற்பனையாளர்'களாக நியமன உத்தரவும், ஐக்கிய அரபு நாடுகள், துபாய், அபுதாபி, ஷார்ஜா, அஜ்மன், ஓமன், கத்தார், கனடா மற்றும் அமெரிக்கா (கலிபோர்னியா) ஆகிய வெளிநாடுகளில் ஆவின் பொருட்களை விற்பனை செய்வதற்கு 'வணிக ஒப்பந்த' ஆணைகளை வணிக ஏற்றுமதியாளர்களுக்கு 21.8.2021 அன்று வழங்கினார்கள்.

வெளிநாடுகளுக்கு ஆவின் பொருட்களை விற்பனை மேற்கொள்ள மொத்த ஏற்றுமதி விற்பனையாளர்களை நியமனம் செய்வதற்காக விண்ணப்பப் படிவங்கள் ஆவின் இணைய தளத்திலிருந்து (www.aavinmilk.com) இலவசமாக தரவிறக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் நியூசிலாந்து, ஐக்கிய அரபு நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற வெளிநாடுகளுக்கு மொத்த ஏற்றுமதி விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிவெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பால் (UHT Milk) நெய் மற்றும் நறுமணப் பாலை ஏற்றுமதி செய்வதோடு பாதாம் மிக்ஸ் பவுடர், குலாப்ஜாமுன் மிக்ஸ் மற்றும் பனீர் ஆகிய பால் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணையம் திட்டமிட்டுள்ளது.

கோவா, மைசூர்பா, பேடா, குலாப்ஜாமுன், ரசகுல்லா ஆகிய பால் பொருட்களின் கெடாத்தன்மைக் காலத்தினை அதிகரிக்கச் செய்து, ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8.10 புதிய பால் பொருட்கள் விற்பனை

19.1.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆவின் தயாரித்த புதிய ஐந்து வகையான பால் பொருட்களான டெய்ரி ஒயிட்னர், யோகர்ட், பால்கேக், பாயாசமிக்ஸ், பால்புரத நூடுல்ஸ்களை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

8.11 மதிப்புக் கூட்டிய பால் பொருள்

தென் தமிழக மக்களின் ஐஸ்கிரீம் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.3.2022 அன்று காணொலிக் காட்சிமூலம் மதுரையில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை தொடங்கி வைக்கப்பட்டது.

8.12 விற்பனை விரிவாக்கத் திட்டங்கள்

ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் எளிதில் கிடைக்காத இடங்களுக்கு (uncovered area) அதிகமான தனி உரிமை கிளைதாரர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

இணையம்மூலம் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகமான எண்ணிக்கையில் நிறுவன மொத்த விற்பனையாளர்களை நியமிப்பதுமூலம் ஆவின் பொருட்களை 5 கோடி மதிப்பில் விற்பனை எய்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது, மின் வணிகம் அதிவேகத்தில் வளர்ந்து வருகிறது. ஆவின் நிறுவனமும் மின் வணிகத்தில் தனது பங்களிப்பை அதிகமான அளவில் உயர்த்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

ஆவின் பொருட்கள் சிங்கப்பூர், கத்தார், ஹாங்காங், இலங்கை மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் மொரீசியஸ், மலேசியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8.13 நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்

கட்டணமில்லா தொலைபேசி வசதியுடன் (எண். 1800-425-3300) கூடிய 24 X 7 நுகர்வோர் சேவை மற்றும் குறை தீர்க்கும் மையம் ஒன்று, சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இதன்மூலம் நுகர்வோர், இம்மையத்தை அணுகி தங்களது கருத்துக்களைப் பதிவு செய்து, குறைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள ஏதுவாகிறது. கடந்த 2021-22-ல் மொத்தம் 2,199 புகார்கள் பெறப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

*சமூக ஊடகங்கள் மூலமாக, (*Facebook – Aavintn*;* Twitter @Aavintn and Instagram @aavintn*) நுகர்வோர்களின் புகார்கள் பெறப்பட்டு அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

9. தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பால் பண்ணைகள் ஆகியவற்றில் பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்காக அதிநவீன தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[*2022 ஏப்ரல் 13*

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட பால், முழுமையாக AMCU, DPMCU *மற்றும் கணினிமயமாக்கப்பட்ட தானியங்கி பால் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு பரிசோதிக்கப்படுகிறது. பாலின் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் விலை வழங்கப்படுகிறது.*

*மொத்த பால் குளிர்விப்பான் (*BMC*) மற்றும் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து (*CC*) பால் பண்ணைகளுக்குப் பெறப்பட்ட பாலிலிருந்து, பல்வேறு பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பால் பண்ணைகளில் உள்ள தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் பாலின் தரம் மற்றும் சர்க்கரை, மாவு, யூரியா போன்ற கலப்படங்களுக்கான பரிசோதனைகளை உடனடி ஆய்வு செய்ய, அதிநவீன* FTIR *தொழில்நுட்ப அடிப்படையிலான பால் பகுப்பாய்வு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் கலப்படமில்லா பாலை கொண்டு மட்டுமே பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.*

*பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் பயிற்சி பெற்ற உணவுப் பாதுகாப்பு மேற்பார்வையாளர்களால் (*Food Safety Supervisors*) கண்காணிக்கப்படுகின்றது. பால் மற்றும் பால் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, தரமான உற்பத்தி செய்முறை (*GMP*) மற்றும் தரமான பராமரிப்பு நடைமுறைகள் (*GHP*) தரக்கட்டுப்பாட்டுக் குழுவினரால் கண்காணிக்கப்படுகின்றது. பால் பண்ணைகளில் உணவுப் பொருட்களைக் கையாள்பவர்களின் தனிப்பட்ட சுகாதாரமும் தரக் கட்டுப்பாட்டு பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு, சுகாதாரமான பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியானது மேற்கொள்ளப்படுகிறது.*

இணையத்தின்கீழ் இயங்கும் அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர், அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, பால் பவுடர் தொழிற்சாலை மற்றும் ஈரோடு, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஒன்றியங்கள் ISO *22000 உணவுப் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு (*FSMS*) சான்றிதழைப் பெற்றுள்ளன.*

மேலும், பால் மற்றும் பால் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், வாடிக்கையாளர்களுக்குத் தரமான

பொருட்களை அளிப்பதற்காகவும், மீதமுள்ள ஒன்றியங்களும் ISO: 22000 உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு சான்றிதழைப் (FSMS) பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமானது AGMARK, BIS மற்றும் EIC போன்ற சான்றிதழ்களைப் பெற்று நெய், பால் பவுடர் மற்றும் UHT பால் ஆகியவற்றை மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின்கீழ் இயங்கும் பால் பவுடர் தொழிற்சாலைகளில் உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், பாலில் உள்ள பூச்சிக்கொல்லிகளின் அளவு, நுண்ணுயிர் கொல்லி/நோய் எதிர்ப்பு மருந்துகள், கன உலோகங்கள் மற்றும் அஃப்ளோடாக்ஸின் M1 போன்றவற்றைக் கண்டறிய தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NPDD) மாநில மைய ஆய்வகத்தை அமைத்து வருகிறது. இவ்வாய்வகம் மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையங்கள், பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை ஒழுங்குமுறை ஆணையங்களின் விதிகளுக்குள் இருப்பதை உறுதி செய்வதற்கான தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது இந்த பரிசோதனைகள் அனைத்தும் NABL/FSSAI அங்கீகாரம் பெற்ற வெளி ஆய்வகங்களில் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வாய்வகத்தில் Triple Quadruple Liquid Chromatography with Mass Spectrometer (LCMSMS), Gas Chromatography with Mass Spectrometer (GCMSMS) and Inductively Coupled Mass Spectrometer (ICPMS) போன்ற உயர் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி பாலில் உள்ள வேதியியல், ஊட்டச்சத்து கலவைகள் மற்றும் நச்சுக்கள் போன்றவை அறியப்பட்டு அவை ஒழுங்குமுறை ஆணையங்களின் விதிகளுக்குள் இருப்பது உறுதி செய்யப்படும்.

கோயம்புத்தூர் ஒன்றியத்தில் அதிநவீன நுண்ணுயிர் ஆய்வுக்கூடம் பால் மற்றும் பால் பொருட்களின் நுண்ணுயிர் தர ஆய்விற்காகவும், அருகில் உள்ள ஒன்றியங்களின் பயன்பாட்டிற்காகவும் அமைக்கப்படவுள்ளது.

[2022 ஏப்ரல் 13

10. மாநில/ஒன்றிய அரசு நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும் பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்கள்

10.1 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புகள் (NADP)

2007–08 முதல் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதியின்மூலம் கிராம அளவில் பாலை குளிர்விக்கத் தேவையான தொகுப்புக் குளிர்விப்பு மையங்கள், தரமான பால் கொள்முதல் செய்வதற்குத் தேவையான பால் பகுப்பாய்வு உபகரணங்கள், பால் டேங்கர்கள், பால் பொருட்களைச் சந்தைப்படுத்த எடுத்துச் செல்லும் வாகனங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன.

2021-22 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 162 கால்நடை மருத்துவ ஆலோசகர்கள்மூலம் 7,158 பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவையினங்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு, இனவிருத்தி பணிகளையும் மேற்பார்வை செய்யப்படுகிறது.

10.2 தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் (NPDD)

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் பால் மற்றும் பால் பொருட்களைப் பதப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு ரூ.9,288.25 இலட்சம் நிதியினை வழங்கியுள்ளது. 2014-15 முதல் 2020-21 வரை இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பு ரூ.10,580.75 இலட்சம் ஆகும்.

ஒரு இலட்சம் லிட்டர் கொள்முதல் திறன் கொண்ட ஒரு நவீன பால் பண்ணை, பாடாலூர், திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நிறுவப்பட்டுள்ளது.

நாளது தேதி வரை 586 தொகுப்பு பால் குளிர்விப்பான்களை நிறுவியதன்மூலம் நாளொன்றுக்கு கிராம அளவிலேயே 20,60,500 லிட்டர் பாலை கூடுதலாகக் குளிர்விக்கும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

மேலும், எதிர்வரும் காலத்தில் 103 தொகுப்பு பால் குளிர்விப்பான்களை நிறுவுவதன்மூலம் 4,22,500 லிட்டர் பாலை குளிர்விக்க முடியும்.

தானியங்கி பால் கொள்முதல் கருவிகள், பால் சேகரிப்பு புள்ளிவிவரக் கருவிகள், கலப்படப் பொருட்களைக் கண்டறியும் கருவிகள், மில்கோ-ஸ்கேன், மில்கோ-ஸ்கிரீன் ஆகிய கருவிகள், பால் உற்பத்தியாளர்களிடம் தரமான கலப்படமற்ற பாலை கொள்முதல் செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது.

10.3 தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்புத் திட்டங்கள் (NABARD-RIDF)

2021–22 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.2,362.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றியத்தின் நிருவாக அலுவலகக் கட்டடம், பாலை குளிர்விக்கும் அறை ஆகியவற்றை நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களில் உருவாக்குவதற்கும், நீலகிரி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு ஒரு மெட்ரிக் டன் பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையினை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10.4 தேசியவேளாண் மற்றும் ஊரகவளர்ச்சிவங்கியின் பால்பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு திட்டங்கள் (NABARD - DIDF)

இத்திட்டத்தின்கீழ் ஆவினின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

2019-20 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கீழ்க்காணும் நான்கு திட்டங்களுக்கு ரூ.379.29 கோடி திட்ட மதிப்பீட்டில், ரூ.303.42 கோடி கடன் பங்களிப்பாக NABARD *மூலம் பெறப்படும்*

- ✓ *தஞ்சாவூரில் 1 இலட்சம் லிட்டர் பாலை கையாளுகின்ற தானியங்கி அதி நவீன பால் பண்ணை நிறுவப்படும்.*
- ✓ *திருச்சியில் நாள் ஒன்றிற்கு 6,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும்.*

TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 13

- ✓ சேலத்தில் 7 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட அதி நவீன பால் பண்ணையுடன், 30 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலை உருவாக்கப்படும்.
- ✓ மாதவரத்தில் நாள் ஒன்றிற்கு 10 இலட்சம் லிட்டர் பாலை கையாளுகின்ற பால் பண்ணை மற்றும் எதிர்காலத்தின் தேவையினைக் கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு 15 இலட்சம் விரிவாக்கம் செய்யக்கூடிய அளவிற்கு ஒரு பால் பண்ணை அமைக்கப்படும்.

மேலும், 2020-2021 நிதியாண்டிற்காக மொத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.307.44 கோடியில் கடன் தொகையாக ரூ.245.95 கோடி NABARD மூலம் பெற்று உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

10.5 இராஷ்டிரிய கோகுல் மிஷன் - வம்சாவழி சோதனைத் திட்டம்

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ் ரூ.2,087.51 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வம்சாவழி சோதனைத் திட்டத்தை அமல்படுத்தும் நிறுவனமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ், வேலூர், ஈரோடு, சேலம் ஆகிய 3 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் வம்சாவழி சோதனைத் திட்டம் தேசிய பால்வள வாரியத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

- ➢ உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்
- ➢ இளம் பொலிகாளைகளை மரபியல் ரீதியாக மதிப்பீடு மற்றும் தரவரிசை செய்தல்

இத்திட்டத்தின்மூலம் 2023-24-க்குள் 225 உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு

2022 ஏப்ரல் 13]

அவற்றிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 150 பொலிகாளைக் கன்றுகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது வரை 141 பொலிகாளைக் கன்றுகள் இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றுள் 51 உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைக் கன்றுகள் பல்வேறு பொலிகாளை பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 90 பொலிகாளைகள் விநியோகம் செய்யப்பட தயார் நிலையில் உள்ளன.

10.6 தேசிய கால்நடை இயக்கம் (NLM)

பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்குக் காப்பீடுத் திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும் தொடர் பால் உற்பத்திக்காகவும் செயல்படுத்தப்படுகிறது. தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ், பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்குக் காப்பீடு வழங்க மொத்த காப்பீட்டுத் தொகையில் 50 சதவிகித மானியம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டு, 25 மாவட்ட ஒன்றியங்களில் உள்ள 1.36 இலட்சம் கறவை பசுக்களுக்கு ஆவின் நிறுவனத்தின்மூலம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள 1.30 இலட்சம் கறவை மாடுகளுக்கு காப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

10.7 தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் (NAIP)

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின்கீழ் உள்ள பத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் 12 மாவட்டங்களில் முறையே கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, உதகமண்டலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகியவற்றில் செயற்கை முறை கருவூட்டல் வசதிகள் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளதால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ் சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் உறைவிந்து குச்சிகளைக் கொண்டு கிராமங்களில் உள்ள பசுவினங்கள் மற்றும் எருமையினங்களின்

[2022 ஏப்ரல் 13

பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்கள் முடிவுற்றுள்ளன. மேலும், மூன்றாம் கட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட 1.50 இலட்சம் கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் என்ற இலக்கில், இதுவரை 0.78 இலட்சம் கறவைகளுக்கு உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் விந்து குச்சிகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், இராஷ்டிரிய கோகுல் மிஷன்மூலம் 100 சதவிகித மானியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்மூலம் கள அளவில் செயல்படுத்தப்படுகிறது.

10.8 ஒரே சுகாதார அணுகுமுறை

ஒரே சுகாதார அணுகுமுறையானது, மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச் சூழலுக்குகேற்ற ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு உள்நாட்டிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் பணிபுரியும் பல துறைகளின் கூட்டு முயற்சியாகும்.

புருசெல்லோசிஸ், லெப்டோஸ்பிரோசிஸ், பசுவின காசநோய் போன்ற தொற்று நோய்கள் பசுவினங்கள் மற்றும் பால் தயாரிப்புகளைக் கையாளுபவர்கள்மூலம் பரவும் ஒருவித விலங்குகளிடமிருந்து மனிதனுக்கு பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த இந்த அணுகுமுறை உதவுகிறது.

11. முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களைச் சார்ந்த திட்டங்கள்

11.1 அதிவெப்ப நிலையில் (UHT) பால் பதப்படுத்தும் ஆலை, சோழிங்கநல்லூர் பால் பண்ணை

உயர் வெப்ப நிலையில் 135 டிகிரி செல்சியஸ்க்கு மேல் சூடேற்றப்பட்ட பால் நுண்ணுயிரிகளற்ற சூழ்நிலையில் சிப்பம் கட்டப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பால் பாக்கெட்டுகள் சாதாரண அறை வெப்ப நிலையில் 90 நாட்கள் வரை இருப்பு வைத்திருக்கலாம்.

2022 ஏப்ரல் 13]

11.2 பால் பண்ணைகளில் மரபு சாரா எரிபொருள் பயன்பாடு

தற்போது, நாளொன்றுக்கு 1.11 இலட்சம் லிட்டர் சூடான நீரை (80°C) உற்பத்தி செய்ய சூரிய நீர்சூடாக்கிகள் 8 பால் பண்ணைகள், 4 குளிர்விக்கும் மையங்கள் மற்றும் 100 மொத்த பால் குளிர்விப்பான்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், உலை எண்ணெய் செலவினைச் சேமிக்க சோழிங்கநல்லூர் மற்றும் சேலம் பால் பண்ணைகளில் பரவளைய செறிவூட்டிய சூரிய வெப்ப அமைப்பை நிறுவியுள்ளது. பகல் நேரங்களில் பால் பண்ணை இயக்கிட ஒரு சூரிய வெப்ப அமைப்பு திட்டம் மதுரை பால் பண்ணையில் ரூ.2.00 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், மதுரையில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் 2 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

11.3 ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மைத் திட்டம் (IDMS)

பால் கூட்டுறவுத் துறை டிஜிட்டல் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க உதவும் பொருட்டு, தமிழக அரசு "ஐடிஎம்எஸ்" திட்டம் என்று அழைக்கப்படும் மின்-ஆளுமை திட்ட முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஐ.டி.எம்.எஸ் திட்டம் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளையும் கணினிமயமாக்கல் மற்றும் தானியங்கிமயமாக்கலுக்கு உதவுகிறது. முதல் கட்டமாக, இந்த "ஐடிஎம்எஸ்" திட்டம் 300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், 4 சமன்படுத்தப்பட்ட பால் பண்ணைகள் மற்றும் இணையம் ஆகியவற்றில் ரூ.46.55 கோடி செலவில் அனைத்து வணிக செயல்பாடுகளும் டிசம்பர் 2019 வரையறை செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 100% மானிய உதவியாக ஒன்றிய அரசு ரூ.18.34 கோடியை வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து அலகுகளிலும் இத்திட்டம் 31.12.2019 முடிக்கப்பட்டு 1.1.2020 முதல் 30.10.2020 வரை மென்பொருள் உறுதித்தன்மை பலப்படுத்தப்பட்டு 01.11.2020 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 13

11.4. மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுதல்

தூய பால் உற்பத்தியின் தொடக்கமாகக் குளிரூட்டல் வசதியுடன்கூடிய பால் குளிர்விப்பான்கள் பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுக் சங்கங்களில் நிறுவப்பட்டு, பாலின் ஆரம்ப தரத்தைத் தக்கவைத்திருக்க பாலை குளிர்விக்க உதவுகின்றன. எனவே, மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஒன்றிய / மாநில அரசு திட்டங்களின்கீழ் 500, 1,000, 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்கள், 5 முதல் 10 கி.மீ சுற்றளவில் செயல்படும் சங்கத்தின் (அல்லது) கிளை சங்கங்களின் சராசரி மொத்த பால் கொள்முதல் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நிறுவப்படுகின்றன.

இதுவரை, நாளொன்றுக்கு 21.95 இலட்சம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட 626 மொத்த பால் குளிர்விப்பான்கள் பல்வேறு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நிறுவப்பட்டுள்ளன.

12. ஒன்றியங்கள் & இணையத்தின் விற்பனை வருவாய்

(ரூ.கோடியில்)

வ. எண்	வருடம்	மொத்த விற்பனை வருவாய்	ஒன்றியங்களின் விற்பனை வருவாய்	இணையத்தின் விற்பனை வருவாய்
1	2016-17	5281.00	3528.56	1752.44
2	2017-18	5478.00	3618.34	1859.66
3	2018-19	5994.00	3976.14	2017.86
4	2019-20	6947.45	4763.35	2184.10
5	2020-21	7595.72	5269.92	2325.80
6	2021-22 (தோராயமாக)	7887.00	5448.00	2439.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 13]

2020-21 ஆம் ஆண்டு ரூ.7595.72 கோடியாக இருந்த ஒன்றியங்கள் & இணையத்தின் விற்பனை வருவாய், 2021-22 ஆம் ஆண்டு ரூ.7887.00 கோடியாக உயர்ந்துள்ளது.

13. பல்வேறு அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு

பால்வளத் துறையானது, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் பொது சுகாதாரத் துறை போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

14. பணியாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

1. *2021-22 ஆம் வருடத்தில், ஆறு ஒன்றிய ஊழியர்களுக்கும், 159 இணைய பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.*
2. *பால்வளத் துறையில் 2 நபர்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 20 பணியாளர்கள் மற்றும் இணையத்தில் 80 நபர்களும் பணியமர்த்தப்பட்டனர்.*
3. *கருணை அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்களின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

நிறுவனத்தின் பெயர்	வருடம்	பணியமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை
பால்வளத் துறை	2020	1
	2021	2
ஒன்றியங்கள்	2020	5
	2021	1
இணையம்	2020	4
	2021	50

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பால்வளத் துறையில் பணிபுரிந்து கொரோனா

பெருந்தொற்று காரணமாக உயிரிழந்த பணியாளர் ஒருவரின் வாரிசுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 47 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை 21.8.2021 அன்று வழங்கினார்கள்.

4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் தினந்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.4,000 ஓய்வூதியத் தொகையாகவும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை குடும்ப ஓய்வூதியமாக ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.

6. பணியாளர்கள் பயன்பெறும் பொருட்டு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவை முறையே, பெங்களூருவில் செயல்பட்டு வரும் தேசிய பால்வள நிறுவனத்திலும், ஆனந்தில் செயல்பட்டு வரும் ஊரக வளர்ச்சி மேலாண்மை நிலையத்திலும், சென்னையில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் ஆகியவற்றிலும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இணையத்தில் புதிதாகப் பணியில் சேர்ந்த அமைச்சுப் பணியாளர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் உரிய அடிப்படை பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. 2021-22 ஆம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.29.24 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.12.76 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 13]

8. *2021 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது கருணைத் தொகையாக ரூ.193.14 இலட்சம் இணையத்தின் 2,509 பணியாளர்களுக்கும், ரூ.186.45 இலட்சம் 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 2,508 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.*

9. *2021 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி இணையத்தின் 1,327 பணியாளர்களுக்கு ரூ.12.54 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும், ஓய்வு பெற்ற 2,170 பணியாளர்களுக்கு ரூ.4.55 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 2,972 பணியாளர்களுக்கு ரூ.25.27 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும், ஓய்வு பெற்ற 2,781 பணியாளர்களுக்கு ரூ.5.74 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.*

10. *2021-2022 நிதியாண்டில் பொங்கல் பண்டிகையையொட்டி இணையத்தின் 1,325 பணியாளர்களுக்கு ரூ.8.67 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் ஓய்வு பெற்ற 1,975 பணியாளர்களுக்கு ரூ.5.23 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 2,964 பணியாளர்களுக்கு ரூ.19.40 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் ஓய்வு பெற்ற 2,809 பணியாளர்களுக்கு ரூ.7.34 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.*

15. பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள்

15.1 மாற்றியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி

- *பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தினை ஊக்குவித்து தக்க வைக்கும் வண்ணமாகவும் அவர்களது சேவையை மதிப்பளிக்கும் வண்ணமாகவும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி*

உருவாக்கப்பட்டு அதில் மாதந்தோறும் பால் ஊற்றும் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக ரூ.1-ம், தொடர்புடைய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்பாக தலா 0.50 பைசாவும் (ஆக மொத்தம் ரூ.2/-) பெறப்படுகிறது.

- விபத்தில் இறந்த பால் உற்பத்தியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் விபத்தில் நிரந்தர ஊனமுற்ற சந்தாதாரர்களுக்கு இந்த நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது

- உறுப்பினர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது, தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு, விபத்து அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும்போது வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.1.75 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக 12.11.2019 முதல் உயர்த்தி உள்ளது. விபத்தில் இறந்த பால் உற்பத்தியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	நிதி உதவி	நிதி
1	கல்விக்காக	ரூ.25,000
2	திருமணத்திற்காக	ரூ.30,000
3	இறுதிச் சடங்கு செலவினங்களுக்காக	ரூ.5,000

இதுவரை 193 பயனாளிகளுக்கு ரூ.377.30 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தற்சமயம் ரூ.708.71 இலட்சம் இருப்பில் உள்ளது.

15.2 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின்மூலம்

2022 ஏப்ரல் 13]

தாது உப்புக் கலவை விற்பனை செய்யும் ஊழியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களை ஊக்குவிக்கவும், தாது உப்புக் கலவை விற்பனையை ஊக்குவிக்கவும், சங்க ஊழியர்களுக்கு அவர்கள் விற்கும் தாது உப்புக் கலவைக்கு ஒரு கிலோவுக்கு ரூ.10 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.85.11 இலட்சம் தாது உப்புக் கலவை விற்பனைக்கான ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

15.3 பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலமாக ஊக்கத் தொகை வழங்குதல்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை போன்றே, மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் ஈட்டப்பட்ட இலாபத் தொகையில் ஒரு பகுதியானது பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அந்த பால் ஊற்றும் உறுப்பினர்களின் பால் ஊற்றும் அளவின் அடிப்படையில் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.291.79 இலட்சம் ஊக்கத் தொகையானது கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் மூலமாக 1,317 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 30,268 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

15.4 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்குப் போனஸ் வழங்குதல்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் இலாபத்தினை சங்க உறுப்பினர்களுடன் பங்கீடு செய்யும் அளவீடாக, 50 சதவிகித இலாபத் தொகையானது பால் உற்பத்தியாளர்களுக்கு, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதியின்படி பங்குத் தொகை மற்றும் பங்கு ஈவுத் தொகை, ஆதரவு தள்ளுபடி விலை மற்றும் போனஸாக பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் அளவீட்டிற்குத் தக்கவாறு

வழங்கப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டில் ரூ.1,111.70 இலட்சம் போனசாகவும், ரூ.9.86 இலட்சம் பங்கு ஈவுத் தொகையாகவும், ரூ.1,488.74 இலட்சம் ஆதரவு தள்ளுபடி விலையாகவும், 2.48 இலட்சம் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

15.5 பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடை உள்ளீட்டு சேவைகள்

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் பெரும்பாலானவை கலப்பின ஜெர்சி பசுக்கள் ஆகும். அவை ஒவ்வொன்றும் சராசரியாக நாளொன்றுக்கு 6.80 லிட்டர் பால் வழங்கி வருகின்றன. தற்போது பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, உயர் மரபு திறன் உள்ள காளைகளிடமிருந்து பெறப்படும் விந்தணு கொண்டு தயாரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் மேற்கொள்ளப்படுகிறது.

இத்துறைமூலம் கீழ்க்காணும் உள்ளீட்டுச் சேவைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- கால்நடை சிகிச்சை மற்றும் அவசரகால சிகிச்சை
- உயர் மரபியல் திறன் கொண்ட உறைவிந்துக் குச்சிகளைக் கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் சேவைகள்
- மலட்டு நீக்க சிகிச்சைமுகாம்
- கறவையின காப்பீடு
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி
- தரமான கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை வழங்குதல்
- தரமான தீவன புல் மற்றும் விதைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்
- பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிகள்மூலம் நடைமுறை மூலதனக் கடன் வழங்குதல்

15.6 பால் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சிகள்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2022 ஏப்ரல் 13]

பால் உற்பத்தியாளர்களுக்கு, தூய முறையில் பால் உற்பத்தி, சமச்சீர் தீவனம் வழங்கும் முறைகள், வருடம் ஒரு கன்று திட்டம், தீவன பயிர் வளர்ப்பு, கறவை பசு வளர்ப்பு மேலாண்மை, பால் உற்பத்திச் செலவைக் குறைத்தல் மற்றும் மாற்று தீவன பயன்பாடு போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

15.7 மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்கள்

ஒன்றிய அரசின் கண்காணிப்புப் பயிற்சி நிலைய குழுவால் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையங்கள், சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் ஒன்றிய அரசு மற்றும் விவசாய அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு பயிற்சி வகுப்புகள் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் நடைபெறுகிறது.

விழுப்புரம், வேலூர் மற்றும் மாதவரத்தில் அமைந்துள்ள பயிற்சி மையங்களை வலுப்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள் ரூபாய் 572.25 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ் 100% மானியம் உதவியைப் பெற ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாதவரம் பயிற்சி மையம், அனைத்து மாவட்ட ஒன்றியங்கள், இணைய பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களின் திறனை மேம்படுத்த பயிற்சி அளிப்பதற்காக தொடங்கப்படவுள்ளது.

15.8 ஆவின் மற்றும் இஃப்கோ- கிசான் நிறுவனம் இணைந்து வழங்கும் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் இலவச ஆலோசனை சேவைகள்

ஆவின் மற்றும் இஃப்கோ கிசான் நிறுவனம் இணைந்து பால் உற்பத்தியாளர்களுக்குக் கைபேசி வழியாக குரல் வழி செய்திகள் மற்றும் குறுஞ்செய்திகள்மூலம் இலவச ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது. இவ்வாலோசனை சேவைகள்மூலம் பால் உற்பத்தியாளர்களின் கறவைகளைத் தாக்கும் நோய்கள், நோய் தடுப்பு முறைகள், கால்நடை வளர்ப்பு, தீவன முறைகள், விஞ்ஞான முறையில் பால் கறவை செய்தல், கறவைகளில் இனவிருத்தி ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

15.9 பசுந்தீவன வளர்ப்பு

[2022 ஏப்ரல் 13

பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான புல் கரணைகள் மற்றும் விதைகளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்மூலம் வழங்கப்படுகிறது. இப்பசுந்தீவன விதைகள் மற்றும் கரணைகளை வழங்குவதன்மூலம் பால் உற்பத்திச் செலவு குறைவதுடன், பாலில் கொழுப்புச் சத்து அதிகரிக்கிறது.

*மேலும், ஆவின் நிறுவனம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் (*TANUVAS*) மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (*TNAU*), கோயம்புத்தூர் இணைந்து தீவன மேம்பாட்டு நடவடிக்கைகள், தீவனப் பயிர்களைப் பாதுகாத்தல் போன்ற நவீன விஞ்ஞான முறைகள் குறித்து மாவட்ட ஒன்றிய ஊழியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.*

16. பால்வளத் துறையின் எதிர்காலத் திட்டங்கள்

1. *பதப்படுத்தப்பட்ட பால் விற்பனையில் வருடம் 10 சதவிகிதம் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டு, விற்பனை செய்யப்படும் பால் அளவினை நாளொன்றுக்கு 30.00 இலட்சம் லிட்டராக உயர்த்துவது.*

2. *தமிழ்நாடு மொத்த பால் கொள்முதலில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் கொள்முதல் 17.6 சதவிகிதமாக உள்ள நிலையில் அதனை 25 சதவிகிதமாக உயர்த்துவதற்கு அமைப்புசாரா துறைகளில் உள்ள பால் உற்பத்தியாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

3. *தற்போதைய ஆவின் நிறுவனத்தின் சந்தை மதிப்பைக் கூட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

4. *உள்ளூர் சந்தையில், பால் பொருட்கள் விற்பனையில் 10 சதவிகிதம் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டு தற்போதுள்ள பால் பொருட்கள் விற்பனை அளவான மாதந்தோறும் ரூ.45 கோடியிலிருந்து ரூ.50 கோடியாக உயர்த்துவது (மாவட்டங்கள் மற்றும் இணையத்தில்).*

5. *இந்த நிதியாண்டின் இறுதிக்குள் 200 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல் மற்றும் 200 எண்ணிக்கையிலான செயல்படாத/செயலற்ற சங்கங்களை ஒரு வருடத்திற்குள் செயல்படும் சங்கங்களாக*

மாற்றுதல்.

6. அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஒரு கறவை மாட்டிலிருந்து பெறப்படும் பாலின் அளவை நாளொன்றுக்கு தற்போதுள்ள 6.80 லிட்டரிலிருந்து 7.02 லிட்டராக உயர்த்துவது.

7. டிஜிட்டல் முயற்சிகளை வலுப்படுத்தி இணைய வழிமூலம் நுகர்வோர்களை 24X7 சேவை செய்து பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க செய்வது.

8. பாலில் போக்குவரத்துக் காரணமான இழப்புகளைத் தவிர்த்தல்மூலம் கூடுதல் இலாபத்தினை உறுதி செய்தல்.

9. கறவை மாடுகளுக்கான தீவனம் மற்றும் பிற அத்தியாவசிய உள்ளீடுகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

10. செயற்கை கருவூட்டல்மூலம் கருத்தரித்தல் விகிதம் 43 சதவிகிதத்தில் இருந்து 48.50 சதவிகிதமாக உயர்த்துதல்.

11. கால்நடை நலனை துறையின் முக்கிய நோக்கமாகக் கொண்டு கால்நடைகளை 100 சதவிகிதம் தொற்று நோய்களிலிருந்து குறிப்பாக கோமாரி நோயிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

12. சூரிய ஆற்றல் சக்தி மற்றும் மேகக் கணினி சார்ந்த தொலைநிலைக் கண்காணிப்பு அமைப்பு போன்ற புதுமையான அணுகுமுறைகளைக் கொண்டு கூட்டுறவு பால் பண்ணைத் தொழிலை வலுப்பெறச் செய்தல்.

13. பால் உற்பத்தியாளர்களின் திறன் வளர்க்கும் முயற்சியாக சுத்தமான முறையில் பால் உற்பத்தி, விஞ்ஞான முறையில் கறவை மாடுகளைப் பராமரித்தல் போன்ற பயிற்சிகளை அளிப்பதுமூலம் பால் பண்ணையின் இலாபத்தினை அதிகரிக்கச் செய்வது மற்றும் பால் உற்பத்தியாளர்கள் வாழ்வாதாரத்தினை மேம்பாடு அடையச் செய்வது.

14. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் வலுவான இணைப்பினை உருவாக்கி, பல்கலைக்கழகத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் சம்பந்தமான ஆராய்ச்சி முடிவுகளை ஆவின் நிறுவனம் நுகர்வோர்களின் நலனுக்காகப் பயன்படுத்துவது.

[2022 ஏப்ரல் 13

15. சந்தை நுண்ணறிவினை வலுப்படுத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தோடு இணைந்து பகுதிவாரியாக நுகர்வோர்களின் விருப்பங்கள், சுவை, தேர்வினை மதிப்பீடு செய்து நுகர்வோர்கள் விரும்புகின்ற பால் மற்றும் பால் பொருட்களைத் தயாரித்து வழங்குவதுமூலம் நுகர்வோர்களைத் திருப்தி செய்ய முடியும். இதன்மூலம் விற்பனை அதிகரிப்பதோடு கூட்டுறவு பால் பண்ணைகளின் நம்பகத் தன்மையினை உயர்த்த முடியும்.

16. அதிகமான எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்குக் காப்பீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

16.1 நிருவாகச் சீர்திருத்தங்கள்

- *செயலிழந்த சங்கங்களைப் புதுப்பித்தல். இதன்மூலம் கூடுதலாக பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்திற்குப் பால் வழங்குவார்கள். பால் கொள்முதலும் அதிகரிக்கும்*
- *பால் உற்பத்தியாளர்களுக்கு மாதந்தோறும் குறை தீர்க்கும் கூட்டம் நடத்துதல்*
- *புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் உருவாக்க ஆய்வு மேற்கொள்ளுதல்*
- *ஆவின் நிறுவனத்தின் பதவியிடங்கள் அரசு ஆணை பெற்று தமிழ்நாடு தேர்வாணையம் (TNPSC) மூலமாகத் தேர்வு செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படும்*

16.2 ஒழுங்குமுறை விதிகளைச் செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களைக் குறைத்தல் மற்றும் மின்னணு நிருவாக செயல்பாடுகளின்மூலம் வணிகம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளைச் சுலபமாக்குதல்

பொருளாதாரத்தில் போட்டியிடும் திறனை மேம்படுத்துதல், தமிழ்நாடு அரசின் மூன்று நிலைகளில் ஒரு பணி நிரலாக உள்ளது. பால்வளம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் ஒழுங்குமுறை விதிகளை எளிமையாகவும் திறம்படவும் செயல்படுத்தப்படுவதும் நிரலில் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

அதனடிப்படையில், இது குறித்து முன்னரே பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள சூழலில் இதனைச் செயலாக்கம் செய்வதில் கீழ்க்கண்டவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படும் பால் பண்ணைகள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் ஆகியவை அமைப்பதற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமம் பெறப்படுகிறது. இவை அனைத்திற்கும் தனித்தனியாக இல்லாமல் ஒட்டு மொத்தமாக அந்தந்த மாவட்ட ஒன்றியத்தில் ஒரே உரிமமாக பெறப்படுவதன்மூலம் நேரம் மற்றும் நிதி சேமிப்பு ஆகியவற்றிற்கு ஏதுவாக அமையும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்

- வருடாந்திர அடிப்படையில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமம் புதுப்பிக்கப்படுவதற்குப் பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வழிமுறை பின்பற்றப்படும்

கூட்டுறவு பால் பண்ணைத் தொழில் துறையில் வாணிப நடவடிக்கைகளை எளிதாக்கும் பொருட்டு கீழ்க்கண்ட புதிய முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

- இணைய வழியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல்

- இணைய வழியில் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர்களின் குறைகள் நிவர்த்தி செய்தல்

- பால் கூட்டுறவுச் சங்கங்களில் பால் பரிசோதனை வசதிகள், தானியங்கி பால் சேகர அலகுகள் (AMCU) நிறுவப்படுவதன்மூலம் மேம்படுத்தப்படும். இதன்மூலம் செயல்முறை எளிதாக்கப்படுவதுடன் பால் கொள்முதல் மற்றும் உறுப்பினர்களுக்கு பால் பணப்பட்டுவாடா வெளிப்படைத் தன்மையுடையதாக அமையும்

- கூட்டுறவுச் சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் பால் வழங்கும்போது பாலின் தரம், அளவு மற்றும் அதன் மதிப்பு குறித்து உடனடி பால் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும்

[*2022 ஏப்ரல் 13*

- பால் உற்பத்தியாளர்களுக்கு மின்னணு வாயிலாக பணப் பட்டுவாடா
- நல்லமுறையில் கறவை மாடுகளைப் பராமரிக்கவும், பால் உற்பத்தி செலவினைக் குறைக்கின்ற தொழில்நுட்ப அறிவினை குரல் ஒலி (Voice Message) மற்றும் குறுஞ்செய்திகள்மூலம் (SMS) பால் உற்பத்தியாளர்களுக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது
- இணைய வழி மூலமாக பால் அட்டை விற்பனை செய்தல்
- பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க ஆவின் நுகர்வோர்களை நியமனம் செய்ய ஒற்றை சாளரமுறை நடைமுறைப்படுத்தப்படும்
- ஆவின் முகவர்களுடைய உரிமம் இணைய வழியில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணை அமைப்பின்மூலம் மின்னணு முறையில் பால் பவுடர், வெண்ணெய் போன்ற பால் பொருட்களின் விற்பனையை மேற்கொள்வதை போன்றே இதர பால் பொருட்களையும் இவ்வமைப்பின்மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- அனைத்து பாலகங்களிலும் பால் பொருட்களை விற்பனை செய்வதற்கான இரசீது வழங்கப்படும்
- சுற்றுப்புறச்சூழல் நிலையினைக் கருத்தில் கொண்டு காகிதம் இல்லாத முறையில் விற்பனை இரசீதினை நுகர்வோர்களின் கைப்பேசிக்கு நேரடியாக அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- நேரம் மற்றும் எழுதுபொருள் சேமிப்பிற்கு ஏதுவாக அலுவலர்களுக்கு முக அடையாளம் கருவிமூலம் வருகை பதிவேடு பராமரிக்கப்படும்
- அனைத்து பால் பண்ணைகளிலும் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு மேம்படுத்தப்படும்

2022 ஏப்ரல் 13]

- பால் மற்றும் பால் பொருட்களின் தொடர் வினியோகத்தை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு மற்றும் நேரத்தை சிக்கனமாக்க, விநியோக இடங்கள் குறியீடு (Mapping) செய்யப்படும்

- இணையம் மற்றும் ஒன்றியங்களில் "மின்னணு அலுவலகம்" (e—office) முறையில் கோப்புகள் கையாளும் முறை நடைமுறைப்படுத்தப்படும்

- தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில், ஆவினுக்காக பிரத்தியேக இணையவழிமூலம் முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தும் வசதி உருவாக்கப்படும்

16.3 நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள்

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்ட 2030 ஆம் ஆண்டிற்குள் செய்யப்பட வேண்டிய வளர்ச்சி குறித்த இலக்குகள் பற்றிய முன்மொழிவுகள், தற்போதும் எதிர் காலத்திலும், மக்களுக்கும் அனைத்து உலக நாடுகளுக்கும் அமைதி மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட வரைபடத்தை வழங்குகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு 17 குறிக்கோள்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பால்வளத் துறையானது, வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள் எண்.2.0—ன்படி பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். மேலும், இத்துறையானது, இலக்கு எண் 2.3 மற்றும் 2.அ அடைவதற்கு திட்டமிட்டுள்ளது.

குறிக்கோள் 2.3 2030 ஆம் ஆண்டிற்குள் கிராமப்புறங்களில் சிறிய அளவில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் குறிப்பாக பெண்கள், பழங்குடியினர், விவசாயத் தொழிலையே வாழ்வாதாரமாகச் செய்கின்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கறவை மாடுகள் வளர்ப்போருக்குத் தங்களுடைய வருட வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப அறிவு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்து பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகளை

[2022 ஏப்ரல் 13

உருவாக்குதல் ஆகும். மேலும், மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்திக்கு தேவையான வசதிகளை அதிகரித்தல்மூலம் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் ஆகும்.

குறிக்கோள் 2(அ): வளரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக கிராமப்புற உட்கட்டமைப்பு, விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள், விவசாயப் பயிர்கள் மற்றும் கால்நடை மரபணு வங்கிகளில் மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்புமூலம் முதலீட்டை அதிகரித்தல்.

இத்துறையானது, அரசாணை (நிலை) எண் 184, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள். 26.12.2019-ன்படி வளங்குன்றா வளர்ச்சித் திட்டங்களை எய்துவதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவானது, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறை, மாநில மற்றும் மாவட்ட களப் பணியாளர்கள் மற்றும் இதர வளங்குன்றா வளர்ச்சித் திட்ட குழுக்களுடன் இணைந்து செயல்படும். இவ்வாறாக பல்வேறு திட்டங்கள்மூலம் பால்வளத் துறையானது, வளர்ச்சி திட்டங்களை எய்த திட்டமிட்டுள்ளது.

16.4 இலக்குகளை அடைவதற்கான வருடாந்திரச் செயல்திட்டம்

- கூட்டுறவு அமைப்பின்கீழ் அதிக அளவிலான பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு வருதல்
- 'ஒரு வருடத்திற்கு ஒரு கன்று' என்ற இலக்கை அடைதல்
- சமச்சீர் தீவன முறையை நடைமுறைப்படுத்துதல்
- கறவை மாட்டுக் கடன்கள் வழங்குவதன்மூலம் கறவை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்
- கறவை மாடுகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தினை விரிவான முறையில் நடைமுறைப்படுத்துதல்
- பால் உற்பத்தியாளர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்

2022 ஏப்ரல் 13]

- *தூய பால் உற்பத்தி செய்வது தொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி வழங்குதல்*

- *சங்கங்களில் தானியங்கி பால் கொள்முதல் நிலையத்துடன்கூடிய தொகுப்பு பால் குளிர்விப்பான்களை அதிக எண்ணிக்கையில் நிறுவுதல்*

- *அனைத்து நிலைகளிலும் பாலின் குளிர்நிலையைப் பராமரித்து பாலின் ஆரம்ப தரத்தை உறுதி செய்தல்*

- *அதிகரித்து வரும் பால் உற்பத்தியை எதிர்கொள்ள அனைத்து பால் பண்ணைகளின் கையாளும் திறனை அதிகரித்து கூடுதலான வசதிகளை உருவாக்குதல்*

- *ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பல்வேறு திட்டங்கள் வாயிலாக பெறப்படும் நிதியினைப் பயன்படுத்தி அவற்றைச் செயல்படுத்துவதன்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குதல்*

17. பால் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிருவாகக் குழு தேர்தலினை, மக்களாட்சி முறையில் நடத்திட ஏதுவாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் என சட்ட அமைப்பு 2012-ல் ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிருவாகக் குழுத் தேர்தல் மேற்படி ஆணையத்தால் 2013 முதல் நடத்தப்பட்டு வருகிறது.

பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள், அந்தந்த சங்கங்களின் தகுதி வாய்ந்த உறுப்பினர்களால் மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988-ல் தெரிவித்துள்ள வழிவகைகளின்படி, நிருவாகக் குழுவில் மகளிர் மற்றும் ஆதி திராவிடர்களுக்கு என இடஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதர கூட்டுறவுச் சங்கங்களைபோல் அல்லாது, பால் கூட்டுறவுச் சங்க நிருவாகக் குழு உறுப்பினருக்கான தேர்தலில் பால்

[*2022 ஏப்ரல் 13*

ஊற்றும் உறுப்பினர்கள் மட்டுமே போட்டியிடவும், வாக்களிக்கவும் முடியுமென்பதால், மற்ற கூட்டுறவுகளிலிருந்து பால் கூட்டுறவு தனித்துவத்துடன் செயல்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2018 உடன் முந்தைய நிருவாகக் குழுவின் பதவிக் காலம் நிறைவடைந்ததால், புதிய நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, முதல்நிலையில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 4 கட்டங்களாகத் தேர்தல் நடைபெற்றது.

இருப்பினும் 2018 மற்றும் அதற்குப் பின்னர் பதிவாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிருவாகக் குழுவின் பதவிக் காலம் காலாவதியாகும் புதிதாக உருவாக்கப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட சங்கங்களுக்கு நிருவாகக் குழுத் தேர்தல் நடத்த தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையத்திடமிருந்து தேர்தல் திட்டம் பெற நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தகுதியான வாக்காளர்கள் இல்லாத காரணத்தினாலும் வேறு சில நிருவாகக் காரணங்களால் செயல் ஆட்சியர் நியமனம் செய்யப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உரிய காலத்திற்குள் நிருவாகக் குழு தேர்தல் நடத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் நிலையில், 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் மதுரை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் நீங்கலாக மீதமுள்ள 24 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்குப் புதிய நிருவாகக் குழு தேர்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் தேர்தல் வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள காரணத்தால், தேர்தல் நடத்தி முடிக்க இயலவில்லை.

நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் முடிவடைந்த பிறகு நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 ஏப்ரல் 13]

மூன்றாம் நிலையில், தலைமைச் சங்கமான, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிருவாகக் குழு தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பணிகள் ஜனவரி 2019-ல் துவங்கப்பட்ட போதிலும், நீதிமன்ற உத்தரவின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், நீதிமன்ற வழக்கு முடிவடைந்த நிலையில் இணையத்திற்கான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், கொரோனா நோய் தொற்று பரவல் ஊரடங்குக் காரணமாக தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள மதுரை மாவட்ட ஒன்றியத்திற்கான தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிருவாகக் குழுத் தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18. முன்னேற்ற நடவடிக்கைகள்

பசுந்தீவனம், கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை போன்ற உள்ளீடுகளை மானிய விலையில் வழங்கி, கால்நடை பராமரிப்பு செலவினத்தைக் குறைப்பதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- *பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலினை முழுவதுமாகக் கொள்முதல் செய்ய பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.*

- *நிருவாகச் செலவுகள் மற்றும் நடைமுறைச் செலவுகளைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போதுள்ள இயந்திரங்களை நவீனமயமாக்கி அவற்றின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலமும், பால் பண்ணைகளின் கையாளும் திறனை முழுமையாக உபயோகப்படுத்துவதன் மூலமும் செலவினங்கள் குறைக்கப்படும்.*

- *பால் பொருட்களின் காலக்கெடு காலத்தினை அதிகரிக்க நவீன தொழில்நுட்ப முறைகள் செயல்படுத்தப்படும்.*

- *பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத மற்றும் சாத்தியக்கூறுகள் உள்ள பகுதிகளில் புதிதாகத்*

[2022 ஏப்ரல் 13

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அதிக பால் உற்பத்தியாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- வெளிநாடுகளில் ஆவின் டெட்ரா பால் மற்றும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.
- பொது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பேருந்து நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கக் கவர்ந்திழுக்கும் கருத்திற்கினிய விளம்பரங்கள் செய்யவும், ஆவின் பாலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பால் உற்பத்தியாளர்களுக்குக் கலப்படமற்ற சுத்தமான பால் உற்பத்தி செய்வது குறித்தான விழிப்புணர்வுப் பயிற்சிகள் அளிப்பதன்மூலம் கிராம அளவிலேயே தரமான பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான தீவனங்களை வறட்சி காலங்களில் பயன்படுத்துவதற்காகச் சேமித்து வைக்க தீவன வங்கிகள் உருவாக்கப்படும். இதற்காக, விவசாயிகளின் நிலத்தில் தீவனம் பயிரிட தேவையான தீவன விதைகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் வழங்க ஏற்பாடு செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19. நிதி ஒதுக்கீடு

பால்வளத் துறைக்கான 2021-22 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுக் கணக்கில் ரூ.47.55 கோடி நிதி ஒதுக்கீடு வருவாய் செலவினமாக வழங்கப்பட்டது. ரூ.2,000 மூலதனச் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு-செலவுக் கணக்கில் ரூ.44.38 கோடி நிதி ஒதுக்கீடு வருவாய் செலவினமாக வழங்கப்பட்டது.

2022 ஏப்ரல் 13]

2022-23 ஆம் நிதியாண்டில் பால்வளத் துறையில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் டாப் டவுன் பட்ஜெட் முறை (Top down Budget) நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

20. முடிவுரை

பால்வளத் துறை, பால் உற்பத்தியாளர்கள்/ விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்தை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதனைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்கள் மற்றும் உத்திகள் செயல்படுத்துவதற்கான நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

பால் கூட்டுறவுகள் குறித்த ஒரு பார்வை

வ. எண்	பொருள்	விவரம் (31/3/2022 வரை)
1	பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை	10,540
2	2021-22 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்)	253
3	2021-22 ஆம் ஆண்டில் புத்துயிரூட்டப்பட்ட நலிவடைந்த சங்கங்கள் (எண்ணில்)	92
4	தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	19.65
5	பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	4.18
6	சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	38.26

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	பொருள்	விவரம் (31/3/2022 வரை)
7	மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை	25
8	மாநில அளவிலான இணையம்	1
9	ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	34.60
10	சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	13.36
11	மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	13.05
12	ஒன்றிய பால் பண்ணைகளின் எண்ணிக்கை	18
13	இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை	5
14	ஒன்றியங்களின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	30.13
15	இணையத்தின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	18.65
16	பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை	34
17	குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	14.55

2022 ஏப்ரல் 13]

வ. எண்	பொருள்	விவரம் (31/3/2022 வரை)
18	மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை	626
19	மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	21.95
20	மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை	403
21	சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை	198
22	பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்)	5
23	பால்பவுடர் உற்பத்தித் திறன் (மெ. டன்/நாள்)	90
24	வெண்ணெய் சேமிக்கும் திறன் (மெ. டன்)	4,629
25	பால் பவுடர் சேமிக்கும் திறன் (மெ. டன்)	7,805
26	வெண்ணெய் இருப்பு (மெ.டன்)	698.80
27	பால் பவுடர் இருப்பு (மெ.டன்)	4,493.73

[2022 ஏப்ரல் 13

ஒன்றியங்களின் பால் கொள்முதல்
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)




சென்னை மாநகர ஆவின் பால் விற்பனை
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)




2022 ஏப்ரல் 13]

மாவட்ட ஒன்றியங்களில் ஆவின் பால் விற்பனை
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)




விற்பனை வருவாய்
(இணையம் மற்றும் ஒன்றியங்கள்)




[2022 ஏப்ரல் 13

இணையத்தின் விற்பனை வருவாய்



மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் விற்பனை வருவாய்



Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.